

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நதியோரம்... ★ முத்துலட்சுமி ராகவன்


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நதியோரம்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
நதியோரம்...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

நதியோரம் நடந்தபோது... நதியோரம்...

1

நதியோரம் நடந்தபோது

நாற்புறமும் பூங்காற்று

முகத்தோடு மோதிப் போகும்

மனமெல்லாம் லேசாகும்

...நதியோரம் நான் நடந்த போது...

"ஆயர் பாடி மாளிகையில்

தாய் மடியில் கன்றினைப்போல

மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ.."

என்று அந்த அதிகாலை நேரத்தில் பெருமாள் கோவிலில் இருந்து ஒலிபெருக்கியில் பாடல் ஒலித்தது.. இருள் பிரியாத அந்தக் கருக்கல் வேளையில் வித்யா தன் ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்தாள்.. மார்கழி மாதக் குளிர் உடலைத் துளைத்தது.. சுடிதாரின் துப்பட்டாவை காதோடு போர்த்தியிருந்தாள்.. எனினும் குளிர்காற்று காதுக்குள் புகுந்து இம்சித்தது.. வாசல் தெளித்துக் கோலம் போடுபவர்கள் போட்டி போட்டுக் கொண்டு புள்ளிகளை வைத்துக் கொண்டிருந்தனர்.. மார்கழி மாத பஜனை கோஷ்டி பாடியபடி எதிரே வந்தது.. அதிகாலை விடியலின் அனைத்து தோற்றங்களையும் தன்னுள் பதிவு செய்து

கொண்டே வண்டியை செலுத்திக் கொண்டிருந்தாள் வித்யா..

அவள் திரும்ப வேண்டிய தெருமுனை காபி பாரில் கூட்டம் இருந்தது.. சூடான காபி குடித்தால் அந்தக் குளிருக்கு இதமாக இருக்கும்.. ஆனால் அதற்காக தனியாக காபி ஸ்டாலுக்குள் போக வேண்டுமே.. வித்யா தனியாக ஹோட்டல்களுக்கு காபி கூட குடிக்கப் போவதில்லை.. 'இன்னும் கொஞ்சம் தூரம்தான்.. பொறு மனமே' என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.. தூங்காத கண்கள் சொக்கின.. சோர்ந்து மூடிய இமைகளைப் பிடிவாதமாகத் திறந்து சிமிட்டி தூக்கத்தை விரட்டிக் கொண்டே வித்யா சென்று கொண்டிருந்தாள்..

விளக்குக் கம்பத்தின் அடியில் படுத்திருந்த நாய் ஒன்று வண்டிச் சத்தம் கேட்டு தலையைத் தூக்கிப் பார்த்தது.. அருகே வண்டி நெருங்கவும் எழுந்து நின்று கொண்டது.. தலையைச் சுற்றி துப்பட்டாவால் மூடியிருந்த வித்யாவின் உருவத்தைக் கண்டதும் பாய்ந்து குரைக்க ஆரம்பித்தது..

வித்யாவின் நாக்கு பயத்தில் புரண்டது.. அடிவயிற்றில் குடல் புரண்டது.. வண்டியின் வேகத்தைக் கூட்டினாள்.. வண்டியின் பின்னாலேயே குரைத்துக் கொண்டு துரத்திய நாய் மெல்ல மெல்லப் பின் தங்கியது.. வித்யா நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.. ஒவ்வொரு முறையும் அவள் இருள் பிரியாத அதிகாலையில் திரும்பும்போது இவ்வாறு ஏதேனும் ஓர் அனுபவம் நேர்ந்து அவளை பயத்திற்கு உள்ளாக்குகிறது.. இரண்டு நாள்களுக்கு முன்னர் ஆளரவ மற்ற சாலையில் நான்கு குடிகாரர்கள் குடித்து விட்டு ஆடிக் கொண்டே வந்தார்கள்.. அவர்களை மின்னல் வேகத்தில் கடந்து வரும்வரை அவள் உயிர் அவளிடத்தில் இல்லை..

அதற்கு முன்னால் ஓர்நாள் மின்சாரக் கம்பியில் இருந்து வெள்ளையாய் ஒன்று குதித்து நின்றது.. 'பேய்..' என்று அலற இருந்தவள் வழக்கம் போல 'தப்பித்தேன், பிழைத்தேன்' என்று வேகம் கூட்டிப் பறந்தாள்.. அன்று மதியமே அந்தச் சாலையில் வரும்போது கரண்ட் கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வெள்ளை நிறப் பாலிதீன்

கவரைப் பார்த்தபோது 'இதுவா அவளை பயமுறுத்திய பேய்..?' என்று அவளுக்குச் சிரிப்பு வந்தது.. ஆனால் இருட்டு நேரத்தில் 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே..?'

'அம்மா மட்டும் இருந்திருந்தால்..?' வித்யாவின் உள்ளம் பெருமூச்சு விட்டது.. தன் படிப்புக்கு தானே சம்பாதிக்கும் அவலநிலை நிச்சயம் அவளுக்கு ஏற்பட்டிருக்காது.. 'தாய் இல்லாவிட்டால் சீர் இல்லை..' என்பது இதுதான் போல..

வித்யாவுக்கு ஆறு வயதாக இருக்கும்போதே அவளது அன்னை கமலம் இறந்துவிட்டாள்.. ஒரு வருடம் தாக்குப் பிடித்த அவளது தந்தை வையாபுரி வித்யாவின் ஏழாம் வயதில் மறுமணம் செய்து கொண்டார்.. வித்யாவின் சித்தியாக கங்கா வீட்டுக்குள் வந்த அடுத்த வினாடியிலிருந்து அந்த வீட்டிலிருந்த வேண்டாத பொருள்களில் ஒன்றாக வித்யாவும் ஆகிப்போனாள்.. இளைய தாரத்திற்கு இருக்க வேண்டிய அத்தனை சாகசங்களும், சாதுர்யங்களும் கங்காவுக்கு கை வந்த கலைகளாய் இருக்க அப்பாவி வையாபுரியால் வித்யாவை பாதுகாக்க முடியவில்லை.. வந்த மறு வருடமே நீலாவையும் அடுத்த மூன்றாம் வருடத்தில் ராமுவையும் பெற்றெடுத்த கங்கா, வையாபுரி தன் மக்களுக்கு மட்டுமன்றி வித்யாவுக்கும் தந்தை என்பதையே சுத்தமாய் மறந்து விட்டாள்.. நினைக்க முயன்ற வையாபுரிக்கும் அந்த நினைவு வராமல் தடுத்தாள்..

'நம் பிள்ளைகள், நம் பிள்ளைகள்' என்று நீலாவையும் ராமுவையும் கூறுபவள் வித்யா ஓர் அநாதை என்பது போல் நடந்து கொண்டாள்..

வித்யா கெட்டிக்காரக் குழந்தையாக இருந்தாள்.. நிராதரவாய் நிற்க வேண்டியவர்களுக்கு போராட்ட குணம் அதிகம் இருக்கும்.. எல்லாக் கதவுகளும் அடைபட்டாலும் ஏதேனும் ஓர் கதவை அவர்கள் திறந்து விடுவார்கள்.. வித்யாவும் அப்படித்தான் இருந்தாள்.. கூடுமானவரை கங்காவின் கவனத்தை ஈர்க்காமல் ஒதுங்கியே தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பாள்.. வீட்டு வேலைகளை

இழுத்துப்போட்டுச் செய்வாள்.. கங்கா 'எள்' என்று கூறும் முன்னர் 'எண்ணெ'யாக வந்து நிற்பாள்.. ஆனாலும் கங்கா அவளைக் கரித்துக கொட்டிக் கொண்டுதான் இருப்பாள்.. வித்யா தன் தாய் கமலத்தின் சாயலில் அழகானவளாக இருந்ததும்.. நீலா கங்காவின் சாயலில் மிகச் சாதாரண தோற்றத்தில் இருந்ததும் தான் காரணம்.. எரிகிற தீயில் எண்ணையை ஊற்றுவது போல் அவளத பொறாமைத் தீயை அதிகப்படுத்தியது.. மேல்நிலைப் பள்ளியிருதித் தேர்வில் வித்யா பள்ளியிலேயே முதல் மாணவியாய் தேறிய செய்தி..

"நின்னா உட்கார முடியலை.. உட்கார்ந்தா எழுந்து நடக்க முடியலை.. எனக்கு உடம்பைப் போட்டு இந்தப் பாடுபடுத்துது.. கவனிப்பார் இல்லாம நான் காலொடிஞ்ச மாதிரிக் கிடக்கிறேன்.. இந்த விளங்கா மூஞ்சிக்கு படிப்பு ஒரு கேடா..? படிப்பை நிறுத்திவிட்டு வீட்டைக் கவனிக்க சொல்லுங்க.." என்று காளி அவதாரமெடுத்தாள் கங்கா..

பொறியியல் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று அரசாங்க உதவியுடன் இலவச பொறியியல் படிப்புக்கு அனுமதிக் கடிதம் வீடு தேடி வந்தது.. சென்னைக் கல்லூரியில் இடம் கிடைத்திருந்தது.. ஆனால் அவளை வீட்டை விட்டு வெளியேற விடக்கூடாது என்று கங்கா எதிர்த்தாள்..

வையாபுரி என்றுமே வித்யாவிற்கு ஆதரவாய் பேசிய தில்லை.. வித்யா புறப்படும் நாள் வந்தது.. வித்யா தன் பெட்டி படுக்கைகளைக் கட்டினாள்.. தாயின் படத்தை எடுத்துப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டாள்.. சான்றிதழ் களை சரிபார்த்து கைப்பையில் வைத்துக் கொண்டாள்.. கல்லூரியின் அனுமதிக் கடிதத்தை எடுத்துக் கொண்டாள்.. தந்தையிடம் வந்தாள் வணங்கி எழுந்தாள். நீலா, ராமுவைக் கூப்பிட்டாள்.. கட்டி ஊச்சி முகர்ந்தாள்..

"நல்லாப் படிக்கணும்.. அக்காவை மறந்துவிடக் கூடாது.." என்றவள் தோள் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு பெட்டி படுக்கைகளை எடுத்துக கொண்டு வீட்டுப் படியிறங்கினாள்..

"நில்லுடி.." கங்கா கர்ஜித்தாள்..

வித்யா நின்றாள். ஆனால் திரும்பிப் பார்க்கவில்லை..

"காலேஜில் இடம் கிடைத்துவிட்டால் போதுமா.. படிப்புக்கும், ஹாஸ்டலுக்கும் கட்டப் பணம் வேண்டாமா..? உங்க ஆத்தா வீட்டுச் சொத்தா இங்கே குவிந்து கிடக்குது..? உனக்கு அள்ளி அள்ளி கொடுக்க..? செப்பாலடிச்ச காசு கூட தரமாட்டேன்.. தெரிஞ்சுக்க... ஒழுங்காய்.. ஒழுங்காய் மரியாதையாய் மேலே படிக்கணும்கிற ஆசையை விட்டு விட்டு மூலையில் முடங்கிக் கிடக்கிறதுன்னா இந்த வீட்டில் இரு.. இல்லாவிட்டால் இந்த வீட்டு வாசல் படியை எப்பவுமே நீ மிதிக்கக் கூடாது.. அப்படியே போயிடு.. இந்த வீட்டில் உறவு கொண்டாடிக்கிட்டு இங்கே வராதே.."

வித்யா திரும்பாமல் அழுத்தமாகக் கூறினாள்..

"வரமாட்டேன் சித்தி.. உன்னிடம் கையேந்தி எப்போதும் நான் வரமாட்டேன்.. போகிறேன்.."

கங்காவின் ஆத்திரம் கரை உடைத்தது..

"போய்.. படிக்கக் காசுக்கு என்னடி செய்வே.. நீ தைரியமானவளாச்சே.. என்ன வேணும்னாலும் செய்வே.."

இப்போது வித்யாவின் பொறுமை அணை உடைந்தது.. அப்படியே ரௌத்ரமாய் திரும்பினாள்..

"ஆமாம்.. என் படிப்பிற்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன்.. ஆனால் மானமான தொழிலைச் செய்வேன்.. கல்லுடைப்பேன்.. நாலு வீட்டில் பாத்திரம் கழுவுவேன்.. வாசல் கூட்டிப் பெருக்குவேன்.. ஏன்னா.. என் அம்மா கழுத்து நிறைய நகையோடு லாரி நிறைய சீரோடு முதல் தாரமா வந்தவங்க.. உங்களைப் போல் மூத்தவ விட்டுப் போன நகைகளையும்.. சொத்தையும் உரிமை கொண்டாடிக்கிட்டு அவள் பெத்துவிட்டுப் போன பிள்ளையை அநாதையாக்கினவங்க இல்லே.. நான் அவங்க வயித்தில் பிறந்தவள்.. ஜெயித்துக் காட்டுகிறேன்.. அதுவரை உன் முகத்தில்.. உனக்கு ஜால்ரா போடுகிற அப்பாவின் முகத்தில் விழிக்க மாட்டேன்.."

"அப்போ உங்க அம்மா நகைகளையெல்லாம் நான் தான் அபகரிச்சுக்கிட்டேன்னு சொல்றியா.. கேட்டீங்களா இந்த நாதியத்த நாய் பேசுகிறதை.."

வையாபுரி மகள் சொல்வது உண்மையென்பதால் மௌனம் சாதித்தார்.. கங்கா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்..

"ஐயோ.. ஐயோ.. இதைக் கேட்பாரில்லையா.. இவ ஆத்தாளுக்கு அவ பிறந்த வீட்டில் செஞ்சுபோட்ட ஐம்பது பவுன் நகையையும் நான்தான் அடிச்சுக்கிட்டேன்னு சொல்றாளே.."

"அது எப்படி சித்தி ஐம்பது பவுன் நகைன்னு அவ்வளவு கரெக்டா சொல்றே.."

கங்கா பேய் விழி விழித்தாள்..

"அதுசரி அபேஸ் பண்ணிய உனக்கா அளவு தெரியாது..? ஆனால் சித்தி உனக்கு ஒரு உண்மை தெரியாது.."

என்ன சொல்கிறாள் இவள்..? என்ற சந்தேகத்தில் கங்காவின் சிறிய கண்கள் இடுங்கி காணாமலே போயின. வித்யா தொடர்ந்தாள்..

"எங்க அம்மாவுக்கு.. அவங்க பிறந்த வீட்டில் போட்டது எழுபத்தைந்து பவுன்.. நீ ஏப்பம் விட்ட ஐம்பது பவுன் நகை போக மீதி எங்கே தெரியுமா இருந்தது..?"

கமலம் மரணத்தறுவாயில் தன் தோழியான நர்ஸ் மரகதத்திடம் தன் கைவசம் மருத்துவமனையில் இருந்த இருபத்தைந்து பவுன் நகையை ஒப்படைத்துவிட்டுப் போயிருந்தாள்.. நம்பிக்கைக்குரிய அந்தத் தோழியிடம் வித்யாவின் திருமணச் சமயத்தில் அந்நகைகளை அவளிடம் சேர்த்துவிடச் சொல்லி சத்தியம் வாங்கியிருந்தாள்..

வித்யாவின் படிப்பு கேள்விக்குறியாக இருந்தபோது மரகதம் அந்தக் தகவலை அவளிடம் சொல்லி தைரியம்

கொடுத்திருந்தாள்.. அதை இப்போது சிற்றன்னையிடம் கூறினாள் வித்யா..

"என் அம்மா கெட்டிக்காரங்க.. மனைவி செத்தால் மறுநாளே கல்யாணம் கட்டிக்கிற ஆண்பிள்ளைகளைப் பற்றி அறிஞ்சவங்க.. அவங்க புத்திசாலித்தனமா கொடுத்து வைத்த நகை என் படிப்புக்கு இப்போது பயன்படப் போகுது.."

கங்காவின் வயிறு எரிந்தது..

"நல்ல குடும்பத்தில் பிறந்தவ இப்படி ரகசிய வேலை செய்வாளாங்கிறேன்.. கட்டிய புருசனை நம்பாமல் கண்டவளையும் நம்புவாளாங்கிறேன்.."

"யாரைக் கட்டிய புருசனை..?" எகத்தாளமாய் கேட்டாள் வித்யா..

"ஏண்டி நகை இருக்கிற தைரியத்தில் பேசுகிறாயா..? இருபத்தி ஐந்து பவுன் எந்த மூலைக்குப் பத்தும்.. ஐந்து வருசம் நீ எப்படிப் படிப்பே.."

"நீ பார்க்கத்தானே போகிறாய்..?"

மனதில் லட்சியத்துடனும் நெஞ்சில் வைராக்கியத் துடனும் வீட்டுப் படியைத் தாண்டினாள் வித்யா.. பேருந்தின் ஜன்னல் வழி கடந்து போன தன் பிறந்த ஊரைப் பார்க்க முடியாமல் கண்ணீர் திரை இட்டது.. இப்படித்தான் ஆயகுடியில் பிறந்து வளர்ந்த வித்யா சென்னைக்கு படிக்க வந்தாள்..

முதல் வருட படிப்பிற்காக தன் தாயின் நகைகளில் பத்து பவுன் நகையை மட்டும் விற்றவள்.. படித்துக் கொண்டே மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியை வைத்துக் கொண்டு கண்ணில் படும் அரசாங்க வேலைகளுக்கெல்லாம் விண்ணப்பித்துக் கொண்டு இருந்தாள்.. அப்படிக் கிடைத்ததுதான்.. டெலிபோன் டிபார்ட்மென்ட் வேலை..

அவள் இரண்டாம் வருடத்தில் நுழைந்த போது அவளுக்கு வேலைக்கான உத்தரவு வந்தது.. அதை உடனடியாய் அவள் ஏற்றுக் கொள்ளக் காரணம்.. அங்கே இரவு நேரப் பணி இருந்ததால்தான்.. பகலில் பொறியியல் கல்லூரியில் பொறியியல் படிப்பு.. இரவில் வேலை.. படிப்பதற்கும்.. உண்ணுவதற்கும் போதுமான அளவு சம்பளம் கிடைத்து விடும்.. ஆனால்.. கல்லூரி விடுதியில் இருந்து கொண்டு இரவுப் பணிக்கு எப்படி அவள் போய்வர முடியும்..?

அவள் திகைத்து நின்றபோது கை கொடுத்தாள் பூர்ணிமா.. பூர்ணிமாதேவி என்பது அவளுடைய முழுப்பெயர்.. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகேயுள்ள மணிமுத்தாறு கிராமத்தில் பிறந்தவள்.. சென்னையில் பொறியியல் கல்லூரியில் ஒரு வருடமாக வித்யாவுடன் படிப்பவள்.. ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவளாம், மிகப்பெரிய பணக்காரியென்று கூடப்படிக்கும் மற்றவர்கள் கூறக் கேட்டிருக்கிறாள்.. சென்னையில் அவர்கள் குடும்பத்துக்கு சொந்தமாக நான்கு பங்களாக்கள் இருப்பதாகவும் அதில் ஒன்றை அவள் படிப்பதற்காகவே குடியிருந்தவர்களைக் காலி பண்ணச் சொல்லிக் கிராமத்தில் இருந்து சமையலுக்கு என்று ஒரு அம்மாவையும் காவலுக்கும், மேல் வேலைக்கும் என்று இரண்டு முரட்டுப் பெரியவர்களையும் கொண்டு வந்து வைத்து வசதி பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் பேசிக் கொள்வார்கள்.. ஆனால் அழகான காரில் வந்து இறங்கும் பூர்ணிமா தன்னைப் பற்றித் தற்பெருமையாய் ஒர்வார்த்தை கூடப் பேசமாட்டாள்..

அவள்தான் அன்று வித்யா யோசனையோடு தனியே அமர்ந்து இருந்தபோது வந்து பேச்சுக் கொடுத்தாள்.. பூர்ணிமாவுக்கு வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கும் வித்யாவை மிகவும் பிடிக்கும்... தாணுண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கிப்போகும் வித்யாவை இழுத்து வைத்துப் பேசித் தோழியானாள் பூர்ணிமா..

"என்ன வித்யா போதி மரத்தடியில் புத்தர் உட்கார்ந்திருப்பதைப் போல.. காலேஜ் மரத்தடியில்

தனியாக உட்கார்ந்து விட்டாய்..?"

"ச்சு.. அடுத்தவாரம் நான் காலேஜ் ஹாஸ்டலைக் காலிபண்ண வேண்டும்.. எங்கே போவது..? அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.."

பூர்ணிமாவுக்கு வித்யாவின் குடும்ப நிலைமை தெரியும்.. வித்யாவுக்கு டெலிபோன் டிபார்ட்மெண்டில் வேலை கிடைத்திருப்பதும் தெரியும்..

"வித்யா.. நான் ஒன்று சொல்கிறேன் கேட்கிறாயா..?"

"நீ முதலில் சொல்.. கேட்பதா வேண்டாமான்னு அப்புறம் முடிவு செய்கிறேன்.." கறாராய் கூறினாள் வித்யா..

ஆனால் பூர்ணிமா அந்தக் கல்லையும் கரைத்து விட்டாள்.. தினமும் எடுத்துச் சொல்லி ஒருவழியாய் வித்யாவை தன்னுடன் தங்க சம்மதிக்க வைத்துவிட்டாள்..

2

நதியோரம் நடந்தபோது

நீர்மீது பார்வை போகும்

இதழோரம் பாடல் தோன்றும்..

இமையோரம் கனவு தோன்றும்

...நதியோரம் நான் நடந்த போது...

ஸ்கூட்டியைத் திருப்பி அந்தத் தெருவிற்குள் நுழைந்தாள் வித்யா.. வசதியுள்ளவர்கள் மட்டுமே வசிக்கும் பகுதி என்பது வீடுகளின் பிரம்மாண்டத்தைப் பார்த்தாலே தெரிந்தது.. நான்காவதாக இருந்த அந்த வீட்டின் முன்னே ஸ்கூட்டியை நிறுத்தி வண்டியின் ஹாரனை அடித்தாள்.. சதாசிவம் வந்து அந்தப் பெரிய வாயில் கதவுகளைத் திறந்து விட்டார்.. 'பூரணம்' என்று நியான் எழுத்துக்கள் மின்னிய வீட்டினுள் வண்டி நுழைந்தது.. ஸ்கூட்டியை

போர்ட்டிகோவில் நிறுத்திப் பூட்டிவிட்டு படியேறிச் சென்றாள் வித்யா.. கதவுகளைத் திறந்த கண்ணம்மாவிடம்..

"தேங்க் யூ ஆன்ட்டி.." என்று கூறிவிட்டு தன் அறைக்குச் சென்று நைட்டிக்கு மாறினாள்.. அறைக்கதவு தட்டப்பட திறந்தாள்.. கண்ணம்மா காபியுடன் நின்றாள்.

"தேங்க்ஸ் ஆன்ட்டி.." என்று மீண்டும் மனதார நன்றி கூறினாள்..

"ஒரு நாளைக்கு எத்தனை தடவைதான் தேங்க்ஸ் சொல்லுவ..?"

"இந்தக் குளிரில் விரைச்சுப் போய் வந்திருக்கேன் ஆன்ட்டி... சூடான காபிக்கு எவ்வளவு ஏங்கிப் போயிருக்கேன் தெரியுமா..?"

கண்ணம்மாவின் மனம் கனிந்தது.. இந்த இளம் வயதில் இப்படி ஓர் ஓட்டமா..? இந்த இளம் குருத்தின் பாதையில் எவ்வளவு தடைக்கல்கள்.. பெருமூச்சுடன் அவள் கொடுத்த காலிக் கோப்பையை வாங்கிக்கொண்டு திரும்பியவள்..

"கொஞ்ச நேரம் படுத்து எந்திரிம்மா.." என்று கூறினாள்..

"சரி ஆன்ட்டி.." என்று சொல்லும்போதே விழிகள் செறுக வித்யா கட்டிலில் சுருண்டு படுத்து விட்டாள்..

சத்தமின்றி கதவைச் சாத்திவிட்டுக் கண்ணம்மா சென்றாள்.. தலைமாட்டிலிருந்த அலாரம் அடிக்க எழுந்து மணிபார்த்தாள் வித்யா.. 'எட்டு' என்றது கடிகாரம்.. அவசரமாய் எழுந்து குளியலறைக்குள் புகுந்தவள் அடுத்த கால்மணி நேரத்தில் குளித்து உடைமாற்றி காலேஜூக்கு போக ரெடியாகி வெளியே வந்தாள்..

சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பூர்ணிமா, "வா.. வா.. இன்றைக்கு நெய் தோசை.. சூப்பரா இருக்கு.. சூடா சாப்பிடு.. கிளம்பலாம்.." என்றாள் வித்யாவைப் பார்த்து..

"முதலில் வாயிலிருக்கும் தோசையை விழுங்கி விட்டுப்பேசு.. தந்தி அடித்தது போல் பேசுகிறாய்.." என்று சிரித்த வித்யா அவள் அருகே அமர்ந்து தன் முன்னால் தட்டை வைத்துக் கொண்டாள்..

"கண்ணம்மா சித்தியின் கைப்பக்குவம் அப்படி.. வாயில் தோசையை வைத்தால் விழுங்கக் கூடத் தோன்றாத ருசி.." என்று கூறினாள் பூர்ணிமா..

"ம்ம்.. பசிக்கு சாப்பாடு கிடைத்தால் போதும் பூர்ணி.. ருசியை நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.."

"எப்பப் பார்த்தாலும் படிப்பு நினைவாகவே இருந்தால் அப்படித்தான். கொஞ்சம் சுற்றிலும் பார்.. ருசி தெரியும்.."

"சரி அதைவிடு.. இன்னைக்கு டெஸ்ட் இருக்கில்ல படிச்சியா.."

"படிச்சேன் படிச்சேன்.. எப்படியும் நைட் கண் விழிச்சு படிக்கிற என்னை விட படிக்காமல் வேலை பார்த்து விட்டு வந்த நீதான் அதிக மார்க் எடுக்கப் போகிற.. சரி இன்றைக்கு டூட்டி இல்லையில்ல..?"

"இல்லை.. நாளை நைட்தான்.."

இரவுப் பணி பார்ப்பதில் அப்படி ஒரு சௌகர்யம் இருந்தது.. முதல்நாள் நைட்டுயுட்டி பார்த்தால் மறுநாள் முழுவதும் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.. ஒருநாள் விட்டு ஓர்நாள் தான் இரவுப் பணி என்பதால் வித்யாவின் படிப்பு துளிக்கூட பாதிக்கப்படவில்லை..

"போதும் ஆன்ட்டி.." என்று வித்யா எழுந்து கொள்ள பூர்ணிமா அவள் தோள்களை அழுத்தி அமர வைத்தாள்..

"ஒழுங்காச் சாப்பிடுடி.. கொறிக்கிறா.. சித்தி இன்னும் இரண்டு தோசை போடுங்க.."

இருவரும் கை கழுவிவிட்டு மதிய உணவு டப்பாக்களை எடுத்து தோள் பையில் புத்தகங்களுடன் வைத்துக் கொண்டனர்.. கண்ணம்மாவிடம் சொல்லிக் கொண்டு படியிறங்கும்போது சின்னய்யன் எதிரே வந்தார்..

"என்ன தாத்தா எங்கே போயிருந்தீர்கள்..?"

"மளிகை சாமானும் காய்கறியும் வாங்கத்தான்.. ரெண்டு பேரும் காலேசுக்கு கிளம்பிட்டீங்களா.."

"கிளம்பிட்டோம்.." என்றபடி பூர்ணிமா காரில் ஏறிக் கொள்ள சதாசிவம் காரைக் கிளப்பினார்..

"கதவை மூடிக்கங்க தாத்தா.." என்றவாறு வித்யா தன் ஸ்கூட்டியில் ஏறிச் சென்றாள்..

காரும்.. ஸ்கூட்டியும் ஒன்றன் பின் ஒன்றாக வெளியேற கேட்டை மூடிவிட்டு வீட்டினுள் வந்த சின்னய்யன்..

"இந்தா கண்ணம்மா.. இந்தப் பைகளில் இருக்கும் சாமான்களைப் பிரிச்சு எடுத்துவை... இந்த வித்யா பொண்ணைப் பார்த்தியா.. இந்த வீட்டில் இருந்தாலும் பூர்ணிமா பாப்பாவின் காரில் எப்போதுமே ஏறுவதில்லை.." என்றார்..

சாப்பாட்டு மேஜையில் பைகளை வாங்கி வைத்த கண்ணம்மா..

"அது வித்யா போட்ட கண்டிசனாம்ல்ல.. இங்க தங்கிச் சாப்பிட ஹாஸ்டல் மாதிரி மாதா மாதம் பணம் வாங்கிக்கிட்டால்தான் வருவேன்னு அடிச்சுச் சொல்லிருச்சாம்ல்ல.. அதே போல் என் வண்டியில் தான் நான் வேலைக்கும்.. காலேஜூக்கும் போவேன்னும் கட்டன் ரைட்டா ஆர்டர் போட்டிருச்சாம்.. இந்தக் காலத்தில் இப்படி ஒரு பொண்ணு.. இது நம்ம பூர்ணிமாவுக்கு பிரண்டா கிடைச்சது பூர்ணிமா வோட நல்ல நேரம்.." என்றாள்..

ஃபேனைச் சுழல விட்டு அதன் கீழ் அமர்ந்து துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்ட சின்னய்யன்.

"அதைச் சொல்லு.. ஒரு தப்பான பேச்சு உண்டா.. தப்பான பழக்கம் உண்டா.. எதையும் பட்டுப்பட்டுன்னு நேருக்கு நேரா பேசுகிற பொண்ணு அந்த வித்யாப் பொண்ணு.. மத்த பட்டணத்து பொண்ணுங்க மாதிரி தான்தோன்றித்தனமா

அலையற பொண்ணில்லை.." என்றவாறு தண்ணீர் ஜக்கை எடுத்து மடக் மடக்கென்று குடித்தார்..

பிரிட்ஜைத் திறந்து காய்கறி வைக்கும் டிரேயை எடுத்த கண்ணம்மா.. "பூர்ணிமாவுக்கு நம்ம ஊரிலேயே அவங்க சொந்தக்காரங்களில் பெருந்தன்மை இல்லாதவங் களைப் பிடிக்காது.. ரொம்ப வித்தியாசமான பொண்ணு.. ராஜவம்சம்.. பரம்பரைப் பணக்காரங்க.. ஆனால் எவ்வளவு தன்மையாப் பழகுது.. குணம் குணத்தோடதான் சேரும்.. நம்ம பாப்பாவுக்கு வித்யாவைப் பிடிச்சுப்போனதில் ஆச்சரிய மில்லைல்ல.." என்றவாறு காய்கறிகளை அடுக்க ஆரம்பித்தாள்..

காரை ஓட்டிக் கொண்டிருந்த சதாசிவமும் அதே வார்த்தைகளைத்தான் பூர்ணிமாவிடம் சொன்னார்.. பூர்ணிமா சிரித்தாள்...

"இப்பவாவது அவள் ஸ்கூட்டி வாங்கியிருக்கிறாள் பெரியப்பா.. எனக்குக் கொஞ்சம் கவலையில்லாமல் இருக்கிறது.. ஆனால் நம் வீட்டிற்கு வந்து நம்முடன் இருக்க ஆரம்பித்த புதிதில் சைக்கிள்தானே வைத்திருந்தாள்..? காரை எடுத்துக்கொள்ளச் சொல்லி எவ்வளவு கெஞ்வேன்.. ஊஹூம்.. அவளை அசைக்க முடியவில்லையே.. ஆச்சு இப்ப ஃபைனல் இயர் வந்துவிட்டோம்.. அவளும் வேலைக்குச் சேர்ந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டது.. சம்பளப் பணத்தில் மீதம் பிடித்து போன வருடம் ஸ்கூட்டி வாங்கின பின்தான் நான் நிம்மதியாக இருக்கிறேன்.."

பூர்ணிமா அன்றைய நாளை நினைத்துக் கொண்டாள்.. வித்யா கவலையுடன் இருந்தபோது பூர்ணிமா அந்தக் கோரிக்கையை அவள் முன் வைத்தாள்..

"வித்யா.. நான் தனியாகத்தான் இருக்கிறேன்.. கூட என் தூரத்து உறவான சித்தி.. பெரியப்பா.. தாத்தா இவங்கல்லாம் இருக்காங்க.. நீ என் கூட வந்து தாராளமா இருக்கலாம்.. நீ கூட வந்து இருன்னு சொல்வதில் என்னுடைய சுயநலமும் இருக்கு.. நீயோ கிளாஸ் பர்ஸ்ட்.. நீ என்கூட இருந்தால் பாடத்தில் சந்தேகம் கேட்டுக்குவேன்.."

வித்யா தோழியின் சாமர்த்தியமான பேச்சைக் கேட்டுப் புன்னகைத்தாள்.. திரும்பித் தன் தோழியின் முகத்தை ஊன்றிப் பார்த்தாள்.. அந்தக் கண்களில் தேங்கி நின்ற காருண்யம் உண்மையை உணர்த்த..

"பூர்ணி.. நீ எனக்குத் தோழியாக மட்டும் இரு.. உதவ நினைக்காதே.. எனக்கு யாசகம் பிடிக்காது.." என்றாள் கடுமையாக..

"போடி பைத்தியம்.. நட்புக்கிடையில் யாசகம் எங்கிருந்து வரும்..?"

"நட்பு உடையாமலிருக்க வேண்டுமானால் நமக்குள் கொடுக்கல்.. வாங்கல் இருக்கக் கூடாது.. கடன் அன்பை முறிக்கும்.."

"என்னிடம் இருக்கிறது கொடுக்கிறேன்.."

"என்னிடம் இல்லாததால் நீ கொடுப்பதை ஏற்றுக் கொள்வேன் என்று நினைத்தாயா.. நெவர்.. எனக்கு உதவி பெறுவது பிடிக்காது.."

"சரிசரி.. நான் சொன்னது தப்புத்தான்.. கன்னத்தில் போட்டுக் கொள்கிறேன்.. ம்ம்.. வேறு என்ன செய்தால் நீ என்னுடன் தங்க வருவாய்.." என்று யோசித்த பூர்ணிமா தலையில் கை வைத்து யோசிக்கலானாள்.. திடீரென்று "ஐடியா.." என்று துள்ளிக் குதித்தாள்..

"மெதுவாக் குதிடி.. அடிபட்டுவிடப் போகுது.."

"வித்யா.. இப்போ நீ ஹாஸ்டலில் இருக்கிறாயே அது போல் என் வீட்டில் இருக்கலாம்.."

"அது எப்படி..? இது ஹாஸ்டல்.. என் சாப்பாட்டிற்கும்... ரூம் வாடகைக்கும்.. நான் பணம் கொடுத்து விடுவேன்.."

"அதையே எனக்கும் கொடு.."

"உன்னிடம் பணம் கொடுத்து விடுவதா..? உன்னிடம் இல்லாத பணமா..?"

"அது எதற்கு உனக்கு..? உனக்குத் தனியாக ஒரு ரூம் கொடுத்து விடுகிறேன்.. உன் சுதந்திரத்தில் நான் தலையிடமாட்டேன்.. ரூம் வாடகையும் சாப்பாட்டுச் சொலவையும் நீ கொடுத்துவிடு.."

வித்யா தன் தோழியையே இமைக்காமல் பார்த்தாள்.. அவள் முகத்தில் தெரிந்த குழந்தைத்தனமான ஆவல் அவளைக் கவர்ந்தது..

"என்மேல் ஏண்டி இவ்வளவு பாசம் வைக்கிறாய்..?"

"ஏன்னா நீ ஒருத்திதான் அதற்கு தகுதியானவள் வித்யா.. என்னை எனக்காக நேசிக்கிறது நீ மட்டும்தான்.. மற்றவர்கள் என்னிடமிருக்கும் பணத்திற்காக என்னுடன் பழகுகிறார்கள்.. நீ ஒருத்திதாண்டி என் பின்புலம் பற்றி யோசிக்காமல் என்னடன் பழகுகிறவள்.. நீ என்னுடன் வந்து இருக்க வேண்டும் வித்யா.."

வித்யா இறங்கி வந்தாள்.. ஆனால் தன்னுடைய நிபந்தனைகளை அழுத்தம் திருத்தமாக கூறினாள்..

"பூரணி.. நீ விளையாட்டுக்குச் சொன்னாயோ இல்லை சீரியஸாகச் சொன்னாயோ நான் அதைப்பற்றிக் கவலை படவில்லை.. உன் வீட்டில் எனக்கு ஒரு ரூம் கொடு அதைத்தவிர மற்ற இடங்களில் நான் உரிமை கொண்டாட மாட்டேன்.. ரூம் வாடகையாகவும்.. என் சாப்பாட்டிற்கும் சேர்த்து மாதா மாதம் ஒன்றாம் தேதி 'டான்'ன்னு பணம் கொடுத்து விடுவேன். அதை வாங்க நீ கொஞ்சம் தயங்கினாலும் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியேறிவிடுவேன்.."

தோழியின் வாயைப் பொத்தினாள் பூர்ணிமா..

"நீ வெளியேறுவது போல நான் ஒருபோதும் நடந்து கொள்ள மாட்டேன் வித்யா.. நீ பணம் கொடு.. நான் வாங்கிக் கொள்கிறேன்.."

"தேங்க்ஸ் பூர்ணி.. அப்புறம் ஒன்று.. நான் காலேஜிற்கும்.. வேலைக்கும் என் சைக்கிளில்தான் போய் வருவேன்.. உன்

காரில் ஏறிக் கொள்ளச் சொல்லி நீ என்னைக் கட்டாயப்படுத்தக் கூடாது.."

"ஏண்டி இப்படிப் பண்ணுகிறாய்.. பெட்ரோலுக்கு வேண்டுமானால் பணம் கொடுத்துவிடு.. அதற்காக நைட்டூட்டிக்கு இருட்டில் தனியாக எப்படிடி சைக்கிளில் போய் வருவாய்..?"

"நான் தனி என்று யார் உனக்குச் சொன்னது..? எனக்கு கடவுள் துணை வருவார்.. பெட்ரோலுக்கு கொடுக்கும் அளவுக்கு என் சம்பளம் கட்டாது.. நான் உனக்குக் கொடுத்தது போக காலேஜ் பீஸ்.. புக்ஸ்.. நோட்ஸ் அப்புறம் டிரஸ் எல்லாமே அதில்தான் பார்க்க வேண்டும்.."

"கடனா வைச்சுக்க.. கணக்கு எழுதி வைச்சுக்க.. பின்னால் கொடு.."

"இப்போதுதானே என் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது.. என்னை வற்புறுத்தக் கூடாதுன்னு சொன்னேன்.. அதற்குள் மறந்துவிட்டாயே.."

பூர்ணிமா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.. எனினும் வித்யா பணம் சேர்த்து ஸ்கூட்டி வாங்கும் வரை அவளை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டே இருப்பாள்.. வேலைக்குச் செல்லும் வித்யா வீடு திரும்பும் வரை பூர்ணிமா தவித்து விடுவாள்.. ஒரு வழியாக ஸ்கூட்டி வந்த பின்தான் பூர்ணிமா நிம்மதியாக உறங்க ஆரம்பித்தாள்.

கல்லூரியில் காரிலிருந்தும் ஸ்கூட்டியிலிருந்தும் இறங்கிய தோழிகள் ஒன்று சேர்ந்து கொண்டனர்..

"ஹாய் பூர்ணிமா.. ஹாய் வித்யா.." என்ற குரல்களுக்கு பதில் குரல் கொடுத்தபடி அருகருகே அமர்ந்து கொண்டனர்.. சற்று நேரத்தில் வகுப்பு ஆரம்பிக்கப் பாடத்தில் ஆழ்ந்தனர்..

மதிய உணவு இடைவேளையில் மரத்தின் அடியிலிருந்த சிமிண்டு பெஞ்சில் அமர்ந்தபடி சாப்பிட ஆரம்பித்தனர்... பூர்ணிமா ஏதோ சிந்தனையுடன் இருந்தாள்.. வித்யா கேட்பது காதில் விழாதவளாய் அவள் கனவுலகில்

சஞ்சரித்துக் கொண்டிருக்க வித்யா அவள் தொடையில் 'நறுக்'கென்று ஒரு கிள்ளு கிள்ளினாள்..

"ஐயோ.. வலிக்குது.. ஏண்டி பிசாசே இந்த வேலை பண்ணுகிறே..?" என்று பூர்ணிமா முறைக்க..

"பின்னே என்ன.. பத்துத் தடவையாவது உன்னைக் கூப்பிட்டிருப்பேன் காதில் விழாமல் அப்படி என்ன யோசனை உனக்கு..?" என்று கடிந்து கொண்டாள் வித்யா.

"நேற்றுக் காலையில் ஊரிலிருந்து லெட்டர் வந்திருக்கிறது.. சித்தி வாங்கி வைத்திருந்து நேற்று சாயந்திரம் கொடுத்தார்கள்.. நீ நைட் டூட்டிக்குக் கிளம்ப வேண்டியிருந்தால் அப்போது உன்னிடம் பேச முடியவில்லை.."

"யார் லெட்டர் போட்டிருக்கிறார்கள்..?"

"ம்ம்.. பிரகாஷ்.." என்று பிரகாசம் இழந்த முகத்தோடு கூறினாள் பூர்ணிமா.. தோழியின் வருத்தம் புரிந்தது வித்யாவிற்கு.. சற்றுநேரம் இருவரும் மௌனமாக உண்டார்கள்.. அர்த்தத்துடன் கூடிய மௌனம்..

"பூர்ணி.. உன்னையே நீ வருத்திக்கிறேன்னுதான் நான் சொல்வேன்.."

"வித்யா.. என்னைப் புரிஞ்சுக்கிட்ட நீ கூடவா இப்படிச் சொல்கிறே..?"

"உன்னைப் புரிந்து கொண்டதால்தான் சொல்கிறேன்.. பிரகாஷின் மீது உனக்கு எவ்வளவு காதல் என்று எனக்குப் புரியாதா..? இல்லை தெரியாதா..? ஏன் பிடிவாதம்.. பிடிக்கிறாய்.."

"பிடிவாதம் பிடிக்காமல் சரின்னு சொல்லி அவர் மணமாலையை வாங்கிக்கணுமா..? என்னால் முடியாது வித்யா.."

"பிரகாஷ் என்ன தவறு செய்தார் பூர்ணி.. அவருக்கு ஏன் தண்டனை கொடுக்கிறாய்..?"

"என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலியை காதலித்தாரே அதுதான் அவர் செய்த குற்றம்.. அந்தக் குற்றத்திற்காகத் தான் அவரை ஒதுக்கித் தண்டனை கொடுக்கிறேன்.."

"தண்டனை கொடுக்கும் நீதானே அதிக வேதனை அடைகிறாய்..?"

"இருக்கட்டும்.. வித்யா.. எனக்கு எல்லாமே என் பெரிய அண்ணன்தான்.. அவருக்கு இல்லாத மணவாழ்வு எனக்கு வேண்டாம்.."

பேச்சை கண்ணீர் தடை செய்ய பாதியில் நிறுத்தினாள் பூர்ணிமா.. வித்யாவின் தொண்டையில் சாதம் உள்ளே இறங்காமல் அப்படியே நின்றது..

'பெரிய அண்ணன்..! பூர்ணிமாதேவியின் பெரிய அண்ணன்.. வித்யா இதுவரை கண்களால் நேரில் கண்டறியாத பெரிய அண்ணன்.. நரேந்திரன்..!'

3

நதியோரம் நடந்தபோது

நெஞ்சினிலே யார் நினைவு?

ஊருக்குத் தெரியாமல்

உறங்குகின்ற உன் நினைவு!

...நதியோரம் நான் நடந்த போது...

வித்யாவும், பூர்ணிமாதேவியும் நான்கு வருடங்களாக கல்லூரியில் ஒன்றாகப் படிக்கிறார்கள்.. அதில் முதல் ஒரு வருடம் தவிர்த்து அடுத்த மூன்று வருடங்கள் இருவரும் ஒரே வீட்டில் தங்கியிருக்கின்றனர்.. இந்த மூன்று வருடங்களில் ஆரம்பத்தில் ஒட்டாமல் அளவோடு பழகி வந்த வித்யா ஓர்

ஆறுமாத கால அளவில் மட்டுமே ஒதுங்கியிருக்க முடிந்தது.. ஒருநாள் நைட் டூயுட்டி முடிந்து வீடு வந்தவள் அன்று ஞாயிறு என்பதால் காலை பதினொரு மணியளவில் எழுந்து குளித்துச் சாப்பிட வந்தாள்.. கண்ணம்மா டேபிளில் வைத்திருந்த ஹாட்பாக்ஸில் இருந்த இட்லிகளை எடுத்துப்போட்டு சாப்பிட ஆரம்பித்தவள்..

"பூர்ணிமா சாப்பிட்டாச்சா ஆன்ட்டி.." என்று வினவினாள்..

பூர்ணிமாவைப் போலவே வித்யாவையும் நினைக்க வேண்டும் என்று பூர்ணிமா கறாராகக் கூறியிருந்தாள்.. எனவே அவளுக்கு பரிமாறியபடி..

"இன்னும் வரலைம்மா.. ரூம் கதவை அடைச்சிட்டு உள்ளேயே இருக்கு.." என்றாள் கண்ணம்மா..

"காபி குடித்தாளா..?"

"ம்ம்.. கண்ணெல்லாம் சிவந்து படுத்திருக்கு.. நான்தான் எழுப்பி காபியை குடிக்க வைத்தேன்.. அப்புறம் சாப்பிட்டுக்கிறேன் சித்தி.. தொந்தரவு பண்ணாதேன்னு சொல்லிடுச்சு.. அது மனசில என்ன இருக்கோ.. அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.."

வித்யா அப்படியே சாப்பாட்டை மூடி வைத்து விட்டு எழுந்து கை கழுவினாள்..

"என்னம்மா.. பாதியிலேயே எழுந்துட்டே.."

"பூர்ணிமாவைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன் ஆன்ட்டி.." என்றவள் அதுநாள்வரை போகாத பூர்ணிமாவின் அறைப்பக்கம் சென்று கதவுகளைத் தட்டினாள்..

"சித்தி.. அப்புறம் சாப்பிடுகிறேன்.." என்று கதவுகளைத் திறக்காமல் குரல் கொடுத்தாள் பூர்ணிமா..

"இது உன் சித்தியில்லை.. வித்யா.." உள்ளேயிருந்து சிறிது நேரம் பதிலில்லை.. சற்றுப் பொறுத்து..

"வித்யா நீ சாப்பிடு.. நான் அப்புறம் வருகிறேன்.." என்று குரல் வந்தது..

"நான் சாப்பிடுவது இருக்கட்டும்.. நீ முதலில் கதவைத் திற.." என்று அதட்டினாள் வித்யா..

"வித்யா ப்ளீஸ் என்னை டிஸ்டர்ப் செய்யாதே.."

"இப்போது நீ கதவைத் திறக்காவிட்டால் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வருவேன்.. என் குணம் தெரியுமில்லை..?"

வித்யாவின் மிரட்டலுக்கு உடனே பலன் கிடைத்தது.. பூர்ணிமா கதவைத் திறந்தாள்.. உள்ளே நுழைந்த வித்யா பூர்ணிமாவின் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.. கண்ணம்மா கூறியதுபோல் பூர்ணிமாவின் கண்கள் தூக்கமில்லாமல் சிவந்திருந்தன.. இமைகள் வீங்கியிருந்தன.. தலை கலைந்திருந்தது.. முகத்தை துடைத்துக்கொண்டே மூக்கை உறிஞ்சிக் கொண்டு..

"உட்கார் வித்யா.." என்றாள் பூர்ணிமா.. வித்யா.. பூர்ணிமாவுடன் தங்கியிருக்க ஒப்புக் கொண்டு வந்திருந்த ஆறுமாதங்களில் அன்றுதான் முதன்முறையாக அவள் அறைக்குள் சென்றிருக்கிறாள்.. அறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள் வித்யா..

'பூரணம்' பங்களா பூர்ணிமாதேவியின் பெயரில் வாங்கப்பட்டிருந்தது.. முன்புறம் சிறிய தோட்டத்துடன் விசாலமான போர்டிகோவுடன் இருந்த வீட்டின் கீழ்தளத்தில் பெரிய ஹால், டைனிங் ஹால், பூஜையறை, சமையலறை போக நான்கு பெட்ரூம்கள் இருந்தன.. மாடியிலும் அதே போல் பெரியஹாலும் ஐந்து பெட்ரூம்களும் இருந்தன.. போர்டிகோவின் மேல்புறம் மாடியின் பால்கனியாக அமைந்திருந்தது.. அதில் நான்கு மரச்சேர், தொங்கு ஊஞ்சல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. பால்கனியின் கைப்பிடியோரம் பூந்தொட்டிகளில் ரோஜாச் செடிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன..

கீழ்தளத்தில் இருந்த அறைகளில் ஒன்றில் கண்ணம்மா இருந்தாள்.. இன்னொரு அறையை சதாசிவமும், சின்னய்யனும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தனர்.. மற்ற இரு அறைகளும் பூட்டியிருந்தன. மாடியில் பால்கனி மாடி ஹாலை ஒட்டி அமைந்திருந்தது.. ஹாலின் இருபுறமும் ஒரு பக்கம் பெரிய அறைகள் இரண்டும் மற்றொரு பக்கம் சிறிய அறைகள் மூன்றும் அமைந்திருந்தன.. பெரிய படுக்கையறைகளில் ஒன்றில் பூர்ணிமா இருந்தாள்.. மற்றொன்றை வித்யாவுக்கு கொடுக்க அவள் மறுத்து விட்டாள்..

"எனக்கு இந்த ரூமே போதும் பூர்ணி.. தோட்டத்தை ஒட்டி இருக்கு.. அட்டாச்டு பாத்ரூம் இருக்கு.."

சிறிய அறைகளில் ஒன்றை வித்யாவிற்கு கொடுத்து விட்டாள் பூர்ணிமா.. வற்புறுத்தினால் அவள் வெளியேறி விடுவாள் என்ற பயம்.. பூர்ணிமாவின் அறைக்கு நேர் எதிரே வித்யாவின் அறை இருந்தாலும் வித்யா பூர்ணிமாவின் அறைக்குள் போக மாட்டாள்..

இப்போது பார்க்கையில் ஒரு சிறிய குடும்பம் இருக்கு மளவிற்கு அந்த அறை பெரிதாக அழகாக கட்டப்பட்டு இருந்தது தெரிய வந்தது.. அறையினுள்ளேயே உடை மாற்றும் அறையும் அதற்குள்ளேயிருந்தும் அட்டாச்டு பாத்ரூமிற்குள் போக வசதியும் இருந்தது.. பெரிய பிரம்மாண்டமான கட்டில் அதனருகே போடப்பட்டிருந்த சோபாக்கள் என்று அறையின் ஒவ்வொரு அங்குலமும் பணத்தால் செதுக்கப்பட்டிருந்தது..

வித்யா தங்கியிருந்த அறையிலும் கட்டில், டேபிள், சேர், டிரெஸ்ஸிங் டேபிள், சுவரில் பதித்த அலமாரிகள், ஆகியள உண்டு..

"இது எனக்கு வேண்டாம்.." என்று மறுத்தவளிடம்..

"உன் ரூமில் மட்டுமா இருக்கு..? கண்ணம்மா சித்தி, சதாசிவம் தாத்தா ரூம்களிலும் போட்டிருக்கோம்.. இதற்கும் சேர்த்துத்தான் பணம் உன்னிடம் வசூல் பண்ணுகிறேன். இப்ப அடங்கு.." என்று அடக்கினாள் பூர்ணிமா..

இப்போது இந்த அறையின் படாடோபத்தைப் பார்த்ததும் பிரமித்தாள் வித்யா.. 'அன்பே வா' திரைப்படத்தில் எம்.ஜி.ஆரின் அறை மட்டும் விசேசமான அலங்காரங்களுடன் இருக்கும்.. அதே போல் இருந்தது பூர்ணிமாவின் அறை.. தோழியின் வருத்தத்தை விசாரிக்க மறந்து..

"எவ்வளவு அழகாக இருக்கு உன் ரூம்..?" என்று ஆச்சரியப்பட்டாள்..

பூர்ணிமாவின் இதழ்களில் புன்முறுவல் உதித்தது..

"பணம் கொட்டிக் கிடந்தால் அழகை உருவாக்கலாம் வித்யா..?" தோழியின் வார்த்தைகளில் இருந்த கசப்பை உணர்ந்த வித்யா..

"பணத்தின் மேல் திடீரென்று ஏனிந்த கசப்பு பூர்ணி..? அது அதிகம் இருப்பதால் உனக்கு அதன் அருமை தெரிய வில்லைபோல.. ஒரு வேளைச் சாப்பாட்டிற்கு ஏங்கும் ஏழைகள் இந்த உலகில் எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா..?" என்றாள் கோபத்துடன்..

"எனக்குத் தெரியாதுதான் வித்யா.. பணத்திலே பிறந்து பணத்திலே வளர்ந்த எனக்கு ஏழைகளின் கஷ்டம் தெரியாதுதான்.. ஆனால் இந்தப் பணத்திற்காக, இது தரும் கௌரவத்திற்காக வாழ்க்கையை தொலைத்து விட்டு நிற்கும் தியாகியைப் பற்றி உனக்கும் தெரியாது.."

"என்னடி..? நான் ஒன்று கேட்டால் நீ வேறு ஒன்றைச் சொல்கிறாய்..?"

"இல்லை வித்யா.. இரண்டும் வேறாக இருந்தாலும் இரண்டிற்கும் சம்பந்தம் இருக்கிறது.. ஏழைகளின் தேவை மிகவும் கம்மி, பசியாற உணவும், உடுத்த ஒரு முழம் துணியும், உறங்க ஓர் கூரையும் கிடைத்தாலே அவர்களுக்குப் போதும்.. படுத்தவுடன் உறங்கி விடுவார்கள்.. ஆனால் நாங்கள்.. ராஜவம்சத்தில் பிறந்தவர்கள்.. ஒரு சிறு சறுக்கல் வந்தால் கூடக் கலங்கி விடுவோம்.. எங்கள் ராஜ மாளிகையில் வாழ்வின் கௌரம்

குறைந்து விடக்கூடாது.. அந்தப் பரம்பரைப் பெருமையில் தூசிபடிந்து விடக்கூடாதுன்னு கிடந்து போராடுவோம்.. எங்களது படுக்கை பஞ்சனையாய் இருந்தாலும் எங்களுக்கு அது முள்படுக்கைதான்.. படுத்தாலும் உறக்கம் வராது.." கலகல வென்று சிரித்தாள் வித்யா.. தோழியின் அருகே சென்று அமர்ந்து அவள் முகத்தை தன்புறம் திருப்பி..

"இன்றைக்கு என்னடி இவ்வளவு அலுத்துக் கொள்கிறாய்..?" என்று அன்பாகக் கேட்டாள்..

பூர்ணிமாவின் கண்கள் கலங்கி கண்களில் நீர் வழிந்தது.. வித்யா பதறிப்போனாள்.. கருணையே வடிவான தன் தோழிக்கு என்ன துயரம்..?

"என்னிடம் சொன்னால் உனக்கு ஆறுதல் கிடைக்கு மென்றால் என்னிடம் சொல் பூர்ணி.. உன் மனதை வருத்தும் வருத்தம் என்ன..?"

மற்றவர்களின் அந்தரங்கத்தை அறியக் கூடாதென்ற கொள்கை உடைய வித்யா தோழியின் துயர் தாங்க முடியாமல் கேட்டாள்..

பூர்ணிமா எழுந்தாள்.. அலமாரியைத் திறந்து ஓர் ஆல்பத்தைக் கொண்டு வந்தாள்.. பிரித்து ஒரு பக்கத்திலிருந்த போட்டோவைக் காட்டினாள்..

"இதுதான் பிரகாஷ்.. எனக்காக நிச்சயம் செய்யப் பட்டிருக்கும் மாப்பிள்ளை.. எனக்காக காத்திருப்பவர்.."

புகைப்படத்திலிருந்த இளைஞனின் முகத்தில் ஓர் கவர்ச்சி இருந்தது.. சிரிக்கும் கண்கள் கூடச் சேர்ந்து சிரிக்க அழைத்தன.. வசீகரமான அந்த இளைஞனை மீண்டும் ஓர்முறை பார்த்தவள்..

"நன்றாகத்தானே இருக்கிறார்.. இவரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள உனக்க ஏன் விருப்பமில்லை..?" என்று கேட்டாள்..

"எனக்கு மிகவும் விருப்பம் வித்யா.. அதனால்தான் விருப்பமில்லை.." வித்யா திகைத்தாள்.. என்ன சொல்கிறாள் இவள்..?

"என்னடி புதிர் போடுகிறாய்.. 'வரும் ஆனால் வராது'ன்னு வடிவேலுகிட்ட என்னத்த கன்னையா சொன்னது மாதிரியில்ல இருக்கு நீ சொல்வது.. விளங்குவது போல் சொல்லக்கூடாதுன்னு விரதமிருக்கியா..?"

"விளங்காதுதான்.. உனக்கு எப்படி விளங்கும்..? என்னைப் பெற்ற அம்மாவுக்கும், கூடப்பிறந்தவர்களுக்குமே விளங்காதபோது உனக்கு எப்படி விளங்கும்..?"

"ஏன் பூர்ணி.. உன் மனதில் என்ன பிரச்சனை..?"

பூர்ணிமாதேவி தோழியை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவள் மனதில்தான் பிரச்னை உள்ளது என்பதை கண்டுபிடித்து விட்டாளே..

"நீ புத்திசாலி வித்யா.. நீ சொல்வது போல் என் மனது தான் எனக்குப் பிரச்சனை.. இன்னும் சொல்லப் போனால் என் வீட்டில் யாருக்கும் மனம் என்பதே இல்லை.. சுய நலம் மட்டும்தான் இருக்கிறது என்பதே என் வருத்தம்.."

வித்யா தோழியை புரிந்து கொள்ளலுடன் பார்த்தாள்.. பேசட்டும்.. அவள் மனதிலிருப்பதைக் கொட்டட்டும்..

அப்போதுதான் பூர்ணிமா அந்த ஆல்பத்தின் அடுத்த பக்கத்தைப் புரட்டிக் காட்டினாள்..

"இவர்தான் என் பெரிய அண்ணன் நரேந்திரன்.. நரேந்திர பூபதி.." வித்யா அப்போது அந்தப் படத்தைப் பார்த்த பார்வையில் கல்மிஷம் துளிகூட இல்லை.. போட்டோவிலிருந்த நபரைப் பார்த்து..

"உன் பெரிய அண்ணன் ரொம்பக் கடுமையானவர் போல இருக்கே பூர்ணி.. போட்டோவில் கூட முறைக்கிறார். சிரிக்கத் தெரியாதா..?" என்று தான் முதலில் கேட்டாள்..

"அவர் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் வீட்டில் உள்ள மற்றவர்கள் சிரிப்பது எப்படி..? அவர் சிரிப்பை

மறந்ததால்தான் வீட்டில் அனைவரும் சிரித்து வாழ்கிறோம்.." என்றாள் பூர்ணிமா கண்கலங்க..

"ஏன் பூர்ணிமா.. நீங்கள் எல்லோரும் பரம்பரைப் பணக்காரர்கள்தானே..?"

"பரம்பரையைப் பற்றிப் பேசாதே வித்யா.. எனக்கு மிகவும் மனக்கஷ்டமாக இருக்கிறது.. அந்தப் பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றத்தான் என் பெரிய அண்ணன் அவர் சிரிப்பைத் தொலைத்தார்.."

பூர்ணிமா அந்த ஆல்பத்தின் முதல் பக்கத்தைக் காட்டினாள்..

"இதுதான் என் அப்பா ராஜேந்திர பூபதி.. இவங்க என் அம்மா சௌதாமினி தேவி.."

அடர்ந்த மீசையுடன் ராஜகுல தலைப்பாகையுடன் அந்தப் பெரியவர் இருக்க பக்கத்திலிருந்த பெண்மணி அழகாக இருந்தாள்..

"இது எங்கள் குடும்பப்படம்.. இது என் மூத்த அண்ணன் நரேந்திரபூபதி.. இது அவருக்கு நேர் இளைய அண்ணன் மகேந்திர பூபதி.. இது அவருக்கு அடுத்துப் பிறந்த அக்கா மாலினிதேவி.. இது என் மூன்றாவது அண்ணன் யுகேந்திர பூபதி.. இதுதான் கடைசி அண்ணன் சுரேந்திர பூபதி.."

"உனக்கு மொத்தம் நான்கு அண்ணன்கள், ஒரு அக்காவா..?"

"ஆமாம்.. எங்கள் குடும்பம் பணத்தில் மட்டுமில்லை.. அளவிலும் பெரிய குடும்பம்தான்.. நாங்கள்.. நான்கு ஆண்கள்.. இரண்டு பெண்கள் உடன்பிறந்தவர்கள்.."

"உன் அம்மா ரொம்ப அழகு பூர்ணிமா.."

"ம்ம்.. இப்போது அம்மாவுடைய படத்தைப் பார்.."

பூர்ணிமா ஆல்பத்தின் கடைசி பக்கத்தைத் திருப்பிக் காட்டினாள்.. சௌதாமினி தேவியின் நெற்றியில் திலகமில்லாமல் விபூதிக்கீற்று இருந்தது..

"பூர்ணிமா.. உன் அப்பா இறந்துவிட்டாரா..?" வித்யா அதிர்ச்சியுடன் கேட்டாள்.. போட்டோவில் தெரிந்த சௌதாமினியின் கண்களில் அடிபட்ட பறவையின் சோகம் தெரிந்தது..

பூர்ணிமா 'ஆம்' என்பதாய் தலை அசைத்தாள்.. போட்டோ ஆல்பத்தின் முன்னிரு பக்கங்களைத்தாண்டி மூன்றாம் பக்கத்தைக் காட்டினாள்.. ஓர் அழகான பெண் ஆர்ப்பரித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.. முகத்தில் வட இந்திய சாயல் தென்பட்டது..

"இதுதான் கார்த்திகா.. கார்த்திகாயினி தேவி.. என் பெரிய அண்ணனின் காதலி.. நார்த் இண்டியாவில் ஜெய்ப்பூர் அருகில் உள்ள கிரண்பூர் சமஸ்தான இளவரசி.. என் அண்ணனுடன் வெளிநாட்டில் ஒன்றாகப் படிக்கும் போது காதலித்திருக்கிறார்கள்.."

"அப்புறம்.." கதை கேட்கும் ஆர்வத்துடன் தோழியைத் தூண்டினாள் வித்யா..

"என் பெரிய அண்ணன் படிப்பை முடித்துவிட்டு வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார்.. எங்க அப்பாவிடம் தன் காதலைச் சொன்னார்.. என் அப்பா ஜெய்ப்பூர் போய் சம்பந்தம் பேசிவிட்டு வந்தார்.. நான் அப்போது ஸிக்ஸ்த் படித்துக் கொண்டிருந்தேன்.. பனிரெண்டு வயது.. நான் தான் என் வீட்டின் கடைக்குட்டி.. என் பெரிய அண்ணனுக்கும் எனக்கும் பதினைந்து வயது வித்தியாசம்.. அப்போது என் பெரிய அண்ணனுக்கு இருபத்தி ஏழு வயது.. அப்போதுதான் என் அப்பா காலையில் எங்கள் பேக்டரிக்குப் போனவர் மதியம் பிணமாக வீடு வந்தார்.."

"என்ன ஆச்சு வித்யா..?"

"மாரடைப்பாம்.. தொழிலில் ஏதோ நஷ்டமாம்.. திடீரென்று போன் வந்ததாம் எடுத்துப் பேசியவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்து விட்டாராம் டாக்டர் வருவதற்குள் உயிர்போய்விட்டது.."

"நீ மிகவும் கஷ்டப்பட்டிருப்பாயே பூர்ணிமா..?"

"கஷ்டம்தான்.. மனக்கஷ்டம்.. ஆனால் பெரிய அண்ணன் பொறுப்பை எடுத்துக் கொண்ட பின்னால்தான் பணக்கஷ்டம் தெரிந்தது.. எங்கள் பேக்டரியில் மோட்டார் சைக்கிளுக்கான பாகங்கள் தயார் பண்ணுவார்கள்.. அத்தோடு துணி தயாரிக்கும் மில்லும் இருந்தது.. இரண்டையுமே ஏற்றுமதி பண்ணுவார்கள்.. எங்கள் சரக்குப் போன கப்பல் கவிழ்ந்து விட்டதால் நஷ்டம் வந்துவிட்டது.."

"இன்ஷ்யூர் பண்ணவில்லையா..?"

"போதுமான அளவு பண்ணவில்லை.. இப்போது அண்ணன் போதுமான அளவு இன்ஸ்யூர் பண்ணாமல் சரக்கு அனுப்புவதில்லை.."

"அந்த ஒரு விபத்தால் மட்டுமே நஷ்டம் ஏற்பட்டதா..?"

"இல்லை வித்யா.. அந்த நேரம் பார்த்து தொழிலாளர் பிரச்சனை.. ஸ்டிரைக் வந்தது.. ஏற்றுக் கொண்ட வேலைகளை முடித்துக் கொடுக்க காலதாமதம் ஆனது.. என் பெரிய அண்ணன் பேயாய் உழைத்தார்.. அப்போது அவரது காதலியின் அப்பா வந்தார்.."

"வந்து.."

"எனக்கு இருப்பது ஒரே மகள்.. உங்களை என் மகனாக நான் பார்த்துக் கொள்கிறேன்.. உங்களை வீட்டோடு மருமகனாக வைத்துக் கொள்ளத்தான் விருப்பப் பட்டேன்.. உங்கள் தந்தையும் சம்மதம் சொன்னார்.. அங்கே கடல் போன்ற என் தொழில் சாம்ராஜ்யம் உங்களுக்காக காத்திருக்கிறது.. என் மகளும் காத்திருக்கிறாள்.. 'வாங்க'ன்னு சொன்னார்.."

"உன் அண்ணன் என்ன சொன்னார்..?"

"அப்பா உயிரோடிருந்தால் அண்ணன் அவர் கோரிக்கையை ஏற்று இருக்கலாம்.. ஆனால் கடலில் நங்கூரமில்லாமல் தத்தளிக்கும் கப்பலைப் போல எங்கள்

குடும்பம் அல்லாடிக் கொண்டு இருந்தபோது அதைவிட்டு விட்டு அவர் எப்படிப் போவார்..?"

"அப்படியானால்..?"

"மறுத்துவிட்டார்.. அவரது கோரிக்கையை மட்டு மல்ல.. அவரது காதலி கார்த்தியாயினி தேவியையும் தான்.."

கைகளில் முகம் புதைத்து பூர்ணிமா விம்மினாள்..

4

நதியோரம் நடந்தபோது

நகர்ந்து செல்லும் மேகம் பார்த்தேன்..

கரிய நிற மேகம் சிதைந்து

குளிர் நீராய் பொழியக் கண்டேன்

...நதியோரம் நான் நடந்த போது...

"அந்தப் பெண்ணுக்கு உன் அண்ணன் மேல் காதலிருந்தால் பெற்றவரை மீறித் தேடி வந்திருக்கலாமே.."

"இல்லையே.. கார்த்திகா வரவேயில்லை வித்யா.. அதற்குப் பதில் அடுத்த மாதமே அவளது கல்யாண இன்விடேசன் வந்தது.."

"அடிப்பாவி.." வித்யா ஆத்திரப்பட்டாள்..

"ஆனால் அண்ணன் மனதை அது ரொம்ப பாதிச்சிருக்கலாமோ என்னவோ வெளியே காட்டிக் கொள்ளவில்லை வித்யா.. அவர் நினைத்திருந்தால் எங்களைக் கை கழுவி விட்டுக் கார்த்திகாவிடம் போயிருக்கலாம்.. காதலியும் கடைத்திருப்பாள்.. கோடிக்கணக்கான சொத்தும் கிடைத்திருக்கும்.. என் அண்ணன் போகவில்லை.. மாறாக மாடாக உழைத்தார்..

இரவு பகல் பாராமல் வேலை பார்த்தார்.. தொழிலாளர்களோடு கலந்து பழகினார்.. அவர்களது பிரச்சனைகளை கண்டறிந்து தீர்த்தார்.. வெளிநாட்டில் படித்ததை இங்கே செயலாக்கினார்.. எங்கள் தொழில் அழியாமல் தப்பித்தது.. எங்கள் குடும்பம் தலை நிமிர்ந்தது.. அப்போதுதான் என் அம்மா அந்த ஏற்பாட்டைச் செய்தார்கள்.."

"எந்த ஏற்பாடு..?"

"என் பெரிய அண்ணனின் திருமண ஏற்பாடு.. அப்போது எனக்கு பதினைந்து வயது.. நைன்த் படித்துக் கொண்டிருந்தேன்.. என் அண்ணனுக்கு முப்பது வயதாகி விட்டது.. எங்கள் தாய் மாமாவின் பெண் மீனலோசனி தேவியை மணம் பேசி முடித்தார்கள்.. என் அண்ணன் மறுக்கவில்லை.. அப்போதுதான் அது நடந்தது.."

"என்னடி ஆச்சு..?" வித்யா பதட்டமாகக் கேட்டாள்.. அவள் மனதில் நரேந்திரனின் கல்யாணம் நல்ல முறையில் நடந்திருக்க வேண்டும் என்ற வேண்டுதல் எழுந்தது..

"திருமணத்திற்கு முதல் நாள் என் இரண்டாவது அண்ணன் மகேந்திர பூபதி என் பெரிய அண்ணனிடம் அழுதிருக்கார்.."

"எதற்காம்..?"

"அவருக்கும், மீனலோசனி அண்ணிக்கும் ரொம்ப நாள்களாகவே காதலாம்.. அது தெரியாமல் வீட்டில் பெரிய அண்ணனுக்கு நிச்சயம் பண்ணிவிட்டார்களாம்.."

"அதை முதலிலேயே சொல்லித் தொலைப்பதுதானே..?"

"வீட்டை மீறக்கூடாது என்று நினைத்தாராம்.."

"அப்படியே இருக்க வேண்டியதுதானே.."

"முடியவில்லையாம்... மீனலோசனி செத்து விடுவேன் என்று அழுகிறாளாம்.. அதனால் வீட்டிற்குத் தெரியாமல் அவளை இழுத்துக் கொண்டு ஓடுவதாக இருந்தாராம்.. போவதற்கு முன் அண்ணனிடம் ஒரு வார்த்தை மன்னிப்புக் கேட்டுச் சொல்ல வந்தாராம்..."

"என்னடி நாடகம் இது...?" என்றாள் வித்யா ஆற்றாமையுடன்..

"நாடகம்தான் வித்யா.. அது ஒரு வகையான பிளாக்மெயில்.. பெரிய அண்ணனுக்கு திருமணமாகி அதற்கு பின் மாலினி அக்காவிற்கு திருமணம் ஆகி.. மகேந்திர அண்ணன் திருமணம் நடக்க எப்படியும் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிடும்.. திட்டம் போட்டு கழுத்தில் கத்தியை வைத்துவிட்டார் என் மகேந்திர அண்ணன்.."

"அப்புறம் என்ன ஆனது..?" பரிதவித்தாள் வித்யா.. அவள் இதயம் நரேந்திரனுக்காக பாகாய் உருகியது..

"என்ன ஆகும்..? என் பெரிய அண்ணன் வழக்கம் போல் தியாகம் செய்தார்.. மறுநாள் திருமண மேடையில் மீனலோசனி கழுத்தில் மகேந்திர அண்ணன் தாலிகட்டினார்.."

"என்னடி அநியாயம் இது..?"

"இது மட்டுமா நடந்தது.. இன்னும் கொடுமைகளைச் சொல்கிறேன் கேள்.. மாலினி அக்காவிற்கு தகுந்த இடத்தில் மாப்பிள்ளை பார்த்துக் கொடுத்தார்கள்.. அடுத்து பெரிய அண்ணனுக்கு திரும்பவும் கல்யாணம் பேச ஆரம்பிக்கும்போது என் மூன்றாவது அண்ணன் யுகேந்திர பூபதியின் பிரச்சனை வந்தது..."

"அவர் கதை என்னவாம்..?"

"என் அத்தை மகள் பிரபாவதியின் மேல் அவருக்கு ஆசை.. பிரபாவதியை வேறு இடத்தில் பெண் கேட்டு வந்திருக்கிறார்கள்.. உடனே 'நான் அவளை மணமுடிக்கா விட்டால் வேறு இடத்தில் கொடுத்து விடுவார்கள்'னு ரகளை பண்ணினார்.."

"உங்கள் வீட்டில் என்ன பண்ணினார்கள்..?"

"யுகேந்திர அண்ணனுக்கும் பிரபாவதி தேவிக்கும் கல்யாணம் பண்ணினார்கள்.."

"என்னடி சொல்றே..? உங்கள் பெரிய அண்ணன் எப்போதுதான் திருமணம் பண்ணினார்..?"

"பண்ணிக்கவே இல்லைடி.."

"என்ன பூர்ணிமா சொல்கிறாய்..?"

"ஆமாம் வித்யா.. அதற்குப் பின் மாலினிக்கு வளைகாப்பு, குழந்தைப் பிறப்பு, காதணி விழா, மீனலோசனி அண்ணிக்கு வளைகாப்பு, குழந்தை பிறப்பு, காதணி விழா, அப்புறம் பிரபாவதி அண்ணிக்கு வளைகாப்பு.."

"குழந்தை பிறப்பு, காதணிவிழா.. ஏண்டி உன் வீட்டில் யாருக்குமே மனச்சாட்சி இல்லையா..?"

"இல்லையே.."

"உன் அம்மாவிற்குமா..?"

"என் அம்மா பெரிய அண்ணனிடம் போராடிப் பார்த்து விட்டாங்க வித்யா.. நரேன் அண்ணா கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்லிட்டார்.."

"அதற்காக அப்படியே விட்டுவிடுவதா..?"

"அம்மா விட்டுவிட்டார்கள் வித்யா.. நான் விடவில்லை.."

"உன்னால் என்ன செய்ய முடியும்..?"

"கல்யாணத்தை மறுக்க முடியும்.."

வித்யாவிற்கு இப்போது புரிந்தது.. பூர்ணிமாவின் போராட்டம் தெளிவாகியது.. வித்யா ஒன்றை யோசித்தாள்..

"ஏன் பூர்ணி.. இந்த பிரகாஷ் உனக்குச் சொந்தமா..?"

"ம்ம்.. என் அத்தை மகன்.. பிரபாவதி தேவியின் அண்ணன்.."

"சிறுவயதிலிருந்தே தெரியுமா..?"

"என் நினைவு தெரிந்த நாளில் இருந்து நான் மணப் பெண், அவர்தான் என் மாப்பிள்ளைன்னு சொல்லியே வளர்த்தார்களா.. நானும் அதே நினைவுடன்தான்

வளர்ந்தேன்.. யுகேந்திர அண்ணனின் கல்யாணத்தின் போது.. அப்போது நான் பிளஸ் டூ முடித்திருந்தேன்.. எனக்கும் பிரகாஷிற்கும் அதே திருமண மண்டபத்தில் நிச்சயதார்த்தம் நடத்திவிட்டார்கள்.."

"உனக்கு அதில் இஷ்டமில்லையா..?"

"வித்யா.. எனக்கு பிரகாஷின் மேல் இஷ்டம்.. ஆனால் கல்யாணத்தில் இஷ்டமில்லை.."

"உளராதே.. நீ சொல்வதன் அர்த்தம் புரிகிறதா..?"

"புரியாமல் என்ன..? எனவேதான் நான் கல்யாணத்தை தள்ளிப்போட என்ஜினியரிங் படிப்பைத் தேர்ந்தெடுத்தேன்.. அவர்களிடமிருந்து தூர விலகி நிற்க விரும்பி சென்னைக்குப் படிக்க வந்தேன்.."

"இப்போது என்ன பிரச்சனை..?"

"கல்யாணம் பண்ணிக்கொண்டு படி என்கிறார்கள்.. நான் என் அம்மாவிடம் தெளிவாய் சொல்லிவிட்டேன்.."

"என்னவென்று..?"

"என் பெரிய அண்ணன் அவர் மனைவியோடு வந்து என்றைக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறாரோ அன்றைக்கு எனக்குக் கல்யாணம் பண்ணட்டும்ன்னு.."

"உன் அம்மா என்ன சொன்னார்கள்..?"

"என் நரேன் அண்ணனிடம் சொன்னார்கள்.. பெரிய அண்ணன் என்னைத் திட்டினார்.. சிறு பெண் போல் இருக்க வேண்டுமென்றார்.."

"நீ என்ன சொன்னாய்..?"

"சிறு பெண்ணுக்கு ஏன் கல்யாணமென்றேன்.."

வித்யா புன்னகைத்தாள்.. பூர்ணிமாதேவி எப்போதையும் விட இப்போது அவள் கண்ணுக்கு மிக அழகாகத் தெரிந்தாள்..

'குடும்பமே சுயநலமாய் ஒருவனது உழைப்பிலும் தியாகத்திலும் வாழ இவள் மட்டும் அவனுக்காக மறுகுகிறாள்.. இப்படி ஒரு மனுஷியின் தோழமை கிடைக்க நான் என்ன தவம் செய்தேன்..?'

தோழியின் தலையை வருடிக் கொடுத்தாள்..

"நீ உன் போராட்டத்தில் உறுதியாய் இருக்கிறாய் இல்லையா.. அப்புறம் ஏன் வருத்தப்படுகிறாய்.. ஒரு வேளை பிரகாஷ் வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்குவாரோன்னு பயப்படுகிறாயா.."

"அப்படிப் பண்ணிக்கிட்டால்தான் தேவலையே.."

"என்னடி சொல்கிறாய்.. பிரகாஷ் மேல் உனக்குக் காதல் இல்லையா..?"

"அதைவிட அதிகமாக என் பெரிய அண்ணன் மேல் பாசம் வைத்து இருக்கிறேன்.. அதனால்தான் பிரகாஷிடம் வேறு பெண்ணை மணந்து கொள்ளச் சொல்லிச் சொன்னேன்.."

"எப்போது..?"

"இன்று காலையில்.. ஆறு மணிக்கெல்லாம் போன் பண்ணினார்.."

"என்ன சொன்னார்..?"

"வழக்கம்போல் காதல் வசனம் பேசினார்.. கல்யாணம் பண்ணிக்கிட்டுப் படின்னார்.."

"நீ என்ன சொன்னாய்..?"

"அவரை வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கச் சொன்னேன்.." பூர்ணிமாவின் கண்கள் கலங்கின.. வித்யா அவளை இரக்கத்துடன் பார்த்தாள்..

"அவர் அதுக்கு என்ன பதில் சொன்னார்..?"

"திட்டினார்டி.. உன் குடும்பத்துக்கே இதுதான் பழக்கமா..?" என்கிறார்..

"குடும்பப் பழக்கமா.. எதற்கு அப்படிச் சொல்கிறார்..?"

"நரேன் அண்ணா காதலியை வேணாம்ன்னு சொன்னாரில்லையா.. அதைச் சொல்கிறார்டி.."

"கோபத்தில் சொல்லியிருப்பார் விடு.."

"அப்படியில்லைடி வித்யா.. அண்ணா அன்றைக்கு மட்டும் காதல் பெரிதுன்னு போயிருந்தால் அவர் நன்றாக வாழ்ந்திருப்பார்.."

"அதைச் சொல்ல வேண்டியதுதானேடி.."

"சொன்னேனே.. ஏன் செய்யவில்லைன்னு கேட்கிறார்.. அத்தோடு விட்டாரா.. 'அவர் தியாகிப் பட்டம் வாங்கினது மாதிரி எனக்கும் வாங்க ஆசையில்லை'ன்னு வேறு சொல்கிறார்.."

வித்யா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்..

பூர்ணிமாவிற்கு கோபம் வந்தது.. வித்யாவின் முதுகில் ஓர் அறை விட்டாள்..

"ஏண்டி என் வேதனை உனக்குச் சிரிப்பாக இருக்கிறதா..?"

"பூர்ணி.. ஹா.. ஹா.. பூர்ணி.. ஹிஹி.. இந்தப் பிரகாஷை.. ஹாஹா.."

"சொல்லிவிட்டுச் சிரி.. இல்லை சிரித்துவிட்டு சொல்லு.."

வித்யா முதலில் மனதார சிரித்து முடித்தாள்.. பின்னர் வாய் திறந்தாள்..

"பூர்ணி.. பிரகாஷ் ரொம்ப பிராக்டிகலா பேசுகிறார்.. நீ எமோசனலா ஃபீல் பண்ணுகிறாய்.. இதுதான் மேட்டர்.. உன் சோகக் கதையில் அவர் மட்டும் சீரியஸா இருந்தார்ன்னு வை.. உன் காதல் அம்பேல்தான்.."

"இப்போ மட்டும் என்ன வாழ்கிறதாம்.."

"அதெல்லாம் வாழும்.. எழுந்திரு.."

"எங்கே..?"

"சாப்பிட.. நீ கதை சொல்ல.. நான் கதை கேட்க.. பார்.. மணி ஒன்றாகி விட்டது.. காலைச் சாப்பாடுதான் வேண்டாம்.. மதியச் சாப்பாடாவது சாப்பிட வேண்டாமா.. பசிக்குதுடி.."

"அச்சச்சோ.. நீயும் சாப்பிடலையில்ல.. வா போகலாம்.."

தோழியின் பசிக்காக அவசரமாய் எழுந்து கொண்டவளை அணைத்துக் கொண்டாள் வித்யா..

"பூர்ணிமா.. நீ தேவதைடி.. வற்றாத ஜீவநதி நீ.. உன்னைப் போல்தானே உன் அண்ணனும் இருப்பார்.. அவருக்கு ஒரு குறையும் வராது.. உனக்கும் வராது.. நீ போராடு.. உன் பிரகாஷ் உன்னை விட்டுப் போகமாட்டார்.. அதுக்கு நான் கேரண்டி.."

"அவரையே நீ முன்ன, பின்ன பார்த்ததில்லை.. கேரண்டி கொடுக்கிறாயே.."

"ப்ரீத்தீக்கு ஊரே கேரண்டி கொடுக்குது.. உன்னவருக்கு நான் கேரண்டி கொடுக்கக்கூடாதா..?"

"வாய்தாண்டி உன்னை வாழ வைக்குது.. வா சாப்பிடப் போகலாம்.."

அன்றிலிருந்து தினமும் ஒருமுறை பூர்ணிமாவின் நினைவுகளை தட்டி எழுப்பி நரேந்திரனைப் பற்றி பேச வைத்து கேட்டுக் கொண்டிருப்பது வித்யாவின் வழக்கமாகிப் போனது..

மெல்ல மெல்ல நரேந்திரனைப் பற்றிய நினைவுகள் அவளை ஆக்ரமித்தன.. அவனே அவளது சுவாசமாகிப் போனான்.. அவன் மேலான கருணை காதலாகிப் போனது.. வரலாற்று நாயகனின் சாகசங்களைக் கேட்பது போல் அவனைப் பற்றிய கதைகளை அவள் வாய் திறந்து கேட்பாள்.

"அப்புறம் உங்க நரேன் அண்ணன் அதை எப்படிச் சமாளித்தார்..?"

"அதையேன் கேட்கிறாய்.. உனக்கும் எனக்கும்தான் மாட்டிக் கொண்டால் திணறல் வரும்.. வேர்த்துக் கொட்டும்.. பெரிய

அண்ணாவுக்கு அதெல்லாம் அல்வா சாப்பிடுகிற மாதிரி.. அந்த சுமதிப் பொண்ணு அண்ணன்கிட்ட வழிந்துக்கிட்டே நிற்கும்.. அதை அவாய்ட் பண்ணத்தான் அவர் வேகமாய் போனார்.. பச்சைத்தாவணி மேல் தடுக்கி விழுந்துவிட்டார்.. கல்யாண வீட்டில்களே பரம் ஆகிவிட்டது.. இதில் ஜோக் என்னன்னா பச்சைத் தாவணி அதுமேல் ஆசைப்பட்டுத்தான் அண்ணன் மேலே வந்து விழுந்தார்ன்னு ஓர் தப்புக் கணக்கு போட்டுக் கிட்டு பார்த்துச்சு பார் ஓர் பார்வை.. அண்ணன் முகம் ஓர் அண்டா விளக்கெண்ணை குடித்தது மாதிரி ஆகிவிட்டது.."

"அப்புறம்.."

"அண்ணா சுமதிப் பொண்ணைப் பார்த்தாரே ஓர் பார்வை.. மஜ்னு கெட்டுப் போனான்.. உடனே சுமதி பச்சைத்தாவணி மேல் தடுக்கி விழுந்ததது தான்தான்னு ஒரே போடா போட்டிருச்சு.."

"அப்புறம்.."

"அண்ணன் தப்பித்தார்... கதையில் சுபம் போட்டாச்சு.. இன்னைக்கு இது போதும்.. நாளைக்கு வேற கதை சொல்கிறேன் போய் தூங்கு.."

பூர்ணிமா கேலி போல் சொன்னாலும் அவளுக்கு நரேந்திரனைப் பற்றிப்பேச அலுப்பதேயில்லை.. மறுநாள் வித்யாவை இழுத்து வைத்து அவளாகவே, "அப்படித்தான்.. ஓர் நாள்.. எங்க பெரியண்ணா.." என்று ஆரம்பித்துவிடுவாள்..

இப்படித்தான் காதல் என்னும் மாயவலையில் வித்யா சிக்கிக் கொண்டது.. இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் இன்று வரை வித்யா என்று ஒரு ஜீவன் தனக்காக உருகுவது நரேந்திர பூபதிக்கு தெரியாது.. அதேபோல் போட்டோவில் அன்றி நேரில் வித்யா அவனைப் பார்த்த தில்லை..

எனவே மதிய உணவு இடைவேளையில் பூர்ணிமா கண்கலங்கியபோது வித்யாவும் மனதிற்குள்

கலங்கினாள்.. ஆனாலும் வெளியே,

"பூர்ணி.. பிரகாஷ் உனக்காக காத்திருப்பார் கவலைப் படாதே.." என்றாள்..

"அவரை யார் காத்திருக்கச் சொன்னது..?"

"உன்மேல் அவருக்கு இருக்கும் காதல்தான் சொல்கிறது.."

"இல்லை வித்யா.. என்னால் அவர் துன்பப்படுவது எனக்குச் சகிக்கவில்லை.."

"காத்திருப்பது காதலில் சுகம்.. இதில் துன்பம் இல்லை பூர்ணி.."

"உனக்கு காதலைப் பற்றி என்ன தெரியும் வித்யா..? எனக்காகச் சொல்லாதே.." என்று இயல்பாக சொல்லி விட்டுக் கை அலம்பச் சென்றாள் பூர்ணிமா.. வித்யா மனதிற்குள் கூறிக் கொண்டாள்..

'எனக்கா காதலைப் பற்றித் தெரியாது..? நான்கு வருடங்களாய் உன் நரேந்திர அண்ணனை மாய்ந்து மாய்ந்து மனதிற்குள் காதலிக்கிறேன் என்று உனக்குத்தான் தெரியாது பூர்ணிமா..'

பூர்ணிமா திரும்பிப் பார்த்து சிரிக்க வித்யாவும் சிரித்தாள்...

"காதலைப் பற்றி எனக்கென்ன தெரியும் பூர்ணி..? சும்மா கேள்வி ஞானம்தான்.."

5

நதியோரம் நடந்தபோது

நெஞ்சோரம் பூ மலரும்

நீர் போலே மனம் துள்ளும்

நிறம் மாறா குணம் கொள்ளும்

...நதியோரம் நான் நடந்த போது...

அன்று மாலை வீடு திரும்பும்போது பூர்ணிமா உற்சாகமாக இருந்தாள்.. அவளது துள்ளலுக்கான முதல் காரணம் அன்று வித்யாவிற்கு டியூட்டி இல்லை.. இரண்டாவது காரணம் இருவரும் ஷாப்பிங் போகப் போகிறார்கள்.. போய் ஒன்று போல் இருவருக்கும் உடை எடுக்கப் போகிறார்கள்..

முதல்நாள் இரவே முடிவெடுத்து விட்டாள் பூர்ணிமா.

"வித்யா.. டியூட்டிக்கு கிளம்புவதற்குள் இதற்குப் பதில் சொல்லி விட்டுப்போ.. நாளைக்கு நாம் ஷாப்பிங் போகிறோமா இல்லையா..?"

"போகிறோம்.."

"நாமிருவரும் ஒரே கலரில் ஒரே விலையில் டிரஸ் எடுக்க வேண்டும்..."

"என் சுரிதாருக்கான பணத்தை நான் கொடுத்து விடுவேன்.."

"ஏண்டி.. என்னை மூட்-அவுட் ஆக்குகிறே.. இப்ப நான் பணக்காரி.. உனக்கு டிரஸ் எடுத்துத் தருகிறேன்னு சொன்னேனா..?"

"சொன்னாலும் சொல்வே.. உன்னை நம்ப முடியாது.."

"என் குணம் உனக்குத் தெரியும்.. சரி உன் குணமும் எனக்குத் தெரியுமில்லையா..? நீ தான் சுயமரியாதை சுந்தரியாயிற்றே.. உன்னிடம் வாய் கொடுத்துவிட்டு நான் துன்பப்படவா..? நான் வாயே திறக்க மாட்டேன்.."

வித்யா முறைத்தாள்..

"நான் என்னடி உன்னைத் துன்பப்படுத்தினேன்..?"

"எடுத்ததெற்கெல்லாம் பெட்டியைத் தூக்கிக்கிட்டு வெளியே போய் விடுவேன்னு பயமுறுத்தறியே அது துன்பம் இல்லையா..?"

"நீ நான் போட்ட கண்டிசன்களை மீறலைன்னா வம்பே இல்லையே.."

"மீறமாட்டேன் தாயே.. மீறவே மாட்டேன்.. நாளைக்கு என் சுரிதாருக்கான பணத்தை நானே கொடுத்து விடுகிறேன்.. அதற்கு விடுவாயில்லையா..? அப்பா.. நீ இருக்கிறாயே.. சரியான கறார் பேர்வழிடி.. நீ எங்க பெரிய அண்ணன் மாதிரி.."

வித்யாவின் மனம் துள்ளியது..

"அப்போ உன் பெரிய அண்ணனும்.. நானும் ஒன்றா..?" என்றாள் கோபம் கொண்டவள் போல் நடித்த வளாய் அதைப் புரியாத அப்பாவியாய் பூர்ணிமா கூறினாள்..

"நிச்சயம் ஒன்றுதான் வித்யா.. யோசித்துப் பார்த்தால் என் பெரியண்ணன் குணங்கள் அப்படியே உனக்கிருக்கிறது புரியும்.. ஒருவேளை அதனால்தான் எனக்கு உன்னை ரொம்பப் பிடித்துவிட்டதோ என்னவோ.."

"அப்படியென்ன உன் பெரிய அண்ணன் பெரிய குணக்குன்றாம்..?" வித்யா வேண்டுமென்றே பேச்சை வளர்த்தாள்..

"பின்னே.. அவர் குணம் யாருக்கு வருமாம்..?"

"எனக்கு வந்திருக்கிறது என்று சொன்னாயே.."

"அதனால்தான் உன்னைப் பிடித்திருக்கிறது என்றும் சொன்னேனே.."

"போதும்டி.. ஐஸ் வைத்தது.. உனக்கென்ன நாளைக்கு சாயங்காலம் உன்னுடன் ஊர் சுற்ற வரவேண்டும்.. அவ்வளவுதானே வருகிறேன்.. இப்போது டியுட்டிக்கு நேரமாகி விட்டது.. ஆளைவிடு.."

அன்று காலேஜ் விட்டு திரும்பியவுடனே முகம் கழுவி காபி வேலையை முடித்துக் கொண்டு அவர்கள் படியிறங்கினார்கள்.. வித்யா ஸ்கூட்டியை எடுக்க பூர்ணிமா பின்னால் ஏறிக் கொண்டாள்.. வித்யாவின் முகம் இளகியது.. மனம் மென்மையானது..

இரண்டு பேரும் சேர்ந்து செல்வதற்காக பூர்ணிமா கண்டுபிடித்த வழி அது.. காலேஜ் தவிர மற்ற இடங்களுக்கு போகும்போது தனித்துச் செல்ல பூர்ணிமா விரும்பமாட்டாள்.. வித்யாதானே தன் காரில் ஏற மறுக்கிறாள்..? தான் வித்யாவின் ஸ்கூட்டியில் ஏறிவிட்டால்.. யோசனையை செயல் படுத்தியும் விட்டாள்.. எங்கே சென்றாலும் இருவரும் வித்யாவின் ஸ்கூட்டியில் பறந்தார்கள்.. காலேஜிற்கும் அப்படியே போய்வர பூர்ணிமாவிற்கு ஆசைதான்.. வித்யாதான் தடுத்துவிட்டாள்.

"உனக்காக ஒரு காரையும் அதை ஓட்ட டிரைவரையும் அனுப்பி வைத்திருக்கும் உன் குடும்பத்தாருக்காகவாவது நீ காரில் தான் காலேஜ் வர வேண்டும்.." என்று கண்டிப்பாய் கூறிவிட்டாள்..

அன்று வித்யாவின் தோளைப் பற்றிக் கொண்டு சளசளத்தபடி பூர்ணிமா வர அதற்குப் பதில் சொல்லியபடி வண்டியை விட்ட வித்யா கேட்டாள்..

"நியு இயர் வருகிறது.. சரி.. அதற்குப் புது டிரெஸ் வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும்.. அதுவும் சரி.. அது எதற்கு உனக்கும் எனக்கும் ஒரே கலர் ஒரே விலையில் டிரெஸ் எடுக்க வேண்டுமென்கிறாய்.."

"எனக்கென்னவோ ஆசையாய் இருக்கிறது வித்யா.. நீயும் நானும் ஒரே கலரில் டிரெஸ் போட்டுக் கொண்டு காலேஜில் போய் ஓர் கலக்கு கலக்க வேண்டுமென்று.."

"அதுதான் ஏன்..?"

"வித்யா.. அந்த ஜெனிஃபர் இருக்காளில்ல.. அவள் போன வாரம் ஒரு கேள்வி கேட்டாள்.. 'நீயும் வித்யாவும் திக் பிரண்ட்ஸ்ன்னு நீதான் சொல்லிக்கிறே.. அவள் தனியா

ஸ்கூட்டியில் வர்றாள்.. நீ காரில் வர்ற.. ஒரே வீட்டில் தங்கியிருக்கிறீங்கன்னு நீங்களா வாய் திறந்து சென்னால் தான் தெரியும்'ன்னு சொல்கிறாள்டி.. எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது..."

"இதற்குப் போய் மூட்-அவுட் ஆவார்களா..? மண்டு.. மண்டு.. மற்றவர்களுக்காகவா நாம் வாழ்கிறோம்..? நம் மனதிற்கு எது சரியென்று படுகிறதோ அதை செய்து கொண்டு போய் கொண்டே இருக்க வேண்டும்.. மற்றவர்களைக் கேர் பண்ணக் கூடாது.."

"இது.. இதைத்தான்.. என் பெரிய அண்ணனும் அடிக்கடி சொல்லுவார்.. இப்போப் புரிகிறதா நான் ஏன் 'என் அண்ணனும் நீயும் ஒன்று'ன்னு சொல்கிறேன் என்று..?"

சிக்னலுக்காக வண்டியை நிறுத்திய வித்யாவுக்கு புல்லரித்தது.. நரேந்திரனின் குணாதிசயங்கள் பூர்ணிமாவின் வாய்மொழியின் உபயத்தால் அவளுக்கு இப்போது அத்துபடியென்றாலும் அவன் பெயரை கேட்பது கூட ஒரு தனி சுகம்..

"ஆமாண்டி.. நடுரோட்டில் இத்தனை டிராபிக் நடுவில் உன் அண்ணன் புராணம் பாடு.. பெருமை பேச நேரம் பார்த்தே பார்.." என்று போலியாய் அலுத்துக் கொண்டாள் வித்யா..

"எங்கேயிருந்தாலும் என் அண்ணன் பற்றி நினைக்காமலிருக்க என்னால் முடியுமா..? சரி சரி சிக்னல் விழுந்து விட்டது வண்டியை எடு.."

"பூர்ணி.. ஒரே கலரில் டிரெஸ் வாங்குவது சரி.. ஒரே விலையில் என்றால்.. கொஞ்சம் உதைக்கிறார் போலிருக்கிறதே.."

"இல்லையே.." என்றாள் பூர்ணிமா கைகளை விரித்து..

"வண்டியில் உட்காரும்போது ஆடாமல் உட்காருன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்.. ஒழுங்காய் உட்காரு.. இப்ப ஏன் டான்ஸ் ஆடறே..? நான் சுடிதார் அதிக விலையில் எடுக்கமாட்டேன்.."

"ஆனால் அழகாய் எடுப்பாய்.."

"நிச்சயமாய்.. என் உடைகள் விலை குறைவாயிருக்கும்.. ஆனால் அழகாய் நேர்த்தியாய் இருக்கும்.. சீஃப் அன்ட் பெஸ்ட்தான் என்னுடைய சாய்ஸ்.. ஆனால் நீங்களெல்லாம் விலையைப் பார்த்துத்தானே டிரெஸ் எடுப்பீர்கள்..?"

"அது அப்போ.."

"எப்போ..?"

"வித்யா என்கிற சர்வாதிகாரியை நான் சந்திப்பதற்கு முன்பாக.."

"நான் சர்வாதிகாரியா.." என்று லேசாய் தலை திருப்பி விழிகளை உருட்டியவள் வண்டியின் முன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துவிட்டு அடக்கமாட்டாமல் சிரித்து விட்டாள்.. அந்தத் துணிக்கடையின் வாசலில் வண்டியை நிறுத்திப் பூட்டிச் சாவியை கைப்பையில் போட்டுக் கொண்டவள் தோழியைப் பார்த்து..

"வா.. வா.. சீக்கிரம் எடுத்து விட்டு சீக்கிரம் வீட்டிற்குப் போகலாம்.." என்று கூறினாள்..

"பறக்காதே.. நீ போய் சமையலா பண்ணப் போகிறாய்.. என்றைக்காவது ஒருநாள் இப்படி வெளியே வருகிறோம்.. அவசரப்பட்டால் எப்படி..?"

"ம்ம்.. அது ஒருவேளை என் மிடில்கிளாஸ் குணமாக இருக்கலாம்.. விளக்கு வைப்பதற்குள் வீட்டிற்கு திரும்பி விட வேண்டுமென்ற கட்டுப்பாடு.. விளக்கு வைத்தபின் வெளியேயிருக்க நேர்ந்தால் ஏதோ குற்றம் செய்தது போல் மனம் குறுகுறுக்கும்.. வீட்டிற்குள் நுழைந்த பின்தான் சரியாகும்.."

"ஒரு துணுக்கு படித்திருக்கிறேன்.. யானையை முதலில் சங்கிலியால் கட்டிப் போடுவார்களாம்..

அது உடைக்கப் பார்த்து முடியாமல் அடங்கி விடுமாம்.. பின்னர் வெறும் கயிறால் கட்டிப் போடுவார்களாம்.. அது ஒரே இழுவையில் அறுந்துவிடும் என்பதை அறியாமல்

யானையும் அடங்கி இருக்குமாம்.. அதுபோல் பெண்கள் மனோதத்துவ ரீதியாக இப்படிப் பயப்படுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கும்.."

"சரி என்ன கலர் எடுக்கலாம்.."

"உன் விருப்பப்படி எடு.. உன் உடைகள் எப்போதுமே ரசனையுடன் அமைந்திருக்கும் வித்தி.. என்னிடம் விலையுயர்ந்த சுடிதார்கள் நிறைய உண்டு.. ஆனால் உன்னுடையதுபோல் அழகாய், ரசனையாய் ஓர் உடை கூட இல்லை.."

"இதுதானே வேண்டாம்கிறது.. விட்டால் என்னை ஓட்டு ஓட்டு என்று ஓட்டுவாயே.. ஏய் பூர்ணி இந்த பிங்க் கலர் பிடிச்சிருக்கா பாரு.."

பூர்ணிமாவுக்கு பிடித்திருந்தது.. அன்று ஒரே கலரில் உடைகள் எடுத்தது பின்நாளில் ஓர் மறக்க முடியாத அனுபவத்தை தனக்கு ஏற்படுத்தப் போவதை வித்யா அறியவில்லை..

இருவரும் ஐஸ்கிரீம் பார்லர் போனார்கள் ஐஸ்கீரிம் சாப்பிட்டார்கள்.. பீச்சிற்குப் போனார்கள்.. கடல்நீரில் கால் நனைய விளையாடினார்கள்.. பின்னர் மூச்சு வாங்க ஈர உடையுடன் மணலில் உட்கார்ந்தார்கள்..

"தேங்காய்.. மாங்காய்.. பட்டாணி.. சுண்டல்.." என்றபடி ஒரு சிறுவன் சில்வர் தூக்கோடு அருகில் வந்து நின்றான்..

"ஏண்டா.. காலம் காலமாய் ஒரே டயலாக் தான் சொல்வீர்களா வேறு டயலாக் கிடையாதா.." என்று கிண்டலாக வினவினாள் வித்யா..

"இந்த டயலாக்கைத்தான் என் அப்பா எனக்குச் சொல்லிக் குடுத்தாருக்கார்.." என்றான் அந்தப் பையன்..

"அவருக்கு அவர் அப்பா சொல்லிக் குடுத்தாரா..?" என்றவள்..

"என்னடா படிக்கிறாய்..?" என்று விசாரித்தாள்..

"ஆறாம் வகுப்பு படிக்கிறேன்க்கா.. கார்ப்பரேசன் ஸ்கூல்.." என்றான் அவன் மிகப் பெருiயாக..

"நல்லாப் படிப்பியாடா.."

"நான்தான்க்கா கிளாஸ் பர்ஸ்ட்.." என்றான் அவன் வாயெல்லாம் பல்லாக..

"வெரிகுட்.. நல்லாப் படிக்கணும்.. இங்கே எவ்வளவு நேரம் சுண்டல் விற்பாய்..?"

"சாயந்திரம் ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை விற்பேன்க்கா.."

"சரி.. வீட்டுக்குப் போனதும் படிக்க ஆரம்பிச்சிடனும்.. என்ன.. எங்கே எங்களுக்கு இரண்டு பொட்டலம் சுண்டல் கொடு பார்க்கலாம்.."

சுண்டல்காரப் பையன் போனதும் பூர்ணிமா சுண்டலைப் பிரித்து வாயில் போட்டபடி..

"என்னடி சுண்டல்கார பையனுடன் பேச்சு வார்த்தையையெல்லாம் பலமா நடத்தினே.. என்ன பேட்டி எடுத்தியா..?" என்று கேட்டாள்..

"பொதுவாய் குழந்தை தொழில் தவறு என்பதுதான் என் கருத்து பூர்ணிமா.. அதே நேரம் படித்துக் கொண்டே இதுபோல் சின்னச் சின்ன வேலைகள் செய்து சம்பாதிப்பது தவறு இல்லைன்னும் நினைக்கிறேன்.. என்னையே எடுத்துக்கயேன்.. என் படிப்புக்கு நான் வேலை செய்து சம்பாதிக்கவில்லையா..?"

"நீ சொல்வதும் சரிதான் வித்யா.. அவர்கள் பாவம் ஏழைகளாக இருப்பார்கள்.. ஆளுக்கு ஒரு வேலையைச் செய்து சுமையைப் பகிர்ந்து கொள்வதில் தவறு இல்லை தான்.."

"காந்தியடிகள் அன்றைக்கே சொல்லியிருக்கார் பூர்ணி.. 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்' என்று.. இன்றைக்கு

எத்தனை பெண்கள் தையல் மிஷின் தைப்பது மூலம் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள் தெரியுமா..?"

அவர்கள் பேசிக் கொண்டே சுண்டலைக் காலிப் பண்ணினர்.. பின்னர் கேலியும்.. கிண்டலுமாக வீடு வந்து சேர்ந்தனர்..

அடுத்து வந்த நாள்கள் இறக்கைக் கட்டிக் கொண்டு ஓட புது வருடப் பிறப்பு வந்தது.. இருவரும் ஒரே கலரில் ஆடை அணிந்து கோவிலுக்குப் போய் வந்தனர்..

அடுத்த வாரத்தில் ஓர் நாள் அந்த உடையை கல்லூரிக்கு அணிந்து சென்றனர்.. பிடிவாதமாக காரைத் தவிர்த்து வித்யாவின் பின்னால் ஸ்கூட்டியில் உட்கார்ந்து வந்தாள் பூர்ணிமா.. ஜெனிபரின் முன் பெருமையாய் போய் இறங்கினாள்..

"ஹாய்.. ஜெனிஃபர் சீக்கிரம் வந்துட்டபோல.." என்ற பூர்ணிமாவின் கேள்வியைக் கவனிக்காமல் அவர்கள் இருவரின் உடைகளைக் கவனித்த ஜெனிஃபர்..

"வாவ்.." என்றாள்..

"ஹேய்.. எவ்வளவு அழகாக இருக்கிறது.. பிங்க கலரில்.. பிளாக் எம்பிராய்டரி.. அதில் சின்னச் சின்ன ஸ்டோன் பதித்து ஸ்மார்ட் வொர்க்.. ஒரே கலரில்.. எங்கே வாங்கினீர்கள்..?"

பூர்ணிமா பெருமையாய் சிரித்துக் கொள்வதை பரிவுடன் கவனித்தாள் வித்யா.. அவளிடமுள்ள ஒரு பட்டுச் சேலையின் விலை ஐந்து லட்ச ரூபாய்..! அதைக் கேட்டு தான் மலைத்துப் போனது நினைவுக்கு வந்தது அவளுக்கு.. சில நூறு ரூபாய்களில் வாங்கிய இந்த சுடிதாருக்கா இவ்வளவு பெருமை..? 'என்னருமைத் தோழியே.. உன் அன்பிற்கு நான் அடிமையானேன்.. எப்போது கழிப்பேன் இந்த அன்புக்கடனை..' என்று நெகிழ்ந்தாள்..

அன்று அவர்களின் உடைகளை தோழிகள் அனைவரும் கவனித்து புகழ்ந்தனர்.. சில பெண் லெக்சரர்கள்கூட விசாரித்தனர்.. மாலையில் வீடு வந்து சேர்ந்ததும் வித்யா

நைட் டியூட்டிக்கு போக வேண்டும் என்பதால் காபி குடித்தவுடன் தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டாள்.. மாலை ஆறு மணி அளவில் எழுந்து முகம் கழுவித் தயாரானவள் மாடிப் பால்கனியில் தொட்டிச் செடிகளில் ஒரு செடியில் ரோஜாப் பூ பூத்திருப்பதைக் கவனித்து அதன் அருகில் சென்று குனிந்து அந்தப் பூவைக் கிள்ளி எடுத்தாள்.. அதே நேரத்தில் அவள் பின்னாலிருந்து இரண்டு முரட்டுக் கரங்கள் அவள் கண்களைப் பொத்தின..

6

நதியோரம் நடந்தபோது

நானறிந்த உன் பாட்டு

கண்ணிரண்டை மூடச் சொல்லும்

கண்ணாமூச்சி விளையாட்டு

...நதியோரம் நான் நடந்த போது...

வித்யா திகைத்துப் போனாள்.. இது பூர்ணிமாவின் கரமில்லை.. மெதுவாக விழிபொத்திய கரங்களைப் பிடித்தாள்.. ரோமங்கள் அடர்ந்திருந்தன.. வித்யா விக்கித்துப் போனாள்.. இது ஒரு ஓர் ஆண்மகனின் கரமல்லவா..? படாரென்று கைகளைத் தட்டி விட்டவள் கோபமாய் திரும்பினாள்.. எதிரே நிற்பவனைக் கண்டதும் அப்படியே சிலையாக நின்று போனாள்.. இது யார்? கடவுளே..! இது அவளது நரேந்திரன் அல்லவா..?

'நரேந்திரன்.. நரேந்திர பூபதி..' எப்போது வந்தான் இவன்..? ஏன் அவள் விழிகளைப் பொத்தினான்..? அவளை அறிவானா..? பிரமித்துப் போய் அவள் அவனைப் பார்க்க.. அவனோ விதிர்த்துப் போய் அவளைப் பார்த்தான்..

"ஐ ஆம் ஸாரி.. நீங்கள் யார்..? நான் என் தங்கையென்று நினைத்து.. பூர்ணிமா.. பூர்ணிமா.."

"அண்ணா.." என்று ஓடி வந்தாள் பூர்ணிமா..

"இது என் பிரண்ட் வித்யா.. என்னுடன் இந்த வீட்டில் தங்கியிருக்கிறாள் என்று நான் சொல்லியிருந்தேனே.. வித்யா.. நீ போட்டோவில் பார்த்த என் பெரிய அண்ணன் இவர்தான்.."

பூர்ணிமா அறிமுகம் செய்து வைக்க அவன் விழிகளை நேருக்கு நேராய் பார்க்க முடியாமல் தவித்த வித்யா தலைகுனிந்து நடுங்கும் கரங்களைக் குவித்து வணக்கம் சொன்னாள்..

தன் முன்னால் தாமரை மொட்டுக்களாய் குவிந்த கரங்களைப் பார்த்த நரேந்திரன் பதிலுக்கு மெதுவாய்..

"வணக்கம்.." என்றான்.. எதிரே நின்றவளின் படபடப்பு ஏனோ அவனை ஈர்க்க தலை கவிழ்ந்திருந்த அவள் முகத்தைப் பார்த்தான்.. இமைகள் பட்டாம் பூச்சிகịளாய் அடித்துக் கொள்ள அந்த பெரிய நீள்வடிவான கண்கள் தாழ்ந்திருக்க அவள் நின்ற கோலம் ஓர் ஓவியம் போல் அவன் மனதில் பதிந்தது.. உயரமாய்.. ஒடிசலாய் சிவந்த மஞ்சள் நிறத்துடன் ஆர்ப்பாட்டமில்லாத அழகிய நதி போல் தோன்றிhள் அந்த யுவதி..

'என்ன ஓர் அமைதியான அழகு'என்று நினைத்துக் கொண்டவன்.. அதற்கு மேல் ஓர் வயதுப் பெண்ணைப் பார்ப்பது சரியில்லை என்ற கண்ணியம் காத்தவனாய் பார்வையை விலக்கிக் கொண்டு தங்கையைப் பார்த்தவன்..

"கடைசியில் இதுதானா என்னை சிக்கலில் மாட்டி வைத்தது.." என்றான்..

"எது அண்ணா..?" என்றாள் அவள் புரியாதவளாய்..

"இல்லை பூர்ணிமாக்குட்டி.. நீ உள்ளே வரும்போதே நான் பார்த்து விட்டேன்.. நீ மாடியேறிப் போனதும் பின்னாலேயே மெதுவாக வந்து கண்பொத்தி சர்ப்ரைஸ் கொடுக்கலாமென்று வந்து கண் பொத்தினால்.. கடைசியில் அது நீயில்லை.. உன் பிரண்ட்.. எதனால் தவறு

நேர்ந்தது என்று பார்த்தால்.. நீங்கள் இரண்டு பேரும் ஒரே கலர்.. ஒரே டிசைனில் சுடிதார் போட்டிருக்கிறீர்கள்.. ஏன் பூர்ணி.. அண்ணாவை இப்படி மாட்டி வைக்க எத்தனை நாளாய் பிளான் போட்டாய்..?"

"போங்க அண்ணா..! எனக்கு நீங்கள் இன்று வருவீர்கள்னு எப்படித் தெரியுமாம்..? ஜோஸியமா பார்த்தேன்..? மாடிக்கு வந்து விட்டுக் கீழே இறங்கிப் போனால் கண்ணம்மா சித்திதான் சொன்னாங்க.. 'உன் பெரிய அண்ணா மதியமே வந்துவிட்டார்.. இப்போ உன்னைத் தேடி மாடிக்குப் போயிருக்கார்'ன்னு உடனே அவசரமாய் வந்தேன்.. நான் வருவதற்குள்.." பூர்ணிமா முடிக்காமல் நிறுத்த..

"வருவதற்குள்..?" என்று கேலியாய் புருவம் உயர்த்திய நரேந்திரனின் பார்வை வித்யாவின் மேல் பாய்ந்து.. அதே நேரம் அவனை அவளது விழிகளும் ஏறிட்டுப் பார்க்க அவள் முகம் செவ்வானமானது..

"ம்ம்.." என்று அண்ணனின் குறும்மை ரசித்த பூர்ணிமா..

"நீங்கள் வித்யாவுடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தீர்கள் போதுமா..?" என்று கலகலவென்று சிரித்தாள்..

அதற்குமேல் அங்கு நிற்க முடியாதவளாய் வித்யா..

"பூர்ணி.. நான் டியூட்டிக்கு கிளம்புகிறேன்.." என்றபடி சரசரவென படிகளில் இறங்கிப் போய்விட்டாள்..

அவள் திரும்பிய வேகத்தில் சுழன்று ஆடிய பின்னலின் நீளத்தைக் கண்ட நரேந்திரன் ஆச்சரியப் பட்டான்.. வித்யாவின் நீண்ட பின்னலின் மேல் அவன் பார்வை இருப்பதைக் கவனித்த பூர்ணிமா..

"அது அவளது சொந்தக் கூந்தல்தான் அண்ணா..?" என்றாள் கண்களில் குறும்பு மின்ன..

"போக்கிரி.." என்று தங்கையின் காதைப் பிடித்துத் திருகிய நரேந்திரன்..

"உன் தோழியின் கூந்தல் இயற்கையானதா இல்லை செயற்கையானதான்னு நான் உன்னிடம் கேட்டேனா..?" என்றாள்..

"நீங்கள் கேட்கவில்லை அண்ணா.. ஆனால் உங்கள் பார்வை கேட்டதே.."

"அதுவா.. இப்போதெல்லாம் பெண்கள் முடியை வெட்டி விட்டுக் கொள்கிறார்களே.. அதுதானே இப்போதைய பேஷன்.. அதனால் பார்த்தேன்.."

"அப்படியா.. நம்ப முயற்சி செய்கிறேன்.. ஆனால் அண்ணா..? எங்கள் காலேஜில் வித்யாவின் நீண்ட கூந்தலுக்கு ரசிகர் வட்டாரமே உண்டு தெரியுமா.."

"ம்ம்.. அதைத் தெரிந்து கொள்ளத்தானே அம்பா சமுத்திரத்திலிருந்து அத்தனை கிலோமீட்டர் தூரத்தையும் தாண்டி ஓடிவந்திருக்கிறேன்.." என்று கிண்டலாக மொழிந்தவன் வாசல்புறம் கேட் திறக்கும் சத்தம் கேட்டு மாடிப் பால்கனியிலிருந்தவாறே திரும்பிப் பார்த்தான்..

ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு வாசலைக் கடந்து கொண்டு இருந்த வித்யா அதே நேரம் மேலே ஏறிட்டுப் பார்த்தாள்.. கண நேரத்தில் உடலெல்லாம் மின்சாரம் ஊடுருவிப் பாய வித்யா பார்வையை விலக்கி ஸ்கூட்டியில் பறந்தாள்.. நரேந்திரனின் விழிகளில் அவளது நாணம் பதிவானது.. யோசனையுடன் அவள் சென்றதிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றவன்..

"களுக்"கென்ற சிரிப்பொலி கேட்டுத் திரும்பினான்.. பூர்ணிமா வாய் பொத்திச் சிரித்துக் கொண்டிருந்தாள்..

"என்ன சிரிப்பு..?" என்று காரணம் தெரியாமல் கேட்டான்..

"இராமாயணத்தை நினைத்தேன்.. சிரித்தேன்.."

"இராமாயணமா..?"

"ஆமாம்.. அதில் ராமன் மிதிலையின் வீதியில் நடந்து வருவான்.. சீதை மாளிகையின் பால்கனியில் நிற்பாள்..

அவள் பார்வை கீழே பாயும்.. ராமனின் பார்வை மேலே பாயும்.. இருவரின் விழிகளும் சந்தித்துக் கொள்ளும்.."

"ஊஹூம்.." மென்மையான சிரிப்புடன் அவள் மேலே பேச ஊக்குவித்தான் நரேந்திரன்..

"அதைக் கம்பர் எப்படிச் சொல்வார் தெரியுமா..?"

"எப்படி..?" அறியாச் சிறுவன் போல் வினவினான் நரேந்திரன்..

"அண்ணலும் நோக்கினான்.. அவளும் நோக்கினாள்.."

"இதை ஏன் இங்கே இப்போது சொல்கிறாய்..?"

"இல்லை.. இங்கே கதை மாறியிருக்குன்னு நினைத்தேன்.. சிரிப்பு வந்துவிட்டது.. ராமாயணத்தில் ஹீரோ தான் தரையில் இருப்பார்.. ஹீரோயின் பால்கனியில் இருப்பாள்.. இங்கே நீங்கள் பால்கனியில் இருக்கிறீர்கள்.. வித்யா தரையில்.. அதுவும் ஸ்கூட்டியில் போகிறாள்.. ஹாஹா.."

"அவள் சீதையாயிருக்கலாம்.. நான் ராமனில்லை பூர்ணி.. அதனால் இனிமேல் விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதே.." என்றான் கடினமான குரலில் நரேந்திரன்..

"அண்ணா.." என்று ஏதோ சொல்ல முயன்ற பூர்ணிமா விடம்..

"பொறு.. நான் உனக்கு எப்போதுமே உயர்த்திதான்.. ஆனால் நான் கார்த்திகாவைக் காதலித்தவன்.. வேறொரு பெண்ணை மண முடிக்க இருந்தவன்.." என்று இடை மறித்துப் பேசியவனின் வாய்பொத்தி தடுத்தாள் பூர்ணிமா..

"அவர்கள் இருவருமே வேறு ஆண்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு குழந்தையும் குடித்தனமுமாக இருக்கிறார்கள்.. அதை நீங்களும் மறந்து விடாதீர்கள் அண்ணா.."

"அது மட்டுமல்ல பூர்ணி.." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தன்னை அடக்கிக் கொண்டு..

"இதற்குத்தான் நீ சிறு பெண்ணென்று நான் அடிக்கடி சொல்வது.. அதைவிடு.. இந்த மாலை நேரத்தில் உன் தோழி எங்கே போகிறாள்..?" என்று பேச்சை மாற்றினான்..

உடனே பூர்ணிமாவின் கண்களும் முகமும் மலர்ந்தன.. அங்கே தொங்கிக் கொண்டு இருந்த மர ஊஞ்சல் சேரில் வாகாய் அமர்ந்து கொண்டவள் கையை ஆட்டி ஆட்டி தோழியின் பெருமைகளைப் பற்றிப் பேசலானாள்.. 'வித்யா மகாபுத்திசாலி.. வித்யா ரொம்ப சுய மரியாதை பார்ப்பவள்..' என்று ஆரம்பித்து வித்யாவின் கதை முழுவதையும் கொட்டி முடித்தாள்.. எதிரேயிருந்த மற்றொன்றில் அமர்ந்து லேசாய் ஆடியபடியே கேட்டுக் கொண்டிருந்த நரேந்திரன்..

"ஸோ.. உன் பிரண்டுக்கு அம்மா கிடையாது.. சித்தி கொடுமை.. படிப்பில் கெட்டிக்காரி.. வேலை பார்த்துக் கொண்டே படிக்கிறாள்.. உன்னுடன் பணம் கொடுத்து விட்டு 'பேஃயிங் கெஸ்டாக' தங்கியிருக்கிறாள்.. அப்படித் தானே.." என்றான்..

"சுருக்கிச் சொல்வதானால் அப்படித்தான்.."

"குணம் எப்படி பூர்ணி..? உன்னுடன் தங்கும் பெண் நேர்மையான குணத்துடன் இருக்க வேண்டும்..? புரிந்ததா..?"

"அண்ணா..! அவள் தங்கக் கம்பி.. அவளைப் பற்றி இவ்வளவு கூறியும் நீங்கள் சந்தேகப்படுவதுபோல் பேசுவது கஷ்டமாக இருக்கிறது.. அவள் என்னுடன் நான்கு வருடங்களுக்கு மேலாகத் தங்கியிருக்கிறாள்.."

"அதனால்தான் கேட்கிறேன்.. வீட்டை மறந்து விட்டு.. உன் ரத்த சொந்தங்களை துறந்துவிட்டு அவளே எல்லாமும் என்று நீ ஆகிப்போனதற்கு என்ன காரணம்..?"

பூர்ணிமா திடுக்கிட்டாள்.. அண்ணன் என்ன வித்யா வின் மேல் குற்றம் சாட்டுகிறார்..?

"அண்ணா.. இது அடுக்காது.. என்னவோ நான் வித்யாவின் மேல் உள்ள பாசத்தால்தான் வீட்டை வெறுக்கிறேன்

என்பதுபோல் அல்லவா பேசுகிறீர்கள்..?"

"அப்படியும் இருக்கலாமில்லையா..?"

"நல்லதற்கு இது காலமில்லை அண்ணா... வித்யாவானால் உங்கள் மேல் அப்படியொரு உயர்ந்த அபிப்ராயம் வைத்திருக்கிறாள்.. நீங்கள் அவளால்தான் எனக்கு வீட்டார்மேல் பாசம் போய்விட்டது என்கிறீர்கள்.. அவள் கேட்டால் துடித்துப் போய்விடுவாள்.."

நரேந்திரனின் புருவங்கள் யோசனையாய் உயர்ந்தன..

"என்மேல் உயர்ந்த அபிப்ராயமா..? உன் தோழிக்கா..? அவளுக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்..?"

"எல்லாம் தெரியும்.."

நரேந்திரனின் முகம் சினத்தால் மாறியது... கோபத்துடன்..

"நீ சொன்னாயா..?" என்று கேட்டான்..

"ஆமாம்.."

"ராஜேந்திர பூபதியின் மகள்.. நரேந்தி பூபதியின் தங்கை... மணிமுத்தாறு ராஜ வம்சத்தின் இளவரசி நாவடக்கம் என்பதை மறந்துவிட்டாளா..?"

"போதும் அண்ணா.. என்னவோ மன்னர் காலத்தில் குதிரைமேல் உட்கார்ந்து கொண்டு வசனம் பேசுவது போல் பேசுகிறீர்கள்.. உங்கள் ராஜவம்சமும் வேண்டாம்.. இளவரசி பட்டமும் வேண்டாம்.. நான் வெறும் பூர்ணிமா.. என் தோழி வித்யா... தோழிகளுக்குள் ரகசியங்கள் இருக்காது.."

"அதற்காக என் பெர்மிசன் இல்லாமல் என்னைப் பற்றி எப்படிப் பேசலாம்..?"

"உங்களைப் பற்றிப் பேசவில்லை.. என் பெரிய அண்ணனைப் பற்றிக் கூறினேன்.. என் வேதனையை பகிர்ந்து கொண்டேன்.."

"எப்போது சொன்னாய்..?"

"அவள் என்னுடன் தங்க வந்தபோதே சொல்லி விட்டேன்.."

நரேந்திரன் சிந்தனை வசப்பட்டான்.. அவன் வந்த நோக்கம் வேறு.. பிரகாசின் இல்லத்தில் அவனுக்கு வேறு பெண் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.. சௌதாமினி மகளின் வாழ்க்கையை எண்ணி வழக்கம் போல் பெரிய மகனிடம் முறையிட்டாள்.. பூர்ணிமாவிற்கு புத்தி சொல்லி அழைத்துப் போகவே அவன் வந்தான்.. இங்கே யாரோ ஒரு கல்லூரித் தோழி கூட இருப்பதாக மட்டுமே அவள் கூறியிருந்தாள்.. அந்தத் தோழி அந்தரங்கத் தோழியாக இருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை..

கண்ணம்மா மாலைச் சிற்றுண்டியுடன் மாடிக்கே வந்துவிட்டாள்.. ஒரு மோடாவை இழுத்துப் போட்டு அதில் சிற்றுண்டித் தட்டுக்களை வைத்தவள்..

"சாப்பிடுங்க ஐயா.. நான் போய் சூடா காபி போட்டுக் கொண்டு வரேன்.. வேறு ஏதாச்சும் வேணுங்களா.." என்று கேட்டாள்..

"சித்தி.. இந்த வித்யான்னு ஒரு பொண்ணு இங்க இருக்குதே அது சாப்பிட்டுவிட்டதா..?" என்று கேட்டான் நரேந்திரன்..

"எப்பவும் ஏதாவது சாப்பிட்டு விட்டுத்தான் போகும்.. ஆனால் இன்றைக்கு என்னவோ சாப்பிடாமலே ஓடி விட்டது.. புதுசா நீங்கள் வந்திருக்கிறதால சங்கடப் பட்டுச்சோ என்னவோ.. ராத்திரி பூராவும் கண்முழிச்சு வேலை பார்க்கணும்.. அங்கே ஏதாவது சாப்பிடக் கிடைக்குமோ என்னவோ.." என்று கவலைப்பட்டாள் கண்ணம்மா..

"ஏன் வழியில் ஹோட்டல் எதிலாவது சாப்பிடலாமே.."

"அது அப்படியெல்லாம் தனியாப் போய் சாப்பிடுற புள்ளை இல்லைங்க ஐயா.. காபி குடிச்சாலும் வீட்டுக்கு வந்துதான் குடிக்கும்.."

"ஐஸீ.. தனியாக வேலை பார்க்கிற பெண் இந்தக் காலத்தில் இதற்கெல்லாம் பயப்படுமா..?"

"அது பயப்படும்ங்கய்யா.. அதோட போதாத காலம்.. தான் சம்பாதித்து படிக்கிற நிலைமை வந்திருக்கிறது.. பாவம்.. ஆனால் சோர்ந்து உட்காராதுங்கய்யா.. அறிவான பொண்ணு.. நம்ம பாப்பா மேல் உயிரையே வைத்திருக்கிறது.."

கண்ணம்மாவின் கடைசி வார்த்தைகளில் பூர்ணிமா வின் விழிகளில் மின்னிய பெருமையைக் கண்டதும் நரேந்திரன் மனதிற்குள் ஓர் கணக்குப் போட்டான்..

"காலையில் எத்தனை மணிக்கு அந்தப் பெண் வரும்னு சொன்னீங்க, சித்தி..?" என்று அவன் கேட்க..

"டான்னு மணி ஆறடிக்கும்போது வீட்டுக்குள் நுழைந்து விடும்.." என்று வெகுளியாய் பதில் சொன்னாள் கண்ணம்மா..

அப்போதைக்கு மேலே பேச்சை வளர்க்காமல் பூர்ணிமாவுடன் தன்மையாக பேசிக் கொண்டிருந்து விட்டு உறங்கச் சென்ற நரேந்திரன்.. மறுநாள் காலை ஐந்து மணிக்கெல்லாம் வித்யா வேலை பார்க்கும் அலுவலகத்தின் வெளியே காருடன் நின்று கொண்டிருந்தான்..

7

நதியோரம் நடந்தபோது

நிலாச் சோற்றை நெஞ்சம் தேடும்

சுமையில்லா மனமிருந்தால்

சுவையான உணவு கூடும்

...நதியோரம் நான் நடந்த போது...

சோர்ந்த விழிகளை நீரில் கழுவி முகம் துடைத்துக் கொண்ட வித்யா கைப்பையை தோளில் மாட்டிக் கொண்டு அலுவலகம் விட்டு வெளியே வந்தாள்.. ஸ்கூட்டியைத் தேடி அதன் சாவியை பொருத்திக் கொண்டிருந்தபோது..

"குட்மார்னிங்.." என்று குரல் கேட்டு நிமிர்ந்தாள்.. எதிரே நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்.. 'கனவோ' என்று அவசரமாய் கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்..

"என்ன இந்நேரத்தில் நம்மைத் தேடி வந்திருக் கிறானேன்னு பார்க்கிறீர்களா..? உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்.." என்றான் அவன்..

"என்னுடனா..?"

"ஆமாம்.."

"வீட்டிற்குத்தானே வருகிறேன்.. வீட்டில் பேசிக் கொள்ளலாமே.."

"இது பூர்ணிமா சம்பந்தப்பட்டது.. அவளுக்குத் தெரியாமல் பேச விரும்புகிறேன்.." என்றான் அவன் நிதானமாக தன் பேண்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் நுழைத்தவாறு நின்றபடி..

வித்யா தயங்கினாள்.. பூர்ணிமாவின் பெயர் அவளைக் கட்டிப்போட்டது..

"அது வந்து.. ம்ம்.. உள்ளே வாருங்கள்.. ரிசப்ஷனில் உட்கார்ந்து பேசலாம்.."

"அதற்குப் பதில் என்னோடு காரில் வாங்களேன்.. கடற்கரைச் சாலையில் பார்க் பண்ணிவிட்டுப் பேசலாமே.."

"இல்லை சார்.. நான் ஒரு கொள்கை வைத்திருக்கிறேன்.. என்னைத் தவறாய் நினைக்க வேண்டாம்.. நான் மற்றவர்கள்.."

"வண்டியில் ஏறுவதில்லை.. அப்படித்தானே.. பூர்ணிமா சொன்னாள்.. சரி நான் வேண்டுமானால் உங்கள் வண்டியில் ஏறி வரவா..?"

வித்யா திகைத்துப் போனாள்.. 'இது என்னடா வம்பு' என்று நினைத்துக் கொண்டாள்..

'எண்ணம் கவர்ந்தவன் எதிரில் நிற்கிறான்... அவனுக்கு இடம் கொடுத்த மனதில் மற்ற யாருக்கும் இடம் கொடுக்கப் போவதில்லை.. அவன் காரில் ஏற ஏன் மறுக்க வேண்டும்..?'

அவளது ஒரு மனம் இப்படிக் கேள்வி கேட்டது..

'அவசரப்படாதே வித்யா.. அவனோ ராஜ வம்சத்து கோடிஸ்வரன்.. நீயோ அன்றாட செலவிற்கு வேலை பார்க்க வேண்டிய தொழிலாளி.. மலை மேல் மடு காதல் கொள்வதா..?'

இன்னொரு மனம் இடித்தது.. வித்யா நிலை குலைந்தாள்.. தனக்குள் அவள் யோசித்து ஓர் முடிவிற்கு வந்தவளாய் தெளிவுடன் அவனை ஏறிட்டாள்..

"சார்.. நீங்கள் உங்கள் காரில் போங்க.. நான் பின் தொடர்ந்து என் ஸ்கூட்டியில் வருகிறேன்.." என்றபடி அவன் பதிலுக்கு காத்திராமல் தன் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள்..

அவன் விழிகளில் வியப்பு தெரிந்தது.. பூர்ணிமா அவளைப் பற்றிக் காரணமில்லாமல் புகழவில்லை போலும் என்று எண்ணமிட்டபடி தன் காரில் ஏறி ஓட்டலானான்.. வித்யா பின் தொடர்ந்தாள்.. கடற்கரைச் சாலையில் ஜனநட மாட்டம் தெரிந்த பகுதியில் அவன் காரை நிறுத்திவிட்டு இறங்க அவள் அவன் காரின் அருகே தன் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு இறங்கினாள்.. அங்கேயிருந்த சிமிண்ட் பெஞ்சைக் சுட்டிக்காட்டி..

"உங்களுக்கு ஆட்சேபணையில்லைன்னா அந்த பெஞ்சில் உட்கார்ந்து பேசாலாமா..?" என்று வினவினான்.. அவள் ஒப்புதலாய் தலை அசைத்துவிட்டு அந்த பெஞ்சை நோக்கிச் சென்றாள்.. அவளது நிமிர்ந்த நடையையும் நேர் கொண்ட பார்வையையும் ரசித்தபடி அவளருகே அமர்ந்தான் நரேந்திரன்.. குளிர்காற்று வீச கனமான காட்டன் துப்பாட்டாவினால் தோளோடு போர்த்திக் கொண்டாள் அவள்.. தூரத்தில் கடல் அலைகள் வந்து கரையைத் தொட்டுச் செல்வது தெரிந்தது.. மீனவர்கள் கரைக்கு திரும்பும் கட்டு மரங்கள் தென்பட்டன.. சூரியனின் கதிர்கள் கீழ்வானத்தில் செந்நிறமாய் காட்சி தந்தன.. நீலப் போர்வையில் செய்த வெள்ளை டிசைன்கள் போல் கடலின் மேல் அலையின் கோடுகள் தெரிந்தன.. அதிகாலை கடலின் அழகை ரசித்தபடி அமர்ந்திருந்தாள் வித்யா.. அவள் முகத்தைப் பார்த்தவன்..

"இந்நேரத்தில் கடல் பக்கம் வந்ததில்லையோ..?" என்று கேட்டான்.. திரும்பி அவன் முகத்தைப் பார்த்தவள்..

"இல்லை சார்.. வந்ததில்லை.. வேலை.. படிப்புன்னு நேரம் சரியாக இருக்கும்.. அத்தோடு.."

"அத்தோடு..?"

"பெண் என்பதலாயே பல ரசனைகள் மறக்கப்பட வேண்டியதாகிப் போகின்றன.. அவற்றில் இதுவும் ஒன்று.."

"நீங்கள் ரசிப்பதை யார் தடுத்தார்கள்..?"

"மனம்தான்.."

"மனமா..?"

"ஆமாம்.. மனம்தான்.. பெண்மனம்.."

"ம்ம்.. இதைப்பற்றி இன்னொரு நாள் பேசலாம்.. இப்போது நான் பூர்ணிமாவைப் பற்றி பேச வேண்டும்.."

"பேசுங்கள் சார்.."

"பிரகாஷ் பற்றி பூர்ணிமா சொல்லியிருப்பாள்ன்னு நினைக்கிறேன்.."

"ம்ம்.. சொல்லியிருக்கிறாள்.."

"பிரகாஷிற்கு அவன் வீட்டில் வேறு பெண் பார்க்கிறார்கள்.. அம்மாவானால் நிச்சயித்த கல்யாணம் நின்று போக வேண்டுமா என்று அழுகிறார்கள்.."

"இது உங்கள் குடும்பத்திற்குப் புதிதில்லையே.." 'நறுக்' கென்று பதில் சொன்னாள் வித்யா..

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.."

"இதற்கு முன் இரண்டுமுறை நிச்சயித்த கல்யாணம் உங்கள் வீட்டில் நின்று போயிருக்கிறதே.. அதற்காக உங்கள் அம்மா ஒருமுறை கூட கண்ணீர் சிந்தவில்லை.. இப்போது சிந்துகிறார்களா..?"

"நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்..?"

"நின்றுவிட்ட உங்களிரு நிச்சயதார்த்தங்களைச் சொல்கிறேன்.. முதல்முறை கார்த்திகாவுடன் பேசிய கல்யாணம் முறிந்து போனது.. மற்றதை தம்பிக்கு தாரை வார்த்துக் கொடுத்தீர்கள்.."

நரேந்திரன் கொதித்துப் போனான்.. யார் இந்தப் பெண்.. இவளுக்கும் அவன் குடும்பத்திற்கும் என்ன சம்பந்தம்..? எவ்வளவு தைரியம் இருந்தால் இவள் அவனிடமே இப்படிப் பேசுவாள்..? முகம் சினத்தால் சிவக்க..

"பூர்ணிமாவிற்கு குடும்ப விசயத்தை வெளியாரிடம் பேசக்கூடாது என்பது இன்னும் தெரியவில்லை.." என்றான் பல்லைக் கடித்தபடி..

"அவளுடைய அண்ணனுக்கு மட்டும் தெரிந்திருக்கிறதா..?"

"வாட் டு யூ மீன்..?"

"ஐ மீன்.. நீங்கள் தானே என்னிடம் வந்து உங்கள் குடும்ப விசயம் பேச இந்த நேரத்தில் இந்த இடத்திற்கு

அழைத்தீர்கள்..?"

அவன் வாயடைத்துப் போனான்.. சரியான பதில் அல்லவா இது..? அவனும்தானே தன் தங்கையைப் பற்றி அவளிடம் பேசினான்.. பாராட்டும் தொனியில்..

"நீங்கள் புத்திசாலி என்று வாய்க்கு வாய் பூர்ணிமா உங்கள் புகழ் பாடுவது எதனால் என்பது இப்போது தெரிகிறது" என்றான்..

"தேங்க்ஸ் பார் யுவர் காம்ளிமென்ட்.. இப்போது நான் என்ன உதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்..?"

"பை தி வே மிஸ் வித்யா.. உங்களுக்கு எங்கள் குடும்ப விசயங்கள் அனைத்தும் தெரிந்திருக்கிறது.. பிரகாஷ், பூர்ணிமா மேல் உயிரையே வைத்து இருக்கிறான்.."

"பூர்ணிமாவும் அப்படித்தான்.." என்றாள் வித்யா.. நரேந்திரன் பரபரப்புடன் அவளை நோக்கி..

"வெல்.. அது புரிகிறதல்லவா.." என்றான் குதுகலத்துடன்..

"நன்றாகவே புரியும்.. பூர்ணிமா என் உயிர்தோழி.."

"அப்படியானால் அவள் வாழ்க்கை சீராக நீங்கள்தான் எனக்கு உதவ வேண்டும்.."

"என்ன செய்ய வேண்டும் சார்.." என்று மனப்பூர்வமாக கேட்டாள் வித்யா..

"பூர்ணிமாவிடம் நீங்கள்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.."

"என்னவென்று..?"

"எங்கள் குடும்ப கௌரவமே பிரகாஷ்-பூர்ணிமா திருமணத்தில் அடங்கியிருக்கிறது என்பதை அவளுக்குப் புரியவைக்க வேண்டும்.."

"எப்படி..? இல்லை.. எப்படியென்று எனக்குப் புரிய வில்லை சார்... அவள் திருமணத்தை தள்ளிப் போடுவதற்கும் உங்கள் குடும்ப கௌரவத்துக்கும் என்ன சம்பந்தம்..? இது

எனக்கே புரியவில்லை.. எனக்குப் புரிந்தால்தானே அவளுக்குப் புரிய வைக்க முடியும்..?"

நரேந்திரன் நிதானமாக அவளை நேருக்கு நேராய் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.. வித்யா விழிகளை விலக்கிக் கொள்ளவேயில்லை.. நரேந்திரன் முகத்தில் மெலிதான எரிச்சல் தென்பட்டது..

"வித்யா முதலில் எனக்கு ஓர் உண்மை தெரிய வேண்டும்.."

"என்ன உண்மை சார்..?"

"நீங்கள் பூர்ணிமாவின் செயல்தான் சரியென்ற முடிவில் இருக்கிறீர்களா..?" அவன் பார்வை அவளை துளைத்தது.. அவள் அசரவில்லை.. உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன்..

"தவறென்று நினைக்கவில்லை சார்..." என்றாள் தெளிவான குரலில்..

"ஸ்ஸ்.. வித்யா.. அவள் சிறு குழந்தை.. எங்கள் குடும்பப் பெண்ணை நிச்சயம் செய்துவிட்டு வேறொரு பெண்ணை மணக்க விட்டு விடுவது எங்கள் குடும்ப கௌரவத்தை பாதிக்கும் வித்யா.."

"அப்படியென்றால் அவள் கேட்பதை நீங்கள் செய்ய வேண்டியது தானே..?" என்றாள் வித்யா கடலைப் பார்த்த படி மனதை அடக்கியபடி..

"அவள் கேட்பது என்ன நகையா.. புடவையா.. நான் உடனே செய்து முடிக்க.." என்று சலித்துக் கொண்டான் நரேந்திரன்..

"ம்ம்.. வேறு என்ன கேட்கிறாள்..?"

"ஏன் உங்களுக்குத் தெரியாதா..? இத்தனை தெரிந்த உங்களுக்கு அவள் என்ன கேட்கிறாள் என்று தெரியாதா..? அதை உங்கள் ஆருயிர் தோழி உங்களிம் சொல்லவில்லையா..?"

"உங்கள் வாயால் கேட்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.."

நரேந்திரன் நிதானமாய் அவளைப் பார்த்தான்.. பின் தன் சட்டைப் பையிலிருந்த சிகரெட் பாக்கெட்டை வெளியில் எடுத்தான்..

"இந்தக் குளிருக்கும் டென்சனுக்கும் எனக்கு சிகரெட் பிடிக்க வேண்டும் போல் தோன்றுகிறது.. நான் சிகரெட் பிடிப்பதில் உங்களுக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையே.." என்றவாறு அவள் மறுக்க மாட்டாள் என்ற நிச்சயத்துடன் ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக் கொள்ளப் போனான்..

"ஆமாம்.. ஆட்சேபணை இருக்கிறது.." என்று கோபத்துடன் பதில் சொன்னாள் வித்யா..

"என்ன.." அதிர்ச்சியில் அவன் வாயிலிருந்த சிகரெட் கீழே விழுந்தது.. எவ்வளவு கடுமையாகப் பேசுகிறாள்..? அதுவும் அவனிடம்..? சினத்துடன் அவன் முறைப்பதை லட்சியம் செய்யாமல்..

"எனக்கு சிகரெட் பிடித்தால் பிடிக்காது.. அவர்களுடன் பேசுவதை கூடுமானவரை தவிர்த்து விடுவேன்.. என்முன் சிகரெட் பிடித்துக்கொண்டே என்னிடம் பேசுவதை எனக்குச் செய்யும் அவமானமாகக் கருதுகிறேன்.. ஸோ.. என்னோடு பேச வேண்டுமானால் சிகரெட்டை அவாய்ட் பண்ணுங்கள்.. இல்லையென்றால் நான் எழுந்து போய் விடுவேன்.." என்றாள் கறார் குரலில்..

"எனக்குக் குளிர்கிறதே.."

"எனக்கும்தான் குளிர்கிறது.."

அவன் கோபத்துடன் சிகரெட் பாக்கெட்டை தூர விட்டெறிந்தான்.. அவள் அவன் கோபத்தை அலட்சியம் செய்து உதிக்கும் சூரியனின் உதயக் கதிர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

"லுக் மிஸ் வித்யா.. என்னோடு யாரும் இப்படிப் பேசியதில்லை.."

"நானும் வேறு ஆண்களிடம் இவ்வாறு உட்கார்ந்து பேசியதில்லை.. பிடிக்கவில்லையென்றால் பட்டென்று எழுந்து போய் விடுவேன்.. நீங்கள் பூர்ணிமாவின் அண்ணன் என்பதால் நீங்கள் கூப்பிட்ட இடத்திற்கு வந்து உங்களோடு அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்.."

அவள் மனம் 'பொய்' என்றது.. 'பூர்ணிமாவின் மற்ற மூன்று அண்ணன்களில் எவரேனும் வந்து அழைத்திருந்தால் அந்த அழைப்பை நீ ஏற்றிருப்பாயா..?' என்று கேலி செய்தது.. அவள் 'பொறு மனமே' என்று அதை அடக்கினாள்.. நரேந்திரன் முகம் பார்த்து..

"நேரமாகிறது.. நான் நேற்று மாலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை.. சொல்ல வந்ததை சீக்கிரம் சொன்னீர் களானால் வீட்டிற்கு சீக்கிரம் போய்விடுவேன்.." என்றாள்..

"இன்று ஞாயிறுதானே..? காலேஜ் இல்லையே.." என்றவன் எழுந்து தள்ளுவண்டியில் காபி விற்றுக் கொண்டிருந்தவனிடம் இரண்டு பிளாஸ்டிக் கப்புகளில் சூடான காபி வாங்கிக் கொண்டு வந்து ஒன்றை அவளிடம் நீட்டினான்.. அவனுடைய கோபம் இப்போது இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயிருந்தது.. மனதில் இருப்பதை நேருக்கு நேராய் பேசிவிடும் அவளது கண்டிப்பான குணம் அவனை இப்போது மிகவும் கவர்ந்து விட்டிருந்தது..

"வாங்கிக்கங்க.. சிகரெட்தான் பிடிக்கக் கூடாது.. காபி குடிக்கலாம் இல்லையா..?" என்றான் புன்னகையுடன்.. அது அவளையும் தொற்றிக் கொள்ள வாங்கிக் கொண்டாள்.. ஒரு வாய் குடித்தவுடன் கொஞ்சம் தெம்பு வந்தது.. ரசித்து காபி குடித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்தபடி முகம் மென்மையுற..

"எப்படி பசி தாங்குகிறீர்கள்.." என்று கேட்டான்..

"பழகிவிட்டது.." என்று அலட்சியமாய் பதில் சொன்னாள் அவள்..

"ஆபிஸில் யாரையாவது அனுப்பி ஏதேனும் வாங்கிச் சாப்பிடலாமே.."

"நடுராத்திரியில் என்ன கிடைக்கும்..?"

"அப்புறம் என்ன தான் செய்வீர்கள்..?"

"எப்போதும் வீட்டிலிருந்து ஏதாவது டிபன் டப்பாவில் வைத்து எடுத்துப் போய்விடுவேன்.. நேற்று கொண்டு போக மறந்து விட்டேன்.."

"என்னால்தானே.." என்று அவன் குற்ற உணர்ச்சி யுடன் கேட்டான்.. அந்தக் கேள்வி அவள் மனதைத் தாக்கியது.. நிமிர்ந்து கடல் காற்றில் தலைமுடி அலைபாய அந்த அதிகாலை நேரத்தில் கம்பீரமும் ஆண்மையும் ததும்பும் தோற்றத்துடன் இருந்த அவனையே பார்த்தாள்.. மனம் 'ஆமாம் உன்னால்தான்..' என்று சொல்லத் துடித்தது.

'உன்னால்தான். உள்ளம் முழுவதும் நிரம்பியிருந்த உன்னை நேரில் கண்ட ஆனந்த அதிர்ச்சியில்தான்.. நான் உணவை எடுத்துக் கொள்ள மறந்துபோனேன்..' என்ற உண்மையைச் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் நினைத்தாள் வித்யா..

8

நதியோரம் நடந்தபோது

நத்தையொன்று மெல்லப்போகும்..

வித்தையான முகம்காட்டி வினயமாக கதை கேட்கும்

சத்தமொன்று கேட்டுவிட்டால் சடுதியாக கூடில் மறையும்

...நதியோரம் நான் நடந்த போது...

'நீ யாரென்று நேரில் பார்க்காமலே அறிந்தவள் நான்.. நான் யாரென்று உனக்குத்தான் தெரியாது.. தெரியப்படுத்தவும் மாட்டேன்.. உன் போராட்டத்தின் தீரத்தில் என் மனதைப் பறி கொடுத்துவிட்டேன்.. உன் முகம் பார்த்து வாழ மனம் துடிக்கிறேன்.. ஆனால் யார் மேல் யார் காதல் கொள்வது..?

வைரத்தால் இழைத்த ஆடைகளை அணியும் குடும்பத்தைச் சேர்ந்தவன் நீ.. வெள்ளியில் ஒரு கொலுசை வாங்கக்கூட பணம் சேர்க்க வேண்டிய நிலையில் உள்ளவள் நான்.. உன்னைக் காதலிப்பது உனக்கே உனக்காக என்றா இந்த உலகம் சொல்லும்..? உன் பணத்திற்காக நான் பறக்கிறேன் என்றல்லவா பழிக்கும்..? என் காதல் தூய்மையானது.. உயர்வானது.. உன்னதமானது.. உன்னை அடைந்தால்தான் என் காதல் ஜெயிக்குமா..? உன்னை நினைத்துக் கொண்டே வாழ்ந்தாலும் என் காதல் ஜெயிக்கும்..!'

அடுத்த கணத்தில் மனத்தை அடக்கி அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள் வித்யா..

"நீங்கள் என்ன பண்ணீனீர்கள்..? என்னை சாப்பாட்டை எடுத்துக் கொள்ள மறந்து போகும்படி நீங்களா சொன்னீர்கள்..?" என்று சிரித்துக் கொண்டே வினவினாள் வித்யா..

"நான் உங்களை பூர்ணிமான்னு நினைத்து.." சொல்ல முடியாமல் தடுமாறினான் நரேந்திரன்.. அந்த நினைவில் மனம் நிறைந்த வித்யா..

"தெரியாமல்தானே செய்தீர்கள்.. விட்டு விடுங்கள்.. நாம் பேச வந்த விசயத்தைப் பேசுவோம்.." என்று கூறினாள்.

"வித்யா.. பூர்ணிமா நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று என்னை நிர்ப்பந்திக்கிறாள்.."

"அப்படியா.. எனக்கு அப்படித் தோன்றவில்லையே.. அவள் கல்யாணத்தை மறுக்கிறாள் என்று தான் தோன்றுகிறது.."

"வித்யா உங்களுக்கு எல்லாம் தெரியும்.. இரண்டும் ஒன்றுதானே.. என் திருமணத்திற்கு உன் மனைவியோடு வந்து தாரை வார்த்துக் கொடுன்னு சொல்வது நிர்ப்பந்தம் இல்லையா..?"

"உங்கள் மேல் அவளுக்கிருக்கும் அக்கறை என்று கூடச் சொல்லலாமே.."

"குட்.. எனக்குத் தேவையில்லாததை என்மேல் திணிக்கப் பார்ப்பது அக்கறையா..?"

"தேவையில்லை என்று தோன்றும் ஒன்றிற்காகவா.. ஒன்றுக்கு இரண்டு முறை கமிட் ஆனீர்கள்..?"

"எனக்குப் புரிகிற மாதிரிப் பேசுகிறீர்களா..?"

"முதலில் கார்த்திகாயினிதேவியின் மேல் காதல்.. அடுத்து மீனலோசனி தேவியுடனான கல்யாண ஒப்பந்தம்.. இரண்டும் உங்கள் சம்மதத்தோடுதானே நடந்தது..?"

"அதைப்பற்றி இனிப் பேச வேண்டாம் வித்யா.. இரண்டு பேருமே மணமானவர்கள்.. குழந்தைகள் இருக்கிறார்கள்.. அதிலும் கார்த்திகாவைத்தான் நான் காதலித்தேன்.. மீனலோசனி என் மாமாவின் பெண்.. உறவுக்காரப் பெண் என்ற பாசம் மட்டும்தான்.. திருமணம் என்று ஒன்று செய்தாக வேண்டுமே என்ற கட்டாயத்தால் நான் சரி சொன்னேன்.. எப்போது அவள் என் தம்பியின் மனைவியாகி விட்டாளோ அப்போதிருந்து அவள் என் தங்கை.."

வித்யாவிற்கு அவனை நினைத்து அவன் கண்ணியத்தை நினைத்துப் பெருமையாக இருந்தது.. எவ்வளவு உயர்ந்த மனம் இவனுக்கு..?

"சரி.. கல்யாணம் என்பது தேவையான ஒன்று தானே.. அதை ஏன் வெறுத்து ஒதுக்க வேண்டும்..? நீங்கள் தனிமரமாக நின்று கொண்டிருக்கும் போது பூர்ணிமாதான் மனம் ஒப்பி எப்படி மணம் செய்து கொள்வாள்..?"

"அதற்காக ஒரு பெண்ணின் வாழ்வை நான் வீணடிப்பதா..?"

"புரியவில்லை.. புதிர்போல் பேசாமல் தெளிவாய் பேசுங்கள்.. யார் வாழ்வு பாழாகும் என்கிறீர்கள்..?"

"நான் மணந்து கொண்டால்.. என்னை மணந்து கொண்ட பெண்ணின் வாழ்வு வீணாகும்.."

நிதானமாய் தெளிவாய் இந்த வார்த்தைகளை உச்சரித்தான் நரேந்திரன்.. வித்யாவிற்கு தூக்கிவாரிப் போட்டது.. இவனுக்கென்ன பைத்தியமா..? இவன் கண்ணசைத்தால் வரிசையில் நின்று இவனை மணக்க பெண்கள் காத்திருப்பார்கள்.. அதற்கான வசதியும்.. அழகும்.. படிப்பும்.. பாரம்பர்யமும்.. தகுதியும் உடையவன்.. இவனை மணப்பதால் ஒரு பெண்ணின் வாழ்வு மேம்படத்தானே செய்யும்.. வீணாக எப்படிப் போகும்..

நினைத்ததை வாய்விட்டுக் கூறினாள் அவள்..

நரேந்திரன் கனிவாகச் சிரித்தான்.. அந்தச் சிரிப்பில் நன்றி இருந்தது.. நட்போடு அவளை நோக்கி..

"நீங்களும் பூர்ணிமா போலவே பேசுகிறீர்கள்.. என்மேல் உள்ள உயர்ந்த அபிப்ராயத்திற்கு நன்றி.. ஆனால் வித்யா.. நான் பூர்ணிமாவை விடப் பதினைந்து வயதுப் பெரியவன்.. இப்போது பூர்ணிமாவின் வயது இருபத்தி ஒன்று.. உங்கள் வயது கூட அதேதான்.. இல்லையா..?"

"ஆமாம்.. ஆனால் முப்பத்தாறு வயது ஆண்களுக்கு அதிக வயதென்று எனக்குத் தோன்றவில்லையே.. இப்போதெல்லாம் பெண்களே முப்பதியிரண்டு வயதில் திருமணம் செய்து கொள்கிறார்கள் தெரியுமா..?"

"அது மட்டும் காரணமில்லை வித்யா.. எனக்கு பெண் பார்த்தால் எந்த மாதிரிப் பெண்கள் பார்ப்பார்கள்.. நீங்களே சொல்லுங்கள்.."

"ஏன் அழகான.. படித்த.. நல்ல குணமுள்ள.. நல்ல குடும்பத்துப் பெண்ணாகப் பார்ப்பார்கள்.. நீங்கள் ராஜ பரம்பரையென்பதால் அதையும் சேர்த்துப் பார்ப்பார்கள்.. அதற்கு என்ன..?"

"நான் நல்ல குணமான.. குடும்பப் பெண்ணை மணந்து கொள்ளத் தகுதியானவன் இல்லை வித்யா.. ஏனென்றால்.. ஏனென்றால்.. நான் கல்யாணமாகாதவன் தான்.. ஆனால் பிரம்மச்சாரியில்லை.."

நரேந்திரன் அவள் விழிகளைப் பார்ப்பதைத் தவிர்த்தான்.. வித்யா மனதில் அடிவாங்கினாள்.. அவன் சொல்வதன் அர்த்தம் புரிந்தது.. ஆனால் அது எப்படி என்று.. அதைப்பற்றி நினைத்துக்கூட பார்த்திராத வித்யாவுக்கு பிடிபடவில்லை.. இந்த நிலைமையில் இந்த இடத்தில் என்ன பேசுவது என்று புரியாமல் தர்மசங்கடமடைந்தாள் அவள்.. திரைப்படங்களில் கூட விரசமான காட்சிகளைப் பார்க்க விரும்பமாட்டாள்.. இப்போது அவள் மனதுக்கு இனியவன் தன் மனதில் இருப்பதை அவளிடம் கொட்டுகிறான்.. கசடு படிந்த தன் மறு பக்கத்தை அவன் முன்பின் அறியாத பெண்ணிடம் காட்டுகிறான்.. எதற்காக.. ஒரு பெண்ணின் வாழ்வை ஏமாற்றி விடக் கூடாது என்பதற்காக.. கரைபடிந்த தன் நடத்தையைப் பற்றி.. கறைபடியாத தூய உள்ளத்தோடு எடுத்துரைத்தான் அவன்.. அந்த நிமிடம் அவள் அவனது தோழியானாள்.. மனம் விட்டுப் பேசினான் அவன்.. அவன் மனம் புண்படாமல் கேட்டுக் கொண்டாள் அவள்..

"யோசித்துப் பாருங்கள் வித்யா.. காதலித்த கார்த்திகாயினி என் நெருக்கடியான நேரத்தில் என்னைக் கைவிட்டாள்.. காதலுக்காக என் குடும்பத்தைக் கைவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை.. காதலுக்காக என்னுடன் வந்து என் கஷ்டங்களில் பங்கேற்க அவள் விரும்பவில்லை.. பொடிப்பொடியாக நான் நொறுங்கிப் போனேன்.. உடைந்த உள்ளத்தை நினைக்கக் கூட நேரமில்லாமல் என் குடும்பத் தொழில் என்னை அழுத்தியது.. எல்லாம் சீரானவுடன் என் மனதில் கார்த்திகாவின் நினைவு தலை தூக்கியது.. அதை மறக்கவே கல்யாணத்திற்கு சம்மதித்தேன்.. ஆனால் நிலைமை மாறிவிட்டது.."

வித்யாவுக்கு கதறி அழ வேண்டும் போல் இருந்தது.. ஒருவேளை அவன் காலாகாலத்தில் கல்யாண பந்தத்தில் சிக்குண்டிருந்தால் இந்த அவலம் நேர்ந்திருக்காதே.. நரேந்திரன் தொடர்ந்தான்..

"அப்புறம் வீட்டில் தம்பிகள்.. தங்கை திருமணங்கள்.. குடும்ப விழாக்கள்.. அவரவருக்கு குடும்பம் ஏற்பட்டு விட நான் தனிமைப்பட்டுப் போனேன்.."

வித்யா கண் கலங்கினாள்.. அவன் முடிகோதத் துடித்த கைகளைக் கட்டிப் போட்டாள்.. அவன் பேசிக் கொண்டிருந்தான்..

"பூர்ணிமாவும் வீட்டை விட்டு சென்னைக்கு வந்து விட்டாள்.. அப்போதுதான் மதுப் பழக்கம் எனக்கு ஏற்பட்டது.. அதற்காக வெளியூர் சென்று ஹோட்டல்களில் தங்குவது என் வழக்கம்.. போதைப் பழக்கத்தை தொடர்ந்து.." நரேந்திரன் பேச முடியாமல் நிறுத்தினான்.. வித்யா மௌனமாக இருந்தாள்..

"இப்போது சொல்லுங்கள் வித்யா.. என் பாதை மாறி விட்டது.. இனி என்னால் நேர்வழியில் போக முடியாது.. எனவே திருமணத்தை தவிர்க்க முடிவு செய்துவிட்டேன்.. இதை எப்படி என் தங்கையின் முகம் பார்த்துச் சொல்வேன்.. ஒரு அண்ணன் தங்கையிடம் பேசும் விசயமா இது..? என்நிலையைப் புரிந்து கொள்ளுங்கள்.."

"இதில் நான் என்ன செய்ய முடியும் என்றுதான் புரியவ்லலை.."

"முடியும்.. நீங்கள் மனது வைத்தால் முடியும்.."

"எப்படி..?"

"நீங்கள் என் வருங்கால மனைவியாக நடிக்க வேண்டும்.."

"என்னது..?"

வித்யா அதிர்ந்து நிமிர்ந்தாள்.. பசி வயிற்றைக் கிள்ளியது.. சூரியன் மேலே எழுந்து வெயில் சுள்ளென்று உறைக்க ஆரம்பித்திருந்தது.. சாலையில் போக்குவரத்து நெருக்கடி ஆரம்பித்திருந்தது.. இவை எதுவும் அவள் மனதில் பதிவாகவில்லை.. அவன் கூறிய வார்த்தைகள் மட்டுமே அவள் காதுகளில் எதிரொலித்தது.. நம்ப முடியாமல் கண்களை விரித்தவாறு இமைகளைக் கொட்டியவள்..

"என்ன சொன்னீர்கள்.. திரும்பவும் சொல்லுங்கள்.." என்று கேட்டாள்.. அவள் முகத்தையே பார்த்தவாறு கூறினான் அவன்..

"என் வருங்கால மனைவியாக நடிக்க வேண்டும் என்று சொன்னேன்.."

"வாட்.. என்னைப் பார்த்து எப்படி நீங்கள் இந்த மாதிரி சொல்லலாம்.."

"என் வருங்கால மனைவியாக வர வேண்டுமென்று சொல்லவில்லையே.. நடிக்க வேண்டும் என்றுதானே சொன்னேன்.."

'நீ முதலாவதைச் சொல்லியிருந்தால் மறுக்காமல் உன்னைப் பின் தொடர்ந்து வருவேனே.. என்னை நடிக்க அல்லவா சொல்கிறாய்..' என்று மனதிற்குள் பரிதவித்தவள் வெளியே கேட்டாள்..

"என்னைப் பார்த்தால் நடிகை போலவா தோன்றுகிறது..?"

"இல்லை.. என் தங்கைக்கு மட்டுமல்ல எனக்கும் நம்பிக்கையான தோழியாகத் தோன்றுகிறது.."

"தோழியிடம் மனம் விட்டுப் பேசலாம்.. நீங்கள் பேசினீர்கள்.. நான் கேட்டுக் கொண்டேன்.. அதுதான் எனக்குக் கௌரவம்.."

"இப்போது மட்டுமல்ல எப்போதுமே உங்களுக்கு கௌரவக் குறைவு ஏற்பட நான் விட மாட்டேன்.. தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.. பூர்ணிமாவிடம் எனக்குத் தொழிலில் வெளியில் சொல்ல முடியாத கஷ்டம்.. அதை சரி செய்து கொள்ள குறைந்தது ஒரு வருடம் ஆகும்.. அது சரியானதும் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லப் போகிறேன்.."

"அப்போதே நானும் கல்யாணம் செய்து கொள்கிறேனென்று அவள் சொல்வாளே.."

"ஆமாம்.. அப்படித்தான் சொல்வாள்.. அப்போது நான் சொல்வேன்.. உனக்குப் பிடித்த பெண்ணையே, எனக்கும்

பிடித்திருக்கிறது.. வித்யாவை நான் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன் 'ஒரு வருடம் கழித்து திருமணம் செய்து கொள்ளலாமா..' என்று அவளிடம் கேட்டேன் அவள் சம்மதித்துவிட்டாள் என்று சொல்வேன்.."

"ஐயையோ.. என்ன சார் இது..?"

"வேறு வழியில்லை வித்யா.. அவள் உங்களிடம் வந்து கேட்பாள்.. நீங்கள் ஆமாம் என்று சொல்லி விடுங்கள்.. அப்புறம் அவளை எப்படியாவது திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிடலாம்.."

வித்யா யோசனையில் ஆழ்ந்தாள்..

'பூர்ணிமா பிரகாஷைக் காதலிக்கிறாள்.. பிரகாஷும் அப்படியே.. வித்யாவை தாய்க்கும் மேலாக பாசத்துடன் அரவணைத்துக் கொண்டவள் பூர்ணிமா.. இந்த நான்கு வருடங்களாக வித்யா தன் தாய் மடியில் தலை வைத்துப் படுத்திருப்பதைப் போல் பாதுகாப்பாய் வசித்து வருவதற்கு பூர்ணிமாதான் காரணம்.. வீடில்லாத விடுதிவாசிக்கு வீட்டில் இடம் கொடுத்தாள்.. தாயில்லாத பெண்ணுக்கு தாயானாள்.. அவள் வாழ்வின் துயர் துடைக்க இந்தப் பொய்யைச் சொன்னால் என்ன..?'

வித்யா நரேந்திரனை நிமிர்ந்து பார்த்தாள்..

"சரி சார்.. நீங்கள் பூர்ணிமாவிடம் பேசுங்கள்.."

"உண்மையாகவா ஒத்துக் கொண்டீர்கள்.. நான் ஒத்துக்கொள்ள மாட்டீர்கள் என்று பயந்து போனேன்.. நன்றி வித்யா நன்றி.."

நரேந்திரன் உணர்ச்சி மிகுதியால் அவள் இரு கரங்களையும் தன் கரங்களால் இறுகப் பற்றிக் கொண்டான்.. வித்யா நம்ப முடியாமல் சிலிர்த்துப் போனாள்.. முதன் முறையாக ஒரு ஆணின்.. அதுவும் அவள் உயிராய் காதலிக்கும் ஆண்மகனின் ஸ்பரிசம் உணர்ந்தவள் உடல் நடுங்கியது.. அதையுணர்ந்தவனாய் அவள் கரங்களை அவசரமாய் விடுவித்தவன்..

"ஐ ஆம் ஸாரி.. உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்.." என்றான் குற்றம் செய்த பாவனையில்..

வித்யாவுக்கு மனம் வலித்தது..

'குற்றம் செய்தது நீயல்ல.. என் விதி..' என்று மனதிற்குள் கூறிக் கொண்டவள் எழுந்து கொண்டாள்..

"போகலாமா.. மணி ஒன்பதாகிவிட்டது.. பூர்ணிமாவும்.. ஆன்ட்டியும் கவலைப்பட்டு விடுவார்கள்.. நீங்கள் பேச வேண்டும் என்று சொன்னதால் செல்லை ஸ்விட்ச் ஆப் பண்ணிவிட்டேன்.. அதற்கு மேல் கவலைப் படுவார்கள்.."

"ஓ.. ஆமாம்.. ஆமாம்.. போவோம்.."

அவன் காரை செலுத்த சற்றுப் பொறுத்து வித்யா ஸ்கூட்டியில் தொடர்ந்தாள்.. தாமதமாக வந்ததற்கு பூர்ணிமாவிடம் டோஸ் வாங்கிக் கட்டிக் கொண்டவள்.. கண்ணம்மா செய்து வைத்திருந்த பூரி பொங்கலை ஒரு பிடி பிடித்துவிட்டு அறைக்குள் அடைக்கலம் புகுந்து உறங்கிப் போனாள்.. சற்று நேரத்திலேயே கதவு தட்டப் பட்டது.. எழுந்து திறந்தாள்..

கண்களில் சந்தேகப் பார்வையோடு பூர்ணிமா நின்றிருந்தாள்..

9

நதியோரம் நடந்தபோது

நாணல்களை நதியோரம் பார்த்தேன்..

நீரோடு ஒன்றிப் போகும்

நிலை மாறா தன்மைகொள்ளும்

...நதியோரம் நான் நடந்த போது...

கண்களை கசக்கி விட்டுக் கொண்டு வித்யா கேட்டாள்..

"என்னடி தூங்கவிடாமல் டிஸ்டர்ப் பண்றே..?"

"ஏன் இப்போதுதான் தூக்கம் வருகிறதா..? காலையில் ஐந்தரை மணிக்கு ஆபீஸ் முடிந்தவுடன் ஆறுக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடுவே.. இன்றைக்கு ஒன்பதரைக்கு வந்தாயே.. அப்போது தூக்கம் வரவில்லையா..?"

"ஊஹூம்.. பசிதான் வந்தது.."

பூர்ணிமா இளகிப் போனாள்..

"பசியோடு என் அண்ணன் கூப்பிட்டார்ன்னு பின்னாடியே போய் பீச் வெளியில் உட்கார்ந்து இருந்தாயா..?" என்று கடிந்து கொண்டாள்.. வித்யாவிற்கு 'அப்பாடி' என்றிருந்தது..

'ஆக பீச்சுக்குப் போனதை மறைக்கவில்லை.. இதற்குப் பொய் சொல்ல வேண்டாம்..'

"என்னடி செய்வது..? திடீர்ன்னு எதிரில் வந்து நிற்கிறார்.. பேசணும்னு வேற சொல்கிறார்.." என்று உண்மையைச் சொன்னாள்..

"வித்யா.. நீ பொய் சொல்ல மாட்டாய்.." பூர்ணிமாவின் விழி கொக்கி போட்டது.. வித்யா சுதாரித்தாள்..

"ஆமாம்.."

"இப்போது என் முகத்தைப் பார்த்துச் சொல்.. அண்ணன் சொல்வது உண்மையா..?"

மீண்டும் 'அப்பாடி' என்று இருந்தது வித்யாவிற்கு அண்ணன் என்ன சொன்னார் என்று சொல்லிக் கேட்க வில்லையே..

"உண்மைதான்.."

"நீ அண்ணனை விரும்புகிறாயா..?"

இப்போதும் தவிப்பு இல்லை.. அதுதானே உண்மை..?

"ஆமாம்.." என்றாள் வித்யா..

"வித்யா.." என்று பூர்ணிமா அவளைக் கட்டிக் கொண்டாள்.. வித்யா மௌனமாய் நின்றாள்..

"அண்ணன் சொன்னபோது நான் நம்பவேயில்லைடி அவருக்குத் தொழிலில் ஏதோ பிரச்சனையாம்.. ஒரு வருடம் கழித்துத்தான் திருமணம் செய்து கொள்வதாக இருந்தாராம்.. அதைச் சொல்லத்தான் என்னைத் தேடி வந்தாராம்.. வந்த இடத்தில் உன்னைப் பார்த்தாரம்.. பார்த்தவுடனே பிடித்து விட்டதாம்.. மணந்தால் உன்னைத் தான் மணப்பேன் என்று முடிவே பண்ணிவிட்டாராம்.." பூர்ணிமா உற்சாகமாய் நரேந்திரன் விட்ட சரடை சொல்லிக் கொண்டிருக்க வித்யாவின் இயத்தில் ரத்தம் வடிந்தது.. தோழிக்கு முகம் காட்டாமல் புறமுதுகு காட்டி ஜன்னலோரம் தோட்டத்தைப் பார்க்கும் சாக்கில் சென்று நின்று கொண்டாள்.. அங்கே உலவிக் கொண்டிருந்த நரேந்திரன் அவளைக் கண்டதும் கையிலிருந்த சிகரெட்டை அவசரமாய் காலில் போட்டு நசுக்கினான்.. அதே நேரம் வித்யாவை பின்னோடு அணைத்துக் கொண்ட பூர்ணிமா ஜன்னல் வழி நரேந்திரனைப் பார்த்தவள்..

"கள்ளி.. நான் இங்கே நிற்கும்போதே என் அண்ணனை சைட் அடிக்கிறாயா..? அண்ணன் சொன்னது உண்மைதான் போல.. பூர்ணி நான் கேட்டவுடன் உன் தோழி சம்மதித்து விட்டாள்ன்னார்.. நான் நம்பவில்லை.. வித்யா.. ஒரு வருடம் காத்திருக்கிறேன்னு சொன்னாயாமே.. இப்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா..?" என்று ஆர்ப்பரித்தாள்..

பூர்ணிமாவின் முகத்தில் மத்தாப்பூ ஒளிர்ந்தது.. இத்தனை வருடங்களில் இத்தனை மகிழ்வாய் தோழியை அவள் பார்த்ததே இல்லை.. வித்யாவின் மனம் லேசானது.. இந்தப் புன்னகைக்காக எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ளலாமே.. பூர்ணிமாவின் கன்னம் தட்டிச் சிரித்தவள்.

"இப்போது சிரிப்பது போல் எப்போதும் நீ சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும்டி.." என்றாள்

நெகிழ்ச்சியுடன்..

"சிரிக்காமலென்ன வித்யா.. என் அண்ணனுக்கு பொருத்தமான பெண் இந்த உலகிலேயே நீ ஒருத்திதான்னு நான் நினைத்துக் கொண்டிருந்தது இப்போது நடக்கப் போகிறதே.." என்று அவள் கூற வித்யாவுக்கு தூக்கி வாரிப் போட்டது..

"என்னடி சொல்கிறாய்..?"

"ஆமாம் வித்யா.. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நீ பெரிய அண்ணாவைப் பற்றிப் பேசும் போதெல்லாம் நீயே என் பெரிய அண்ணனுக்கு மனைவியாக வேண்டுமென்று மனம் துடிக்கும்.. ஆனால் உன் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் பேச எனக்குப் பயமாக இருந்தது.. என் அண்ணனைப் பார்த்தியா.. வந்தார்.. உன்னைப் பார்த்தார்.. நினைத்ததை நடத்தி முடித்தார்.." பூர்ணிமா பெருமையாக நகைத்தாள்.. வித்யாவால் சேர்ந்து நகைக்க முடியவில்லை.. ஒத்த மனதுடைய தோழிகளின் மனமும் ஒன்று போலதான் நினைத்திருக்கிறது.. ஆனால் வித்யாவின் துரதிர்ஷ்டம் வேறு ஒரு வழியை காட்டி இருக்கிறதே..

"சரி கீழே வா.. சாப்பிடலாம்.."

"இப்போதேவா..?"

"இப்போது மணி என்ன தெரியுமா இரண்டு.. மதியம் சாப்பிட வேண்டாமா..?"

தோழிகள் இருவரும் படியிறங்கிப் போனார்கள்.. நரேந்திரன் வந்துவிட பேசிக் கொண்டே சாப்பிட்டனர்..

மதிய உணவுக்குப் பின் பூர்ணிமாவின் அறைக்கு வந்த நரேந்திரன்.. வித்யாவையும் அவள் அறைக்கு அழைத்தான்.. அவள் வரவும் அங்கிருந்த சோபாக்களில் அமர்ந்தனர்.. பூர்ணிமா அறைக் கதவை அடைத்துவிட்டு வந்தாள்..

"பூர்ணிமா.. நான் ஊருக்குப் போனவுடன் பிரகாசின் வீட்டில் இருந்து தகவல் கேட்டு விடுவார்கள்.. அடுத்த

மாதத்திலேயே முகூர்த்தம் வைத்து விடச் சொல்லி விடலாமா..?"

"அண்ணா.. என் படிப்பு முடிந்துவிட்டது.. பைனல் இயர் பரீட்சைதான் எழுதிக் கொண்டிருக்கிறோம்.. இந்த மாதக் கடைசியில் நான் சென்னையை விட்டுக் கிளம்பி விடலாம்.."

"அப்போ.. அடுத்த மாதமே முகூர்த்தம் வைத்துவிட லாம்ன்னு சொல்லிவிடுகிறேன்.. அப்பா.. எவ்வளவு மனநிம்மதியாக இருக்கிறது தெரியுமா..? அம்மா கேட்டால் சந்தோசப்படுவார்கள்.."

"பொறுங்கள் அண்ணா.. வித்யாவைப் பற்றி யோசிக்க வேண்டாமா..?"

"அவளைப் பற்றி என்ன யோசிக்க..?" என்று குழம்பினான் நரேந்திரன்..

"பூர்ணி.. டோன்ட் ஒர்ரி.. எனக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைத்திருப்பது உனக்குத் தெரியுமில்லை.. ரிசல்ட் வரும்வரை இந்த வேலை.. வந்தபின் ரிசைன் பண்ணிவிட்டு அந்த வேலையில் ஜாயின் பண்ணிவிடுவேன்.. லேடிஸ் ஹாஸ்டலில் ஏற்கெனவே இடம் பார்த்துவிட்டேன்.." என்றாள் வித்யா..

"என்னடி விளையாடுகிறாயா..? என் வருங்கால அண்ணி லேடிஸ் ஹாஸ்டலில் அநாதை போல் தங்குவதா..? எங்கேயோ கைகட்டி வேலை பார்ப்பதா..?" பூர்ணிமா பட படத்தாள்..

'இது என்ன புது பூதம் கிளம்புகிறது..' என்று திகைத்துப் போனாள் வித்யா.. நரேந்திரன் நிலையும் அதுதான்.. திணறிப் போனவனாய் வித்யாவைப் பார்த்தான்.. அவன் விழிகள் கெஞ்ச பூர்ணிமாவைப் பார்த்தாள் வித்யா..

"பூர்ணி.. என் படிப்பு வீணாகலாமா..? நான் வேலையில் ஜாயின் பண்ணியவுடன் அந்தப் பக்கம் டிரான்ஸ்பர் வாங்க முடியுமா என்று பார்க்கிறேன்.."

"எந்தப் பக்கம்..? எனக்கு ஏற்கெனவே காது குத்தியாகி விட்டது.. புதிதாய் நீ குத்தாதே.. நீ செலக்ட் ஆகியிருப்பது மல்ட்டி நேஷனல் கம்பெனி.. அதன் ஹெட் ஆபீஸ் நியுஸிலாந்தில் இருக்கிறது.. சென்னை.. பெங்களூர்.. மும்பை மூன்று இடங்களில் மட்டும்தான் இந்தியாவில் அதன் பிரான்ச் இருக்கிறது.. நீ வேலையில் சேர்ந்தவுடன் கொஞ்ச நாளிலேயே உன்னுடைய திறமைக்கு வெளிநாட்டிற்குப் பறந்து விடுவாய்.. அப்புறம் என் அண்ணன் திரும்பவும் தனிமரமாய் நிற்பார்.. பழைய குருடி கதவைத் திறடி கதைதான்.."

"இப்போதே எதற்கு இவ்வளவு கவலைப்படுகிறாய்.. முதலில் பரீட்சையைப் பற்றிக் கவலைப்படலாம்.."

"பரீட்சையைப் பற்றிக் கவலையா.. யாருக்கு.. உனக்கா..? ஏண்டி.. பரீட்சையை வைத்துக் கொண்டு லீவே போடாமல் நைட் டியூட்டிக்குப் போய் வருகிறாய்.. உனக்கு பரீட்சையைப் பற்றிக் கவலையா..?"

"இன்டர்வியூ அது இதென்று எல்லா லீவையும் எடுத்து விட்டேனே பூரணி.. அதனால்தான் லீவு போட முடியவில்லை.. அதனால் கவலையில்லைன்னு ஆகிவிடுமா..?"

"இப்போ நீ கவலைப்படவில்லைங்கிறது பிரச்சனை இல்லை வித்யா.. நீ மகாபுத்திசாலி.. யுனிவர்சிட்டி ரேங்க் வாங்கித்தான் பாஸ் பண்ணுவ.. ஆனால் பரீட்சை முடிந்தவுடன் நான் கிளம்பணும்னா நீயும் என்னுடன் கிளம்பிவரணும்.."

"அடிப்பாவி.."

"இதுக்கே அலறினால் எப்படிடி.. நான் பிரகாஷைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமானால் நீ செலக்ட் ஆன வேலையில் ஜாயின் பண்ணக்கூடாது.. இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் வேலையையும் விட்டுவிட வேண்டும்.."

"பூர்ணி.. இது ரொம்ப ஓவரா இருக்கு.." என்றாள் வித்யா..

"இல்லை கரெக்டாகத்தான் இருக்கு.. வித்யா.. நீ என்னை முட்டாளாக்க பார்க்கீறயோன்னு எனக்குள்ளே சந்தேகம் இருக்கு.. உண்மையிலேயே நீ அண்ணாவை லவ் பண்ணினால் அவர் எங்கே இருக்காரோ அங்கே தானே நீ இருக்க நினைக்கணும்.. அவர்தான் உன் வாழ்க்கைன்னா இந்த வேலைகள் உனக்கு எதுக்கு..? விட்டுவிட வேண்டியதுதானே..? அவரை விடவா உனக்கு வேலை பெரிது.."

வித்யா பொட்டில் அடிபட்டவளாய் நிமிர்ந்தாள்.. அவனைவிட அவளுக்கு எதுவும் பெரிதில்லைதான்.. ஆனால் அவன் பாதையே வேறாக இருக்கிறதே.. நரேந்திரனைப் பார்த்து 'என்ன செய்வது' என்று விழியால் கேட்டாள்.. நரேந்திரன் எழுந்து கொண்டான்..

"நான் நாளைக்குத்தான் ஊருக்குப் போவேன்.. போவதற்குள் ஒரு முடிவெடுக்கலாம்.. இப்போது நாளைய பரீட்சைக்குப் படியுங்கள்.." அவன் வெளியேறிவிட்டான்..

பூர்ணிமா எதையோ பேச முயல வித்யா புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டாள்.. மாலைக் காபி பலகாரம் முடித்த பின்னும் இருவரும் படிப்பில் மும்முரமாக இருக்க கண்ணம்மா மாடிக்கு வந்து அதட்டினாள்..

"மணி ஒன்பதாகப் போகுது.. காலாகாலத்தில் வயிற்றுக்குள் சாப்பாட்டைப் போட்டிங்கன்னாத்தானே படிக்க முடியும்.. வெறும் வயிறோடு எப்படிப் படிப்பீங்க.."

"வெறும் வயிறா.. சாயங்காலம் வயிற்றுக்குள்ள தள்ளிய உளுந்தவடையும்.. கேசரியும் கோவிச்சுக்காதா..?" என்று கிண்டலடித்தாலும் இருவரும் எழுந்து சாப்பிட வந்தனர்.

நரேந்திரன் வாயிற்புறம் தோட்டத்தில் இருந்தான்..

"அண்ணா எங்கே..?" என்று பூர்ணிமா கேட்டாள்..

"அதையேன் பாப்பா கேட்கிற.. மூனு மணி நேரமா ஐயா தோட்டத்திலேயே சேர் போட்டு உட்கார்ந்துக்கிட்டு யோசிக்கிறார்.. யோசிக்கிறார்.. அப்படி யோசிக்கிறார்..

நான் ஐந்து தடவை போய்க் கூப்பிட்டு விட்டேன்.. வரேன் சித்திங்கிறார்.. வர மாட்டேன்கிறார்.. எத்தனை பாக்கெட் சிகரெட் காலியோ.. சுற்றி ஒரே சிகரெட் துண்டுகளா கிடக்குது.. உடம்பைக் கெடுத்துக்கப் போறார்.." என்று கவலைப்பட்டாள் கண்ணம்மா..

வித்யாவின் மனம் பரிதாபப்பட்டது.. பிரச்சனையைத் தீர்க்க சிகரெட் பாக்கெட்டுகளை காலி செய்கிறான்.. பூர்ணிமா எழுந்து போய் தன் அண்ணனை அழைத்து வந்தாள்..

"உட்காருங்க அண்ணா.. சித்தி இன்றைக்கு என்ன ஸ்பெஷல்.."

"இடியாப்பம்.. தேங்காய்பால்.. குருமா.."

"சபாஷ் சித்தி.. அண்ணனுக்குப் பிடித்ததை சமைத்திருக்கிறீர்கள்.."

மூவரும் சாப்பிட்டு முடித்தவுடன் பூர்ணிமா நரேந்திரனுடன் ஏதோ பேசிக் கொண்டிருக்க வித்யா எழுந்து கைகழுவச் சென்றாள்.. அதைக் கவனித்த நரேந்திரன் பூர்ணிமாவின் தட்டில் ஒரு இடியாப்பத்தை வைத்து..

"இதைச் சாப்பிட்டு முடி.. இளைத்துத் தெரிகிறாய்.." என்று மிரட்டல் போல் கூறிவிட்டு அவசரமாய் கைகழுவச் சென்றான்.. கை கழுவி திரும்பிய வித்யா அவன் மீது மோதிக் கொண்டாள்.. தன் ஒரு கரத்தால் அவள் தடுமாறாமல் பிடித்துக் கொண்ட நரேந்திரன்..

"பூர்ணிமா தூங்கியவுடன் மொட்டை மாடிக்கு வந்து விடுங்கள்.. பேசி முடிவு எடுக்க வேண்டும்.." என்றான்..

"இது வேறா..? ஏன் பால்கனியில் உட்கார்ந்து பேசினால் ஆகாதா..? மொட்டை மாடிக்கு எதற்குப் போக வேண்டும்.."

"நிச்சயமாய் கொஞ்சிக் குலாவ இல்லை.. என்னை நம்பலாம்.. பால்கனியில் என்றால் வாசலில் சதாசிவ பெரியப்பாவின் பார்வையில் பட்டு விடுவோம்.. இடையில் பூர்ணி எதற்காவது எழுந்து வந்தால்.. நாம் பேசுவதைக் கேட்டு விடுவாள்.."

அதற்குள் இடியாப்பத்தை காலி பண்ணிவிட்டு எழுந்து வந்த பூர்ணிமா அவர்கள் ரகசியம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்வாய் சிரித்தாள்.. ஒப்புக்கு பதிலுக்கு சிரித்த வித்யா அந்த இடத்தை விட்டு அகன்றாள்..

இரவு அறையை விட்டு வெளியே வந்து பூர்ணிமாவின் அறையைக் கடந்து ஹாலுக்கு வெளியேயிருந்த மாடிப் படிகளில் மொட்டை மாடிக்குப் போக பூனை போல் சத்தம் எழுப்பாமல் ஏறிய வித்யாவிற்கு சிரிப்பு வந்தது.. காதலே இல்லை.. ஆனால் காதலில் செய்கிற அத்தனை ரகசிய வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது.. மொட்டை மாடி இருட்டில் நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்..

10

நதியோரம் நடந்தபோது

ரகசியக் கனவு தோன்றும்

கனவு கலையக் கூடாதென்று

கடவுளிடம் மனம் கேட்கும்

…நதியோரம் நான் நடந்த போது…

நிலா வெளிச்சத்தில் கோட்டுச் சித்திரம்போல் அவன் நின்று கொண்டிருந்தான்.. அந்த இருளிலும் தெரிந்த அவனது நெடிய உயரத்தின் கம்பீரம் அவளை மயக்கியது.. அவனது அருகாமை மனதிற்கு அச்சத்தைத் தந்தது.. மனம் விரும்பும் ஆண் மகனுடன் தனியே இருக்க நேர்கையில்

மனதிற்கு எப்படி கடிவாளம் இடுவது..? அடங்க மறுத்து திமிறும் மனக்குதிரையை எப்படி அடக்குவது..? இவன் வேறு 'தனியே வா' என்று ஏன் அழைக்கிறான்..?

மனதிற்குள் நரேந்திரனை சபித்தபடி அருகே சென்றாள் அவள்.. நரேந்திரன் சங்கடப்பட்டான்.. தன் குடும்ப பிரச்சனைக்காக இந்த நல்ல பெண்ணை சங்கடத்துக்குள்ளாக்குகிறோமே என்ற குற்ற உணர்ச்சிக்கு ஆட்பட்டான்.. இரவில் மெல்லிய ரீங்கார சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.. வித்யாவின் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம் அவன் நாசியை வருடியது.. அவனறிந்த பெண்களில் யாரிடமாவது மல்லிகை வாசம் வந்ததா என்று ஏனோ தேவையில்லாமல் நினைவு வந்தது.. இல்லையென்ற பதிலும் வந்தது.. கூடவே ஓர் வரம் கொடுக்கும் தேவதை போன்ற அழகே உருவான அவளை அவனறிந்த பெண்களுடன் ஒப்பிடுவதா..? என்று தன்னைத்தானே குட்டிக் கொண்டான்.. வித்யாவின் மேல் மல்லிகை வாசனையோடு கூடிய இதமான வேறு வாசனைகளும் வருவது போல் தோன்ற, தனியாக அவளை இந்த இரவு நேரத்தில் மொட்டைமாடியில் சந்திக்க முயன்றிருக்கக் கூடாதோ என்று தடுமாறிப் போனான்..

இருவருமே இருவேறு மனப்போராட்டங்களுடன் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று திணறினார்கள்.. ஒரு வழியாக வித்யா தன் தைரியத்தை ஒன்று திரட்டி..

"எதற்கு வரச் சொன்னீர்கள்..?" என்று கேட்டாள்..

சுதாரித்துக் கொண்ட நரேந்திரன் அவளைப்பார்த்து..

"வித்யா.. என்னை சுயநலவாதி என்று நினைக்காம லிருந்தால் ஓர் யோசனை சொல்லவா..?" என்று கேட்டான்..

"சுயநலவாதியா.. யார் நீங்களா..? ஒரு போதும் உங்களை அப்படி நினைக்க மாட்டேன்.. என்ன விசயம் சொல்லுங்கள்.." என்று மென்மையாகக் கூறினாள் வித்யா.

நரேந்திரனின் மனம் சிலிர்த்தது.. இரவு நேரக் காற்று இதமாக அவர்களது உடல் தொட்டுச் சென்றது.. கடல்

காற்று சிலுசிலுவென்று இருந்தது.. அந்த மாதிரி சூழ்நிலையில் தான் பாரதி..

'மயங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன் வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை' என்று மயங்கிப் பாடினானோ.. அந்த வினாடியில் தான் புதிதாகப் பிறந்து வந்தால் நன்றாயிருக்குமே என்று அவன் ஏங்கினான்.. கழிந்துபோன கசடு வருடங்கள் மறந்து போகும்படி ஓர் அம்னீசியா வியாதி தனக்கு வரக் கூடாதா என்று ஆசைப்பட்டான்..

யாரிந்தப் பெண்..? இவளுக்கும் தன் குடும்பத்திற்கும் என்ன சம்பந்தம்..? தோழமைக்காக தன் வாழ்வை பணயம் வைக்கும் பொய்யை எந்தப் பெண்தான் சொல்வாள்..? இவள் சொன்னாள்.. இது போதாது என்று இன்னும் அவள் எதிர்காலத்தை குலைக்கும் வண்ணம் உதவி கேட்க அவன் அழைத்திருப்பது தெரியாமல் வந்திருக்கிறாளே.. இந்த சௌந்தர்ய தேவதையின் வசம் தன் மனம் ஈர்க்கப்படுவதை உணர்ந்தும் செயலற்றவனாய் நிற்க வேண்டி இருக்கிறதே.. என்று அவன் மனம் தவித்தது.. உண்மையிலேயே அவள் போன்ற ஓர் பெண்ணை மணக்க வேண்டி வர நேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..? ஆனால் அவன்தான் தன்னை அதற்குத் தகுதியில்லாதவனாக மாற்றிக் கொண்டு விட்டானே.. ஒரு நிமிடம்..

'வித்யா.. உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.. வாழ்ந்தால் உன்னுடன்தான் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.. என்னை மணந்துகொள்வாயா..?' என்று உளமாரக் கேட்க விரும்பினான்.. ஆனால் அதை மறைத்து வெளியில் வேறு பேசினான்..

"வித்யா.. எங்களுக்கு மோட்டார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் பேக்டரியும் துணி தயாரிக்கும் மில்லும் இருக்கிறது தெரியுமில்லையா..?"

"தெரியும் சார்.. பூர்ணிமா சொல்லியிருக்கிறாள்.."

"வித்யா.. அந்த பேக்டரியில் ஜெனரல் மேனேஜருக்கு அடுத்தபடி பெர்ஸனல் மேனேஜர் பதவி காலியாக

இருக்கிறது.. அதற்கு நீங்கள் ஏற்றவராக இருப்பீர்கள்.."

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்..?"

"வித்யா.. நீங்கள் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளுங்கள்.. நீங்கள் ஜாயின் பண்ண இருக்கும் வேலையைவிட அதிகச் சம்பளம் தருகிறேன்.. நீங்கள் கொஞ்ச நாள் அங்கே வேலை பாருங்கள் பிறகு.."

"பூர்ணிமாவின் திருமணம் முடிந்தவுடன் வெளியேறி விட வேண்டும் அப்படித்தானே..."

நரேந்திரன் பேச்சிழந்து போக வித்யா கசப்புடன் சிரித்தாள்.

"வித்யா.. நான் வெளிநாட்டில் படித்தவன். எனக்கு அங்கே நண்பர்கள் இருக்கிறார்கள்.. அவர்கள் மூலம் உங்களுக்கு நல்ல வேலை வெளிநாட்டில் நான் வாங்கிக் கொடுக்கிறேன்.."

"தேவையில்லை சார்.." என்று மறுத்தாள் வித்யா..

"அப்படியானால் நீங்கள் எங்களோடு வர மாட்டீர்களா..?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே.. உங்கள் உதவி தேவையில்லைன்னு தான் சொன்னேன்.. நான் உங்களோடு உங்கள் ஊருக்கு வருகிறேன்.." என்று நிதானமாகக் கூறினாள் அவள்..

"என்ன சம்மதித்து விட்டீர்களா..? நன்றி வித்யா.. மிகவும் நன்றி.. வித்யா.. நீங்கள் உங்கள் எதிர்காலத்தை நினைத்துப் பயப்பட வேண்டாம்.. அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.."

வித்யாவின் செவிகளில் 'உனக்கு நான் பொறுப்பு' என்ற வார்த்தைகள் தேனாகப் பாய்ந்தன.. விரக்தியுடன் சிரித்தவள்..

"சார்.. நான் இன்ஜினியரிங் படிக்கணும்னு ஆசைப் பட்டேன்.. என் அப்பாவும்.. சித்தியும் படிக்க வைக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க.. வேலை தேடியது இந்தப் படிப்பிற்காகத்தான்.. நான் ஆசைப்பட்ட படிப்பை படித்து

முடித்துவிட்டேன்.. இனி இந்த வேலை எனக்குத் தேவைப் படாது.. நான் வருகிறேன்.. என் வேலைக்கான சம்பளத்தை மட்டும் கொடுங்கள் போதும்.. பூர்ணிமா திருமணம் முடிந்தவுடன் என் படிப்பு எனக்கு ஒரு நல்ல வேலையை தேடிக் கொடுக்கும்.. அதனால் நீங்கள் எனக்காகக் கவலைப்பட வேண்டாம்.."

"வித்யா.. எனக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.. எனக்காகவும் மனம் இரங்க ஒரு ஜீவன் இருக்கிறதா..?"

வித்யா உதடுகளை மடித்துக் கடித்துக் கொண்டாள்.. 'உனக்காக மட்டும்தானே நான் இருக்கிறேன்..? உனக்கு உதவாமல் யாருக்கு உதவப்போகிறேன்..' என்று மனதிற்குள் கூறிக் கொண்டவள்..

"வெயிட் சார்.. என்னுடை நிபந்தனைகளை கேட்டு விட்டு சந்தோசப்படுங்கள்.." என்றாள்..

"என்ன நிபந்தனை வித்யா..? எது வேண்டுமானாலும் செய்கிறேன்.. பணம் வேண்டுமா..? இல்லை சொத்தாக ஏதாவது.. இங்கே இருக்கும் பங்களாக்களில் என் பெயரில் உள்ளதை உங்கள் பெயருக்கு எழுதித் தருகிறேன்.. மேலும் பேங்கில் டெபாசிட்டாக ஒரு தொகையை.. எவ்வளவு வேண்டுமென்று சொல்லுங்கள்.. போட்டு விடுகிறேன்.. உங்கள் எதிர்காலப் பாதுகாப்பிற்கு வேறு என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் வித்யா.."

"சார்.. உங்கள் பணம் உங்களோடு.. நான் வேலை பார்ப்பதற்கு மட்டும் எனக்கு ஊதியம் கொடுங்கள் போதும்.. வேறு ஏதேனும் செய்ய நினைத்தால் அந்த வினாடியிலேயே வெளியேறி விடுவேன்.."

"ஓகே.. ஓகே.. என்ன நிபந்தனை சொல்லுங்கள்.."

"நான் அங்கே இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நான் இருக்கும் காலம் வரை நீங்கள் சிகரெட் பிடிக்கக்கூடாது.. மது அருந்தக் கூடாது.. அப்புறம்.."

"பெண்களின் சிநேகிதம் கூடாது.. சரி.. வித்யா.. நீங்கள் சொன்ன அத்தனைப் பழக்கமும் இடையில் வந்ததுதான்.. எனக்காக நீங்கள் கவர்ன்மெண்ட் வேலை, மல்ட்டி நேஷனல் கம்பெனியின் வேலைன்னு அனைத்தையும் விடும்போது நான் உங்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு இந்த மோசமான பழக்கங்களை விட மாட்டேனா.." என்றவன் தன் பாக்கெட்டில் இருந்த சிகரெட் பெட்டியை எடுத்துத் தலையைச் சுற்றி எறிந்தான்.. வித்யா மனம் விட்டுச் சிரித்தாள்..

"அப்புறம் வித்யா.. இன்னொரு விஷயம்.."

"இனியும் என்ன..?"

"இல்லை.. நான் உங்களை 'நீங்கள் வாங்கள்'ன்னு கூப்பிடுவது மற்றவர்களிடம் சந்தேகத்தை உண்டாக்கும்.."

"என்னை தாராளமாக 'நீ, வா, போ'ன்னு ஒருமையில் கூப்பிடலாம்.."

"அப்புறம் என்னை நீ 'சார்'ன்னு கூப்பிட வேண்டாமே.."

"வேறு எப்படிக் கூப்பிடுவது..?"

"என் பெயரைச் சொல்லிக் கூப்பிடு.."

"இல்லை சார்.. எனக்கு அப்படிக் கூப்பிட வராது.."

"வர வேண்டும்.. இல்லாவிட்டால் பூர்ணிமா சந்தேகப் படுவாள்.."

"ம்.. முயற்சி செய்கிறேன்... இப்போது நாம் போகலாமா.."

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள்.. வித்யா தன் அறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொள்வதற்கு முன் ஒரு முறை நிமிர்ந்து பார்த்தாள்.. அதே கணம் பூர்ணிமாவின் அறைக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு பெரிய அறைக்குள் போக வேண்டிய நரேந்திரன் திரும்பிப் பார்த்தான்.. இருவர் பார்வையும் சந்தித்துக் கொண்டன.. பார்த்த விழிகளில் ஓராயிரம் தாபங்கள்.. ஏக்கங்கள் நிராசைகள் இருந்தன..

வித்யா அறைக்கதவோடு மனக் கதவையும் தாழிட்டுக் கொண்டாள்.. மூடிய கதவின் மேல் சாய்ந்து நின்றவளின் நெஞ்சம் விம்மியது.. இனம் புரியா சோகம் நெஞ்சை அழுத்தியது.. கண்களில் கண்ணீர் வழிந்தது.. படுக்கையில் சாய்ந்து தலையணையில் முகம் புதைத்துக் கொண்ட அந்தத் தாயில்லாத பேதை குலுங்கி அழுதாள்.. அவள் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஒரே ஒரு ஜீவனான பூர்ணிமாவிடம் கூடச் சொல்ல முடியாத சோகத்தை சுமந்தவளாய் நெஞ்சம் கனக்க அவள் கண்ணீர் விட்டாள்.. தலையணை நனைந்தது.. கண்ணீரில் துயர் கரைத்தவள் தன்னை அறியாமல் தூங்கி விட்டாள்..

மறுநாள் காலையில் பூர்ணிமா கதவைத் தட்டியதும் எழுந்தவள் முதல் நாளைய இரவின் நினைவை வலுக்கட்டாயமாய் மனதிலிருந்து அகற்றியவள் தேர்விற்கான பாடங்களை படிப்பதில் முனைந்தாள்.. அன்றைய தேர்வு முடிந்து இருவரும் வீட்டிற்கு வர நரேந்திரன் ஊருக்குக் கிளம்பத் தயாராகி இருந்தான்..

"என்னங்கண்ணா.. கிளம்பி விட்டீர்களா..?"

"ம்.. சாப்பிட்டதும் கிளம்ப வேண்டியதுதான்.. உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.."

"வித்யாவுக்காக காக்கவில்லையா..?"

"அவளுக்காகவும் தான்.. ஹி.. ஹி.."

"போதும் வழிகிறது.. வித்யா பாரேன் அண்ணாவின் முகத்தை.." என்று தோழியைத் திரும்பிப் பார்த்தாள் பூர்ணிமா..

உணர்ச்சி மரத்துப் போன குரலில்.

"பார்த்தேன் பூர்ணி.. வாயேன் சாப்பிடலாம்.." என்றாள் வித்யா..

நரேந்திரன் வேதனையடைந்தான்.. சீக்கிரம் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட வேண்டும்..

இந்தக் குணவதியை மென்மேலும் சோதிக்கக் கூடாது.. சோதனைக்கு ஆளாக்கவும் கூடாது..

"பூர்ணி.. வா சாப்பிட்டு விடலாம்.. உன் அறைக்குப் போய் நாம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது.."

பூர்ணிமாவின் அறையில் அவர்கள் அமர்ந்திருந் தார்கள்.. பூர்ணிமா வழக்கம் போல் அறைக் கதவை அடைத்திருந்தாள்.. வித்யா, பூர்ணிமாவின் அருகே அமர்ந்திருந்தாள்.. விரக்தியுடன் இருந்தாலும் அதை வெளியே மறைத்து அமைதியுடன் காட்சியளித்தாள்.. நரேந்திரன் தன் சின்னஞ்சிறு தங்கைக்காக அவளது வயதையொத்த ஒரு சிறு பெண்ணின் வாழ்வில் விளையாடுகிறோமே என்ற தவிப்பிலிருந்தான்.. எனவே ஒரு வகையான பரபரப்போடு கால் மாற்றி உட்காருவதும் செல்போனை நோண்டுவதுமாக இருந்தான்.. பூர்ணிமா அவனது செல்போனைப் பிடுங்கி அணைத்துத் தூக்கி எறிந்தாள்..

"முதலில் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்.. அதைச் சொல்லுங்கள்.." நரேந்திரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.. வித்யாவைக் குற்ற உணர்வுடன் ஒரு முறை பார்த்துக் கொண்டான்..

"பூர்ணி.. பரிட்சை முடிந்ததும் வித்யா உன்னுடன் தான் வரப் போகிறாள்.."

"ஹையோ.." என்றபடி தோழியைக் கட்டிக் கொண்டாள் பூர்ணிமா..

"பூர்ணி.. வித்யாவுக்கு நம் பேக்டரியில் பெர்ஸனல் மேனேஜர் வேலையைக் கொடுக்க இருக்கிறேன்.. உன் திருமணம் முடிந்து.. என் பிரச்னைகளும் சரியான பின் நாங்கள் திருமணம் செய்து கொள்வோம்.."

நரேந்திரன் கை விரல் நகங்களைப் பார்த்தபடி இதைக் கூறினான்..

"சரி அண்ணா.. வித்யாவிற்கு நம் வீட்டில் மாடி அறைகளில் என் அறைக்குப் பக்கத்திலிருக்கும் அறையை கொடுத்து

விடலாம்.." என்று அவள் கூற மற்ற இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது..

இதை யோசிக்கவேயில்லையே என்று வித்யா தவித்த போது நரேந்திரன் மிகத் தெளிவாக அதை ஏற்றுக் கொண்டான்.. எப்போது அவன் வார்த்தைக்காக வித்யா அவளது வாழ்வை பணயம் வைக்கிறாளோ.. அதன் பின் அவள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவள் நரேந்திரனது பொறுப்பு.. அவளது எதிர்காலத்தை செம்மையாக்க அவன் நிச்சயம் பாடுபடுவான்.. தகுந்த மாப்பிள்ளை பார்த்து மணம் முடித்து வைப்பான்.. அவன் மனதில் ஓர் எண்ணம் உதித்திருந்தது.. அதற்கு வித்யாவை நிச்சயம் சம்மதிக்க வைத்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் நிமிர்ந்தான்.. வித்யா அவனுக்காக அவன் பின்னே வரும்போது அவள் வீட்டில் அவன் காவலில் தான் தங்க வேண்டும்.. அதில் சந்தேகம் என்ன இருக்கிறது..?

"நானும் அதையேதான் நினைத்தேன் பூர்ணிமா.. அடுத்த வாரம் நீங்களிருவரும் வரும்போது உங்களிருவரின் ரூம்களும் உங்கள் வருகைக்குத் தயாராகக் காத்திருக்கும்.."

நரேந்திரன் கிளம்பிப் போனான்.. பரிட்சை முடிந்து வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு வரும் பொறுப்பை சின்னய்யன் வசம் ஒப்படைத்து விட்டு சதாசிவம் காரோட்ட கண்ணம்மாவை அழைத்துக் கொண்டு அவர்கள் மணிமுத்தாறை நோக்கிப் பயணப்பட்டனர்..

11

நதியோரம் நடந்தபோது

நான் என்ற நினைவு போகும்

தண்ணீர் போல் மனமிருந்தால்

தாகம்தான் ஏன் தோன்றும்?

...நதியோரம் நான் நடந்த போது...

முடிவு எடுத்த பின் கணநேரம் கூட வித்யா யோசிக்க வில்லை.. கேம்பஸ் இண்டர்வியூவில் செலக்ட் பண்ணிய கம்பெனிக்கு உடனடியாக வேலையில் சேர முடியாதென்றும் ஒரு வருடம் அவகாசம் கொடுக்க வேண்டியும் ஒரு பதிவுத் தபால் அனுப்பினாள்.. நிச்சயம் தனக்காக அந்த வேலை காத்திருக்கும் என்ற நம்பிக்கை கொள்ளாவிடினும் தனது தேர்வு முடிவு வெளியான பின் தன் மதிப்பெண் அதைப் பெற்றுத் தரக்கூடும் என்று எண்ணினாள்.. பார்த்துக் கொண்டிருந்த வேலையை ராஜினாமா பண்ணினாள்.. தனது ஜி.பி.எப். மற்ற பிடித்த தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரியாக பூர்ணிமாவின் மணிமுத்தாறு கிராம முகவரியைக் கொடுத்தாள்..

தனது சேமிப்புப் பணத்தை போஸ்ட் ஆபிஸில் கிஷான் விகாஸ் பத்திரங்களில் முதலீடு செய்து பத்திரமாக கையில் எடுத்துக் கொண்டாள்.. பின்னாளில் வேலை கிடைக்க தாமதமானால் அவை உதவும் என்று யோசித்துச் செயல்பட்டாள்.. அவளது தாயின் நகைகளில் பத்து பவுன் விற்றது போக மீதமிருந்த பதினைந்து பவுன் நகையையும் அவளது ஊதியத்தில் வாங்கிய இரண்டு, மூன்று சிறிய நகைகளையும் ஒரு பெட்டியில் பத்திரப்படுத்தி எடுத்துக் கொண்டாள்..

மற்றபடி அவளது துணி வகைகள் நான்கு பெட்டிகளில் அடைபட்டு விட்டன.. அவளது நகைகள்.. சான்றிதழ்கள் அடங்கிய சிறு பெட்டியை அந்தப் பெட்டிகளில் துணிகளுக்கு அடியில் வைத்துக் கொண்டாள்.

பூர்ணிமாவின் பெட்டிகள் பல நரேந்திரனின் காரில் சென்று விட்டன.. மீதமிருந்தவைகளோ ஐந்து பெட்டிகளில் அடங்கி விட்டன.. வித்யாவுடைய பெட்டிகளையும் பூர்ணிமாவின் பெட்டிகளையும் காரின் டிக்கியில் அடுக்கிய சதாசிவம் கண்ணம்மாவின் பெட்டிகள் இரண்டையும் கடைசியில் அடுக்கி டிக்கியை மூடிப் பூட்டினார்..

"சரி தாத்தா.. அண்ணன் சொன்னபடி நம் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு நீங்கள் கிளம்பி வந்து விடுங்கள்..

வீட்டை அதுவரை பத்திரமாய் பார்த்துக் கொள்ளுங்கள்.." என்று சின்னய்யனுக்குக் கட்டளை பிறப்பித்த பூர்ணிமா காரின் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டு வித்யாவைப் பார்த்து, "ஏறுடி" என்றாள்..

காரில் ஏறுமுன் அந்த வீட்டை ஓர் முறை திரும்பிப் பார்த்தாள் வித்யா.. மீண்டும் ஓர் முறை அந்த வீட்டைப் பார்க்க முடியுமா என்று எண்ணமிட்டவள் கண் கலங்கியது.

'வீடு என்பது எது..?' அமைதியையும் நிம்மதியையும் பாதுகாப்பையும் வழங்குவது.. பட்டினியாய் கிடந்தாலும் தன் வீட்டில் கிடந்து விட்டால் அந்தத் துன்பம் கூட பாதிக்காது.. வீடு என்பது கல்லாலும்.. சிமெண்டாலும் கட்டப்பட்டதல்ல.. அன்பாலும்.. பாசத்தாலும் நம்முடன் பிணைந்திருப்பது.. அந்தப் பாசத்தை அவளைப் பெற்றவரின் வீடு தரவில்லை.. அங்கே அவளுக்கு எந்தவிதச் சொந்தமும் இல்லை.. இது பூர்ணிமாவின் வீடு.. ஆனால் இந்த நான்கு வருடங்களாக அவளுக்கு முகவரியைத் தந்தது இந்த வீடு.. அவளுக்காக கதவு திறந்து அவளை உள் வாங்கிக் கொண்ட தாயின் மடி இது..

"என்னடி வீட்டையே முறைச்சுக்கிட்டு நிற்கிற..? காரில் ஏறு.." பூர்ணிமா அவளை உலுக்கினாள்.. அவள் காரில் ஏறிக் கொண்டாள்.. பூர்ணிமா அவளருகில் அமர்ந்து கொள்ள கண்ணம்மா முன் பக்கம் சதாசிவத்தின் அருகில் அமர்ந்து கொண்டாள்.. கார் கிளம்பியது.. சென்னை மாநகரை பின்னுக்குத் தள்ளி விட்டுப் பறந்தது..

அன்று ஆயகுடியில் பிறந்து வளர்ந்தவள் அதைத் துறந்து சென்னைக்குப் படிக்க வந்தாள்.. இன்று படிப்பை முடித்து விட்டு சென்னையைத் துறந்து முன் பின் கேட்டறியாத, பார்த்தறியாத மணிமுத்தாறுக்குப் போகிறாள் நாளை..?

வாழ்க்கைப் பயணத்தில் ஏதேனும் ஓர் ஊரிலாவது நிலைத்து வாழக் கொடுத்து வைக்குமா அவளுக்கு..?

வழியில் மதுரையில் ஒரு ஹோட்டலில் மதிய உணவை முடித்தார்கள்.. இரவு உணவு திருநெல்வேலி ஹோட்டலில்

இரவு மணி பத்தைத் தொடும்போது மணி முத்தாறு என்ற அந்த ஊரை நெருங்கி விட்டதாக பூர்ணிமா கூறினாள்..

கார் ஓடிக் கொண்டிருந்த பாதையை ஒட்டி வெள்ளி ரிப்பன் போல் நதி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது.. ஆற்றோரக் காற்று உடல் தொட்டு விளையாட வித்யா ஆவலாய் எட்டிப் பார்த்தாள்..

"இது என்ன ஆறுடி பூர்ணிமா.."

"இங்கே இது மணிமுத்தாறு.. கொஞ்ச தூரம் போனால் பாபநாசம் ஆறு.. இங்கே பால்ஸ் இருக்கு தெரியுமா..?"

"அருவியா.. இங்கேயோ..?"

"இங்கேதான்.. எங்கள் வீட்டிலிருந்து நடந்து போகக் கூடிய தூரத்தில்தான் அருவி இருக்கிறது.."

"இந்த ஆறு கூட உன் வீட்டோரம் ஓடுமா..?"

"ஆற்றங்கரையில்தான் மணிமுத்தாறு ஊரே உள்ளது.. எங்கள் வீடும் ஆற்றங்கரையில்தான் கட்டப் பட்டிருக்கிறது.. வீட்டின் பின்பக்கம் ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது.."

வித்யா இயற்கையை ரசிப்பவள்.. ஆறு ஓடும் ஊரில் அவள் வசிக்கப் போகிறாள் என்றதும் மகிழ்ந்து போனாள்.. புண்பட்ட அவள் உள்ளத்திற்கு மருந்திடுவது போல் அமைதியாய் ஆறு உடன் வந்து கொண்டிருந்தது..

நகரமும் இல்லாமல் கிராமமும் இல்லாத அந்தப் பெரிய ஊருக்குள் கார் சென்று விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்த அந்த பிரம்மாண்டமான மாளிகையின் நுழைவாயிலில் நுழைந்தது.. கேட்டிற்கும் வீட்டுக்கும் இடையே அரை கிலோ மீட்டர் தூரமிருக்கும் போலிருந்தது. வீடுவரை அகலமாய் சிமெண்ட் பாதை ஓடியது.. பாதையின் இரு பக்கமும் அரை வடிவமாய் செங்கல் பதிக்கப்பட்டு அலங்கார விளக்குத் தூண்கள் நின்று கொண்டிருந்தன.. பாதையின் நடுவில் வட்டமான அலங்கார செய்நீரூற்று அமைக்கப்பட்டு அதன் இரு பக்கமும் பாதை பிரிந்து ஓடி வீட்டின் முகப்பிலிருந்த பிரமாண்டமான போர்டிகோவில்

முடிந்தது.. அந்த விசாலமான போர்டிகோவில் ஏறக்குறைய இருபது கார்களுக்கு மேலேயே நிறுத்தலாம் போல இருந்தது.. கார் போகும் பாதையின் இரு பக்கமும் பூச்செடிகளும், பழமரங்களும் நிறைந்த தோட்டம் அமைந்திருந்தது..

நீண்ட சிமெண்ட் பாதையில் வழுக்கிக் கொண்டு சென்ற கார் போர்டிகோவில் ஏற்கெனவே நின்று கொண்டிருந்த ஆறு கார்களின் மத்தியில் போய் நின்றது.. கார் நின்றதும் உள்ளேயிருந்து வந்த வேலையாள்கள் பூர்ணிமாவை மரியாதையாய் விசாரித்து விட்டு அவர்களது பெட்டிகளைச் சுமந்து சென்றனர்.. காரிலிருந்து இறங்கிய வித்யா வீட்டினுள் செல்லத் தயங்கி நின்றாள்.. சென்னை வீட்டை விட பத்து மடங்கு பெரியதாக மணிமுத்தாறு வீடு இருந்தது.. அப்படிப்பட்ட வீட்டை இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறாள் வித்யா.. உள்ளேயிருந்து தத்தித் தளர் நடைபோட்ட பெண் குழந்தையொன்று வர பின்னாலேயே..

"காமினி நில்லு.." என்றபடி ஓர் அழகான இளம் பெண் ஒருத்தி வந்தாள்.. குழந்தையைத் தூக்கிக் கொண்டவள் பூர்ணிமாவிடம் "உள்ளே வா பூர்ணிமா.. உனக்காகத்தான் நாங்கள் எல்லோரும் தூங்காமல் காத்திருக்கிறோம்.." என்று கைபிடித்து அழைத்தாள்..

புன்சிரிப்புடன் கைகளை உருவிக் கொண்ட பூர்ணிமா வித்யாவின் கரங்களைப் பற்றி..

"வித்யா.. இது என் மூன்றாவது அண்ணி பிரபாவதி தேவி.. அண்ணி.. இவள் வித்யா... என் பிரண்ட்.." என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்..

வித்யா.. "அப்படியா.. வணக்கம்.." என்று கூற பதிலுக்கு ஒரு ஹலோ கூடச் சொல்லாமல் அவள் ஒருத்தி அங்கேயில்லாதது போல் பாவித்து..

"இது என்ன வழக்கம் பூர்ணிமா.. நான் இரண்டாவது மருமகள்.. உன் சின்ன அண்ணி.. நீயோ எப்போதும்

மூன்றாவது அண்ணியென்கிறாய்.." என்று கடிந்து கொண்டாள்..

"நீங்கள் என் மூன்றாவது அண்ணனைக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் அதனால் மூன்றாவதுதான்.." என்று 'அண்ணி' என்ற வார்த்தையை வேண்டுமென்றே விட்டு விட்டுப் பேசியவள் அவள் அங்கு நிற்பதை அலட்சியம் செய்தவளாய்..

"நீ வாடி.." என்று வித்யாவின் கை பிடித்து இழுத்தவாறு வீட்டிற்குள் சென்றாள்.. நீண்ட முன் வராண்டாவைத் தாண்டி வீட்டின் பிரம்மாண்டமான வரவேற்பறைக்குள் சென்றனர்.. மேலேயிருந்து லஸ்தர் அலங்கார விளக்குகள் ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருந்தன.. விஸ்தீரமான அறையில் பெரிய பெரிய சோபாக்கள் பிரித்துப் பிரித்துப் போடப்பட்டு இருந்தன.. பூர்ணிமாவைக் கண்டதும் குடும்பத்தார் அவளைச் சூழ்ந்து கொள்ள வித்யா விலக முயற்சித்தாள்.. பூர்ணிமாவின் பிடி இறுகியது.. வித்யாவை விலகிச் செல்ல அவள் அனுமதிக்கவில்லை..

"அம்மா.. இவள் என் தோழி வித்யா.. இனி என்னுடன் இங்கேதான் இருப்பாள்.." என்று தாயின் முன் நிறுத்தி அறிமுகப்படுத்தினாள் பூர்ணிமா..

அழகான ஓவியம் போலிருந்த சௌதாமினியின் முகத்தில் வரவேற்கும் புன்முறுவல் உதித்தது.. சகஜமாக..

"வாம்மா.. நம் பேக்டரியில் பெர்ஸனல் மேனேஜர் வேலைக்கு உன்னை நரேந்திரன் நியமிச்சிருக்கிறானாம். என்னிடம் இன்றுதான் சொல்லி நீ இன்று வருவதாகச் சொன்னான்.. இது உன் வீடுன்னு நினைத்துக் கொள்ளம்மா.. மாடியில் பூர்ணிமாவின் அறைக்குப் பக்கத்திலேயே உனக்கு அறை கொடுத்திருக்கிறோம்மா.. எது வானாலும் தயங்காமல் என்னிடம் நீ சொல்லலாம்.." என்றாள் அன்புடன்..

"தேங்க்ஸ் ஆன்ட்டி.." என்றாள் வித்யா விடுதலை உணர்வுடன்..

அங்கிருந்த மற்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நயன பாஷையில் உரையாடிக் கொண்டனர்.. பூர்ணிமா ஓர் நிமிர்வுடன்..

"வித்யா இவர்தான் என் இரண்டாவது அண்ணன் மகேந்திர பூபதி இவங்க என் இரண்டாவது அண்ணி மீனலோசனி தேவி.." என்று எரிச்சலாக அடை மொழியுடன் அறிமுகப்படுத்தி வைத்தாள்..

மகேந்திர பூபதியின் கர்வம் நிரம்பிய கண்கள் வித்யாவை ஏற இறங்கப் பார்த்தன.. மீனலோசனியோ உதாசீனம் ததும்பிய விழிகளால் வித்யாவைப் பார்ப்பது கூட தன் தகுதிக்கு இழுக்கு என்பது போல் முகம் திருப்பிக் கொண்டவள் பூர்ணிமாவிடம் பிரபாவதி கூறியது போல்.. "என்ன பூர்ணிமா இது..? இந்த வீட்டின் மூத்த மருமகள் நான்.. எப்போதும் என்னை இரண்டாவது ஆக்குகிறாயே.." என்று குறைபட்ட குரலில் கூறினாள்..

"என் பெரியண்ணனின் மனைவிதான் இந்த வீட்டின் மூத்த மருமகள் அண்ணி.. நீங்கள் முதலில் வந்தாலும் இரண்டாவது மருமகள் தான்.. என் பெரியண்ணனின் மனைவிதான் என் பெரியண்ணி.." என்று உதாசீனக் குரலில் பேசி.. அவள் எப்படி வித்யாவின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாளோ அதுபோல் மீனலோசனியின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்த பூர்ணிமா வித்யாவின் பக்கம் திரும்பி..

"வித்யா இவர் என் மூன்றாவது அண்ணன் யுகேந்திர பூபதி.. இவங்களைத்தான் வாசலில் பார்த்தாயே என் மூன்றாவது அண்ணி பிரபாவதி தேவி.. அவங்க கல்யாணம் பண்ணியிருக்காங்க.." என்றாள்..

கர்வத்தில் மகேந்திரனுக்கு யுகேந்திரன் சளைத்தவனில்லை என்று நிரூபிக்க பிரபாவதியோ தன் பெண் குழந்தையுடன் மும்முரமாய் பேசிக் கொண்டிருக்க..

"அத்தை.." என்ற மழலைக் குரல் கேட்டது.. திரும்பிப் பார்த்தார்கள்.. ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் நின்றிருந்தான்..

"ஹேய்.. மிஸ்டர் அரவிந்தபூபதி.." என்று தூக்கிக் கொண்ட பூர்ணிமா வித்யாவிடம்..

"இந்தப் பெரிய மனுசன் மகேந்திர அண்ணனின் மகன்.. இவனுக்குக் குட்டித் தங்கை ஒருத்தி இரண்டு வயதில் இருக்கிறாள்.. பூஜாக்குட்டி எங்கேடா.." என்று கேட்டாள்..

"தூங்கிருச்சு.."

"நீ ஏன் தூங்கவில்லை..?"

"உன்னைப் பார்க்கணும்னுதான்.." என்று அவன் கூற பூர்ணிமா பாசத்துடன் அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.. வித்யாவும் அவன் கன்னத்தில் மெல்லத் தட்ட..

"கொஞ்சியது போதும்.. நேரமாகி விட்டது வா தூங்கப் போகலாம்.." என்று கடுமையான குரலில் கூறிய மீனலோசனி மகனை வாங்க கை நீட்ட.. அவளிடம் குழந்தையைக் கொடுக்காமல் கீழே இறக்கி விட்ட பூர்ணிமா.. தாயின் அருகில் வந்து முறுவலித்தாள்..

"அம்மா.. டயர்டா இருக்கு.. நானும் வித்யாவும் தூங்கப் போகிறோம்.. காலையில் பார்க்கிறோம்.." என்று கூறிக்கொண்டு இருக்கும்போது வாசலில் கார் சத்தம் கேட்டது.. சற்று நேரத்தில் புயல் வேகத்துடன் உள்ளே வந்த நரேந்திரன் தங்கையைக் கவனிக்காமல் நேரே வித்யாவிடம் சென்று பதற்றமான குரலில்..

"ஐ ஆம் ஸாரி வித்யா.. இன்றைக்குப் பார்த்து மில்லில் வேலை அதிகமாக இருந்தது.. அதனால் தான் உங்களை ரிஸீவ் பண்ண நான் வீட்டில் இருக்க முடிய வில்லை.. சாயந்திரமிருந்து தவிக்கிறேன் எப்படியும் வந்து விட வேண்டுமென்று.. முடியாமல் போய் விட்டது.. ஐ ஆம் வெரி ஸாரி எகெய்ன்.. சாப்பிட்டீர்களா.. பயணம் சௌகர்யமாய் இருந்ததா.." என்று மூச்சு விடாமல் விசாரித்தான்..

ஒரு நொடியில் மந்திரக் கோலை யாரோ சுழற்றினாற் போல் அந்த சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.. மகேந்திரன் மற்றும் யுகேந்திரனின் விழிகளில் வியப்புடன் ஜாக்கிரதை

உணர்வும் மீனலோசனி மற்றும் பிரபாவதியின் முகங்களில் வித்யாவின் முக்கியத்துவம் உணர்ந்த எரிச்சலும் தோன்றின.. முகம் மாறாமல் இயல்பாய் இருந்தவள் சௌதாமினி மட்டும்தான்..

வித்யாவின் மனதில் அதுவரை இருந்த நிராதரவான ஓர் உணர்வு மறைந்து இதம் பரவியது.. அழையா விருந்தாளி என்பது போல் பூர்ணிமாவின் மற்ற சகோதரர்களும் அவர்களது மனைவிகளும் நடந்து கொள்ள நரேந்திரன் ஒரே வினாடியில் அவளை அந்த வீட்டின் முக்கிய சிறப்பு விருந்தாளியாக்கி விட்டான்.. அவன் துணை இருக்கும் போது இனம் புரியா கலக்கம் மறைந்து போவது புரிய வித்யா மனச் சங்கடம் மறைந்து மனம் லேசாகிச் சிரித்தாள்.. நரேந்திரனின் மனம் உற்சாகமாக இருந்தது.. எத்தனையோ ஜென்ம பந்தம் அவளோடு இருந்தது போல் அவன் உணர்ந்தான்.. அவளது வரவை எதிர்பார்த்து தான் தவித்தது அவனுக்கே புரிந்தது.. அவளது வரவால் அவன் மனம் சிறகை விரித்து சந்தோச வானில் பறந்தது..

12

நதியோரம் நடந்தபோது

நனைத்ததெனை மழைத்தூறல்

இளைப்பாற நிழல் கொடுக்கும்

இதமான மழைச்சாரல்

…நதியோரம் நான் நடந்த போது…

பணக்காரர்கள் அதிலும் ராஜ பரம்பரை போன்ற பாரம்பர்யத்தைச் சேர்ந்த பரம்பரைப் பணக்காரர்களுக்கு சாமானியர்களை மதிக்கத் தோன்றாது.. மற்றவர்கள் தங்களுக்குச் சமமில்லை என்பது அவர்களது ரத்தத்தில்

ஊறிய நினைவு.. தங்களைப் போன்ற மேல்தட்டைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களின் முகம் பார்ப்பது கூடத் தவறு என்று எண்ணத்தை உடையவர்கள்..

நரேந்திரனின் தம்பிகளும் அவர்களது.. மனைவிகளும் இதற்கு விதிவிலக்கல்ல.. பூர்ணிமா வேலையாள்களுடன் இயல்பாக பழகும் சுபாவம் உடையவள்.. அனைவரிடமும் அன்பு பாராட்டுபவள்.. அவளது தோழியென்று உள்ளே நுழைந்த வித்யாவிடம் அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டதில் ஆச்சர்யமில்லை.. ஆனால் நரேந்திரனின் அக்கறைக்கும் அன்புக்கும் அவள் பாத்திரமானவள் என்பதை அறிந்ததும் அவர்கள் மனதில் பொறாமைத் தீ பற்றிக் கொண்டது..

காலையில் எட்டு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் போகும் நரேந்திரன் இரவு பதினோரு மணிக்கு மேல் தான் வீடு திரும்புவான்.. சிலநாள்கள் வரவே மாட்டான்.. இரவு பகல் பாராமல் அவன் வியர்வை சிந்த அவனது திருமணமான தம்பிகளோ காலையில் பதினோரு மணிக்கு பேக்டரிக்கு ஒரு ஆள், மில்லுக்கு ஒரு ஆள் என்று போவார்கள்.. மதியம் ஒரு மணிக்கு 'டாண்' என்று மதியச் சாப்பாட்டிற்கு வந்து விடுவார்கள்.. மூன்று மணிக்கு திரும்பப் போவார்கள்.. மாலையில் சுவர் கடிகாரம் ஐந்து அடிக்கும்போது வீட்டில் ஆஜராகி இருப்பார்கள்.. இத்தனைக்கும் மகேந்திரன் பேக்டரியின் ஜெனரல் மேனேஜர்.. யுகேந்திரன் மில்லின் ஜெனரல் மேனஜர்.. நல்ல வேளையாக நரேந்திரன் இரண்டிற்குமே மேனேஜிங் டைரக்டர் பொறுப்பில் இருந்தான்.. பணச்சிக்கல் எழுந்த சமயத்தில் அந்தப் பதவி முள்ளால் செய்த அரியாசனம் என்பதை அறிந்த இருவரும் கெட்டிக்காரத் தனமாக அண்ணனே இருக்கட்டும் என்று நழுவி விட்டனர்... இப்போது பதவியைக் கைப்பற்ற நேரம் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்..

ஒரு தடவை மூத்த மகனின் உழைப்பைக் கண்டு பரிதாபப்பட்ட சௌதாமினி நரேந்திரன் முன்னாலேயே மற்ற இரு மகன்களைக் கண்டித்தாள்..

"மகி, யுகா.. நீங்கள் இரண்டு பேரும் ஜி.எம்.மாக இருந்து என்ன பயன்..? அண்ணன் தனியாக உழைக்கிறானே..

வேலையைப் பகிர்ந்து கொள்ள வேண்டாமா..?"

உடனே மகnந்திரன் பதில் சொன்னான்..

"அம்மா.. அண்ணனுக்கு என்ன பெண்டாட்டியா.. பிள்ளையா..? வீட்டில் மனைவியைப் பார்க்கணும்.. குழந்தையைப் பார்க்கணும்னு ஓடி வர.."

யுகேந்திரன் மகேந்திரனை மிஞ்சினான்..

"வேலை பார்த்தாலாவது.. அவரது தனிமை மறையும்ன்னுதான் விட்டுக் கொடுக்கிறோம்.."

சௌதாமினி வாயடைத்துப் போனாள்..

'இவர்களும் என் பிள்ளைகளா..? நரேந்திரனைப் பெற்ற வயிற்றில் தான் இவர்களையும் பெற்றேனா..? அவன் வாழ்வைக் குலைத்து விட்டு இவர்கள் என்ன பேச்சுப் பேசுகிறார்கள்..'

மனதிற்குள் பொறுமியவள் அது பற்றி அவர்களிடம் அப்புறம் வாயைத் திறக்கவேயில்லை..

பூர்ணிமாவிற்கு நேர் மூத்தவனான சுரேந்திரன் விளையாட்டுப் பிள்ளை.. அவனைப் பொறுத்தவரை அவன் ஆசைப்படுவான்.. நரேந்திரன் நிறைவேற்றி வைப்பான்.. வெளிநாட்டில் படித்துக் கொண்டிருக்கும் அவனுக்கு பணம் அனுப்ப நரேந்திரன் இன்னும் அதிகம் உழைக்க வேண்டியிருந்தது..

மகேந்திரனையும்.. யுகேந்திரனையும் பொறுத்த வரையில் நரேந்திரன் தனிக்கட்டை.. இனிக் கல்யாணம் என்பது அவன் வாழ்வில் வரப் போவது இல்லை.. இந்தக் குடும்பத்திற்கு உழைக்க வேண்டியது அவனது தலைவிதி.. உல்லாசமாய் வாழ வேண்டியது இவர்கள் தலைவிதி.. அவர்களது மனைவிமார்களின் எண்ணங்களோ கணவன் மார்கள்களை மிஞ்சியிருந்தது.. மீனலோசனி வீட்டின் மூத்த மருமகள்.. பிரபாவதி இளைய மருமகள்.. இனியொரு மருமகள் சுரேந்திரனின் மனைவியாகத்தான் வரவேண்டும் என்பது அவர்களின் அசைக்க முடியாத முடிவு.. இதை

அவ்வப்போது ஆட்டிப் பார்ப்பவள் பூர்ணிமா மட்டும்தான்.. ஆனால் பிரபாவதியின் அண்ணனின் மனைவியாக அவள் ஆகிவிட்டால் அவள் குடுமி தன் கையில்தானே என்ற எண்ணம் பிரபாவதிக்கு..

திடீரென்று வித்யாவின் பிரவேசம் அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.. இரவு அவரவர்களின் பெட்ரூமில் விவாதம் நடைபெற்றது..

"அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்வதைப் பார்த்தால் ஏற்கெனவே பேசிப் பழகியவர்கள் போல் தோன்றுகிறதே.." என்றாள் மீனலோசனி மகேந்திரனிடம்..

"அதுதான் எனக்கும் யோசனையாய் இருக்கிறது.. ஆள்வேறு பார்க்க அழகாக இருக்கிறாள்.." என்று மகேந்திரன் சொல்லி வைக்க அங்கே பூகம்பம் வெடித்தது.

பிரபாவதியோ.. "இதோ பாருங்கள்.. உங்கள் பெரிய அண்ணன் தனிக்கட்டைன்னு நாம் கற்பனைக் கோட்டை கட்டிக்கிட்டு இருப்பதெல்லாம் பொய்யாகப் போகப் போகிறது போல.. அவள் ஆளும்.. முகமும்.. பட்டணத்துக்காரி.. தங்கையைப் பார்க்கப் போகிறேன்னு இவர் போகும்போது வளைத்துப் போட்டு விட்டாள் போல.. பெர்ஸனல் மேனேஜராம்ல்ல.. உங்களைப் மதித்து ஓர் வார்த்தை போடலாமா... வேண்டாமான்னு கேட்டாரா..? ஏதோ எல்லாமே அவர் சொத்து போல அவர் இஷ்டத்துக்கு முடிவெடுக்கிறாரே.." என்று யுகேந்திரனிடம் பொறும அவன் சும்மா இருக்காமல்..

"அவர் தானே உழைத்துக் கடன்களை அடைத்தவர் தானே..? அவருக்குத்தானே முழு உரிமையிருக்கிறது.." என்று தெரியாமல் சொல்லிவிட அவன் அறை குருக்ஷேத்திரமானது..

இவை எதையும் யோசிக்காமல் பூர்ணிமா.. "இதுதாண்டி உனது ரூம்" என்று காட்டிய அறைக்குள் சென்ற வித்யா அதன் அழகையும் அளவையும் கண்டு வியப்புற்றாள்.. சென்னையில் பூர்ணிமாவின் அறையைப் போல பெரிதாக அறையின் நடு மையத்தில் பிரம்மாண்டமான பெரிய

கட்டிலும் அதன் மேல் படுத்தால் ஆள் உள்ளே அமுங்கி விடுவது போல் மிருதுவான மெத்தையும் போடப்பட்டு புது தலையணை, மெத்தை விரிப்புகளுடன் இருந்தது.. சற்றுத் தள்ளி சோபா போடப் பட்டு எதிரில் டீபாய் இருந்தது.. அறையின் மூலையில் டேபிள்.. சேர் இருந்தன.. அறையை ஒட்டி இருந்த மற்றொரு அறையைத் திறந்து பார்த்தாள்.. அது உடை மாற்றும் அறை, அதை ஒட்டிய கதவைத் திறந்தால் அட்டாச்டு பாத்ரூம்.. ஹீட்டர் வசதியுடன் இருந்தது.. உடை மாற்றும் அறையில் சுவரில் பதித்த மர அலமாரிகளும்.. ஆளுயுரக்கண்ணாடியும் அதன் முன் டீபாயும் இருந்தன..

வித்யா அறையின் பெரிய ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள்.. வீட்டின் பின்புறம் ஓடிய ஆறு தெரிந்தது.. சற்று நேரம் அதையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.. அறையின் வழி தோட்டம் தெரிந்தது.. ஆற்றோரக் காற்று அலையலையாய் உடல் மேல் படிந்தது..

'இந்த அறைக்கு ஏஸி தேவையே இல்லை' என்று நினைத்துக் கொண்டாள் வித்யா.. ஆனால் அந்த அறை ஏஸி வசதியுடன் இருந்தது.. உடம்பு அயர்வாய் இருக்க பெட்டிகளை காலையில் பிரித்து அடுக்கலாம் என்ற முடிவுடன் படுத்தவள் உறங்கி விட்டாள்..

வழக்கம் போல் அதிகாலையில் விழித்துக் கொண்டவள் பல் துலக்கி முகம் கழுவி விட்டுப் பெட்டிகளைத் திறந்து துணிகளை உடை மாற்றும் அறையிலிருந்த சுவர் அலமாரிகளில் அடுக்கினாள்.. அதிலிருந்த லாக்கரில் சான்றிதழ்கள் மற்றும் நகைப் பெட்டியை வைத்து மூடியவள் பூட்டி சாவியை எடுத்துக் கைப்பையில் வைத்துக் கொண்டாள்.. அறையின் காலிங் பெல் அலற கதவு திறந்தாள்.. பூர்ணிமா கையில் காபிக் கோப்பைகளுடன் நின்று கொண்டிருந்தாள்..

"ஏண்டி.. நீயே காபி கொண்டு வரணுமா..?"

"இது உனக்குப் புது இடமில்லையா..? பழகும்வரை நான் கூட இருக்க வேண்டுமில்லையா..?"

தோழியின் கனவில் மனம் நிறைந்தவள் காபியை வாங்கிப் பருகியபடி அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்.. பூர்ணிமா அருகே அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருக்க அறை வாசலில், "மே ஐ கமின்..?" என்ற குரல் கேட்டது.. திரும்பிப் பார்த்தனர்.. நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்.. வித்யா முகம் சிவந்து போனாள்.. அவள் நைட்டியில் இருந்தாள்.. தலைப் பின்னலை அவிழ்த்து விரியப் போட்டிருந்தாள்.. நெற்றியில் பொட்டிருக்கிறதா.. இல்லையா என்று மனதிற்குள் கவலையுற்றாள்.. முழங்கால்களுக்கு கீழ் தொங்கும் அவளது நீண்ட தலை முடியை ரசித்தபடி உள்ளே வந்தவன் எதிரேயிருந்த மற்றொரு சோபாவில் அமர்ந்தான்..

"வித்யாவுக்கு காபி அனுப்பியாச்சான்னு கீழே சமையலறையில் போய் கேட்கப் போனேன்.. நீ கொண்டு வந்து விட்டதாகச் சித்தி சொன்னாங்க.. தேங்க்ஸ்.." என்றான் பூர்ணிமாவிடம்..

"தோடா.. நானும் பார்க்கிறேன்.. வித்யா பாராயணம் பலமா இருக்கு.. நேற்று ராத்திரி என்னன்னா நான் வந்ததையே கவனிக்கவில்லை.. வித்யாகிட்ட விழுந்து விழுந்து விசாரிப்பு.. இப்ப என்னன்னா விழுந்து விழுந்து உபசரிப்பு.. அண்ணா.. அவள் என் தோழி.. அது நினைவிருக்கட்டும்.." என்றாள் பூர்ணிமா..

"ஆனால் நம் வீட்டில் காலடி வைத்த பின்னால் வித்யா என் பொறுப்பு.." உண்மையான அக்கறையுடன் இதைக் கூறினான் நரேந்திரன்.. அதைக் கேட்ட இரு பெண்களின் மனதிலும் சிலிர்ப்பு ஓடியது.. அண்ணனின் வாழ்விலும் தென்றல் வீசுமா..? என்ற ஏக்கம் பூர்ணிமாவிற்கு.. தன் வாழ்வில் அவன் காதல் கிட்டுமா..? என்ற ஏக்கம் வித்யாவிற்கு..

"வித்யா குளித்து உடை மாற்றிக் கொண்டு சீக்கிரம் கிளம்பி வா.." என்றான் நரேந்திரன்..

"ஏன் அண்ணா இந்த அவசரம்.." என்று வினவினாள் பூர்ணிமா..

"எட்டு மணிக்கெல்லாம் நான் ஆபிஸ் போகணும்.. மறந்து விட்டதா.. வித்யா என்கூடவே வந்து பழகட்டும்.. என்றான் நரேந்திரன்.."

"இல்லை.. சா.. நரேன்.. நான் தனியாக வந்து கொள்கிறேன்.. என் ஸ்கூட்டியை விற்று பணம் கொண்டு வந்திருக்கிறேன்.. இங்கே ஏதாவது வண்டி வாங்கிக் கொள்கிறேன்.." என்றாள் வித்யா..

"இதுபோல முட்டாள்தனமாய் அம்மா முன்னாலும் மற்றவர்கள் முன்னாலும் நீ பேத்தக் கூடாது என்று தான் விழுந்தடித்து ஓடி வந்தேன்.. அது போலவே பேத்துகிறாய்.." என்று எரிந்து விழுந்தான் அவன்..

"பேத்தலா..?" முகம் சிவந்தது வித்யாவிற்கு..

"பேத்தல்தான்.. வேறு என்ன..? வித்யா இது சென்னையில்லை.. மணிமுத்தாறு.. சற்று பெரிய கிராமம்.. என் பேக்டரியும்.. மில்லும் அம்பாசமுத்திரத்தில் இருக்கிறது... அதுவும் சென்னை போல் பெரிய சிட்டியில்லை. இங்கே உன்னை தனியாக டிராவல் பண்ண நான் அனுமதிக்க முடியாது.. உன் கொள்கைகள் எல்லாம் மணிமுத்தாறு எல்லையோடு முடிந்து போய் விட்டது.. இனி என் கொள்கைப்படி நடக்கப் பழகு.. என் வீட்டில் இருந்து கொண்டு நீ தனியே.. நான் தனியே போய் வர முடியாது.. அது உனக்கு மதிப்பையும் அளிக்காது.."

"நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை சா.. நரேன்.."

"நான் கவலைப்படுகிறேன்.. மணிமுத்தாறில் நீ இருக்கும் ஒவ்வொரு வினாடியிலும் என் நிழலில்தான் இருக்க வேண்டும்.. இது என் கட்டளை..."

அவன் விர்ரென்று எழுந்து போய் விட்டான்.. பூர்ணிமா அவர்களின் வாக்குவாதத்திற்கும் அவளுக்கும் சம்பந்தமில்லாதது போல் மிகச் சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.. வித்யா அவளை முறைக்க கைகளை விரித்துத் தோளைக் குலுக்கி..

"உன் பாடு.. பெரியண்ணன் பாடு.. ஆனால் ஒன்று.. நீ பூர்ணிமாவைத்தான் அரட்ட முடியும்.. நரேந்திரனிடம் உன் பாச்சா பலிக்காது.." என்றாள்..

பூர்ணிமா சென்று விட அறைக் கதவை அடைத்து விட்டு குளிக்கப் போனாள் வித்யா.. முதல் நாள் என்பதால் அரக்கு சிவப்பில் ஜரிகைக் கரையிட்ட காட்டன் புடவையை உடுத்திக் கொண்டவள் அதே புடவையில் வெட்டித் தைத்த அட்டாச்டு பிளவுஸை அணிந்து கொண்டாள்.. அழகாய் தலை வாரிப் பின்னலிட்டவள் தன்னிடமிருந்த நகைப் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.. எல்லா வண்ணங்களிலும் கல் பதித்த தோடுகள் தொங்கட்டான் களுடன் அவளிடம் இருந்தன.. அரக்குச் சிவப்புக் கல் செட்டைக் காதில் போட்டுக் கொண்டவள்.. அம்மாவின் சிகப்புக் கல் அட்டிகையை கழுத்தில் போட்டுக் கொண்டாள்.. கைப்பையை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தவள்..

"ரூம் கதவை மூடி சாவியை எடுத்துக் கொள்" என்ற பூர்ணிமாவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.. தோழியின் அருகே வந்து அவளது அழகை "வாவ்" என்று ரசித்தவள்..

"இங்கே ஒவ்வொரு ரூமும் தனித்தனி போர்ஷன் மாதிரி வித்யா.. அவரவர் பகுதி இது.. பூட்டி சாவியை எடுத்து ஹேண்ட் பேகில் போட்டுக் கொண்டு போய்விடு.. ஏனென்றால் இந்த வீட்டு மருமகள்களுக்கு அடுத்தவர் ரூமை ஆராய்ச்சி பண்ணும் குணம் நிறைய உண்டு.." என்று கூறினாள்..

வித்யா அறையைப் பூட்டி சாவியை கைப்பையில் போட்டுக் கொள்ள இருவரும் கீழே இறங்கி பேசிக் கொண்டே சாப்பாட்டு அறைக்குப் போனார்கள்.. அங்கே சௌதாமினியும் மற்றவர்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்க நரேந்திரன் மட்டும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருந்தான்.. அதை ஜாடையாய் பார்த்த சௌதாமினி மனம் குளிர, மற்றவர்கள் வயிறு எரிந்தனர்.. பூர்ணிமாவும், வித்யாவும் வரவும் அவர்களுடன் பேசிக்

கொண்டே நரேந்திரன் சாப்பிட்டு முடிக்க.. கிளம்பும் போது வித்யா..

"ஒரு நிமிடம்.. இங்கே பூஜையறை எங்கே இருக்கிறது..?" என்று கேட்டாள்.. நரேந்திரன் வியப்புடன் கைகாட்ட.. சென்று கண்மூடி வேண்டிக் கொண்டவள் அவன் அருகே வந்து..

"போகலாமா..?" என்று கேட்டாள்.. கவனமாய் அவளுக்கு காரின் முன் கதவைத் திறந்து விட்டவன் சுற்றி வந்து டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்டான்.. பூர்ணிமா விற்குக் கை ஆட்டி விட்டுக் கிளம்பினார்கள்..

நதியோரம் சென்ற பாதையில் அவர்களது கார் சென்றது.. எண்ணம் கவர்ந்தவனின் அருகே அமர்ந்து சென்ற ஏந்திழையின் வாழ்வில் புது அத்தியாயமும் ஆரம்பித்தது..

13

நதியோரம் நடந்தபோது

நந்தவனம் கண்டு சென்றேன்

பூவெல்லாம் உன் முகமாய் தோன்ற

புன்னகையை என் நகையாய் கொண்டேன்

...நதியோரம் நான் நடந்த போது...

அகன்று விரிந்து ஓடிய நதியின் அருகேயுள்ள பாதையில் கார் சென்று கொண்டிருந்தது.. நதி நீரில் குளிப்பவர்களையும், துணி தோய்ப்பவர்களையும் நதிக்கரை நாணல்களையும் பார்த்தபடி சிலுசிலுவென்ற காற்றையும் சுகமாய் ரசித்து அனுபவித்துக் கொண்டு வந்தாள் வித்யா.. அவளது முகத்திலிருந்த ஆர்வத்தை ஜாடையாய் பார்த்த நரேந்திரன்..

"ஆறு என்றால் பிடிக்குமா..?" என்று கேட்டான்..

"ரொம்பப் பிடிக்கும்.. யு ஸீ.. நான் இதுவரை ஆற்றையே பார்த்ததில்லை.. இங்கே அருவி வேறு இருக்கிறதாமே.. அதையெல்லாம் சினிமாவிலும்.. சீரியலிலும்.. விளம்பரங்களிலும் பார்த்ததுதான்.."

"ஓ.. நான் இந்த ஆற்றங்கரையில் பிறந்து வளர்ந்தவன்.. வாரம் ஒரு முறையாவது அருவியில் குளியல் போடுபவன்.. இந்த ஆறு எனக்கு பிரண்ட் மாதிரி.. வித்யா.."

"அப்படியா..?" என்று புரிந்து கொண்டவளாய் வித்யா கூறினாள்..

"ஆமாம்.. மனம் சரியில்லாதபோது ஆற்றங்கரைக்கும்.. அருவிக் கரைக்கும் போய் விடுவேன்.. இந்த வார இறுதியில் உன்னை அருவிக்குக் கூட்டிப் போய் காட்டுகிறேன்.."

"தேங்க்யூ.." என்று உண்மையான மகிழ்வுடன் கூறினாள் வித்யா..

"தேங்க்ஸ் எதற்கு..?"

"இல்லை.. பூர்ணிமாவைக் கூப்பிட்டுக் கொண்டு போக எனக்குச் சங்கடமாக இருக்கிறது.. சென்னையில் அவள் என் தோழி மட்டும்தான்.. இங்கே உங்கள் வீட்டுப் பெண்.. அவளை அருவிக்கரைக்கு கூப்பிட்டால் ஆன்ட்டி ஒன்றும் சொல்ல மாட்டார்கள்.. ஆனால் மற்றவர்கள்.."

"சந்தேகமே வேண்டாம்.. நிச்சயம் ஏதாவது சொல்வார்கள்.."

"அதனால்தான்.. நான் தனியே எங்கேயும் போய் பழக்கமில்லை.. 'ஆபிஸ் போகவில்லையா..?' என்று கேட்காதீர்கள்.. அது வேறு, இது வேறு.."

"புரிகிறது.. பட் வித்யா ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்.. பூர்ணிமா வந்தாலும் நான் உடன் வருவேன்.. ஏனென்றால் நான் முன்னாலேயே சொன்னது மாதிரி இங்கு இருக்கும் வரை நீ என் பொறுப்பு.. என் நிழலை விட்டு நகர அனுமதிக்க மாட்டேன்.."

வித்யா உதடு மடித்துக் கடித்து.. உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வந்தாள்.. அவளது மனவோட்டத்தை அறியாதவனாய் நரேந்திரன் பேசிக் கொண்டு வந்தான்..

"நீ வந்ததில் எனக்கு மிகவும் சந்தோசம் வித்யா.. எனக்காக, என் வார்த்தையை மதித்து நீ உன் வேலையைக் கூட.. அதிலும் எவ்வளவு உயர்வான வேலை அது.. விட்டு விட்டு வந்திருக்கிறாய்.. அதற்கு ஈடே கிடையாது வித்யா.. அம்மாவின் தாய்ப்பாசத்திற்கு எவ்வாறு விலை கிடையாதோ.. அது போல்தான் உன் பாசத்திற்கும் விலை கிடையாது.."

வித்யா தலை குனிந்து கண்ணீரை அடக்கிக் கொண்டாள்..

'இந்த ஒரு வார்த்தை போதும் தெய்வமே..! என் மனதுக்கினியனின் மனம் மகிழச் செய்து விட்டேன்.. என்னால் முடிந்த ஆறுதலையும் தர முடியுமானால் உனக்குக் கோடி நன்றி சொல்வேன்..'

அம்பாசமுத்திரத்திறகுள் கார் நுழைந்தது.. பேக்டரியை அடைந்ததும் அவன் இறங்கி அவசரமாய் கார் கதவைத் திறக்க வருவதற்குள் வித்யாவே கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.. மிகப் பெரிய தொழிற்சாலையின் வாயிலில் நிற்பதை உணர்ந்தவளாய் அதை பிரமிப்புடன் பார்த்தாள்..

'எவ்வளவு பெரிய தொழிற்சாலை..! இதன் முதலாளியா அவளை அருகே அமர வைத்து ஒரு நண்பன் போல பேசிக் கொண்டு காரை ஓட்டி வந்தான்.. இதன் உரிமையாளர்களாய் இருக்கும் மகேந்திரனுக்கும்.. யுகேந்திரனுக்கும் ஏன் கர்வம் வராது..?'

"வா வித்யா... ஏன் வாசலிலேயே நின்று விட்டாய்..?" என்று அவளது ஆச்சர்யத்தை உணராதவனாய் நரேந்திரன் அழைத்தான்.. தன்நிலைக்கு வந்தவளாய் அவள் அவனைப் பின் தொடர அவனோ நடையின் வேகத்தை மட்டுப்படுத்தி அவளுக்கு இணையாக நடந்து வந்தான்.. வழியில் தென்பட்டவர்கள்.. அமர்ந்து வேலை செய்தவர்கள் அனைவரும் 'வணக்கம், குட்மார்னிங்' என்று கூற

பதிலுக்கு தலை அசைத்து அதை ஏற்றுக் கொண்டபடி தன் அறைக்குச் சென்றவன் இன்டர்காமில் தன் செயலாளரை அழைத்தான்..

"சார்.." என்றபடி உள்ளே வந்தான் குகன்.. நரேந்திரனின் உதவியாளன்..

"குகன், நம் பேக்டரி போர்மேன்களையும்.. சூப்பர் வைசர்களையும் அவசர மீட்டிங் என்று கான்பரன்ஸ் ஹாலுக்கு வரச்சொல்.. க்விக்.. இன்னும் பதினைந்து நிமிடத்தில் அனைவரும் என் முன் இருக்க வேண்டும்.." என்று உத்தரவிட்டான்..

"சரி சார்.." என்றபடி மின்னலாய் மறைந்தான் குகன்.

"இதைப் படித்துப் பார் வித்யா.." என்று 'கான்பிடன்ஷியல்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஃபைல் ஒன்றைத் தூக்கி அவள் கையில் கொடுத்தான் நரேந்திரன். வித்யா அதை ஊன்றிப் படிக்க ஆரம்பித்தாள்.

"இது நம் ஆபிஸில் வேலை செய்பவர்களின் ஜாதகம்.. அவர்களது வேலை.. குடும்ப விவரம்.. மற்ற செய்திகள் என்று அனைத்தும் இதில் இருக்கும்.. படித்து கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத்துக்கொள்.. பெர்ஸனல் மேனேஜர் பதவி என்பது நிர்வாகத்தின் முதுகு எலும்பு போல்.. முக்கிய முடிவுகளை நீதான் எடுக்க வேண்டும்.. தொழிலாளர் நிர்வாகம் இரண்டுக்கும் பாலமாய் இருக்க வேண்டும்.. உன் புத்திசாலித்தனத்தை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை உன் வசம் ஒப்படைக்கிறேன்.. இங்கே நீ எல்லாவற்றையும் கற்றுக் கொண்டால் நான் நிம்மதியாய் மில்லை மட்டும் கவனிப்பேன்.. என் வேலைப்பளு மிகவும் குறையும்.."

வித்யாவின் மனதில் அவன் கடைசியில் சொன்ன வார்த்தைகள் அழுந்தப் பதிந்தன.. மனதில் திடத்துடன் ஃபைலை மீண்டும் படிக்க ஆரம்பித்தாள் அவள்.. தொழிலாளர்கள் வேலை, தகுதி வாரியாகப் பிரித்து அடிமட்ட ஊழியரிலிருந்து ஆரம்பித்து மேனேஜிங் டைரக்டரான நரேந்திரன் வரை அனைவரைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் போட்டோவுடன் அதில் இருந்தது..

அறைக்கதவு தட்டப்பட, "யெஸ் கமின்.." என்றான் நரேந்திரன்.. குகன் உள்ளே நுழைந்தான்..

"சார் எல்லோரும் கான்பரன்ஸ் ஹாலுக்கு வந்து விட்டார்கள்.." என்றான்..

"குட்" என்றபடி எழுந்து கொண்ட நரேந்திரன்..

"குகன், மீட் மிஸ் வித்யா.. இன்றிலிருந்து நம் பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜர்" என்றான்..

அதுவரை அலுவலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் எம்.டியுடன் வந்திருக்கும் அழகான பெண் யார் என்ற ஆராய்ச்சியிலிருப்பதை கவனித்தவன் தானும் அந்த யோசனையிலிருந்தான்.. நரேந்திரன் அறிமுகப்படுத்தவும் 'ஆ'வென்று வாய் பிறந்தவனாய்.

"குட் மார்னிங் மேடம்-நான்தான் குகன்.. எம்.டி.சாரின் பெர்ஸனல் செகரட்டரி.." என்றான்..

"இனிமேல் பெர்ஸனல் மேனேஜருக்கும் நீதான் பெர்ஸனல் செகரட்டரி.. புரிந்ததா..?" என்ற நரேந்திரன் அவளிடம் திரும்பி..

"வா வித்யா.." என்று அழைத்தான்..

வித்யாவை ஒருமையில் தன் முதலாளி அழைப்பதை மனதிற்குள் குறித்துக் கொண்ட குகன் அவர்களுக்கு முன்னால் விரைந்து கான்பரன்ஸ் ஹாலுக்குள் சென்றான்.. பல குரல் கலந்த கலவையொலி ஓங்கி ஒலிக்க நரேந்திரனும் வித்யாவும் உள்ளே நுழைந்ததும் குண்டூசி போட்டால்கூட கேட்பதுபோல் நிசப்தம் வந்தது..

ஒரு மாநாடு நடத்தலாம் போன்ற நீண்ட பெரிய அறையில் சேர்கள் போடப்பட்டிருக்க அதில் போர்மேன் களும், சூப்பர்வைசர்களும் அமர்ந்து இருந்தனர்.. முன்னால் போடப்பட்டிருந்த டேபிளின் பின்னால் போடப்பட்டிருந்த சேர்களில் ஒன்றில் நரேந்திரன் அமர்ந்து கொள்ள அருகில் வித்யா அமர்ந்தாள்.. குகன் கைகளைக் கட்டியபடி அருகில்

நின்றான்.. டேபிள் மேலிருந்த மைக்கில் நரேந்திரன் பேச ஆரம்பித்தான்..

"என் பேக்டரியின் சூப்பர்வைசர்களுக்கும்.. ஃபோர்மேன்களுக்கும் ஒரு முக்கிய தகவலைத் தெரிவிப்பதற்காக இங்கே வரச் சொல்லியிருக்கிறேன்.. இதோ அமர்ந்திருக்கும் வித்யாதான் உங்களின் புதிய பெர்ஸனல் மேனேஜர்.. இனி பேக்டரியின் நிர்வாகம் அவர்கள் பார்வையின் கீழ் இயங்கும்.. உங்களது அனைத்து வேண்டுகோள்களையும், குறைகளையும் அவர்களிடம் தான் நீங்கள் சொல்ல வேண்டும்.. இனி உங்களை நீங்கள் அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்.."

எல்லோரின் முகத்திலும் வியப்புக்குறி.. 'இந்தச் சிறு பெண்ணா நம்மை நிர்வகிக்கப் போகிறாள்..?' என்ற அவ நம்பிக்கை சிலர் மனதில் எழுந்தது.. எதையும் வெளிக் காட்டிக் கொள்ளாமல் வரிசையாய் அனைவரும் வந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரவர் இருக்கைக்குச் சென்றனர்.. அடுத்து வித்யா மைக்கில் பேசினாள்..

"என்னடா ஒரு சிறு பெண்ணா நம் பெர்ஸனல் மேனேஜர் என்று உங்களுக்குத் தோன்றும்.." என்று அவள் ஆரம்பிக்க அந்த நினைவோடு இருந்தவர்களின் முகத்தில் வியப்புக் குறி.. 'ஏது பெண் ரொம்ப உஷார் பேர்வழிதான்..' என்று நினைத்துக் கொண்டார்கள்.. வித்யா தொடர்ந்தாள்..

"என்னை ஓர் சிறு பெண்ணாய் பார்க்காதீர்கள்.. உங்களது பெர்ஸனல் மேனேஜர் என்ற முறையில் பாருங்கள்.. என் பதவிக்காலத்தில் நான் நிச்சயம் உங்களில் ஒருத்தியாகச் செயல்படுவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.. கடமையைச் செய்வோம்.. பலன் நிச்சயம் கிடைக்கும்.. உங்கள் அனைவருக்கும் என் வந்தனங்கள்.. என் வேலையை நான் சிறப்பாகச் செய்ய உங்கள் அனைவரின் துணையும் ஒத்துழைப்பும் எனக்கு வேண்டும்.." என்றவர் சற்று இடைவெளிவிட்டு.. "கிடைக்குமா..?" என்று கேட்டாள்..

"கிடைக்கும்.. நிச்சயம் கிடைக்கும்.." என்ற குரல்கள் எழுந்தன..

நரேந்திரன் புன்னகையோடு நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டு இருந்தான்.. ஒரு நிமிடத்தில் பேக்டரியில் உள்ளவர்களை வித்யா வசீகரித்த விதத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்டான்.. டேபிளில் கை வைத்திருந்தவளின் கரத்தின் மீது அவன் பார்வை ஓடியது.. சிவந்த அழகான வாழைத்தண்டு போன்ற கரங்கள்.. அதில் விளையாடும் பொன் வளையல்கள்.. தன் அழகை உணராத அடக்கம்.. அறிவு தந்த நிமிர்வு.. சாயம் பூசாத முகம்.. வெட்டி விடப்படாத நீண்ட கூந்தல்.. எதிராளியை நொடியில் வசப்படுத்தும் புத்தி சாதுர்யம்.. இவை அனைத்தும் ஒரே பெண்ணிடம் குடிகொண்டு இருக்கும் விந்தையை எண்ணி வியந்தான்.. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத பேரழகி என்றுதான் அவளை இதுவரை நினைத்திருந்தான்.. கேட்கக் கேட்கத் தெவிட்டாத தேன்மொழிகளைப் பேசவும் அவளால் முடியும் என்பதை இன்றுதான் அறிந்தான்.. படபடவென்ற கைதட்டல்கள் அவனை நடப்புலகுக்கு கொண்டு வந்தன..

எல்லோருக்கும் டீ விநியோகம் செய்யப்பட்டது.. உற்சாகமாய் புது பெர்ஸனல் மேனேஜரைப் பற்றிப் பேசிக் கொண்டு அனைவரும் கலைய குகன் அருகில் வந்து..

"பெண்டாஸ்டிக் மேடம்" என்றான் பாராட்டுதலாய்..

"தேங்க் யூ மிஸ்டர் குகன்.. எனக்கு அட்மினிஸ்ட் ரேடிவில் எத்தனை செக்ஷன்.. அவர்கள் பயோ டேட்டா எல்லாம் வேண்டுமே.."

"கம்ப்யூட்டரில் பதிவு பண்ணியிருக்கிறோம் மேடம்.. சி.டி.யைக் கொண்டு வந்து தருகிறேன் மேடம்.."

"வெல்.. அப்புறம் பேக்டரியின் அக்கவுண்ட்ஸ் சம்பந்தப்பட்ட அனைத்து ஃபைல்களும், சி.டிக்களும் எனக்கு வேண்டும்.."

"தருகிறேன் மேடம்.."

"இன்றைக்கு முழுவதும் ஃபைல்களையும், சி.டி.க் களையும் பார்த்து விடுகிறேன்.. நாளை பேக்டரியின் அட்மினிஸ்ட்ரேடிவ் அன்ட் லேபர் சைட் இரண்டையும் சுற்றிப் பார்த்து விடலாம்.."

வித்யா வேகமாகச் செயல்பட்டாள்.. நரேந்திரன் சரியான ஆளிடம் பொறுப்பை ஒப்படைத்த நிம்மதியுடன் மில்லுக்கு கிளம்பிப் போய் விட்டான்.. மற்ற நாள்களாக இருந்தால் மாலையில் தான் மில்லுக்குப் போவான்.. இன்று வித்யாவின் செயல்பாட்டிலிருந்த கூர்மை அவனது வேலைப்பளுவைக் குறைக்க கிளம்பிப் போய் விட்டான்.. 'எள்' என்று சொல்லும் முன் 'எண்ணெ'யாக குகன் அவள் கேட்டவற்றைக் கொண்டு வந்து வித்யாவின் டேபிளை நிரப்பினான்..

எம்.டியின் அறைக்குப் பக்கத்திலேயே பெர்ஸனல் மேனேஜர் அறையும் இருந்தது.. ஜெனரல் மேனேஜரின் அறை மிகவும் தள்ளி நவீனமாக அமைந்திருந்தது.. மகேந்திரன் தான் வருவதையும் போவதையும் தன் செயல்பாடுகளையும் நரேந்திரன் அறிவதை விரும்புவ தில்லை.. எனவே மிகத் தள்ளி தன் அறையை அமைத்துக் கொண்டிருந்தான்.. அத்தோடு தனக்கென்று உளவு சொல்ல தனக்கு சாதகமாகச் செயல்பட ஒரு குழுவையே பேக்டரியில் உருவாக்கி வைத்திருந்தான்.. அதனால் மகேந்திரன் சாவகாசமாய் பதினொன்றரை மணிக்கு பேக்டரி வந்த சேரும்போது வித்யா அனைத்து ஃபைல் களையும் பார்த்துவிட்டு அக்கவுண்ட்ஸை ஆராய ஆரம்பித்து இருந்தாள்.. அதே நேரத்தில் மகேந்திரனுக்கு வித்யா வந்ததில் இருந்து பேக்டரியில் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் தெரியப் படுத்தப்பட்டது.. அவன் கொதித்துப் போனான்.. குகனை அழைத்துச் சத்தம் போட்டான்..

"யாரைக் கேட்டு அக்கவுண்ட்ஃ பைலையெல்லாம் அவள் கிட்ட கொடுத்தே..."

'அவளா' என்று மனதிற்குள் வெகுண்ட குகன் அவன் தன்னை ஏகசவனத்தில் பேசியதை சகித்துக் கொண்டவனாய்..

"நான் அவங்களுக்குக் பெர்ஸனல் செகரட்டரி சார்.. அவங்க கேட்டதைக் கொடுப்பதுதான் என் வேலை.." என்றான் அசையாமல்..

'இவனை மட்டும் தன் வழிக்குக் கொண்டு வரவே முடியவில்லையே..' என்று பல்லைக் கடித்துக் கொண்ட மகேந்திரன்..

"அவள் கேட்டால் இந்த பேக்டரியையே எழுதிக் கொடுத்துருவியா..?" என்று வெகுண்டான்..

"நான் எப்படி சார் அதைச் செய்ய முடியும்..? நான் சாதாரண கூலிக்காரன்.. உங்கள் அண்ணன்தானே எம்.டி அவர்தான் அதைச் செய்ய முடியும்.." என்று குத்தலாய் பதில் சொன்னான் குகன்..

"அப்படியானால் எனக்கு இந்த பேக்டரியில் உரிமை யில்லையென்று சொல்கிறாயா..? உனக்கு எவ்வளவு தைரியம்..?"

"நீங்கள் கேட்டதற்கு பதில் சொன்னேன் சார்.."

"நீ என் கண் முன் நிற்காமல் வெளியே போய்விடு.."

'போகாமல் உன் முன் நிற்கவா ஆசைப்படுவேன்..?' என்று மனதில் நினைத்தவனாய் வெளியே வந்தான் குகன்.. அவன் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.. மகேந்திரன் ஏனிந்த பேயாட்டம் போடுகிறான் என்பதை அவன் அறிவான்..

வித்யா அக்கௌண்ட்ஸ் ஃபைல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.. அதுதான் மகேந்திரன் கொட்டில்லாமலே ஆடக் காரணம்.

ஏன் மகேந்திரன் அக்கௌண்ட்ஸ் ஃபைல்களை வித்யா பார்ப்பதை விரும்பவில்லை என்ற காரணத்தை அப்போது வித்யா கண்டு பிடித்திருந்தாள்.. விளைவு.. நரேந்திரன் மதிய உணவை வித்யாவுடன் சேர்ந்து உண்ண பேக்டரிக்கு வந்தபோது மகேந்திரன் வித்யாவுடன் மோதிக் கொண்டிருந்தான்..

14

நதியோரம் நடந்தபோது

நிழல்போலே கூட வந்தவளே!

ஏழேழு ஜென்மத்திலும் என்னுடனே

இணை பிரியாமல் நீ வருவாயா?

...நதியோரம் நான் நடந்த போது...

பேக்டரியின் கணக்குகளில் அனாமத்து கணக்கு என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.. கணிசமான பெருந்தொகை அந்தக் கணக்கில் கொண்டு செல்லப்பட்டிருந்தது.. வித்யா குகனை அழைத்தாள்..

"யெஸ் மேடம்.."

"அக்கவுண்டன்டைக் கூப்பிடுங்கள்.."

'கண்டு பிடித்து விட்டாள்' என்பதை அறிந்து கொண்டவனின் மனதில் 'அதற்குள்ளாகவா.. வாவ்..

மகா புத்தி சாலிதான்..' என்ற மதிப்பு உதித்தது.. அக்கௌண்டன்ட் பூங்காவனம் வந்தான்..

"கூப்பிட்டீங்களாமே.." என்று அலட்சியமாய் கேட்டான்..

"இது என்ன அனாமத்துக் கணக்குன்னு ஒண்ணு ஓப்பன் ஆகியிருக்கு.. இதன் டீடெய்ல வேண்டுமே.."

"அதுவே அனாமத்து.. அதில் என்ன டீடெய்ல் வேண்டியிருக்கு.."

"சார்.. அதில் போடப்பட்டு இருப்பது கோடிக்கணக்கான ரூபாய்கள்.. எனக்கு டீடெய்ல்ஸ் தெரிய வேண்டும்.."

"சாரி மேடம்.. இதை நீங்கள் ஜி.எம்.மிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.." அவன் அவள் உத்தரவில்லாமலேயே வெளியேறினான்..

வித்யாவின் முகம் கோபத்தில் சிவந்தது.. எவ்வளவு திமிராய் நடந்து கொள்கிறான்..? யோசனையாய் ஃபைலின் அடுத்த பக்கத்தைப் புரட்டியபோது அறைக்கதவு படாரென்று திறக்கப்பட்டது.. மகேந்திரன் கோபாவேசமாய் அவள் எதிரில் வந்து நின்றான்..

"அக்கவுண்டன்டை கேள்வி கேட்டாயா..?"

வித்யா திகைத்துப் போனாள்.. இது என்ன புதுக்குழப்பம்..? கிணறு வெட்டினால் பூதம் கிளம்புகிறது.

"ஆமாம்.."

"நீ யார் அவனைக் கேட்க..?"

"இந்த பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜர்.."

"நான் யார் தெரியுமா..?"

"தெரியுமே.. இதே பேக்டரியின் ஜி.எம்.."

"எவ்வளவு திமிர் உனக்கு.. நான் இதன் முதலாளி.."

"நீங்கள் இதன் முதலாளிபோல் நடந்து கொள்ள வில்லையே.."

"என்ன உளருகிறாய்..?"

"உண்மையைச் சொல்லகிறேன்.. கம்பெனியின் பணம் அனாமத்தாக செலவாகி இருக்கிறது.. ஒன்றல்ல.. இரண்டல்ல.. பலகோடி ரூபாய்கள்.. அது என்ன கணக்கு என்று தெரிய விரும்பாமல், தெரிய வேண்டும் என்று நான் நினைப்பதையும் விரும்பாமல் இருக்கிறீர்களே.. உங்களை வேறு என்ன சொல்வது..?"

"ஏய்ய்.." என்று வித்யாவின் முன் விரல் நீட்டி மகேந்திரன் எச்சரிக்கைக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் போது அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்த நரேந்திரன் அந்தக் காட்சியைக் கண்டதும் அதிர்ந்து விட்டான்..

"மகி.. வாட் இஸ் திஸ்..? ஒரு பெண்ணிடம் நடந்து கொள்ளும் முறையா இது..? சீச்சீ.. உன்னிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை.. குகன்.. குகன்.."

"சார்.." என்றபடி உள்ளே வந்தான்.. அதுவரை வெளியே நின்று கொண்டு உள்ளே நடந்தவைகளை செவி மடுத்துக் கொண்டிருந்த குகன்..

"இங்கே என்ன நடக்கிறது..?"

"சார் மேடம் அக்கௌண்ட்ஸ் ஃபைல்களைக் கேட்டார்கள்.. கொடுத்தேன்.. கணக்கில் ஏதோ சந்தேகமென்று பூங்காவனத்தைக் கூப்பிட்டுக் கேட்டார்கள்.. அதற்காகத்தான் ஜி.எம். சார் கோபித்துக் கொண்டிருக்கிறார்..."

"மகி.. வித்யா செய்ததில் என்ன தவறு..? அவள் வேலையைத் தானே அவள் செய்கிறாள்..?"

"செய்யட்டும்.. தாராளமாய் செய்யட்டும்.. ஆனால் அவளது லிமிட் எதுன்னு தெரிந்துக்கிட்டுச் செய்யட்டும்.."

"என்னது 'அவளா?' மகி.. முதலில் மரியாதையாய் பேசு.."

"நீங்களும் அவள்ன்னு சொன்னதாகத்தான் ஞாபகம்.."

"நானும் நீயும் ஒன்றில்லை.." இந்த வார்த்தைகள் வித்யாவின் மனதில் பூமாரி பொழிய மகேந்திரனின் மனதில் அக்கினி மழையாய் பொழிந்தது.. அவ்வளவு தூரத்திற்கு வந்தாகி விட்டதா என்று கருவியவன்..

"இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்..?" என்று கோபமாய் கேட்டான்..

"வித்யாவிடம் மரியாதைக் குறைவாய் நீ பேசுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.. வாங்க போங்கன்னு பேசு.. முதலில் நீ நடந்து கொண்ட விதத்திற்கு வித்யாவிடம் மன்னிப்புக் கேள்.."

"மன்னிப்பா.. நானா அதுவும்" 'இவள்' என்று சொல்ல வந்ததை வாய் விழுங்கிக் கொண்டு விறைத்தான்

மகேந்திரன்..

"நீ தான் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. இப்போது கேட்க முடியுமா, முடியாதா.." என்று அழுத்தமாய் கேட்டான் நரேந்திரன்..

"முடியாது என்றால்.."

"இந்த பேக்டரியில் நீ கால் வைக்க முடியாது.. என்ன பார்க்கிறாய்..? நரேந்திரன் ஒரேயடியாய் ஏமாளியில்லை.. உன் அனாமத்துக் கணக்கைப் பற்றி எனக்கும் தெரியும்.. கண்டும் காணாமல் விட்டேன் கேட்டால் பெண்டாட்டி, பிள்ளை குட்டின்னு கதை விடுவாய்.." என்று நரேந்திரன் கோபத்துடன் கூறிக் கொண்டிருக்கும்போதே..

"பிள்ளை குட்டின்னுதானே சொல்வேன்.. புட்டியும் குட்டியும்ன்னு சொல்ல மாட்டேனே.." என்று எங்கோ பார்த்துக் கொண்டு கூறினான் மகேந்திரன்..

வித்யாவிற்கு நெஞ்சை அடைத்தது.. எப்படி நரேந்திரனை அவமானப்படுத்துகிறான் இவன்.. துக்கம் எல்லை மீற..

"நீங்கள் சொல்வதையெல்லாம் அவர் உழைத்த பணத்தில்தான் செய்வார்.. அடுத்தவர் உழைப்பில் வரும் பணத்தை அனாமத்துக் கணக்கு எழுதிக் கொள்ளை அடித்துச் செய்ய மாட்டார்.." என்று கூறி விட்டாள்..

குகன் மனதிற்குள் 'சபாஷ்' போட்டான்.. வித்யாவை மரியாதையுடனும் நட்புடனும் பார்த்தான்.. மகேந்திரன் அவர்கள் இருவரையும் 'ஒன்று சேர்ந்து விட்டீர்களா.. இது எத்தனை நாளைக்கு என்னு நான் பார்க்கிறேன்..' என்று மனதிற்குள் புகைந்து கொண்டு எரிப்பது போல் பார்த்தான்.. நரேந்திரன் மனம் கனிந்தது.. வித்யாவிற்கு எவ்வளவு தர்ம சங்கடம்.. அவள் பேசத் தயங்கும் வார்த்தைகளை அவனுக்காகப் பேசினாளே.. மகேந்திரனைப் பார்த்துக் கூறினான்..

"மகி.. எனக்கு இரண்டில் ஒன்று தெரிய வேண்டும் ஒன்று நீ வித்யாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. இல்லாவிட்டால் பேக்டரியை விட்டு வெளியேற வேண்டும்.."

"இது என் அப்பாவின் பேக்டரி.. எனக்கு இதில் உரிமையிருக்கிறது.. முக்கியமாய் வாரிசை பெற்று வைத்திருக்கும் எனக்குத்தான் அதிக உரிமையிருக்கிறது.." என்று குத்தலாய் கூறினான்..

நரேந்திரன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல்.. "அப்பாவின் பேக்டரியாக அவர் இறப்பதற்கு முன்பு இருந்தது.. அவர் இறக்கும்போது கடைசி நிமிடம் இந்த பேக்டரியை என் பெயருக்கு மாற்றினார்.. ஏன் என்று தெரியுமா..?" என்று கேட்டான்..

மகேந்திரன் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றான்.. நரேந்திரனே தொடர்ந்து கூறினான்..

"ஏன்னா.. இந்த பேக்டரி.. மில் எல்லாம் கடனில் மூழ்கியிருந்தது.. அதனால் இரண்டையுமே அப்பா என் பெயருக்கு மாற்றினார்.. நான் வாங்கிக் கொண்டது சொத்தையல்ல, கடனை.. அதை அடைத்து இன்று கோடிக்கணக்கில் நீ அனாமத்து பணம் கொள்ளையடிக்கும் படி நான் கொண்டு வந்திருக்கிறேன்.. நீ உருப்படியாய் என்ன செய்தாய்..? உனக்கு உரிமையில்லாத சொத்திற்கு வாரிசைப் பெற்றுக் கொண்டதைத் தவிர.."

மகேந்திரனை சாட்டையடி பட்டாற் போலானான்.. இதுவரை நரேந்திரனிடம் இந்த நிமிர்வை அவன் கண்டதில்லை.. ஏமாந்த சோணகிரி என்று அவன் நினைத்துக் கொண்டிருக்க அவனோ நாக்கைப் பிடுங்கிக் கொள்வதைப் போல் கேட்கிறானே.. இவனை என்னவோ என்று நினைத்தானே.. லேசாய் டிராமா பண்ணியவுடன் மணப்பெண்ணை விட்டுக் கொடுத்தான்.. குடும்பம்.. கௌரவம் என்று தன்னை தனி மரமாக்கிக் கொண்ட பிழைக்கத் தெரியாதவன் என்று நினைத்தால் அவனோ இவனை உழைக்கத் தெரியாதவன் என்று கூறிவிட்டானே.. அதுவும் ஓர் அழகிய பெண்ணின் முன்னால்..

மகேந்திரனை அவமானம் பிடுங்கித் தின்றது.. இப்போது தழைந்து போக வேண்டிய நேரம்.. பார்ப்போம்..

நிமிர்வதற்கு நேரம் வரும்போது நிமிர்ந்து கொள்ள அவனுக்கா தெரியாது..?

வித்யாவின் முகம் பார்க்காமல் சுவரைப் பார்த்து..

"ஸாரி.." என்றவன் விருட்டென்று வெளியேறி விட்டான்..

'அடேங்கப்பா இந்தப் பெண் வந்தாலும் வந்தது.. குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருந்த எம்.டி வேங்கையாய் சிலிர்த்து எழுந்து விட்டாரே' குகனுக்கு விசிலடிக்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது.. அதற்காக வெளியேற விரும்பி..

"நான் போகலாமா சார்.." என்று பணிவாய் கேட்டான்.

"குகன்.. இனி எக்காரணம் கொண்டும் மகி, வித்யா விடம் கிராஸ் பண்ண மாட்டான்.. மீறி ஏதாவது வம்பு வளர்த்தால்.. இம்மீடியட்டா எனக்குக் கால் பண்ணிவிட வேண்டும்.. புரிந்ததா..?"

'அதைவிட எனக்கு வேறு என்ன வேலை..?' என்று நினைத்துக் கொண்டவன்..

"கட்டாயம் சார், நான் மேடத்தைப் பார்த்துக் கொள்கிறேன்.." என்றான் உண்மையான விசுவாசத்துடன்.

"சரி.. நீ போ.." என்று அவன் கூறியதும் அவசரமாய் அவன் தலை மறைந்தது.. தூரத்தில் விசில் சத்தம் கேட்டது.

வித்யாவின் முகம் கலங்கிச் சிவந்திருந்தது.. வருத்தத்துடன் அவள் முகத்தைப் பார்த்த நரேந்திரன்..

"என்னால்தான் உனக்கு இந்த வேதனை..?" என்று வருந்தினான்..

"அப்படியெல்லாமில்லை.. நீங்கள் எப்படி கரெக்டாய் இந்த நேரத்தில் இங்கு வந்தீர்கள்.." என்று தன்னைச் சமாளித்துக் கொண்டு வித்யா கேட்டாள்..

"இது என்ன நேரம்..?"

"என்ன நேரம்..?"

"மதியச் சாப்பாட்டு நேரம்.. நம்மிருவருக்கும் பேக்டரிக்கு மதியச் சாப்பாட்டை அனுப்பி விடும்படி கண்ணம்மா சித்தியிடம் சொல்லியிருந்தேன்.. அதனால் உன்னுடன் சேர்ந்து சாப்பிட வந்தேன்.."

"என்ன சார் இது.. நான் தனியாய் சாப்பிட மாட்டேனா..?"

"நீ இங்கிருக்கும் வரை தனி கிடையாது.. என் பொறுப்புன்னு சொல்லியிருக்கேனா இல்லையா..? சாப்பிடும் நேரம் கூட தனியாய் விட நான் விரும்பவில்லை.. நல்லவேளை நான் வந்தேன்.. இல்லாவிட்டால்.. மகி சுயநலவாதின்னு தெரியும்.. மரியாதை தெரியாதவனாகவும் இருந்திருக்கிறான்.. அது சரி என்ன சார் என்று கூப்பிடுகிறாய்.. நரேன் என்னவானான்..?"

"ஐ ஆம் ஸாரி.. வாய் தவறி.."

"வாய் தவறக்கூடாது.. நரேன் என்று கூப்பிடு.."

"நரேன்..! போதுமா.. வாங்க சாப்பிடலாம்.."

சாப்பிடும்போது நரேந்திரனுக்கு புரையேற "பார்த்து, பார்த்து" என்று அவன் தலையைத் தட்டிக் கொடுத்தவள் தண்ணீர் பாட்டிலை அவனிடம் நீட்டினாள்..

புரையேறியதில் லேசாய் கண் கலங்கியவன் அவளைப் பார்த்து மிருதுவாய் புன்னகைத்தான்..

"ரொம்ப நாள்களாயிற்று எனக்காக ஒரு ஜீவன் அக்கறையெடுத்துக் கொள்வதைப் பார்த்து.." என்றான்..

"இங்கே இருக்கும் காலம் வரை நான் உங்கள் பொறுப்பு என்றால் நீங்கள் மட்டும் என் பொறுப் பில்லையா..?" என்று இயல்பாய் கேட்டு விட்டு கை கழுவச் சென்றாள் வித்யா..

அசையாது அப்படியே ஒரு நிமிடம் அமர்ந்து விட்டான் அவன்.. தன்னைத் திட்டும்போது மௌனித்தாள்.. அவனைத் திட்டும்போது சீற்றம் கொண்டு மகேந்திரனிடம் சண்டை போட்டாள்.. ஏன்..? தன்னைவிட அவனை உயர்வாய் நினைப்பதானால்தானே.. சிலிர்த்தது அவன் மனம்..

அன்று மாலை வித்யா பேக்டரி வேலைகளைப் பார்த்துக் கொண்டதால் மில் வேலை சீக்கிரம் முடிந்துவிட நரேந்திரன் அவளை அழைத்துப்போக மாலை ஐந்து மணிக்கே வந்து விட்டான் காரில் போய்க் கொண்டிருக்கும் போது..

"உனக்கு கோவில் போகப் பிடிக்குமில்லையா..?" என்று வினவினான்..

"இது என்ன கேள்வி..? மிகவும் பிடிக்கும்.."

"சரி.. நாம் இப்போது பெருமாள் கோவிலுக்குப் போகப் போகிறோம்.. அது எங்கள் குலதெய்வத்தின் கோவில், நீ இன்று முதன் முதலாக வேலைக்கு வந்திருக்கிறாய்.. காலையில் போக நேரமில்லை.. இப்போது போய்விட்டு வரலாம்.."

நதியோரம் கரையில் பெருமாள் கோவில் இருந்தது.. கோவிலின் வாசலில் இருந்த பூக்கடையில் மாலையும் அபிஷேகத் தட்டையும் வாங்கிக் கொண்டான்.. வித்யாவைப் பார்த்த பூக்காரம்மாள்.. "பூ வைத்துக் கொள்ளம்மா" என்று மல்லிகைச் சரத்தை அளந்து கொடுத்தாள்..

"வாங்கிக்கொள்" என்றான் நரேந்திரன்..

வித்யா பூவை வாங்கி தலையின் இரு பக்கமும் வழியுமாறு சூடிக் கொண்டாள்.. அந்த அழகை ரசித்தவன் பூக்காரம்மாளிடம் பணம் கொடுத்துவிட்டு.. "வா போகலாம்" என்றான்.. வித்யாவின் மனம் சிறகடித்துக் கொண்டிருந்தது.. அவன் வாங்கிக் கொடுத்த 'பூ' மணம் அவளை சொர்க்கத்திற்கே அழைத்துச் சென்றது.. எல்லையற்ற மனநிறைவுடனும், மகிழ்வுடனும் பெருமாளையும், மகாலட்சுமியையும் வணங்கினாள்.. நரேந்திரனின் அருகே நின்று கண்மூடி கரம் குவித்து வேண்டிக் கொண்டிருந்தவளைப் பார்த்து தீபாராதனை காட்டிவிட்டு தட்டுடன் வந்த குருக்கள்..

"ரெண்டு பேரையும் சேர்ந்து பார்க்கறப்போ கண்நிறைவா இருக்கு.. ஷேமமா இருக்கணும்.." என்று வாழ்த்தினார்..

அர்ச்சனைத் தட்டில் நூறு ரூபாயைப் போட்டு விட்டு நரேந்திரன் குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான்.. வித்யாவும் குங்குமம் எடுத்து இட்டுக் கொண்டாள்.. மங்கலகரமான அவள் முகத்தை அவன் மீண்டும் பார்க்க முகம் சிவந்தாள்..

கோவிலுக்கு வெளியே வந்தவர்கள் பேசிக் கொண்டே நதியோரம் சற்று நேரம் நடந்தார்கள்.. நதி அமைதியாய் ஓடிக் கொண்டிருந்தது.. அதன் கரையோரம் நாணல்கள் வளர்ந்திருந்தன.. நதி நீரில் ஓடம் ஒன்று சென்று கொண்டிருந்தது.. அந்திவானில் செந்நிற ஒளியில் நீர் அழகாகத் தெரிந்தது.. பறவைகள் கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.. மக்கள் குளிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த படித்துறையில் நரேந்திரன் அமர்ந்தான்.. வித்யா அருகே அமர்ந்தாள்.. அவர்களை நதி பார்த்துக் கொண்டிருந்தது..

15

நதியோரம் நடந்தபோது

நடை தளர மனம் தளரும்

விடையில்லாத கேள்வி கேட்டால்

விடைதேடி உயிர் எங்கு செல்லும்?

…நதியோரம் நான் நடந்த போது…

நீண்ட கற்களைக் கொண்டு கட்டப்பட்ட படித்துறை அது.. நீரில் பல படிகள் மறைந்திருந்தன.. நீருக்குள் காலை விட்டு அளைந்தவாறு வித்யா அமர்ந்திருந்தாள்.. சில சமயம் குனிந்து கைகளாலும் நீரைத் துழாவி மகிழ்ந்தாள்.. ஓர் சின்னஞ்சிறு சிறுமியைப் போல் குதூகலித்துக்

கொண்டிருந்தாள்.. நரேந்திரன் சிறு முறுவலுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.. ஓர் அன்னப்பறவை நீரில் விளையாடுவது போலிருந்தது அவளது நீர் விளையாட்டு..

"உனக்கு நதி என்றால் இவ்வளவு பிரியமா..?"

"ஆமாம்.. எங்கள் ஊரான ஆயகுடி பழனியில் இருக்கிறது.. அங்கேயும் ஆறு உண்டு.. ஆனால் நான் போனதில்லை.."

"ஏன்..?"

"ஏன்..? கேள்வி கேட்பது சுலபம்.. பதில் சொல்வது தான் துயரம்.. எனக்கு அம்மா இல்லை.. என் ஆறு வயதில் இறந்து விட்டார்கள்.. அப்பா அடுத்த வருடமே மறு கல்யாணம் பண்ணிக் கொண்டார்.. புரிகிறதா..?"

"ம்ம்.. சித்தி கொடுமை..!"

"ஆமாம்.. சித்தி என்னை பள்ளிக்குப் போக விட்டதே பெரிய விசயம்.. வீட்டின் சம்பளமில்லாத வேலைக்காரி யாகவும், சமையல்காரியாகவும்தான் நான் அந்த வீட்டில் இருந்தேன்.."

நரேந்திரன் மனம் கலங்கினான்.. அடுத்தவருக்கு ஓர் துன்பமென்றால் உடனே அதைப் போக்கத் துடிக்கும் இவளுக்கு இப்படி ஓர் கொடுமையா..?

"நீ தான் உன் ஸ்கூல் பர்ஸ்ட்டுன்னு கேள்விப்பட்டேன்.."

"ஆமாம்.. எல்லோரும் தூங்கியவுடன் சமையலறை யில் உட்கார்ந்து படிப்பேன்.. அதற்கும் கரண்ட் பில் அதிகமாகும்ன்னு சித்தியிடம் திட்டு வரும்.. ச்.. எப்படியோ படித்து முடித்து விட்டேன்.."

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.. சூழ்நிலையின் கனம் மனத்தை அழுத்த நரேந்திரன் பேச்சை மாற்ற விரும்பினான்..

"உனக்கு நீந்தத் தெரியுமா..?"

"தெரியாது.. உங்களுக்கு..?"

"ஹைய்யோ.. போட்டி போட்டுக் கொண்டு நீந்துவோம்.. மகி, யுகேயெல்லாம் சின்ன வயசில் இப்படி வினயமாக இல்லை.. லீவு நாளில் இந்தக் கரையிலிருந்து நீந்தி அந்தக் கரையை தொட்டு விட்டு வர வேண்டும்.. நான்தான் எப்போதும் ஜெயிப்பேன்.. தெரியுமா..?"

"அப்படியா..?" என்று வரிசைப்பற்கள் தெரிய முறுவலித்தாள் வித்யா.. அந்தப் பல் வரிசையில் மயங்கிய நரேந்திரன்..

"அந்தக் காலத்து கே.ஆர் விஜயாவும், இந்தக் காலத்து சிநேகாவும் புன்னகைக்குப் பெயர் போனவர்கள்.." என்றான்..

"ஆமாம்.. கே.ஆர். விஜயாம்மாவை புன்னகை அரசி என்பார்கள்.. சிநேகாவை புன்னகை இளவரசி என்பார்கள்.."

"உன் புன்னகையை மட்டும் அந்தப் பட்டத்தை அவர்களுக்குக் கொடுத்தவர்கள் பார்த்தால் இரண்டையும் பிடுங்கி உன்னிடம் கொடுத்து விடுவார்கள்.."

"போதுமே.." வெட்கத்தில் முகம் சிவந்தது வித்யாவிற்கு..

"வித்யா.. நான் உண்மையிலேயே மகி இவ்வாறு நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கவில்லை.. சிறிது நாள்களாகவே அவன் போக்கு சரியில்லை.. ஆனால் இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டானே.."

"நீங்கள் அதற்கு இடம் கொடுத்து விட்டீர்கள்.. நான் சொல்வது பணப் பிரச்சனையை மட்டும் அல்ல.."

"புரிகிறது வித்யா.. மகி சொன்ன புட்டியையும், குட்டியையும் சொல்கிறாய்.." என்றான் சங்கடத்துடன் நரேந்திரன்..

"ஆமாம்.. உங்களைப் போன்ற ஓர் மனிதர் தனது நல்ல பெயருக்கு இழுக்கு வருவது போல் நடந்து கொள்ளலாமா..?"

"என் நிலைமையக் கொஞ்சம் யோசித்துப் பார்.."

"யோசிக்காமலென்ன.. யோசித்து விட்டேன்.. கடந்த காலத்தை நினைத்து வருந்துவதைவிட எதிர்காலத்தில் இனியாவது நேர்வழியில் நடக்கலாமே.."

"பூர்ணிமா சொல்வதைச் செய்யச் சொல்கிறாயா..?"

"ஆமாம்.. உங்கள் தகுதிக்கும், படிப்புக்கும் ஆயிரம் பெண்கள் கிடைப்பார்கள்.. மணம் செய்து கொள்ள.."

"வித்யா.. எனக்கு வரும் பெண்ணிடம் நான் எதிர்பார்க்கும் தகுதிகள் எனக்கு இருக்கிறதா..?"

வித்யா பேச்சிழந்தாள்.. 'இந்தக் கேள்விக்கு விடை என்ன சொல்ல...? வாழ்க்கையில் இதுபோல் இன்னும் எத்தனை கேள்விகளை நான் சந்திப்பது..?' பதில் சொல்லாமல் மௌனித்தாள் அவள்.. அவன் நீரின் மேற் பரப்பையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.. மெல்ல அவன் முகம் பார்த்த வித்யா..

"உங்களை உங்கள் குறைகளுடன் ஏற்றுக் கொள்ள ஒருத்தி வரமாட்டாளென்று முடிவு செய்து விட்டீர்களா..?" என்று கேட்டாள்..

"ம்ம்.. வரலாம்.. ஆனால் எனக்கு மனம் இருக்கிறதே வித்யா.. தெரிந்தே ஓர் பெண்ணின் வாழ்வைப் பாழடிப்பதா..?"

"என்ன பேச்சு இது நரேன்.. நீங்கள் என்ன அப்பேர்ப் பட்ட அயோக்கியனா..? முதலில் உங்களைப் பற்றியே நீங்கள் இப்படி நினைத்துக் கொள்வதை நிறுத்துங்கள்.." என்றாள் வித்யா கோபத்துடன்..

"இல்லை வித்யா.. நான் என்ன சொல்ல வருகிறேனென்றால்.." நரேந்திரன் பேச்சை இடை மறித்தாள் வித்யா..

"போதும் நரேன்.. அப்புறம் நான் எழுந்து போய் விடுவேன்.." என்று படபடத்தாள்.. அவளது கோபத்தைக் கண்ட நரேந்திரனின் மனம் பூவாய் மலர்ந்தது.. அவளது

உரிமையான கோபம் அவன் மனதைத் தாலாட்டியது.. அவன் பாட விரும்பினான்..

"பொன்னை விரும்பும் பூமியிலே..

என்னை விரும்பும் ஓர் உயிரே

புதையல் தேடி அலையும் உலகில்

இதயம் தேடும் என் உயிரே.."

என்று மெல்லிய குரலில் பாடினான்.. வித்யாவின் கோபம் மறைந்து மனம் சிறகானது..

"பழைய பாடல்கள் பிடிக்குமா..?" என்று வினவினாள்.

"அது மட்டும்தான் பிடிக்கும்.. புதிய பாடல்கள் பிடிக்காது என்றில்லை.. அது கணநேரம் கூட நெஞ்சில் நிற்காமல் மறைந்து விடுகிறது.. எவர் கிரீன்.. பழைய பாடல்கள்தான்.."

"அதனால்தான் அதற்கு 'நெஞ்சில் நிற்பவை'ன்னு டைட்டில் கொடுக்கிறாங்க.."

"அதுசரி.. நீ அருமையாய் பாடுவியாமே.. பூர்ணிமா சொன்னாள்.."

"சும்மா.. குரல் நல்லாயிருக்குன்னு காலேஜில் பாடச் சொன்னாங்க.. பாடினேன்.. பர்ஸ்ட் பிரைஸ் கிடைத்தது.."

"சும்மா பாடினதற்கே பர்ஸ்ட் பிரைஸா.. அனுபவித்து, ரசித்துப் பாடினாயானால் எப்படியிருக்கும்.. பாடு வித்யா.."

"நானா.. இப்போதா.."

"ஆமாம்.. எனக்காக.. ப்ளீஸ்.."

அவன் கெஞ்சல் மனதைக் தொட வித்யா கண்மூடிப் பாடினாள்..

"நீ எங்கே என் நினைவுகள் அங்கே..

நீ ஒரு நாள் வரும் வரையில்

நானிருப்பேன் நதிக்கரையில்.."

அழகாய் பாடினாள்.. அவள் குரல் கேட்டு நதி நீர் துள்ளிக் குதித்து அவள் கால் தொட்டு விளையாடியது.. நரேந்திரன் தன் வசத்தில் இல்லை.. இதமான மாலை நேரத்தில் நதிக்கரை ஓரத்தில் அமைதியான அழகே வடிவான மனதிற்கு இதமான பெண்ணொருத்தி அவன் ஒருவனுக்காக மட்டும் அவன் கேட்பதற்காக மட்டும் பாடுகிறாள்.. என்ன வரம் வேண்டும் என்று இறைவன் அவனிடம் வரம் கேட்டால் இந்த வினாடி அப்படியே நிலைத்திருக்க வேண்டும் என்ற வரத்தைத்தான் கேட்பான்.. வித்யா அவன் தோழியானாள்..

"போதுமா.. இனிப் போகலாமா..?" மோகனப் புன்னகையுடன் அவள் கேட்டாள்.. அதில் கிறங்கிப் போனவனாய் அவன் எழுந்தான்.. நதியோரம் நடந்து கொண்டே அவள் கேட்டாள்..

"பாட்டுப் பாடியதற்கு பரிசு கிடைக்காதா..?"

"என்ன வேண்டும் கேள்.. தருகிறேன்.."

"இந்த நதியோரம் நடக்க தினமும் அழைத்து வர வேண்டும்.. இதுதான் நான் கேட்கும் பரிசு.."

அவன் திரும்பிப் பக்க வாட்டில் நடந்து வரும் அவளையே பார்த்தான்.. வரம் கொடுக்க விரும்பியவனுக்கே வரமளித்த தேவதையாய் அந்தக் கணத்தில் அவள் தோன்றினாள்.. இவ்வளவு இதமாக அவன் என்றும் உணர்ந்ததில்லை.. இது தினந்தோறும் அவளுக்குக் கிடைக்குமானால் அவன் உயிரையே அவள் காலடியில் கிடத்துவானே..

"நிச்சயமாய் அழைத்து வருகிறேன்.."

காரில் ஏறிக் கொண்டனர்.. வீட்டிற்குள் கார் நுழைந்த போது தோட்டத்தில் பூர்ணிமா ஓர் இளைஞனுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தார்கள்.. நரேந்திரனின் முகம் மலர்ந்தது..

"பிரகாஷ் வந்திருக்கிறானா..?" என்று கூறிக் கொண்டான்..

"அவர்தான் பிரகாஷா..?" என்றாள் வித்யா ஆவலாக..

"ஆமாம்.. வா போய் விசாரிக்கலாம்.."

காரை நிறுத்திவிட்டு இருவரும் தோட்டத்திற்குள் சென்றார்கள்.. பூர்ணிமா பிரகாஷிடம் தீவிரமாய்..

"அவள் முகத்தை ஓர் தரம் பார்த்தால் நீ இப்படிப் பேசமாட்டாய்.." என்று கூறிக் கொண்டிருந்தாள்..

பேசிக் கொண்டிருந்த பிரகாஷ் திரும்பி அவர்களைப் பார்த்து விட்டான்.. உடனே, "ஹலோ நரேன் மாமா.. என்ன அதிசயம் இது.. இன்றைக்கு மழை கொட்டோ கொட்டென்று கொட்டட்டும் என்று முடிவெடுத்து விட்டீர்களா..?" என்று சிரித்தான். சிரிக்கும்போது அவன் கண்களும் கூடச் சேர்ந்து சிரிப்பதைக் கண்டாள் வித்யா.. 'பூர்ணிமாவிற்குப் பொருத்தமானவன் இவனே' என்று மனதிற்குள் கூறிக் கொண்டாள்..

"புதிர் போட்டுப் பேசுவதை வாடிக்கையாய் வைத்திருக்கிறாய்.. என்னவென்று நீயே சொல்லி விடு.. எதற்கு மழை பெய்யப் போகிறது..?"

"இந்த நேரத்தில் வீட்டில் உங்களை எதிர்பார்க்கவே யில்லை.. வீடு என்பது உங்கள் தம்பிகளுக்கும், தங்கை களுக்கும் தானே.. நீங்கள் பேக்டரியிலோ இல்லை மில்லிலோ தலையை உடைத்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கப் பிறந்தவர் ஆயிற்றே.."

"போதும்.. கேலி செய்தது.. பிரகாஷ்.. இது வித்யா.. பூர்ணிமா சொல்லியிருப்பாளே.. வித்யா இது பிரகாஷ்.."

இருவரும் கரம் குவித்துக் கொண்டனர்.. பிரகாஷின் சிரிக்கும் விழிகள் தன்னை ஆராய்ச்சியுடன் நோக்குவதை உணர்ந்தாள் வித்யா.. இருந்தும் புன்னகை மாறாமல்..

"வணக்கம் அண்ணா.." என்றாள்..

"அண்ணாவா..?" என்றான் பிரகாஷ் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்.. பூர்ணிமாவின் கணவர்தான் எனது அண்ணன்.."

"அது கணவரான பின்தான்.." என்றாள் பூர்ணிமா கோபத்துடன்.. அவர்களுக்குள் ஏதோ வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை மற்ற இருவரும் யூகித்துக் கொண்டனர்..

"ஆகாமல் யார் விடப் போகிறார்கள்.. நீ குடுகுடு கிழவியான பின் தான் கல்யாணமென்றாலும் பொக்கை வாயுடன் வந்த தாலி கட்டுவேன்.. விட்டு விடுவேன் என்று நினைத்தாயா..?" என்றான் பிரகாஷ் இலகுவாக..

வித்யா சிரித்தாள்..

"அதுதானே.. நான் உங்கள் கட்சிதான் அண்ணா.." என்று அவள் கூற..

"ஆமாமாம்.. பிரித்திக்கு ஊரே கேரண்டி கொடுப்பது போல் இவருக்கு கேரண்டி கொடுக்கிறவள் இல்லையா நீ..?" என்றாள் பூர்ணிமா..

"அப்படியா.. வித்யா எனக்கு கேரண்டியா..? கவலையை விடு வித்யா.. உனக்கு அண்ணனாய் லட்சணமாய் நானும் உனக்கு துணை நிற்கிறேன்.." என்றான் பிரகாஷ் பூர்ணிமாவைப் பார்த்துக் கொண்டு, அவன் விழிகள் கூறிய செய்தியை அறிந்து கொண்டவளாய் நொடிப் பொழுதில் முகம் மலர்ந்து பூர்ணிமா சிரித்தாள்..

"தேங்க்யூ பிரகாஷ்.. தேங்க்யூ.. ஐ லவ் யூ ஸோ மச் மை டியர்.."

வித்யா நமுட்டுச் சிரிப்புடன் நரேந்திரனைப் பார்த்தாள்.. அவன் புரியாதவனாய் தங்கையைப் பார்த்தான். வரும்போது கோபமாய் இருந்தாள்.. இப்போது விழுந்து விழுந்து காதலனைக் கொஞ்சுகிறாள்.. புரியாமல் அவன் விழிக்க வித்யாவிற்கு சிரிப்பு வந்தது..

"இதுதான் காதல்.. கண்டு கொள்ளாமல் கழண்டு கொள்ளுங்கள்.." என்றாள் தாழ்ந்த குரலில்...

"இல்லை வித்யா.. நாம் வரும்போது பூர்ணி அவனை கடித்துக் குதறிக் கொண்டிருந்தாள்.."

"இப்போது பின்னிப் பிணைந்து கொள்கிறாள்.. அப்படித்தானே..? அது ஊடல்... இது கூடல்.."

அவர்கள் ரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட பிரகாஷ் வியப்படைந்தான். பூர்ணிமாவிடம் கிசுகிசுத்தான்..

"நீ நினைப்பது போல் வேலை கடினமாயிருக்காது பூர்ணி.. எளிதாய் முடிந்து விடும் பாரேன்.."

"நிஜமாகவா பிரகாஷ்.. அப்படி மட்டும் நடந்து விட்டால்.."

"நடக்கும் பாரேன்.. வித்யா எங்கே ஓடப் பார்க்கிறாய்.. நரேன் மாமா நீங்களும் தான் இப்படி உட்காருங்கள்.. இன்றைக்கு பேக்டரியில் மகி மாமாவுக்கு மண்டகப் படியாமே.." என்றபடி அங்கு போடப்பட்டிருந்த சேர்களில் ஒன்றில் அமர்ந்து கொண்டு நரேனின் கையைப் பிடித்து இழுத்து அருகில் அமர வைத்தான்.. பூர்ணிமா கவலையுடன் வித்யாவின் அருகே வந்து..

"என்னடி, மகியண்ணன் நிறைய தொல்லை கொடுத்தாரா..?" என்று வினவினாள்..

"நல்லவேளையாய் சரியான நேரத்தில் நான் போய் விட்டேன் பூர்ணிமா.. நீயேன் கவலைப்படுகிறாய்.. வித்யாவின் மேல் தூசு கூடப் பட விடாமல் நான் பார்த்துக் கொள்வேன்.." என்றான் நரேந்திரன்..

பூர்ணிமாவின் விழிகளும் பிரகாஷின் விழிகளும் சங்கேதமாய் ஏதோ பேசிக் கொண்டன.. அதன் பின் நால்வரும் அங்கேயே அமர்ந்து வெகு நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.. காபி, சிற்றுண்டி தோட்டத்திற்கே வந்தது.. அரட்டை முடியும் தறுவாயில்,

"மணிமுத்தாறு அருவி பார்க்க ஆசைப்பட்டாயாமே வித்யா.. இந்த ஞாயிறன்று நாம் நால்வரும் போகலாம்.." என்றான் பிரகாஷ். வித்யா உற்சாகமாய் தலையாட்டினாள்.

அந்த ஞாயிறு அருவிக் கரையில் நீரோடு வழுக்கி விழுந்து நீரில் மூழ்கினாள் வித்யா..

16

நதியோரம் நடந்தபோது

நட்புக் காற்றாய் மனம் வருடினாய்

மென்மையாக என்னுள் நுழைந்து

மெல்ல எந்தன் இதயம் திருடினாய்

...நதியோரம் நான் நடந்த போது...

பிரகாஷ் தென்காசியிலிருந்து வந்திருந்தான்.. பூர்ணிமாவுடன் தங்கள் திருமணம் குறித்துப் பேச வந்திருந்தான்.. அவர்கள் கூடி கூடிப் பேசினார்கள்.. என்ன பேசுகிறார்கள் என்பதை மற்றவர்களால் யூகிக்கவும் முடியவில்லை.. கூடப் பிறந்த தங்கையான பிரபாவதி தூண்டித் துருவிக் கேட்டு விட்டாள்..

"அண்ணா.. என்னதான் முடிவெடுத்திருக்கிறீர்கள் நீயும், பூர்ணிமாவும்.."

"எதைப்பற்றி..?"

"உன் கல்யாணத்தைப் பற்றி.. அதற்காகத்தானே பூர்ணிமாவிடம் பேச வந்தாய்.."

"இல்லையே.. நான் என் தாய்மாமன் வீட்டில் ரெஸ்ட் எடுக்க வந்திருக்கிறேன்.. தாய்மாமன் மகளை சைட் அடிப்பது போனஸ்.. அவ்வளவுதான் விசயம்.."

"கதையடிக்காதே அண்ணா.. இன்னும் ஒரு வாரம் இங்கேதான் இருக்கப் போகிறாயாமே.. பூர்ணிமா சொல்லி நான் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கிறது.. நீ என் அண்ணன் தானே.."

"அதில் உனக்குச் சந்தேகமா..? நம் அப்பா ராஜா ரகுநாதர்கிட்டப் போய் கேளேன்.. என் தலைமகன் பிரகாஷ்தான்னு எடுத்துச் சொல்வார்.."

"கேட்கிறேன்.. நல்லாக் கேட்கிறேன்.. நீங்க தனியா ஜவுளிக் கடையைப் பார்த்துக்கிட்டு தவிக்க அண்ணன் இங்கே வந்து வேலைக்காரங்ககிட்ட தங்கைமுறை கொண்டாடிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறது நியாயமான்னு கேட்கிறேன்.."

"வேலைக்காரங்களா.. ஓ வித்யாவைச் சொல்கிறாயா..? பார்த்துப் பேசும்மா.. நாளைக்கே அந்தப் பெண் வீட்டுக்காரங்களா ஆனாலும் ஆகிவிடும்.."

பிரகாஷ் இயல்பாய் சொல்லிவிட்டு நகர்ந்துவிட பிரபாவதியின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.. ஏற்கனவே வித்யாவின் வரவால் பேக்டரி வேலைச் சுமையின்றி நரேந்திரன் மில்லில் தங்கிவிட யுகேந்திரனால் பணத்தை அடிக்க முடியவில்லை.. முதலாளி என்ற ஹோதாவில் சுற்றி வரவும் முடியவில்லை.. மீனலோசனியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.. பேக்டரியில் கால் வைத்த முதல் நாளிலேயே மகேந்திரனை மண்ணைக் கவ்வ வைத்து விட்டாளென்று வித்யாவின் மேல் வெறியாக இருந்தாள்.. அதற்கேற்றாற் போல் வித்யா பேக்டரி நிர்வாகத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டிருந்தாள்.. மகேந்திரன் உருவாக்கிய குழுவே திணறிப் போனது.. இந்நிலையில் வித்யா வீட்டுக்காரி யாகவே ஆனால்..?

நினைத்துப் பார்க்க நெஞ்சம் நடுங்கியது பிரபாவதிக்கு.. மீனலோசனியுடன் சதியாலோசனை செய்ய விரைந்தாள்..

வார இறுதி ஞாயிறு வந்தது.. நரேந்திரன், வித்யா, பூர்ணிமா, பிரகாஷ் நால்வரும் அருவிக்குக் கிளம்பினர்..

"சித்தி.. எங்களுக்கு ஹாட் பேக்கில் சூடாய் பிரியாணியும், சிக்கன் பிரையும் வைத்து விடுங்கள்.. அருவியில் குளியல் போட்டவுடன் அசுரப் பசி எடுக்கும்.."

"வித்யா சுடிதார் போட்டுக்க.. புடவையெல்லாம் பெர்ஸனல் மேனேஜருக்குத்தான்.. இன்னிக்கு அருவியில் குளியல் போட சுடிதார்தான் பெஸ்ட்.. மாற்றுவதற்கு ஒரு செட் எடுத்து வைத்துக்க.."

"அண்ணா... டாடா சுமோவை எடுத்துக் கொள்வோம்.. நாங்க துணி மாற்ற அதுதான் வசதி.."

"பிரகாஷ்.. கிளம்புவதற்கு இத்தனை நேரமா..? என்ன பெண் பார்க்கவா போகிறீர்கள்.. வெளியே வாங்க.."

பூர்ணிமா பரபரத்தாள்.. வித்யாவுக்கு ஊர் சுற்றிக் காட்டப் போகும் உற்சாகம்... அத்தோடு அவள் மனதிலிருந்த திட்டத்தை செயற்படுத்தும் முதல் நாள்..

"பெண் பார்க்கப் போவதா..? அதற்குத்தானே இங்கே வந்திருக்கிறேன்..? உன்னைத்தான் பார்த்தாகி விட்டதே.. வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்ப்பேனா..?" என்றபடி பிரகாஷ் வந்தான்..

'இப்படிப் பேசியே பூர்ணிமாக் கழுதையின் மண்டைக் கனத்தை அதிகப்படுத்துகிறான் இந்த அண்ணன்.. மாப்பிள்ளையாய் லட்சணமாய் முறுக்கிக் கொள்ள வேண்டாமா..?' பிரபாவதி மனதிற்குள் குமைந்தாள்..

'வேலைக்காரர்களை வைக்கிற இடத்தில் வைக்க வேண்டாமா..? வீட்டில் தங்க வைக்கிறதும், காரில் கூட்டிப் போவதும், கூடிக்கும்மாளம் போடுவதும் என்று வீடே தலைகீழாய் மாறுகிறது.. சரி செய்ய வேண்டும்' மீனலோசனி தீர்மானமே செய்து கொண்டாள்..

அருவிக் கரையில் சோவென்று கொட்டிக் கொண்டிருந்த அருவியைப் பார்த்ததும் மகிழ்ந்து போனாள் வித்யா..

"ஹைய்யோ.. எவ்வளவு ஜோரா நீர் கொட்டுது பார் பூர்ணி.. வெள்ளையாய் பஞ்சு பொதி கீழே விழுவது போல் இருக்கிறது பார்.." என்று ஆர்ப்பரித்து கை கொட்டினாள் வித்யா..

"சரி வா குளியல் போடலாம்.." என்று பூர்ணிமா அவளை இழுத்துக் கொண்டு அருவி நீரில் புகுந்தாள்..

ஒருவர் மேல் ஒருவர் நீரை வாரி இறைத்துக் கொண்டு இருவரும் விளையாடிக் கொண்டிருக்கையில் ஆண்கள் பகுதியில் குளிக்க பிரகாஷும், நரேந்திரனும் ஷார்ட்ஷும்,

பனியனும் அணிந்து வந்தனர்.. யதேச்சையாக அவர்கள் பக்கம் பார்த்த வித்யா மெய் மறந்து விட்டாள்..

உருண்டு, திரண்டு நின்ற புஜங்களுடன் அகன்ற ரோமம் படர்ந்த மார்புடன் நின்ற நரேந்திரனது தோற்றம் அவளைத் தடுமாறச் செய்தது.. அதற்குள் அருவி நீரில் தலையைக் குடுத்து விட்டிருந்த நரேன் குளிக்க ஆரம்பித்திருந்தான்.. மீண்டும் அருவிக்குள் புகுந்தாலும் வித்யாவுக்குள் உற்சாகம் குறைந்து விட்டிருந்தது.. இனம் விளங்காத தாபம் ஒன்று அவளுள் எழுந்தது.. இப்போது நரேந்திரன் சிரித்தவாறு அருவியை விட்டு வெளியே வர நீரில் நனைந்த தலைமுடி கலைந்து அவன் முகத்தில் பரவியிருந்தது.. கலைந்திருந்த தலைமுடியுடன் அவனது கவர்ச்சியான தோற்றத்தை ஏக்கத்துடன் பார்த்தவாறே பூர்ணிமா எச்சரித்ததை கவனிக்காமல் பின்னால் நகர்ந்தவள் பாசி நிறைந்த பாறையில் கால் வைத்து விட்டாள்.. பூர்ணிமா திகிலுடன் "வித்யா" என்று அலறியது நாற்திசைகளிலும் எதிரொலிக்க வித்யா பாறையில் கால் வழுக்கி நீரின் வேகத்தோடு கீழேயிருந்த ஆழமான நீர்ப்பரப்பில் சறுக்கி விழுந்தாள்.. நீரின் மேல் அவள் தலை எழும்பி மீண்டும் நீரில் அமிழ..

"வித்யா.." என்று கதறியபடி பூர்ணிமா நீருக்குள் பாயப்போனாள்.. அதே கணத்தில் நரேந்திரன் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல நீருக்குள் பாய்ந்தான்.. பிரகாஷ் பூர்ணிமாவின் கைபற்றி கரைக்கு இழுத்து வந்தான்..

"இங்கேயே இரு.. உன்னைப் பார்ப்பதா அவளைக் காப்பாற்றுவதா.." என்று அவன் மிரட்டிக் கொண்டிருந்த போது நரேந்திரன் தலை நீருக்கு மேலே தெரிந்தது.. வித்யாவை இழுத்துக் கொண்டு நீந்தி வந்தவன் ஒரு பூமாலை போல் அவளைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கரையேறினான்.. கரையில் படுக்க வைக்கப் பட்ட வித்யா மூர்ச்சையாகி இருந்தாள்.. பூர்ணிமா பதற்றமாக..

"வித்யா கண்ணைத் திறந்து பாருடி.. என்னைப் பாருடி.. ஐயோ உன்னைப் பலி கொடுக்கத்தான் பாவி நான் மணிமுத்தாறுக்கு கூட்டி வந்தேனா.." என்று புலம்பிக் கொண்டிருந்தாள்..

பிரகாஷ் எரிச்சலுடன், "நீ கொஞ்சம் வாயை மூடுகிறாயா..? உன் ரோதனை பெரிய ரோதனையாய் இருக்கிறது.. அவளுக்கு ஒன்றுமில்லை.. உன் அண்ணன் காப்பாற்றி விட்டார்.. நீ பேசாமலிரு.." என்று அதட்டினான்.

நரேந்திரன் இவை எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் வித்யாவின் கை, கால்களை சூடு பறக்கத் தேய்த்து விட்டுக் கொண்டிருந்தான்.. மெல்ல வித்யா கண் விழிக்க பூர்ணிமா ஆனந்தத்துடன்..

"வித்யா.." என்று அவளைக் கட்டிக் கொண்டாள்..

"கொஞ்சினது போதும்.. போய் பிளாஸ்கிலிருந்து சூடாய் காபி ஊற்றி எடுத்துக் கொண்டு வா.." என்று விரட்டினான் பிரகாஷ்..

பூர்ணிமா ஓடிப்போய் காபி கொண்டு வந்து வித்யாவின் கையில் கொடுத்து குடிக்க வைத்தாள்.. மெல்ல தன்னிலைக்கு வந்த வித்யா முதலில் பார்த்தது நரேந்திரனின் ரத்தம் வழிந்த நெற்றியைத்தான்..

"ஐயோ.. இது என்ன ரத்தம் கொட்டுது.." என்று அவள் பதறவும் தான் மற்ற இருவரும் நரேந்திரனின் நெற்றியைப் பார்த்தார்கள்.. கூர்மையான கல் வெட்டி காயம் பட்டிருந்தது.. நரேந்திரன் அப்போதுதான் அதை உணர்ந்வனாய்..

"ஏதோ கல் வெட்டியிருக்கிறது போல.. ஒன்றுமில்லை வித்யா, பதற வேண்டாம்.." என்றவாறு எழுந்து சென்று அருவி நீரில் முகம் கழுவி கைக்குட்டையால் இறுக்கிக் கட்டுப் போட்டான்..

பூர்ணிமாவின் விழிகளும் பிரகாஷின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. நரேந்திரன் அதைக் கவனிக்காமல் வித்யாவை எழுப்பி உட்கார வைத்தான்..

"ஒன்றுமில்லை நரேன்.." என்றபடி தளர்வாய் எழுந்த வித்யா அருவி நீரைப் பார்த்தாள்.. ஈரம் படிந்திருந்த உடலில் ஒட்டியிருந்த மணலை அருகில் ஓடிய வாய்க்கால் நீரில் கழுவிக் கொண்டாள்..

"வா டிரஸ் மாத்திக்கலாம்.." என்று பூர்ணிமா அழைக்க வண்டிக்குள் ஏறி உடை மாற்றிக் கொண்டனர்.. பிரகாஷும், நரேந்திரனும் உடைகளை மாற்றிக் கொள்ள மௌனமாய் அருவிக் கரையில் அமர்ந்து உண்டனர்..

திடீரென்று பிரகாஷ் அருகில் ஒரு குரங்கு வந்து வாழைப் பழத்தை தூக்கிக் கொண்டு போக பிரகாஷ்..

"பூர்ணிமா பார்த்தாயா உன் சொந்தத்தின் வேலையை..?" என்று கிண்டலடிக்க சூழ்நிலை கலகலப்பாகியது.. பூர்ணிமா முறைத்தவாறு..

"ஆமாம் அது என் அத்தை பிள்ளை.." என்றாள்.. வித்யா விழுந்து விழுந்து சிரித்தாள்.. நரேந்திரனின் முகத்தில் ஜீவன் மீண்டது..

சாப்பிட்டு முடித்தவுடன்..

"வித்யா வருகிறாயா.. இந்த அருவியின் பக்கம் ஒரு கிளை நதி ஓடும்.. அதைப் பார்த்துவிட்டு வரலாம்.." என்று பிரகாஷ் அழைக்க வித்யா யதார்த்தமாய் பின் தொடர்ந்தாள்.

அவர்கள் பேசிக் கொண்டே நடந்து மறைய பூர்ணிமா தேவி அண்ணனின் முகம் பார்த்தாள். தன் திட்டத்தை செயலாற்ற ஆரம்பித்தாள்.. இருவரும் நதி நீரில் கால்நனைய நின்று கொண்டிருந்தார்கள்..

"அண்ணா.. நானும் பிரகாஷும் எங்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேசி ஓர் முடிவுக்கு வந்திருக்கிறோம்.." என்று ஆரம்பித்தாள் பூர்ணிமா..

"என்னம்மா.. அடுத்த மாதத்தில் முகூர்த்தம் குறித்து விடலாமா..?"

"இல்லை அண்ணா.. உங்கள் திருமணம் நடக்க ஓர் வருடம் அவகாசம் கேட்டீர்கள் இல்லையா..? பிரகாஷ் சொல்கிறார் எனக்கு அவசரமில்லை, உன் அண்ணன் பிரச்சனை முடிந்து வித்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டும்.. அதன் பின்னால் நாம் கல்யாணம் பண்ணிக்கலாம் என்கிறார்.."

"என்ன விளையாடுகிறாயா..? நீ சொன்னது என்ன..? இப்போது நடந்து கொள்வது என்ன..?"

"அண்ணா.. பிரகாஷ் வீட்டில் வேறு பெண் பார்க்கிறார்கள் என்றுதானே நீங்கள் அவசரப்பட்டீர்கள்..? இப்போது அவர் பொறுமையாய் இருக்க ஒப்புக் கொண்டு விட்டார்.. அப்புறமென்ன..?"

"ஏன் பூர்ணி புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய்.. முதலில் உன் கல்யாணம் நடக்கட்டும்.. அதற்குப் பின்.."

"அதற்குப் பின்னால் வித்யாவை வீட்டை விட்டு விரட்டி விடுவீர்கள்.. அப்படித்தானே அண்ணா.."

"பூர்ணிமா.." அதிர்ந்து போனான் நரேந்திரன்.. விரட்டி விடுவதா வித்யாவையா..?

"எனக்குத் தெரியும் அண்ணா.. நீங்கள் சென்னைக்கு வந்திருந்தபோது மொட்டை மாடியில் வைத்து வித்யா விடம் பேசியதை நான் கேட்டுக் கொண்டுதானிருந்தேன்.. அண்ணா..! அவள் என் மேல் வைத்த பாசத்தை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டீர்களே.. எல்லோரும் படித்தது போல் அவள் படிக்கவில்லை.. போராடிப் படித்தாள்.. அந்தப் படிப்பை படிக்க உதவிய வேலையையும் அவள் படிப்பால் கிடைத்த வேலையையும் உதறிவிட்டு உங்கள் பின்னால் வந்தாளே.. எதற்காக.. என் மேல் கொண்ட அன்பிற்காக.. அந்த அன்பை அவளை வீழ்த்தும் ஆயுதமாகப் பயன்படுத்தி சூதாட்டம் ஆடி விட்டீர்களே.."

"பூர்ணி.. எல்லாம் தெரிந்தும் ஏன் இங்கு வந்தாய்..?"

"வித்யாவை என் அண்ணியாக்கிக் கொள்ள.."

"பூர்ணி.. புரியாமல் பேசாதே.. வித்யாவை நான் விட்டுவிட மாட்டேன் நம்பு.."

"இல்லை.. நான் நம்பமாட்டேன்... எப்போது நீங்களும், அவளும் கணவன் மனைவியாக என் கல்யாணத்தை நடத்தி வைப்பீர்களோ அப்பொழுதுதான் என் கல்யாணம் நடக்கும்.."

நரேந்திரன் அவஸ்தையில் சிக்கினான்.. அதே நேரம் வித்யாவும் பிரகாஷும் பேசிக் கொண்டே வர அவர்களது பேச்சு நின்றது..

வித்யாவும், பிரகாஷும் கலகலப்பாய் பேசிக் கொண்டே வர பூர்ணிமா இறுக்கமாய் சாலையைப் பார்த்துக் கொண்டு வந்தாள்..

நரேந்திரன் யோசனையாய் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான்..

வீட்டுக்குள் நுழையும் போதே வீட்டின் கலகலப்பு கூடியிருப்பது தெரிந்தது..

யாராக இருக்கும் என்ற யோசனையுடன் பூர்ணிமா செல்ல,

"ஹாய் பூர்ணிமா.. ஹவ் ஆர் யூ..?" என்றபடி சுரேந்திரன்.. அவளது நான்காவது அண்ணன் சுரேந்திர பூபதி அவள் தோளைச் சுற்றி கைபோட்டு வினவினான்..

"சுரேன் அண்ணா.. எப்போது வந்தாய்..?" என்று கண்களை அகல விரித்தாள் பூர்ணிமா.. அவளுக்குப் பதில் சொல்வதற்குள் அவள் பின்னே வந்த வித்யாவைப் பார்த்த சுரேந்திரனின் கண்கள் வியப்பில் விரிந்தன..

"வாவ்.. இந்த ஊரில் இப்படி ஒரு பியூட்டியா..?" என்று அவன் கூற பூர்ணிமாவின் முகம் கூம்பியது..

மீனலோசனி, பிரபாவதி தேவியின் முகங்கள் மலர்ந்தன..

17

நதியோரம் நடந்தபோது

தீண்டிச் சென்ற தென்றல் காற்றே

வறண்டு போன என் மனதின்

தாகம் தீர்க்கும் நீர் ஊற்றே!

...நதியோரம் நான் நடந்த போது...

சுரேந்திர பூபதி வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்தான்.. அவன் திடீரென்று வந்து நிற்கவும் குடும்பத்தினர் அனைவருக்கும் தலை, கால் புரியவில்லை, பூர்ணிமாவை விட நான்கு வயது மூத்தவனான அவனை பூர்ணிமா 'வா, போ' என்று தான் அழைப்பாள்..

"சுரேன் அண்ணா.. நேற்று உன்கூட போனில் பேசிய போது கூட நீ இந்தியாவிற்கு வந்து விட்டதை ஏன் சொல்லவில்லை..?" என்று சிணுங்கினாள் பூர்ணிமா..

"சுரேந்திரனின் மறு பெயர் சஸ்பென்ஸ்" என்று சிரித்தான் சுரேந்திரன்..

இந்தச் சந்தடியில் வித்யா நழுவி தன் அறைக்குச் சென்று விட்டிருந்தாள்.. அதைக் கவனித்த பிரகாசின் மனம் கனிந்தது.. அருவிக் கரையில் நடந்த சம்பவம் அவன் மனதில் ஆழப் பதிந்திருந்தது.. வித்யா நீரில் மூழ்கியதும் ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் நரேந்திரன் நீரில் பாய்ந்த காட்சி அவன் நினைவில் ஆடியது.. தலையில் காயம் பட்டதை உணராதவனாய் வித்யாவிற்காக அவன் துடிக்க வித்யாவோ கண் விழித்த மறுகணம் நரேந்திரனின் முகத்தில் காயம் கண்டு பதறுகிறாள்.. கூடப் பிறந்த தங்கையான பூர்ணிமாவே தன் சகோதரனின் காயத்தைக் கவனிக்கவில்லை.. நரேந்திரனும், வித்யாவும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அக்கறையையும் ஆழமான காதலையும் அது நிரூபித்தது..

பிரகாஷ் பூர்ணிமாவை நேசித்தது அவள் தன் மாமன் மகள் என்பதற்காக மட்டுமில்லை.. அவளது நியாயம் பார்க்கும் குணத்திற்காக அவனது சொந்தங்களில் அவளது குண இயல்பைக் கொண்டவர்கள் ஒருவர்கூட இல்லை.. பணத்திலே பிறந்து வளர்ந்தாலும் அவளிடம் காணப்படும் எளிமை.. அனைவரையும் நேசிக்கும் தன்மை.. அவனை அவளை நேசிக்க வைத்தது..

தான் பூர்ணிமாவை மணக்காவிட்டால்கூட பூர்ணிமா தன்னைத் தவிர யாரையும் மனத்தால் கூட நினைத்துப் பார்க்க மாட்டாள் என்பதை பிரகாஷ் நன்கு அறிவான்.. அவ்வளவு தீவிரமாக தன்னைக் காதலிப்பவள் திருமணத்தை மறுப்பது அவனுக்கு கோபத்தை உண்டு பண்ணியது..

நரேந்திரனைப் பற்றி அவனைப் பெற்ற அன்னையே கவலை கொள்ளாதபோது பூர்ணிமா ஏன் தன் காதலைப் பணயம் வைக்க வேண்டும் என்ற எண்ணம் தான் அவனுக்கு.. அவனுக்கும் குடும்பம் இருக்கிறது.. தாய் தந்தையர் இருக்கிறார்கள்.. ஒரே தங்கையான பிரபாவதியும் மணமுடித்து குழந்தை பெற்று விட்டாள்.. குடும்பத்திற்கு ஒரே மகன்.. அவன் திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்று அவனது பெற்றோர் அவசரப்படுவதில் தவறேதும் இல்லை.. அதுவும் ஐந்து வருடத்திற்கு முன்பாகவே நிச்சயதார்த்தம் நடந்து முடிந்து விட்டிருந்தது..

இந்நிலையில் பூர்ணிமா திருமணத்திற்கு சம்மதித்து மணிமுத்தாறுக்கு திரும்பி வரப் போவதாக நரேந்திரன் கூறியதும் அவன் வியப்பில் ஆழ்ந்தான்.. பூர்ணிமாவிடம் போனில் பேசினால், "நேரில் வா.." என்றாள்.. அவள் சென்னையிலிருந்து வந்த மறுநாளே பிரகாஷ்.. பூர்ணிமாவைத் தேடி வந்து விட்டான்.. பூர்ணிமா அவனை தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பேசினாள்.. சென்னையில் நடந்தை எடுத்துரைத்தாள்..

"இப்போது முடிவாய் என்னதான் சொல்கிறாய்..?" என்று எரிச்சலுடன் வினவினான் பிரகாஷ்..

"பிரகாஷ்.. உங்களுக்கு நான் வேண்டுமென்றால் எனக்கு வித்யா என் பெரியண்ணியாக வேண்டும்.."

"எதை வைத்து வித்யாவிற்கு உன் அண்ணன் மேல் காதல் என்கிறாய்..?"

"பிரகாஷ்.. வித்யாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.. அவள் அறிமுகமில்லாத ஆண்களிடம் நின்று பேச மாட்டாள்.. அறிமுகமானவர்களிடம் தனியே பேச மாட்டாள்.."

"உன் அண்ணன் என்பதற்காகப் பேசியிருக்கலா மில்லையா..?"

"ம்ம்.. அந்தக் காரணத்திற்காக மட்டும் பேசுவதாக இருந்தால் கடற்கரையில் என் அண்ணனுடன் தனித்துப் பேசியதோடு நிறுத்தியிருப்பாள்.. இரவில் தனியாக வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் மொட்டை மாடிக்குப் போய் சந்திக்க மாட்டாள்.."

"அப்படியேயிருந்தாலும் காதல் இருகை ஓசையாக இருக்க வேண்டும் பூர்ணி.. ஒரு கை ஓசையாக இருக்கக் கூடாது.."

"இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்..? நரேந்திரன் அண்ணா வித்யாவைப் பார்க்கும் பார்வையில் காதல் தெரிகிறது.."

"அது உன் கற்பனையாக இருக்கலாம்.."

"இருக்கட்டுமே.. கனவு, நனவாகக் கூடாதா..?"

"அவ்வளவு அக்கைற அந்தப் பெண் மீது உனக்கெதற்கு..?"

"என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள் பிரகாஷ்.. என் பணக்காரத் தனத்தைப் பற்றிக் காலேஜே பேசும்போது என்னைப் பற்றி மட்டும் அவள் பேசினாள்.. என் துணைக்காக அவளை என்னுடன் தங்க அழைத்தேன்.. அதற்கான வாடகைப் பணம், சாப்பாட்டுப் பணத்தை பெற்றுக் கொள்ளாவிட்டால் தங்க மாட்டேனென்று சொல்லி விட்டாள்.. எனக்கு அவள் கொடுத்த பணத்தில் சென்னையில் எந்த லேடீஸ் ஹாஸ்டலிலும் அவள் தங்கலாம்.. ஒரு பைசா குறைத்துக் கொடுத்ததில்லை.. என்

கர்ச்சீப்பைக்கூட தவறுதலாகவோ, ஞாபக மறதியாகவோ எடுத்துப் பயன் படுத்தியதில்லை.. என் அண்ணனைப் பற்றி நான் பேசுவதைக் கேட்க அவளுக்கு மிகவும் பிடிக்கும். எங்களிருவருக்காக தன் வாழ்வைப் பணயம் வைக்க வேண்டிய அளவுக்கு நன்றிக் கடன் என்னிடம் துளியளவு கூட அவளுக்கு இல்லை..

மாறாக என்னை எனக்காக நேசித்ததற்கு நான்தான் அவளிடம் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.. அவள் வாழ்வை துச்சமாக எண்ணி என் அண்ணன் சொல்லச் சொன்ன பொய்யை எங்களிருவருக்காக அவள் சொன்னாள்.. தன்மானம் பார்ப்பவள்.. எங்களுக்காக மகியண்ணன் இன்று பேசிய வார்த்தைகளைத் தாங்கிக் கொண்டாள்.. சுய மரியாதை பார்ப்பவள்.. எங்களுக்காக உங்கள் தங்கையும், மீனலோசனி அண்ணியும் செய்த உதாசீனங்களைப் பொறுத்துக் கொண்டாள் பிரகாஷ்!

அவள் பணத்தைப் பெரிதாக நினைப்பவளில்லை.. மனத்தை நினைப்பவள்.. என் திருமணம் மட்டும் முடிந்து விட்டால் அடுத்த கணம் அநாதை மாதிரி இந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவாள்.. ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.. அப்படி அவள் வெளியேறி விட்டால் நான் என் உயிரையே விட்டு விடுவேன்.."

"பூர்ணிமா" என்று அதட்டினான் பிரகாஷ்..

"பைத்தியம் மாதிரி உளராதே.. இவ்வளவு அன்பை அவள் மேல் வைக்க அவள் தகுதியானவள்தானா என்பது முதலில் எனக்குத் தெரிய வேண்டும்.."

உணர்ச்சி மேலிட்டால் பூர்ணிமா பிரகாஷை 'வா, போ' என்று தான் அழைப்பாள்..

"நீ அவள் முகத்தைப் பார்த்தால் இப்படிப் பேச மாட்டாய் பிரகாஷ்.." என்று கூறிக் கொண்டிருக்கும்போது நரேந்தினும் வித்யாவும் அங்கே வந்தார்கள்.. பிரகாஷ் வித்யாவின் பால் போன்ற களங்கமில்லாத வெள்ளை முகத்தைப் பார்த்தான்.. அடுத்து வந்த நாள்களில் பூர்ணிமா வித்யாவைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மையே

என்பதைக் கண்டு கொண்டான்.. நரேந்திரன் மேல் அளவற்ற அன்பும், மதிப்பும் வைத்திருப்பவன்.. அவன் முகத்தில் வித்யா வந்த பின் தோன்றியிருக்கும் ஒளி அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது..

"பூர்ணி.. நீயே என்னை வற்புறுத்தினாலும், நரேன் மாமா என் தங்கை வித்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் நான் உன்னை மணந்து கொள்வேன்.." என்று பூர்ணிமாவிடம் தீர்மானமாய் மொழிந்தான்..

பூர்ணிமா பிரகாஷ் பச்சைக் கொடி காட்டியதும் நரேந்திரனுக்குப் போர்கொடி காட்டி விட்டாள்.. ஆனால் பூர்ணிமாவே அறிய மாட்டாள்.. நரேந்திரன் வித்யாவின் மேல் வெறித்தனமான காதல் கொண்டு விட்டான் என்பதை.

நரேந்திரன் சென்னையில் பூர்ணிமா நிபந்தனை இட்டதும் வித்யாவை மொட்டை மாடியில் சந்திக்கும் முன்னர் ஒரு முடிவு எடுத்திருந்தான்.. தங்கள் குடும்பத்திற்காக ஓர் இளம் பெண்ணின் வாழ்வின் துன்பம் வந்து விடக்கூடாது என்பதற்காக அவன் எடுத்த முடிவு அது.. தீய பழக்கங்கள் வந்த பின் திருமணத்தையே தவிர்த்த நேர்மையாளன் ஆயிற்றே அவன்..

நரேந்திரன் சுரேந்திரனிடம் பேசினான்..

"சுரேன்.. உனக்காக ஒரு பெண் பார்த்திருக்கிறேன்.. நீ எதுவும் காதலில் விழுந்து விடவில்லையே.. உனக்காக நான் முடிவு எடுக்கலாமா..?"

"அண்ணா.. உங்களுக்கு அந்த உரிமை உண்டு.. பட் எனக்குப் பெண்ணைப் பிடித்திருக்க வேண்டும்.."

"நிச்சயம் பிடிக்கும்.. அவள் மிக மிக அழகானவள்.. இன்ஜினியரிங் படித்திருக்கிறாள்.. ஆனால் நம் ராஜ பரம்பரையில்லை.. ஏழை.."

"ஸோ வாட்..? நான் இந்தியா வருகிறேன்.. எனக்குப் பிடித்திருந்தால் திருமணம் பண்ணிக் கொள்கிறேன்.."

சுரேந்திரனிடம் பேசிய பின் தான் வித்யாவை மொட்டை மாடியில் சந்தித்தான் அவன்.. கடற்கரையிலேயே வித்யாவின் பால் ஈர்க்கப்பட்ட அவன் மனம் அந்த இரவில் நிலவின் ஒளியில் அவளுடன் பேசிய பொழுது முழுதாய் அவளால் வசீகரிக்கப்பட்டுவிட்டது.. மணிமுத்தாறு வந்த பின் ஒவ்வொரு நொடியும் அவளது வரவிற்காக அவன் மனம் ஏங்கி அவள் வரவை எதிர்பார்க்க ஆரம்பித்தது.. அவள் வந்த பின் முதல் நாள் மாலையே அவளுடன் நதியோரம் நடந்தபோது அவன் மனதை கொள்ளை கொண்டு விட்டாள் அவள்.. அந்த மாலை நேரத்தை இப்போது நினைத்தாலும் அவன் நெஞ்சம் இனிக்கும். மேனி சிலிர்க்கும்.. உடலில் ஓர் தாகம் உற்பத்தியாகும்..

அடுத்து வந்த நாள்களின் மாலை நேரங்களை அவர்கள் நதியோரம் கழித்தார்கள்.. ஒருவர் சுமைகளை மற்றவரிடம் இறக்கினார்கள்.. இனிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.. பாரதியார் பாடல்களை ஒருவர் பாட மற்றவர் கேட்டு மகிழ்ந்தார்கள்..

"நின்னையே ரதி என்று நினைக்கிறேனடி கண்ணம்மா.." என்று அவன் பாடினால்..

"ஆற்றங்கரை அருகே அன்று ஒருநாள் - என்னை

அணைத்துப் பல கதைகள் பேசியதெல்லாம்.." என்று அவள் பாடினாள்..

அவளன்றி அவனில்லை என்ற நிலைக்கு நரேந்திரன் வந்திருந்தபோதுதான் அவர்கள் நால்வரும் அருவிக் கரைக்குச் சென்றனர்.. வித்யா நீரில் மூழ்கியது மட்டும்தான் அவன் நினைவில் நின்றது.. அவன் தண்ணீரில் பாய்ந்தது அவளை மீட்டது எதுவுமே அவன் நினைவில் இல்லை.. வித்யா கண் விழித்த பின்தான் அவன் நினைவும் விழித்தது..

அப்போதுதான் பூர்ணிமா அவனிடம் மீண்டும் நிபந்தனையிட்டாள்... 'வித்யாவை விரட்டி விடுவாய்..'

என்று அவள் குற்றம் சாட்டியபோது அவன் துடித்து விட்டான்.. அவள் சென்று விட்டால் அவன் என்ன ஆவான்..? உயிரில்லாத வெறும் கூடு ஆவான்.. இதை எப்படி மற்றவர்களுக்குப் புரிய வைப்பது என்று அவன் தவித்துக் கொண்டிருக்கும் போது அவன் மறந்து விட்டிருந்த சுரேந்திரன் அவனது கோரிக்கையை நிறைவேற்ற இந்தியா திரும்பி விட்டான்.. வந்தவனின் முதல் பார்வையே வித்யாவை மோகித்த பார்வையாய் இருக்க நரேந்திரன் நிலைகுலைந்து போனான்..

சுரேந்திரன் வந்து ஐந்தாம் மாதம் பேக்டரியில் ஓர் சம்பவம் நடந்தது. தொழிலாளர் ஒருவருக்கு அடிபட்டு விட்டது.. வித்யாவிற்கு தகவல் வந்ததும் அவள் துரிதமாகச் செயல்பட்டாள்.. தொழிலாளர் உடனே மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.. அவரது மருத்துவச் செலவுகளுக்கான பில்லை பேக்டரி நிர்வாகத்திற்கு அனுப்பும்படி மருத்துவமனைக்கு தகவல் கடிதம் கொடுத்தாள்.. எதனால் விபத்து ஏற்பட்டது என்று ஆராயும்படி போர்மேன்களைக் கேட்டுக் கொண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் விபத்து பற்றி அறிக்கை வந்து விட்டது.. அந்தத் தொழிலாளர் மெஷினைத் துடைத்துக் கொண்டிருக்கும்போது அவரிருப்பது தெரியாமல் மற்றொருவர் மெஷினை இயக்கும் சுவிட்சைப் போட்டு விட்டார்..

ஆனால் மகேந்திரன் தாம் தூமென்று குதித்தான்.. யார் வீட்டுப் பணத்தை யார் யாருக்குச் செலவழிப்பது என்று கேட்டான்.. அடிபட்ட தொழிலாளி குடித்து விட்டு வந்திருந்தாரென்று கூறி அவரை வேலை நேரத்தில் குடித்ததற்கு வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று வித்யாவிடம் சத்தம் போட்டான்.. பேக்டரியில் பதற்ற நிலை உருவானது.. தொழிலாளர்களின் முகங்களில் அதிருப்தி தோன்றியது.. தீவிரமான முகங்களுடன் அவர்கள் கொதிநிலையில் இருந்தார்கள்.. மகேந்திரன் பேக்டரியின் மையத்திலிருந்து கத்திக் கொண்டிருக்க வித்யா ஒரு கட்டத்தில் பொறுமையை கைவிட்டாள்..

"மிஸ்டர் ஜி.எம். எதை வைத்து அந்தத் தொழிலாளி குடித்திருந்தார்ன்னு சொல்கிறீர்கள்..?"

"அவன் குடிகாரன்னு ஊரே சொல்லும்.."

"என் கேள்வி என்னன்னா அவர் வேலைக்கு இன்றைக்குக் குடித்து விட்டு வந்தாரா..?"

"இதற்கு முன்னால் கூட அவன் வேலைக்குக் குடித்து விட்டு வந்ததில்லைம்மா.. உடல் வலிக்க வேலை செய்கிறோம்.. வேலை முடிந்தால் வீட்டுக்குப் போற வழியில் தண்ணி போடறோம்.. இவர் யாரும்மா அதைக் கேட்கிறதுக்கு..?" யூனியன் லீடர் கோபமாய் கேட்டார்..

"வெயிட், வெயிட்.. நான்தான் பேசிக்கிட்டு இருக்கிறேனில்லை.. அப்புறம் ஏன் நீங்கள் நடுவில் வருகிறீர்கள்.. இதோ பாருங்கள் யூனியன் லீடர் உங்களுக்கு அநீதி நடந்தால் மட்டுமே நீங்கள் பேச வேண்டும்.."

"நீங்கள் சரியாத்தான் செஞ்சிருக்கீங்கம்மா.. சார் என்னவோ இந்தக் குதி குதிக்கிறாரு.. எங்க வியர்வையில் தான் அவர் மாளிகை கட்டியிருக்காரு.. பார்த்துப் பேசச் சொல்லுங்க.." யூனியன் லீடரின் வார்த்தைகள் போராட்டத் துக்கு அடிகோல வித்யா, 'போதுமா' என்பது போல் மகேந்திரனைப் பார்த்தாள்..

எந்த இடத்தில் எப்படிப் பேச வேண்டும் என்று தெரியாத இவனை வைத்துக் கொண்டு நரேந்திரன் என்ன பாடுபட்டிருப்பான் என்று தோன்றியது.. வித்யா கண்டிப்புடன் மகேந்திரனைப் பார்த்தாள்..

"ஜி.எம் சார்.. ஹாஸ்பிடல் ரிப்போர்ட் தெளிவாக இருக்கிறது.. அவர் குடித்திருக்கவில்லை.. பேக்டரி ரிப்போர்ட்டும் தெளிவாக அவர் சுய நினைவுடன் வேலை பார்த்தாக இருக்கிறது.. ப்ளீஸ் கோ அஹெட்.. திஸ் பிளாப்ளம் இஸ் ஆல்ரெடி ஓவர்.."

"இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.."

"ஐ டோன்ட் கேர்.. நான் இந்தப் பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜர்.. எனக்கு பவர் இருக்கிறது.. என் வேலையில் தலையிட வேண்டாம்.."

மகேந்திரன் தான் யார் என்று காட்டுவதாய் சவால் விட்டுச் சென்றான்.. யூனியன்

லீடரைச் சமாதானப் படுத்தி தொழிலாளர்களிடம் தன்மையாகப் பேசி நிலைமையைச் சுமூகமாகக்குவதற்குள் வித்யாவிற்கு போதும் போதுமென்றாகி விட்டது..

அன்று மாலை நதியோரம் நரேந்திரனுடன் பேசிக் கொண்டு நடந்தபோது பேக்டரியில் நிகழ்ந்தவற்றைக் கூறினாள்..

"எனக்குத் தெரியும்.. குகன் கூறினான்.. வித்யா.. நீ மதியம் கூடச் சரியாகச் சாப்பிடவில்லை.. வாடித் தெரிகிறாய்.."

"அப்படியெல்லாமில்லை.. ஆக்சுவலாய் நான் உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.." நீரில் கால்களால் துழாவியபடி வித்யா கூறினாள்.. நரேந்திரன் துக்கத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தான்..

"என்னைப் பற்றி நினைத்தாயா..?" என்று வினவினான்..

"உங்களைப் பற்றி நினைக்காமல் வேறு யாரைப் பற்றி நினைப்பேன்.." கலீரென்று சிரித்தபடி வித்யா கூறினாள்..

நரேந்திரன் அவள் முகம் பார்க்க இயலாமல் வானம் பார்த்தான்..

18

நதியோரம் நடந்தபோது

நீரோரம் பாதம் நடக்கும்

காலடியில் மணல் குறுகுறுக்கும்

கண்ணீரே விழி நனைக்கும்

…நதியோரம் நான் நடந்த போது…

அந்தி மாலையின் சூழ்நிலை மனதை மயக்கியது.. வெயில் தாழ்ந்த நேரம் நடப்பதோ நதி ஓரம்.. மனம் மயங்கக் கேட்பானேன்..? வித்யாவிற்குப் பாட வேண்டும் போல் மனதில் உல்லாசம் பிறந்தது.. திரும்பி நரேந்திரனின் முகம் பார்த்தாள்.. அவன் முகம் சோர்ந்திருந்தது.. காரணம் விளங்கவில்லை.. அவன் பாட்டில் மயங்குபவன்..

"பூ மாலையில் ஓர் மல்லிகை..

இங்கு நான்தான் தேன் என்றது..

உந்தன் வீடு தேடி வந்தது..

இன்னும் வேண்டுமா என்றது.."

பி.சுசீலா பாடிய பாடல்.. வித்யா பாடும்போது வித்தியாசமே இல்லை.. கோடிக்கணக்கில் பணமிருந்தும் யாசகனாய் தவித்த அந்த துரதிர்ஷ்டசாலி அவள் குரலில மயங்கினான். தன் துயரம் மறந்தான்.. காதலில் உருகினான் அந்தி மயங்கி இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் நதி நீரை சாட்சியாக வைத்து நரேந்திரன் நடுங்கும் தன் கரங்களால் அவள் கரம் பற்றினான்..

"வித்யா.." என்றழைத்த அவன் குரலும் நடுங்கியது.

அவன் கைகளுக்குள் சிக்கியிருந்த தன் இரு கரங்களையும் விடுவிக்க விரும்பாதவளாய் வித்யா ஆனந்தத்தில் மூழ்கி நின்றாள்.. தவத்தின் பயனாக வரம் பெற்ற பக்தனைப் போல் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தாள்.. அவன் முகம் பார்க்க முடியாமல் தவித்தாள்..

நரேந்திரன் அனைத்தையும் மறந்தான்.. அவன் முன்னே நதியும் அதன் கரையோரம் நின்ற வித்யாவும் மட்டுமே தெரிந்தனர்.. அவள் முகம் கவிழ்ந்தது.. தன் ஒற்றை விரலால் அவள் முகம் நிமிர்த்தினான்.. நிமிர்ந்த அவள் விழிகள் அவன் விழி பார்க்க முடியாமல் வெட்கின.. வித்யா முகம் சிவக்க கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவள்

இதயம் போல் இமைகளும் படபடத்தன.. நிற்க முடியாமல் தொய்ந்தாள்.. நரேந்திரன் தாங்க மாட்டாமல் அவளை இறுக அணைத்தான்.. அவன் கைகளுக்கு மறுப்பே தெரிவிக்காமல் அவள் அடங்கியதும் அவள் மனதைப் புரிந்து கொண்டவன் நம்ப முடியாதவனாய் திகைத்துப் போனான்..

தன் மார்பில் முகம் புதைத்திருந்த அவள் கூந்தலில் முகம் புதைத்தவன் தாங்க முடியாமல் விம்மியழுதான்.. அவன் கண்ணீரில் மனம் கரைந்தாலும் அவள் அவனைத் தேற்ற முனையவில்லை.. தேற்றுவதற்காகக் கூட அவனை விட்டு விலக அவளால் முடியவில்லை..

எத்தனையோ யுகங்கள் போலக் கழிந்த நிமிடங் களுக்குப் பிறகு அவன் மெதுவாய் அவளை விடுவித்தான்.. சுற்றி இப்போது மையிருட்டு கவிந்திருந்தது... பேச அவனுக்கு நா எழும்பவில்லை.. அவன் பேசாமல் பேச அவள் விரும்பவில்லை.. இருவரும் மௌனமாக நடந்து காருக்கு வந்தனர்.. உள்ளே அமர்ந்த பின்னும் காரைக் கிளப்பாமல் நரேந்திரன் அசைவின்றி அமர்ந்திருந்தான்.. பின்னர் ஒரு பெருமூச்சு விட்டான்..

"வித்யா நீ தேவதை.. நான் சாக்கடையில் சுகம் கண்டவன்.."

"இதையே எத்தனை முறை சொல்வீர்கள்.."

"அத்தனை முறை சொல்லியுமா உன் மனம் என்னை வெறுக்கவில்லை..?"

"முடியவில்லை.."

"என்ன..?"

"என்னால் உங்களை வெறுக்க முடியவில்லை.."

அவள் நாத்தழுதழுத்தாள்.. நரேந்திரன் உதடு கடித்து துயரம் அடக்கினான்.. சொல்லி விடலாமா..? சுரேந்திரனை வரவழைத்தது தான் தான் என்பதைச் சொல்லி விடலாமா..? எதற்காக வரவழைத்தான் என்பதையும் சொல்லிவிடலாமா..? சொன்னால் இவனை

மன்னிப்பாளா..? மனதின் குற்றச்சாட்டு தாங்காமல் பேய் துரத்துவது போல் காரை விரட்டினான்.. வீட்டில் காரை நிறுத்தியதும் இறங்கியவன் அவள் முகம் பார்க்காமல் வீட்டிற்குள் மறைந்தான்.. ஏனிந்த மாற்றமென்று வித்யாவிற்கு விளங்கவில்லை..

வானில் சிறகடித்த பறவை நொடிப் பொழுதில் இறக்கை வெட்டுண்டு தரையில் வீழ்ந்தது.. வித்யாவின் அடிபட்ட உணர்வுகள் அடி மனதில் அமிழ்ந்தன..

"ஏண்டி முகம் என்னவோ போலிருக்கு இந்தா காபி சாப்பிடு.." என்றபடி காபியோடு வந்தாள் பூர்ணிமா..

"ஆமாம்.. வேலைக்காரி போல அவளுக்கு நீ காபி கொண்டு வந்து கொடு.. வைக்கிற இடத்தில் வைக்காத தால் தான் அவள் இந்த ஆட்டம் போடுகிறாள்.." என்று சீறினாள் அங்கே வந்த மீனலோசனி..

"யாரை வைக்கிற இடத்தில் வைக்கனும் அண்ணி..?"

"வேலைக்காரங்களை.." வித்யாவை முறைத்தவாறு பதில் சொன்னாள் அவள்..

"எந்த வேலை பார்க்கிறவர்களை.. ஐ மீன் சமையல் வேலை பார்க்கிறவர்களையா..? டிரைவர் வேலை பார்க்கிறவர்களையா..? பெர்ஸனல் மேனேஜர் வேலை பார்க்கிறவர்களையா..? இல்லை ஜி.எம். வேலை பார்க்கிற வர்களையா..? சொல்லுங்கள் எந்த வேலைக்காரரை எந்த இடத்தில் வைக்கணும்..?"

மீனலோசனியின் முகம் பயங்கரமாய் மாறியது..

"யாரை, யாரோடு இணை சேர்க்கிறாய்.. ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டுச்சாம்.. அந்தக் கதை நடக்குதா..?"

"எப்படியோ பிடாரின்னு ஒத்துகிட்டாச் சரி.."

"பூர்ணிமா.." மீனலோசனியின் அலறல் அந்த மாளிகையின் சுவர்களில் எதிரொலித்தது.. சௌதாமினி அவசரமாய் அறையை விட்டு வெளியே வந்தாள்.. பிரபாவதி மாடிப்படிகளில் இறங்கி ஓடி வந்தாள்..

யுகேந்திரன் பின்னாலே தொடர்ந்து வந்தான்.. தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்த சுரேந்திரனும், பிரகாசும் அவசரமாய் வீட்டுக்குள் வந்தனர்.. மகேந்திரன் மனைவியின் அருகில் நின்று கொண்டு தங்கையை முறைத்துக் கொண்டிருந்தான்.. வித்யாவிற்கு பதட்டமாய் இருந்தது.. அவள் நகர முடியவில்லை.. அவள் பொருட்டு பூர்ணிமா போராடிக் கொண்டிருக்கும்போது அங்கிருந்து நகர்வது தர்மமல்ல என்பது அவளது எண்ணம்.. பூர்ணிமா மீனலோசனியை அலட்சியமாகப் பார்த்தாள்..

"எதுக்குக் கத்தறீங்க..?"

"கத்தறேனா..? நானா..? ஏன் பேச மாட்டாய்.. உனக்கு அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து கெடுத்து வைத்திருக்கிறார்கள்.. நாலு, போடு போட்டு வளர்த்திருந்தால் இப்படி இருக்க மாட்டாய்.."

"எப்படி இருக்கிறேன்..? நிச்சயம் பண்ணிய கல்யாணத்தை நிறுத்தி மாப்பிள்ளையை மாற்றி தாலி கட்டிக் கொண்டேனா..?"

"பூர்ணிமா" மீண்டும் அலறினாள் மீனலோசனி..

"சும்மா கூப்பாடு போடாதீர்கள்.. பேச வேண்டாம் என்று நானும் பொறுத்துப் போகிறேன்.. அடக்க ஒடுக்கத்தைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்களா..? கல்யாணம் பேசும்போது நான் இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்.. இவனைத் தான் காதலிக்கிறேன்னு சொல்ல மாட்டீங்க.. பார்த்துப் பார்த்து புடவை வாங்கும் போது ஒழுக்கமான பெண் போல் வந்து செலக்ட் பண்ணுவீங்க.. நகை வாங்கும்போது பல்லைக் காட்டிக்கிட்டு வாங்கிப் போட்டுக்குவீங்க.. கல்யாணம் பண்ணும்போது தெரியாத்தனமாய் உங்களைப் பெற்றவங்க பேச்சை நம்பி நீங்க தங்கக்கம்பின்னு நினைச்சுக்கிட்டு கல்யாணம் பண்ணிக்க சம்மதித்த மாப்பிள்ளையின் கழுத்தை அறுப்பீங்க.. நீங்கள்ளாம் வளர்ப்பைப் பற்றிப் பேசுகிறீர்கள்.. உங்களைப் பெற்றவங்க உங்களை வளர்த்ததுபோல் என் வீட்டில் என்னை வளர்க்கலை..

புரிந்ததா..? எனக்கு இஷ்டம்ன்னா கல்யாணம் பண்ணிக்குவேன்.. இல்லைன்னா வேண்டாம்னு சொல்லுவேன்.. என் சுயநலத்துக்காக மற்றவங்களை காயப்படுத்த மாட்டேன்.. காதலாம் கத்தரிக்காயம்.. இவங்கள்லாம் பேச வந்திட்டாங்க.. இங்கே பாருங்க என்னைப் பேசுகிற தகுதி உங்களுக்குக் கிடையாது.."

"அவள் என்ன பேச்சு பேசுகிறாள்.. நீங்கள் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறீர்களே.." மீனலோசனி கணவனிடம் பாய்ந்தாள்..

"அவளாய் பேசலை மீனு.. தூண்டி விடறவங்க வேற" என்றான் மகேந்திரன் வித்யாவை குரோதமாய் பார்த்தபடி..

"யாரும் என்னைத் தூண்டி விடவில்லை.. இந்த வீட்டில் யார் யாரைத் தூண்டி விடுகிறார்கள்ன்னு எனக்குத் தெரியும்.. அண்ணா பேக்டரி விசயம் பேக்டரியோடு.. வீட்டுக்குக் கொண்டு வராதீர்கள்.."

"அப்போ எனக்குப் பவர் இல்லையா..?"

"உங்கள் பவரைத்தான் பார்த்திருக்கிறேனே.. அடுத்த வருக்கு நிச்சயம் பண்ணின பெண்ணை அவர் காலிலேயே விழுந்து கல்யாணம் பண்ணிக்கிட்டதுதானே உங்க பவர்.. வேண்டாம் அண்ணா.. நான் உங்களிடம் பேசுவதில்லை.. என்னிடம் வம்பு வளர்க்காதீர்கள்.."

"அம்மா.. எனக்கு ஒரு முடிவு தெரியணும்.. நான் பேக்டரியில் டம்மி ஆக்கப்பட்டிருக்கிறேன்.. நீங்கள் எதுவுமே கேட்க மாட்டீர்களா..?" மகேந்திரன் தாயிடம் புகார் செய்ய சௌதாமினி கை பிசைந்தாள்..

"இதெல்லாம் எனக்கு என்னப்பா தெரியும்.. அண்ணன் முடிவு தானே இது..? அண்ணனிடம் கேள்.."

"அவரா.. அவர்தான் முன் போலில்லையே.. பெண் ணெனும் மாயப் பிசாசு அவரைப் பிடித்து ஆட்டுகிறதே.."

மகேந்திரன் வித்யாவைப் பார்த்துக் கொண்டே விஷமமாகக் கூறினான்..

"அப்போ உங்களை எந்தப் பிசாசு பிடித்திருக்கிறது அண்ணா.."

இந்த வார்த்தைகள் எப்போதும் பூர்ணிமாவின் வாயிலிருந்து தான் வரும்.. ஆனால் சுரேந்திரனின் வாயிலிருந்து வந்தன, மகேந்திரனும், யுகேந்திரனும் திகைத்துப் போயினர்..

"சுரேன்.. நீயா.. அண்ணன் என்ற மரியாதை இல்லாமல் எப்போது பேசக் கற்றுக் கொண்டாய்..?" மகேந்திரன் கண்டித்தான்..

"உங்களைப் பார்த்துத்தான் கற்றுக் கொண்டேன்.." என்றான் அவன்..

"என்ன உளருகிறாய்..?"

"உளறலா.. உங்களிடமா..? நீங்கள் அண்ணனை பிசாசு பிடித்திருக்கிறது என்று கூறலாம்.. நான் கூறக்கூடாதா..?"

மகேந்திரன் செய்வதறியாது மனைவியைப் பார்த்தான்.. அவள் பல் கடித்து வார்த்தைகளைத் துப்பினாள்..

"கல்யாணம் ஆகாத ஆண்களைப் பிடிக்கிற பிசாசு அது.. ஒன்று தான் மாட்டியிருக்கிறது என்று நினைத்தோம். இப்ப இரண்டையுமில்லை பிடித்து ஆட்டுகிறது.. பிரபா.. ஜாக்கிரதை.. உன் கணவரைப் பத்திரமாய் பார்த்துக் கொள்.. மூன்றாவதாய் அவரைப் பிடித்து விடப் போகிறது."

"நான் விட்டு விடுவேனா அக்கா.. பேயோட்டி விட மாட்டேன்..?" என்றாள் பிரபாவதி வித்யாவை ஏளனமாய பார்த்துக் கொண்டு..

"குட் பிரபா.. நாகரிகமாகப் பேசுகிறாய்.. நம் வீட்டில் இப்படியெல்லாம் நீ பேசி நான் கேட்டதில்லையே.. பழக்க தோசமா..?" என்று பிரகாஷ் கோபத்துடன் மீனலோசனியைப் பார்த்தவாறு தங்கையைக் கேட்டான்..

"கணவருக்கு ஓர் அவமானமென்றால் மனைவி பார்த்துக் கொண்டு நிற்பாளா..?" என்று யுகேந்திரன் கேட்டான்..

"தாராளமாய்.. ஆனால் இப்போது பூர்ணிமா கேட்டாளே.. என் வீட்டில் என்னை நன்றாகத்தான் வளர்த்து வைத்திருக்கிறார்கள்.. உங்களுக்குத்தான் வளர்ப்பு சரியில்லையென்று.. அப்படி பிறந்த வீட்டிற்குப் பெயர் வாங்கிக் கொடுக்காமலிருக்க வேண்டும்.." என்றான் பிரகாஷ்..

பிரபாவதி அடங்கி விட்டாள்.. மீனலோசனி கொதித்துப் போனாள்..

"ஒரு பெண்ணுக்கு இத்தனை ஆதரவா..? சபாஷ்.." என்றாள்..

"ஆனால்.. உங்களுக்கு ஒருபெண்கூட ஆதரவுக்கு வரமாட்டாள்.." என்றாள் பூர்ணிமா..

"அப்போ.. இவள் செய்வதுதான் சரி என்பீர்கள்.. என் கணவரை அவமதிப்பீர்கள் அப்படித்தானே..?"

இப்போது சுரேந்திரன் பேசினான்..

"யார்.. அவமதித்தது..? அண்ணி.. நான் வந்தவுடன் பேக்டரி, மில் இரண்டிற்குமே போய் நிலைமையை கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.. இரண்டிலுமே டோட்டலாய் ஜி.எம் சரியில்லை.. மகியண்ணா, யுகேயண்ணா முறைக்க வேண்டாம்.. உண்மை அதுதான்.. பெரிய அண்ணன் இரட்டைக் குதிரை சவாரி செய்துக்கிட்டு இருந்தார்.. வித்யா வரவும் ஒரு குதிரையில் ஒழுங்காய் சவாரி செய்கிறார்.. உங்களுக்கு அது பொறுக்க வில்லை... மகி அண்ணா.. இன்றைக்கு பேக்டரியில் நீங்கள் நடந்து கொண்ட முறை மிகவும் தவறு.. வொர்க்கர்ஸை அவமானப்படுத்தினால் அது ஸ்ட்ரைக்கில் போய் முடியும்.. வொர்க்கர்ஸ் ஸ்ட்ரைக் பண்ணினால் நமக்கு எவ்வளவு லாஸ் ஆகும் என்ற பொறுப்புணர்ச்சி ஜி.எம். என்று கூறிக் கொள்ளும் உங்களுக்கு வேண்டாமா..? உரிமை மட்டும் கொண்டாடினால் போதுமா..? உணர்ந்து செயல்பட வேண்டாமா..? வித்யா இஸ் கரெக்ட், அவங்க மட்டும் இன்னைக்கு சரியான முறையில் செயல்பட வில்லையென்றால் நிச்சயம் ஸ்ட்ரைக் நடந்திருக்கும்..

ஆக்சுவலா நீங்கள் வித்யாவுக்கு தேங்க் பண்ணனும்.. ஷி இஸ் வெரி இண்டலிஜெண்ட் அதை விட்டு விட்டு.." சுரேந்திரன் பேசப்பேச மகேந்திரனின் முகம் சுருங்கியது.. அவன் விருட்டென்று நகர மீனலோசனி பின் தொடர்ந்தாள்.. பிரபாவதி மாடியேற யுகேந்திரன் பின் தொடர்ந்தான்.. சௌதாமினி சுரேந்திரனின் அருகே வந்து அவன் முடிகோதினாள்...

"எப்படியடா இப்படித் தெளிவாகப் பேசக் கற்றுக் கொண்டாய்..?"

"அதற்குத்தானேம்மா.. வெளிநாடு போனேன்.."

"எதற்கு இப்படிப் பேசக் கற்றுக் கொள்ளவா.. படவா.. வா சாப்பிடலாம்.. வித்யா நீ போய் முகம் கழுவிக் கொண்டு வாம்மா.. எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதே.." என்றவாறு சௌதாமினி மகனை அழைக்க அவனோ..

"வித்யா முகம் கழுவி விட்டு வரட்டுமே சேர்ந்து சாப்பிடலாம்" என்றான்..

வித்யா மௌனமாய் மாடிப்படி ஏறினாள்.. நடந்த நிகழ்வுகள் அவளைப் பாதித்திருந்தன.. வித்யா பூர்ணிமா, பிரகாஷ் மூவரின் மனதிலும் ஒரே கேள்விதான் அப்போது இருந்தது..

இவ்வளவு கலாட்டா வீட்டில் நடக்கும்போது வீட்டிலேயிருந்த நரேந்திரன் அறையை விட்டு வெளியே வரவேயில்லையே ஏன்..?

ஆனால் அவர்கள் அறிய மாட்டார்கள்.. நரேந்திரன் அறையை விட்டு வெளியே வந்தான் என்பதை, வித்யாவைப் பேசியதைக் கேட்டு கண்டித்துப் பேச அவன் வாய் திறந்த அதே நேரத்தில் சுரேந்திரன் பேச ஆரம்பிக்க அவன் அமைதியாகி விட்டதை, வித்யாவுடன் சேர்ந்து சாப்பிட சுரேந்திரன் விரும்பியதைக் கேட்டதும் மீண்டும் அறைக்குள் சென்று அடைந்து கொண்டதை..

வித்யாவிற்குச் சாப்பிடக் கீழே போகவே மனமில்லை. ஆனால் பூர்ணிமா அவளை அழைத்துப் போக வந்து

விட்டாள்..

"நீ ஒதுங்கிப் போக வேண்டும் என்றுதான் இந்த ஆட்டம் ஆடுகிறார்கள்.. நீ அவர்களை ஜெயிக்க வைத்து விடாதே.. வா சாப்பிடப் போகலாம்.."

"பூர்ணி... உன் பெரிய அண்ணன் சாப்பிட வந்திருக்கிறாரா..?"

"வந்து விட்டுப் போய்விட்டார்.."

"வாட்..?"

"நாம் போவதற்குள் சாப்பிட்டுப் போய் விட்டாராம்.. முகம் வாடி இருக்கிறதாம்.. சித்தி சொன்னார்கள் அலுப்பாக இருக்கும்.. நீ வா.."

'இல்லையே' என்று அவள் மனம் தவித்தது.. அன்று மாலை தானே அவளோடு நதியோரம் நடந்து வந்தான்.. அவள் பாடல் கேட்டு மயங்கினான்.. அப்புறம்.. அப்புறம்.. அவன் தோள் தொட்ட இடங்கள் இன்னும் சிலிர்க்கிறதே.. அவன் மட்டும் எப்படி முகம் வாடினான்..? கட்டித் தழுவி உச்சி முகர்ந்தானே.. ஏன் விலகிச் செல்லுகிறான்...?

19

நதியோரம் நடந்தபோது

கூடவந்த நிலவைக் காணோம்

முதன்முதலாய் போராட்டம்

முகில் மறைத்த நிலவோட்டம்

...நதியோரம் நான் நடந்த போது...

பிரகாஷ் சாப்பாட்டு அறையில் மேஜை மேல் தாளம் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான்.. சுரேந்திரன் ஒரு ஆங்கிலப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தான்..

கண்ணம்மா சிரித்துக் கொண்டே எல்லோருக்கும் தட்டைப் போட்டுப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.. அந்த வீட்டிற்கு சுரேந்திரனும், பூர்ணிமாவும் செல்லப் பிள்ளைகள் பூர்ணிமா எப்போதும் டீச்சர் போல் நியாயம் பேசிக் கொண்டிருப்பாள்.. சுரேந்திரனோ தீராத விளையாட்டுப் பிள்ளை.. அதனாலேயே அவன் எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாகி விட்டான்... எல்லோரும் ஏதோ ஓர் காரணத்தினால் முகம் இறுகி நடமாடும் அந்த வீட்டில் எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பவன் அவன் ஒருவன் தான்.. நரேந்திரனிடம் பாசம் அதிகம் உள்ளவன்.. ஆனால் பூர்ணிமா போல் அவன் தனி மரமாய் நிற்கிறானென்று வருந்தியதில்லை.. வெளிநாட்டிலேயே படித்துக் கொண்டிருந்ததால் 'அவரவர் வாழ்கை அவர்களுக்கு, மற்றவர்கள் தலையிடக் கூடாது' என்ற எண்ணம் படைத்தவன்.. இவ்வளவு ஏன்..? அவனது தங்கையான பூர்ணிமா திருமணமே செய்து கொள்ளாமல் கடைசி வரை கன்னியாகவே இருந்தாலும் அவன் கவலைப்படவும் மாட்டான்.. கண்டு கொள்ளவும் மாட்டான்..

வெளிநாட்டில் படித்த காரணத்தினால் சிலரைப் போல் அவனுக்கும் இந்திய அழகிகள் மேல் ஈர்ப்பு இருந்தது.. எதிர்மறைத் துருவங்கள்தானே ஈர்க்கும்..? நரேந்திரன் வித்யாவைப் பற்றிப் போனில் கூறியபோது.. 'போய்த்தான் பார்ப்போமே..' என்ற அசட்டையான எண்ணத்துடன்தான் தாய் நாட்டிற்குத் திரும்பினான்.. வந்து பார்த்த முதல் பார்வையிலேயே வித்யாவை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது..

அருவியில் குளியல் போட்டதால் பின்னலில்லாமல் விரிந்திருந்த நீண்ட கூந்தல் தான் அவனை மிகவும் கவர்ந்தது.. அவ்வளவு நீண்ட கூந்தலை உடைய பெண்களை அவன் பார்த்ததே இல்லை.. 'கால் அளவு கருங்கூந்தல்' உடைய இளம் பெண்ணைப் பார்த்தவுடன் மயங்கி விட்டான்.. எளிமையான காட்டன் சுடிதாரில் அலட்சியமாய் துப்பட்டாவைப் போட்டுக் கொண்டு அவள் நின்ற விதத்தில் ஒரு படித்த கண்ணியம் தென்பட்டது..

சாயமில்லாத இயற்கை முக அழகு அவனை வசீகரித்தது.. கொடி போன்ற ஆனால் செழுமையான அவள் உடல்வாகு அவனை ஈர்த்தது.. வெளிர் மஞ்சள் நிறம் கொண்ட எலுமிச்சை அழகியாக அவள் அவனுக்குத் தோன்றினாள்.. வித்யாவின் மேல் நரேந்திரனுக்கு ஏற்பட்டிருந்த கரையில்லாத காதல் சுரேந்திரனுக்கு வித்யாவின் மேல் ஏற்பட்டிருந்தது என்று நிச்சயம் சொல்ல முடியாது.. 'வித்யாவோடு வாழ முடியுமா..?' என்று நரேந்திரன் தவிக்கும் தவிப்பும் சுரேந்திரனுக்கு இல்லை.. ஆனால் வித்யாவை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது என்பது மட்டும் உண்மை..

பூர்ணிமாவும், வித்யாவும் சாப்பிடச் சென்றதும்,

"வாங்க வித்யா.. லேடிஸ் இவ்வளவு சீக்கிரம் பேஷ்.. வாஷ் பண்ணிவிட்டு வருவது என்பது அதிசயம்தான்.." என்று வரவேற்றான் சுரேந்திரன்..

"முகம் கழுவித் துடைக்க எவ்வளவு நேரமாகி விடப் போகிறது..?" என்று அசுவாரஸ்யமாய் பதிலுரைத்தாள் வித்யா..

"கேட்டாயா பிரகாஷ்.. வித்யா சொல்வதை.. பெண்கள் முகம் கழுவ எவ்வளவு நேரமாகுமென்று கேட்கிறார்கள்.. அது ஆளைப் பொறுத்தது வித்யா.. ஒவ்வொருவர் ஒரு மணி நேரம் கூட எடுத்துக் கொள்வார்கள்.." என்று சுரேந்திரன் கூற பிரகாஷ் சிரித்துக் கொண்டே சொன்னான்..

"லேடிஸ் ஹேண்ட் பேகை திறந்து பார்த்திருக் கிறாயா..? ஒரே மேக்-அப் அயிட்டம்தான்.. பணம் வைத்திருக்கிறார்களோ இல்லையோ பவுடரும் சீப்பும் கட்டாயம் வைத்திருப்பார்கள்.."

பூர்ணிமா பிரகாஷ் பக்கம் சாய்ந்து அவன், பேன்ட் பாக்கெட்டில் செருகியிருந்த சீப்பை எடுத்துக் காட்டினாள்.

"ஐயாவோட வாய் இந்தக் கிழி கிழியுது.. பாக்கெட்டில் இருக்கும் சீப்பைப் பார்த்துக்கடி வித்யா.. ஒரு செகண்டுக் கொரு தரம் என்னை ஓர் பார்வை பார்த்துக்குவார்.. சீப்பை

எடுத்து வரட்டு வரட்டுன்னு தலையில் இழுப்பார்.. அடுத்த பாக்கெட்டில் காஸ்மெடிக் அயிட்டம் எல்லாம் இருக்கு.. இவங்களை மாதிரி பேன்ட்டுக்கு நாலு பாக்கெட், சர்ட்டுக்கு நாலு பாக்கெட்டுன்னா நமக்கு வைக்க முடியுமா..? நம் சேலை, பிளவுஸில் பாக்கெட்டிருக்கா..? சுடிதார் செட்டிலாவது பாக்கெட்டிருக்கா..

இவங்க ஒவ்வொரு பாக்கெட்டிலும் ஒவ்வொரு அயிட்டத்தை வைத்துக்கிட்டு நம்மை வம்புக்கு இழுக்கிறதைப் பார்த்தாயா..?"

வித்யா மனதின் பாரம் மறந்து சிரித்தாள்.. பிரகாஷின் முகம் மலர்ந்தது.. பூர்ணிமாவிடம் மேலும் வார்த்தை வளர்த்தான்..

"அப்புறம் எப்படி உன்னை மயக்குவது..? அடிக்கடி தலைவாரிப் பார்க்கிறேன்.. நொடிக்கொருதரம் பவுடரில் குளித்துத்தான் பார்க்கிறேன்.. மசிய மாட்டேன் என்கிறாயே என் மாமன் மகளே.."

"எவ்வளவு வாரினாலும் இந்தக் குச்சி குச்சி முடிதான் இருக்கப் போகிறது.. எப்படி பவுடரில் குளித்தாலும் இந்த முசுட்டு முகம்தான் இருக்கப் போகிறது.. அப்புறம் தேவையில்லாமல் ஏன் வெட்டி வேலை செய்கிறீர்கள்..?"

"என் முடி குச்சி முடியா..? தலையில் விரல் விட்டு கோதும்போது அப்படி நீ நினைப்பது போல் எனக்குத் தோன்றவில்லையே.."

பூர்ணிமா பிரகாசின் முதுகின் மேல் முகம் சிவக்க ஓர் அடி போட்டாள்..

"மூச்.. வாயைத் திறக்காமல் சாப்பிடுங்க.. தெரிந்ததா..?"

"வாய்திறக்காமல் எப்படிச் சாப்பிட முடியும்..? வித்யா நீ சொல்லம்மா.."

"அதெப்படி முடியும்..? முடியாது அண்ணா.." என்றாள் வித்யா..

"ஏண்டி நீ அவர் கட்சியா..? அண்ணா நீயாவது என் கட்சியா இல்லை நீயும் கட்சி மாறி விட்டாயா..?" என்று பூர்ணிமா பொய்க் கோபத்துடன் சுரேந்திரனைப் பார்த்துக் கேட்டாள்..

"நான் எப்போதோ வித்யாவிடம் சரண்டர் ஆகி விட்டேன்.. ஸோ.. வித்யா எந்த சைடோ.. நானும் அந்த சைடு.." என்றான் சுரேந்திரன் சப்பாத்தியை குருமாவில் தோய்த்தபடி..

தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த வித்யாவிற்கு அதைக் கேட்டதும் புரையேறி விட்டது.. அவசரமாய் பூர்ணிமா அவள் தலையைத் தட்டி விட்டுக் கவலையுடன், "பார்த்துக் குடிடி" என்றாள்.. அவள் பார்வை சுநேந்திரனை ஆராய்ந்தது.. சுரேந்திரனோ வித்யாவை பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தான்.. அப்போதுதான் அதைக் கவனித்த வித்யாவிற்கு உயிர் துடித்தது..

'இது என்ன புதுக்குழப்பம்..?' என்று பூர்ணிமாவும் பிரகாஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.. வித்யா சாப்பிடாமலே எழுந்து சென்று விட்டாள்..

மறுநாள் காலையில் அவள் கீழே சாப்பிட வந்தபோது பூர்ணிமா கவலையாக இருந்தாள்.. அவள் கவலைக்குக் காரணமிருந்தது.. காலையில் சீக்கிரமே சாப்பிட்டு முடித்த நரேந்திரன் கிளம்பப் போக அவசரமாய் பூர்ணிமா அவன் காரருகே ஓடி வந்தாள்..

"அண்ணா.. வித்யாவைக் கூப்பிடாமலே கிளம்பி விட்டீர்களே.."

"சுரேந்திரனிடம் சொல்லியிருக்கேன்ம்மா.. அவன் கூப்பிட்டு வருவதாகக் கூறியிருக்கிறான்.."

"இது என்னன்னா புதுப்பழக்கம்..?"

"பழகி விட்டால் பழைய பழக்கமாகிவிடும்.."

"அதற்கு அவசியமில்லையே.."

"இல்லைன்னு உனக்குத் தெரியுமா..?"

அவன் காரை விர்ரென்று கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.. பூர்ணிமா யோசனையுடன் திரும்பும் போது தான் வித்யா வந்தாள்..

"உன் பெரியண்ணா இன்னுமா சாப்பிட வரவில்லை..?"

"இல்லைடி.. அவர் சாப்பிட்டு விட்டுப் போய் விட்டார்.." பூர்ணிமா தயங்கியவாறு கூறினாள்.. வித்யா ஸ்தம்பித்து விட்டாள்..

"என்ன போய் விட்டாரா.. எங்கே..?"

"ஐ டோன்ட் நோ.. பேக்டரிக்கா இல்லை மில்லுக்கான்னு என்னிடம் சொல்லவில்லை.."

"நான் எப்படிடீ போவேன்.. என்னை வரவேண்டாம்ன்னு சொன்னாரா..?" வித்யா யோசனையுடன் வினவினாள்..

"இல்லை.. உன்னை சுரேந்திர அண்ணாவுடன் வரச்சொன்னார்.."

"வாட்..?"

"எஸ்.. வித்யா உனக்கும் அண்ணாவுக்கும் ஏதும் மன வருத்தமா..?"

மனவருத்தமா..? அவர்களுக்கிடையிலா..? நதிக்கரை யோரம் ஒரு நாணல் போல் உடல் நடுங்க தலை கவிழ்ந்து அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாளே.. அவள் முடி கோதி கண்ணீர் விட்டானே.. மன வருத்தத்தாலா அது நடந்தது..? வித்யாவின் இதழ்களில் கசந்த முறுவல் தோன்றியது..

"நான் கிளம்புகிறேன் பூர்ணிமா.."

"சாப்பிடாமலா..?"

"ப்ளீஸ்.. என்னை வற்புறுத்தாதே.. எனக்கு சாப்பிடத் தோன்றவில்லை.."

"சரி.. சுரேன் அண்ணா வரட்டும்.. அவர் காரில்.."

"நீயும் என்னைத் துன்புறுத்தாதே பூர்ணி.. நீ என்னை டிராப் பண்ண முடிந்தால் பண்ணு.."

பூர்ணிமா நொடிப் பொழுது கூட யோசிக்காமல் அவள் காரில் ஏறி அமர்ந்தாள்.. முன் கதவைத் திறந்து விட்டு..

"ஏறிக்கொள்.." என்றாள்..

வித்யா ஏறிக் கொள்ள கார் கிளம்பி விட்டது.. அம்பா சமுத்திரம் போனதும் பேக்டரிக்குப் போகாமல் ஓட்டல் ஒன்றில் கார் நுழைந்தது..

"இறங்கு.."

"பூர்ணி.. எனக்குப் பசிக்கவில்லை.."

"எனக்குப் பசிக்கிறது.. நீ சாப்பிடாவிட்டால் நானும் சாப்பிட மாட்டேன்.."

தாயின் முகத்தோடு பூர்ணிமா அதட்ட வேறு வழியின்றி வித்யா இறங்கினாள்.. சாப்பிடும்போது கலங்கிய கண்களை தோழி அறியாமல் துடைத்துக் கொண்டாள்..

பேக்டரியில் இவர்கள் போய் இறங்கும்போது நரேந்திரன் எதிரில் வந்து கொண்டிருந்தான்.. காரிலிருந்து இறங்கிய பூர்ணிமாவைக் கண்டதும்,

"நீ எங்கே இங்கே வந்தாய்..?" என்று வினவினான்..

"வித்யாவை விட்டுப் போக வந்தேன்.."

"வித்யாவையா..?" நரேந்திரனின் விழிகள் ஒரு கணம் ஆவலுடன் காரிலிருந்து இறங்கிய வித்யாவைப் பார்த்தன.. அடுத்த கணம் எங்கோ பார்த்தபடி..

"சுரேந்திரனுடன் வரவில்லையா..?" என்று வினவினான்..

"இல்லை.." என்றபடி வித்யா பூர்ணிமாவைப் பார்த்து,

"பை பூர்ணிமா.." என்றவாறு விரைந்து விட்டாள்..

பூர்ணிமா நரேந்திரனை முறைத்தாள்..

"அவள் வீட்டில் சாப்பிட மறுத்து விட்டாள்.."

"பட்டினியாகவா வந்திருக்கிறாள்..? குகன்.."

"நான் ஹோட்டலில் சாப்பிட விட்டுத்தான் கூப்பிட்டு வந்து இருக்கிறேன்.."

நரேந்திரனின் முகம் நிம்மதியானது..

"அண்ணா நான் உங்களுடன் பேச வேண்டும்.."

"எனக்கு வேலை தலைக்கு மேல் இருக்கிறதம்மா.. பை.."

நரேந்திரன் அவசரமாய் அவளைத் தவிர்த்து காரில் பறந்தான்..

வித்யா வழக்கம் போல் அலுவல்களைப் பார்த்தாள்.. மதிய உணவு நேரத்தின்போது அவள் அறைக் கதவு திறக்க எதிர்பார்ப்புடன் நிமிர்ந்தாள்.. வந்தவனைப் பார்த்ததும் அவள் முகம் ஏமாற்றத்தில் விழுந்து விட்டது..

வந்தது நரேந்திரனல்ல.. சுரேந்திரன்..!

"ஹாய் வித்யா.. காலையில் ஆசையாய் உன்னுடன் டிரைவ் வரலாமென்று காலைத் தூக்கத்தை தியாகம் பண்ணிவிட்டு வந்தால் நீ பூர்ணிமாவுடன் பறந்து விட்டாய்.. என்னை ஏமாற்றி விட்டாய்.."

"நீங்களேன் சாப்பாட்டை எடுத்து வந்தீர்கள்..? இந்த சிரமம் உங்களுக்கு எதற்கு..?" வித்யா அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் பதில் கேள்வி கேட்டாள்..

"நைஸ்.. உன்னுடன் சேர்ந்து சாப்பிடத்தான் வேறு எதற்கு..?"

அவன் இயல்பாய் ஒருமையில் அழைப்பது உறுத்த வித்யா டென்சனுடன் டேபிள் வெயிட்டை உருட்டியவாறு இதை எப்படித் தவிர்க்கலாம் என்று யோசித்தாள்..

மேஜை மேலிருந்த அழைப்பிதழ் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்த்தாள்.. பேக்டரி தொழிலாளர் ஒருவரின் மகனின் காதணி விழா அழைப்பிதழ்.. முகம் ஒளிர நிமிர்ந்தாள்..

"குகன்.." என்று அழைத்தாள்..

"யெஸ் மேடம்" என்று அவன் உள்ளே வந்தான்..

"பேக்டரி ஜீப் இருக்கில்ல..?"

"இருக்கிறது மேடம்.."

"உங்களுக்கு ஓட்டத் தெரியுமில்லையா..?"

"யெஸ்.. மேடம்.."

"வெல்.. சுரேந்திரன் சார்.. நான் ஒரு பங்சனில் கலந்து கொள்ள போக வேண்டியிருக்கிறது.. அங்கேயே சாப்பிட்டு விடுவேன்.. ஸோ.. நீங்கள் சாப்பிட்டு விட்டுப் போய்க் கொள்ளுகிறீர்களா..?"

அவன் பதிலை எதிர்பாராமல் கைப்பையுடன் வெளியேறினாள்.. அந்தத் தொழிலாளர் வீட்டில் எதிர்பாராத விருந்தாளியாய் நுழைந்ததும் அங்கே குழுமியிருந்த தொழிலாளர்களின் முகத்தில் சந்தோசம் பொங்கியது.. விழாவை நடத்தும் தொழிலாளியின் மனைவி ஓடிவந்தாள்..

"அம்மா வாங்கம்மா.. உட்காருங்கம்மா.."

"அதற்கென்ன உட்கார்ந்தால் போகுது.. காது குத்தி முடித்தாகி விட்டதா..?" என்று அமர்ந்தபடி வித்யா கேட்டாள்.. குகன் அவள் அருகிலிருந்த மற்றொரு சேரில் உட்கார்ந்தான்..

"ஆச்சும்மா.. பந்தி நடக்குது.. அம்மா இருந்து சாப்பிட்டு விட்டுத்தான் போகணும்.."

"அதற்குத்தானே வந்திருக்கிறோம்.. குழந்தை எங்கே..?"

"இதோ இங்கதான் நின்னுக்கிட்டு இருக்கான்.. எலே மணி இங்கே வாலே.. அம்மா உன்ன பாக்கணும்கறாங்க.." அவள் சத்தமாய் அழைத்தாள்.. அதற்குள் அவளது கணவர் மகனைத் தூக்கிக் கொண்டு வந்தார்.. வித்யா எழுந்து குழந்தையின் கையில் ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தாள்.. அவர்கள் மகிழ்ந்து போயினர்..

"எலே சின்னச்சாமி இலையைப் போடுலே.. அம்மா சாப்பிட வர்றாங்க.." அவள் பந்தியில் நுழையும் போதே வரவேற்பு

பலமாக இருந்தது.. குகன் அமைதியாகப் பின் தொடர்ந்தான்..

இலை போடப்பட்டு சாப்பாடு பரிமாறப்பட்டது.. எளிய மக்கள் கொடுத்த விருந்து உணவு அது.. பெரிய பருக்கைகளுடன் தண்ணீர் போன்ற சாம்பாருடன் பரிமாறப் பட்ட உணவை நிதானமாய் வயிறார வித்யா சாப்பிடுவதை குகன் ஓரக் கண்ணால் கவனித்துக கொண்டே சாப்பிட்டான்..

விழா கொண்டாடியவர்களிடம் விடைபெற்று கிளம்பினர்.. வழியில் மௌனமாக வந்த வித்யாவின் நிலை கண்ட குகனின் மனம் வருந்தியது..

கெட்டிக்கார புத்திசாலிப் பெண்.. இவள் வந்த இந்த ஆறு மாதங்களில் பேக்டரியே மாறிப் போயிருந்தது.. தொழிலாளர் நலனுக்காக எத்தனையோ செய்தாள்.. அனாமத்து கணக்கை ஒழித்தாள்.. முன் பணம் கேட்டவர்களின் கோரிக்கை நியாயமாக இருந்தால் உடனே முன்பணம் கிடைத்தது... மருத்துவச் செலவுகளை பேக்டரியே ஏற்றுக் கொண்டது... தொழிலாளர்களின் குழந்தைகள் அதிக மதிப்பெண் எடுத்திருந்தால் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.. மற்றவர்களின் வாழ்க்கையில் நதியாக வந்த பெண் இன்று மனதில் ஏதோ வேதனைப் படுகிறாள்.. அது என்ன..?

பேக்டரியில் ஜீப் நுழைந்தது.. சுரேந்திரனின் காரைக் காணவில்லை.. அவள் கண்கள் காரைத் தேடியதும், இல்லையென்றதும் முகம் நிம்மதியாய் மாறினதையும் கண்ட குகனின் மனம் 'ஓ இதுதானா காரணம்..' என்று கூறிக் கொண்டது..

'ஆனால் சுரேந்திரன் நல்லவனாயிற்றே.. பெண்கள் யாரிடமும் வம்பு பண்ணும் ரகமில்லையே..'

புரியாத புதிராய் குகனுக்குத் தோன்றினாள் வித்யா.. தோளைக் குலுக்கிவிட்டுச் சென்று விட்டான் அவன்..

மாலை நெருங்க நெருங்க மனம் பதைத்தது வித்யாவிற்கு.. சுரேந்திரன் வந்ததிலிருந்து நரேந்திரனிடம் விலகல் தோன்றுவதாய் தோன்றினது அவளுக்கு.. அதிலும் நேற்றைய மாலையிலிருந்து ஏற்பட்டிருந்த உடனடி மாற்றம் அவளைப் பாதித்தது..

அவள் கலவரத்தை ஊர்ஜிதப்படுத்துவது போல் சுரேந்திரன் அவள் அறையினுள் நுழைந்தான்..

"வித்யா போகலாமா..?"

"உங்களுக்கேன் வீண் சிரமம்..?"

"எனக்கென்ன சிரமம்.. ஆக்சுவலா இந்த ஐந்து மாதங்களை வேஸ்ட் பண்ணிட்டேனேன்னு ஃபீல் பண்றேன் தெரியுமா..?"

சுரேந்திரன் கொஞ்சலாய் கூற வித்யாவினால் தாங்க முடியவில்லை.. அவள் ஏறக்குறைய அலறினாள்..

"குகன்.."

20

நதியோரம் நடந்தபோது

நிழலாக கூட வந்தாள்

எனக்காக எனை நேசித்தாள்

எனைத்தானே அவள் பூஜித்தாள்

...நதியோரம் நான் நடந்த போது...

அவள் அழைப்பிற்காக காத்திருந்தது போல் குகன் அருகில் ஓடி வந்தான்.. வித்யா சுரேந்திரனைப் பார்த்துக் கூறினாள்..

"சார் நேற்றிலிருந்து நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.."

"என்ன முடிவு..?"

"இனி பேக்டரியின் ஜீப்பில்தான் வேலைக்கு வந்து போவதென்று.. மதியச்சாப்பாடு கூடப் பேக்டரி கேண்டினில் சாப்பிடுவதாக இருக்கிறேன்.." என்றாள் வித்யா அவன் மனம் கோணாதவாறு..

"ஏனிந்த திடீர் முடிவுன்னு தெரிஞ்சுக்கலாமா..?"

"நேற்று உங்கள் வீட்டில் நடந்த தகராறு என்னை பாதித்து விட்டது.. பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜருக்கு ஜீப்பில் போய் வர உரிமையுண்டு.. அதனால் அதில் வந்து போவதாக இருக்கிறேன்.. அப்புறம் சாப்பாடு.. சார்.. எதற்காக சாப்பிடுகிறோம்.. வயிறு நிறைவதோடு மனமும் நிறைவதற்காகத்தானே.. பேக்டரியின் மற்ற லேபர்ஸ் சாப்பிடும் சாப்பாட்டை நானும் சாப்பிட்டால் என் வயிறோடு மனமும் நிறையும்.. புரிகிறதா சார்.." வித்யா தெளிவாகப் பேசினாள்..

"யெஸ் ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்.. வித்யா உன் விருப்பம் போல் செய்.. ஐ லைக் இட்.."

சுரேந்திரன் இலகுவாகப் பேசிவிட்டுக் காரில் ஏறிப் போய் விட்டான்.. வித்யா குகனைப் பார்த்தாள்..

"அவரிடம் நான் பேசினதைக் கேட்டுக் கொண்டிருந் தீர்கள் தானே.."

"யெஸ் மேடம்.. இனிக் காலை எட்டு மணிக்கெல்லாம் உங்களைக் கூப்பிட ஜீப்பில் வந்து விடுவேன்.. மாலையில் ஜீப்பிலேயே வீட்டில் கொண்டு போய் விட்டு விடுவேன்.."

"தேங்க்ஸ் குகன்.." மனதராக் கூறினாள் வித்யா.. எண்ணமறிந்து செயல்படும் உதவியாளன் இருந்து விட்டால் மலை அளவு பிரச்னை வந்தால்கூட சமாளித்து விடலாம்.. உடலில் ஒரு தெம்பு ஊற,

"போகலாமா.." என்று வித்யா கேட்டாள்..

"போகலாம் மேடம்" என்று குகன் ஜீப்பைக் கிளப்பினான்.. நதியோரப் பாதையில் ஜீப் போய் கொண்டிருந்தது.. மலைச்சாரல் கலந்த பாதை அது.. ஒரு புறம் சுழித்தோடும் நதி.. மறுபுறம் அழகான மரங்களும், செடிகளும், கொடிகளும் சேர்ந்த பசுமை..

எப்போதும் இந்தப் பாதையில் நரேந்திரனுடன் காரில் வரும்போதும், போகும்போதும் வித்யா இரு புறக் காட்சி களையும் ரசிப்பாள்.. ஆனால் இன்று எங்கோ வெறித்துப் பார்த்தபடி இலக்கில்லாமல் அலைந்தது அவள் பார்வை.. சூன்ய வெளிக்குள் வெறித்தவள் திடீரென்று..

"குகன் ஒரு நிமிடம் வண்டியை நிறுத்துங்க.." என்றாள்..

குகன் ஜீப்பை நிறுத்தினான்.. தூரத்தில் பெருமாள் கோவில் தெரிந்தது.. அதன் பின்னே ஓடும் நதிக்கரையில் படித்துறையில் மேல் படியில் அமர்ந்திருப்பது யார்..? நரேந்திரன் மாதிரி இருக்கிறதே.. அவள் மனதின் கேள்விக்குப் பதில் சொல்வது போல்..

"அது எம்.டி சார் தான் மேடம்" என்றான் குகன்..

வித்யாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது.. அவர்களது படித்துறை அது.. நேற்றைய நினைவின் சின்னம் அது.. அவளில்லாமல் அவன் தனியே அமர்ந்து இருக்கிறான்.. அவளைத் தவிர்க்கிறான்.. வித்யா திரும்பி பக்கவாட்டில் ஓடிக் கொண்டிருந்த நதியைப் பார்த்தாள்..

'ஏ நதியே.. நீ போய் தூது சொல்ல மாட்டாயா..? உன் எண்ணம் நிறைந்தவள் இங்கேதான் இருக்கிறாள்.. உனக்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறாள்.. நீ அவளோடு வந்தால்தான் நான் உன் கால் நனைப்பேன் என்று எனக்காக நீ அவரிடம் பேச மாட்டாயா..? எனக்குத் தாய் இல்லை.. தந்தை இருந்தும் எனக்கு அவர் சொந்தமில்லை.. உறவுகள் கைவிட்ட அநாதை நான்.. உன்னை என் உறவாக நினைத்துக் கேட்கிறேன்.. என்னவரிடம் என் நினைவுகளைக் கொண்டு சேர்க்க மாட்டாயா..?'

வித்யா மனதின் வலி தாள மாட்டாமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. வேக மூச்சுக்களை விட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் குகனைப் பார்க்காமல் சாலையைப் பார்த்தவாறு

"போகலாம் குகன்.." என்றாள் கண்ணீர் குரலில்..

குகன் மறு பேச்சில்லாமல் வண்டியை எடுத்தான்.. என்ன துயரம் அவளுக்குள் என்று அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.. ஆனால் அந்த மென்மையான பெண்ணின் துயரம் அவனைப் பாதித்தது..

நதியோரம் அமர்ந்திருந்த நரேந்திரனின் நிலையை அறிந்திருந்தால் அவள் துடித்துப் போயிருப்பாள்.. மதிய உணவு வேளையில் அவன் மனம் தவித்து விட்டது..

இந்நேரம் அவள் சுரேந்திரனுடன் பேசிக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருப்பாள்.. இப்போது தலையில் அவனுக்கு புரையேறி இருக்கும்.. அவள் யதார்த்தமாய்த் தான் தட்டுவாள்.. ஆனால் அவன் மயங்கி விடுவான்.. இந்நேரம் சாப்பிட்டு முடித்திருப்பார்கள்..

இதே நினைவு அவனை ஆட்டி வைக்க அவன் சாப்பிட மறந்தான்.. அவன் சாப்பிடா விட்டாலும் யார் கேட்கப் போகிறார்கள் என்று நினைக்கும் போதே 'ஏன் வித்யா இல்லையா.. உனக்கு ஒன்று என்றால் உயிரை விட்டு விடுவாளே..?' என்று மனம் எதிர் கேள்வி கேட்டது.

'நான்தான் அதைக் குலைத்து விட்டேனே..' என்று மனதிற்குள் அழுது தீர்த்தான்.. துயரம் குறையவில்லை.. அவனுக்கு ஏங்கித் தவிக்க வேண்டும் என்ற விதியை எழுதிய இறைவனுடன் மனதிற்குள் வாக்குவாதம் நடத்தினான்..

மாலை நெருங்க நெருங்க மனதின் தாபம் அவனைக் கொன்று தின்றது.. பித்துப் பிடித்தவன் போலானான்.. வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை.. இந்நேரம் சுரேந்திரன் காரோடு வந்திருப்பான்.. வித்யா காரில் ஏறியிருப்பாள்.. என்ன பேசியிருப்பார்கள்..

பித்துப் பிடித்த மனம் தவித்தது.. நேற்று இரவு சுரேந்திரன் வந்து பேசிய போது உள்ளத்தைத் திறந்து காட்டியிருந்திருக்க வேண்டும்.. அதை விட்டு விட்டு அவன் வந்து கேட்டதும் மௌனமாக ஏன் இருந்தான்..?

"அண்ணா.. நானும் வந்து ஐந்து மாதங்களாகி விட்டது.. வித்யாவுடன் பேசிப் பழக சந்தர்ப்பமே கிடைக்க வில்லை, அவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.. ஆனால் பேசினால்தானே ஒருவரைப் பற்றி ஒருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.."

சுரேந்திரன் முதல் நாளிரவு நரேந்திரனின் அறைக்கு வந்து அவனிடம் சொன்ன வார்த்தைகள் இவை.. நரேந்திரனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.. சுரேந்திரனே தொடர்ந்து பேசினான்..

"அதனால் அண்ணா நாளையிலிருந்து நானே வித்யாவை பேக்டரிக்குக் கூப்பிட்டுப் போய் வருகிறேனே.. இப் யு டோன்ட் மைன்ட்.. மதியம் லஞ்ச்சைக் கூட நாங்கள் சேர்ந்து சாப்பிடுவது நல்லது.."

நரேந்திரனுக்குப் புரிந்தது.. தன்னை வித்யாவிட மிருந்து விலகி நிற்கச் சொல்கிறான்..

நரேந்திரனின் மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக் கொண்டு அவனது கடைசித் தம்பி நகர்ந்து விட்டான்.. நிலைக் கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்துக் கொண்ட நரேந்திரன்..

"எந்த நேரத்திலேடா நீ பிறந்தாய்..? எதுவுமே உனக்கு நிலைக்காதா..?" என்று கேட்டுக் கொண்டான்..

கார்த்திகாயினி தேவியைக் காதலித்தது இளமையின் வேகத்தில் அந்த இழப்பு அவனைப் பாதிக்கவில்லை..

திருமணம் மாறியதோ சூழ்நிலையால்.. அது சிறிதளவு கூட அவனைப் பாதிக்கவில்லை..

ஆனால் வித்யாவை நேசித்தது உள்ளத்தின் தாபத்தால். எத்தனையோ ஜென்மங்களாய் பழகின உணர்வு ஓர்

சொந்தம், ஓர் ஈர்ப்பு இவை யாவும் அவள் மேல் தான் அவனுக்கு ஏற்பட்டது..

'உங்கள் குறைகளுடனே உங்களை ஏற்றுக் கொள்ள ஒருத்தி வரமாட்டாளா..?' என்று சூசகமாய் கேட்டாள்..

அந்த ஒருத்தி அவள் தான் என்று அவன் அணைப்பில் அடங்கி உணர்த்தினாள்..

இன்று தம்பிக்காக அவளை தாரை வார்த்துக் கொடுக்க நேரும் அவன் நிலையை அறிந்தாள் காறி உமிழ்ந்துவிட மாட்டாளா..? என்று நினைத்து நினைத்து வருந்தினான்.. அவன் மனம் அலை பாய்ந்தது..

ஆறுதல் தேடி ஆலயம் சென்றான்.. உலகளந்த பெருமாளின் பாதம் கண்டு கதறினான்.. போக்கிடம் அற்ற அந்த ராஜகுமாரன் நதிக்கரையோரம் தன்னந்தனியாக நடந்தான்..

அவர்கள் முதல் நாள் அமர்ந்திருந்த படித்துறையில் அமர்ந்தபோது அவன் இதயம் வெடித்து விடும் போல் இருந்தது.. அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு எவ்வளவு நேரம் இருந்தானோ அவன் உணரவில்லை.. அருகே,

"சார்" என்ற குரல் கேட்டது.. நிமிர்ந்து பார்த்தான்.. குகன்..!

"ஏன் சார் தனியாக உட்கார்ந்து இருக்கிறீர்கள்..?"

"நத்திங் குகன்.. ஜஸ்ட் ரிலாக்ஸ் பண்ணிக்க வந்தேன்.. டோன்ட் ஒர்ரி.. ஆமாம் நீ எங்கே இங்கே வந்தாய்..?"

"வித்யா மேடத்தை வீட்டில் விட்டு விட்டு வருகிறேன்.."

போகும்போதே அவன் உட்கார்ந்து இருந்ததை இருவரும் பார்த்ததை அவன் கூறவில்லை..

நரேந்திரனின் உடலில் உள்ள அத்தனை செல்களிலும் புது ரத்தம் பாய்ந்தது.. அவன் பரபரப்பானான்..

"ஏன்.. வித்யா சுரேந்திரனின் காரில் போக வில்லையா..? அது வந்து சுரேந்திரன் வித்யாவை டிராப் பண்ணி

விடுவதாகக் கூறினானே.. அதனால் கேட்டேன்.." நரேந்திரன் தடுமாறினான்..

குகனின் பார்வை கூர்மையானது.. நரேந்திரனின் தடுமாற்றத்தைக் கவனிக்காதவன்போல் அவன் கூறினான்.

"சுரேந்திரன் சார் வந்தார் சார்.. ஆனால் வித்யா மேடம் அவாய்ட் பண்ணி விட்டார்கள்.. இனி பேக்டரி ஜீப்பில் போய் வரப் போறேன்னு சொல்லி விட்டார்கள்.. அதனால் நான் காலையிலும், மாலையிலும் அவங்களை ஜீப்பில் கூப்பிட்டு வந்து திரும்பவும் வீட்டில் கொண்டு விடுவதாக இருக்கிறேன்.."

அவன் பேசப் பேச நரேந்திரனின் முகம் மலர்வதைக் கண்டும் காணதவன் போல் அவன் கோர்வையாய் பேசினான்..

"மதியம் லன்ச்.. வித்யா.. சுரேன் கூட சாப்பிட்டிருப் பாங்களே.."

குகனின் மனதில் நரேந்திரன்பால் இரக்கம் சுரந்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவனாய்..

"நோ சார்.. இன்றைக்கு நம்ம பேக்டரியோட லேபர் ராமசாமி வீட்டு காது குத்தும் விழாவிற்கு போய் விட்டோம்.. மேடம் அங்கேயே சாப்பிட்டு விட்டாங்க.."

"சுரேன் வரவில்லையா..?"

"வந்தார்.. லன்ச் கேரியர் எடுத்துக்கொண்டு வந்தார்.. வித்யா மேடம் வேண்டாம்ன்னு சொல்லிட்டு ராமசாமி வீட்டு விசேஷத்திற்குப் போய் விட்டாங்க.."

"அப்போ நாளை சுரேன் லன்ச் கொண்டு வந்தால்..?"

நரேந்திரனின் மலர்ந்த முகம் வாட குகன் உணர்ச்சியை வெளிக்காட்டாத குரல்..

"இனி லன்ச்சை பேக்டரி கேண்டினில்தான் சாப்பிடப் போகிறேன்னு வித்யா மேடம் சொல்லி விட்டாங்க.."

"ஓ.. ஐ ஸீ.."

நரேந்திரனின் உதடுகளில் பாடல் தோன்றியது.. திடீரென்று மனதில் உல்லாசம் குமிழிட்டது.. குகனின் தோள்களில் கைபோட்டுக் கொண்டான்..

"தேங்க்ஸ் குகன்.." என்றான்.. எதற்காக என்று அவன் சொல்லவில்லை..

"இட்ஸ் மை டியூட்டி சார்.." என்றான் குகன்.. எதை என்று குகனும் சொல்லவில்லை..

"வீட்டுக்குப் போகலாமா சார்..?" என்று மெதுவாகக் கேட்டான் குகன்..

"ஓ போகலாமே.."

நரேந்திரன் எழுந்து கொண்டான்.. இருவரும் பேசிய படி நடந்து நரேந்திரனின் கார் அருகே வந்தார்கள்.. குகன் கார் கதவைத் திறந்து விட்டான்..

"தேங்க்ஸ் எகெய்ன் குகன்.. நீயும் கிளம்பு.."

"ஓகே சார் பை.."

காரின் விளக்குகள் புள்ளியாய் மறைய குகன் திரும்பி பெருமாள் கோவிலின் கோபுரத்தைப் பார்த்தான்.. மூன்று நாமம் வடிவத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.. கன்னத்தில் போட்டுக் கொண்டான்.. ஜீப்பில் ஏறிக் கிளம்பினான்.. அவனுக்குச் சிரிப்பு வந்தது..

காதல் எத்தனை பெரிய மனிதரையும் குழந்தையாக்கி விடும் சக்தி படைத்தது போலும்..

இடி விழுந்தாலும் கலங்காத இமயம் போன்றன் ஓர் பெண்ணின் இமையோரப் பார்வை விலகிவிடுமோ என்று இடிந்து போய் விட்டான்.. இதை எங்கே போய்ச் சொல்வது..?

பேசாமல் வீட்டில் போய் மனைவியிடம் சொல்லலாம் என்று ஜீப்பின் வேகத்தைக் கூட்டி வீட்டுக்குப் போனான்..

"ஏன் லேட்..?" என்றாள் கதவைத் திறந்துவிட்ட உஷா.. குகனின் மனைவி..

"அது பெரிய கதை" என்று ஆரம்பித்து அவன் சொல்லி முடிக்க..

"உங்க எம்.டி ஒரு ஏமாளி.." என்றாள் உஷா..

'அதுதான் ஊருக்கே தெரிந்த கதையாயிற்றே..!' என்று நினைத்துக்b காண்டவன்..

"ஆமாம்.. ரொம்பக் கண்டு விட்டாய்.. வந்து சோற்றைப் போடுடி.." என்றான் மனைவியிடம்..

கூர்க்கா கேட்டைத் திறந்துவிட நரேந்தரனின் கார் வழுக்கிக் கொண்டு உள்ளே சென்று நின்றது.. இறங்கி காரைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டவன் உற்சாகமாய் படியேறி உள்ளே சென்றான்..

வரவேற்பறையில் அமர்ந்திருந்த பூர்ணிமாவும், பிரகாஷும் அவனைத் திரும்பிப் பார்க்க சிரித்துக் கொண்டே கையாட்டிவிட்டு மாடியில் ஏறி மறைந்தான்..

பூர்ணிமா பிரகாஷைப் பார்த்து

"தோட்டத்துக்கு வா.." என்றாள்

"என்ன நடக்கிறதுன்னு உனக்கு ஏதாவது புரிகிறதா..?" என்றான் பூர்ணிமா தோட்டத்து சிமெண்ட் பாதையில் மெதுவாய் நடந்தபடி..

"தலையும் புரியவில்லை.. வாலும் புரியவில்லை.." என்றான் பிரகாஷ் உடன் நடந்தபடி..

"இல்லை பிரகாஷ்.. எப்போதும் நான் கல்யாணத்தை தள்ளிப் போட்டால் அண்ணன் குதிகுதின்னு குதிப்பார்.. இப்போது மறுப்பே சொல்லவில்லை.. வித்யாவும் அவரும் சேர்ந்து போவதும், வருவதும்.. என் கண்ணே பட்டு விடும் போல் இருந்தது.."

"ஒருவேளை உன் கண் பட்டுத்தான் இப்படி ஆகிவிட்டார்களோ..?"

"போடா.." என்று கோபித்துக் கொண்டு அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து விட்டாள் அவள்..

"ஏய்ய்.. ஸாரி.. ஸாரி.. சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்டா.. இப்போ உனக்கு மூடு வந்தால் என்னை வாடா.. போடாங்கறே இல்ல அது போல்தாண்டா.."

"பிரகாஷ்.. நானே குழம்பிப் போய் இருக்கிறேன்.. என்னவாக இருக்கும்.. உங்களுக்கு எதுவும் தோன்று கிறதா..?"

"இதோ பார் நீங்கள் இருவரும் வந்த இந்த ஆறு மாதங்களில் நான் வார இறுதியில் மட்டும் தான் வருகிறேன்.. மற்ற ஐந்து நாள்களில் என்ன நடக்கிறது என்பது உனக்குத்தானே தெரிய வேண்டும்.."

"எனக்குத் தெரியவில்லையே.." அவள் குழந்தையாய் விழித்தாள் அதை ரசித்தபடி அவன் கூறினான்..

"இந்தப் பிரச்னைக்கு மூலகாரணம் உன் பெரிய அண்ணன் தான் என்று எனக்குள்ளே ஒரு பட்சி சொல்லுது பூர்ணி.. நீ ஒன்று செய்.."

"என்ன.. என்ன.." பூர்ணிமா பரபரத்தாள்..

"உன் பெரிய அண்ணனிடம் நேரடியாய் கேட்டு விடு.."

"என்னவென்று கேட்க..?"

"'என்ன' என்று கேளு.."

பூர்ணிமா கேட்டாள்.. நரேந்திரனின் முகம் பார்த்துக் கேள்வி கேட்டாள்.. 'என்ன..?' என்ற கேள்வியைக் கேட்டாள்..

கேள்வியின் நாயகன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்..

21

நதியோரம் நடந்தபோது

நுரை நீரில் மனம் நெகிழும்

நொடிப் பொழுதில் நுரை கரைய

நெடுமூச்சு வெளியேறும்

...நதியோரம் நான் நடந்த போது...

மறுநாளிலிருந்து அட்டவணை ஒன்றைத்தானே தயாரித்தவளாய் வித்யா இயங்கினாள்.. காலை ஏழே முக்காலுக்கே சமையலறைக்குள் போய்விடுவாள்..

"ஏம்மா.. நின்று கொண்டே சாப்பிட்டால் எப்படி உடம்பில் ஒட்டும்..? ஸ்டூலிலாவது உட்கார்ந்து சாப்பிடும்மா.." என்று கடிந்தபடி கண்ணம்மா அவசரமாய் அவள் தட்டில் தோசையைப் போட்டு சட்னியை ஊற்றுவாள்..

"பஃபே சிஸ்டம்னு ஒன்று இருக்கிறது ஆன்ட்டி.. அதில் எல்லாம் நின்று கொண்டேதான் சாப்பிடுவார்கள்.." என்று பதில் கூறிக் கொண்டே தட்டை கழுவும் தொட்டியில் போட்டு விட்டு கை கழுவி விட்டுச் சென்று விடுவாள் வித்யா..

எட்டு மணிக்கெல்லாம் பேக்டரி ஜீப்பை ஓட்டிக் கொண்டு குகன் வந்து விடுவான்.. மதியம் கேண்டீனில் சாப்பிட்டு விடுவாள்.. மாலைக் காபியும் அங்கே குடித்து விடுவாள்.. இருள் பரவும்வரை மாங்கு, மாங்கென்று நேரம் பார்க்காமல் உழைப்பாள்.. நதியோரப் பெருமாள் கோவிலைக் கடக்கும்போது மட்டும் ஜீப்பை நிறுத்தச் சொல்லி ஒரு நிமிடம் கோவில் கோபுரத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள்.. பின் கண் கலங்க கடவுளிடம் வேண்டிக் கொண்டு ஜீப்பைக் கிளப்பச் சொல்வாள்.. இரவு உணவை மாடிக்கு தன் ரூமிற்குக் கொண்டு வரச் சொல்லி கண்ணம்மாவிடம் கூறி விட்டாள்.. எல்லா விதங்களிலும் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டவளின் தனிமைச் சிறையை உடைக்க பூர்ணிமா முயற்சி எடுக்கவில்லை.. மனதிற்குள் வித்யாவின் செயல்பாடுகளை பூர்ணிமா, பிரகாஷ், நரேந்திரன் மூவருமே ஆதரித்தனர்.. சுரேந்திரனால் வித்யா தன்னைச் சுற்றிப் போட்டுக்

கொண்ட வேலியை உடைக்க முடியவில்லை.. அத்தோடு ஒருவர் விருப்பத்திற்கு எதிரான எதையும் செய்யக்கூடாது என்ற கொள்கையுடையவன் அவன்..

மீனலோசனிக்கும், பிரபாவதிக்கும் சந்தேகம் மூண்டது..

"என்ன பிரபா.. நம்ம வீட்டுக்கு விருந்தாளியாய் வந்த மகாராணி பேச்சு மூச்சில்லாமல் ஒதுங்கிப் போகிறாள்..? உனக்கு ஏதாவது தெரியுமா..?"

"அக்கா.. அவரும் உங்களைப் போல்தான் சொல்கிறார்.. பெரியவர் முகமே இருளடித்தது போல் இருக்கிறதாம்.. ஒன்றையும் சரிவரக் கவனிப்பது இல்லையாம்.. பித்துப் பிடித்ததுபோல் இருக்கிறார்ன்னு மில்லில் பேசிக் கொள்கிறார்களாம்.."

"உன் பாடு தேவலை.. பணத்தை எந்தக் கணக்கில் எழுதினாலும் கேட்கவோ, பார்க்கவோ ஆளில்லை.. போலீஸ்காரி போல் அல்லவா அந்த வித்யா கண்காணிக் கிறாள்..? எந்தக் கணக்கும் எழுத முடியாமல் வெட்டியாய் பேக்டரிக்கும் வீட்டுக்கும் அவர் அலைந்து கொண்டிருக்கிறார்.."

"ஜி.எம். போஸ்ட்டுக்கான சேலரி லட்சத்தில் வருமே..?"

"உன் வீட்டுக்காரருக்கும் தானே வருகிறது.."

"அதைத்தான் சொல்ல வந்தேன் அக்கா.. அது மட்டும் தான் மீதம்.. சுரேந்திரன் தினசரி கணக்குகளை தவறாமல் செக் பண்ணுகிறானாம்.. தம்பி முன்னால் தலை குனிவு வரக்கூடாதுன்னு என்னவர் அடக்கி வாசிக்கிறார்."

"அப்படியா கதை..? அது சரி பிரபா.. அண்ணன் சைட் அடித்தவளை தம்பியும் சைட் அடித்தான்.. இவள் என்னடா என்றால் இருவர்கிட்டயும் ஒட்ட மாட்டேன் என்கிறாள்.. தனியாகப் போகிறாள்.. வருகிறாள்.. யார் மனதில் யார் இருக்கிறார்கள்..?"

"யார் மனதில் யார் இருந்தால் நமக்கென்ன அக்கா பெரியவர், சின்னவர் இருவர் மனதிலும் இவள்

இருந்துவிடக் கூடாது.."

"அதுதான் பிரபா எனக்கும் கிடந்து அடித்துக் கொள்கிறது.. பெரியவர் சொத்தைக் காப்பாற்றினவர்.. அவருக்குத்தான் முழு உரிமையும் இருக்கிறது.. இவள் அவர் மனைவியாகி விட்டால் இந்த வீட்டின் மூத்த மருமகள் அவளாகி விடுவாள்.. நாம் இருவரும் அவளுக்கு அடுத்துத்தான்.." மீனலோசனி கவலையுடன் கூறினாள்..

"இளையவரை மண முடித்தாலும் அதே கதைதான்.. பெரியவராவது குடும்பம் என்று பார்ப்பார்.. சுரேன் அதையெல்லாம் பார்க்க மாட்டார்.. திருமணம் முடிந்தவுடன் பாகப்பிரிவினைதான்.. அனாமத்துப் பணத்தையெல்லாம் ஒன்றாகப் போட்டு பாகம் பிரித்து விடுவார்.. அவளைச் சென்னையிலேயே கோடீஸ்வரி ஆக்கிவிடுவார்.."

"அண்ணன் தம்பி இருவரில் யாரையும் அவள் மணந்து விடக் கூடாது.."

"நடந்து விட்டால் நம்மால் என்ன செய்ய முடியும் அக்கா..?"

"நடக்காது பிரபா.."

"எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறீர்கள்..?"

"சுரேன் வித்யாவைப் பார்க்கும் பார்வையில் ஆசை தெரிகிறது.. பெரியவரைப் பற்றி நமக்குத் தெரியாதா..? தம்பி விரும்புகிறவளை தான் எப்படி மணப்பது என்று நினைப்பார்.."

"அனுபவம் பேசுகிறது இல்லையா அக்கா.." என்றாள் பிரபாவதி குத்தலாக.. கலந்து பேசும் மனநிலையில் இருந்த மீனலோசனி அதை சட்டை செய்யவில்லை..

"ஆனால் சுரேந்திரனும் அவளை மணக்க நாம் விட்டு விடக் கூடாது பிரபா.."

"எப்படி.. நம்மால் என்ன செய்ய முடியும்..?"

"எதுவும் செய்ய முடியும்.. முதலில் நடப்பதை ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்க்க வேண்டும்.. பெரியவர் தியாகி போல்

வித்யாவைத் தம்பிக்கு விட்டுக் கொடுப்பார். திருமண ஏற்பாடுகள் நடக்கும்.. கடைசி நேரத்தில் நாம் நம் கைவரிசையைக் காட்ட வேண்டும்.."

"என்ன செய்ய வேண்டும்..?"

"சுரேனுக்கு அவன் அண்ணன் மேல் பாசம் அதிகம்.. அண்ணன் காதலித்த பெண்ணை தனக்காக விட்டுக் கொடுக்கிறார் என்பதை அவன் தெரிந்து கொள்ள வைக்க வேண்டும்.."

"தெரிய வைத்தால்.."

"அவன் வித்யாவை மணந்து கொள்ள மாட்டான்.."

"காரியத்தையே கெடுக்கிறீர்கள் அக்கா.. சரிதான் என்று சந்தோஷமாக பெரியவர் வித்யாவின் கழுத்தில் தாலியைக் கட்டிவிடுவார்.."

"நீ வித்யாவைத் தெரிந்து கொண்டது அவ்வளவு தான்.. அண்ணன் கூட கார் ஏறினவள் தம்பிகூடப் போக மறுத்து விட்டாள்.. தம்பிகூட மணவறை வரைப் போனபின் அண்ணனிடம் தாலிகட்டிக் கொள்வாளா..?"

பிரபாவதியால் அந்தக் கணம் மீனலோசனியின் புத்திக் கூர்மையை மெச்சிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை..

"பேசுவதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது.. இங்கேதான் ஆளுக்கு ஒரு திசையில் முடங்கிக் கொண்டு இருக்கிறார்களே.. எப்படித் திருமணப் பேச்சை ஆரம்பித்து மணவறை வரை கொண்டு போவது..?"

"அதை நான் பார்த்துக் கொள்வேன்.. அத்தை எதற்கு இருக்கிறார்கள்.." என்றாள் மீனலோசனி..

மீனலோசனியும், பிரபாவதியும் சதி ஆலோசனையி-லிருக்க நரேந்திரனோ நதி ஆலோசனையில் இருந்தான்.. தனியே நதிக்குப் போவதும் நேரம் காலம் தெரியாமல் அங்கேயே இருப்பதும் தனக்குத்தானே பேசிக் கொள்வதுமாய் நதிக்கரையோரமே குடியிருந்தான்.. வீட்டில்

பிடிக்க முடியாமல் பூர்ணிமா தன் அண்ணனை நதியோரம் தேடிப் பிடித்தாள்..

பிரகாஷ் காரில் அமர்ந்துகொள்ள நரேந்திரனைத்தேடி பிரகாஷுடன் வந்திருந்த பூர்ணிமா மட்டும் காரிலிருந்து இறங்கிச் சென்றாள்.. தன் போக்கில் நதிநீரை வெறித்துக் கொண்டிருந்தவன் தோளில் ஓர் மென்கரம் படியவும் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான்..

"பூர்ணிமாவா..?" அவன் குரலில் ஏமாற்றம் தென்பட்டது..

"வேறு யாரை எதிர்பார்த்தீர்கள் அண்ணா..? வித்யாவையா..? அவளைத்தான் சிறகை ஒடித்து தனிமைச் சிறையில் தள்ளி விட்டீர்களே.."

"பூர்ணி.. எனக்குத் தண்டனை கொடுக்கத் தெரியாது."

"தண்டனை அனுபவிக்கத்தான் தெரியுமென்பதை கண்கூடாய் பார்த்துக் கொண்டிருக்கிறேனே.. வித்யா சாத்வீகமானவள்.. தன்னைச் சுற்றி அரண் அமைத்துக் கொண்டு விட்டாள்.. உங்களைத் தவிர யாராலும் அதை உடைக்க முடியாது.. தெரிந்தும் ஏன் நரகத்தில் மூழ்கி இருக்கிறீர்கள்..?"

நரேந்திரனின் கண்கள் கலங்கின.. ஆதுரமாய் தங்கையை நோக்கின.. இவள் தங்கையல்ல.. தாய்..

"நான் என்னம்மா செய்வது..?"

"நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம் அண்ணா.. நடந்தது என்ன என்பதை என்னிடம் கூறுங்கள்.. ஏதாவது செய்ய முடியுமா என்று நான் பார்த்துக் கொள்கிறேன்.."

நரேந்திரன் பெருமூச்சு விட்டான்.. அதன் உஷ்ணத்தில் நதி நீர் சூடேறியது.. பூர்ணிமா அண்ணனின் அருகமர்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

"பூர்ணி.. உன்னை என் தங்கையாக நினைத்து இப்போது பேசவில்லை.. ஒரு பிரண்டாக நினைத்துத்தான் பேசப் போகிறேன்.."

"பேசுங்கள் அண்ணா.. மனதில் உள்ள பாரத்தை என்னிடம் இறக்கி வையுங்கள்.. எத்தனை பாரம்தான் சுமக்க வேண்டும் என்று ஓர் அளவு இருக்கிறதண்ணா.. ஒட்டகம் கூட ஓர் அளவுக்கு மேல் சிறு துரும்பை வைத்தாலும் கீழே விழுந்து விடும்.. நீங்களும் விழுந்து விடக் கூடாது என்று தான் நான் துடிக்கிறேன் அண்ணா.."

"பூர்ணிம்மா.. என் வாழ்வில் நான் சந்திக்க நேர்ந்த ஏமாற்றங்கள் என்னைத் தவறான பாதைக்கு திசை திருப்பி விட்டன.."

"பாதை தவறினால் திருத்திக் கொள்ளலாமே அண்ணா.."

"வித்யாவும் இதைத்தான் கூறினாள்.. உங்கள் தவறுகளோடு உங்களை ஏற்றுக் கொள்ள ஒருத்தி வருவாள் என்றாள்.."

"வித்யாவிடம் இதை ஐ மீன்.. நீங்கள் தவறான பாதையில் சென்று விட்டதைக் கூறினீர்களா..?"

"ம்ம்.. சொன்னேன்.. அதைக் கேட்டபின்தான் அதைக் கூறினாள் பூர்ணிம்மா.. வித்யாவை சென்னையில் பார்த்தது முதல் நாள் நானாக இல்லை.. அவள் என் வாழ்வில் வேண்டுமென்ற துடிப்பு.."

"அவளிடம் இதைச் சொன்னீர்களா..?"

"சொல்ல எனக்கு ஏது தகுதி..? பணம் அந்தஸ்து இருந்தால் செய்த தவறு இல்லையென்று ஆகி விடுமா..? அதனால் ஒரு காரியம் செய்தேன்.."

"என்ன செய்தீர்கள்..?"

"சுரேந்திரனிடம் வித்யாவைப் பற்றிக்கூறி அவளை மணந்து கொள்ள முடியுமா..? என்று கேட்டேன்.."

"அண்ணா..!" ஸ்தம்பித்தாள் பூர்ணிமா.. நரேந்திரன் அந்த குளிர்ச்சியான சூழலிலும் வியர்த்த தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான்..

"ஆமாம் அம்மா! என் வேண்டுகோளுக்கு இணங்கித் தான் சுரேன் தாய் நாடு திரும்பினான்.. அவன் இந்தியா வந்தது வித்யாவிற்காக.."

"என்ன காரியம் செய்து விட்டீர்கள் அண்ணா..? வித்யாவின் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்..? அவள் உங்களை நேரில் பார்க்காமல் போட்டோவைப் பார்த்தே காதலித்தவள் அண்ணா.."

"அப்போதே எனக்கு அது கொஞ்சம் தெரிந்தது பூர்ணிம்மா.. ஆனால் அவளுக்கும் எனக்கும் இருந்த வயது வித்தியாசம், என் தவறான பாதை, இதையெல்லாம் மனதில் நினைத்து நமக்காக தன் வாழ்வைப் பணயம் வைக்கிறவளின் வாழ்வு வீணாகி விடக்கூடாதென்ற எண்ணத்தில் செய்தேன்.."

"நல்ல எண்ணம்தான் அண்ணா, உங்கள் சிந்தனையில் பழுது சொல்ல முடியாது.. ஆனால் வித்யாவைப் பற்றி ஒரு வினாடி நினைத்துப் பார்த்தீர்களா..? அவளை மீனலோசனியென்று நினைத்து விட்டீர்களா..? அவள் வெறுத்து ஒதுங்கி விட்டால் நம் நிழலைக் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டாள்.. இது அவளுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ..?"

"எனக்கும் அதே தவிப்புத்தான் பூர்ணிமா.. அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் எனக்குத் துணிவில்லை.. சுரேந்திரன் வித்யாவின் மேல் ஆசைப்படுகிறான்.. என் உயிருள்ள வரை நான் அவளை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.."

"என்ன சொன்னீர்கள் அண்ணா..." பூர்ணிமா ஆச்சர்யத்துடன் நரேந்திரனைப் பார்த்தாள்.. இந்த நரேந்திரன் அவள் அறியாதவன்.. இதை.. இதை.. இதைத்தான் அவள் அவனிடமிருந்து எதிர்பார்த்தாள்..

"நீங்கள் வித்யாவைக் காதலிக்கிறீர்களா..?"

"அவளும் என்னைக் காதலிக்கிறாள்.."

பூர்ணிமாவின் முகம் மலர்ந்தது.. அவள் பூவாகிச் சிரித்தாள்.. தன் தமையனின் தோள் சேர்த்துக் கட்டிக்

கொண்டாள்.. அண்ணனை எழுப்பினாள்..

"எழுந்திருங்கள் அண்ணா.. விசயத்தை என்னிடம் சொல்லி விட்டீர்கள் இல்லையா..? இனி உங்கள் திருமணம் என் பொறுப்பு.. நான் பார்த்துக் கொள்கிறேன்.. எது வந்தாலும் நான் சமாளிக்கிறேன்.."

"வித்யாவுக்கு உண்மை தெரிந்தால்.. அவள் என்னை மன்னிப்பாளா..?"

"மன்னிப்பாள்.. உங்களை மன்னிக்காமல் யாரை மன்னிக்கப் போகிறாள்.. வாங்க போகலாம்.."

"சுரேன் என்னைத் தவறாக நினைக்க மாட்டானா..?"

"மாட்டான்.. அவன் ஜென்டில்மேன்.. உண்மை தெரியாததால் வித்யாவின் பின் சுற்றுகிறான்.."

நரேந்திரனின் மனம் லேசாகியது.. இருவரும் எழுந்து சென்றார்கள்.. பூர்ணிமா அவள் காரில் ஏறப்போன சமயம்,

"பூர்ணி.. பிரகாஷ் தனியே வரட்டும்.. நீ என்னுடன் வருகிறாயா..?" என்று அழைத்தான் நரேந்திரன்..

தமையனின் கண்களில் இருந்த தவிப்பைக் கண்டவள் கார்க் கதவை மூடினாள்..

"பிரகாஷ் நீங்க பின்னாலேயே தொடர்ந்து வாங்க.. நான் அண்ணன் கூடப் போகிறேன்.."

"இத்தனை வருடங்களாக அதைத்தானே செய்து கொண்டிருக்கிறேன்.." என்றான் பிரகாஷ்..

"வாட்.?."

"நீ உன் அண்ணனுக்காக வாழ்கிறேன் என்று சொல்ல நான் உனக்காக வாழ்கிறேன் என்று உன் பின்னால் தொடர்ந்து வருகிறேனே.. அதைச் சொன்னேன்.."

"வழியுது.. துடைத்துக் கொள்ளுங்கள்.. இனி இந்த துரத்தலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.."

"என்னடி அணுகுண்டைத் தூக்கிப் போடுகிறாய்..? என்ன செய்யப் போகிறாய்..?"

அவன் தனிமையில் அழைக்கும் 'டீ'யை அண்ணன் முன் சொன்னதால் முறைத்தவள் கூறினாள்..

"வெயிட் அன்ட் ஸீ.."

சௌதாமினி அறையில் ஓய்வாகப் படுத்திருந்த வேளையில் மீனலோசனி உள்ளே நுழைந்தாள்..

பூனை போல் ஓசைப்படாமல் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்தாள்.. "அத்தை" என்று அழைத்தாள்..

"யாரது..?" என்று கண் விழித்த சௌதாமினி மரு மகளைக் கண்டதும்,

"என்னம்மா..?" என்று வினவியவாறு எழுந்து அமர்ந்தாள்..

"தொந்தரவு பண்ணி விட்டேனா அத்தை...?" வினயமாக மீனலோசனி வினவ 'அதுதான் பண்ணி விட்டாயே.. என்னவென்று சொல்லித்தொலை' என்று மனதிற்குள் திட்டிக் கொண்ட சௌதாமினி வெளியில்,

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லையம்மா.. என்ன விசயம் சொல்.." என்றாள் தேனினும் இனிய குரலில்..

"நம்ம வீட்டிற்கு வந்திருக்கிறாளே வித்யா.."

"ஆமாம்.. அவளுக்கென்ன..? அவள்தான் யார் கண்ணிலும் படுவதே இல்லையே.. சாப்பிடுவதற்குக்

கூட சமையலறைக்குப் போய் விடுகிறாளே.. அப்புறம் என்ன வந்தது..?" மதியத் தூக்கம் கெட்ட சௌதாமினி எரிச்சலுடன் கூறினாள்..

"அவளைப் பற்றி ஒன்றுமில்லை அத்தை.. நம்ம சுரேன்தான்.."

"இதோ பார் மீனா.. சுரேன் தங்கமான நேர்மையான பிள்ளை.."

"தெரியும் அத்தை.. அதனால்தான் வித்யா மேல் ஆசையிருந்தும் மனதில் வைத்துக் கொண்டு தவிக்கிறார்.. நீங்க பெரியவங்க.. நல்லது நடக்க வேண்டுமென்று நினைத்தால் காலாகாலத்தில் நடத்தி வைத்துவிட வேண்டும் அத்தை.." எடுத்துக் கூறினாள் கைகார மீனலோசனி..

"அப்படியா சொல்கிறாய்.. இது எப்படி என் கண்ணில் படாமல் போயிற்று..?" சௌதாமினி யோசித்தாள்..

"வீட்டில் உங்களைத் தவிர எல்லோருக்கும் தெரியும்.. கூடிக் கூடிப் பேசுகிறார்கள்.. யாரும் எதுவும் செய்ய மாட்டேன் என்கிறார்கள்.."

"நான் சுரேந்திரனிடம் விசாரிக்கிறேன்.."

சௌதாமினி சுரேந்திரனிடம் விசாரித்தாள்..

"சுரேன்.. அந்த வித்யாப் பொண்ணு மேல் உனக்கு நோக்கமா..?"

"ஐ லைக் ஹெர்ம்மா.. திருமணத்திற்கு ஏற்ற பெண் அவள்.."

அவன் சாதாரணமாய் கூறிச் சென்றுவிட சௌதாமினியின் மனம் சுறுசுறுப்பானது.. சுரேந்திரன் அவளது செல்லப் பிள்ளை.. அவன் விரும்பிய எதையும் நிறைவேற்றாமல் அந்த வீட்டில் யாரும் இருந்ததில்லை..

சௌதாமினி வித்யாவிடம் பேசினாள்.. விளைவு..?

22

நதியோரம் நடந்தபோது

நதியின் போக்கில் கால்கள் போகும்

இசைதேடி கவி தவிக்கும்

இமையோரம் நீர் துளிர்க்கும்

...நதியோரம் நான் நடந்த போது...

மாலை வித்யா திரும்பும்போது மிகவும் மனம் சோர்ந்திருந்தாள்.. நரேந்திரனின் முகம் பார்க்காமல் நதியோரம் அவனோடு நடக்காமல் இருவாரங்கள் ஓடிவிட்டன.. யாருக்காக அவள் சென்னையை விட்டு, வேலைகளை விட்டு முன் பின் தெரியாதவர்களின் வெறுப்பிற்கு ஆளாகி மணிமுத்தாறு வந்தாளோ.. அவன் அவளருகில் இருந்தும் மனதால் வெகுதூரம் விலகிச் சென்று விட்டான்.. இனி யாருக்காக இந்த ஊரில் இந்த வீட்டில் இருக்க வேண்டும் என்ற விரக்தி அவளிடம் குடி கொண்டது..

விட்டேற்றியாய் வீட்டுக்குள் நுழைந்து தனக்காகத் தரப்பட்டிருந்த அறையைத் திறந்து உள்ளே சென்று இயந்திரம் போல் தாழிட்டவள், முகம் கழுவப் போனாள்.. அறையின் காலிங் பெல் அடிக்க முகத்தை டவலால் துடைத்துக் கொண்டே வந்து அறைக் கதவைத் திறந்து யாரென்று பார்த்தாள்.. வீடு பெருக்கும் செண்பகம் நின்று கொண்டிருந்தாள்..

"என்ன செண்பகம்..?"

"பெரியம்மா உங்களை உடனே அவங்க ரூமுக்கு வரச் சொன்னாங்கம்மா.."

'சௌதாமினி அழைக்கிறாளா..? என்னவாக இருக்கும்' என்ற சிந்தனையோடு அறைக்கதவை மூடியவள் மாடியிறங்கி கீழ் தளத்தில் இருந்த சௌதாமினியின் மிகப் பெரிய அறைக்குச் சென்றாள்.. கதவு திறந்திருந்தது.. மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தாள்..

"உள்ளே வாம்மா" என்ற சௌதாமினியின் குரல் கேட்டது..

வித்யா அந்த அறைக்குள் சென்றாள்.. இதுவரை அங்கே போக வேண்டிய அவசியம் அவளுக்கு நேரவில்லை.. இன்று போனபோது அந்த அறையின் பிரம்மாண்டத்தையும் அழகையும் கண்டு பிரமித்துப் போனாள்.. முன்புறம்

வரவேற்பு அறை, உள்ளே பெரிய படுக்கையறை என இரு பெரும் பிரிவுகளுடன் இருந்தது அந்த அறை.. அங்கிருந்த சோபாக்கள்.. கட்டில் எல்லாமே பழங்கால ராஜ அலங்கார முகப்புகளுடன் இருந்தன.. அவர்களின் மூதாதையரின் சித்திரங்கள் சுவர்களை அலங்கரித்தன.. சௌதாமினி சோபாவில் ராஜ மாதாவின் கம்பீரத்தோடு அமர்ந்திருந்தாள்.. அவள் உடலை வைர நகைகள் அங்கிரித்துக் கொண்டிருந்தன..

"கூப்பிட்டீர்களாமே.." என்றாள் வித்யா மரியாதை யோடு..

"ஆமாம்மா.. கதவை மூடிவிட்டு உட்கார்.."

ஏன் கதவை மூடச் சொல்கிறார்கள்..? என்ன ரகசியம் பேசப் போகிறார்கள் என்ற குழப்பத்தோடு வித்யா கதவை மூடிவிட்டு வந்தாள்.. சௌதாமினியின் எதிரே அமர்ந்தாள்.

"நீ இன்ஜினியரிங்க படிச்சிருக்கேன்னு தெரியும்.. உன்சொந்த ஊர் எதும்மா.." சௌதாமினி மென்மையாய் வினவினாள்..

"பழனிக்குப் பக்கத்தில் ஆயகுடி.."

"அப்பா என்ன செய்கிறார்..?"

"பழனி தாலுகா ஆபிசில் கிளார்க்காக இருக்கிறார்.."

"அம்மா..?"

"சின்ன வயதிலேயே இறந்து விட்டார்கள்.. சித்திதான் இப்போது இருக்கிறார்கள்.." வெறுப்புடன் கூறினாள் வித்யா..

"ஓ.. அப்படியா.. ம்ம்.. அவர்களுக்கு குழந்தைகள் உண்டா..?"

"ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள்.."

"அப்படியா... இதோ பார் வித்யா, எங்கள் குடும்பத்தைப் பற்றி பூர்ணிமா சொல்லியிருப்பாள்.."

"ராஜ பரம்பரைன்னு சொல்லியிருக்காள்.."

"எங்கள் பணவசதி பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.."

"நீங்கள் கோடீஸ்வரங்கன்னுதான் எனக்குத் தெரியுமே.."

வித்யாவிற்கு மனம் சஞ்சலமடைந்தது.. எதற்காக இதையெல்லாம் விலாவாரியாகத் தன்னை உட்கார வைத்துக் கூறிக் கொண்டிருக்கிறாள்.. இவள் பணப் பெருமைக்காவும் பரம்பரைப் பெருமைக்காவும்.. வித்யா அவர்கள் வீட்டுப் பெண்ணோடு பழகினாள்..? அதற்காகவா அவள் பின்னால் ஆட்டுக்குட்டி போல் தொடர்ந்து வந்தாள்..?

அலுப்புடன் அவள் போய்விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது சௌதாமினி அந்தக் கேள்வியைக் கேட்டாள்..

"என் வீட்டிற்கு மருமகளாக வர எத்தனையோ ஜமீன் வம்ச ராஜ பரம்பரைப் பெண்கள் போட்டி போடுகிறார்கள்.. ஆனால் எனக்கு என்னவோ உன்னை என் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசை.. என் மகனும் விருப்பப் படுகிறான்.. நீ என்ன சொல்கிறாய் வித்யா..? உன் அப்பாவிடம் நான் பேசட்டுமா..?"

வித்யாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.. இது உண்மைதானா..? அதனால்தான் நரேந்திரன் விலகிச் சென்றானா..? திருமணத்திற்கு முன்னர் தனியாக சந்திப்பது தவறு என்பதால்தான் அவளைச் சந்திக்க முனையவில்லையா..?

'அது உண்மைதானே..?' என்று கேட்டது அவள் மனம்.. அன்று நதியோரம் நினைவில் வந்தது.. 'எல்லை மீற எவ்வளவு நேரம் ஆகும்' என்ற நினைவில் அவள் முகம் சிவந்தது.. இரண்டு வாரங்களாக மனதைப் பிடித்திருந்த சோர்வும் விரக்தியும் அவளை விட்டு ஓட அவள் ஆனந்தத்துடன் சௌதாமினியின் பாதம் பணிந்து எழுந்தாள்..

"உங்கள் மருமகளாக வர நான் தவம் செய்திருக்க வேண்டும் அத்தை..." என்றாள் முதன் முதலாய்

சௌதாமினியை 'அத்தை' என்ற முறை வைத்து விளித்து.

"எனக்கு மருமகளாக வர தவம் செய்திருக்க வேண்டுமோ இல்லையோ சுரேந்திரனின் மனைவியாக வர நீ தவம் செய்திருக்க வேண்டும்.. அவன் அழகுக்கும்... படிப்புக்கும்... துறுதுறுப்புக்கும் வெளிநாட்டிலேயே ஏதாவது ராஜ வம்சத்தில் மணமுடித்து அழைத்து வருவானென்று நினைத்தேன்.. அவன் என்னடா என்றால் இந்தியாவுக்கு வந்து உன்னைக் கை காட்டுகிறான்.." சௌதாமினி மேலே பேசியது எதுவும் வித்யாவின் காதுகளில் விழவில்லை..

அவள் உன்மத்தம் பிடித்தவள் போலானாள்..

"ஒரு நிமிடம் மேடம்.. நீங்கள் பேசுவதைக் கொஞ்சம் நிறுத்துகிறீர்களா..?" என்றாள் வித்யா அலட்சியத்துடன்..

"மேடமா..?" சௌதாமினி திகைத்துப் போய் கேட்டாள்..

"மேடம்தான்.. இனி என்றைக்குமே நீங்கள் எனக்கு மேடம்தான்.. இவ்வளவு நேரம் யாருக்கு பெண் கேட்டீர்கள்..? உங்கள் மகன்.. மகன் என்று யாரைச் சொன்னீர்கள்..? உங்கள் மருமகள் என்று கூறும் போது யாரின் மனைவியாக என்னை கற்பனை செய்து பார்த்தீர்கள்..?"

"ஏன்ம்மா.. நீயும் என் மருமகள் என்றதும் சந்தோசப் பட்டாயே.. என் காலில் விழுந்து எழுந்தாயே.. என்னை 'அத்தை' என்று கூப்பிட்டாயே..? என் மகன் மேல் விருப்பம் இல்லாமலா அதையெல்லாம் செய்தாய்..?" கோபத்துடன் கேட்டாள் சௌதாமினி..

"ஆமாங்க.. எனக்கு உங்கள் மகன் மேல் விருப்பம் தான்.. காதல்தான்.. வாழ்ந்தால் அவருடன் வாழ வேண்டும் என்ற எண்ணம்தான்.. அவருடைய அம்மா என்பதால்

தான் உங்கள் காலில் விழுந்தேன்.. 'அத்தை' என்று கூப்பிட்டேன்.." வித்யாவின் கண்களில் சீற்றம் வழிந்தது..

"என்னம்மா பைத்தியம் போல் பேசுகிறாய்.. எல்லா வற்றையும் செய்து விட்டு ஏதோ நான் தவறு செய்தது போல் என்னுடன் முறைக்கிறாயே.."

"ம்ம்.." என்று சினத்துடன் சிரித்தாள் வித்யா..

"என்ன தவறு செய்தீர்கள் என்று கூடத் தெரிய வில்லை.. நீங்கள் எல்லாம் ஒரு தாயென்று எப்படிச் சொல்லிக் கொள்கிறீர்கள்.."

"பார்த்துப் பேசம்மா.. நீ யாரிடம் பேசுகிறாய் தெரியுமா..?"

"தெரியாமல் என்ன..? ஒரு கடமை தவறிய தாயிடம் பேசுகிறேன்.."

"என்ன வார்த்தை சொல்கிறாய்.." சௌதாமினியின் உடல் நடுங்கியது..

"என் மகன் ஆசைப்பட்டான் என்பதற்காக ஒரு குமாஸ்தாவின் மகளைப் பெண் கேட்கிறேன் பார்.. தகுதியைப் பற்றியும்.. தராதரத்தைப் பற்றியும் உனக்கு என்ன தெரியும்..? உன்னை என் மருமகளாக்க நினைத்த எனக்கு இதுவும் வேண்டும்.. இன்னமும் வேண்டும்.."

"நான் குமாஸ்தாவின் மகள்தான் அதை என்றுமே மறந்ததில்லை.. உங்களைப் போல.."

"நான் எதை மறந்தேன்..?"

"ஓர் உயிருள்ள ஜீவனை.. நான் பெற்ற தாய் இறந்ததால் அநாதையானேன்.. பெற்ற தாயிருந்தும் அநாதையாய் அலையும் ஒரு மாடி வீட்டு ஏழையை.. நீங்கள் மறந்து விட்டீர்கள்.."

வித்யாவின் உதடுகள் துடித்தன..

சௌதாமினியின் உடல் விதிர்த்தது.. இந்தப் பெண் பேசும் வார்த்தைகளில் ஏதோ அர்த்தம் பொதிந்துள்ளது போல் தோன்றுகிறது..

"அம்மா வித்யா.. கொஞ்சம் விளங்கச் சொல்.. நீ மிகவும் நல்ல பெண் என்பது என் அபிப்ராயம்.. இப்போது இவ்வளவு மரியாதையில்லாமல் எடுத்தெறிந்து நீ என்னை ஏசக் காரணம் என்னம்மா..?"

"என் மகனைக் கல்யாணம் செய்து கொள் என்று கேட்டீர்களே.. கல்யாணமாகாமல் இருக்கும் மகன் உங்களுக்கு சுரேநதிரன் மட்டும் தானா..?" வித்யாவின் வார்த்தைகள் சாட்டையடியாய் சௌதாமினியின் மனதில் விழுந்தன..

வலி தாங்க முடியாமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள் சௌதாமினி.. கல்யாணமாகாமல் இருப்பது சுரேந்திரன் மட்டுமா..? நரேந்திரனும்தானே.. அப்போது இவள்.. இவள்.. நரேந்திரனையா மணமகன் என்று நினைத்தாள்..? அவனைப் பெற்ற தாய் என்பதற்காகவா தன் தாள் பணிந்தாள்..? அவன் மனைவியாக வேண்டும் என்ற ஆசையினாலா.. 'அத்தை' என்று அழைத்தாள்..

'கடவுளே.. பெற்ற குழந்தைகளில் வேற்றுமை பார்த்தேனா..?' பதறிப் போனாள் அந்தத்தாய்..

வித்யாவின் கோபம் கரை உடைந்திருந்தது.. அவள் கொட்டித் தீர்த்து விட்டாள்..

"பெரிய ராஜ பரம்பரை ராஜ பரம்பரைன்னு பீத்திக் கிறீர்களே.. ஒரு ராஜ மாதாவின் கதை தெரியுமா..? அவள் பெயர் காந்தாரி.. நூறு பிள்ளைகள் பெற்றவள்.. நூறு பெயர்களில் ஒரு பெயரைக்கூட அவள் மறந்ததில்லை.. நூறு மகன்களிடையே அவள் வேற்றுமை பார்த்ததில்லை..

இங்கே என்ன நடக்கிறது..? பூர்ணிமாவை விட நான்கு வயது மூத்தவருக்குப் பெண் தேடுகிறீர்கள்.. அவளைவிட பதினைந்து வயது மூத்தவர் நரேன்.. அவரை தனி மரமாக்கி விட்டீர்கள்.. மறந்து விட்டீர்கள்.. நீங்கள் எல்லாம் எப்படி நல்ல தாயாக இருக்க முடியும்..? மூத்தவர் இருக்க மற்ற இளைய மகன்களுக்கு திருமணம் நடத்தியதை சந்தர்ப்ப சூழ்நிலை என்று சொல்லலாம்.. உங்கள் மூத்த மகளின் கல்யாணம் முடிந்ததை கடமை என்று சொல்லலாம்..

இப்போது மூத்தவரை விட்டுவிட்டு இளைய மகனுக்கு பெண் கேட்டதற்குக் காரணம் என்ன..? சூழ்நிலையா..? கடமையா..? எது உங்களை மூத்தவரை மறக்கச் செய்துவிட்டு இளையவருக்கு பெண் கேட்க வைத்தது..?

ஏனென்றால் இளைய மகன் உங்கள் செல்லப் பிள்ளை.. மூத்த பிள்ளை என்ன தத்துப் பிள்ளையா..? நீங்கள் பெற்ற பிள்ளை என்று நினைத்திருந்தால் இப்படி பாரபட்சம் காட்டியிருப்பீர்களா..?"

சௌதாமினி 'கரகர'வென கண்ணீர் விட்டாள்..

"அம்மா வித்யா.. நான் எவ்வளவோ கெஞ்சினேன்ம்மா.. அவன் கல்யாணம் வேண்டாமென்று மறுத்து விட்டான்.."

"குட்.. பெற்ற தாய் சொல்கிற தன்னிலை விளக்கமா இது..? அவர் விரும்பியா இந்தக் குடும்ப பாரத்தை அவர் தலைமேல் வைத்தீர்கள்..? அவரைக் கேட்டுக் கொண்டா உங்கள் இரண்டாவது மகனும் மூன்றாவது மகனும் காதலித்தார்கள்..? குடும்பத்திற்காக அவர் தன் காதலைத் துறந்தாரே.. அவர்கள் இரண்டு பேரும் அண்ணனுக்காக அவர்கள் காதலைத் தியாகம் செய்தார்களா..? நீங்கள் எல்லோரும் மகா கெட்டிக்காரர்கள்.. நீங்கள் உங்கள் விருப்பங்களை தடை இல்லாமல் நிறைவேற்றிக் கொள்வீர்கள்.. அவருக்கு ஓர் குடும்பத்தை உண்டு பண்ணிக் கொடுக்க மட்டும் ஆயிரம் தடை சொல்வீர்கள்.."

சௌதாமினி கைகுவித்து மறுத்தாள்..

"இல்லையம்மா இல்லை.. அவனிடம் போராடிப் பார்த்து விட்டேன்.. அவன் மறுத்து விட்டான்.. அதனால் தான்.."

"விட்டு விட்டீர்கள்.. தண்ணீர் தெளித்து நீ எக்கேடோ கெட்டுப் போ என்று விட்டு விட்டீர்கள்.. அப்படித்தானே.. நான் ஒன்று கேட்கிறேன்.. இப்போது பூர்ணிமாவும் திருமணம் வேண்டாம் என்று மறுத்தாளே.. நீங்கள் ஏன் அவளை அப்படியே விடவில்லை..?"

சௌதாமினியின் கண்ணீர் நின்றுவிட்டது.. அவள் சிலையாக சமைந்து போனாள்.. அந்தச் சிறிய பெண்ணின் நாவில் தீ எழுந்து அவளைச் சுட்டது..

"சொல்லுங்கள் மேடம்.. அவள் கல்யாணம் நின்று போகக் கூடாதென்று ஏன் நரேனின் உயிரைப் போட்டு

வதைத்தீர்கள்.. அவரையே சென்னைக்குத் துரத்தி அவளைக் கூட்டிவரச் செய்தீர்களே எதற்காக..?"

"நிச்சயம் பண்ணிய கல்யாணம் மாறிப்போய் விடக்கூடாது என்பதற்காக.." என்று சொல்லும்போதே சௌதாமினியின் மனம் அவளை இடித்தது..

'நரேந்திரனின் திருமணமும் நிச்சயம் பண்ணியது தானே ஏன் மாறி விட்டது..?'

வித்யா வெறுப்போடு அறை வாசலை நோக்கிப் போனவள் அப்படியே நின்று விட்டாள்..

அறைக் கதவில் சாய்ந்து கொண்டு சுரேந்திரன் நின்று கொண்டிருந்தான்..

ஒரு கணம் தான் வித்யா தாமதித்தாள்.. மறுகணம் அலட்சியமாய் அவனைக் கடந்து செல்ல யத்தனித்தாள்.. சுரேந்திரன் அறைக் கதவை மூடித் தாழிட்டான்..

"எப்போதுமே கதவை மூடினால் தாழ் போட வேண்டும் வித்யா.. இப்போது பாருங்கள்.. நீங்கள் என்னிடமிருந்து விலகி விலகி ஓடினீர்கள்.. எனக்கு உங்களுடன் பேச ஆசை.. அம்மா ரூமிற்குள் நீங்கள் போவதைக் கண்ட நான் உங்களுடன் பேசலாமென்று பின் தொடர்ந்து வந்தேன் வந்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று பார்த்தீர்களா..?"

வித்யா அவனிடம் பேச விரும்பவில்லை.. கோபமாய் மௌனித்தாள்..

"வந்ததும் நல்லதாகப் போயிற்று.. நீங்களும், அம்மாவும் பேசியதை ஆரம்பம் முதல் கடைசி வரை ஓர் வார்த்தை கூட விடாமல் கேட்டு விட்டேன்.. ஆனால் வித்யா.. இதில் என் அம்மா குற்றவாளியில்லை.."

'என்ன சொல்கிறாய்..?' என்பது போல் வித்யா முறைத்தாள்..

"இன்னும் சொல்லப் போனால் நானும் குற்றவாளி யில்லை.. குற்றவாளி யார் என்று எனக்குத் தெரிய வில்லை.. ஏனென்றால் என்னை உங்களை மணக்கச்

சொல்லி வேண்டிக் கேட்டுக் கொண்டு 'உடனே இந்தியாவுக்கு வா' என்று சொல்லி வரவழைத்தது நரேன் அண்ணா.."

"என்ன..?" என்று துடித்துப் போய்விட்டாள் வித்யா..

"நான் நம்ப மாட்டேன்.."

"எனக்கு அது அவசியமில்லை.. இன்னொருவரை காதலிக்கும் பெண்ணின் வாழ்க்கையில் இனிக் குறுக்கிடவும் மாட்டேன்.. உங்கள் விருப்பத்தோடுதான் என்னை நரேன் அண்ணா வரவழைத்திருக்கிறார் என்று தான் இதுவரை நினைத்திருந்தேன்.. தமிழகப் பெண்களுக்கே உரிய வெட்கத்தால் விலகிப் போகிறீர்கள் என்றுதான் இத்தனை நாளாய் நினைத்திருந்தேன்.. பட்.. நீங்கள் என் நரேன் அண்ணனை ஒருதலையாய் காதலித்து வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது.."

"என்னது ஒருதலைக்காதலா..?" வித்யாவின் கண்கள் கனலாகின..

"ஆமாம்.. பின்னே தான் காதலிக்கும் பெண்ணையா வேறு ஒருவனிடம் மணந்து கொள்ளச் சொல்ல நரேன் அண்ணா சொல்வார்.."

"போதும்.." வித்யா கைகூப்பினாள்.. அவள் உடல் வெடவெடத்தது..

"வருகிறேன் சுரேந்திரன் சார்.. உங்கள் பெரிய அண்ணனிடம் என் வந்தனத்தைச் சொல்லி விடுங்கள்.. சூழ்நிலைக்கேற்ப மனம் மாற நான் கார்த்திகா இல்லை யென்றும் சொல்லி விடுங்கள்.. வருகிறேன் மேடம்.. இத்தனை நாள் என்னை ஆதரித்ததற்கு மிகவும் நன்றி.."

வித்யா அறைக்கதவைத் திறந்து கொண்டு புயலென வெளியேறினாள்.. சுரேந்திரனும் சௌதாமினியும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர்..

நதியோரம் நடந்தபோது

நிலவின் பிம்பம் நீரில் தெரியும்

நிலவோடு கதை பேசும்

நினைவோடு மனம் துள்ளும்

...நதியோரம் நான் நடந்த போது...

தன் அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்ட வித்யாவின் மனம் துடிதுடித்தது.. 'என்ன வார்த்தை சொல்லி விட்டான் அவன்..?' வித்யா ஒரு தலையாய் காதலிக்கிறாளா..? அவள் நரேந்திரனை ஒருதலையாய் காதலித்தது உண்மைதான்.. ஆனால் அது சென்னையில்.. நதியோரம் நடந்ததெல்லாம் இந்த சுரேந்திரன் அறிவானா..?

ஆனால் சுரேந்திரனை இந்தியாவிற்கு வரச் சொன்னதே நரேந்திரன்தானாமே.. வித்யாவை மணந்து கொள்ள கேட்டுக் கொண்டானாமே.. அவன் எப்படி இதைச் செய்யலாம்..? அவனால் எப்படி இதைச் செய்ய முடிந்தது..?

மனமார தான் காதலித்த பெண்ணை, தன்னைக் காதலித்த பெண்ணை இன்னொருவனிடம் திருமணம் பண்ணிக் கொள்ளச் சொல்லிக் கேட்க எப்படி மனச்சாட்சி உள்ள மனிதனால் முடியும்..? வித்யாவின் வாழ்கையை தீர்மானிக்க அவன் யார்..? இத்தகைய கொடிய செயலைச் செய்தவனின் முகத்தில் இனி விழிப்பதா..?

வித்யா ஒரு முடிவுக்கு வந்தாள்.. பெட்டிகளை எடுத்துத் தன் துணிகளை மடமடவென்று அடைத்துக் கொண்டாள்.. செல்போனை உயிர்ப்பித்தாள்.. நம்பர்களை அழுத்தினாள்.. மறுமுனையில் குரல் கேட்டது..

"குகன் ஸ்பீக்கிங்.."

"நான் வித்யா பேசுகிறேன் குகன்.."

"யெஸ் மேடம்.. இப்போதுதானே விட்டு விட்டு வந்தேன்..? எனி அர்ஜென்ட் மேட்டர்..?"

"யெஸ் குகன்.. நான் உடனே சென்னை போக வேண்டும்.. ஏதாவது டாக்ஸி பிடித்துக் கொண்டு வருகிறீர்களா..? வரும்போதே அம்பாசமுத்திரத்திலிருந்து சென்னை போக பஸ் எத்தனை மணிக்குக் கிடைக்கும் என்பதை விசாரித்துக் கொண்டு வருகிறீர்களா..?"

மறுமுனை ஒரு வினாடி மௌனமானது.. மறுவினாடி,

"யெஸ் மேடம்.. நான் வருகிறேன்.." என்றது.

வித்யா பெட்டிகளை தயார் பண்ணிவிட்டு ஜன்னலருகில் ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.. அங்கிருந்து பார்த்தால் மெயின் கேட்டு தெரியும்.. குகன் டாக்ஸியோடு வந்தால் உடனே இறங்கிப் போக ஏதுவாக இருக்கும்.. தன் செல்போனை எடுத்துச் சென்னையில் உடன் பணிபுரிந்த தோழி நளினியை அழைத்தாள்.. "ஹலோ.." என்ற குரல் கேட்டதும்..

"நளினி நான் வித்யா பேசுகிறேன்.." என்றாள்..

"ஓ.. வித்யா எங்கேப்பா உன்னைப் பற்றி ஒரு தகவலையும் காணோம்.. சொல்லாமல் கொள்ளாமல் ரிசைன் பண்ணி விட்டுப் போய் விட்டாயே.. இப்ப எங்கே இருக்கிறாய்..? என்ன வேலை பார்க்கிறாய்..?"

"நளினி.. நான் இங்கே ஓர் பேக்டரியில் பெர்ஸனல் மேனேஜராக வேலை பார்த்தேன்.. பிடிக்கவில்லை.. ரிசைன் பண்ணிவிட்டேன்.. சென்னைக்கே வந்து விடலாமென்று பார்க்கிறேன்.. அங்கே வந்து வேறு வேலை தேட வேண்டும்.. அதுவரை நீ தங்கும் லேடீஸ் ஹாஸ்டலில் நான் தங்க ஒரு ரூம் கிடைக்குமா..?"

"ஓ.. எஸ்.. உனக்கில்லாததா..? இங்கே நேற்றுத்தான் ஒரு பெண் பெங்களூர் டிரான்ஸ்பர்ன்னு ரூமைக் காலி பண்ணிவிட்டுப் போனாள்.. நான் வார்டனிடம் பேசுகிறேன்.. நீ வா.. நோ பிராப்ளம்.."

"தேங்க் யூ நளினி.." என்றவள் செல்லை அணைத்து விட்டு கைப்பையைத் திறந்து தன் சேமிப்புகளை சரி பார்த்துக் கொண்டாள்.. பேக்டரியில் பணி புரிந்ததற்கான மாதச் சம்பளமாக அறுபதாயிரம் ரூபாய்களை நரேந்திரன் கொடுத்து வந்தான்.. அதிகமென்பதை அறிந்தாலும் அவனோடு வாதாட மனமில்லாமல் வித்யா ஏற்றுக் கொண்டாள்.. அதற்காகத்தான் இரவு பகல் பாராமல் மனப்பூர்வமாக உழைத்தாள்.. மாதா மாதம் கைச்செலவு சொற்பத்தொகை போக மீதத்தை பேங்கில் எஸ்.பி. கணக்கில் போட்டு வைத்திருந்தாள்.. அது ஏறக்குறைய எட்டு லட்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.. இருபதாயிரம் ரூபாய் பணமாக இருந்தது.. சென்னைக்கு போய் ஏ.டி.எம். கார்டில் ஹாஸ்டலுக்கான முன் பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவோடு வழக்கம்போல் நகைப் பெட்டியையும் ஸேவிங்க்ஸ் பத்திரங்களையும் எஸ்.பி. கணக்குப் புத்தகத்தையும் துணிகளுக்கு அடியில் வைத்து பெட்டியை மூடினாள்.. கைப்பையில் பணத்தை வைத்துக் கொண்டு தயாரான போது கதவு தட்டப்பட்டது.. திறக்க யோசித்தவள் பின் ஓர் முடிவுடன் திறந்தாள்.. பூர்ணிமா நின்றிருந்தாள்.. அவள் விழி சிவந்திருந்தது..

அமைதியாய் உள்ளே வந்தவள் வித்யாவின் பெட்டிகள் தயார் நிலையில் இருப்பதைப் பார்த்தாள்.. தோழியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே நின்றாள்.. துக்கம் அவள் தொண்டையை அடைத்தது..

பூர்ணிமாவும், நரேந்திரனும் வந்து கொண்டிருக்கும் போது நரேந்திரனின் செல் ஒலித்தது.. எடுத்துக் காதில் வைத்தவன்,

"சொல்லு குகன்.." என்றான்.. மறுமுனை பேசிக் கொண்டிருக்க இவன் பதில் சொல்லாமல் "உம், உம்" என்று உம் கொட்டிக் கொண்டு இருந்தான்.. கடைசியில்..

"ஓகே.. குகன் நான் நேரில் வருகிறேன்.." என்று போனை அணைத்தான்.. பின்னர் பூர்ணிமாவைப் பார்த்து..

"நிலைமை கைமீறி விட்டதம்மா.." என்றான்..

"என்ன அண்ணா... பேசியது குகன்தானே..? பேக்டரியில் பிரச்சனையா..?"

"என் வாழ்க்கையில் பிரச்சனை.."

"என்ன அண்ணா சொல்லுகிறீர்கள்..?"

"பூர்ணி.. வித்யா இப்போதுதான் குகனுக்குப் போன் பண்ணினாளாம்.. சென்னைக்கு உடனே போக பஸ் எத்தனை மணிக்குன்னு விசாரித்துவிட்டு டாக்ஸி கொண்டு வரச் சொன்னாளாம்.."

"கடவுளே... வித்யாவிற்குத் தெரிந்து விட்டதா..?"

"அப்படித்தான் நினைக்கிறேன்.. பூர்ணி நீ வீட்டு வாசலிலேயே இறங்கி நடந்து போய் விடு.. நான் குகனிடம் போகிறேன்.. டாக்ஸி வந்தால் அவள் ஏறுவதைத் தடுக்காதே.." என்றவன் தயங்கி நின்றவளைப் பார்த்து.. "நான் பார்த்துக் கொள்கிறேன்.. ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன் பூர்ணி.. அவளை என்னை விட்டுப் போக விட மாட்டேன்.." என்றான்..

பூர்ணிமா மெயின் கேட் வாசலில் இறங்கி நடந்து வந்தாள்.. காரின் வரவை மட்டும் கவனித்துக் கொண்டிருந்த வித்யாவின் கவனத்தில் அவள் வரவு பதியவில்லை..

வீட்டின் உள்ளே நுழைந்தவள் எதிரே வந்த சுரேந்திரனைப் பார்த்து "ஏதாவது வீட்டில் நடந்ததா சுரேன் அண்ணா..?" என்று கேட்டாள்..

"நத்திங் ஸ்பெஷல்.. உன் பிரண்ட் வித்யாதான் அம்மாவிடம் சண்டை போட்டாள்.. இன்னொஸன்ட் கேர்ள்.." அவள் தோள் குலுக்கினான்..

"இன்னொஸன்டா.. அவளா.. அதுசரி.. நீ அவளுக்கு அப்படி ஓர் சர்டிபிகேட் கொடுக்கும்படி அவள் என்ன செய்தாள்..?"

"என்ன செய்தாளா..? அம்மாவை கொஸ்டின் மேலே கொஸ்டின் கேட்டு அழுக வைத்தாள்.." சுரேந்திரன் வார்த்தைகளைத் துப்பினான்..

"எதற்காகக் கேள்வி கேட்டாள்..?"

"அம்மா என்னை மேரேஜ் பண்ணிக்க சம்மதமான்னு கேட்டாங்களாம் அதற்காகத்தான்.. யு நோ பூர்ணி.. நரேன் அண்ணா என்னிடம்.."

பூர்ணிமா சுரேந்திரனிடம் கை காட்டி பேச்சை நிறுத்தினாள்..

"ஐ நோ ஆல்.. சுரேன் அண்ணா.. உன்னிடம் பேச வேண்டும்.. அம்மா ரூமுக்குப் போகலாம் வா.."

தாயின் அறைக்குச் சென்றதும் கவனமாய் கதவை அடைத்துத் தாழிட்டவள் சௌதாமினியின் அருகே வந்து அமர்ந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.. அழுது அழுது சௌதாமினியின் முகம் வீங்கியிருந்தது.. சுரேந்திரன் அலுப்புடன் அவர்கள் எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தான்.. பூர்ணிமா தாயின் முகத்தை இரக்கத்துடன் பார்த்தாள்..

"அம்மா.. வித்யா என்னவெல்லாம் பேசியிருப் பாள்ன்னு என்னால் யூகம் பண்ண முடியுது.. ஆனால் அம்மா பெரியண்ணன் மேலிருந்த அளவு கடந்த அன்பால்தான் அவள் அப்படிப் பேசியிருப்பாள்.."

"ஏம்மா.. இதை என்னிடம் சொல்ல வேண்டுமா..? நான் பெற்ற பிள்ளைக்கு ஆதரவாய் ஒருத்தி என்னிடமே சண்டை போட்டாள் இப்படி ஒரு ஆதரவு என் மகனுக்கு இருக்கேன்னு நான் சந்தோசம் தானே படணும்..?" என்றாள் சௌதாமினி சோர்ந்த குரலில்..

பூர்ணிமா சுரேந்திரனைப் பார்த்தாள்..

"சுரேன் அண்ணா.. நீ வித்யாவிடம் எதுவும் சொன்னாயா..?"

"எதைப் பற்றி..?"

"பெரியண்ணா உன்னிடம் வித்யாவுக்காக கேட்டுக் கொண்டதைப் பற்றி.."

"யெஸ்.. சொன்னேன்.. பூர்ணி.. அந்தப் பெண் தான் இன்னொஸன்ட்ன்னு சொன்னேனே.. அவள் ஒரு தலையாய் பெரியண்ணாவைக் காதலித்திருக்கிறாள்..

நம்ம அம்மா எனக்காக அவளைப் பெண் கேட்டதும் கோபமாயிட்டாள்.. அப்புறம் நான் வந்துதான் உண்மையை எடுத்துச் சொன்னேன்.. இப்படி, இப்படி.. நரேன் அண்ணா உன்னை விரும்பவில்லை.. நீதான் அவரை விரும்புகிறாய்.. அவர் என்னிடம் உன்னை மேரேஜ் பண்ணிக்க முடியுமான்னு கேட்டார்.. அதனால்தான் அம்மா பெண் கேட்டார்கள்.. ஸோ அம்மா மேல் எந்தத் தவறும் இல்லைன்னு எடுத்துச் சொன்னேன்.. அப்செட் ஆயிட்டா.. சோகமாய் போயிட்டாள்.. பட் வாட் வி கேன் டு ஃபார் திஸ்.. நரேன் அண்ணா விரும்பாத போது நாம் என்ன செய்ய முடியும்..?"

"உன் தலை.." என்றாள் பூர்ணிமா கோபமாக..

"உனக்குத் தெரியுமா அவர் வித்யாவை விரும்ப வில்லைன்னு.. முட்டாள் அண்ணா.. அவர் வித்யாவை விரும்புகிறார்.. உயிருக்கு உயிராய் விரும்புகிறார்.. அவள் இல்லைன்னா வாழ்க்கையே இல்லைங்கிறார்.."

"வாட்.. நிஜமாகவா சொல்கிறாய்..? அப்புறம் என்னிடம் ஏன் பேசினார்..?"

"பூர்ணிமா நிஜமாய்த்தான் சொல்றயா.. என் மகனும் அந்தப் பெண் மேல் ஆசைப்படுகிறானா..?" சௌதாமினியும் ஆவலாய் கேட்டாள்..

"ஆமாம்.. ஆமாம்.. சுரேன் அண்ணா.. நம்ம பெரியண்ணா முதலில் வித்யா மேல் வெறும் அன்புதான் வைத்திருக்கிறார்.. வித்யாவின் அழகும் பதவிசும் அவரை இம்ப்ரெஸ் பண்ணியிருக்கு.. பட்.. வயது வித்தியாசம் அதிகமாக இருக்கவும் உனக்கு மேரேஜ் பண்ணிடலாம்ன்னு நினைத்திருக்கிறார்..

ஆனால் வித்யாவும் அவரை விரும்புவதாகக் கூறவும் அவர் மனதிலும் அவள் மேல் காதல் வந்து விட்டது.. அந்தச் சமயம்

பார்த்து நீ இந்தியா வந்து விட்டாய்.. இதை எப்படி உன்னிடம் சொல்வதென்று தெரியாமல் தவித்திருக்கிறார்.."

"காட்.. என்னிடம் சொல்ல என்ன தயக்கம் பூர்ணி..? அண்ணன் காதலிக்கும் பெண் என் அண்ணி அல்லவா..? எப்படிப்பட்ட பாவம் செய்ய இருந்தேன்.. நீயாவது என்னிடம் கூறி இருக்கலாமே.."

"எனக்கே நேற்றுத்தான் தெரியும்.. மனதில் போட்டு மறுகிக் கொண்டு இருந்திருக்கிறார்.. நேற்று இழுத்து வைத்துப் பேசித் தெரிந்து கொண்டேன்.."

"பூர்ணி.. நம் வீட்டிற்கு என்று இப்படி சோதனை வருகிறதா..." என்று வேதனையுடன் கேட்ட சௌதாமினியைப் பார்த்து வினவினாள் பூர்ணிமா..

"அம்மா.. சுரேன் வித்யாவை விரும்புவதாய் யார் உங்களிடம் சொன்னது..? ஏனென்றால் சுரேன் வித்யாவிடம் பேசாமல் ஒரு முடிவெடுத்திருக்க சாத்திய மில்லை.."

"அதுதானே.. அவள்.. ஸாரி.. அண்ணிதான் என் கண்ணிலேயே படாமல் தப்பித்து வந்தார்களே.. அம்மா.. யார் உங்களிடம் இதைச் சொன்னது..?"

"மீனலோசனிதான் சொன்னாள் பூர்ணி.. நான் சுரேன் கிட்டக் கேட்டேன்.."

"ஐ லைக் ஹெர்னேன்... பூர்ணி.. லைக் வேற லவ்வேற... இதை நம் அம்மாவிற்கு எப்படிப் புரிய வைப்பேன்..?"

"நீ டியூசன் எடு.. நான் போய் உன் அண்ணியை நிறுத்திப் பார்க்கிறேன்.."

"ஏன் என்ன ஆனது..?" என்று தாயும், மகனும் பதற..

"வித்யா பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு சென்னைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறாள் அம்மா.."

"கடவுளே.. அந்தப் பெண் வீட்டை விட்டுப் போய் விடக் கூடாது.. சுரேன் வாடா.. அந்தப் பெண்கிட்ட மன்னிப்புக்

கேட்டு நிறுத்தலாம்.. அவள் இந்த வீட்டு மகாலட்சுமிடா.. என் மூத்த மருமகள்.. என் வாடிப்போன மூத்த மகனுக்கு உயிர் கொடுக்க வந்த மகாராணி.." சௌதாமினி பதறி எழ பூர்ணிமா அமைதிப் படுத்தினாள்..

"அம்மா வேண்டாம்.. சுரேன் அண்ணா.. உனக்குப் புரியும்ன்னு நினைக்கறேன்... இப்போது அவளது கோபமெல்லாம் நம்மீது இல்லை.. பெரியண்ணா மீது.. அவர் செய்திருப்பது சாதாரணத் தவறல்ல.. அவர்தான் அவளைச் சமாதானப்படுத்த வேண்டும்.."

சுரேந்திரனுக்குப் புரிந்தது.. அவன் தாழ்ந்த குரலில் அன்னையிடம் விளக்கிக் கொண்டிருந்தான்.. பூர்ணிமா மாடியேறி வித்யாவின் அறைக்குச் சென்றாள்..

"பெட்டியெல்லாம் தயாரா இருக்கு.. என்னை விட்டுப் போக முடிவே செய்து விட்டாயா வித்யா..?"

வித்யா கலங்கிய விழிகளைத் திருப்பிக் கொண்டாள்..

"வித்யா என்னைப் பாருடி.. நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா..?"

"வேண்டாம் பூர்ணி.. நான் கேட்டதும் போதும்.. நம்பிக் கெட்டதும் போதும்.. இனி என் வழியில் போகிறேன்.. குறுக்கே வராதே.."

மெயின் கேட்டில் டாக்ஸி நுழைவது தெரிந்தது.. வித்யா இரண்டு பெட்டிகளை எடுத்துக் கொள்ள பூர்ணிமா இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டாள்..

மௌனமாய் டாக்ஸியின் டிக்கியைத் திறந்து விட்டு குகன் நிற்க பூர்ணிமா பெட்டிகளை அடுக்கினாள்.. வித்யா பின் சீட்டில் ஏறிக் கொள்ள கார் கதவின் அருகே குனிந்தவள் கூறினாள்..

"போய் வா வித்யா.."

"திரும்பி வரவே மாட்டேன் பூர்ணி.."

"அதை இப்போதே முடிவு செய்து விடாதே.."

டாக்ஸி கிளம்பியது.. நதியோரமிருந்த பெருமாள் கோவில் அருகில் வந்ததும் டாக்ஸி நின்றது.. டிரைவரின் அருகே அமர்ந்திருந்த குகன் இறங்கி அங்கே நிறுத்தி யிருந்த அவனது பைக்கில் ஏறிக் கிளம்பினான்.. வித்யா பதறிப் போனாள்...

"குகன்.. குகன்.." என்றவாறு கார் கதவைத் திறக்க முயலும் முன் சீட்டில் இருந்த டிரைவர் இறங்கி பின் பக்கக் கதவைத் திறந்து அவளருகில் அமர்ந்தான்.. வித்யா ஹேண்ட் பேகில் இருந்த பேனாக் கத்தியை எடுக்க முயன்றாள்.. அவளது கை பிடித்து அவன் தடுத்தான்.. அந்த ஸ்பரிசம் எதையோ உணர்த்த அந்த மங்கிய நிலவின் ஒளியில் காரில் அருகே அமர்ந்திருந்தவனை வித்யா ஊன்றிப் பார்த்தாள்.. அவள் உணர்வு பொய்யுரைக்க வில்லை.. அவள் கைபிடித்திருந்தவன் நரேந்திரன்தான்.. அவள் கொதித்துப் போனாள்..

"விடுங்க என் கையை.. எவ்வளவு தைரியமிருந்தால் இவ்வளவு நடந்த பின்னாலும் என் கையை பிடிப்பீர்கள்.. என்னைத் தொட உங்களுக்கு உரிமையில்லை.. நீங்கள் யார் என்னைத் தொட..?"

பதில் சொல்லாமல் அவள் கையை விடுவிக்காமல் அவன் காரின் உள் விளக்கைப் போட்டான்..

"எங்கே இந்த வெளிச்சத்தில் என் முகத்தை நிமிர்ந்து பார்த்துச் சொல்.. உன்னைத் தொட எனக்கு உரிமை யில்லையா..? நான் உனக்கு யாரோவா..?"

வித்யா குமுறினாள்.. கண்களில் நீர் பொங்கி வழிந்தது.. சாலையில் நடந்த யாரோ காரின் வெளிச்சம் கண்டு உள்ளே பார்க்க நரேந்திரன் காரின் விளக்கை அணைத்தான்.. அவள் கரத்தைப் பிடித்த பிடியை விடாமல் மென்மையாய் பேசினான்..

"வித்யா.. உனக்குத் தெரியும்.. நான் தவறான பாதையில் போய் விட்ட தாழ்வு மனப்பான்மையில் இருந்தேன்.. நீ என்னை விட பதினைந்து வயது இளையவள் என்பது வேறு.. அப்போது எடுத்த முடிவுதான் அது.."

"நீங்கள் யார் எனக்காக முடிவு எடுக்க..?"

"நீ யார் என் துன்பத்தில் பங்கு கொள்ள..? சொல்.. எனக்காக உன் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கிக் கொண்டாயே.. உனக்காக நான் முடிவு எடுக்கக் கூடாதா..?"

"அதற்காக.. அதற்காக.. உங்கள் மனைவியாய் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்னைப் போய்.. நீங்கள் இப்படிச் செய்யலாமா..?"

"வித்யா.." என்று நரேந்திரன் அவளை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.. அப்படியே குனிந்து அவள் இதழ்களில் முத்தமிட்டான்.. விலகவேண்டும் என்ற மனதின் கூக்குரலை மீறி வித்யா அவன் அணைப்பிற்குள் கட்டுண்டாள்.. தேம்பினாள்.. அவன் அவள் முடி கோதி ஆதரவாய் தலையில் முத்தமிட்டான்..

"கண்ணீர் விடாதே வித்யா.. நான் இக்கட்டான நிலையில் தவித்தேன் தான்.. ஆனால் எந்த நிலையிலும் உன்னை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்திருக்க மாட்டேன்.."

"பொய்.. நீங்கள் சொல்லாமலா உங்கள் அம்மா உங்கள் தம்பிக்கு என்னைப் பெண் கேட்டார்கள்..?" வித்யா விசும்பினாள்..

"சத்தியமாய் எனக்குத் தெரியாதுடா.. என்னை நம்பு.. சுரேன் கிட்ட எப்படிச் சொல்வதுன்னு சங்கடப்பட்டுக்கிட்டு இருந்தேன்.. அவ்வளவுதான்.. கல்யாணம்ன்னு வந்தால் என்னைக் கேட்காமல் செய்வார்களா..?"

"கேட்டால் மட்டும்.. ஏற்கனவே விட்டுக் கொடுத்த வர்தானே.."

"ஏண்டி.. அவள் என்ன என்னையா காதலித்தாள்..? என் தம்பியைக் காதலித்தாள்.. விட்டுக் கொடுத்தேன்.. உன்னை எப்படிடீ விட்டுக் கொடுப்பேன்.."

"இப்போது இவ்வளவு பேசுகிறவர் இரண்டு வாரமாய் என்னை அவாய்ட் பண்ணிவிட்டு உங்கள் தம்பியுடன் கோர்த்து விட்டீர்களே.."

"கோர்த்து விட்டால்.. நீ அவனுடன் சேர்ந்து போவாயா..? உன் குணம் எனக்குத் தெரியாதா தங்கம்..? சுரேன் என்கிட்ட வந்து கேட்டாண்டி.. நான் வித்யாவைக் காரில் கொண்டு போய் விடுகிறேன்னு.."

"சொன்னால் ஒத்துக் கொள்வதா..?"

"நான் எங்கேடி ஒத்துக் கொண்டேன்..? மௌனமாக இருந்தேன்.. அவன் அதைச் சம்மதம்னு நினைத்துக்கிட்டுப போயிட்டான்.."

"ஒருவேளை நான் அவருடன் காரில் போயிருந்தால்..?"

"நீ போவாயா..? அதைச் சொல் முதலில்.. வித்யா.. என் கண்மணி.. உன்னைப் பிரிந்தால் நான் செத்து விடுவேண்டி.. இன்னும் உன் கோபம் போகலைன்னா சொல்.. இந்தக் காரை அப்படியே நதியில் விட்டு விடுகிறேன்.. கார்க் கதவுகளை மூடிவிடலாம்.. நம்மை ஒன்று சேர்த்த நதியிலேயே நாம் ஒன்றாக மூழ்கிச் சாவோம்.. என்ன சொல்கிறாய்.."

வித்யா அவன் சட்டையிலேயே கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.. இன்னும் அவனை நெருங்கி இறுக அணைத்துக் கொண்டாள்.. நரேந்திரன் நிம்மதி அடைந்தான்.. அவளது அணைப்பில் மனம் குளிர்ந்தவன்..

"சொல்லுடி.. என்னை விட்டு விட்டுப் போய் விடுவாயா..? நான் விட்டு விடுவேனா..? குகன் போன் பண்ணிச் சொன்னதும் ஆடிப் போய் விட்டேன்.. வித்யா என் தவறுக்குத் தண்டனை கொடுப்பதென்றால் என்னைக் கொன்று விடு.. பிரிந்து விடாதே.." என்றான்..

அவள் பதறி அவன் வாய் பொத்தினாள்.. அந்தக் கரத்தில் அவன் இதழ் பதித்தான்.. மிஞ்சி. கெஞ்சி கடைசியில் கொஞ்சி ஓய்ந்த பின்னர் இருவரும் இறங்கி கோவிலுக்குள் சென்றனர்.. 'நம்பினோர் கெடுவதில்லை' என்ற கூறிய நாராயணன் காதலை நம்பிய அவர்கள் இருவரையும் ஆட் கொள்ளம் விதத்தில் பாதம் நோக்கி அபயக்கரம் காட்டினான்..

24

நதியோரம் நடந்தபோது

நான் கண்டவற்றை இங்கு சொன்னேன்

தோழமையாய் நதி ஓடும்

தொழிலைப் பார்க்க கால்கள் விலகும்

...நதியோரம் நான் நடந்த போது...

ஆயகுடியில் வித்யாவின் அப்பா வையாபுரி வேதனையில் இருந்தார்.. அவனது இரண்டாம் மனைவியின் பெண்ணான நீலா பதின்மூன்று வயதிலேயே பருவம் எய்தியிருந்தாள்.. கங்கா மகளைப் பேணிப் பாதுகாத்தாள்..

"நீலா காலாகாலத்தில் வீட்டுக்கு.. வா.. வயதுக்கு வந்த பெண் தனியாக வரக்கூடாது.. உன் தோழி எவளாவது இருந்தால் கூடவா.. இல்லைன்னா அப்பாவுக்கு போன் பண்ணு அவர் வந்து கூட்டி வருவார்.. டியூசனுக்கு வயதுக்கு வந்த பெண்ணை அனுப்பிட்டு நான் மடியில் நெருப்பைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.."

கங்கா யதார்த்தமாய் புலம்ப வையாபுரிக்கு 'சுள்'ளென்று அது உறைத்தது.. வித்யாவும் வயதுக்கு வந்த பெண் என்பது கங்காவின் மனதில் ஏன் உறைக்க வில்லை..? வீட்டு வாசல் படியை மிதிக்காதே என்று கூறிவிட்டாளே.. வித்யா தன் தாயின் தோழி மரகதத்திற்கு அடிக்கடி கடிதம் போட்டுக்கொண்டு இருந்தாள்.. அவள் மூலமாக மகளின் வாழ்க்கையை இதுவரை அறிந்து வந்தார்.. இரண்டாம் வருடமே மத்திய சர்க்கார் வேலையில் அவள் சேர்ந்து வேலை செய்து கொண்டே படிப்பதை அறிந்ததும் பூரித்துப் போனார்..

"கங்கா சேதியைக் கேட்டாயா..? நம்ம வித்யா கவர்ன்மெண்ட் வேலை பார்க்கிறாளாம்.. படித்துக்கிட்டே வேலையும் பார்க்கிறா பார்.. என் பொண்ணு மகா கெட்டிக்காரி.."

"என்னது உங்க பொண்ணா..? ஓகோ அது வேற நினைப்பிருக்கா..? உளவு பார்க்கறீங்களோ.. மகளைப் பத்தி யார்கிட்ட விசாரிச்சீங்க.. அந்த ரகசியம் காக்கிற நர்ஸ் மரகதத்துக்கிட்டயா.. பெருமை வேற பேசறீங்களா..? வயசானவரை ரெண்டாம் தாரமா கட்டிக்கிட்டு நான் லோல் படுவேன்.. நீங்கள் மூத்தாள் பெத்துப் போட்ட ஜென்மத்தைப் பத்தி பீத்திக்கறீங்களோ.."

கங்கா காளி அவதாரமெடுத்தாள்.. வையாபுரி மகளைப் பற்றி அதற்குப் பின்னால் அவளிடம் பேசுவதில்லை.. ஆனால் மகளின் உயர்வு குறித்து மனதில் பெருமை பொங்கும்.. சமீப காலமாக தன் மகளிடம் இருந்து கடிதம் ஏதும் மரகத்திற்கு வரவில்லை என்பதை அறிந்ததும் கவலை அவரைச் சூழ்ந்தது..

"என்ன சொல்றே மரகதம் வித்யா லெட்டரே போடற தில்லையா..?"

"ஆமாண்ணா.. வித்யா லெட்டர் போட்டு ஒரு வருசமாகுது.."

வையாபுரி சென்னை டெலிபோன் டிபார்ட் மெண்டிற்கு போன் பண்ணி விசாரித்தார்.. அவள் வேலையை ராஜினாமா செய்து விட்டுப் போய் விட்டாள் என்று கூறினார்கள்.. அவளது பொறியியல் கல்லூரிக்குப் போன் பண்ணினார்.. வித்யா யுனிவர்ஸிட்டி ரேங்க் எடுத்துத் தேறியிருப்பதாகவும், அவள் சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு போய் விட்டாளென்றும் கூறி விட்டார்கள்.. மகள் எங்கே போனாள்.. என்ன ஆனாள்.. என்று அவர் தவித்துக் கொண்டு இருந்தபோது வாசலில் பெரிய வெளிநாட்டுக் கார் ஒன்று வந்து நின்றது.. பக்கத்து வீட்டினர் வாசலுக்கு வந்து கூடி வேடிக்கைப் பார்க்கவும் கங்கா, 'நம் வீட்டுக்கு யார் காரில் வரப் போகிறார்கள்..' என்ற எண்ணத்துடன் அசட்டையாக வாசலுக்கு வந்து பார்த்தாள்.. வையாபுரி கண்ணாடியை மாட்டிக் கொண்டு படியில் நின்று பார்த்தார்..

காரின் கதவைத் திறந்து கொண்டு சௌதாமினி தேவியும், சுரேந்திரனும் இறங்கினார்கள்.. சௌதாமினியின் கழுத்து,

காது. கைகளில் டாலடித்த வைரங்களைப் பார்த்து வாய் பிறந்த கங்கா..

"யாருங்க நீங்க.. யார் வீட்டு அட்ரஸாவது விசாரிக்க வந்திங்களா..?" என்று கேட்டாள்..

"இல்லைம்மா.. இது தாலுகா ஆபீஸில் வேலை பார்க்கும் வையாபுரி என்பவரின் வீடு தானே.." என்று சௌதாமினி வினவ..

"இதுதான்.. இந்த வீடுதான்.. தோ அங்கே படியில் நின்றுக்கிட்டு இருக்காரே அவர்தான் நீங்கள் தேடி வந்தவர்.. என் புருசன்.. ஹிஹி.." என்று கங்கா பரபரத்தாள். வையாபுரி அவர்கள் யாரென்று தெரியாதவராய்..

"வாங்கம்மா.. வாங்க சார் உட்காருங்க.. என்ன விசயமாய் என்னைத் தேடி வந்திருக்கீங்க.." என்று கேட்டார்..

சௌதாமினியின் கண்ணசைவில் கார் டிரைவர் ஒரு பெரிய வெள்ளித் தட்டை எடுத்து வந்து கூடத்திலிருந்த ஸ்டூலின் மேல் வைத்து விட்டுச் சென்றான்.. தட்டில் விலை உயர்ந்த பட்டுச் சேலையுடன் பழங்கள்.. பூ.. வெற்றிலைபாக்கு.. தேங்காய் இவை இருந்தன..

'வெள்ளித் தட்டா..?' என்று கங்காவிற்கு மூச்சை அடைத்தது..

"இதெல்லாம் என்னங்கம்மா.." புரியாதவராய் வையாபுரி வினவினார்..

"ஐயா.. நாங்கள் நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு என்கிற ஊரிலிருந்து வருகிறோம்.. உங்கள் பெண் வித்யா எங்கள் பேக்டரியில் பெர்ஸனல் மேனேஜர் ஆக வேலை பார்க்கிறாள்.. அவளை என் மூத்த மகன் நரேந்திரனுக்கு பெண் கேட்டு உங்கள் பெண் வித்யாவின் சம்மதத்தோடு இங்கே வந்திருக்கிறோம்.. இது என் கடைசி மகன் சுரேந்திரன்.."

கங்காவிற்கு நெஞ்சைப் பிளந்தே விட்டது பொறாமைத் தீ.. அந்த ஓடுகாலிக்கு.. மூத்தாள் மகளுக்கு இப்படியொரு

ராஜவாழ்வா..? கூடாது.. அவள் தாய், தகப்பனில்லாத அநாதை மாதிரி கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.. கணவனை போகவிடக்கூடாது என்று நினைத்தவள் ஆங்காரமாய் கூச்சலிட்டாள்..

"யாருக்குக் கல்யாணம் பேச யார் வீட்டுக்கு வந்தீங்க..?"

பேசிக் கொண்டிருந்தவளின் கன்னத்தில் 'பளாரென்ற' அறை விழுந்தது.. வையாபுரி அவளை கன்னம் கன்னமாய் அறைந்து தீர்த்து விட்டார்..

"என் பெண்ணுக்குக் கல்யாணம் பேச என் வீட்டிற்கு வராமல் யார் வீட்டிற்குப் போவார்கள்..? நானே என் பொண்ணைப் பத்தி ஒரு தகவலும் இல்லைன்னு கவலைப் பட்டுக்கிட்டு கிடந்தேன்.. தெய்வம் போல் இவங்க நல்ல தகவலைக் கொண்டு வந்திருக்காங்க.. பெரிய மனுசங்க கிட்ட பேசத் தெரிஞ்சாப் பேசு.. இல்லைன்னா வாயை மூடிக்கிட்டு உள்ளே போ.."

வையாபுரி அவர்கள் நீட்டிய தட்டைப் பெற்றுக் கொண்டு மகளின் திருமணத்திற்கு சம்மதம் தந்து திருமணத்தை உறுதி செய்தார்..

மீனலோசனியும், பிரபாவதியும் மூச்சுப் பேச்சில்லாமல் அடங்கிப் போனார்கள்.. அவர்கள் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைத்து விட்டது.. வித்யா அந்த வீட்டு மூத்த மருமகளாக வரப் போவதை அவர்களால் தடுக்க முடியாமல் போய் விட்டது.. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவர்கள் இருவரும் தவித்துக் கொண்டு இருந்தனர்..

மகேந்திரனும், யுகேந்திரனும் வருங்காலத்தைப் பற்றிய கவலையில் இருந்தார்கள்.. ஏற்கனவே வேலையாளாக இருக்கும்போதே கண்ணில் விரலை விட்டு ஆட்டினவள் அந்த வித்யா..? இப்போது வீட்டு ஆளாக அதுவும் நரேந்திரனின் மனைவியாக ஆகி விட்டால்.. நினைக்கும்போதே அவர்கள் நெஞ்சம் பதற மணிமுத்தாறு வீட்டில் கலவரம் வெடித்தது.. மாலினிதேவியையும் அவர்கள் தூண்டிவிட அவள் தன் கணவனோடும் புகுந்த

வீட்டினருடன் பிறந்த வீட்டில் முற்றுகையிட்டாள்.. மீனலோசனியின் பெற்றோரும், பிரபாவதியின் பெற்றோரும் வந்து விட்டார்கள்.. சௌதாமினியிடம் பஞ்சாயத்து வந்தது..

"அம்மா.. பாகப்பிரிவினை நடந்தாகனும்.. நாளைக்கு யார், யாரோ கிட்டயெல்லாம் கைகட்டி கணக்குச் சொல்ல என்னால் முடியாது.."

மகேந்திரன் தீர்மானமாய் கூறி விட்டான்.. அனைவரும் கூடி நிற்க குடும்ப சபை கூடியது.. நரேந்திரன் பேசினான்..

"அம்மா.. அப்பா போகும்போது எல்லாவற்றையும் சட்டப்படி என் பெயருக்கு மாற்றி விட்டுப் போனார்.. நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.. என்று நம்புகிறேன்.. அவர் என்னிடம் விட்டு விட்டுப் போனது கடன்களையும் பிரச்சனைகளையும்.."

"அதற்காக எங்களையெல்லாம் கை காலோடு வெளியேறச் சொல்கிறீங்களா..?" மகேந்திரன் ஆவேசமாய் பேசினான்..

"இல்லை.. நான் செய்ய வேண்டியதை அம்மாவிடம் கலந்து பேசி விட்டுச் செய்து விட்டேன்.. சொத்தைப் பிரித்து ரெஜிஸ்டர் பண்ணி விட்டேன்.. எப்போது வித்யாவைக் கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்தேனோ.. அப்போதே சொத்துக்களை சரிவர வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன் நாளைக்கு என் மனைவியைப் பார்த்து எவனும் விரல் நீட்டிப் பேசக் கூடாது.." நரேந்திரன் தம்பிகளை முறைத்துக் கொண்டே பதில் கூறினான்..

நரேந்திரன் பத்திரங்களைத் தூக்கிப் போட்டுவிட்டுக் கூறினான்..

"மில்லை மகேந்திரனும், யுகேந்திரனும் சமமாய் எடுத்துக் கொள்ள வேண்டும்.. அவர்கள் இருவர் பெயருக்கும் ரிஜிஸ்டர் பண்ணி விட்டேன்.. பேக்டரி எனக்கும், சுரேந்திரனுக்கும்.. அம்பாசமுத்திரத்தில் இருக்கும் மூன்று வீடுகளும் மூன்று தம்பிகளுக்கும்.. மணிமுத்தாறு வீடு என்

பெயரில் இருக்கிறது.. அப்புறம் மாலினிக்கு தேவையான வைர நகைகள், புதியது குடும்பப் பரம்பரை நகைன்னு.. கோடிக் கணக்கில் பெறும்.. கொடுத்து இருக்கிறோம்.. அதுபோக திருநெல்வேலியில் பங்களா ஒன்றும் வாங்கிக் கொடுத்தாகி விட்டது.. அவள் கணவரின் தொழிலுக்கு பணம் வேண்டும் என்று ஆறுகோடி கொடுத்திருக்கிறோம்.. இதை மொத்தம் கூட்டிப் பார்த்தால் எங்களுடைய பங்குகளை விட அதிகம் இருக்கும்.. என்ன மாலினி மீதத்தை கொடுத்து விடுகிறாயா..?"

அந்த மாலினிதேவி அசடு வழிந்தாள்.. அவள் கணவன் வேலையிருப்பது போல் அவர்களது அறைக்கு நகர அவளது மாமனாரும் மாமியாரும் மகனின் பின்னேயே மாயமானார்கள்..

பிரபாவதியின் பெற்றோர் பண்போடு அமைதி காக்க மீனலோசனியின் தந்தை துள்ளினார்..

"சென்னையில் இருக்கும் நாலு பங்களாக்கள் யார் யாருக்கு..?"

"மாமா.. அது என் உழைப்பில் வாங்கியது.. ஒன்று சுரேந்திரன் பெயரில் இருக்கிறது.. இன்னொன்று பூர்ணிமாவின் பெயரில் இருக்கிறது.. மற்ற இரண்டும் என்னுடையவை.."

"நீங்கள் சம்பாதித்தால் உங்களுக்கு மட்டும் சொந்தமா..?"

"நிச்சயமாய்.. உங்கள் மருமகன் அடிக்கடி குத்திக் காட்டிப் பேசியது போல் பெண்டாட்டி, பிள்ளை குட்டின்னு இருக்கிறவன் தன்னைப் பற்றியும் நினைச்சுப் பார்க்கணும். உங்கள் மருமகன் கோடிக் கணக்கில் அடித்து வைத்திருக்கும் அனாமத்துப் பணத்தில் பெசண்ட் நகரில் இரண்டு பங்களாக்களை வாங்கிப் போட்டிருக்கானே.. அவற்றையும் நான் பாகப்பிரிவினையில் சேர்த்திருக்கணும்.. போகட்டும்ன்னு விட்டு விட்டேன்.."

யுகேந்திரன், மகேந்திரன் முறைத்தான்.. 'இவனால் யுகேந்திரன் வாங்கிப் போட்டிருக்கும் நீலாங்கரை

பங்களாக்கள் கணக்குக்கு வந்து விடும் போலிருக்கிறதே' என்ற கவலை அவனுக்கு.. ஆனால் அவன் அறியவில்லை.. பிரகாஷின் தங்கையை மண முடித்திருப்பதால் நரேந்திரன் அதை அம்பலப்படுத்தாமல் விட்டு விட்டான் என்பதை..

திருமண நாள் வந்தது.. முதல் நாளே ஆயகுடியி லிருந்து வையாபுரி குடும்பம் வந்து விட்டது.. மரகதம் திருமணத்தன்று வந்தாள்.. சுபநேரத்தில் வையாபுரியும் கங்காவும் தாரை வார்த்துக் கொடுக்க நரேந்திரனின் பெற்றவர்கள் ஸ்தானத்தில் நரேந்திரனின் ஒன்று விட்ட பெரியப்பாவும் பெரியம்மாவும் வாங்கிக் கொள்ள நரேந்திரன் வித்யாவின் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டு தன் மனைவியாக்கிக் கொண்டான்.. மரகதம் வந்து வாழ்த்த அவள் தாள் பணிந்து எழுந்த வித்யா,

"அத்தை.. நீங்கள் மட்டும் சரியான நேரத்தில் உதவா விட்டால் நான் சிரமப்பட்டிருப்பேன்.. என் அம்மாவின் ஆசைப்படி அவர்களுடைய நகைகளை மட்டும் போட்டுக் கொண்டுதான் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்..." என்றாள்..

அப்போதுதான் மரகதம் வித்யாவின் உடலில் அவள் தாய் கமலம் தந்த நகைகள் மட்டும் அலங்கரிப்பதைக் கவனித்தாள்..

சௌதாமினியும், பூர்ணிமாவும் எவ்வளவோ கெஞ்சியும் வைர நகைகளை அணிந்து கொள்ள மறுத்து விட்டாள்..

"வித்யா.. இது உன்னுடைய நகைகள்ம்மா.. பரம்பரையாய் இந்த வீட்டு மூத்த மருமகள்கள் போட்டுக் கொள்வது.."

"அத்தை நான் இவற்றை அணிந்து கொள்கிறேன்.. ஆனால் என் கல்யாணம் முடிந்த பின்னால் அணிந்து கொள்கிறேன்.. அத்தை.. என் அம்மா இறக்கும்போது என் கல்யாணத்திற்காக என்று கொடுத்த நகைகளில் மீதமிருக்கும் நகைகள் இவை.. வைர நகைகளை விட இதன் மதிப்பு மிகமிக அதிகம் அத்தை.. அவர்கள் ஆத்மா என்னைக் காற்றோடு கலந்து வாழ்த்த வேண்டுமானால் நான் இவற்றை மட்டுமே அணிய வேண்டும்..."

மறுநாள் வையாபுரி ஆயகுடிக்கு கிளம்பும்போது வித்யாவை மறுவீட்டுக்கு வரும்படி அழைத்தார்.. வித்யா நரேந்திரனின் முகம் பார்த்தாள்.. முதல் நாளிரவு அவள் கேட்டுக் கொண்டது அவன் நினைவில் வந்தது..

முதலிரவு.. வித்யாவும் நரேந்திரனும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள்தான்.. ஆனால் கணவன், மனைவியாக அவர்கள் உரிமையுடன் சந்திக்கும் இரவு அது..

இதுநாள் வரை கால் வைத்திராத நரேந்திரனின் மிகப் பெரிய பிரம்மாண்டமான அறைக்குள் நுழைந்தாள் வித்யா.. சௌதாமினியின் அறை போலவே முன்னால் வரவேற்பு அறையும் அடுத்து படுக்கையறையும் அமைந்திருந்தன.. நரேந்திரன் அறைக்கதவைத் தாழிட்டு விட்டு அவளை நெருங்க அவள் பின்னடைந்தாள்... வெட்கத்துடன் ஜன்னல் கம்பியில் முகம் புதைத்து வீட்டின் பின்னே ஓடிய நதியைப் பார்த்தாள்.. அது மானசீகமாய் அவர்கள் வாழ்த்தியது போலிருந்தது.. நரேந்திரன் அவள் பின்னால் வந்து முதுகோடு அணைத்து அவளது தலையில் சூடியிருந்த பூவை முகர்ந்தான்..

"வித்யா.. நாம் சென்னை வீட்டில் மொட்டை மாடியில் சந்தித்த இரவு நினைவிருக்கிறதா.." கிறக்கத்துடன் கேட்டான்..

மறக்க முடியுமா அந்த இரவை..? வித்யா "நினைவிருக்கிறது" என்றாள்..

"அன்று உன் பின்னலில் மல்லிகைப் பூவை சூடியிருந்தாய்.. அந்த மலர் வாசம் என்னை மயக்கியது.. உன்னை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று என் உடலும், உள்ளமும் தவித்த தவிப்பு இருக்கிறதே.."

ஏக்கத்துடன் கூறியவன் அவளை இழுத்து அந்த இரவின் நினைவில் இறுக்கி அணைத்து முத்தங்களைப் பதித்தான்.. வித்யா அவன் மார்போடு ஒன்றிப் போனாள்..

"அதற்கப்புறம் அருவியில் விழுந்து விட்டாயே.. அப்போது உன்னை என் கைகளில் தூக்கி வந்தபோது இப்படியே

எங்காவது இவளைத் தூக்கிக் கொண்டு ஓடி விடலாமா என்று என் மனம் எப்படித் துடித்தது தெரியுமா..?"

அன்று போலவே இன்றும் அவளைப் பூமாலையாய் கைகளில் ஏந்தியவன் அப்படியே படுக்கையில் கிடத்தினான்.. வித்யாவின் கரங்கள் அவன் கழுத்தில் மாலையாகி இருக்க அப்படியே அவள் மேல் சரிந்து படர்ந்தான்..

தூங்காத கண்கள் நான்கும் விடியலின் அருகாமை நெருங்கி விட்ட போதும் ஒருவர் முகத்தை மற்றொருவர் ஆசையாகப் பார்க்க என்று விழித்திருந்தன.. அப்போது வித்யா கூறினாள்..

"நரேன் என் வீட்டிலிருந்து வெளியேறும்போது ஜெயிக்காமல் அந்த வீட்டுப் படியை மிதிக்கமாட்டேன்னு சபதம் போட்டு விட்டு வந்தேன்.."

"இப்போதுதான் படிப்பை முடித்து விட்டாய்.. வாழ்வில் ஜெயித்து விட்டாய்.. என் உயிராகி விட்டாய்.. இனி உன் அப்பாவின் வீட்டை வெறுக்க வேண்டுமா வித்யா.."

"இக்கட்டான நிலையில் சித்தி என்னை கைவிட்டதை மறக்க முடியவில்லை.."

"அவர்களை ஏன் நினைக்கிறாய்..? உன் அப்பாவை நினைத்துப் பார்.. உன் அம்மாவின் தோழி மரகதம்ங் கிறவங்க சொன்னதாகக் கூறினாயே.. உன் அப்பா உன்னைப்பற்றி அக்கறையாய் விசாரித்ததை.. உன்னைத் தேடிக் கொண்டிருந்ததை.. அவருக்காகப் பொறுத்துப்போ.."

"அப்படியானால் நாம் ஆயகுடி போகலாமா..?"

"நிச்சயம் போவோம்.. பழனி முருகனை தரிசனம் பண்ணி விட்டு வரலாம்.." என்று அவள் தலைகோதி ஆதரவாய் கூறினான் அவன்..

நரேந்திரனும் வித்யாவும் ஆயகுடிக்கு புதுப்பெண், மாப்பிள்ளையாக மறுவீடு போனார்கள்.. பழனி முருகனின் ராஜ அலங்காரத்தை தரிசனம் செய்தார்கள்.. கிளம்பும்

போது வித்யா நீலாவையும், ராமுவையும் அழைத்தாள்.. ஒரு பையைக் கொடுத்தாள்..

"நீலா, ராமு இதில் எட்டு லட்ச ரூபாய் இருக்கிறது.. என் வேலைக்கான சம்பளத்தை நான் சேர்த்தது.. வைத்துக் கொள்ளுங்கள்.. உங்கள் படிப்பு, கல்யாணம் எல்லாவற்றிற்கும் இந்த அக்காவின் உதவி இருக்கும்.." தன் பெயரிலிருந்த சேமிப்புப் பத்தரங்களை முடித்து எஸ்.பி.யில் பேங்கில் இருந்த பணத்தையும் கொண்டு வந்து கொடுத்திருந்தாள் அவள்.. கங்கா ஆடிப் போனாள்.. அவள் கண்களில் குற்ற உணர்வு வந்தது..

"அம்மாடி வித்யா.. உன்னைப் படிக்க விடக்கூடாதுன்னு கெடுதல் பண்ணினேன்.. இப்ப நீ படிச்சு சம்பாதித்த பணத்தை வாங்கிக்க எனக்கு என்னம்மா உரிமையிருக்கு.." கண்ணீர் விட்டாள் கங்கா...

"பழசை மறந்திடுங்க சித்தி.."

எல்லோரிடமும் விடைபெற்று மணிமுத்தாறு வந்தனர்.. வரும் வழியில் காரில் கணவனைக் கேட்டாள் வித்யா..

"ஆமாம்.. ஏன் மில்லை அவர்கள் இரண்டு பேருக்கும் கொடுத்தீர்கள்..?"

"காரணமாகத்தான் மகி, யு.கே. இருவரும் கள்ளக் கணக்கு எழுதுவதில் கை தேர்ந்தவர்கள்.. தான் திருடி பிறரை நம்புவானா..? இருவரையும் பங்குதாரர்களாக்கி விட்டால் தான் மில் உருப்படும்.. ஒருவரை ஒருவர் சந்தேகப்பட்டுக் கொண்டு ஒழுங்காய் சொத்தை காப்பாற்றுவார்கள்.."

தென்காசியில் மிகப் பெரிய திருமண மண்டபம் அது.. நாதஸ்வரம் முழங்க கெட்டி மேளம் ஒலிக்க சுபயோக சுப தினத்தில் பூர்ணிமாவின் ஆசைப்படி தன் மனைவி வித்யாவோடு அவளது பெரிய அண்ணன் நரேந்திரன் பெற்றவர்கள் ஸ்தானத்தில் நின்று தங்கையை தன் மகளாக ஏற்று தாரை வார்த்துக் கொடுக்க பிரகாஷின் பெற்றோர் ஏற்றுக் கொள்ள ஆனந்தக் கண்ணீர் வடிய

பிரகாஷின் தாலியை ஏற்றுக் கொண்டு அவன் மனைவியானாள் பூர்ணிமா..

தங்கள் கால்களில் விழுந்த பூர்ணிமாவை அள்ளி அணைத்துக் கொண்ட வித்யா அவள் கன்னத்தில் தாய்மைப் பெருக்கோடு முத்தமிட்டாள்..

சுரேந்திரன் பூர்ணிமாவைப் பார்த்து,

"அப்படியே அண்ணி போல வேறு ஒரு தோழியைப் பார்த்து எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க சபதம் செய் பூர்ணி.. அண்ணி தவறாய் எடுத்துக் கொள்ளாதீர்கள்.. நீங்கள் என் அம்மா போல்.. விநாயகர் அவர் அம்மா பார்வதி போல பெண் வேணும்னு குளத்தங்கரையில் தவம் இருக்கிறாராம்.. அது போல் தான் கேட்டேன்.."

"அப்போ நீயும் அவர் போலவே பிரம்மச்சாரியாய் இருக்க வேண்டியதுதான்.. ஏன்னா.. என் வித்யா போல் வேறொரு பெண் உலகில் கிடையாது.."

அன்போடு தோழியை அணைத்துக் கொண்டாள் பூர்ணிமா..

நரேந்திரனும் வித்யாவும் கடமைகளை முடித்தவர்களாய் பெருமாளைச் சேவிக்க நதியோரமிருந்த பெருமாள் கோவிலுக்குச் சென்று விட்டு அவர்களது வழக்கமான படித்துறைக்கு வந்தார்கள்..

நதி அமைதியாய் ஓடிக் கொண்டிருந்தது.. மேடுகள்.. பள்ளங்கள் அனைத்தையும் கடந்து கடலில் சென்று கலந்து விடும்.. வாழ்க்கையும் நதி போல் தான்.. அந்த நதி நீரைத் தொட்டு நன்றி சொல்லிக் கொண்ட வித்யா நதியோரம் தன் கணவனுடன் வீடு நோக்கி நடந்தாள்..

- முற்றும் -

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

நதியோரம்...

1

நதியோரம் நடந்தபோது

கண்டதென்ன.. ஒன்றா...? இரண்டா...?

நெஞ்சினிலே உள்ளதையே

தொடர்ந்து சொல்ல வேண்டாமா...?

-நதியோரம்... நான் நடந்தபோது-

'டிங் டாங்..'

சுவர் கடிகாரத்தில் ஆறுமணியைக் குறிக்கும் மணியோசை ஒலித்தது... வித்யா கைக்கடிகாரத்தை ஒருதரம் பார்த்துக் கொண்டாள்.. என்னதான் சுவர் கடிகாரம் ஆறுமணியாகி விட்டதைச் சொன்னாலும் கைக்கடி காரத்திற்கு கண்கள் போகும் பழக்கத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லையே என்று நினைத்தவளுக்கு சிரிப்பு வந்தது...

அவளைச் சுற்றி ஆயிரம் மாற்றங்கள் வந்திருக்கின்றன.. வந்து கொண்டிருக்கின்றன.. இன்னமும் ஆயகுடியில் அவளுக்குள் இருந்த சில பழக்கங்கள் மாறாமல் அப்படியேதான் இருந்தன.. கம்யூட்டர் காலத்தில்.. பெருமாள் கோவிலின் மணியோசையைக் காதில் கேட்கும் போது 'பெருமாளே..!' என்று கன்னத்தில் போட்டுக்

கொள்வதை அவள் மாற்றிக் கொள்ளவில்லை... அது அவளின் ரத்தத்தில் ஊறியிருந்தது..

அலுப்பான சில கணங்களில்.. அயர்வான சில பொழுதுகளில்... உடலும்.. மனமும் சோர்ந்து போகும் போது... அவளையறியாமல் அவளின் வாய் 'பெருமாளே..' என்று அரற்றும்.. அந்தப் பழக்கமும் மாறவில்லை..

அவ்வளவு பெரிய பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜராக அவள் இருந்த போதும்... மாலையில் நரேந்திரனின் கையில் மல்லிகைப் பூவின் வாழையிலைப் பொட்டலம் இருக்கிறதா என்று அவளின் விழிகள் தேடும்.. அந்தப் பழக்கமும் மாறவில்லை...

அவள் கழுத்தில் அவன் கட்டிய தாலி இருந்தது... அவன் மனதில் அவள் மீதான வற்றாத காதல் இருந்தது... இருந்த போதும்.. ஏதேனும் ஒரு வேலையின் நினைவில் அவளைக் கவனிக்காமல் அவன் பதில் சொல்லி விட்டால்... அவள் முகம் பார்க்காமல் அவன் நடந்து விட்டால்... கைப்பொருள் நழுவிப் போவதைப் போல அவள் மனம் துடித்துப் போகிறதே.. அந்தப் பழக்கத்தையும் அவளால் மாற்றிக் கொள்ள முடியவில்லை...

பொன் அந்தி மாலைப் பொழுதில்.. நதியோரம் அவனுடன் நடக்கும் போது... அவன் முடி காற்றில் கலைந்து பறக்குமே.. அப்போது அவள் மனதில் கிறக்கம் ஏற்படும் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை...

தோழியாக இருந்தவள் நாத்தனாராகி விட்டபோதும்.. தென்காசியிலிருந்து பூர்ணிமா வந்து இறங்கும் ஒவ்வொரு முறையும்.. "வித்யா..." என்ற அவளின் அழைப்பிற்கு இரு கரத்தையும் நீட்டி.. பார்வையால் அவளை அழைத்து அணைத்துக் கொள்வாளே... அந்த வழக்கமும் இன்னும் மாறவில்லை..

"ஹாய்... டியர்.." அறைக்குள் நரேந்திரன் நுழைந்தான்.

என்னவோ... அன்றுதான் அவனை முதன்முதலாகப் பார்ப்பதைப் போல அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்த

வித்யாவின் விழிகளில் தெரிந்த காதலில் அவன் மயங்கிப் போனான்...

"ஏய்ய்... நான் உன் புருசன்டி.." என்று கண் சிமிட்டினான்..

"வேற யாருக்கும் புருசன்னு சொல்லிப் பாருங்க... தெரியும்.." அவனை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி வித்யா கூறினாள்...

"அட..! நீ மிரட்டக் கூடச் செய்வியா...?"

"பின்னே... மிரட்ட மாட்டாங்களா...?"

"ஏண்டி...? நான் உன்னோட அப்பாவி புருசன்டி..."

"அப்பாவியா...? நீங்களா...? குட் ஜோக்..."

வித்யா எழுந்து கொண்டாள்... மேஜையைச் சுற்றி அவனருகில் வந்தாள்... அவன் தோளில் மாலையாக கைகளைப் போட்டு வளைத்து... அவன் முகத்தை இழுத்தாள்...

"வித்யா..." கிறங்கிப் போனவனாக நரேந்திரன் ஆவலுடன் அவள் முகம் நோக்கிக் குனிந்தான்..

"மே ஐ கமின் சார்...." கேபின் கதவு ஒற்றை விரலால் தட்டப் பட்டது..

ஏமாற்றத்துடன் விலகிக் கொண்ட நரேந்திரன்..

"வந்து தொலை..." என்றான்...

அவனின் கோபத்தைக் கண்ட வித்யா வாய் மூடிக் களுக்கென்று சிரித்தாள்..

"உனக்குச் சிரிப்பு வருது...? ஊம்...?" அவளை முறைத்தான் நரேந்திரன்..

உள்ளே வந்த குகனுக்கு நரேந்திரனின் ஏமாற்றத்தையும்... கோபத்தையும் பற்றி என்ன தெரியும்...? அதனால் உற்சாக முகத்துடன்...

"ஒரு குட் நியுஸ் சார்..." என்றான்..

"குட் நியுஸ்...? சொல்லு... சொல்லு.." கடுப்புடன் சொன்னான் நரேந்திரன்..

"நம்ம பேக்டரியோட புது டீலிங் ஆர்டர் அசெப்ட் ஆகிருச்சு சார்..." குகனின் முகத்தில் பல்ப் எரிந்தது...

நரேந்திரனுக்கு அந்த விவரம் தெரியும்... முதலில் அவளிடம்தான் சம்பந்தப் பட்டவர்கள் அந்த விவரத்தைத் தெரியப்படுத்தியிருந்தார்கள்... அவனும் அப்போதே வித்யாவிடம் அதைச் சொல்லி விட்டிருந்தான்...

'இதற்காகத்தான் இவன் பூஜை வேளைக் கரடியைப் போல உள்ளே நுழைஞ்சானா...' நரேந்திரனுக்கு எரிச்சலான எரிச்சல்... குகனுக்கோ சந்தோசமான சந்தோசம்...

"இப்பத்தான் போன் வந்தது சார்..."

"ஓஹோ..."

"எனக்குத் தரையில கால் படவே இல்லை.."

"அப்படியா...?"

"வானத்தில பறக்கறதைப் போல இருந்தது..."

"தண்ணி... கிண்ணி... அடிச்சிருந்தியா...?"

"சார்...?"

"அப்பத்தானே வானத்தில் ரெக்கையில்லாமலே பறக்கலாம்...?"

நரேந்திரனின் குரலில் தெரிந்த கடுப்பை உணர்ந்தவன்... அது எதற்காக என்று புரியாத குழப்பத்துடன் வித்யாவின் முகம் பார்த்தான்... அதில் சிரிப்பிருந்தது...

"மேடம்...?"

"எங்களுக்கு மதியமே விசயம் தெரியும் குகன்..."

வித்யா சிரிக்க... குகனின் முகத்தில் குடம்.. குடமாய் அசடு வழிந்தது...

"நான் உங்களுக்கு விசயம் தெரியாதுன்னு சொல்ல வந்தேன்.." அவன் முகம் விழுந்து விட்டது..

"அதுக்கு எதுக்காக மூட்-அவுட் ஆகறிங்க...? சப்போஸ் எங்களுக்கு அது தெரியாம இருந்திருந்தா இது ஸ்வீட் நியுஸ்தானே..? தேங்க் யு குகன்.."

"எதுக்காக மேடம்...?"

"இந்த பேக்டரியின் வளர்ச்சியிலே நீங்க காட்டற உண்மையான ஈடுபாட்டுக்கு.. இதன் வெற்றியிலே நீங்க காட்ற உண்மையான சந்தோசத்துக்கு..."

மனதிலிருந்து சொன்னாள் வித்யா... அந்த வார்த்தைகளில் கூம்பில் போன குகனின் முகம் பூவாக மலர்ந்தது...

"தேங்க் யு மேடம்..." அவன் நன்றிக்கு நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றான்...

மூடிய கேபின் கதவைப் பார்த்த நரேந்திரனின் முகத்தில் பாதியில் விட்டதைப் பிடிக்கும் எண்ணம் பிரதிபலித்தது... அவன் போதையுடன் வித்யாவைப் பார்த்தபடி அவளைத் தன் கை வளைவிற்குள் இழுத்தான்.. அவளும் மறுக்காமல் அவன் கைகளுக்குள் வந்தாள்.. அவனின் இடுப்பைச் சுற்றி அவள் கரங்கள் வளைத்ததில் நரேந்திரனின் போதை அதிகமானது.. அவளது தோள் தடவிய அவன் கைகள் உயர்ந்து அவள் முகம் தடவி.. அவள் முகத்தில் அழுந்தப் பதிந்தன... அவள் இதழ் நோக்கி ஆவலுடன் அவன் குனிந்தான்...

"மேடம்..." கேபினின் கதவ படபடவென்று தட்டப்பட்டது.

இருவரும் அவசரமாகப் பிரிந்து நின்றார்கள்...

"உள்ளே வாங்க..." வித்யா அழைத்தாள்.

கோபமான முகத்துடன் யூனியன் லீடர் ரங்கதுறை உள்ளே வந்தான்... அவனின் சிவந்த விழிகளும்... முறுக்கிய மீசையும்.. துடித்துக் கொண்டிருந்தன...

"போச்சுடா... கிளம்பற நேரத்தில இவன் என்ன வழக்கைக் கொண்டு வந்திருக்கானோ தெரியலையே..." நரேந்திரன் வித்யாவின் காதுகளில் முணுமுணுத்தான்...

வித்யாவிற்குத் தெரியும்... யூனியன் லீடர் கோபமாக வந்திருக்கும்போது... அவனை எதிரில் வைத்துக் கொண்டு.. பேக்டரியின் எம்.டியும்.. பெர்சனல் மேனேஜரும் ரகசியம் பேசினால் அவன் அதை ரசிக்க மாட்டான் என்பது...

அவனே எரிகிற நெருப்பாக வந்திருக்கிறான்.. அதில் எண்ணையை ஊற்றி விடும் செயலைச் செய்ய வேண்டுமா என்ற நினைவோடு... நரேந்திரனின் முகம் பார்க்காமல்... யூனியன் லீடரின் முகம் பார்த்தாள் அவள்...

"சொல்லுங்க சார்... என்ன பிரச்சனை...?"

"நாங்க மனுசங்களா... இல்ல.. மாடா மேடம்...?"

"வாட் இஸ் திஸ் சார்... பிரச்னை என்னன்னு கேட்டா.. நீங்க பிரச்னையைச் சொல்லாம அதைப் பெரிதாக்கறிங்க.. வாட் இஸ் யுவர் பிராப்ளம்...?"

"பேக்டரிக்கு புது ஆர்டர் வந்திருக்கா...?"

"ஆமாம்..."

"யாரைக் கேட்டு அதை ஒப்புக்கிட்டிங்க...?"

யாரைக் கேட்கனும் என்ற கேள்வி நரேந்திரனின் தொண்டை வரைக்கும் வந்து விட்டது.. அதே கேள்வி வித்யாவின் மனதில் எழுந்தது.. இருந்தும் இருவரும் அதை முகங்களில் பிரதிபலிக்கவில்லை.. அவர்களுக்குத் தெரியும்.. முதலாளிகள் சில நேரங்களில் வாயிருந்தும் ஊமைகளாக இருக்க வேண்டி வரும் என்பது...

நரேந்திரன் வித்யாவைப் பேச விட்டு அமைதி காத்தான்... இந்த இடத்தில் அவன் பேசக்கூடாது... வந்திருக்கும் கேள்வி அவனுடைய சுய மரியாதையை ஆட்டிப் பார்ப்பது... அதற்கு கோபப்பட்டால் அது தொழிலாளரின் பிரச்னையாக உருவெடுத்துவிடும்... அதே சமயம் அதைக் கண்டு கொள்ளாமல் அவன் தன்மையாகப் பேசினால்.. அந்தக்

கம்பெனிக்கு அவன்தான் முதலாளி என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்...

வித்யா அமைதியாகவே பேசினாள்... புயலை எதிர்நோக்கும் பூவாக அவள் நிலைமையை முகம் மாறாமல் எதிர் கொண்டாள்...

"நீங்க யூனியன் லீடர்... நீங்க பேசற ஒவ்வொரு வார்த்தையும் தொழிலாளர்களைத் தான் பாதிக்கும்... அதைப் புரிஞ்சுதான் பேசறிங்களா...?"

"நான் பேசறதே அவங்களுக்காகத்தானே மேடம்.. நீங்க பாட்டுக்கு புது ஆர்டரை ஒப்புக்கிட்டா வேலையை யாரு செய்கிறது...?"

"பொறுப்பான தொழிலாளிகளின் பிரதிநிதி நீங்க.. உங்க வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வரலாமா...? நம்ம வேலையை நாமதான் செய்யனும்... இதுக்குன்னு வெளியே இருந்தா ஆள் வருவாங்க...?"

"போட்டுருவீங்களா...? வெளி ஆளை வேலைக்குப் போட்டிருவீங்களா...? நாங்க விட்டிருவமா...? இதுதான் உங்க திட்டமா...? இப்பத்தானே புரியுது... நீங்க முதலாளியோட பெண்டாட்டிங்கிறதை காண்பிச்சுட்டிங்களேம்மா... கல்யாணத்துக்கு முந்தியிருந்த பெர்சனல் மேனேஜரம்மா வேற... இப்ப இருக்கிற மேனேஜரம்மா வேற... நீங்க எங்களுக்குச் சாதகமா பேசி ரொம்ப நாளாச்சும்மா.."

வித்யாவுக்கு ஆயாசமாக இருந்தது.. இந்த ரீதியான குற்றச்சாட்டுக்களை அவள் அடிக்கடி எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.. தொழிலாளர்கள் அவள் மேல் வைத்திருந்த நம்பிக்கை... எப்போது... எப்படி... அசைய ஆரம்பித்தது என்று அவளுக்கே புரியவில்லை...

அவள் எப்போதும் போல்தான் இருந்தாள்.. திருமணத்துக்கு முன்னால் மட்டும்... அவள் வேறு... நரேந்திரன் வேறு என்றா அவள் நினைத்தாள்...? அப்போதும் மனதளவில் அவன் மனiவியாகத்தானே அந்த பேக்டரியில் காலடி வைத்தாள்...?

இதை அவர்களுக்கு யார் சொல்வது...?

2

நதியோரம் நடந்த போது..

தொலைவினிலே ஒரு பாட்டு..

பாட்டுச் சத்தம் நீ கேட்டு.

பாடுவாயோ எதிர் பாட்டு..?

-நதியோரம் நான் நடந்த போது-

இப்போதெல்லாம் இது போன்ற வார்த்தைகளை அடிக்கடி வித்யா கேட்க நேரிடுகிறது.. எங்கே.. எப்போது.. எந்த வகையில் தொழிலாளர்களின் மனதில் இந்த விஷ விதை விழுந்தது என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை.. யாருக்காக அவள் மகேந்திரனை எதிர்த்துப் போராடினாளோ.. அந்தத் தொழிலாளர்களே அவளுக்கு எதிராக அணி திரண்டு நின்றார்கள்...

நரேந்திரன் பேச வாய் திறந்தான்.. வித்யா கண் சமிஞ்கையில் அவனை அமர்த்தினாள்.. அங்கே அந்த இடத்தில்.. அது போன்றதொரு சூழ்நிலையில்.. நரேந்திரனையும்.. தொழிலாளர்களையும் பேசவிடுவது புத்திசாலித்தனமல்ல என்பது அவளுடைய எண்ணம்..

ஒரு சிறு தீப்பொறிகூட பற்றி எரியும் காட்டுத்தீயாக மாறிவிடக் கூடும்.. எனவே அவளே பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தாள்..

"ஓகே சார்.. நீங்க யூனியன் லீடர்.. புது ஆர்டரை ஒப்புக்கொள்கிறதுக்கு முன்னாலே உங்ககிட்ட கலந்து பேசியிருக்கனும்னு நீங்க நினைக்கறீங்க.. ஆனா.. இது வரைக்கும் அப்படியொரு நிலைப்பாடை பேக்டரி நிர்வாகம் எடுத்ததில்லையே.. இதுக்கு முதலில் பல புது ஆர்டர்கள் வந்திருக்கு.. அப்போதெல்லாம் நிர்வாகம் தான் அதை

முடிவு செஞ்சிருக்கு.. இப்போ மட்டும் புதுசா என்ன ரூல் சொல்றிங்க..?"

வித்யாவின் கிடுக்கிப் பிடியில் ரங்கதுரை திணறிப் போனான்.. அவளுடைய கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறிப் போனான்...

"அது அப்போம்மா..."

"எப்ப..? எழுபது வருசத்துக்கு முந்தியா...?"

"அப்பல்லாம் எந்த புது ஆர்டர் வந்தாலும் வேலை செய்கிற அளவுக்கு நம்மகிட்ட ஆள்கள் இருந்தாங்கம்மா.."

"இப்ப என்ன ஆள் குறைப்பா பண்ணியிருக்கோம்..? அதைவிட அதிகமான ஆள்களுக்கு வேலை கொடுத்திருக்கோம்.. சம்பளத்தை உயர்த்தியிருக்கோம்.. குடியிருக்க குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்திருக்கோம்.. பிள்ளைகள் படிக்க ஸ்கூல் தொடங்கியிருக்கோம்.. இவ்வளவு ஏன்..? உங்க ட்ரீட்மென்டுக்காக ஹாஸ்பிடல் ஆரம்பிச்சிருக்கோமா இல்லையா..?"

"அது.. வந்து.."

"வந்து போயெல்லாம் வேண்டாம்.. உண்டா.. இல்லையா..? அதை மட்டும் சொல்லுங்க.."

"உண்டுதான்.."

"இத்தனையும் செய்ய அதிகப்படி வருமானம் வேண்டுமா.. வேண்டாமா..? உங்களை அதிகப்படியாய் உழைக்கச் சொல்லலை.. வேலை நேரத்துக்கு மேலே யாரும் ஒரு செகண்ட் கூட அதிகமா உழைக்க வேணாம்.. ஆனா.. வேலை நேரத்துக்குள் செய்கிறதை உண்மையா செய்யுங்க.. அவ்வளவுதான்.."

"அப்ப நாங்க வெட்டியா அரட்டையடிக்கிறோம்ன்னா சொல்றீங்க..?"

"நான் அப்படிச் சொல்லலை.. தேவையில்லாத யோசனைகளை யோசிக்க ஆரம்பிச் சிருக்கீங்கன்னு

சொல்றேன்.. குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்ட முடியாது.. அது எத்தனை நாளைக்கு நிலைக்கும்..? வானத்தைப் போல வாழ்க்கை பரந்து.. விரிந்திருக்கிறது.. அதில் சிறகடித்துப் பறந்தால்தான் நம்மால் வாழ முடியும்.. புரிஞ்சுக்கங்க... பறக்காமல் பறவைக்கு இரை கிடைக்காது.. அது தொழிலாளிகளுக்கான உங்களுக்கும் சரி.. முதலாளிகளான எங்களுக்கும் சரி.. அழகானதல்ல.."

"அழகா பேசறிங்கம்மா.. அற்புதமா மூளைச் சலவை செய்றீங்க.. படிச்சவங்க இல்ல.. பேசச் சொல்லியா கொடுக்கனும்..?"

"அதையேதான் நானும் கேட்கிறேன்.. நீங்க உழைப்பாளிக.. உழைக்க உங்களுக்கு சொல்லியா கொடுக்கனும்..?"

"எப்படியோ.. நீங்க தொழிலாளிக பக்கமிருந்து.. முதலாளிக பக்கம் போயிட்டிங்கன்னு உங்க வாயாலேயே ஒப்புக்கிட்டிங்க.. அந்த மட்டிலும்.. உங்க நேர்மைக்கு நன்றி.."

ரங்கதுரை சரியான இடத்தில் அடித்து விட்டான்.. வித்யாவின் முகம் மாறியது.. எவ்வளவோ யோசித்துச் செயல்பட்டும் தன்னையுமறியாமல் வாய் விட்டு விட்டோமே என்று அவள் மனம் வருந்தியது..

'உங்களில் ஒருத்தி..'

இதுதான் அவள் பெர்ஸனல் மேனேஜராக பொறுப் பேற்றுக் கொண்ட முதல் நாளில் தொழிலாளர்களின் மத்தியில் சொன்ன வார்த்தை..!

அது காற்றோடு போய் விட்டதா..?

என்று அவள் நரேந்திரனின் கையால் தாலி வாங்கி அவன் மனைவியானாளோ... அன்றிலிருந்தே தொழிலாளர்கள் அவளிடமிருந்து விலகி நிற்க ஆரம்பித்து விட்டார்கள்.. அதை வித்யாவும் உணர்ந்துதான் இருந்தாள்.. என்னதான் நான் எப்போதும் போலவே இருக்கிறேன்.. முதலாளியின் மனைவியாக ஆனதினால் எனது குணம் மாறிவிடவில்லை என்று அவள் திரும்பத் திரும்பச் சொன்னாலும்.. அவர்கள் காதுகளில் அவை ஏறவில்லை.. அவர்களுக்காக

முதலாளிகளுடன் போராடிய பழைய வித்யாவை அவர்கள் எதிர்பார்த்தார்கள்.. அதில் தவறில்லைதான்.. ஆனால்.. பழைய நிர்வாகம் மாறி புதிய நிர்வாகம் வந்த பின்பு போராட்டத்திற்கே வேலையில்லாமல் போய் விட்டதே.. அதை அவர்களிடம் யார் சொல்வது..?

நரேந்திரனும்.. சுரேந்திரனும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த பேக்டரியில் தொழிலாளர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.. அதை எதிர்த்த மகேந்திரன் பேக்டரியில் உரிமையில்லாமல் வெளியேற்றப்பட்டு விட்டான்.. அவனுக்கும் யுகேந்திரனுக்கும் மில் கொடுக்கப்பட்டு விட்டதால்.. அவன் பேக்டரிக்கு வராமல் மில்லுக்கு போக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.. மகேந்திரனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

அவன் எதிர்பார்த்ததே வேறு.. பேக்டரி அவன் கைக்கு வரவேண்டும்.. அதில் அவன் எம்.டியாக பொறுப்பேற்று அந்த இருக்கையில் அமர வேண்டும்.. எதற்கெடுத்தாலும் நரேந்திரனுக்கு ஜால்ரா போட்டுக் கொண்டிருக்கும் குகனை அடக்கி ஒடுக்கி.. பேக்டரியை விட்டு வெளியே துரத்த வேண்டும்.. முதலாளி அவனில்லையே என்ற நினைவில் ஆடிய தொழிலாளிகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்.. அவன் யார் என்பதை காண்பிக்க வேண்டும்..

அவன் மனதில்.. அடுக்கடுக்கான ஆசைகள் பல புதைந்திருந்தன.. அத்தனையும் பேக்டரியின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வதிலேயே இருந்தன.. ஆனால்.. அந்த ஆசைகளையும்.. அவன் யார் என்பதையும் நரேந்திரன் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பான் என்று ஒர்நாளும் அவன் நினைத்தும் பார்த்ததில்லை...

"என்னங்க இப்படியாகிருச்சு..?"

கணவனுக்கு மில்லில் சரிபங்கு கிடைத்தும் மீனலோசனி அவனிடம் துக்கம் விசாரித்தாள்.. அதில் அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. குப்புற விழுந்து மண்ணைக் கவ்விக்

கொண்டதை எந்த ஆண்மகன்தான் மனைவியிடம் ஒப்புக் கொள்வான்..? தன் மீசையில் மண் ஒட்டவில்லை என்றுதானே தட்டி விடுவான்..?

மகேந்திரனும் அதைத்தான் செய்தான்...

"என்ன இப்படியாகிருச்சுன்னு கேட்டு வைக்கிற..? எப்படி ஆகிருச்சு..?"

"பேக்டரி உங்க கையை விட்டுப் போயிருச்சே.."

"மில் கைக்கு வந்திருச்சே..."

"வந்தாலும்.. அதைக் கைப்பற்ற விட்டுட்டுத்தான் உங்க தம்பி வேற வேலை பார்ப்பார்.. போங்கத்தான்..

நீங்க வேற கடுப்பைக் கிளப்பாதீங்க.."

"விடாம என்ன செய்யப் போறான்..?"

"விட்டுட்டாலும்.. ம்ஹீம்.. எடுத்து வைத்தாலும்.. கொடுத்து வைக்கனும்கிறது இதுதான் போல..."

"என்ன மீனா.. வாய் நீளுது.."

"நீளாம என்ன செய்யும்..? நான்தான் நம்ம பக்கம் பேசறதுக்கு எங்க அப்பா வீட்டிலிருந்து அவங்க எல்லோரையும் வர வைச்சிருந்தேனில்ல...? அதை யூஸ் பண்ணிக்கிட்டு பேக்டரியைக் கைப் பற்றுகிறதை விட்டுட்டு.. அதைக் கோட்டை விட்டுட்டு வந்து நிற்கறிங்க..."

"பேக்டரிக்கு மில் என்ன குறைச்சலா..?"

"அதில குறைச்சல் இல்லை.. அங்க உங்க பார்ட்னரா யுகேந்திரன் உட்கார்ந்திருக்கார்.. அதுதான் குறைச்சல்.."

"ஏன் அவனுக்கென்னவாம்..? ஆக்சுவலாய்.. அண்ணனோ.. சுரேனோ பார்ட்னரா வாய்த்திருந்தால்தான் வம்பு.. அவங்ககூட மல்லுக்கட்டியே நம்ம காலம் ஓடிடும்.. அதுவே யுகேன்னா அனுசரித்துப் போவான்..."

"அதோட.. அனாமத்து கணக்கை எழுத விடாம கண்ணிலே விளக்கெண்ணையை ஊற்றிக்கிட்டுப் பார்ப்பார்.. அதுவே

உங்க ஏமாளி அண்ணனா இருந்தா.. ஆமாம்.. அப்படித்தான்னு நெஞ்சை நிமிர்த்தி தைரியமா சொல்லிக்கிட்டு பணத்தைச் சுருட்டலாம்.. அது யுகேந்திரன் கிட்ட முடியுமா..?"

முடியாது தான்.. அதை வாய்விட்டு மீனலோசனியிடம் சொல்வது எப்படி..? வசதியான மௌனத்தை துணைக்கு அழைத்துக் கொண்டுத் தப்பித்தான் மகேந்திரன்..

"இப்ப பேச மாட்டிங்களே.. உங்க அண்ணனை விடுங்க.. சுரேந்திரன் பார்ட்னரா வந்திருந்தாலும்.. குறைவில்லைதான்.. அவன் பாட்டுக்கு வெளிநாட்டில் கிடப்பான்.. நீங்க பாட்டுக்கு பேக்டரியில ஏகபோக உரிமை கொண்டாடலாம்.. கேட்கிறதுக்கு யாரிருக்கப் போகிறாங்க..? இப்பப் பாருங்க.. யுகேந்திரன் நல்லா நல்லாக் கேட்பார்.. அவர் சும்மா இருந்தாலும் பிரபாவதி தூண்டி விடுவாள்.."

"அவளும் நீயும் ஒற்றுமையா இருக்கிறவங்களாச்சே மீனா..."

"நீங்களும் யுகேந்திரனும் கூடத்தான் ஒற்றுமையா இருப்பீங்க.. எப்ப.? மத்தவங்களை ஏமாத்திப் பணத்தை கொள்ளையடிக்கிறதில மட்டும்.. அதுவே நீங்க ரெண்டு பேரும் பார்ட்னருன்னா அந்த ஒற்றுமை நிலைத்திருக்குமா..?"

எப்படி நிலைத்திருக்கும்..? யுகேந்திரனின் நட்பான பாசம் கிடைக்க வேண்டும் என்பதற்காக.. அவன் மில்லைக் கொள்ளையடிப்பதை மகேந்திரன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா..?

"அந்த ஒற்றுமை நிலைத்திருக்கனும்னு நீ ஆசைப் பட்டால் அதை நிலைக்க வைச்சிட்டாப் போகுது..."

"எப்படி நிலைக்க வைப்பீங்க.. மில்லை அவருக்கு தாரை வார்த்துக் கொடுத்து நிலைக்க வைப்பீங்களா..?"

"தெரியுதில்ல.. அப்புறமும் ஏண்டி கிண்டிக் கிளருகிற..?"

"தாங்கலை.. மில்லில் கொள்ளையடிச்சு.. நீலாங்கரையில பங்களாக்களா வாங்கிப் போட்டிருக்கார்.. நீங்க கொஞ்சம் அசந்தாக் கூடப் போதும்.. மில்லை ஏப்பம் விட்டு உங்களுக்கு நாமத்தைப் போட்டு விடுவார்.. பேக்டரியில சொகுசா இருந்ததைப் போல மில்லிலயும் இருக்கனும்னு நினைச்சிராதீங்க.. பதினொரு மணிக்குப் போகிறது.. ஒரு மணிக்கு

சாப்பிட வாரது.. திரும்பவும் மூணுமணிக்கு போகிறது.. ஐந்தடிச்சா வந்திடறதுன்னு இருந்த காலத்தையெல்லாம் மறந்திருங்க.. அதை நீங்க மறக்கலைன்னா.. மில்லை மறந்திர வேண்டியதுதான்.."

மீனலோசனி எச்சரிக்கையுடன் கணவனை முடுக்கி விட்டாள்.. அதன் விளைவாக.. மகேந்திரன் இறக்கை இல்லாமலே பறக்க வேண்டியதாகி விட்டது...

3

நதியோரம் நடந்த போது..

சின்னதாக காதல் சொன்னேன்..

சொன்ன மொழி சிறியதுதான்..

என் காதல் பெரியதுதான்...

-நதியோரம் நான் நடந்த போது-

மகேந்திரனுக்கு ஓட்டம் பழக்கமான ஒன்றல்ல.. அவன் பிறர் உழைப்பில் வாழ்ந்து பழகிய உல்லாசி.. அவனுக்கு வேலை செய்யப் பிடிக்காது.. அந்த வேலையினால் வரும் லாபத்தைக் கொள்ளையடித்து அனுபவிக்கப் பிடிக்கும்...

அப்படிப்பட்டவன்.. விடிந்தும் விடியாதபோதே எழுந்து மில்லுக்கு கிளம்பி ஓட நேர்ந்தது.. அதில் கொடுமை

என்னவென்றால்.. அவன் என்னதான் கோழி கூவுவதற்கு முன்னாலேயே அடித்துப் பிடித்துக் கொண்டு கிளம்பி மில்லிற்கு ஓடினாலும்.. அங்கே அவனுக்கு முன்னால் யுகேந்திரன் பிரசன்னமாகியிருப்பான்..

'இவன் தூங்கவே மாட்டானா..?' மகேந்திரனுக்குள் எரிச்சல் மண்டும்...

அவன் சாதாரணமாக செலவு கணக்கை எழுதினாலும் கூட யுகேந்திரன் அதை ஊன்றி.. ஊன்றி கவனித்து ஆயிரம் கேள்விகளைக் கேட்டான்.. பதிலுக்கு.. அவன் காட்டிய கணக்கில் மகேந்திரனுக்கு சந்தேகம் தட்டுப்பட.. இவனும் ஆயிரம் கேள்விகளைக் கேட்டான்.. அவர்கள் ஒருவருக் கொருவர் போர்முரசு கொட்டிக் கொண்டார்கள்...

"இந்த மில்லுக்கு நீ மட்டும்தான் முதலாளியா..? இது உனக்கு மட்டும்தான் சொந்தமா..?"

நாள் தோறும் இதே கேள்வியை அவர்கள் மாறிமாறிக் கேட்டுக் கொண்டார்கள்.. அதிகாரப் போராட்டத்தில்.. யதேச்சதிகாரமாக.. சர்வாதிகாரியாய் இருந்தே பழக்கப் பட்டிருந்த மகேந்திரன் மண்டை காய்ந்து போனான்.. இதற்கெல்லாம் காரணமான நரேந்திரனையும்.. அவனை இப்படியாகப்பட்ட முடிவுகளை எடுக்க வைத்த வித்யாவையும் துவம்சம் செய்யும் வெறி அவனுக்குள் கிளர்ந்தது..

நல்லவர்கள்தான் திடிரென்று எதிரியுடன் கை கோர்க்கத் தயங்குவார்கள்.. கெட்டவர்களுக்கு அப்படியில்லை.. அவர்களுக்கென்ன கொள்கைப் பிடிப்பா இருக்கப் போகிறது..?

மகேந்திரன் ரங்கதுரையுடன் கை கோர்த்தான்..

"ஆயிரம்தான் இருந்தாலும் அது நான் வளர்த்த பேக்டரி ரங்கதுரை.. ராத்திரி பகல்ன்னு பார்க்காம உழைத்து உருவாக்கினது. ம்ஹீம் எங்கிருந்தோ வந்தவ என் அண்ணனை மயக்கி அதைத் தட்டிக்கிட்டுப் போயிட்டா..."

ரங்கதுரை முட்டாளல்ல... அந்த பேக்டரியை மகேந்திரன் வளர்த்த லட்சணம் அவனுக்கு நன்றாகவே தெரியும்.. அவன் இரவு.. பகல் பார்க்காமல் உழைத்த லட்சணமும் தெரியும்.. இருந்தாலும்.. மகேந்திரன் சொன்னதில் இருந்த ஒரு உண்மை அவனை யோசிக்க வைத்தது..

"இப்பல்லாம் முதலாளியா ஆகனுமுன்னா.. முதலாளிக்கு மகனாப் பிறந்திருக்கனும்னு அவசியமில்லை ரங்கதுரை.. எவனாவது ஒரு இளிச்சவாயன் முதலாளியா இருக்கானான்னு பார்த்து அவனை மயக்கினாப் போதும்.. குப்பை மேட்டில் கிடக்கிற காகிதம் கூட.. கோபுரத்தின் உச்சிக்குப் பறந்து போய் ஒட்டிக்கிரும்..."

உண்மைதானே என்று நினைத்தான் ரங்கதுரை.. நேற்று வரை அவனைப் போல ஒரு தொழிலாளியாக இருந்து வந்த வித்யா.. இன்று முதலாளியாக மாறி நிற்கிறாளென்றால் அதற்கு எது காரணம்...? மகேந்திரன் சொல்வதுதானே காரணம்...?

இது மனித இயல்பு.. நேற்று வரை அவர்களுடன் பணியாற்றுகிறவர்கள்.. திடிரென்று பதவி உயர்வு பெற்றால் பொறாமை கொள்வது மனித இயல்புதானே..

ரங்கதுரைக்குள்ளும் அந்த பொறாமை துளிர் விட்டிருந்தது.. அதற்கேற்றார் போல.. வித்யா.. அடிக்கடி.. நாங்க முடிவு பண்ணியிருக்கோம்.. நாங்க யோசிக்கிறோம்.. என்ற ரீதியில் பேசி வைத்தது அவனது ஆத்திரத்தை அதிகப் படுத்தியது.. அந்த வார்த்தைகள் வித்யாவை முதலாளியாக அடையாளப் படுத்திக் காட்டியதில் அவன் வெகுண்டான்.. முதலாளியின் மனைவி முதலாளிதானே என்ற எண்ணம் அவனுக்கு வரவில்லை.. மாறாக நேற்று வரை இவளும் நம்மைப் போல சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த தொழிலாளிதானே என்ற எண்ணம் மட்டுமே அவனுக்குள் தலை தூக்கியது..

அதன் விளைவாக அவன் எடுத்ததெற்கெல்லாம் வித்யாவுடன் மோத ஆரம்பித்தான்.. தொட்டதெற்-கெல்லாம்

குற்றம் சொன்னான்.. சின்ன விவகாரத்திற்குக் கூட போர் கொடியை உயர்த்தினான்...

பொறுமையிழக்கும் தருணங்களை நரேந்திரனுக்கு அள்ளி வழங்கிக் கொண்டே இருந்தான்... நரேந்திரனை பேச விடாமல் வித்யா தடுத்துக் கொண்டே இருந்தாள்..

"இவங்க உங்க தொழிலாளிகள் நரேன்..."

"உனக்கும் இதில் உரிமையிருக்கு வித்யா..."

"எனக்கு உங்க மேல்தான் உரிமை..."

"ஏய்.. யாரோ போலப் பேசாதேடி..."

நரேந்திரன் முறைத்துக் கொள்வான்... உரலுக்கு ஒரு பக்கம் இடியென்றால்... மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி.. வித்யாவுக்கோ திரும்பிய பக்கமெல்லாம் இடி...

பேக்டரியில் நான் தொழிலாளி என்று அவள் சொன்னால் நரேந்திரன் சண்டைக்கு வருவான்... முதலாளி என்று சொன்னால் ரங்கதுரை சண்டைக்கு வருவான் என்றால்.. அவள் பாவம் என்ன செய்வாள்..?

வாயைத் திறந்தால்தானே வம்பு என்று அவளால் மௌனம் காக்க முடியுமா...? ஒப்புக் கொண்ட வேலையிலிருந்து விலகிக் கொள்ளத்தான் முடியுமா..? அதை நரேந்திரன் அனுமதிக்க மாட்டானே...

"வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கவா... ஆயகுடியை விட்டு நீ வெளியேறி.. போராடிப் படிச்ச...?"

"இருந்தாலும் நரேன்..."

"பேசாதே.. என்னால் உன் திறமை வீணாகி விட்டதுன்னு காலம் பூராவும் நான் வருத்தப்படனுமா..?"

நரேந்திரனின் கேள்வி அவளைப் பேசவிட்டாமல் செய்துவிடும்.. வித்யா கெட்டிக்காரிதான்... திறமையான நிர்வாகிதான்.. அவளால் தொழிலாளர்களின் நலன்கள் மேம்பட்டதேயொழிய குறையவில்லை... ஆனாலும் ரங்கதுரை அமைதியடையவில்லையே...

குறை அவனுடைய மனதில் இருந்தது.. அதனால் இல்லாத ஒன்றைக்கூட இருப்பதைப் போலக் கூறி தொழிலாளர்களின் மனதில் வேற்றுமையுணர்வை தூண்டி விட்டான்.. சின்ன விவசாரத்தைக் கூட ஊதிப் பெரிதாக்கினான்..

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க சார்.. புது ஆர்டரை ஏத்துக்கிட்டு வேலை செய்ய முடியுமா.. முடியாதா...?" மனதை திடப் படுத்திக் கொண்டு கடுமையாகக் கேட்டாள் வித்யா...

சிலசமயம் சாட்டையை கையில் எடுத்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது.. அதைப் பிரயோகிக்க வேண்டும். என்ற அவசியமே இல்லை.. ஆனால்.. அது கையில் இருந்தால்தான் வேலை நடக்கும் என்றால் இது கொடுமை அல்லவா...?

வித்யாவிற்கு சாட்டையைக் கையிலெடுக்க விருப்பமே இல்லை.. எனினும் அவள் அதைத்தான் செய்ய வேண்டியிருந்தது.. அவளுக்காக இல்லாவிட்டாலும்.. நரேந்திரனின் மனைவி என்ற கௌரவத்தை காப்பாற்றிக் கொள்பதற்காகவாவது அவள் அதைச் செய்துதான் ஆகவேண்டும்...

"முடியாதுன்னா என்னம்மா செய்வீங்க...?" ரங்கதுரை முறைத்தான்..

"நோ அதர் வே.. போனஸ்ஸை குறைக்க வேண்டியது தான்.. சம்பளத்தை உயர்த்துவதைப் பற்றி யோசிக்க வேண்டியதுதான்.. ஆள் குறைப்பு செய்ய வேண்டியதுதான்..."

"செஞ்சிருவீங்களோ...? நாங்க விட்டுருவமோ..? ஸ்ட்ரைக் வெடிக்கும்மா..."

"வெடிக்கட்டும்.. பேக்டரியை இழுத்து மூடலாம்.. புது வேலைகளைச் செய்ய முடியாத பேக்டரியை வைத்துக்கிட்டு என்ன செய்ய...? பேசாம வேற தொழிலைத் தொடங்கிட்டுப் போக வேண்டியதுதான்... நஷ்டம் யாருக்கு...?"

"பணமிருக்கிற திமிராம்மா...?"

"ஊஹீம் வேலை நடக்காத தொழிலை விட்டுவிட்டு வேற தொழிலை ஆரம்பிக்கலாம்கிற புத்திசாலித்தனம்..."

"அப்ப... இத்தனை வருசமா வேலை பார்த்த தொழிலாளர்களின் கதி...?"

"அதை நீங்களும் யோசிக்கனும் சார்... யூனியன் லீட்ரா இருந்தால் தொழிலாளர்களின் நலனைப் பத்தி யோசிக்கனும்.. அதை விட்டுட்டு.. அவர்களின் வேலையைப் பிடுங்குவதைப் பற்றி யோசிக்கக் கூடாது.. வேலையைச் செய்ய மாட்டேன்.. சம்பளம் மட்டும் கூட வேண்டும்... போனஸ் வேண்டும்.. இன்னும் அதிகப்படி சலுகைகள் வேண்டும்ன்னு கேட்டால்.. கொடுக்கப் பணத்திற்கு எங்கே போவது..? எங்கேயாவது கொள்ளை அடிக்கப் போக வேண்டியதுதான்.."

"எங்களைச் சொல்றிங்களா...?"

"ஊஹீம் முதலாளிகளைச் சொல்கிறேன்..."

வித்யா கவனமாக 'எங்களை...' என்ற வார்த்தையைத் தவிர்த்தாள்.. ரங்கதுரையின் வேகம் கொஞ்சம் இறங்கியது.. அவன் யோசித்தான்.. வித்யா சொல்வதில் உள்ள உண்மைகள் அவனுக்கு பிடிபட்டன...

'நாமதான் எதுக்கெடுத்தாலும் குதிக்கிறோமோ...'

அவனுக்கு மனச்சாட்சி உறுத்தியது.. அவன் தணிந்து போக முடிவு செய்தான்... அதே சமயம் அதை முதலாளிகள் அறியாத வண்ணம் அவன் செய்தாக வேண்டும்...

"போனாப் போகுதுன்னு இந்த ஒரு முறை இந்த வேலையைச் செய்ய நாங்க ஒப்புக்கிறோம்..

நாங்க உழைப்பாளிகம்மா.. எங்களாலே முதலாளிக கொள்ளையடிக்கப் போக வேணாம்.. ஆனா இதையே சாக்கா வைச்சுக்கிட்டு தொடர்ந்து இதைப் போலவே பண்ணினீங்கன்னா நாங்க சும்மாயிருக்க மாட்டோம்.. சொல்லிட்டேன்.."

அவன் வீறாப்பு குறையாமல் பேசிவிட்டு வெளியே போய் விட்டான்.. அதுவரை பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த நரேந்திரன் வெடித்தான்..

"இவனிடமெல்லாம் நீ இந்தளவுக்கு பேசியாகனுமா..?"

"ரிலாக்ஸ் நரேன்.. நீங்க ஏன் இதை பெர்ஸனல் மேனேஜரின் டியுட்டியாக நினைத்துப் பார்க்கக் கூடாது..?"

"ஐ நோ வித்யா... பட்... என் முன்னாலேயே அவன் மிரட்டறான்.. எனக்கு எந்த அளவுக்கு கோபம் வந்ததுன்னு உனக்குத் தெரியுமா...?"

"அதான் உங்க முகம் ஜொலிச்சதே.. அவன் பேசினதுக்கு நான் பயந்து போனேனா...? இல்லையே.. அப்படியிருந்தாத்தான் நீங்க கோபப்படனும்..."

"அதைச் சொல்லு... யாரு நீ...?"

மனநிலை மாறிப் போனவனாக நரேந்திரன் ஆசையுடன் வித்யாவை அணைத்துக் கொண்டான்.. அவன் தோள் வளைவில் முகம் புதைத்த வித்யா அவன் காதில்

"நான் நரேந்திரனின் பொண்டாட்டி.." என்றாள்... நரேந்திரனின் காதினில் தேன் பாய்ந்தது..

4

நதியோரம் நடந்த போது...

நதியாக என் வாழ்வில் வந்தாய்...

பொருள் வேண்டும் இவ்வுலகில்...

என் மனதை நீ கேட்டாய்...

-நதியோரம் நான் நடந்த போது-

பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு... நதியோரமாக அவர்கள் நடந்தார்கள்... வழக்கமான

படித்துறையில் அமர்ந்த பின்பும் வித்யா மௌனமாகவே இருந்தாள்.. நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின... அருகிலிருந்தவளின் கை பிடித்து இழுத்து... மார்போடு இறுக்கி முத்தம் பதித்தான்... வித்யாவின் உள்ளங்கை உணர்ந்த மீசையின் ரோமங்களின் உராய்வில் அவள் சிலிர்த்துப் போனாள்...

"வித்யா..."

"ம்ம்ம்..."

"ஐ லவ் யு..."

"இதை நான்தான் சொல்லனும்..."

"ஏன்.. நான் சொல்லக் கூடாதா...? நான் உன்னைக் காதலிக்கலையா...?"

"என்னளவுக்கு காதலிக்கலை..."

இதைக் கேட்ட நரேந்திரனின் முகம் சுருங்கி விட்டது.. அவளின் கையை அவன் விட்டு விட்டான்.. வித்யா அவன் முகம் பார்த்தாள்.. அவனின் மனச் சிணுங்கலைப் புரிந்தவளாக மெல்லச் சிரித்தபடி அவனை ஒட்டி அமர்ந்தாள்... அவனின் வலிமையான கையை எடுத்து.. தன் கன்னத்தில் பதித்துக் கொண்டாள்.. வித்யாவின் கன்னத்தின் மென்மையில் நரேந்திரனின்

மனம் குழைந்தது..

"நரேன்..."

"சொல்லு..."

"நீங்க என்னைக் காதலிக்கறிங்கதான்.. ஆனா.. என்னைப் பார்க்காமலே நீங்க என்னைக் காதலிக்கலை.. நான் அப்படியில்லை... உங்களைப் பார்க்கிறதுக்கு முன்னாலேயே உருகி உருகி... உங்களைக் காதலிச்சவ.. அந்த அர்த்தத்தில் தான் சொன்னேன்..."

"அப்ப.. என் காதல் உயர்த்தியில்லையா...?"

"யார் சொன்னது...? ராஜா ராஜேந்திர பூபதியோட மூத்த மகன் ராஜா நரேந்திர பூபதி... ஒரு ஏழைப் பெண்ணுக்காக.. கூடப் பிறந்தவர்களையே எதிர்த்து நின்னார்... அவளையே கல்யாணமும் பண்ணிக்கிட்டு.. அவளின் காதலுக்கு மரியாதை கொடுத்தார்.. யார் இதைச் செய்வாங்க...? சொல்லுங்க..."

"உன் காதலன் செய்வான்..."

நரேந்திரன் முக மலர்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டான்.. அந்தி நேரம் முடிந்து கொண்டிருந்தது.. லேசான இருள் படலம் அவர்களைச் சுற்றிக் கவிய ஆரம்பித்திருந்தது... அமைதியாக ஓடிக் கொண்டிருந்த நதி நீர்... அவர்களை வாத்சல்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது...

"இந்த நதி என் சிநேகிதி..." பாசத்துடன் சொன்னாள் வித்யா..

"பூர்ணிமாவை விடவா...?" என்று கேட்டான் நரேந்திரன்..

"அவளைப் போலவே.." வரிசைப் பற்கள் தெரிய சிரித்தாள் வித்யா...

அவளின் அந்தச் சிரிப்பில் மயங்கிப் போனான் நரேந்திரன்..

"சிரிச்சே மயக்கறடி..." அவளை இழுத்துக் கொண்டான் அவன்..

அவனின் கரங்கள் அவள் மேல் படிந்த விதத்தில் வித்யா கிறங்கிப் போனாள்.. அவனின் நெருக்கத்தில் அவளின் பெண்மை தவித்து தத்தளித்தது... அவள் மேல் அவன் கொண்டிருக்கும் ஆசையின் அளவை அவன் கொடுத்த முத்தங்கள் உணர்த்த... எதிர்ப்பேயில்லாமல் அவன் கைகளுக்குள் ஒன்றிக் கிடந்தாள் வித்யா... அவளை அணுவணுவாக ரசித்து ஆக்ரமிக்க அவனுக்குப் பிடித்திருந்தது.. அவனையே அவளுக்குப் பிடித்திருந்தது.. அவளின் தேவைகளுக்கு இசைந்து கொடுப்பதிலிருந்த

ஓர்வித சுகத்தை பரிபூரணமாக உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தாள் வித்யா...

"உன் மேல கொண்ட ஆசை...

உத்தமியே மெத்தை உண்டு...

சத்தியமா சொல்லுறேண்டி தங்கரத்தினமே..

தாள முடியாது கண்ணே பொன்னு ரத்தினமே..."

அவளின் காதோடு அவன் பாடிய பாடலின் ஆசைத்தீ உணர்த்திய வெப்பத்தில் அவள் எரிய ஆரம்பித்தாள்.. அவனின் மூச்சுக்காற்று அவள் காதைச் சுட்டது.. நகர்ந்து கொண்டிருந்த மணித்துளிகள் அவனுக்கும்.. அவளுக்குமான ரகசிய அந்த மணித்துளிகளை பதிவு செய்து கொண்டிருந்த போது கோவிலின் மணி ஒலித்தது.. அந்த மணியோசையில் வித்யாவை நரேந்திரன் விடுவிக்க.. அவள் விலகி அமர்ந்தாள்..

அவள் முகம்... அவனின் அழுத்தமான முத்தங்களினால் கலங்கிச் சிவந்திருந்தது.. கலைந்திருந்த அவளின் தலைமுடி அவனின் ஆவேச அணுகுமுறையைச் சொன்னது.. மெல்லிய இருளில் தெரிந்த அவளின் வடிவம்.. முன்பு ஒருமுறை சென்னையில் பங்களாவின் மொட்டை மாடியில் நிலவின் ஒளியில் அவளைத் தனியாக சந்தித்த அந்தத் தருணத்தை நினைவு படுத்தியது...

அன்றும் இன்று போல ஒரு கோட்டுச் சித்திரத்தைப் பார்ப்பதைப் போலத்தான் அவளின் வடிவம் இருந்தது.. மெலிதான நிலவொளியில் தலையில் சூடிய மல்லிகையின் நறுமணத்தோடு.. தேவதையின் அழகோடு அவன் அருகே நின்றாள் அவள்...

இன்று அந்த தேவதை அவனருகில்... அவனுக்கு மட்டும் உரிமையானவளாக.. அவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தவளாக இருக்கிறாள்...

இது எப்படி நிகழ்ந்தது என்று பிரமித்துப் போனான் நரேந்திரன்...

"என்ன பேச்சையே காணோம்...?" வித்யா கேட்டாள்..

"பேசத்தான் இங்கே வந்தோமா...?" நரேந்திரனின் கைகள் மீண்டும் அவளைத் தேடின...

"ஊஹீம்.......? வேகம் அதிகமாக இருக்கே..."

"எதைச் சொல்கிற...?"

"நதியின் வேகத்தைச் சொல்றேன்.. நீங்க எதை நினைச்சீங்க.."

"உன் நாயகனின் வேகத்தைச் சொல்கிறாயோன்னு நினைச்சேன்..."

அவன் சொல்லிய விதத்தை ரசித்துச் சிரித்தாள் வித்யா.. அதில் தெறித்து விழுந்த அழகில் மயங்கிப் போனவனாக அவளது கைவிரல்களில் விரல் கோர்த்து விளையாடிக் கொண்டிருந்தான் நரேந்திரன்..

"வர வர... சினிமாடிக்கா பேச ஆரம்பிச்சிட்டிங்க நரேன்.."

"ஈஸ் இட்...? என்னமோ தெரியலை.. நீ பக்கத்தில் இருந்தாலே இப்படித்தான் எனக்குப் பேச வருது.."

"ஊஹீம்..? யாராவது கேட்டா நம்மை லவ்வர்ஸ்ன்னு நினைச்சுக்கப் போறாங்க..."

வித்யா சிரித்தபடி சொல்ல.. இருளில் தெரிந்த அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான் நரேந்திரன்.. அவன் குரல் சூழ்ந்து ஒலித்தது..

"ஏன் வித்யா.. நாம லவ்வர்ஸ் இல்லையா...?"

இல்லையென்று அவள் எப்படிச் சொல்லுவாள்...? கணவன் மனைவியாக ஆனபின்பு காதலிக்கக் கூடாது என்று ஏதும் சட்டமிருக்கிறதா என்ன...? அவள் மீதான அவனின் காதலை ஒவ்வொரு நொடியிலும் அவள் உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறாளே.. அவன் மீதான அவளின் தேடலை அவனுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறாளே.. அப்படியிருக்கும்போது அவர்கள் காதலர்கள் இல்லையென்று அவளால் சொல்ல முடியுமா..?

"நரேன்..." அவள் கண்களில் ஈரம் தெரிந்தது..

"வித்யா..." அவன் பதறி அவள் முகத்தை கையில் ஏந்தினான்..

ஏந்திய அவன் கரத்தில்.. இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிகள் தெறித்து விழுந்தன..

"என்னடி ஆச்சு...?" நரேந்திரன் தவித்தான்...

"நான் உங்களைக் காதலிக்கிறேன் நரேன்..." வித்யா விம்மினாள்..

"அதான் எனக்குத் தெரியுமே.. இதுக்குப் போயா அழுகிற...? பைத்தியம்.. நான் என்னவோ.. ஏதோன்னு பயந்துட்டேன்..." நரேந்திரனின் குரலில் நிம்மதியிருந்தது..

"என் வாழ்க்கையில நான் எனக்குன்னு ஆசைப் பட்டது படிப்பை மட்டும்தான்... அப்படியிருந்தவ உங்க மேல ஆசைப் பட்டேன்.."

"வித்யா..."

"பூரணி சொல்லுவா.. தினமும் உங்களைப் பத்திப் பேசுவா.. அவ பேசப் பேச... என் நினைவுகளின் கதாநாயகனா நீங்க ஆனிங்க நரேன்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே சொன்னீங்களே.. நீங்க என்னோட நாயகன்னு.. அது நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை.. என் நாயகனா உங்களை மனசுக்குள்ளே நான் வரிச்சேன்.."

"அந்தத் தகுதி எனக்கிருந்துச்சாடி...?"

"உங்களைத் தவிர யாருக்கு அந்த தகுதியிருக்கு..? சொல்லுங்க பார்ப்போம்... உங்களைப் பத்திக் கேட்டுக்கிட்டே இருந்தால் போதும்ன்னு எனக்குத் தோணும்.. சாப்பிடத் தோணாது.. உங்க போட்டோவைப் பார்த்துக்கிட்டே இருப்பேன்.. என்னைக்காவது ஒரு நாள் உங்களை நேரில் பார்க்க முடிந்தால் போதும்ன்னு மனசு கிடந்து அடிச்சுக்கும்.. அது நடக்குமா.. நடக்காதான்னு தெரியாது..."

வித்யாவின் கடந்த காலக் காதல் கதையின் கதாநாயகனான நரேந்திரன் அவள் சொன்னதை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.. இந்த அளவுக்கு ஒருத்தி அவனை நேசித்துக் கொண்டிருக்க அதை அறியாதவனாக அவன் போதையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தவனுக்கு அவன் மீதே வெறுப்பு வந்தது.. அவனுக்காக முழு நிலவு காத்துக் கொண்டிருக்க மின்மினிப் பூச்சிகளின் பின்னால் எதைத் தேடி அவன் ஓடினான்...?

"என் காதல் ஒரு தவம் மாதிரி நரேன்.. என் தவம் பலிச்சது.. ஒருநாள் உங்களை நேரே பார்த்தேன்.. நீங்க என்னையும் மதிச்சு உங்க மன உணர்வுகளைப் பகிர்ந்துக்கிட்டிங்க.. அந்த நிமிசம் போதும்ன்னு எனக்குத் தோணிப் போச்சு.. அதுக்குப் பின்னாலே நீங்க எதைக் கேட்டாலும் மறுக்க முடியாம உங்க பின்னாலேயே வந்து விட்டேன்.."

"நான் கொடுத்து வைத்தவன் வித்யா.. என் மனசு நிறைஞ்சிருக்குடி.. உனக்கு எதையாவது கொடுக்கணும்னு எனக்குத் தோணுது.. கேளுடி... உனக்கு என்ன வேணும்னு கேளு..."

நரேந்திரனின் மனம் தளும்ப உணர்வு பூர்வமாக இந்த வார்த்தைகளை அவன் சொன்னான்.. வித்யாவும் கேட்டாள்..

"எனக்கு உங்க மனசு வேணும் நரேன்..."

"வித்யா..."

"அதில எனக்கு மட்டும்தான் இடமிருக்கனும்.. எனக்கு மட்டும் சொந்தமானதாக.. எனக்கே எனக்குன்னு உங்க மனசு இருக்கனும் நரேன்.."

வித்யா இரு கைகளையும் நீட்டி இறைஞ்சினாள்.. நரேந்திரன் திக்பிரமை பிடித்தவன் போலானான்...

அவன் கோடிஸ்வரன்.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. அவனிடம் அவனது காதல் மனைவி அன்புப் பரிசாக.. வைர நகைகளைக் கேட்கலாம்.. அவளுக்கே.. அவளுக்காக

'வசந்த மாளிகை...' ஒன்றைக் கட்டித் தரும்படிக் கேட்கலாம்.. அவன் பெயரில் உள்ள பேக்டரியின் நிர்வாகத்தைக் கேட்கலாம்.. இப்படி எத்தனையோ 'கேட்கலாம்'கள் இருக்க... அவள் அவன் மனதை மட்டும் கேட்டாள்...

'பொன்னை விரும்பும் பூமியிலே..

என்னை விரும்பும் ஓர் உயிரே...

புதையல் தேடி அலையும் உலகில்..

இதயம் தேடும் என்னுயிரே..!'

அவன் மனதில் அவனுக்குப் பிடித்த பாடல் ஒலித்தது..

5

நதியோரம் நடந்த போது...

சுடுமணலில் பாதம் பதித்தேன்...

இளைப்பாற நிழல் கேட்டால்..

கற்பகவிருட்சமாய் நீ வந்தாய்..

-நதியோரம் நான் நடந்தபோது-

"எனக்கு அது மட்டும் போதும் நரேன்.. வேறு எதுவும் வேண்டாம்... உங்க மனசு...! அது எனக்கு மட்டும் சொந்தமா இருக்கனும்.." வித்யாவின் குரலில் தீவிரம் இருந்தது...

"உனக்கு மட்டும்தாண்டி என் மனசு சொந்தம்..." நரேந்திரன் உறுதியான குரலில் சொன்னான்..

"ஒரு வேளை... அதில வேற யாராவது ஒருத்தரின் நினைவு வந்ததுன்னு வையுங்க..." வித்யாவின் குரலில் தீவிரம் அதிகரித்தது..

"யாருடி வரப் போகிறது..." நரேந்திரன் இலகுவாக அவளின் தீவிரத்தைப் புறக்கணித்து நகைத்தான்...

"இது சிரிக்கிற விசயமில்ல நரேன்.. சீரியஸா சொல்கிறேன்.. உங்க மனசு எனக்கு மட்டும்தான் சொந்தம்கிற நிச்சயம் எனக்கிருக்கும் வரைக்கும்தான் நான் அமைதியாய் இருப்பேன்.. அதில் துளியளவு இடம் கூட மத்த யாருக்காவது நீங்க கொடுத்தீங்கன்னு வையுங்க.. அந்த நிமிசமே உங்களை விட்டுப் பிரிஞ்சுருவேன்..."

இதைச் சொல்லிய வித்யா நரேந்திரனின் கையால் அறை வாங்கினாள்.. அவளின் காதுகளில் கிர்சென்று ஒலி கேட்க.. கன்னத்தில் பலமாக வலித்தது...

"கொன்னுருவேண்டி..." நரேந்திரன் உறுமினான்..

"நரேன்..." வித்யா அதிர்ச்சியுடன் அழைத்தாள்..

"பேசாதே... உனக்கு அன்னைக்கே சொல்லி-யிருக்கேன்.. பிரிவைப் பத்திப் பேசாதேன்னு..

உன் வாழ்க்கை என்னோடதான்.. பிரிஞ்சு போயிருவியோ.. உன்னை விட்டு விட்டுத்தான் வேற வேலை பார்ப்பேன்.. கொன்னு இந்த நதிக்கரையிலேயே புதைச்சிர மாட்டேனா...?"

"நரேன்..."

"பேச வந்திட்டா.. என் மனசில உன்னைத் தவிர யாருக்குடி இடமிருக்கு..? உனக்காகத்தான் இத்தனை நாளா கல்யாணம் ஆகாம நான் காத்துக் கிடந்தேன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. இவ பினாத்தறா..."

"நரேன்.."

"இது ஒருவழிப் பாதைடி.. நீ திரும்பிப் போக முடியாது.."

திரும்பிப் போக வித்யா நினைப்பாளா...? எங்கே நரேந்திரன் இருக்கிறானோ.. அங்கேயே வித்யாவின் மனம் நிலை கொண்டிருக்கும்.. இதை அவனால் புரிந்து கொள்ள முடியுமா...?

அவள் கண்களில் இருந்து நீர் துளி விழுந்தது.. நரேந்திரனின் மடிமீது அவள் தலை சாய்த்தாள்.. அவன் உக்கிரம் துணிந்தவளாக அவள் தலை முடியை வருடிக் கொடுத்தபடி மெல்லப் பாடினான்..

"ஆலம் விழுதுகள் போல்

உறவுகள் ஆயிரம் இருந்தும் என்ன..?

வேரென நீயிருந்தாய்...

அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்..

உன் கண்ணில் நீர் வழிந்தால்...

என்நெஞ்சில் உதிரம் கொட்டுதடி..

என் கண்ணில் பாவையன்றோ..

கண்ணம்மா.. என்னுயிர் நின்னதன்றோ..."

அவன் மடிமீது தலை வைத்து வெகு நேரத்திற்கு வித்யா விசும்பிக் கொண்டேயிருந்தாள்.. அவளின் ஏக்கம்தான் என்ன..? நரேந்திரனுக்கு பிடிபடவில்லை.. அதைத் தீர்க்கும் வகையறியாதவனாக அவள் முடியை ஆதரவுடன் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.. முன்னிரவுப் பொழுதில் அழுகை அடங்கியவளாக வித்யா எழுந்து நின்றாள்.. கூட எழுந்து நடந்த நரேந்திரன் காருக்கு அருகே வந்ததும் கேட்டான்...

"ஏண்டி அப்படி அழுத...?"

"தெரியலை.." துக்கத்துடன் பதில் சொன்னாள் வித்யா.. அவளுக்குத் தெரியத்தான் இல்லை.. அவளால் படிப்பிற்காக ஆயகுடியை துறக்க முடிந்தது... பூர்ணிமாவின் வேண்டுகோளுக்காக கல்லூரி விடுதியை துறக்க முடிந்தது.. நரேந்திரனின் விருப்பத்திற்காக பார்த்துக் கொண்டிருந்த வேலையையும்.. காத்துக் கொண்டிருந்த வேலையையும் துறக்க முடிந்தது.. ஆனால் எதற்காகவும் நரேந்திரனைத் துறக்க அவளால் முடியவே முடியாது...

இருந்தும் அந்த வார்த்தைகளை அவள் சொன்னாள்.. ஏன்...? அவள் மனதின் அடி ஆழத்தில் இருக்கும் பயம் தான் என்ன...? கைப் பொருளை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் சிறுமியாக ஏன் அவள் தத்தளிக்கிறாள்...?

"உனக்கு யோகம்டி.. கிரண்பூர் சமஸ்தான இளவரசி மட்டும் விட்டுக் கொடுக்கலைன்னா.. என் பெரியத்தானின் மனசில உனக்கு இடமேது...?"

கேட்டாளே ஒரு கேள்வி...! மீனலோசனி அருமையான கேள்வியொன்றைக் கேட்டு வைத்தாள்... நரேந்திரனுடன் மணமாகி.. மறுவீட்டுக்கு ஆயகுடி போய் வந்து.. பொறுப்புள்ள பெரியண்ணியாக பூர்ணிமாவின் திருமணத்திலும் நின்று முடித்த வித்யாவிடம் ஒர் நாள் இந்தக் கேள்வியை மீனலோசனி கேட்டாள்...

வித்யாவிற்குத் தெரியும்.. அவள் மனதை பலவீனமாக்கத்தான் அப்படிப்பட்ட கேள்வியினை மீனலோசனி கேட்கிறாள் என்று...

ஆனால்.. அந்தக் கேள்வியில் உண்மை இருக்கிறதல்லவா...? கார்த்திகாயினி தேவி மட்டும் காதலனுக்காக காத்திருந்தால்.. நரேந்திரனின் வாழ்வில் வித்யாவிற்கு இடமில்லையே...

அன்றிலிருந்துதான் வித்யாவின் மனம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.. அவளது நரேந்திரனை யாராவது அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டுப் போய் விடுவார்களோ என்று அவள் பயந்தாள்.. எந்த இழப்பையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியும்.. நரேந்திரனை பிரிந்தால்.. அந்தப் பிரிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியாதே...

அதற்குப் பின்னால் அடிக்கடி அவள் இப்படிப் பேசி நரேந்திரனிடம் அறை வாங்கிக் கொள்வது வாடிக்கையான ஒன்றாக ஆகி விட்டிருந்தது...

காருக்குள் ஏறிய வித்யா.. கன்னத்தை தடவிக் கொண்டாள்.. நரேந்திரனின் கைவிரல் தடங்கள்... அவள்

தொடுகைக்கு தட்டுப்பட்டன.. அவனின் கோபத்தின் வேகத்தில் அவள் மனம் நிம்மதி அடைந்தது...

"நீயாய் வாய் விட்டு கன்னத்தைப் புண்ணாக்கிக்கற.." நரேந்திரன் சங்கடப் பட்டான்..

"காரைக் கிளப்புங்க..." வித்யா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்..

"உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலைடி..." நரேந்திரன் குற்றம் சாட்டியபடி காரைக் கிளப்பினான்..

சாலையில் வேகமெடுத்த காரின் முன்புறம் தெரிந்த மரங்களை வேடிக்கை பார்த்தபடி நரேந்திரனின் தோளில் சாய்ந்திருந்த வித்யா..

"பேக்டரியில ஒன்னைக் கவனிச்சீங்களா...?" என்று திடிரென்று கேட்டாள்..

"ஒன்னா...? ஓராயிரம்ன்னு சொல்லு..." நரேந்திரன் அலுத்துக் கொண்டான்...

"ரங்கதுரையின் பேச்சில மாற்றம் தெரியுது..."

"அது கொஞ்ச நாளாவே மாறிக் கிட்டுத்தான் இருக்குது..."

"அது தானாய் வந்த மாற்றம் போலத் தெரியலை.."

"புத்திசாலி..! கண்டுபிடிச்சிட்ட.. நீ சொல்கிறதும்.. சந்தேகப்படறதும் உண்மைதான்.. மகி... ரங்கதுரையை அடிக்கடி மீட் பண்றானாம்..."

"நினைச்சேன்..."

"ஆனா.. அதை என்கிட்டச் சொல்ல மாட்ட.. ஏன்னா அவன் என் தம்பி பாரு.. ஏண்டி இப்படி இருக்கிற...?"

"விடுங்க நரேன்.. அவர் குணம் தெரிந்ததுதானே.."

"அதுக்காக இந்த அளவுக்கு கீழே இறங்கறதா...? குகன்தான் அவனை வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்கான்.."

வித்யா நரேந்திரனின் காதல் மீதான தவிப்பை மறந்து பேக்டரியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்....

"வொர்க்கர்ஸ் பிராப்ளம் கிரியேட் ஆகிறது நிர்வாகத்திற்கு நல்லதில்லை நரேன்.."

"எனக்கும் புரியுது.. ஆனா இவங்களை எப்படி திருப்தி பண்றதுன்னு எனக்குத் தெரியலையே..."

"ரங்கதுரையைக் கூப்பிட்டுப் பேசிப் பாருங்களேன்.."

"நோ.. நோ... அந்த அளவுக்கு இறங்கக் கூடாது.. எனக்கொன்னும் டென்சனில்லை வித்யா... நீதான் அழகாய் பிராப்ளத்தை சால்வ் பண்றயே.."

"அதைச் செய்திரலாம்.. இருந்தாலும்.. ஒற்றுமையாய் இருந்த பேக்டரி.. லேபர்ஸ்... நிர்வாகம்ன்னு எதிரும் புதிருமா ஆகிறதா...?"

"இதைப் போல எத்தனையோ பிராப்ளத்தைப் பார்த்திருக்கேன்.. லீவ் இட் வித்யா.. பார்த்துக்கலாம்.."

வீடு வந்து விட்டதில் அவர்கள் பேச்சை நிறுத்தினார்கள்.. பிரம்மாண்ட வெளிப்புறக் கேட்டை காவலாள் திறந்து விட கார் உள்ளே நுழைந்தது.. வீட்டுக்குள் போனவர்களை குரோதப் பார்வையுடன் எதிர் கொண்டாள் மீனலோசனி...

"வீட்டைப் பார்த்துக்க மருமகள்கள் இருக்கணுமாம்.. எனக்கு மட்டும் இந்த நியாயமா அத்தை...?"

சௌதாமினியிடம் அவள் கேள்வி கேட்க.. அவள் அதற்குப் பதில் சொல்லாமல்.. அகலமான புன்னகையுடன்

"வா நரேன்... வாம்மா வித்யா..." என்று மகனையும் மருமகளையும் வரவேற்றாள்...

"ம்ஹீம்.. போட்ட சொக்குப் பொடியை... பெரிசு முதல் சிறிசு வரைக்கும் வீட்டில இருக்கிற அத்தனை ஜீவன்களுக்கும் போட்டாகி விட்டது.. என் பேச்சு காதில் ஏறுமா...?" மீனலோசனி அடுத்த அம்பை எய்து கொண்டிருந்தபோது...

"அம்மா.." என்று வித்யாவிடம் தாவினான் அரவிந்தன்.. அவளும் அவனைத் தூக்கிக் கொண்டாள்..

மீனலோசனிக்குத் தாங்கவில்லை.. அவளுக்கும்.. வித்யாவுக்கும் பொதுவான மாமியாரையே அவள் காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்சிக் கொண்டிருக்கும் போது அவள் பெற்ற பிள்ளை வித்யாவை 'அம்மா' என்று அழைத்து சொந்தம் கொண்டாடினால் அவளுக்கு எப்படியிருக்கும்...?

"யாருடா உனக்கு அம்மா...?" அவள் மகன்மீது பாய்ந்தாள்...

"ஏன் மீனா.. குழந்தையை கோபித்துக்கிற...? நான்தான் வித்யாவை அம்மான்னு கூப்பிடனும்னு சொல்லித் தந்தேன்.." சௌதாமினி அமைதியாகச் சொன்னாள்...

"இந்தம்மா என் மகனுக்கு அம்மாவா...?"

"இல்லைதான்.. உறவுப் பிரகாரம் வித்யாவை அவன் பெரியம்மான்னுதான் கூப்பிடனும்.. ஆனாப் பாரு மீனா.. உன்னை விட வயசில வித்யா ரொம்பவும் சின்னவ.. அதனால சித்தின்னுதான் அவன் கூப்பிட வேண்டியிருக்கும்.. அதனாலதான் இரண்டுக்கும் பொதுவா அம்மான்னு கூப்பிடச் சொன்னேன்..."

நீண்ட விளக்கத்தைத் தந்து மீனலோசனியின் மூக்கை உடைத்தாள் சௌதாமினி.. மாமியாரின் விளக்கத்தைக் கூட மீனலோசனியால் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. அந்த விளக்கத்தை உள்ளேயிருந்து வந்த மகேந்திரனும்.. வித்யாவுடன் நின்று கொண்டிருந்த நரேந்திரனும் கேட்டு விட்டதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. வித்யாவை விட அவள்

வயதில் மூத்தவளென்று சௌதாமினி நினைவு படுத்தியதில் மீனலோசனி ஏதோ வேலையிருப்பதைப் போல வீட்டுக்குள் ஓடி விட்டாள்...

6

நதியோரம் நடந்தபோது

நிலாவெளியில் உலா வந்தோம்...

உலா வந்த அந்தப் பொழுதுகளை..

உற்றவளே..! நீ மறப்பாயா..?

-நதியோரம் நான் நடந்தபோது-

"இவங்களுக்குன்னு தான் அம்பா சமுத்திரத்தில பங்களாவை கொடுத்தாச்சே.. அப்புறமும் ஏன் நம்ம கூடவே இருந்து கடுப்பைக் கிளப்பறாங்க...?"

மாடியில் அவர்களுக்கான பிரத்யேக அறைக்குள் வந்த நரேந்திரன் எரிச்சல் பட்டான்... அவனருகே

வந்த வித்யா அவனின் சட்டை பொத்தான்களை கழட்டியபடி..

"இதை அத்தையிடம் கேட்க வேண்டியதுதானே..?" என்று சிரித்தபடி கேட்டாள்...

பதிலுக்கு நரேந்திரன் சிரிக்கவில்லை.. அவளை முறைத்தான்...

"எப்படிக் கேட்பது...? என் கூடப் பிறந்த தம்பிகள்.. குடும்பத் தோடு ஏன் வீட்டை விட்டு வெளியேறலைன்னு அம்மாவிடம் என்னால் கேட்க முடியுமா..?"

"தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக எரிச்சல் படறிங்க...?"

"அதில்லை வித்யா.. அவங்க இந்த வீட்டில் இருந்தால் இருந்துட்டுப் போகட்டும்.. அதில் எனக்கொன்னும் ஆட்சேபனை இல்லை.. ஆனா.. தினமும் உன்னையும்... என்னையும் ஜாடை பேசி வம்புக்கு இழுப்பதையே ஒரு வேலையாய் வைத்திருக்காங்களே.. அதனால்தான் எரிச்சல் வருது... பேக்டரிக்குள்ள மகி குழப்பம் பண்றான்.. வீட்டுக்குள்ளே அவன் பெண்டாட்டி எகத்தாளம்

பேசறான்னா.. எப்படி பொறுத்துக்கிட்டுப் போகிறது வித்யா...? இந்த அவதிக்காகத்தானே நம்ம கல்யாணத்துக்கு முன்னாலேயே பாகம் பிரிவினை செய்தேன்...? இவங்க அதுக்கு அர்த்தமில்லாம ஆக்கிக்கிட்டு இருக்காங்களே..."

அதுதான் அவர்களின் நோக்கம்.. அது வித்யாவிற்குத் தெளிவாகப் புரிந்திருந்தது.. பேக்டரியையும்.. மணி முத்தாறு அரண்மனையையும் வித்யாவிற்கு விட்டுக் கொடுக்க.. அவனது தம்பிகளும்.. தம்பி மனைவிகளும் தயாராக இல்லை.. பிரபாவதி பிரகாஷின் கோபத்திற்குப் பயந்து வெளிப்படையாக எதையும் பேசுவதில்லை.. மறைமுகமாய் காய் நகர்த்துவதோடு பேசாமல் இருந்து கொள்வாள்..

மீனலோசனி அப்படியிருப்பதில்லை.. வித்யா வீட்டிலிருக்கும் நேரங்களில் அந்த வீட்டிற்கு வித்யாவை உரிமையில்லாதவளாகவும்.. மீனலோசனியும்.. பிரபாவதியும் மட்டுமே உரிமைக்காரர்கள் என்றும் நிலை நாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டாள்...

வித்யா வேலையாள்களிடம் வேலை சொன்னால் உடனே அதே வேலையாளிடம் மீனலோசனி வேலை சொல்வாள்.. யார் சொல்வதைக் கேட்பது என்று அவர்கள் தடுமாறி நிற்கும் போது வித்யா பெருந்தன்மையாக விட்டுக் கொடுத்து விடுவாள்...

"பரவாயில்லை சண்முகம்.. இதை அப்புறமாகச் செய்துக்கலாம்..." என்று சொல்லி விடுவாள்..

அந்த வார்த்தைகளைக் கேட்பதும் அந்த சண்முகத்தின் முகத்தில் பரவும் நிம்மதியில் வித்யாவின் மனம் வலிக்கும்...

சின்னச் சின்ன உரிமைப் பிரச்னைகளில் வீட்டு வேலையாள்கள் சிக்கித் திணருவதா...?

இதை நரேந்திரனிடம் அவளால் கொண்டு போக முடியாது.. அவன் கோபக்காரன்.. வித்யாவின் மேல் சிறு துரும்பு

பட்டாலும் பொறுத்துக் கொள்ள மாட்டான்.. உடனடியாக தம்பிகளின் குடும்பங்களை வெளியேற்றி விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பான்..

அதில் சௌதமினிக்கு உடன்பாடில்லை என்பதை வித்யா தெளிவாக கணித்து வைத்திருந்தாள்...

சௌதாமினியின் தாய் மனம் அதைத் தாங்காது.. அதிலும் அவள் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவள்.. சுற்றிலும் பலர் இருக்க.. கலகலப்பான சூழ்நிலையில் பிறந்து.. வளர்ந்து.. வாழ்க்கைப்பட்டு.. வாழ்ந்து பார்த்தவள்.. வீடு முழுவதும் வேலையாள்கள் 'ஜே ஜே' வென்று இருக்கலாம்.. அது பெற்ற பிள்ளைகளுக்கும்... மருமகள்களுக்கும்.. பேரக்குழந்தைகளுக்கும் ஈடாகுமா...?

அதிலும்.. மீனலோசனி சௌதாமினியின் கூடப் பிறந்த அண்ணனின் மகள்.. பிரபாவதியோ.. நரேந்திரனின் தந்தையான ராஜேந்திர பூபதியின் கூடப் பிறந்த தங்கையின் மகள்.. கூடுதலாக பூர்ணிமாவின் நாத்தனார் வேறு...

இந்த நிலையில் அந்த இரண்டு மருமகள்களையும் வீட்டை விட்டுத் தனிக்குடித்தனத்திற்கு அனுப்ப சௌதாமினியால் முடியுமா...?

மகேந்திரனின் குழந்தைகளான அரவிந்தனையும்.. பூஜாவையும்.. யுகேந்திரனின் குழந்தையான காமினியையும் தினமும் தூக்கி மடியில் போட்டுக் கொஞ்சாமலிருக்க அவளால் முடியுமா...?

அதனாலேயே சௌதாமினி மகன்களை தனியே அனுப்புவதைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை.. பேக்டரியையும்.. மில்லையும் அதைப் போலவே செய்துவிட வேண்டுமென்று மகேந்திரனும்.. யுகேந்திரனும் திட்டம் போட்டார்கள்.. அது நடக்கவில்லை....

பாகப் பிரிவினை நடந்து முடிந்த மறுநாளில் வழக்கம் போல மகேந்திரன் பேக்டரிக்குப் போன போது... அவனின் கேபின் கதவு மூடப்பட்டு பூட்டுத் தொங்கியது...

"குகன்..." கோபத்துடன் இரைந்தான் மகேந்திரன் குகன் மெதுவாக ஆடி அசைந்து வந்தான்...

"என்ன சார்...?"

"வாட் இஸ் திங்...?"

மூடப்பட்டக் கதவைக் காட்டி மகேந்திரன் கொந்தளித்தான்... குகன் நிதானமாக.. பூட்டைத் தூக்கிப் பார்த்து விட்டு...

"இது பூட்டு சார்..." என்று விளக்கம் சொன்னான்..

"ஏய்ய்...!" ஒற்றை விரலை உயர்த்தி மகேந்திரன் கர்ஜித்ததிற்கு குகன் அலட்டிக் கொள்ளவே இல்லை..

போடா.. நீயுமாச்சு.. உன் கோபமாச்சு.. என்ற ரீதியில் முகத்தில் சலனமில்லாமல் மகேந்திரனையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"இது யார் செய்த வேலை...?"

"நான் செய்த வேலையில்லை சார்... எம்.டி செய்த வேலை.."

"என்னது...?!"

கொதிப்புடன் அவன் நரேந்திரனைத் தேடிப் போன போது.. அவனும் சுரேந்திரனும் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்... சுரேந்திரனின் முகம் இறுகியிருந்தது..

"என் ரூமை யார் பூட்டியது..?" மகேந்திரன் கவனமாக 'அண்ணா' என்ற வார்த்தையைத் தவிர்த்து விட்டு மொட்டையாகக் கேட்டான்...

"ஏன்.. நான்தான் பூட்டினேன்...?" நிதானமாக பதில் சொன்னான் நரேந்திரன்..

"யாரைக் கேட்டுப் பூட்டினீங்க...?"

"யாரைக் கேட்கணும்..? சுரேந்திரனை மட்டும்தான் நான் கேட்கனும்.. அவன்தான் இந்த யோசனையையே சொன்னான்.."

"உனக்கு எவ்வளவு தைரியமிருந்தா இப்படியொரு வேலையைச் செய்ய யோசனை சொல்லியிருப்ப..?" மகேந்திரன் சுரேந்திரனின் மீது பாய்ந்தான்..

"சும்மா குதிக்காதீங்க அண்ணா.. முதலில் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்க.. உங்களுக்கு பேக்டரியில என்ன வேலை...?" சுரேந்திரன் அழுத்தம் திருத்தமாக கேட்டான்...

"அது.. அது..." மகேந்திரனுக்கு பேச்சு வரவில்லை..

"என்ன.. அது அதுன்னு ராகம் போடறிங்க...? பேக்டரிக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்..? இது எனக்கும்.. பெரியண்ணனுக்கும் உரிமையானது.. இங்கே உங்களுக்கும் யுகே அண்ணனுக்கும் உரிமையில்லை..."

"டேய்.. நேற்று வரை இந்த பேக்டரியின் ஜெனரல் மேனேஜரா நான் இருந்தவண்டா.."

"அந்தக் கொடுமையைத்தான் இந்தக் கணக்கு வழக்கு சொல்லுதே.. ஏன்னா.. உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே கிடையாதா...? இது நம்ம வீட்டு சொத்துக்கிற நினைப்பு உங்க மனசில இருந்திருந்தா.. இந்த அளவுக்கு நீங்க கொள்ளையடிச்சிருப்பீங்களா...? ஊரான் வீட்டுச் சொத்தை வாரிச்சுருட்டிக்கிட்டு ஓடுகிறவங்க செய்த வேலையைப் போலயில்ல செய்து வைத்திருக்கீங்க.. இதே நிலைமை கண்டினியூ ஆகியிருந்தா பேக்டரி திவாலாகியிருக்கும்..."

சுரேந்திரன் எதைக் கேட்டாலும் நேருக்கு நேராய்த்தான் கேட்பான்.. நரேந்திரனைப் போல முகத்தாட்சண்யம் பார்க்க மாட்டான்.. அவனின் அதிரடிக் கேள்விகளில் அரண்டு போன மகேந்திரன்..

"என்னை மட்டும் கேட்கறியே.. போய் மில்லை கொள்ளையடிச்சுக்கிட்டு இருக்கிற யுகேந்திரனைக் கேளு.." என்று சொல்லி விட்டான்...

"வெரி குட்.. ராஜா ராஜேந்திர பூபதியோட இரண்டு மகன்களும்.. அவர் கட்டிக் காப்பாத்தின சொத்துக்களை ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொண்டு

கொள்ளையடிக்கிறாங்க.. இதை வெளியில் சொல்லி விடாதீங்க.. நம்ம வம்சப் பெருமை கொடிகட்டிப் பறந்திடும்.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. உங்களுக்கும்.. யுகே அண்ணனுக்கும் உழைத்துப் பிழைப்பதில் விருப்பமே இல்லையா..? அடுத்தவர்களின் உழைப்பைச் சுரண்டி.. சுருட்டி.. கொள்ளையடித்து.. அதில் உட்கார்ந்து சாப்பிடத்தான் விருப்பமா..? எப்படியண்ணா...? நாம ஆறு பேரும்.. ஒரே தாயின் வயிற்றில்தானே பிறந்தோம்..? எங்க உடம்பில் மட்டும் நேர்மையாய் உழைத்துப் பிழைக்கும் ரத்தம் ஓடுது.. உங்க இரண்டு பேரின் உடம்பில் மட்டும்.. ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் ரத்தம் ஓடுதுன்னா என்னால நம்பவே முடியலையே..."

"சுரேன்.. நீ அதிகமாய் பேசற.."

"நீங்க செய்து வைத்திருக்கிற வேலைகளுக்கு நான் பேசுவது ரொம்பவும் குறைச்சல்.. யுகே அண்ணனை நான் ஏன் கேள்வி கேட்கணும்..? அது உங்க சொத்து.. நீங்களும் அவரும்தான் மில்லுக்கு சொந்தக்காரங்க.. நீங்கதான் போய் கேள்வி கேட்கனும்.. இது எங்க பேக்டரி.. இதில எனக்கும்.. பெரிய அண்ணனுக்கும் மட்டும்தான் உரிமையிருக்கு.. இங்கே கேள்வி கேட்க நீங்க வராதீங்க.. கெட் அவுட்.."

நரேந்திரனே.. சுரேந்திரன் 'கெட் அவுட்' என்று மகேந்திரனைப் பார்த்துச் சொல்லுவான் என்பதை எதிர்பார்க்கவில்லை.. சூழ்ந்திருந்த தொழிலாளர்களின் மத்தியிலே அந்த வார்த்தையை சுரேந்திரன் சொல்லி விடவும் மகேந்திரனின் முகம் பேயறைந்ததைப் போல ஆகிவிட்டது.. அவன் அவமானத்தில் முகம் சிறுத்துப் போனவனாக பேக்டரியை விட்டு வெளியேறி விட்டான்...

"இந்த அளவுக்குப் பேசியிருக்கனுமா..?" நரேந்திரனுக்கு மனம் தாங்கவில்லை...

"கத்தியெடுக்காமல் ஆப்பரேசனை பண்ண முடியாதுண்ணா.." சுரேந்திரன் தெளிவான முகத்துடன் புன்னகைத்தான்...

7

நதியோரம் நடந்த போது...

நாணலாக நாணம் கொண்டாய்...

வளைத்துப் பார்க்க முடியாமல்

தென்னையாக நிமிர்ந்து நின்றாய்...

-நதியோரம் நான் நடந்த போது-

"இப்படிப் பேசலைன்னா அவர் எந்தக் காலத்திலயும் பேக்டரியை விட்டுப் போகமாட்டார்.. எனக்கு அவரைத் தெரியும்.." அழுத்தமான குரலில் சொன்னான் சுரேந்திரன்..

அதற்கு மேல் அதைப் பற்றி அவர்கள் இருவருமே பேசிக் கொள்ளவில்லை.. மாலையில் வீடு திரும்பிய போது.. எரிதணலாய் சுரேந்திரனை எதிர்கெண்டாள் மீனலோசனி..

"எப்படி என் ஹஸ்பெண்டைப் பார்த்து அப்படிப்பட்ட வார்த்தையை நீங்க பேசலாம்...?" அவள் சீறினாள்...

"நான் பேசுகிறதைப் போல அவர் ஏன் நடந்து கொண்டார்...? அதை முதலில் கேளுங்கண்ணி.." அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னான் சுரேந்திரன்..

"எப்படி நடந்துக்கிட்டார்...? இத்தனை நாளாய் அவர் கட்டிக் காப்பாற்றிய பேக்டரியின் மேல் இருக்கிற பாசத்தில அங்கே வந்தார்.. ஏன் அவர் அங்கே வரக் கூடாதா...? அவருக்கு அந்த உரிமை இல்லையா...?" கொதித்தாள் மீனலோசனி..

"கட்டிக் காப்பாற்றினாரா...? அவரா...? பேக்டரியையா...? சும்மாயிருங்க அண்ணி.. அப்புறம் ஏதாவது சொல்லிடப் போறேன்.." சுரேந்திரனுக்கு எரிச்சல் வந்து விட்டது..

"சொல்லுவீங்களோ.." எரிப்பதைப் போல பார்த்தாள் மீனலோசனி

"ஆமாம்.. சொல்லுவேன்..." சுரேந்திரன் வெடித்தான்..

"என்ன சொல்வீங்க...?" சவால் விட்டாள் மீனலோசனி..

"அவருக்கு பேக்டரியில் என்ன உரிமையிருக்கு...? அதுதான் பாகப் பிரிவினையை செய்தாகிவிட்டதே.. அந்த பாகப் பிரிவினையையும் அவர்தானே கேட்டார்...? கேட்டவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு விலகி விட வேண்டும்தானே...?"

"எல்லாத்தையும் விட்டுக் கொடுத்திட்டு விலகிவிட அவர் என்ன உங்களைப் போல சொகுசாக வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்தாரா...? பேக்டரியில் உழைத்துக் கொண்டிருந்தார்..."

"நான் சொகுசாய் படித்தது என் பங்கு வருமானத்தில்தான்... உங்க ஹஸ்பெண்டின் உழைப்பில் வந்த வருமானத்தில் இல்லை.. நான் படிக்கத்தான் செய்தேன்.. அனாமத்து கணக்கை எழுதி நீலாங்கரையில் பங்களைக்களை வாங்கிப் போடலை.."

சரியான இடத்தில் சுரேந்திரன் அடித்து விட... மீனலோசனிக்கு பேச வாய் வரவில்லை.. அவளைப் பார்க்கப் பிடிக்காமல் சௌதாமைனியைப் பார்த்தான் சுரேந்திரன்..

"இதுக்கு என்னதாம்மா முடிவு...? பாகப் பிரிவினைன்னு ஆன பின்னாலே.. அவங்கவங்க அவங்கவங்க இடத்தில் இருந்தால்தான் வேலையும் நடக்கும்.. சொத்தும் நிலைக்கும்.."

சௌதாமினி எதையோ பேச வாய்திறக்க.. மீனலோசனி முந்திக் கொண்டாள்..

"நடந்த பாகப்பிரிவினை நியாயமாய் நடக்க வில்லையே அத்தை..."

"மில்லையும்.. பேக்டரியையும் சமமாக பிரித்துக் கொடுத்திருக்கிறார் பெரியண்ணா.. இதில் அநியாயம் எங்கிருந்தும்மா வந்தது...?"

"பேக்டரியில் என் ஹஸ்பெண்ட் உழைத்தார்.. மில்லில் சின்னவர் உழைத்தார்.. அவங்கவங்க உழைத்த இடத்தை அவங்களுக்கு கொடுப்பதுதான் நியாயம்ன்னு சொல்லுங்க அத்தை.."

"ஓ... கதை அப்படிப் போகிறதா...? அனாமத்தில் வாழ்ந்தவர்களுக்கு உழைத்துப் பிழைக்க எண்ணமில்லை போல.. அம்மா.. நீங்கள் பெற்றது நான்கு மகன்களையும் இரண்டு மகள்களையும்.. அவங்க இரண்டு பேரை மட்டுமில்லை.. சொல்லி வையுங்கம்மா.. மில்லையும் பேக்டரியையும் ஒட்டு மொத்தமாக இவங்க இரண்டு பேருக்கும் தாரை வார்த்துக் கொடுத்துட்டு.. நானும் பெரியண்ணனும் உடுத்தியிருக்கிற உடையோடு வெளியேறி விட வேண்டுமா..? நீங்க அதைத்தான் எதிர்பார்க்கறிங்களாம்மா...?"

சுரேந்திரனுக்கு கண்கள் சிவந்து விட்டன... அன்று பேக்டரிக்கு போகாமல் வீட்டிலேயே தங்கி விட்ட வித்யா மாடியிலிருந்து அப்போதுதான் இறங்கி வந்தாள்.. எதற்காக சுரேந்திரன் அந்த அளவிற்கு கோபப்படுகிறான் என்ற புரியாதவளாய் நரேந்திரனின் முகம் பார்த்தாள்.. அவன் இமைமூடி அவளிடம் அப்புறம் சொல்வதாக கண்சமிக்ஞை செய்தான்...

"மீனா என்னம்மா இது...?" சௌதாமினி கைகளைப் பிசைந்தாள்...

"நடந்திருக்கிற பாகப் பிரிவினையிலே எங்களுக்கு உடன்பாடில்லை அத்தை..." மீனலோசனி புருவங்களை நெரித்தாள்...

"நரேன்..." செளதாமினி பெரிய மகனை சரணடைந்தாள்..

அதுவரை பொறுமையாக நின்று கொண்டிருந்த நரேந்திரன் மனைவியை முடுக்கி விட்டுவிட்டு.. ஏதுமறியாதவனைப் போல அவள் பின்னால் மறைந்திருந்த மகேந்திரனைப் பார்த்தான் ..

வேடிக்கை பார்ப்பதைப் போல.. என்ன நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பை விழிகளில் தேக்கியபடி நின்றிருந்த பிரபாவதியையும் யுகேந்திரனையும் பார்த்தான்.. வளர்ந்து விட்ட மகன்களைக் கட்டுப்படுத்தும் வழியறியாதவளாய் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த தாயைப் பார்த்தான்..

"அவங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா.. இல்லையாங்கிறதைப் பற்றி எனக்குக் கவலை-யில்லைம்மா.. அப்பா என் பெயருக்கு பேக்டரியையும்.. மில்லையும் மாற்றியபோது அதை கிரயப்பத்திரமாகத்தான் மாற்றினார்.. இதை மத்தவங்க நினைவில் வைத்துக்கிறது நல்லது..."

"அப்படின்னா..?" வெகுண்டு முன்னே வந்தான் மகேந்திரன்..

மீனலோசனி நரேந்திரனிடம் பேச மாட்டாள் என்று இல்லை.. அவள் பேசத் தயங்குகிறவள் இல்லைதான்.. ஆனால்.. என்று அவள் மகேந்திரனின் மனைவியாக அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாளோ.. அன்றிலிருந்தே நரேந்திரன் அவள் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்ததில்லை.. அவளுடன் அவன் பேசவே மாட்டான்.. அது மீனலோசனிக்கு பெருத்த அவமானமாக இருந்தது.. அதனாலேயே அவள் மகேந்திரனை தமையனுக்கு எதிராகச் செயல்படும்படி தூண்டி விட்டுக் கொண்டேயிருந்தாள்...

மனைவியின் பின்னாலிருந்து முன்னால் வந்த மகேந்திரனை இகழ்ச்சியாகப் பார்த்தான் நரேந்திரன்..

"அப்படின்னா.. மில்லை நான் உங்க இரண்டு பேருக்கும் தந்தது.. உங்களுக்கும் அதில உரிமையிருக்- கிறது என்ற அர்த்தத்தில் இல்லை.. போனாப் போகுது.. கூடப் பிறந்து தொலைத்துட்டாங்களே.. அவங்களும் பிழைத்துப் போகட்டும் என்ற எண்ணத்தில்தான்னு அர்த்தம்..."

"அண்ணா..."

"கத்தாதே மகி.. உனக்கு வேணும்கிறதை கேட்டு வாங்க உனக்கு எந்த வித உரிமையுமில்லை.. நீ நினைக்கிறதைப் போல எங்களுக்கு எது வேணும்கிறதை முடிவு பண்ண எனக்கும் சுரேனுக்கும் உரிமையிருக்கு.. இன்னும் சொல்லப் போனா.. எங்களுக்குத்தான் அதிக உரிமையிருக்கு.."

"நீங்க உழைத்தாய் சொல்லிக்கிறிங்க.."

"சொல்லலை.. உழைத்தேன்.. அது இந்த உலகத்திற்கே தெரியும்.."

"ஓகே.. உழைத்தீங்கன்னே வைச்சுக்குவோம்.."

"வைத்துக்காதே.. உழைத்தேன்.. மில்லையும்.. பேக்டரியையும் கடனில் மூழ்கி விடாம காப்பாற்றினேன்.."

"இதையே எத்தனைதரம்தான் சொல்லுவீங்க...?"

"வாழ்க்கை முழுவதும் சொல்வேன்.. அப்படியாவது உன் தலையிலேயும்.. இங்கே இருக்கிற மத்தவங்க தலையிலேயும் அது ஏறுகிறதான்னு பார்ப்போம்.."

"காலம் பூராவும் இந்தப் பேச்சை நாங்க கேட்டுத்தான் ஆகனுமா..?"

"கேட்காதே.. வெளியே போய் விடு..."

"என்னது..? வெளியே போவதா..? எங்கே..?"

"உனக்குன்னு பாகம் பிரித்த உன் அம்பாசமுத்திர பங்களா இருக்கில்ல.. அங்கே போ.."

நரேந்திரன் பட்டென்று சொல்லி விட.. மகேந்திரன் ஆடிப்போய் விட்டான்.. யுகேந்திரன் எதையோ பேச வாயெடுத்தவன் அந்த வார்த்தைகளைக் கேட்டதும் வாயை இறுக மூடிக் கொண்டு விட்டான்.. மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

'இவன் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாம்..' யுகேந்திரனுக்கு கோபம்

வந்தது..

அவனும்.. மகேந்திரனும்.. அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த பங்களாக்களை வாடகைக்கு விட்டிருந்தார்கள்.. மகேந்திரனை மணி முத்தாறு வீட்டை விட்டுப் போகச் சொல்லி வார்த்தை வந்து விட்டது.. அந்த வார்த்தை யுகேந்திரனுக்கும் தானே...? மகேந்திரன் வீட்டை விட்டுப் போக வேண்டி வந்தால் யுகேந்திரனும் வெளியேறித்தானே ஆக வேண்டும்...?

"என்ன மகி.. பேசாம இருக்கிற...? பாகம் பிரித்துட்டால் மட்டும் போதாது.. அவங்கவங்க பங்கில இருந்து வாழப் பழகிக்கனும்.. இத்தனை நாளாய் நீயும்.. யுகேயும் உங்க வீடுகளுக்குத் தானாகவே குடித்தனம் போய் விடுவீங்கன்னு எதிர்பார்த்தேன்.. நீங்க செய்யலை..."

"பூர்ணிமாவின் கல்யாணம் வந்திருச்சுன்னு அம்மாதான் சொன்னாங்க.."

மகேந்திரன் சாமர்த்தியமாக சௌதாமினியின் பக்கமாக காயை நகர்த்தி விட்டான்.. பெற்றவளிடம் ஓங்கிப் பேச நரேந்திரன் யோசிப்பான் என்பது அவனுக்குத் தெரிந்ததுதானே... ஆனால் நரேந்திரன் சௌதாமினியின் பக்கம் திரும்பவே இல்லை.. அவன் புருவங்கள் மேலேற.. மகேந்திரனிடமே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்..

"பூரணியின் கல்யாணத்திற்கும்.. நீங்க தனிக்குடித்தனம் போகிறதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"வீட்டுக்கு வருகிற உறவுக்காரங்க.. என்னையும்.. யுகேயையும் எங்கேன்று கேட்பாங்கன்னு அம்மா சொல்லிட்டாங்க..."

"கேட்டால் என்ன..? பாகப்பிரிவினை செய்தாகி விட்டது.. தனிக்குடித்தனம் போயாச்சுன்னு சொல்ல வேண்டியது தானே.."

"ராஜா ராஜேந்திர பூபதியோட வாரிசுகள் ஆளுக்கொரு பக்கமாய் சிதறிப் போயிட்டாங்கன்னு ஊர் சொல்லனுமான்னு அம்மா கேட்டாங்க.."

சௌதாமினி அப்படியெல்லாம் கேட்கவில்லை.. பெரிய மகனின் அமைதியை மட்டுமே அவள் நினைத்தாள்.. வேறு எதையும் நினைக்கவில்லை.. அவள் நினைக்காததை யெல்லாம் அப்போது நினைக்க வைத்து விட்டான் மகேந்திரன்.. கணவரின் பெயரைக் கேட்டதும் சௌதாமினியின் இமைகள் துடித்ததை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டான்..

அவனின் யுக்திகளில் நரேந்திரன் பல்லைக் கடித்தான்.. "அந்த ராஜா ராஜேந்திர பூபதியோட இரண்டு மகன்கள் தான் பாகப்பிரிவினைக்கு மாமனார் வீட்டை வரவழைத்திருந்தாங்கன்னு அம்மாவுக்குத் தெரியாதா...? அதை ஊர் பேசும்ன்னு அந்த இரண்டு மகன்களுக்குத்தான் தெரியாதா...?"

சௌதாமினியின் துடித்த இமைகள் சரியாகி விட.. மகேந்திரன் வெற்றிகரமாக தோல்வியைத் தழுவினான்.. 'என்னடா இது.. இவன் வீட்டை விட்டும் வெளியேற்றி விடுவான் போல இருக்கே...' கவலையுடன் மனைவியைப் பார்த்தான்..

அவள் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடித்தன..

8

நதியோரம் நடந்த போது...

நதிநீரின் சுழல் கண்டேன்...

சிந்தா நதிச் சுழலிலே..

சிக்கிக் கொண்டேன்.. இனி என்ன ஆவேன்..?

-நதியோரம் நான் நடந்தபோது-

மீனலோசனிக்கும் சரி.. பிரபாவதிக்கும் சரி.. மணி முத்தாறு அரண்மனையை விட்டு வெளியேறுவதில் துளிக்கூட விருப்பமில்லை.. என்னதான் அம்பாசமுத்திரத்தில்

அவர்களுக்கென்று கொடுக்கப் பட்டிருந்த பங்களாக்கள் ஆடம்பரமானதாகவும்.. அழகாகவும் இருந்தாலும்.. அவை மணிமுத்தாறு அரண்மனையின் காம்பவுண்டு கேட்டிற்குப் பக்கத்தில்

கூட நிற்க முடியாது என்பதை அவர்கள் நன்றாகவே அறிவார்கள்..

இவ்வளவு ஏன்...? மகேந்திரனும் சரி... யுகேந்திரனும் சரி.. சென்னையில் ஆளுக்கு இரண்டு பங்களாக்களை வளைத்துப் போட்டிருந்தார்கள்.. அங்கே குடியேறச் சொன்னாலும்.. அவர்களின் மனைவிகள் இசைந்து கொடுக்க மாட்டார்கள்..

மணி முத்தாறு அரண்மனையும் அதன் வாழ்க்கை முறையும் அவ்வளவு பிரசித்தி வாய்ந்தது..

பல ஏக்கர் பரப்பளவில்.. சுற்றிலும் பூங்காக்களும்.. நீச்சல் குளமும் அமைந்திருக்க.. நடுவில் வெண் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்த அரண்மனை அது..

அங்கே வேலை செய்தவர்களுக்கு அந்த ராஜ குலத்தவரின் பரம்பரைப் பெருமையைப் பற்றி நன்றாகவே தெரியும்.. அவர்கள் அந்த அரண்மனையில் வேலை செய்வதில் பெருமைப்படுகிறவர்கள்..

சென்னையிலும்.. அம்பாசமுத்திரத்திலும்.. அந்தப் பரம்பரைப் பெருமையை எதிர்பார்த்து விட முடியாது...

"இந்தா பாரும்மே.. வேலைக்காரின்னா உனக்கு அம்புட்டு இளக்காரமா பூடுச்சா.. மரியாதையாய் பேசிப் பழகு.." என்று அவர்களுக்கே பழக்க வழக்கத்தைக் கற்றுக் கொடுத்து விடுவார்கள் சென்னை வாசி வேலையாள்கள்..

"உன் ஒரு வீடுதான் அபூர்பமா..? வேலைக்கு ஆள் வேனும்னு தன்னாலே ஜனங்க அல்லாடிக்கிட்டு கிடக்குது.. இஷ்டம்ன்னா வேலைக்கு வரேன்.. இல்லேன்னா

வேற வீட்டைப் பார்த்துக்கறேன்.. நீயும் வேற ஆளைப் பார்த்துக்க.." என்று அன்றே கணக்கை முடித்துக் கொண்டு

இடத்தை காலி செய்து விடுவார்கள் அம்பாசமத்திர வேலையாள்கள்..

அவர்களிடம் மணி முத்தாறு அரண்மனையில் வேலை செய்யும் வேலையாள்கள் தரும் மரியாதையையும்.. பணிவையும் எதிர்பார்த்து விட முடியாது..

அரண்மனைக்கு ராணியாக.. பளிங்கு மாளிகையில் வாழ்வது எப்படி...? சாதாரண பங்களாவில் பத்தோடு பதினொன்றாக வாழ்வது எப்படி...?

அதற்காகவா.. மீனலோசனியும்.. பிரபாவதியும்.. தவமாய் தவமிருந்து.. மணி முத்தாறு அரண்மனையின் வாரிசுகளின் மனதில் இடம் பிடித்து... அந்த அரண்மனையின் மருமகள்களாக வந்தார்கள்...?

மீனலோசனி பல்லைக் கடித்தாள்.. பிரபாவதி புருவங்களை நெறித்தாள்.. மனைவிகளின் மௌன யுத்தத்தை தாங்க முடியாதவர்களாக.. மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. சௌதாமினியிடம் முறையிட்டார்கள்..

"என்னம்மா.. நீங்க நடக்கிறதையெல்லாம் பார்த்துக்கிட்டும்.. கேட்டுக்கிட்டும் பேசாம இருக்கீங்க..?"

"என்ன பேச மகி..? உன் அண்ணன் சொல்வதும் நியாயம்தானே...?"

"அந்த நியாயம் மகி அண்ணனுக்கு மட்டும்தானா அம்மா...? சுரேனுக்கு இல்லையா...?"

"அவனுக்கு கல்யாணம் ஆகவில்லை யுகே.. அதை நினைப்பில வைக்காம பேசினா எப்படி...?" சௌதாமினிக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது..

"தெரியும்மா.. உங்களுக்கு சின்ன மகன்தான் செல்லமகன்.. நானும்.. மகியண்ணாவும் தத்து மகன்கள்.. மகியண்ணா.. நீ உன் குடும்பத்துடன் கிளம்பு.. பிரபா.. நம்ம சாமான்களை பேக் பண்ணு.. நாமும் கிளம்புவோம்.. இது அப்பா வாழ்ந்த வீடு.. இந்த வீட்டில் அவர் பெற்ற பிள்ளைகளுக்கு மத்தியிலேயே பாரபட்சம் வந்து விட்டது.. அவர் வாழ்ந்த

வீட்டிலேயே கடைசி வரைக்கும் நாமளும் வாழலாம்ன்னு நினைச்சோம் பாரு... அது நடக்காது போல.. நீ கிளம்பு.."

இதைச் சொன்ன யுகேந்திரனும் அசையவில்லை.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த மகேந்திரனும் அசையவில்லை.. அவர்களே அப்படியெனும் போது.. அவர்கள் தாலி கட்டிய மனைவிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. யாருக்கு வந்த விருந்தோ என்பதைப் போல.. அவர்கள் கைவிரல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

சௌதாமினிக்கு மனம் தாளவில்லை.. அவள் பெற்ற பிள்ளைகள் தனிக்குடித்தனம் போவதா...? அதை அவள் பார்த்துக் கொண்டிருப்பதா...? மனம் துடிக்க பெரிய மகனை ஏறிட்டாள்..

"நரேன்..."

"அம்மா.."

"குருவிக் கூட்டைக் கலைச்சிராதேப்பா..."

நரேந்திரனுக்கு மனம் தாங்கவில்லை.. கடைசியில் எப்பேற்பட்ட வார்த்தைகளை அவனைப் பார்த்துச் சொல்லி விட்டாள் அவனைப் பெற்ற தாய்...

இதற்காகவா அவன் இத்தனை வருடமும் போராடினான்...?

"கூட்டைக் கலைச்சது நானில்லைம்மா.. அது தானாய் கலைஞ்சிருச்சு..."

"போனதை விடு நரேன்.. என் காலமிருக்கிற வரை என் பிள்ளைகள் என் கூடவே இருக்கனும்னு நான் ஆசைப்பட்றது தப்பாப்பா...?"

அது தப்பு என்று நரேந்திரனால் எப்படிச் சொல்ல முடியும்..? அவனுக்கு மட்டும்.. அவன் கூடப் பிறந்த தம்பிகளை குடும்பத்துடன் வெளியே துரத்த வேண்டுமென்ற ஆசையா...?

'ஆனால்...?' அவன் பார்வை வித்யாவின் மீது படிந்தது...

அவனின் காதல் மனைவியை அந்த வீட்டிற்கு உரிமையில்லாதவளாக மீனலோசனியும்.. பிரபாவதியும் ஆக்கி விடுவார்களே.. அதை அவனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா..?

'முடியாது...' ஒரு கணவனாக அவன் மனம் கடினமானது..

"அம்மா.. இது பாகப் பிரிவினையில் என் பங்குக்கு வந்த வீடில்லை.. அப்பா என் பெயருக்கு எழுதி வைத்தது.. இது பரம்பரை வீடாக இருக்கலாம்.. ஆனா.. ஒன்னை நீங்க எல்லோரும் நினைவில் வைத்துக்கங்க.. இந்த அரண்மனையின் பேரிலயும் பலகோடி கடன் இருந்தது.."

"நரேன்..." செனதாமினி அதிர்ச்சியாகி விட்டாள்..

"ஆமாம்மா.. இத்தனை நாளாய் இந்த உண்மையை நான் வெளியே சொல்லலை.. கடனை அடைத்து இந்த அரண்மனையை நான் மீட்டேன்.. இந்த அரண்மனையின் மேலே எனக்கு மட்டும்தான் பரிபூரணமான உரிமையிருக்கு.. குடியிருக்கிற அரண்மனை வாழ்க்கையில சொந்தம் கொண்டாடுகிறவங்க.. அந்த அரண்மனை ஒரு காலத்திலே கடனில் பறிபோக இருந்தது.. என்பதையும் தெரிஞ்சு வைச்சுக்கட்டும்.. இது என் அரண்மனை.. என்னைப் பெற்ற தாய்க்கும்.. கட்டின மனைவிக்கும்.. எனக்குப் பிறக்கப் போகிற பிள்ளைகளுக்கும் மட்டும்

தான் காலம் பூராவும் இந்த அரண்மனையில் வாழ்கிற உரிமையிருக்கு... மத்தவங்க இருக்கலாம்.. அது விருந்தாளியாகத்தான்.. வீட்டுக்கு உரிமையானவங்களா இல்லை.." நரேந்திரன் முடிவாகக் கூறி விட்டான்..

சூடு.. சொரனை இருக்கிறவர்கள் என்றால் நரேந்திரனின் பேச்சைத் தாங்க முடியாமல் அந்த நொடியிலேயே வீட்டை விட்டுப் போயிருப்பார்கள்.. மீனலோசனியும்.. பிரபாவதியும்தான் அதை கிலோ என்ன விலை என்று கேட்பார்களே.. பிரபாவதி கூட கொஞ்சம் ரோசம் பார்ப்பாள்.. மீனலோசனி அசைந்தே கொடுக்க மாட்டாள்.. வெட்டி ரோசத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கையை ஒட்ட

முடியுமா.. என்று கேட்பாள்.. அவளைப் பார்த்து பிரபாவதியும் வருகின்ற ரோசத்தை திருப்பி அனுப்பி விடுவாள்...

மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ராஜா ராஜேந்திர பூபதியின் பிள்ளைகள்.. அவர்களுக்கு 'சுரீர்' என்றுதான் இருந்தது.. சொந்த வீடாக நேற்று வரை இருந்த வீட்டில்.. இன்று முதல் நீ விருந்தாளியாகத்தான் இருந்தாக வேண்டும் என்றால் எந்த மகன்தான் கேட்டுக் கொள்வான்..

'கிளம்பு...' என்று சொல்லத்தான் இருவரும் அவரவரின் மனைவிகளின் முகம் பார்த்தார்கள்.. அதில் தெரிந்த கடுமையில் சொல்ல நினைத்த வார்த்தை.. சொல்லாமலே தொண்டைக் குழிக்குள் நின்று போய் விட்டது..

"அப்படியே.. நாடகம் பார்ப்பதைப் போலவே இருக்கு.." சுரேந்திரன் தோள்களைக் குலுக்கினான்...

நரேந்திரனுக்கு சிரிப்பு வந்தது.. ஆனால் சிரிக்கவில்லை..

"உலகமே நாடக மேடைன்னு சும்மாவே அறிஞர் அண்ணா சொன்னார்...?" தாயைப் பார்த்துக் கேட்டான் சுரேந்திரன்..

நரேந்திரனைப் போல சௌதாமினியால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் வாய் விட்டுச் சிரித்தபடி இளைய மகனின் காதைப் பிடித்துத் திருகினாள்..

"இதையெல்லாம் எங்கேயிருந்துடா பிடிப்ப...?"

"படிச்சதில் இருந்து பிடித்ததுதான்.. எப்படியோ.. பாகப்பிரிவினையில் கிடைத்த வீட்டிற்கு இவங்க இரண்டு பேரும் குடித்தனம் போகப் போறதில்லை..."

"உன் கல்யாணம் இருக்குடா சுரேன்.."

"எங்கேம்மா.. இருக்கு.. வாசலிலா...?"

"போடா போக்கிரி.. உனக்குப் பெண் கொடுக்க வருகிறவங்க.. நம்ம அரண்மனையின் ஒற்றுமையைத்தான் பார்க்கணும்.."

"அது பொய்யான ஒற்றுமைம்மா.. எங்க மனதுக்குள்ள வேற்றுமை ஆரம்பித்து வெகு காலமாகி விட்டது.."

"யார் வீட்டில்தான் பிரச்னை இல்லை...? வீட்டுக்கு வீடு வாசல்படிதான் சுரேன்.."

"இது வீடில்லைம்மா.. அரண்மனை.."

"உன் கல்யாணம் முடிகிற வரை குடும்பம் உடைய வேண்டாம்.. சுரேன்.."

"அது குடும்பத்தோட நிற்கட்டும்.. பேக்டரிபக்கம் வந்துவிடக் கூடாது.. எனக்கென்ன போச்சு.. தினம்தினம் இந்த நாடகங்களைப் பார்க்க வேண்டிய தலைவிதி எனக்கில்லை.. நான் அடுத்த வாரமே பாரினுக்குப் போறேன்.."

"எதுக்குடா....?"

"விட்ட படிப்பை முடிக்கத்தான்.. இங்கே என் சார்பா பெரியண்ணனும்.. பெரியண்ணியும் பேக்டரியைப் பார்த்துக்குவாங்க.. அதை மீறி பேக்டரியில் யாராவது கால் வைத்தாங்கன்னு வையுங்க.. சும்மாயிருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்.. எனக்கு என் பங்கு சொத்து முக்கியம்.. நான் பெரியண்ணனைப் போல தியாகியில்லை.."

"என்னடா சுரேன் இப்படிப் போசற...?"

"இவங்க இரண்டு பேரும் தெளிவானவங்கம்மா.. பாகப்பிரிவினையில வந்த வீட்டை உடனடியா கைப்பற்றி வாடகைக்கும் விட்டுட்டாங்க.. ஆனா.. பெரியண்ணனின் பங்கான இந்த அரண்மனையை விட்டு வெளியே போக மாட்டேங்கிறாங்க.. இது என் பங்குக்கு வந்திருக்கணும்.. அப்போத் தெரியும்... இந்த சுரேந்திரன் யாருன்னு..."

9

நதியோரம் நடந்த போது

வாழ்க்கையைத்தான் நான் நினைத்தேன்..

நாடகமாய் வாழ்க்கை ஆனால்..
வாழ்வதெப்படி? அதை யோசித்தேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

'நல்ல வேளை...!'

மீனலோசனி நினைத்துக் கொண்டாள்... சுரேந்திரனின் பங்குக்கு மட்டும் அரண்மனை வந்திருந்தால்...?

"நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குது பிரபா.."

மறுநாள் விடியலில் பிரபாவதியிடம் சொன்னாள்..

"நினைக்காதீங்க.. அந்த அளவுக் கெல்லாம் எனக்குத் துணிச்சலில்லை.. அவன் கைக்கு அரண்மனை போயிருந்தால் அவ்வளவுதான்.. உங்களுக்கும்.. எனக்கும்.. இந்த மணிமுத்தாறு அரண்மனையில் வாழ்ந்த நாள்கள்.. மலரும் நினைவுகளாக ஆகியிருக்கும்..."

"அதைச் சொல்லு..."

"எந்தக் கடவுளின் புண்ணியமோ இது பெரியவரின் கைக்கு வந்தது..."

"நம்ம கைக்கு வரலியே..."

மீனலோசனி வயிறெரிந்தாள்.. உனக்கு அந்த ஆசை வேறு மனதில் இருக்கிறதா என்று பிரபாவதி மனதில் நினைத்துக் கொண்டாள்.. எது எப்படியோ.. சுரேந்திரன் என்னதான் நறுக்கென்று மனதில் தைக்கிறதைப் போலக் கேட்டாலும்.. வயதில் சின்னவன் இப்படிக் கேட்டு விட்டானேயென்று வீட்டை விட்டு வெளியில் கிளம்ப.. மீனலோசனியும்.. பிரபாவதியும் தயாராக இல்லை..

"இவனென்ன சொல்வது.. நாமென்ன கிளம்புவது.." என்று பிரபாவதியிடம் கேட்டாள் மீனலோசனி..

"அதானே..." என்ற பிரபாவதி அத்துடன் நிறுத்தாமல்

"இதை அவனிடமே சொல்லியிருக்கலாமேக்கா..." என்று வேறு சேர்த்து கேட்டு வைத்தாள்...

மீனலோசனிக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"ஆமாம் பிரபா.. இதை அவனிடம் கேட்டு விட்டு வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் நான் பிறப்பெடுத்திருக்கிறேன்.. என்னை முன்னால் விட்டு.. பின்னால் குளிர் காய்த்தான் நீ பிறப்பெடுத்திருக்கிறாய்.." என்ற பதிலுக்கு கேட்டு விட்டாள்...

"என்னக்கா இப்படிக் கேட்டுட்டிங்க.. நாங்க என்ன பட்டுக்காமலா இருக்கோம்...?" பிரபாவதி போர் கொடியை உயர்த்தினாள்..

"பின்னே...? இல்லையா...?" ஒன்றை வார்த்தையில் பிரபாவதியின் போர்க் கொடியை கீழிறங்க வைத்தாள் மீனா.

"என்னதான் இருந்தாலும்... நீங்க விவரமானவங்க.. உங்க விவரம் எனக்குச் சுட்டுப் போட்டாலும் வருமாக்கா...?"

வினயத்துடன் பேசிய பிரபாவதியின் வார்த்தைகளில் ஏதும் மறைபொருள் மறைந்திருக்கிறதோ என்ற சந்தேகம் மீனலோசனிக்கு வந்தது..

பிரபாவதி அப்படிப் பேசுகிறவள்தான்... என்ன தான் மீனலோசனியுடன் பின்னிப் பிணைந்தாலும்.. நரேந்திரனை மணக்க இருந்து.. மகேந்திரனை கணக்குப் பண்ணி மணம் முடித்தவள்தானே என்று மீனலோசனியைப் பற்றி ஒரு எண்ணம் பிரபாவதியின் மனதில் என்றுமே உண்டு.. அந்தச் சாமர்த்தியத்தை வியக்காமல் இருக்க அவளால் முடிவதில்லை.. அதை வெளிப்படையாகச் செய்துவிட அவளால் முடியுமா..? அதனால் கிடைக்கும் வாய்ப்புகளில் மறைமுகமாக அதைப் புகழ்ந்து விடுவாள்... என்ன ஒன்று அந்த வஞ்சகப் புகழ்ச்சியை மீனலோசனி உடனே அறிந்து கொண்டு

விடுவாள்.. அதைப் பற்றி பிரபாவதி அலட்டிக் கொள்வதே இல்லை..

'யாரு இவ...? இவளுக்குத் தெரியாமல் இருக்குமா...?'

மனதில் எள்ளளுடன் நினைத்துக் கொள்வாள்... அதை அவள் விழிகள் பிரதிபலித்தாலும்.. ஏதும் அறியாதவள் போல பவ்யமாக...

"என்னக்கா...?" என்று மீனலோசனியிடம் வினவ வேறு செய்வாள்...

அவள் என்னவென்று சொல்லுவாள்...? பிரபாவதியுடன் மோதவும் அவளால் முடியாது..

வித்யாவை வெளியே விரட்ட பிரபாவதியின் கூட்டணி தேவைப் படுகிறதே..

'ம்ஹீம்.. இரண்டு கைகள் நான்கானால் தான் எதையாவது செய்ய முடியும்.. இவளை முறைச்சுக்கிட்டு நம்மாலே இந்த அரண்மனையில் காலம் தள்ள முடியாது.. நமக்கு ஒரு சொந்தம்.. இவளுக்கு இவளோட அண்ணனுக்கு இந்த வீட்டில் பிறந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால் இரண்டு சொந்தம்.. அசைக்க முடியாதவ.. இவளைப் பகைச்சுக்கிறது புத்திசாலித்தனமில்ல...'

மீனலோசனிதான் விவரமானவள் ஆயிற்றே.. அவள் பிரபாவதியின் கேலியை கண்டும் காணாததும் போலப் போனாள்.. அதெல்லாம் அவளால் முடிந்தது.. வித்யாவினால்தான் முடியாமல் போனது..

வித்யா எதையும் நேருக்கு நேராகப் பேசிப் பழகியவள்.. இரு பொருள்படப் பேசியறியாதவள்.. அவளால் மீனலோசனியும்.. பிரபாவதியும் பேசிய ஜாடைப் பேச்சுக்களை அவர்களின் பாணியிலேயே எதிர் கொள்ள முடியவில்லை.. ஆனால் அதைக் கண்டு கொள்ளாமல் போக முடிந்தது..

வித்யாவின் அருகே நரேந்திரன் இல்லாத சமயங்களில் மீனலோசனியின் ஜாடைப் பேச்சு கொடி கட்டிப் பறக்கும்.. பிரபாவதி பேச மாட்டாள்.. பேசினால் அது பிரகாஷின் காதுகளுக்குப் போய் விடுமோ என்ற பயம்.. அவனே அவளுக்கு ஒற்றை அண்ணன்.. அவனுடைய ஒற்றை மனைவியான பூர்ணிமாவோ வித்யாவின் உயிர் தோழி.. அதனால் அவள் பேசாமல் மீனலோசனியை பேச விட்டு சுவரஸ்யமாக வேடிக்கை பார்ப்பாள்..

"ஏன் பிரபா...?"

"என்னக்கா...?"

"உன் கல்யாணத்துக்கு போட்ட வைர அட்டிகையை எங்கே வாங்கினாங்களாம்..?"

"அது வாங்கியதில்லைக்கா..."

"பின்னே...?"

"செய்ததாம்..."

"அப்படின்னா...?"

"என்னக்கா.. தெரியாததைப் போல கேட்கறிங்க.. அது பரம்பரையாய் வந்த நகைக்கா... உங்ககிட்டயும் அப்படி நகைகள் இருக்கே..."

"இருக்குதுதான்..."

"அப்புறமும் எதுக்கக்கா இந்தச் சந்தேகம்...?"

"பரம்பரையாய் வைரநகைகளைக் கட்டிக் காப்பாத்தி பெத்த மகளுக்கு பூட்டி விடுகிற பரம்பரையில் நீயும் நானும் பிறந்திருக்கோம்.. நமக்கு ராஜா ராஜேந்திர பூபதியோட பரம்பரையில மருமகள்களாக வருகிற தகுதியிருக்கு.. இது ஒன்னுமேயில்லாத ஜென்மங்களுக்கெல்லாம் என்ன தகுதியிருக்குன்னு இந்த அரண்மனையில சொந்தம் கொண்டாடறாங்க..?"

மீனலோசனியின் கேள்விக்கு பிரபாவதி சிரித்து வைக்க.. வித்யாவுக்கு பேசாமல் போக மனம் வரவில்லை.. நின்று

திரும்பிப் பார்த்தவள் கழுத்தில் கிடந்த தாலியைத் தூக்கிக் காண்பித்தாள்...

"இந்தத் தகுதியிருக்கு..."

பட்டென்று சொல்லி விட்டு அவள் போய் விட மீனலோசனிக்கு வயிறு எரிந்தது...

"இவளை உள்ளே வரவிட்டது மகாப் பெரியதப்பு பிரபா..."

"என்னவோ.. நான்தான் அவளுக்கு வெற்றிலை.. பாக்கு வைத்து... ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ள அழைத்ததைப் போல இல்ல பேசறிங்க.. உங்களையும் என்னையும் கேட்டா இந்தக் கல்யாணம் நடந்தது...?"

"பெரியவரும்... சின்னவனும் அடிச்சுக்குவாங்க.. இவ இரண்டு பேருக்குமே இல்லாம ஓடிப் போயிருவான்னு கணக்குப் போட்டா... என் கணக்கு தப்பாப் போச்சே பிரபா.."

"எப்பவுமே நீங்க போடற கணக்கே ஜெயிக்காதுக்கா.. சில சமயம் கணக்கு மாறிப் போவதும் நடக்கும்..."

பிரபாவதி வழக்கம் போல மறைபொருளில் தாக்கினாள்.. மீனலோசனி மனதிற்குள் வெகுண்டாலும் விடாமல் தன் தாக்குதலைத் தொடர்ந்தாள்...

"இது அரண்மனை.. இங்கே மருமகளாக வருகிறதுக்கும் ஒரு தகுதியிருக்கனும்..."

விடாமல் தகுதியை நினைவூட்ட அவள் முயன்ற போது வித்யா ஒருநாள் சரியாக திருப்பிக் கேட்டு விட்டாள்..

"ஒருத்தரை மனதில் நினைத்துக்கிட்டு.. அடுத்தவர்களுக்கு கழுத்தை நீட்டத் துணியாத தகுதியிருந்தால் போதாதா...?"

இதற்கு மீனலோசனி என்ன பதிலைச் சொல்லுவாள்...?

நதியோரம் நடந்த போது

தொலைவினிலே தொடுவானம்...

தொடுவான நிழல் கண்டு...

தொட்டுவிட மனதில் எண்ணம்...

நதியோரம் நான் நடந்த போது...

காலைப் பனியில் நனைந்த மலர்களைக் காணும் போது மனதில் புதுவிதமான உற்சாகம் பரவுவதை உணர்ந்தான் நரேந்திரன்.. மெலிதான விசிலுடன் பக்கத்தில் நடந்து வந்த வித்யாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தாள்.. அந்தப் பார்வையை இனம் கண்டு கொண்ட வித்யா முகம் சிவந்தாள்.. லேசான தடுமாற்றத்துடன் நிலம் பார்த்தவள்..

"என்ன...?" என்று கேட்டாள்...

"என்ன... என்ன...?" ஒன்றுமறியாதவனைப் போல அவன் கேட்டாள்..

'கள்ளன்...!'

அவன் குறும்பை ரசித்தாள் வித்யா.. முதன் முதலாக அவள் நேரடியாகப் பார்த்தபோது நரேந்திரன் அவளைப் பார்த்த பார்வைக்கும்.. இப்போது பார்க்கும் பார்வைக்கும் இடையிலிருந்த வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தவளுக்கு ஆச்சரியம் உண்டானது..

'இது எப்படி சாத்தியமானது..?'

அவளுக்குள் பிரமிப்பு எழுந்தது.. அவள் தொட்டுவிட முடியாத வானத்தைத் தொட்டு விட

மனதில் ஆசை கொண்டாள்.. அவனோ ராஜகுமாரன்... ராஜா.. அந்த அரசனின் மீது ஆசைப்பட்ட அவள் ஒரு சாமானியப் பெண்.. தாயில்லாத ஏழை.. தகப்பனிருந்தும் அவளது பிறந்த வீட்டில் அகதியாக்கப் பட்டவள்.. இருக்க

இடமில்லாத.. படிக்க வழியில்லாத அநாதை.. உழைத்துப் பிழைத்து படித்தவள்...

அவள் எட்டாக் கனியான அவன் மீது காதல் கொண்டாள்.. அவன் தொட்டு விட முடியாத இமயம் போன்றவன் என்பதை அறிந்திருந்தும் அவன் மேல் ஆசை கொண்டாள்.. அந்தக் காதலையும் ஆசையினையும் மனதில் பூட்டி வைத்திருந்த அந்த பேதைப் பெண்ணின் கனவு ஒருநாள் நனவானது.. நிழலாக அவள் மனதில் வந்தவன் நிஜமாக அவள் சொந்தமாக ஆனான்..

வித்யாவின் உடலில் பட்டு அழுந்திய தாலிச்செயினை அவளின் விரல் அன்புடன் பற்றி வருடியது.. இதைத் தந்தவன் அவள் மனதில் ஆராதித்த அவளுடைய நரேந்திரன் என்ற நினைவில் அவள் மனதில் பிரியம் பொங்கியது..

அவளது செய்கையைக் கவனித்துக் கொண்டிருந்த நரேந்திரனின் புருவங்கள் உயர்ந்தன.. அவளைத் துளைப்பதைப் போலப் பார்த்தவனின் பார்வை அவளின் மனதைப் படிக்க முயன்றது..

"என்னடி...?"

"ஒன்.. ஒன்னுமில்லையே..." வித்யா தடுமாறினாள்..

"ஒன்னுமில்லாததுக்கா இத்தனை தடுமாற்றம்...? ஊம்..?" அவன் உல்லாசமாகச் சிரித்தான்...

"ஒன்னுமில்லைன்னா.. ஒன்னுமில்லைதான்.." வித்யா அவன் முகம் பார்க்க முடியாமல் முகம் சிவந்தாள்..

நரேந்திரனின் மனதில் அவள்... மீதான காதல் பெருகியது.. அவனது ஒரு சிறு பார்வையில் மயங்கித் தலை குனியும் அவளின் மயக்கம் அவன் மீதானது என்பதில் அவனுக்குள் கர்வம் உண்டானது.. அவளுடன் அவன் கூடியிருந்த பொழுதுகளை அவன் நினைத்துப் பார்த்தான்.. அவன் மீதான பிரியத்தை அவள் வெளிப்படுத்திய அந்தத் தருணங்களை நினைத்துப் பார்த்தான்.. அவளது

பிரியத்தின் வேகத்தில் மூச்சுத்திணறிய போது அவன் உள்ளம் நிறைந்த வினாடிகளை நினைத்துப் பார்த்தான்..

'இது தான் காதல்...' அவனுக்குள் அவள் மீதான வாத்சல்யம் அதிகரித்தது..

"பார்த்த முதல் நாளே - உன்னைப்

பார்த்த முதல் நாளே..."

வித்யாவுக்கு பாட வேண்டும் போலத் தோன்றிவிட அவள் மெலிதான குரலில் பாடினாள்...

அன்றைய விடியல் அவளுக்குப் பிடித்தமானதாக அமைந்திருந்தது.. காலை நேர உலாவலுக்கு எழுந்தவளை எழுந்து கொள்ள முடியாமல் நரேந்திரன் கரம் இழுத்து அணைத்துக் கொண்டதில் அவளுக்குள் ரம்யம் உருவாகியிருந்தது.. குளித்த பின் தோட்டத்தில் நடக்கக் கிளம்பியவளுடன் கூடவே அவனும் நடக்க வந்ததில் அவள் மனதின் ரம்யம் அதிகமானது.. தோட்டத்து மலர்களின் பனியில் நனைந்த இதழ்கள் அதை மேலும் அதிகரிக்க வைத்தது.. போதாக் குறைக்கு அவளுடைய நரேந்திரனின் ரகசியப் பார்வை அவளை எங்கோ அழைத்துச் சென்றது.. அவனை நேரடியாய் பார்த்த முதல் நாளை நினைத்தபடி அவள் மெல்லப் பாட ஆரம்பித்தாள்...

"காட்சிப் பிழை போலவே - உணர்ந்தேன்

காட்சிப் பிழை போலவே..."

நரேந்திரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளின் காதல் மழையில் நனைந்தவனால் அந்தப் பாடலின் பொருளுக்குள் புதைந்து கொள்ள முடிந்தது..

"ஓர் அலையாய் மாறி

எனை அடித்தாய்...

கடலாய் மாறி

எனை இழுத்தாய்...

என் கனாவில் கூட உன் முகம்

உன் முகம்.. என்றும் மறையாதே..."

'உண்மை தான்...' நரேந்திரன் நினைத்துக் கொண்டான்..

'இவளின் கனவிலும் நான்தான்.. இருப்பேன்...'

அந்த நிச்சயத்தில் அவனின் நெஞ்சம் நனைந்தது.. இப்படியொரு காதலை அவன்மேல் வைத்திருக்கும் வித்யாவினால் அவனைத் தவிர வேறு ஒருவனின் கரம் பிடிக்க முடிந்திருக்குமா...?

'முடியாது...' உறுதியுடன் அவன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான்..

அவனைத் தவிர வேறு ஒருவனை அவள் மனதாலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்..

நரேந்திரனின் மனதில் கார்த்திகாயினி தேவியின் நினைவு வந்தது...

அவளும் அவனைக் காதலிப்பதாகத்தான் சொல்லிக் கொண்டாள்.. அதற்கு முன்னால் அவனும் அவளைப் போல ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்தானா என்பதை உறுதி செய்து கொண்டாள்..

'ஒரு வேளை.. நான் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவனாக இல்லாமல் இருந்திருந்தால்...?'

நிச்சயமாக நரேந்திரனிடம் அவள் காதல் சொல்லியிருக்க மாட்டாள்.. இதை நரேந்திரன் அறிவான்..

கார்த்திகாயினியின் மனதில் வம்சப் பெருமை உண்டு.. அதைத் தாண்டி மற்ற எதையும் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாள்.. நரேந்திரன் மணி முத்தாறு ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. பார்க்க அழகாக.. கம்பீரமாக இருந்தான்.. வெளிநாட்டில் படித்தான்...

இந்தக் காரணங்களினால் மட்டுமே அவள் நரேந்திரனைக் காதல் சொல்லத் தகுந்தவனாகத் தேர்ந்தெடுத்தாள்.. இதில்

ஒன்று குறைந்திருந்தாலும் அவள் அவனைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாள்..

ஆனால் வித்யா அப்படியில்லை.. அதை நரேந்திரன் அறிந்திருந்தான்.. பூர்ணிமாவின் பின்புலத்தைப் பற்றி பெரிதாக.. பிரமிப்பாக வித்யா பேசியதேயில்லையென்று பூர்ணிமா சொன்னது இன்னமும் அவன் நினைவில் நின்றது..

அவனிடமும் அவள் அப்படித்தானே இருந்தாள்..? நீ ராஜா மகனாய் இருந்தால் எனக்கென்ன வந்தது.. என் முன்னால் சிகரெட் பிடிக்காதே.. அப்படிப் பிடித்தபடி என்னுடன் பேச முயன்றால் நான் அதை அனுமதிக்க மாட்டேன்.. எழுந்து போய் விடுவேன் என்று சொன்னவள் அல்லவா அவள்..!

என்றுமே நரேந்திரனை நரேந்திரனாகத்தான் அவள் பார்த்திருக்கிறாள்.. மிகப் பெரும் கோடிஸ்வரன் என்றோ.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் என்றோ நினைத்தும் பார்த்ததில்லை..

அவளுக்கு நரேந்திரன் என்றால் உயிர்... அந்த நரேந்திரனை அவனுக்காக மட்டுமே அவள் காதலித்தாள்.. அவனுக்காக அவளுடைய லட்சியத்தையும் மறந்தாள்.. வாழ்க்கைப் போராட்டத்தையும் மறந்தாள்.. அவளுடைய இன்னல்களை மறந்து.. அவனுடைய இன்னல்களை மட்டும் நினைவில் வைத்து அவனைப் பின் தொடர்ந்து மணி முத்தாறுக்கு வந்தாள்.. அவனை விட இளையவனான கவர்ச்சியான சுரேந்திரனின் மனைவியாகக் கூடிய வாய்ப்புக் கிடைத்தும் சுரேந்திரனின் முகம் பார்க்காமல் அதைத் தூக்கி எறிந்தாள்...

'வித்யா...!' அவன் மனம் நெகிழ்ந்தது.. அந்த நெகிழ்வில் அவன் உதடுகள் தன்னிச்சையாகப் பாடின..

"காட்டிக் கொடுக்கிறதே - உன்

கண்கள் காட்டிக் கொடுக்கிறதே.."

வித்யாவின் விழிகள் அவனை ஏறிட்டன.. அதில் தெரிந்த காதலில் நரேந்திரன் நெகிழ்ந்துருகினான்..

"காதல் வழிகிறதே - உன் கண்ணில்

காதல் வழிகிறதே..."

வித்யாவின் கைபிடித்து அவன் இழுத்த வேகத்தில் பூக்குவியலாய் அவன் மார்பில் சாய்ந்தாள் அவள்.. நரேந்திரனின் கரங்கள் அவளை வளைத்துக் கொள்ள அவளின் கரங்கள் அவன் முதுகில் பரவிப்படர்ந்தன.. அவளின் அணைப்பு தந்த நெருக்கத்தில் அவள் தோள் வளைவில் முகம் புதைத்து முத்தமிட்டான் அவன்..

"உன் அலாதி அன்பினில்

நனைந்தபின்.. நனைந்த பின்...

நானும் மழையானேன்...."

அவள் காதோடு அவன் பாடினான்...

11

நதியோரம் நடந்த போது

பூவாசம்தனை நுகர்ந்தேன்...

பூவைத் தேடிப் போனபோது...

பூவையவள் முகம் கண்டேன்..

-நதியோரம் நான் நடந்த போது-

காதோரமாக ஒலித்த அவன் பாடலில் மூழ்கியவளாக விலக மறந்து வித்யா சிலையாக

நின்றதை மாடியறையின் ஜன்னலில் இருந்து பார்த்த மீனலோசனியின் வயிறு எரிந்தது..

'ம் ஹீம்… காதலித்தேன் என்று தான் பெயர்.. ஒரு நாளாவது இந்த மனிதர் இப்படிக் கட்டித் தழுவியிருப்பாரா…? இதிலும் அந்த வித்யாதான் கொடுத்து வைத்தவள்…'

அவள் காதில் புகை வந்து கொண்டிருக்க அதை அறியாதவனாக மகேந்திரன் அவளை அழைத்தான்..

"மீனு.. ஏய்ய் மீனு…"

அவன் சும்மா 'மீனு…' என்று அழைத்ததோடு நிறுத்தியிருந்தாலாவது அவள் பேசாமல் இருந்திருப்பாள்.. கூடவே.. 'ஏய்ய் மீனு…' என்று அழைத்ததும் மகாக் கடுப்பாகிக் போனாள்…

"சும்மா மீன் பிடிக்கிறவனைப் போலவே பேசி வைக்காதீங்க.. சொல்லிட்டேன்…"

'என்ன இவ.. எப்பவும் போலத்தானே இவளை மீனுன்னு கூப்பிட்டேன்.. அதுக்கு எதுக்கு இந்த அளவுக்கு கோவிச்சுக்கிறா…?' மகேந்திரனுக்குப் புரியவில்லை..

"ஏண்டி.. உன்னைப் புதுசாவா மீனுன்னு கூப்பிடறேன்…? இப்படிக் கூப்பிட வேணாம்ன்னா வேற எப்படிக் கூப்பிடறது…? வேனும்னா லோசனின்னு கூப்பிடவா…?"

"சசிக்கலை.. என்னவோ லோசன்னு சொல்றதைப் போல இருக்கு…"

"வேற என்னதாண்டி செய்கிறது..? உனக்குப் புதுசா பெயர் வைச்சுக் கூப்பிடவா…?"

"ஏன்…? என் பெயருக்கு என்னவாம்…?"

"உனக்கு என்னதாண்டி பிரச்னை…?"

"என்னவோ பிரச்னை.. அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போகிறீங்க…?"

"ஏண்டி… காலையிலேயே மனுசனை மூட் அவுட் ஆக்கற…? உனக்கு என்ன ஆச்சு…?"

மீனலோசனியிடம் கேட்டபடி ஜன்னலருகே வந்த மகேந்திரனும் தோட்டத்தைப் பார்த்து விட்டான்.. இப்போது நரேந்திரனும் வித்யாவும் விலகியிருந்தார்கள்.. ஆனாலும் கை கோர்த்தபடி ஆழ்ந்த குரலில் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்...

"ம்ம்ச்.. இது வேறயா...?" மகேந்திரன் அலுத்துக் கொண்டான்..

"உங்களுக்கெதுக்கு இத்தனை சலிப்பு...?" மீனலோசனி எரிச்சல் பட்டாள்...

"அதான் கல்யாணம் ஆகிருச்சே.. இன்னமும் காதல் ஜோடிகளைப் போல பின்னிப் பிணையனுமா...?" மகேந்திரன் கோபப் பட்டான்...

"கல்யாணம் முடிந்தால் காதல் காணாமல் போயிரனுமா...? ம்ஹீம்.. வித்யா கொடுத்து வைத்தவ.."

மீனலோசனியின் அனல் பெருமூச்சில் மகேந்திரனின் மனதில் நரேந்திரனின் மீது வன்மம் மூண்டது அந்த வன்மத்தை மேலும் அதிகமாக்கினாள் மீனலோசனி...

"இங்கேயும் காதல் பண்ணினோம்ன்னுதான் பேரு.."

"மீனா..."

"ஏன் கத்தறிங்க...? இல்லாததையா சொல்லிட்டேன்...?"

"உனக்கு என்னடி குறை வைத்தேன்...?"

"ம்ம்.. இதிலொன்னும் குறைச்சலில்ல..."

"வேற எதில்தான் குறை...? சொல்லித் தொலையேன்..."

"இது... இது... இதுதான் குறை... பெண்டாட்டி கிட்டப் பேசறது மாதிரியா பேசி வைக்கறிங்க...? என்னவோ எதிரிக்காரியிடம் பேசறதைப் போலப் பேசி வைத்தா என்னன்னு சொல்றது...?"

"நீ தானே அப்படிப் பேச வைக்கிற...?"

"எல்லாத்துக்கும் நான்தான் காரணமா...? கீழே தோட்டத்துப் பக்கம் எட்டிப் பாருங்க..."

"அதான் பார்த்தாச்சே..."

"அங்கே பெண்டாட்டி கிட்டக் கொஞ்சிக் குழாவுகிறாரே உங்க அண்ணன்.. அவருக்கு யார் சொல்லிக் கொடுத்தது...?"

"எதைடி...?"

"ம்ம்ம்...? அதையும் நான்தான் சொல்லனுமா...? பெண்டாட்டிகிட்டக் கொஞ்சறதை யார் சொல்லிக் கொடுத்தது...? அந்த வித்யாதான் சொல்லிக் கொடுத்தாளா...?"

மகேந்திரனால் மீனலோசனி நரேந்திரனைப் பற்றிப் பேசுவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவன் மனதிற்குள் புகைச்சல் ஏற்பட்டாலும் அவனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை.. அதனால் வேறுவகையில் தனது கோபத்தை அவன் வெளிப் படுத்தினான்..

"நீ எதுக்கு அங்கே பார்த்த...?"

"எங்கே...?"

"தோட்டத்தை.. அதான் புருசனும் பெண்டாட்டியும் கொஞ்சிக் குழாவிக்கிறாங்கன்னு உனக்குத் தெரியுதில்ல...? அதுக்கப்புறமும் தோட்டத்தை பார்த்துக்கிட்டு நிற்கிறயே.. இது என்னடி பழக்கம்...?"

மீனலோசனிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. அவள் ஒன்றைச் சொல்லப் போனால்.. அது வேறு மாதிரி திரிந்து விட்ட நிலையில் அவள் பேசமுடியாமல் மௌனியானாள்..

இது மகேந்திரன் கையாளும் யுக்திகளில் ஒன்று.. ஏதேனும் ஒரு விவகாரத்தில் அவன் சிக்கிக் கொள்ள நேர்ந்தால்.. வேறு ஒரு விவகாரத்தில் எதிராளியை நுழைத்து அவர்களை வாயடைத்துப் போகச் செய்யும் வித்தையில் அவன் கை தேர்ந்தவன்.. அவனால் அந்த வித்தையைப்

பிரயோகிக்க முடியாது போனது நரேந்திரனிடமும் சுரேந்திரனிடமும் மட்டும்தான்.. அவர்கள் இருவருமே மகேந்திரனின் அந்த யுக்தியை தெளிவாக அறிந்தவர்கள்.. அதை முறியடிக்கும் வித்தையில் கை தேர்ந்தவர்கள்... இப்போது கூடுதலாக வித்யாவும் அந்த வரிசையில் சேர்ந்திருந்தாள்...

பேச முடியாமல் போன மீனலோசனி கணவன் மட்டம் தட்டி விட்ட கோபத்தில் ஜன்னலை விட்டு அகல முயன்றாள்... அந்த நேரம் பார்த்து சௌதாமினி தோட்டத்துப் பக்கம் போவது அவள் பார்வையில் பட்டுவிட்டது...

சற்று முன்னள்தான் கணவன் அவளை மட்டம் தட்டிப் பேசினான் என்பதை மறந்து போனவளாக..

"என்னஙக.. உங்க அம்மா..." என்றாள்...

"எங்கேடி...?" மகேந்திரன் எட்டிப் பார்த்தான்...

தோட்டத்தில் ரகசியம் பேசிக் கொண்டிருந்த நரேந்திரனும்... வித்யாவும் சௌதாமினியின் வருகையினால் விலகி நிற்பதைக் கவனித்த மகேந்திரன்...

"இதை முதலிலேயே செய்து தொலைத்- திருக்கலாம்.." என்று எரிச்சல் பட்டான்..

மீனலோசனிக்கு எதையாவது சொல்ல வேண்டும் போலப் பற்றிக் கொண்டு வந்தது.. ஆனால்.. அடுத்த மட்டம் தட்டலுக்கு ஆளாக விரும்பாதவளாக தோட்டத்தில் கவனத்தை செழுத்தினாள்.. சௌதாமினி அங்கே இருந்த சாய்வான சிமெண்ட் பெஞ்சில்

அமர்ந்து கொள்ள.. பக்கத்தில் நரேந்திரனும்.. வித்யாவும் அமர்ந்து பேச ஆரம்பித்ததைக் கவனித்தவளுக்கு ஆத்திரம் உண்டானது...

"இதென்னங்க அநியாயமா இருக்கு...? இது குடும்பமா.. இல்லை வேறு எதுவுமா...?"

"வாய் நீளுது மீனா... ஜாக்கிரதை..."

"இதுக்கு மட்டும் ரோசம் வந்துருமே.. இங்கே குத்துக்கல்லாட்டம் நீங்களும்.. நானும் இருக்கிறோம்.."

"யுகேயையும்.. பிரபாவையும் விட்டுட்டியே.."

"இதை மட்டும் சொல்லிருங்க.. அங்கே உங்க அண்ணனிடம் மட்டும் ரகசியம் பேசும் உங்க அம்மாவை எதுவும் கேட்டுகாதீங்க.."

"அவங்க என்ன பேசறாங்கன்னு தெரியாம நாமா ரகசியம்ன்னு முடிவு கட்டி விடக் கூடாது மீனா..."

"அங்கே பாருங்க.. அந்த மூணு பேரும் எப்படி வட்ட மேஜை மாநாடு போட்டுக்கிட்டு இருக்காங்கன்னு..

அது ரகசியம்ன்னு உங்களக்குத் தோணலையா...?"

"அப்படியா சொல்கிற...?"

மனைவியின் சொல்படி மகேந்திரன் தோட்டத்தை உற்றுப் பார்த்தான்.. உன்னிப்பாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அந்த மூவரின் முகத்திலும் இருந்த தீவிரம் 'அப்படித்தான்...' என்றது...

"ஆமாம்டி மீனா.. அவங்க என்ன பேசிக்கிறாங்க...?"

இப்படிக் கேட்ட கணவனை எரிதணல் கொண்டு வரவா என்பதைப் போல அனல் பார்வை பார்த்தாள் மீனலோசனி..

"என்னைக் கேட்டா... எனக்கென்ன தெரியும்...? வேணும்னா குறி சொல்கிற குறத்தியை மணி முத்தாறு மலையில இருந்து வரச் சொல்லி குறிகேட்டுச் சொல்லவா..?"

இப்போது வாய் மூடி மௌனியாவது மகேந்திரனின் முறையாகிவிட்டது.. மனைவியைப் பார்ப்பதற்குப் பதில் தோட்டத்தைப் பார்ப்பது உசிதம் என்று மனதிற்குத் தோன்றிவிட தோட்டத்துப் பக்கம் பார்வையைத் திருப்பினான்..

'இவ மூஞ்சியைப் பார்க்கிறதுக்கு பச்சைப் பசேல்ன்னு இருக்கிற செடி.. கொடியையாவது பார்க்கலாம்.. மனசுக்கு குளிர்ச்சியா இருக்கும்...'

ஆனால் மகேந்திரனின் பார்வை பசுமையான செடி கொடியின் மீது படியாமல் அதனருகே அமர்ந்திருந்த தாயின் மீதும்.. அண்ணனின் மீதுமே படிந்தது..

'அப்படி என்னதான் பேசிக்கிட்டு இருக்காங்க..'

அதையறியும் ஆவல் மனதில் குறுகுறுத்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஜன்னலை விட்டு அகன்று விட்டான்.. இல்லாவிட்டால் மீனலோசனி இன்னும் கொஞ்சம் குத்திக் காட்டிப் பேசிவிடுவாளே..

'என்னவா இருக்கும்...?'

அன்று முழுவதும் அந்த மர்மம் அவன் மண்டையைப் போட்டுக் குடைந்தது.. அன்றைய இரவில் அந்த மர்மத்தை உடைத்தாள் மீனலோசனி...

"உங்க சின்னத்தம்பி காதலிக்கிறாராம்.."

"யாரைடி சொல்கிற...? சுரேந்திரனையா சொல்கிற...?"

"பின்னே.. சின்னத்தம்பி பிரபுவையா சொல்வேன்..?"

இப்படிப் பேசின மனைவியை என்ன செய்வது என்ற யோசனையுடன் பற்களை நறநறத்தான் மகேந்திரன்...

12

நதியோரம் நடந்த போது

நான்கண்ட சொர்க்கம் நீதான்...

என் விரல் கோர்த்து கதைசொன்னாய்..

என் மன வீட்டில் குடி புகுந்தாய்..

-நதியோரம் நான் நடந்தபோது-

"சுரேந்திரனா...?"

சௌதாமினி சொன்ன செய்தியைக் கேட்டதும் நரேந்திரனும் இந்தக் கேள்வியைத்தான் கேட்டான்..

"நம்ம சுரேந்திரனேதான்.."

கலகலத்துச் சிரித்த சௌதாமினியின் முகத்தி லிருந்த சந்தோச அலைகளைப் பார்த்த போது இவளுக்குத்தான் சுரேந்திரனின் மீது எவ்வளவு பாசம் என்ற எண்ணம் வித்யாவின் மனதில் எழுந்தது...

சௌதாமினி நரேந்திரனின் திருமணத்தின் போது சந்தோசப் பட்டாள்தான்.. ஆனால் இந்த அளவுக்கு அவள் சந்தோசப் படவில்லை என்பது ஏனோ அந்த நொடியில் வித்யாவின் ஞாபக அலையில் எழுந்தது..

மூத்த மகனின் திருமணத்தை மறந்து.. அவன் மீது கடமையை மட்டுமே சுமத்தி விட்டு அவன் நிழலில் மற்ற பிள்ளைகளை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தாய் என்று அவள்மீது வித்யா கூறிய குற்றச் சாட்டு மறைந்து விட்டது என்ற நிம்மதியை மட்டுமே சௌதாமினியின் முகம் அன்று பிரதிபலித்ததை வித்யா நினைத்துப் பார்த்தாள்...

அதன்பின் பூர்ணிமாவின் திருமணம் பிரபாவதியின் அண்ணனான பிரகாஷீடன் நடந்த போது.. சௌதாமினியின் முகத்தில் இதே ஆனந்தம் நிலவியது..

"கேட்டியா வித்யா..."

நரேந்திரனின் கேள்வியில் வித்யாவின் சிந்தனை அலைகள் அறுந்தன.. அவள் சிந்தனை கலைந்தவளாக நரேந்திரனின் முகத்தைப் பார்த்தாள்...

"என்ன சொன்னீங்க...?" இப்படிக் கேட்டவளை விசித்திரமாகப் பார்த்தான் நரேந்திரன்..

"என்ன யோசனையில் இருக்கிற வித்யா...? நம்ம சுரேன் காதல் செய்கிறானாம்..."

"ஓ.. அப்படியா...?" வரவழைத்துக் கொண்ட ஆச்சரியத்துடன் கேட்டாள் வித்யா...

"அப்படியேதான்..." உற்சாகமாக பதில் சொன்னான் நரேந்திரன்...

தங்கை.. தம்பிகளின் வாழ்வில் அவனுக்கிருக்கும் அக்கறை குறித்த பாராட்டு வித்யாவின் மனதில் எழுந்தது.. அவனது மனைவியாக அவனது அக்கறையில் பங்கேற்கும் பொறுப்பு அவளுக்கிருப்பதை உணர்ந்தவளாக வித்யா லேசாகச் சிரித்தாள்.. அதோடு சுரேந்திரன் நியாயமானவன் என்ற பிரியமும் அவளுக்குள் எழுந்தது..

சுரேந்திரனின் வாழ்வு சிறப்பானதாக அமைய வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டாள் வித்யா.. அந்த நினைவுடனே சுரேந்திரனின் காதலியைப் பற்றிய விவரங்களை அவள் விசாரித்தாள்...

"பெண் யாராம்...?"

அவளது கேள்விக்கு முகம் முழுவதும் பூரிப்புடன் சௌதாமினியே பதில் சொன்னாள்...

"மதன்பூர் சமஸ்தான இளவரசியாம்.. நான் நினைக்கவே இல்லை வித்யா.. எங்கள் ராஜ பரம்பரைக்கு ஏற்ற பெண்ணை சுரேந்திரன் தேர்வு செய்வான் என்று.."

சௌதாமினியின் பதிலில் வித்யாவின் மனதில் அடி விழுந்தது.. அவள் மனதில் சிறிய வெற்றிடம் உருவானது.. அந்தக் குடும்பத்தில் அவளுக்கு இடமில்லை என்பதைப் போல அவள் உணர்ந்தாள்.. அதை உணராதவளாக சௌதாமினி பேசிக் கொண்டே போனாள்...

"இந்த சுரேந்திரன் இருக்கானே.. இவன் சரியான விளையாட்டுப் பிள்ளை.. நிச்சயமாக இவன் நம் ராஜவம்சத்துப் பெண்களில் ஒருத்தியை கை நீட்ட மாட்டான் என்று நான் நினைத்தேன்.. அவனும் அப்படித்தான் இருப்பான்.. அதனால்தான் அவன் உன்னைச் சொல்லவும் எனக்கு பெரிதாக அதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை..."

இப்போது எதற்காக இந்தப் பேச்சு என்ற நினைவில் வித்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. நரேந்திரனுக்கும் அதே எண்ணம்தான் என்பது அவன் முகச் சுருக்கத்திலிருந்து தெரிந்தது.. சௌதாமினியின் உற்சாகம் மற்றவர்களின் மனநிலையை உணராததாக இருந்தது.. அவள் பொழியும் மழையைப் போலப் பேச்சை நிறுத்தாமல் பேசிக் கொண்டேயிருந்தாள்..

"நரேந்திரன் வீட்டுக்கு மூத்தவன்.. படிக்கும் போதே கிரண்பூர் சமஸ்தான இளவரசியைக் காதலித்தவன்.. இவன்தான் எங்கள் பரம்பரைக்குப் பொருந்ததமாக ராஜ வம்சத்துப் பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வான் என்று நினைத்தேன்.."

'அடி தாங்கா உள்ளமீது இடி தாங்குமா' என்று கவிஞர் சொன்னது இதைத்தானா என்று மனதிற்குள் அரற்றினாள் வித்யா...

அவளுடைய நரேந்திரனின் முதல் காதல் அவள் மீது ஏற்படவில்லை.. இந்த உண்மை அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது..

அவன்.. அவனுடைய ராஜ வம்சத்தைப் போலவே ராஜ வம்சத்தில் பிறந்த கிரண்பூர் சமஸ்தான இளவரசியான கார்த்திகாயினி தேவியைக் காதலித்தவன்.. சந்தர்ப்ப சூழ்நிலையால்.. விதி வசத்தால் காதலியுடன் சேர அவனால் முடியாமல் போய் விட்டது.. அதன் பின் வாழ்வின் போக்கில் ஓர் நாள் வித்யாவைச் சந்தித்தான்.. அவளுடைய காதலை ஏற்றுக் கொண்டான்..

ஒருவேளை.. அவனும் கார்த்திகாயினியும் பிரியாமல் இருந்திருந்தால்...?

நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கினாள் வித்யா...

இந்த வாழ்வு கார்த்திகாயினி விட்டுக் கொடுத்த வாழ்வா...? அவளுடைய நரேந்திரன் அவளுக்கு மட்டுமே சொந்தமானவனாக இல்லையா...?

இடியை அவள் மனதில் இறக்கிய சௌதாமினி அதைப் புரிந்து கொள்ளாதவளாக பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்..

"கடைசியில் பார்த்தால் நரேந்திரன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டான்.. சுரேந்திரனோ எங்களைப் போல ராஜ பரம்பரையைச் சேர்ந்த பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக சொல்லுகிறான்.. இறைவனின் விளையாட்டை என்னவென்று சொல்வது..?"

எதுவும் சொல்ல முடியாதவளாக மௌனித்தாள் வித்யா..

"அந்தப் பெண் சுரேந்திரன் கூடப் படித்துக் கொண்டிருந்தாளா..?" நரேந்திரன் கேட்டான்...

"ஊஹீம்.. அப்படியில்லையாம்.. நானும் உன்னைப் போல்தான் முதலில் நினைத்தேன்.. என்னடா சின்னவனும்.. நரேந்திரனைப் போலக் கூடப் படித்த பெண்ணைக் காதலித்திருக்கிறானோ என்ற நினைவு வந்தது.. அப்புறம் பார்த்தால் சுரேந்திரன் அப்படியில்லை யென்கிறான்..."

சௌதாமினி நரேந்திரனின் முதல் காதலைப் பற்றிய நினைவுகளிலிருந்து வெளியே வரவே மாட்டாளா என்றிருந்தது வித்யாவிற்கு...

அவளுக்கு மனம் தாளவில்லை.. அவளும் மனுஷிதான்.. அவள் மனம் இரும்பால் செய்ததில்லை.. அதுமென்மையானது.. ஈரமானது.. அந்த மனதில் நரேந்திரனுக்கு மட்டுமே இடமிருந்தது.. அப்படிப் பட்டவளுக்கு நரேந்திரனின் முதல் காதலைப் பெறும் பாக்கியம் ஏன் இல்லாமல் போனது..?

"அவள் பெயர் நிவேதிதா தேவியாம்.. மதன்பூர் மகாராஜாவின் இளைய மகளாம்.. பார்க்க அழகாக இருப்பாளாம்.. பாரின் டூர் வந்திருந்தாளாம்.. வந்த இடத்தில் யதேச்சையாக சுநேரந்திரனைப் பார்த்திருக் கிறாள்.. முதல் பார்வையிலேயே நம் சுரேனை அவளுக்குப் பிடித்து விட்டதாம்.. நம் சுரேனை யாருக்குத்தான்

பிடிக்காது..?" சௌதாமினியின் வார்த்தைகளில் பெருமை தொனித்தது...

"அதைச் சொல்லுங்க.. அப்ப.. அந்தப் பெண்தான் சுரேனிடம் காதல் சொன்னாளா..?" நரேந்திரன் சிரித்தான்..

"அப்படித்தானாம்.. நம்ம ஆள் உடனே சரி கொடுக்க வில்லையாம்..."

"இதைப் பாருடா..."

"உனக்கு என்மேல் காதல் வந்திருக்கலாம்... ஆனா எனக்கும் உன்மேல அதைப் போல காதல் வரணுமில்லையா..? அதனால கொஞ்சநாள் பழகிப் பார்த்துவிட்டு முடிவு சொல்கிறேன்னு சொன்னானாம்..."

"இங்கே பாரு வித்யா.. இவன் பாரினுக்குப் போய் பழகிப் பார்க்கலாமான்னு கேட்டிருக்கான்..."

நரேந்திரனின் பேச்சிற்கு வித்யா மெதுவாக சிரித்து வைத்தாள்... தாய்க்கும்.. மகனுக்கும் இடையில் நடக்கும் பேச்சில் அவளையும் இழுத்து விட நரேந்திரன் முயல்வது அவள் மனதிற்குப் புரிந்தது.. அவள் மீதான அவனின் கவனம் குறித்த இதம் அவள் மனதில் பரவியது..

அவள் மனதிலிருந்த தனிமையுணர்வு மறைய ஆரம்பித்தது.. நரேந்திரனுக்காக அவளும் பேச்சில் கலந்து கொண்டாள்...

"இதென்னங்க இப்படிக் கேட்டுட்டிங்க.. என்ன தான் பாரினுக்குப் படிக்கப் போனாலும்.. மண்வாசனை மறந்து போகுமா..? அதான் நம்ம வீட்டு சின்னவர்.. சூப்பர் ஸ்டார் ஸ்டைலில் பழகிப் பார்க்கலாம்ன்னு சொல்லியிருப்பார்..."

வித்யா கலகலப்பாக பதில் சொன்னதும் நரேந்திரனின் முகம் மலர்ந்தது.. அவனுக்கு அவளின் மனதைத் தெரியும்.. அதன் சுணக்கம் தெரியும்.. அவளின் முகம் லேசாக மாறினாலும்.. அதை வைத்து அவள் மனதை அவன் கண்டு பிடித்து விடுவான்...

13

நதியோரம் நடந்த போது..

நதிநீரில் முகம் பார்த்தேன்..

களங்கமில்லா அந்தப் பால் முகத்தை..

வாழ்க்கையிலே எங்கே தொலைத்தேன்..?

-நதியோரம் நான் நடந்த போது-

சௌதாமினி கூறியதிலிருந்து வித்யா சுரேந்திரனின் காதலியைப் பற்றிய விவரங்களைக் கிரகித்துக் கொண்டாள்…

அவள் பெயர் நிவேதிதா தேவி.. மதன்பூர் ராஜாவின் இளைய மகள்.. அவளுக்கு மூத்த சகோதரனும்.. மூத்த சகோதரியும் இருக்கிறார்கள்.. அவர்கள் திருமணமானவர்கள்.. இவள் உலகத்தைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன் என்று வெளிநாட்டு சுற்றுலாவிற்கு கிளம்பிப் போயிருக்கிறாள்.. போன இடத்தில் சுரேந்திரனைக் கண்டிருக்கிறாள்.. கண்டதும் காதல் வந்து விட்டது.. சுரேந்திரனிடம் சொல்லியிருக்கிறாள்.. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்திருக்கிறான்…

பழகிப் பார்த்து விட்டுப் பதில் சொல்லுகிறேன் என்ற சுரேந்திரனின் நிபந்தனைக்கு அவள் சரியென்று சொல்லியிருக்கிறாள்.. பழகிப் பார்த்ததில் சுரேந்திரனுக்கும் அவள்மீது காதல் ஏற்பட்டிருக்கிறது.. அவன் அவளிடம் காதல் சொல்லி விட்டு.. மணி முத்தாறு வீட்டிற்கும் சொல்லி விட்டான்…

இதைச் சொல்லி முடிப்பதற்குள் சௌதாமினி எதையெதையோ பேசி முடித்து விட்டாள்.. அவள் பேச்சுப் போகும் திசைகளெல்லாம் கூடவே போய் பேசி அவளை மீண்டும் சுரேந்திரனின் காதலைப் பற்றிய பேச்சுக்குள் இழுத்துவிட நரேந்திரன் பற்பல பகீரதப் பிரயத்தனங்களை செய்ய வேண்டியிருந்தது…

வித்யாவிற்கு அவன் நிலையைக் கண்டு சிரிப்பு வந்தது... அவள் அதை மறைத்தாலும் அவளின் கண்கள் அதைக் காட்டிக் கொடுத்து விட அதை கண்டு கொண்ட நரேந்திரனின் கண்கள் மின்னின...

"என் நிலையைப் பார்த்தா உனக்கு சிரிப்பு வருதா..?" அவளுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தான்...

"சிரிச்சேனா..? நானா..? அபாண்டமா பேசாதீங்க.." அவள் கண்களில் சிரிப்பு அதிகரித்தது...

"நம்ம ரூமுக்கு வாடி.. உனக்கு இருக்கு..."

அவனின் எச்சரிக்கையில் அவள் முகம் சிவந்தது..

'இவனுக்கு இது ஒருசாக்கு..' கள்ளச் சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்..

அவளின் அந்த முகச் சிகப்பில் நரேந்திரனின் உல்லாசம் அதிகரித்தது.. அவளின் மஞ்சள் கலந்த சந்தனத்தைப் போன்ற நிறத்தில் மயங்கிப் போனவனாக...

'மஞ்சளழகி..' என்று நினைத்துக் கொண்டான்...

"இஞ்சி இடுப்பழகி...

மஞ்சச் சிகப்பழகி...

கள்ளச் சிரிப்பழகி..

மறக்க மனம் கூடுதில்லையே..."

மாடியறைக்கு வந்தபின் அவளை அவனுடைய கை வளைவிற்குள் வைத்தக் கொண்டு அவன் பாடியபோது தன்னை மறந்து அவன் மார்பில் முகம் புதைத்த வித்யா லேசாக விம்மி விட்டாள்...

"என்னடி..?" பதறிப் போனவனாக அவள் முகம் நிமிர்த்திப் பார்த்தான் நரேந்திரன்..

"மறந்திர மாட்டிங்கள்ல..?"

வித்யாவின் முகம் தவிப்பை பிரதிபலித்தது.. என்னவோ நள்ளிரவில் கூடிய சங்க காலத்து தலைவனைப் பார்த்து தலைவி கேட்பதைப் போலக் கேட்டு வைத்தவளை என்ன செய்வது என்று தெரியாமல் ஆற்றாமையுடன் பார்த்தான் நரேந்திரன்...

"அறிவு கெட்டவளே..! நீ என் பெண்டாட்டிடீ..."

"அதுக்காக.. காதல் சொல்லக் கூடாதா..?"

"வித்யா.. நான் உன்னைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன்..."

"அந்தக் காதல் என்றென்றும் நிலைத்திருக்குமா..?"

அவளின் விழிகள் நீரில் மிதந்தன.. நரேந்திரனின் மனதில் கருணை சுரந்தது...

அவனுக்கு வித்யாவைத் தெரியும்.. பரிபூரணமாக அவளை அறிந்தவன் அவன்...

வித்யா யாரிடமும் யாசித்ததில்லை.. அவள் யாசிக்க மாட்டாள்.. ஒரு வகையான நிமிர்வு அவளிடம் எப்போதும் குடி கொண்டிருக்கும்.. இதழை மடித்து அவள் சிந்தும் சிறு புன்னகையில் சுயமரியாதை கலந்த கர்வம் கலந்திருக்கும்..

அவள் வணங்காமுடி.. நெருங்கிய தோழியான பூர்ணிமாவுடன் ஒரே வீட்டில் வசிக்க நேர்ந்த போது தங்குவதற்கும்.. சாப்பிடுவதற்குமான கட்டணத்தை மாதா மாதம் கொடுத்து வந்தாள்...

அப்படிப்பட்ட வித்யா.. அவனிடம் இறைஞ்சுகிறாள்.. அவளின் அந்தக் காதலில் அவன் மனம் மெழுகாக உருகியது...

'இவளை மறந்து நான் உயிர் வாழ்வேனா..?'

நரேந்திரன் அவள் நெற்றியில் முத்தம் பதித்து அவளைத் தன் மார்போடு இறுக்கிக் கொண்டான்.. அவளின் மெல்லிய உடலின் நடுக்கத்தை அவனால் உணர்ந்து கொள்ள

முடிந்தது.. அந்த நடுக்கம் அவனுக்காக என்பதில் அவன் மனதில் எல்லையற்ற திருப்தியும்.. கர்வமும் உண்டானது...

இந்த திருப்தியையும்.. கர்வத்தையும்.. கார்த்தி-காயினியால் ஒருபோதும் கொடுக்க முடியாது என்பதை இவள் அறிவாளா என்று அவன் மனதிற்குள் கேட்டுக் கொண்டான்...

"மறக்குமோ மாமன் எண்ணம்..?

மயக்குதே பஞ்சவர்ணம்..

மடியிலே ஊஞ்சல் கட்ட..

வா.. நீ...."

அவளை மடியில் ஊஞ்சல் கட்டச் சொல்லிவிட்டு அவன் மடியில் ஊஞ்சல் கட்டினான்.. அதில் சாய்ந்தவளின் கூந்தலில் முகம் புதைத்த போது.. இந்த சுகத்திற்கு ஈடு இணை உண்டா என்று அவன் மனம் கேட்டது...

"நரேன்.." வித்யா தவிப்புடன் அழைத்தாள்...

"சொல்லுடி.." அவள் முகம் நோக்கிக் குனிந்தான் அவன்...

"இந்தப் பிரியம் என்னைக்கும் நிலைத்திருக்குமா..?"

எவ்வளவு சொல்லியும் திரும்பத்திரும்ப அந்த ஒன்றிலேயே நிற்பவளின்மீது நரேந்திரனுக்கு கோபம் ஏற்பட்டது.. எதற்காக அவள் அப்படி மறுகுகிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை.. அவள் அவனுடைய மனைவி.. அவளைவிட்டு அவன் பிரிவானா..? இல்லை அவள்மீது பிரியம் காட்டாமல்தான் இருப்பானா..?

'இவள் ஏன் இப்படியே கேட்கிறாள்..?'

நரேந்திரன் முகம் மாறினான்.. அதைக் கண்ட வித்யாவின் மனம் பதறியது.. அவள் முகம் நோக்கிக் குனிந்தவனின் முகம் விலகப் போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"நரேன்..."

வேகத்துடன் அவன் கழுத்தை அவள் கைகள் வளைத்தன.. அந்த வேகத்தில் அவன் திகைத்துப் போனான்.. அவள் முகம் நோக்கி இழுக்கப்பட்ட அவன் முகத்தில் அவள் முத்தங்களைப் பதித்தாள்.. அந்த ஆவேச முத்தங்களில் திணறிப் போனவன் அவளை தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.. அவளது மனதைக் குறித்த ஐயப்பாடு மறைந்து அவனுக்குள் மோகம் மூண்டது.. அந்த மோகத்துடன் அவள் மீது சரிந்தவனின் காதோரமாக வித்யா முணுமுணுத்தாள்...

"நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம் நரேன்..."

"இல்லைன்னு யார் சொன்னது..?"

"எப்பவும் என் சொந்தமா மட்டும் இருப்பீங்களா..?"

"இல்லாமல் எங்கேடி போவேன்..?"

"எனக்கு உங்க சொத்து சுகம் வேண்டாம்..."

"எனக்கு அது தெரியுமே வித்யா.."

"உங்க ராஜ பரம்பரைங்கிற அந்தஸ்து வேணாம்.."

"இதை நீ சொல்லனுமா வித்யா..?"

"நீங்க மட்டும்தான் வேணும் நரேன்.. உங்க அன்பு மட்டும்தான் வேனும்.. உங்க காதலில் துளியளவு குறைந்தால் கூட நான் தாங்கிக் கொள்ள மாட்டேன்..."

இது என்ன வகையான பரிதவிப்பு என்று நரேந்திரன் தவித்துப் போனான்.. அவனால் வித்யாவின் தவிப்பினைக் காணச் சகிக்கவில்லை.. அவன் அவள் கைக்குள்

தான் இருக்கிறான்.. மிக அந்தரங்கமாக அவர்கள் இருக்கிறார்கள்.. அந்தத் தருணத்திலும் அவள் மனதில் பாதுகாப்பில்லாத உணர்வு ஏற்படுகிறதென்றால் அவள் எதனால் பாதிக்கப் பட்டிருக்கிறாள்..?

அதைக் கேட்க அது சரியான நேரமல்ல என்பதை நரேந்திரனின் மனம் அறிவுறுத்தியது..

அதைக் கேட்க வேண்டுமென்றால் அவளை விட்டு அவன் விலக வேண்டும்.. அவள் இருக்கும் மனநிலையில் அந்த விலகலே அவளது தவிப்பை அதிகரித்து விடாதா..?

நரேந்திரன் நெருக்கத்தை அதிகரித்தான்.. அவள் பக்கம் நெருங்கினான்.. அவள் காதோரமாக தாபத்துடன் பாடினான்...

"பேசாமல் வா...

என் பக்கம் நெருங்கு..

கேட்காமல் தா..

தேன் முத்தம் வழங்கு..."

மன்மதனின் மலர் அம்புகளைத் தாங்கிய அவன் பாடல் அவள் காதினில் பாய்ந்தது.. அவள் பேச்சிழந்தாள்.. அவள் நெருங்க வேண்டிய அவசியமில்லாமல் அவன் அவளை நெருங்கினான்.. அவளிடம் கேட்காமல் அவனே முத்தங்களை வாரி வழங்கினான்...

வாரி வழங்கிய கொடை வள்ளலிடம் தேவைக்கு அதிகமாகவே பெற்றுக் கொண்ட வித்யாவின் மனதிலிருந்த கிலேசம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி மறைந்து விட்டது..

14

நதியோரம் நடந்த போது..

காலடியில் சுடு மணல்தான்..

நீர் தன்னில் பாதம் நனைத்தால்..

நீராக அங்கே நீயிருந்தாய்...

-நதியோரம் நான் நடந்த போது-

மதன்பூரின் இளவரசியான நிவேதிதா தேவியின் கண்களில் அலட்சியமும்.. மிடுக்கும் ததும்பி வளைந்தன.. முதல் பார்வையிலேயே அவள் ஆணவத்தில் மீனலோசனியையும்.. பிரபாவதியையும் தூக்கிச் சாப்பிட்டு விடுவாள் என்பதை அவர்கள் இருவருமே புரிந்து கொண்டார்கள்.. ஆனாலும் அவர்கள் அதைப் பொருட் படுத்தாமல் முகம் நிறைய மகிழ்வோடு அவளை வரவேற்றதிற்கு காரணம் இருந்தது...

அது.. அந்த நிவேதிதா மணி முத்தாறு அரண்மனையில் காலடி வைத்தவுடன் அவளுக்கு அறிமுகப் படுத்தப்பட்ட வித்யாவை தூசு போல அலட்சியமாக நோக்கினாள் என்பது..

சுநேரந்திரன் வெளிநாட்டுப் படிப்பை முடித்து விட்டு மணி முத்தாறுக்குத் திரும்பிவிட்டான்.. தினமும் பேக்டரிக்கு போய் வர ஆரம்பித்தான்.. அவனிடம் நிவேதிதாவைப் பற்றிக் கேட்கும்படி சௌதாமினி சொன்னதால் நரேந்திரனும் கேட்டான்..

"நெக்ஸ்ட் வீக்.. அவளோட பேமிலி இங்கே வருகிறாங்கண்ணா.." என்றான் சுரேந்திரன்...

"என்னடா இது..? பெண் வீட்டுக்குத்தானே நாம் முதலில் போகனும்..?" நரேந்திரனின் புருவங்கள் ஏறின..

"பெண் பார்க்கத்தான் போகனும்.. நான்தான் பெண்ணைப் பார்த்துட்டேனே..."

"அந்தப் பெண்ணும் மாப்பிள்ளையைப் பார்த்திருக்கும் தானே...?"

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"அப்புறம் எதுக்காகடா அவங்க மாப்பிள்ளை பார்க்க வருகிறாங்க..?"

நரேந்திரன் சுள்ளென்ற கோபத்துடன் கேள்வி கேட்டான்.. மூத்தவனும்.. கடைசித் தம்பியும் மோதிக் கொள்வதைப் பார்க்க வேண்டுமென்ற நீண்டநாள் ஆசை கொண்டிருந்த

மகேந்திரனும்.. யுகேந்திரனும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்கொட்டாமல் பார்த்தார்கள்.. கூடப் பார்வையிட அவர்களின் துணைவிகளையும் கண் சமிக்ஞையில் அருகே அழைத்துக் கொண்டார்கள்...

சௌதாமினிக்கு நரேந்திரனின் கோபம் குறித்து கவலை எழுந்தது.. அவள் மூத்த மகனை சமாதானப் படுத்த முயன்றாள்...

"அதை மாப்பிள்ளை பார்க்க வருகிறாங்கன்னு நாம ஏன் நினைக்கனும் நரேந்திரா..?"

"இவன் அப்படித்தானேம்மா சொல்கிறான்..?"

"அப்படியா சொன்னான்..? என்ன சுரேன்.. நீ அப்படியா சொன்ன..?"

"பெண் பார்க்கத்தானே பெண் வீட்டுக்குப் போகனும்..? நான்தான் பெண்ணைப் பார்த்துட்டேனேன்னு சொன்னதை அண்ணன் அப்படிச் சொல்கிறார்ம்மா..."

"கேட்டாயா நரேந்திரா.. அவன் அதைத்தான் சொல்லியிருக்கிறான்.. நீ நினைப்பதைப் போல சொல்லவில்லை..."

"இதுக்குப் பெயர் என்னம்மா..? பெண் பார்க்கத்தான் பெண் வீட்டுக்குப் போகனும்னா.. மாப்பிள்ளை பார்க்கத்தானே மாப்பிள்ளை வீட்டுக்கும் வருவாங்க..?"

"நரேந்திரா..! என்னப்பா இப்படிக் கோபப்படற..?"

"கோபப்படாம என்ன செய்யச் சொல்கிறீங்கம்மா..? இது வரைக்கும் இல்லாத வழக்கத்தை இவன் கொண்டு வருகிறான்.. அதுக்கு கோபப் படாம கொஞ்ச சொல்கிறீங்களா..?"

"அண்ணா.. அவங்களை நான் வரச்சொல்லலை..."

"பின்னே..?"

"அவங்கதான் இங்கே வரனும்னு சொன்னாங்க.."

"நீ வேண்டாம்ன்னு சொல்லியிருக்கனுமா இல்லையா..?"

"இதில் இத்தனை பார்மாலிட்டீஸ் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதே அண்ணா..."

"என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே..."

இந்த வார்த்தைக்கு.. உங்களை எதற்காக கேட்க வேண்டும் என்ற கேள்வியினை சுரேந்திரன் நரேந்திரனைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்று மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ஆவலாக எதிர்பார்த்தார்கள்...

அப்படி மட்டும் நடந்து விட்டால்.. ஆயிரத்து ஐந்து தேங்காய்களை உடைப்பதாக அவர்களின் மனைவிமார்கள் வேண்டிக் கொண்டார்கள்...

கடைசியில் பார்த்தால்.. அந்த அன்புச் சகோதரர்களின் எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை.. அவர்களின் ஆசை மனைவிகளின் வேண்டுதலும் பலிக்கவில்லை... மாறாக...

"வேண்டும்ன்னா.. அவங்களை வர வேண்டாம்ன்னு நான் சொல்லி விடவா அண்ணா..?" என்று தான் சுரேந்திரன் கேட்டான்..

நரேந்திரனாவது உச்சானிக் கொம்பிலிருந்து இறங்காமல் இருப்பான் என்று பார்த்தால்.. அவனோ..

"சேச்சே.. அது நல்லாயிருக்காது சுரேன்.. வர வேண்டும்ன்னு கிளம்பிக்கிட்டு இருக்கிறவங்களை வராதேன்னு சொன்னா அது முறையாய் இருக்காது.. நம்ம குடும்பத்துக்கு அது வழக்கமில்லை.. அவங்க வரட்டும்.." என்று மலையிறங்கி விட்டான்..

"ஸாரிண்ணா.." வருத்தப்பட்டான் சுரேந்திரன்...

"போடா முட்டாள்.. இதுக்குப் போய் எதுக்காக இவ்வளவு வருத்தப்படறே.." பெருந்தன்மையாகப் பேசினான் நரேந்திரன்..

"நீங்க சொன்னதைப் போல நான் உங்களை ஒருவார்த்தை கேட்டிருக்கனும்.."

"உனக்கு இதில் இத்தனை விவரம் இருக்கும்ன்னு தெரியுமா..? காதல் உன் சொந்த விசயம் சுரேன்.. உனக்குப் பிடித்த பெண்ணை நீ தேர்வு செய்தாய்.. அதில் நாங்க தலையிடவே மாட்டோம்.. கல்யாணம் குடும்பங்கள் சேர்ந்து முடிவு பண்றதுடா.. அதில ஆயிரம் சாஸ்திரம் சம்பிரதாயம் இருக்கும்.. அதை நாம பார்க்கனும்.. அதுக்காகத்தான் நான் கோபப்பட்டேன்.."

"அதனால் என்னண்ணா.. என்மேல் உங்களுக்கு இல்லாத உரிமையா..?"

அவர்கள் கட்டித் தழுவிக் கொள்ளாத குறையாகப் பேசிக் கொண்டே போய்விட.. மகேந்திரனும்.. யுகேந்திரனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

இப்படிப்பட்ட பாசப் பிணைப்பு தங்களுக்குள் இருக்கிறதா என்ற கேள்வி அவர்கள் நெஞ்சில் எழுந்தது.. ஏன் அவ்வாறு இல்லை என்ற ஏக்கமும் கூடவே சேர்ந்து எழுந்தது.. அதை அவர்களின் மனைவிமார்கள் இனம் கண்டு கொண்டார்கள்...

'ஆஹா.. இரும்பு இளகுதே...' மீனலோசனி சுதாரித்தாள்...

"எத்தனை நேரம்தான் இந்த நாடகத்தைப் பார்த்துக் கிட்டு உட்கார்ந்திருப்பீங்க..?"

சௌதாமினி எழுந்து போய் விட்ட தைரியத்தில் அவள் கேட்க.. பிரபாவதி அவள் போட்டுக் கொடுத்த தடத்தில் கால் பதித்தாள்..

"அதுதானே.. அவங்களைப் பாருங்க.. உள்ளுக்குள்ளே பகையை வைச்சுக்கிட்டு.. வெளியே சிரிச்சு மழுப்பிக்கிறதை.. கேட்டிங்களா அக்கா.. பெரியவர் மனசுக்குள்ளே சுரேந்திரன் மேலே கோபமிருக்கு.. அவரிடம் கேட்காம சுரேனா ஒரு முடிவெடுத்திருக்காரே.. அதைப் போல சின்னவர் மனசிலயும் பெரியவர் மேலே கோபமிருக்கு.. இவர் முடிவெடுத்ததை அவர் தட்டிக் கேட்டுட்டாரே.. ஆனாலும் பாருங்கக்கா.. இரண்டு பேருமே கட்டித் தழுவிக்காத குறையாய் பேசிக்கிட்டே போகிறதை..

என்னவோ ராமர்.. லட்சுமணர் போலவேதான் போஸ் கொடுத்துக்கிட்டு போகிறாங்க... மனசுக்குள்ளே ஆயிரம் இருக்கு.."

"ஆயிரமா..? குறைச்சுச் சொல்றியே பிரபா.. அது கோடி இருக்கும்..."

"இருக்கும்.. இருக்கும்..."

யார் மனதில் என்ன இருக்கிறது என்று மகேந்திரனும் யுகேந்திரனும் நன்றாகவே அறிவார்கள்...

கோடி இருப்பது அவர்களின் மனைவிகளின் மனதில்தான் என்பதும் அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும்...

நடிப்பது நரேந்திரனும்.. சுரேந்திரனும் அல்ல.. அவர்கள்தான் என்பதையும் அவர்களின் மனச்சாட்சி தெள்ளத் தெளிவாக அறியும்..

இருந்தும் அவர்கள் மனைவிகளின் பேச்சை ஆமோதித்துச் சிரித்தார்கள்...

என்ன செய்வது..? ராஜா ராஜேந்திர பூபதியின் மகன்களாக இருந்தாலும் அவர்களுடைய மனைவிகளுக்கு அவர்கள் கணவன்களாகிப் போய் விட்டார்களே.. இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் போனால்தானே அவர்களிடம் இருக்கும் அபத்தங்களை அவர்களின் மனைவிகள் கண்டும் காணாமல் போவார்கள்..?

குடும்ப வண்டி ஓட வேண்டாமா..?

நிவேதிதா தேவியின் குடும்பத்தை வரவேற்க மணிமுத்தாறு அரண்மனை தயாரானது..

அந்த ராஜ குடும்பத்தின் இளைய மருமகளைப் பார்க்க.. மீனலோசனியின் குடும்பமும்.. பிரபாவதியின் குடும்பமும் மணிமுத்தாறு அரண்மனைக்கு வந்து இறங்கி விட்டார்கள்.. இளைய சகோதரனின் வருங்கால மனைவியைப் பார்க்கவென்று கூடப் பிறந்த பெண்களான மாலினி தேவியும்.. பூர்ணிமா தேவியும் குடும்பத்துடன் வந்து விட்டார்கள்..

அரண்மனை 'ஜே ஜே' என்று திருமணக் கொண்டாட்டத்துடன் இருந்தது.. இந்தக் கொண்டாட்டம் நரேந்திரனுக்கும்... வித்யாவிற்கும் திருமணம் நடந்தபோது எங்கே போய் ஒளிந்து கொண்டிருந்தது என்ற நினைவில் வித்யா லேசாக மனம் நைந்தாள்...

'நீயென்ன இந்த மாளிகையின் மகாராணியாக வேண்டும் என்றா ஆசைப்பட்டாய்..? நரேந்திரனின் மனதினில் மகாராணியாக வேண்டுமென்றுதானே ஆசைப்பட்டாய்..?' அவள் மனம் அவளை அதட்டியது...

"எப்படியிருக்க வித்யா..?"

பிறந்த வீட்டிற்கு வந்த மறுகணமே தோழியைத் தேடி வந்து விடும் பூர்ணிமா.. அன்றும் அது போல வந்து வித்யாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்...

"ஃபைன்..."

இதைச் சொல்லும் போது அவள் மனம் 'பொய்' என்று கூவியது...

'நீ நல்லாவா இருக்கே..?'

பேக்டரியில் ரங்கதுரையுடனும் வீட்டில் மற்ற இரு மருமகள்களுடனும் போராடிக் கொண்டிருக்கும் அந்த வாழ்க்கையில் வித்யா தோழியைப் பார்த்து முகம் மலரச் சிரித்தாள்...

"எனக்கென்ன குறை..? நான் ரொம்ப நல்லாயிருக்கேன்..."

15

நதியோரம் நடந்த போது..

கூடவந்த கார் மேகம்..

மழை பொழிய வேண்டி நின்றேன்..

மண்வாசம் நுகர நின்றேன்..

-நதியோரம் நான் நடந்த போது-

வரிசை கட்டி வந்து நின்ற வெளிநாட்டுக் கார்களின் அணிவகுப்பே மதன்பூர் ராஜகுடும்பத்தின் செல்வச் செழுமையை பறைசாற்றியது.. சுரேந்திரனுக்குப் பெண் கொடுக்கப் போகும் குடும்பத்தின் குடும்ப நிலைமையைக் கணிப்பதற்காக.. மாடியில் காத்திருந்து.. மறைந்திருந்து எட்டிப்பார்த்த மீனலோசனியின் விழிகள் விரிந்தன.. பிரபாவதிக்கு அப்படியெல்லாம் எதுவும் ஏற்பட வில்லையென்றாலும் அவள் முகத்தில் ஈயாடவில்லை...

"பிரபா..."

"அக்கா..."

"வந்திருக்கிறவங்க ரொம்பப் பெரிய இடம்தான் போல இருக்கே பிரபா..."

"அதை நினைத்தால்தான் எனக்கு பயமா இருக்குக்கா.."

"எதுக்கு இந்த பயம்..?"

"நாம என்னதான் ராஜ பரம்பரைன்னு சொல்லிக்கிட்டாலும் இவங்க பக்கத்தில் கூட நம்ம பிறந்த வீடு நிற்கவே முடியாது போல இருக்கேக்கா..."

"எனக்கும் அந்த எண்ணம்தான் பிரபா.."

"வருகிறவ நம்மை மதிப்பாளா..? மாட்டாளா..?"

மீனலோசனிக்கும் அதே எண்ணம்தான் என்றாலும்.. அவள் வேறு ஒன்றை நினைத்தாள்.. சிரித்தாள்...

"என்னக்கா.. சிரிக்கிறிங்க..?"

அவளது சிரிப்பிற்கான காரணத்தை அறியும் ஆவலுடன் பிரபாவதி கேட்டாள்...

எந்தவொரு இக்கட்டிலும் அதை மாற்றி.. மற்றவர்களை மாட்டி விடும் சாதுர்யம் படைத்த மீனலோசனி இப்போது

எதை நினைத்துச் சிரிக்கிறாள்.. யாரை மாட்டி விட நினைக்கிறாள் என்று அவளுக்குத் தெரிய வேண்டாமா..?

மீனலோசனி அவளை ஏமாற்றவில்லை.. அவள் சொன்ன பதிலைக் கேட்ட பிரபாவதிக்கு ஆச்சரியம் உண்டானது.. அதை அவள் நினைத்தும் பார்க்க வில்லையே..

"ஏன் பிரபா.. நாம பெரிய குடும்பத்தில் பிறந்தவங்க.. அங்கே சுத்தி.. இங்கே சுத்தி.. இந்த மணிமுத்தாறு ராஜவம்சத்திலே பெண்ணெடுத்து.. பெண் கொடுத்து நாமும் ராஜ வம்சம்தான்னு சொல்லிக்கிறவங்க.. நமக்கே இந்த பயம் வந்தா.. வெறும் கையை வீசிக்கிட்டு வந்த அந்த வித்யாவின் கதி என்னவாகும்..?"

'ஓ..! இப்படியொன்னு இருக்கில்ல...'

பிரபாவதி மீனலோசனியைப் பார்த்துச் சிரித்தாள்.. அவளுக்கு இது தோன்றவில்லையே...

அவளைச் சொல்லியும் குற்றமில்லை.. பிரபாவதி வளர்ந்த வளர்ப்பு அப்படி.. அவளுடைய அப்பா ராஜா ரகுநாதன் பெருந்தன்மையே வடிவானவர்.. அம்மா கோசலை தேவியோ அதிர்ந்து கூடப் பேச மாட்டாள்.. அண்ணன் பிரகாஷ் ரகுநாதன் நியாயத்திற்கு பெயர் பெற்றவன்.. நரேந்திரனின் கடைசித் தங்கையான பூர்ணிமா தேவியின் நியாய குணத்திற்காகவே அவளைக் காதலித்து.. காத்திருந்து.. கை பிடித்தவன்...

இப்படிப்பட்ட வீட்டில் பிறந்து வளர்ந்த பிரபாவதிக்கு சூது.. வாதை சொல்லிக் கொடுத்தவள் மீனலோசனிதான் அவளைச் சொல்லியும் குற்றமில்லைதான்.. அவள் வளர்ந்த வளர்ப்பு அப்படி...

அவளைப் பெற்ற தந்தையான துக்காராம் மணிமுத்தாறு அரண்மனையில் பெண் கொடுத்தே

ராஜ வம்சத்தைச் சேர்ந்த வம்சமென்று சொல்லிக் கொள்ளும் பரம்பரையில் பிறந்தவர்.. அவருடன்

பிறந்த சௌதாமினி தேவியை ராஜேந்திர பூபதிக்கு திருமணம் செய்து கொடுத்த போதே.. அவருடைய மகளையும் அந்தக் குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்து விடும் கனவுகளை வளர்த்துக் கொண்டவர்.. இத்தனைக்கும் அப்போது அவருக்கு திருமணமாகியிருக்கவில்லை...

காலப் போக்கில் அவரின் கனவுப்படியே மீனலோசனி பிறந்து.. தகப்பனின் கனவுகளை சுமந்து வளர்ந்து பெரியவளாகி மணிமுத்தாறு அரண்மனையின் வாரிசுகளில் ஒருவனைத் திருமணம் செய்யும் பருவத்திற்கு வந்த போது மகேந்திரனைக் காதலிக்கும்படி துக்காராம்தான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தார்..

"அம்மாடி மீனா.. இந்தப் பெரியவன் நரேந்திரன் இருக்கிறானே.. அவன் சுமைதாங்கிக் கல்லாய் பிறக்க வேண்டியவன்.. தப்பிப் போய் மணிமுத்தாறு அரண்மனையில் மூத்த மகனாய் பிறந்திருக்கான்.. எவனாவது கிரண்பூர் ராஜ வம்சத்துப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்த சமஸ்தானத்துக்கு ராஜாவாகப் போகிற வாய்ப்பை வேண்டாம்ன்னு சொல்லுவானோ.. இவன் சொல்லியிருக்கான்.. இந்தப் பிழைக்கத் தெரியாதவனெல்லாம் உனக்கு வேண்டாம்.."

"சரிங்கப்பா..."

"யுகேந்திரனுக்கும் உனக்கும் ஒரே வயது.. அதனால் அவன் பக்கமும் நீ பார்வையைத் திருப்பாதே..."

"ஆகட்டும்ப்பா..."

"இந்த மகேந்திரன்தான் உனக்கேத்த ஜோடி.. பிழைக்கத் தெரிந்தவன்.. அவனைப் பிடித்துக்க..."

இப்படியாகத்தானே.. மணிமுத்தாறு அரண்மனையின் வாரிசுகளில் ஒருவனைக் கணக்குப் பண்ண மகளுக்கு கற்றுக் கொடுத்தார் துக்காராம்.. அவளும் தந்தையின் சொல்படி மகேந்திரனை தன் கைக்குள் கொண்டு வந்து விட்டாள்..

அப்போது தான் நரேந்திரனை அவளுக்கு மணமுடிக்கப் பெண் கேட்டாள் சௌதாமினி... துக்காராமும்...

"அதுக்கென்னம்மா.. உன் ஆசைப்படியே செய்துட்டால் போகுது.." என்று சொல்லி விட்டார்..

"அப்பா.." மீனலோசனி திகைத்த போது..

"பொறு மகளே.. இது ராஜதந்திரம்.." என்று மர்மமாகப் புன்னகை செய்தார்...

"என்னப்பா விசயம்..? எனக்கும் சொல்லுங்க..?" மீனலோசனி வற்புறுத்தினாள்..

"பாரும்மா.. நான் உன்னை மகேந்திரனைக் காதலின்னு சொன்னப்ப மணி முத்தாறு அரண்மனையில கடன் தொல்லை இருந்தது.. பேக்டரியும்.. மில்லும் பிரச்னையில் இருந்தது..."

"அதுக்காக..?" மீனலோசனி குழம்பினாள்..

"பெறும்மா.. நான்தான் சொல்லிக்கிட்டே வருகிறேனில்ல.. இப்ப அப்படியில்ல.. கடன் தொல்லை முடிஞ்சு.. அரண்மனையில பாலாறும்.. தேனாறும் பாய்ந்து ஓடிக்கிட்டு இருக்கு.. அதோடு அத்தனை பொறுப்பும் நரேந்திரனிடம் இருக்கு.."

"அதனால பெரியத்தானை நான் கல்யாணம் பண்ணிக்கனும்னு சொல்கிறிங்களா..?" என்று கேட்ட மீனலோசனி அதற்கும் தயாராகத்தான் இருந்தாள்..

"அது என்ன தேவைக்கு..? அவன் உழைப்பான்.. அவன் தம்பிகள் உட்கார்ந்து சாப்பிடுவாங்க.. நீயும் அவன்கூட தியாகச் செம்மலாகனுமா..? அதற்கா நான் மகளைப் பெற்றிருக்கேன்..?"

"இப்படிச் சொல்கிறவர் எப்படிப்பா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் சொன்னீங்க..?" மீனலோசனிக்கு புரியவேயில்லை..

"அதுதான் சாணக்கியத்தனம்.. இங்கே பாரு மீனா.. நரேந்திரனுக்கும் பெண் கொடுக்க பெரிய பெரிய இடத்திலிருந்தெல்லாம் 'நான்.. நீ'ன்னு போட்டி போடறாங்க.. அப்படி ஒரு இடத்தில அவன் கல்யாணம் பண்ணிக்கிட்டா யாருக்கு நஷ்டம்..?" அவர் மகளைப் பார்த்து கேட்டார்..

இந்தக் கேள்விக்கு அவளுக்குப் பதில் தெரியவில்லை..

"யாருக்குப்பா நஷ்டம்..?" என்று திருப்பிக் கேட்டாள்..

"ம்ஹீம்.. இத்தனை நாளாய் நான சொல்லிச் சொல்லி வளர்த்ததையெல்லாம் எப்படித்தான் மறக்கிறாயோ.. நமக்குத்தான் நஷ்டம் மீனா.. அதனால நாம என்ன செய்யனும் தெரியுமா..?"

"என்னப்பா செய்யனும்..?"

"நரேந்திரனின் கல்யாணத்தை தடுக்கனும்.."

"அது எப்படிப்பா முடியும்..? நாம மாட்டேன்னா அவருக்கு வேறு இடத்தில இருந்து உடனடியா பெண் பார்த்திர மாட்டாங்களா..?"

"அதைத்தான் தடுக்கனும்னு சொன்னேன் மீனா.. உடனடியாப் பெண் பார்க்க முடியாத சூழ்நிலைக்கு நரேந்திரனையும்.. அந்தக் குடும்பத்தையும் ஆளாக்கினா..?"

தகப்பனின் கேள்வியில் மீனலோசனியின் முகம் மலர்ந்தது..

"அப்பா..!"

அப்படித்தான் நரேந்திரனைச் சுற்றி சூழ்ச்சி வலை பின்னப் பட்டது... மீனலோசனி தன் விருப்பத்திற்கு மாறாக திருமணத்தை நிச்சயித்து விட்டார்கள் என்று திருமணத்திற்கு மூன்று நாள்கள் முன்னதாக மகேந்திரனைச் சந்தித்து அழுதாள்.. இத்தனை நாள்களாக என்ன செய்தாய் என்ற கேள்வியை அவன் கேட்டு விடாமலிருக்க.. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக பொய் கண்ணீர் விட்டாள்.. மகேந்திரன் இல்லாவிட்டால் செத்து

விடுவாள் என்று தேன் இருந்த பாட்டிலைக் காட்டி 'விசம்' என்று கதை சொன்னாள்..

அதுவரை காதலி துரோகம் செய்து விட்டாள் என்ற கொதிப்பில் இருந்த மகேந்திரன் குளிர்ந்து விட்டான்.. அவனுக்காக உயிர் தியாகம் (!?) செய்ய இருந்த காதலியின் உண்மைக் காதலில் (!?) மெய் சிலிர்த்து விட்டான்.. அவர்களின் தெய்வீகக் காதலை உடைக்க நினைத்த நரேந்திரனின் மீது அவனின் கோபம் திரும்பியது.. மீனலோசனி அவ்வாறு திரும்பச் செய்து விட்டாள்..

"உங்க அண்ணன்தான் என்னைப் பெண் கேட்கச் சொன்னாராம்.."

"நிஜமாகவா சொல்கிற..?"

"ஆமாம் அத்தான்.. இத்தனைக்கும் நம்ம காதலைப் பற்றி அவரிடம் ஜாடைமாடையாய் அப்பா சொன்னாராம்.."

"அதைக் கேட்டுமா.. அண்ணன் மனம் மாறவில்லை..?"

"அதுக்குப் பின்னாலேதான் இந்தக் கல்யாணத்திலே உறுதியாய் நின்னாராம்..."

"அப்படியா சொல்கிற..?"

"ஆமாம் அத்தான்.. நான் நினைக்கிறேன்.. அவருக்கு உங்க மேல பொறாமை.. வந்திருக்கும்ன்னு.."

"அது எதுக்கு...?"

"என்ன அத்தான் இப்படிக் கேட்டுட்டிங்க..? அவர் காதலில் தோற்றவர்.. நாம் காதலித்தா அவரால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியுமா..? நம்ம காதலை ஜெயிக்க அவர் விடுவாரா..?"

"மீனா..."

"ஆமாம் அத்தான்.. அவர் மனதில் விசம் இருக்கிறது.. அது உங்களுக்குப் புரியவில்லை.. வெளுத்ததெல்லாம் பால்ன்னு இருக்கறிங்க..."

"இப்பவே அண்ணனிடம் போய் கேட்கிறேன் பார்.."

"வேண்டாம்.. வேண்டாம்.. நமக்கு காரியம் முக்கியம்.. நாம் வேண்டும்ன்னா ஊரை விட்டு ஓடிறலாமா..? நீங்க மணிமுத்தாறு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவங்க.. உங்க கல்யாணம் ஓடிப் போய் நடக்கிற கல்யாணமா ஆகிடனும்னு உங்க அண்ணன் சதி செய்துட்டாரே அத்தான்.. அவருக்கு மட்டும் ஊர்பார்க்க அரண்மனையில் கல்யாணம் நடக்கும்.. உங்களுக்கு ஒளிஞ்சு மறைஞ்சு கல்யாணமா..? ராஜா ராஜேந்திர பூபதியின் மகனுக்கு மணிமுத்தாறு அரண்மனையில் கல்யாணம் செய்து கொள்கிற உரிமை இல்லையா..?"

"ஏன் இல்லை..? இப்போச் சொல்கிறேன் மீனா.. அதே அரண்மனையில் குறித்த முகூர்த்தத்தில் ஊர் பார்க்க உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்.. நான் நடத்திக் காட்டுகிறேன்..."

மீனலோசனி ஜெயித்து விட்டாள்.. மகேந்திரன் சொன்னதைச் செய்து விட்டான்...

16

நதியோரம் நடந்த போது..

அருகினிலே நீ வந்தாய்...

உன் மனதைத்தான் தந்தாய்..

இன்று ஏன் மாற்றம் கொண்டாய்..?

-நதியோரம் நான் நடந்த போது-

ஊரும்.. உலகமும் நினைத்ததைப் போல மகேந்திரன் அத்தனை சுயநலமான மனிதனில்லை.. கொட்டிக் கொட்டிக் குளவியாக்குவதைப் போல மீனலோசனி அவனை அது போல ஆக்கி விட்டாள்..

எந்த ஒரு ஆணுக்கும்.. அவனை விடத் தகுதியான ஆண்மகனைப் புறக்கணித்து நீதான் எனக்கு வேண்டும் என்று ஒரு பெண் வந்து நின்று விட்டால் மனதிற்குள் ஒரு வெற்றிப் பெருமிதம் ஏற்பட்டு விடும்.. அதுதான் மகேந்திரனின் மனதிலும் ஏற்பட்டது..

நரேந்திரன் சாதனையாளன்.. மூழ்க இருந்த மணிமுத்தாறு அரண்மனையின் கௌரவத்தைக் காப்பாற்றியவன்.. கடனில் இருந்த பேக்டரியையும்.. மில்லையும் லாபத்தில் ஓட வைத்தவன்.. அவன் புகழையே பாடிக் கொண்டிருந்த உற்றார்.. உறவினரின் மத்தியில் அவனின் தம்பிகள் அடையாளத்தை இழந்து கொண்டிருந்தார்கள்.. எங்கும் நரேந்திரனைப் பற்றிய பிரமிப்பான பேச்சே ஒலித்துக் கொண்டிருக்க... அவனுக்கு நிச்சயிக்கப் பட்ட பெண்ணோ அவனை விட்டு அவனுடைய தம்பியான நரேந்திரனை விரும்புகிறாள்..

இந்த ஒன்றே மகேந்திரனை மாற்றியது.. அவன் மீனலோசனி ஆட்டி வைத்தால் ஆடும் பம்பரமாக மாறிப் போனான்...

"எப்படி...?" மகளிடம் கேட்டார் துக்காராம்..

"இதை நான் கேட்கனும்ப்பா.. இதைச் செய்தால் இது நடக்கும்ன்னு எப்படிப்பா பிளான் போடறிங்க...?" மீனலோசனி வியந்து போனாள்..

"அது ஒருவகையான கணக்கும்மா.. அதை நீயும் இனிப்போட ஆரம்பிக்கணும்.. இது வரைக்கும் நீ என் மகள் மட்டும்தான்... இனி மணிமுத்தாறு அரண்மனையின் மருமகள்... எல்லாத்துக்கும் என் ஆலோசனையை எதிர்பார்க்காமல் நீயே எல்லாத்தையும் செய்து முடிக்கக் கத்துக்கனும்.. இப்பப் பார்த்தியா.. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிச்சிருக்கோம்.. நரேந்திரனோட கல்யாணத்தையும் நிறுத்தி விட்டோம்.. மகேந்திரனையும் நம்ம பேச்சைக் கேட்கிறதைப் போலக் கொண்டு வந்துட்டோம்.. இதுதான் கணக்குங்கிறது.. இந்தக்

கணக்கை நீயும் போட ஆரம்பித்தா வாழ்க்கையில் எங்கேயோ போய் விடுவ..."

மீனலோசனி அன்று கணக்குப் போட ஆரம்பித்தவள்தான்.. இன்றுவரை அதை நிறுத்த வில்லை.. துக்காராமின் பாசறையில் கணக்குப் போடக் கற்றுக் கொண்டவள் சாதுர்யமாக அதை வாழ்க்கையில் கையாண்டாள்.. மகேந்திரனைப் பொறுத்தவரை அவள் போட்ட கணக்குகள் அப்படியே நிறைவேறின.. மகேந்திரனின் வழிமுறையைப் பின்பற்றி யுகேந்திரனும் திருமணம் பண்ணிக் கொண்டபோது மீனலோசனி மனதுக்குள் 'சபாஷ்' போட்டுக் கொண்டாள்.. பிரபாவதியையும் அவளது கணக்கைப் பின்பற்ற வைத்தாள்...

மனிதர்கள் போடும் கணக்குகளே நிறைவேறிக் கொண்டிருந்தால் தெய்வம்.. பார்த்துக் கொண்டே-யிருக்குமா...?

மீனலோசனியின் கணக்கிற்கு அப்பாற்பட்டு எங்கோ இருந்த வித்யா மானசீகமாக நரேந்திரனைக் காதலிக்க ஆரம்பித்தாள்.. அந்தக் காதல் மீனலோசனியின் காதலைப் போல கணக்குப் போடும் காதலாக இல்லாமல் புனிதமான காதலாக இருந்து வைத்ததில் அவளின் காதல் ஜெயித்து விட்டது...

மீனலோசனியின் கணக்கு பொய்த்துப் போனது.. நடக்காது என்று அவள் நினைத்திருந்த நரேந்திரனின் திருமணம் நடந்தே விட்டது.. அதிலும் அதிபுத்தி சாலியான.. நரேந்திரனை அவனுக்காக மட்டுமே நேசிக்கிற வித்யா அவனுக்கு மனைவியாகி விட்டாள்..

அதை மீனலோசனியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதிலும் எந்த அரண்மனையின் மருமகளாக வேண்டும் என்று பிறந்தது முதல் அவள் தவமிருந்தாளோ.. அந்த அரண்மனை வித்யாவின் உடைமையாகி விட்ட போது அவளுக்கு மூச்சே நின்று விடும் போல ஆகிவிட்டது.. மகேந்திரன் வெட்டி அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த பேக்டரியை விட்டு வெளியேற்றப் பட்டான்.. இதைவிடக்

கொடுமையாக அவன் பொய் கணக்கு எழுதி கொள்ளையடித்துக் கொண்டு வந்த பண வரத்து நின்று போய் விட்டது...

'எல்லாம் யாராலே...? இந்த வித்யாவினாலே...'

மீனலோசனியின் மனதில் வன்மம் வந்தது.. அவள் வித்யாவின் சிறகையொடித்து மூலையில் தள்ள நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்...

பிரபாவதிக்கு அந்த அளவிற்கு வன்மமில்லை.. வித்யாவின் மீது அவளுக்கு கோபமிருந்தாலும் அவளுடைய அண்ணன் பிரகாஷின் மனைவியும் நரேந்திரனின் செல்லத் தங்கையுமான பூர்ணிமாவின் உயிர்தோழி வித்யா என்பதினால் பிரபாவதி தன்

கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அடக்கியே வாசித்தாள்...

"ஆக அந்த வித்யாவோட கொட்டத்தை அடக்க ஒருத்தி வந்தாச்சுன்னு சொல்லு.." மீனலோசனியின் கண்கள் மின்னின...

"வருகிறவ சுரேந்திரனுக்கு மனைவியாகப் போகிறவ... அவனோ பெரியண்ணனுக்கு பாத பூஜை பண்ணுகிறவன் அதே மரியாதையை பெரியண்ணிக்கும் கொடுக்கிறவன்.. அப்படியிருக்கும் போது அவனுடைய மனைவியை வித்யாவை வெறுக்கும்படி விட்டு விடுவானா...?"

"உன் ஹஸ்பெண்டும்.. என் ஹஸ்பெண்டும் கூடத்தான் பெரியத்தானுக்கு பாத பூஜை பண்ணிக்கிட்டு இருந்தாங்க... கல்யாணம்ன்னு ஒன்று நடந்து நாம அவங்க வாழ்க்கைக்குள்ளே வந்த பின்னாலே அதை நடக்க விட்டோமா...?"

"ஆமாமில்ல..."

"ஆமாம்தான்.. இல்லையென்ற வார்த்தையே இங்கே வரக்கூடாது.."

"நாம செய்ததை மதன்பூர் மகாராஜாவின் மகளும் செய்வான்னு என்ன நிச்சயம் அக்கா...?"

"அங்கே பார்.. அவள் கண்ணைப் பார்..."

மீனலோசனி சொல்ல இவள் எங்கே பார்க்கச் சொல்கிறாள் என்ற நினைவுடன் பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தாள் பிரபாவதி..

அங்கே மிக அலட்சியமான பார்வையுடன் காரிலிருந்து இறங்கி நின்றாள் நிவேதிதா தேவி.. அவள் கண்களில் தெரிந்த அந்த அலட்சியத்தை மீனலோசனியின் கண்கள் கூடப் பிரதிபலித்ததில்லை...

"இவதானே நிவேதிதா...?"

"இவதான் பிரபா.. நாமதான் அத்தை ரூமில இருந்த படத்தில் பார்த்தோமே..."

"இந்த சுரேந்திரன் செய்ததை நினைச்சுப் பார்த்தீங்களாக்கா...?"

"அதை நினைத்தால்தான் என் வயிறு எரியுதே பிரபா.. என் வீட்டுக்காரரைப் பார்த்து பேக்டரியை விட்டு வெளியே போன்னு சொன்ன ஆளில்லையா அவன்...?"

'நீ அதிலேயே இரு....' கடுப்பானாள் பிரபாவதி

"நான் அதைச் சொல்லலைக்கா..."

"வேற எதைச் சொன்ன..?"

"இந்த வீட்டுக்குள்ளே அத்தையும்.. பெரியத்தானும்.. வித்யாவும் மட்டுமா இருக்கிறாங்க...? நாமள்ளாம் இல்லையா...? நம்ம கண்ணிலே அவன் காதலியோட போட்டோவைக் காட்டாம அவங்க கண்ணிலே மட்டும் காட்டியிருக்கான் பார்த்தீங்களா...? நான் அதைச் சொன்னேன்..." எடுத்துச் சொன்னாள் பிரபாவதி..

"நம்மைத்தான் அவன் கணக்கிலேயே எடுத்துக்கலையே பிரபா..." மீனலோசனி வயிறெரிந்தாள்..

"அப்படியிருக்கப்ப அவனுக்கு மனைவியாகப் போகிற இந்த நிவேதிதா மட்டும் நம்மைக் கண்டுக்குவாளா...?"

"நாம கண்டுக்க வைப்போம்..." கண்சிமிட்டினாள் மீனலோசனி..

"எப்படிக்கா..?" பிரபாவதி ஆவலுடன் கேட்டாள்...

"அ.. அ... எல்லாத்தையும் முதலிலேயே போட்டு உடைத்து விட்டால் எப்படி பிரபா...? பொறுத்திருந்து பார்..." மர்மச் சிரிப்புடன் சொன்னாள் மீனலோசனி..

'இவ எதையும் செய்வா.. அண்ணன் சொல்வதைப் போல எப்பவும் இவளிடம் நாம ஜாக்கிரதையாகத்தான் இருக்கனும்...'

எப்போதும் போல அப்போதும் நினைத்துக் கொண்டாள் பிரபாவதி...

"சரி சரி... இங்கேயே நின்றுக்கிட்டிருந்தா எப்படி பிரபா..."

"வேற என்ன செய்கிறதுக்கா...?"

"அடக்கடவுளே..! இது கூட உனக்குத் தெரியாதா..?" மீனலோசனி மட்டம் தட்ட.. பிரபாவதிக்கு கடுப்பு வந்தது..

"உங்களைப் போல எல்லாம் தெரிந்தவங்களா என்னை எங்க வீட்டிலே வளர்த்து விடலையேக்கா..." பணிவுடன் சொல்வதைப் போல மறைமுகத் தாக்குதலைக் கொடுத்தாள் பிரபாவதி...

'ஜாடை பேசுகிறா...'

பல்லைக் கடித்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாகசமாக சிரித்து வைத்த மீனலோசனி உடனடியாக வெள்ளைக் கொடியை பறக்கவிட்டாள்...

"அது வேற ஒன்றுமில்லை பிரபா.. அவங்க வீட்டுக்குள்ளே வரும்போது நாம மூத்த மருமகள்களாக லட்சணமாக அரண்மனையின் ஹாலில் நிற்க வேண்டாமா...? அப்போத்தானே அத்தை அவங்களுக்கு நம்மை அறிமுகப்

படுத்துவங்க..? இல்லைன்னா கூப்பிட்டா அறிமுகப் படுத்தி வைக்கப் போகிறாங்க..?"

மீண்டும் மீனலோசனியின் புத்தி கூர்மையில் அயர்ந்து போனாள் பிரபாவதி..

எத்தனை தடவைதான் இது நமக்குத் தோணலையே என்று பிரபாவதி நினைத்துக் கொள்வாள்...?

அவளுக்கே அது அலுப்பாகி விட இது வேலைக்கு ஆகாது என்ற நினைவுடன் அதை கை விட்டாள்..

"இப்படிச் சொல்லியிருந்தா முதலிலேயே அத்தையுடன் நாமும் சேர்ந்து கீழேயே நின்றிருக்கலாமே..?"

"அது என்ன தேவைக்கு...?"

இவள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று மண்டை காய்ந்து போனாள் பிரபாவதி...

"என்னக்கா நீங்க இப்படியும் சொல்கிறிங்க.. அப்படியும் சொல்கிறீங்க..? என்னதான் சொல்ல வர்றீங்க..?"

உண்மையில் ஏன் அக்கா இப்படிக் கழுதைபோல முன்னால் போனாக் கடிக்கறிங்க.. பின்னால் வந்தால் உதைக்கறிங்க என்றுதான் கேட்க ஆசைப்பட்டாள் பிரபாவதி..

அப்படிக் கேட்டு.. அதனால் மீனலோசனி முகம் திரும்பிக் கொண்டு விட்டால் இது போன்ற ஆலோசனைகளுக்கு பிரபாவதி எங்கே போவாள்..?

தன் கையே தனக்கு உதவி என்று நிமிர்ந்து நிற்க அவளென்ன வித்யாவா...?

அதனால் சொல்ல நினைத்ததை வேறு வகையில் சொன்னாள் பிரபாவதி.. அதில் மகிழ்ந்துபோன மீனலோசனி மிகக்கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

'மாடு' என்றால் திட்டு.. அதையே 'பசுவைப் போல..' என்று சொன்னால் பாராட்டு.. மிக அழகான உலகம் இது..!

17

நதியோரம் நடந்த போது

நிலவின்மீது ஆசை கொண்டேன்..

நான் தேடிச்சென்ற அந்தநாளில்..

அம்மாவாசை வந்ததும் ஏன்...?

-நதியோரம்.. நான் நடந்த போது-

"நாமளும் அத்தை கூடச் சேர்ந்து கீழே நின்றிருந்தா வந்தவங்களை கை கூப்பி வாங்க..

வாங்கன்னு அழைக்கனுமில்ல...? அது என்ன தேவைக்கு..?"

"ஓ... சரியாச் சொன்னிங்கக்கா.. வருகிறவங்க என்னதான் மதன்பூர் ராஜவம்சம்ன்னாலும் நாம

இந்த அரண்மனைக்கு மூத்த மருமகள்களாய் வந்த வங்களாச்சே.."

"அதேதான்.. அதனாலதான் முதலிலேயே கீழே போகலை.."

"ஆனா அந்த வித்யா அத்தை கூட நின்னு சலாம் போட்டுக்கிட்டு இருப்பாளே..."

"அது அவ தலைவிதி... நம்ம தலைவிதியே வேற.. அவங்க உள்ளே வந்து ஹாலில் உட்காரனும்.. நாம ஒய்யாரமா மாடிப்படியில் இறங்கனும்.."

"அது எதுக்குக்கா...?"

"அப்பத்தானே வந்திருக்கிறவங்க நம்மை திரும்பிப் பார்ப்பாங்க...?"

மீனலோசனியின் அறிவுக் கூர்மையை நினைத்து வியந்து வியந்து பிரபாவதிக்கு தலைவலியே வந்துவிட்டது..

"போதும்க்கா.. இனித் தாங்காது.."

"இதுக்கே தாங்காதுன்னா.. இன்னும் நிறைய இருக்கே பிரபா.."

"இன்னுமா...? இப்பவே எனக்கு கண்ணைக் கட்டுதுக்கா.."

"கண்ணைச் சிமிட்டிக்கோ... இந்நேரம் கீழே எல்லோரும் உட்கார்ந்திருப்பாங்க.. அந்த வித்யா வேலைக்காரியைப் போல வந்தவங்களுக்கு ஜீஸ் கொடுமுத்துக்கிட்டு இருப்பா.. நாம மாடியிறங்க இதுதான் நல்ல சமயம்..."

மீனலோசனி சொன்னதைப் போல்தான் நடந்தது.. அவர்கள் மாடியிறங்கியபோது.. ஹாலில் அமர்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்...

"இதுதான் என் இரண்டாவது மருமகள்.. மீனலோசனி.."

சௌதாமினி அறிமுகத்தை ஆரம்பித்து வைக்க.. ரகசியமாக பிரபாவதியைப் பார்த்த மீனலோசனி கிசுகிசுப்பாக...

"எப்படி..?" என்று கேட்டுவிட்டு கண் சிமிட்டினாள்..

பிரபாவதி பதில் சொல்லாமல் வந்திருந்தவர்களை பார்வையிட்டாள்... பெரிய மீசையுடனும் நரை முடியுடனும் இருந்த மிடுக்கான பெரியவர்தான் மதன்பூர் ராஜாவான கங்காதர் ராவ் என்று பிரபாவதியின் காதோரமாக மீனலோசனி கூறினாள்.. அவளுடைய மனைவி காயத்ரி தேவியென்ற கூடுதல் தகவலையும் சேர்த்துக் சொன்னாள்..

"பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறது அவருடைய மகனாம்.. பெயர் கௌதம் ராவாம்..."

அடுத்த தகவல் பறந்து வர.. இவளும் நம்மோடுதானே இருந்தாள் இந்த விவரமெல்லாம் இவளுக்கு எப்படித் தெரிந்து என்ற மலைப்பு பிரபாவதியின் மனதில் எழுந்து தொலைத்தது..

"அவதான் நிவேதிதாவோட அக்காவாம்.. பெயர் ஸ்வாதிகா தேவியாம்.."

மீனலோசனி கண்ணால் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தபோது அந்த ஸ்வாதிகா அமைதியான நதியைப் போல அமர்ந்திருந்தாள்..

'இவளுக்கு இப்படியொரு அக்காவா..!' பிரபாவதிக்கு ஆச்சரியமாக இருந்தது..

அது எப்படி அமைதியான நதியைப் போன்றவளும்.. ஆர்ப்பாட்டமான அருவியைப் போன்றவளும் கூடப் பிறந்தார்கள்..?

நிவேதிதாவைப் பாராததைப் போல இவர்கள் பார்க்க அவளோ.. அவர்களைப் பார்ப்பது கூட தகுதி குறைவான செயல் என்பதைப் போல அலட்சியத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள்...

"என்ன திமிர்..." பிரபாவதிக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"விடு பிரபா.. இப்ப நமக்கு இது முக்கியமில்ல.. இவகிட்ட வித்யா மாட்டனும்... அதுதான் முக்கியம்.."

நிவேதிதா வித்யாவையும் மதிக்கவில்லை.. ஆனால் வித்யா அதைப் பொருட்படுத்தவில்லை.. உன்னையும் உன் வீட்டினரையும் உபசரிப்பது என் கடமை.. அதைத்தான் செய்கிறேன் என்ற ரீதியில் அவள் உள்ளே போய்விட்டாள்.. மதிய விருந்தின்

போதும் அப்படித்தான்.. வித்யா பரிமாற முனைந்த போது நிவேதிதா எரிச்சலை அப்பட்டமாக முகத்தில் காட்டிக் கையை நீட்டி தடுத்தாள்.. வித்யா ஏனென்று கூடக் கேட்கவில்லை.. சட்டென்று அவள் பக்கத்தில் இருந்த ஸ்வாதிகாவின் தட்டில் பரிமாறிவிட்டு நகர்ந்து விட்டாள்..

விருந்தினர்கள் மாலை வரை இருந்தார்கள்.. அரண்மனையைச் சுற்றிப் பார்த்தார்கள்.. பேக்டரிக்கு போய் வந்தார்கள்.. கிளம்பும் போது.. கங்காதர்ராவ் சௌதாமினியைப் பார்த்து

"நீங்க எப்ப மதன்பூர் வருகிறீங்க..?" என்று கேட்டார்....

"சம்பந்தி.. இதை என் பெரிய மகன்தான் முடிவு செய்யனும்.." சௌதாமினி சொன்னாள்..

நிவேதிதாவின் முகம் சுருங்கியது..

"வாட் இஸ் திஸ் டாட்..." என்று கங்காதர்ராவின் முகம் பார்த்தாள்..

"என்னம்மா...?"

"இவங்கதானே சுரேனைப் பெற்றவங்க... இவங்க முடிவு சொல்லாம.. எதுக்காக சுரேனின் அண்ணனை இதில் இன்வால்வ் பண்றாங்க...?"

மீனலோசனியின் முகத்தில் பல்ப் எரிந்தது..

"சபாஷ் பிரபா.." என்று கொழுந்தனின் மனைவியிடம் குதூகலித்தாள்..

"சபாஷ் மீனான்னுதான் ஒரு பழைய படம் இருக்குன்னு என் பாட்டி சொல்லியிருக்காங்க.." பிரபா நொடித்தாள்

"அதை விடு பிரபா.. நடக்கிறதை கவனி..."

"கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்..."

"இந்த மதன்பூர் பொண்ணு மணி முத்தாறு அரண்மனையை தலைகீழாய் மாற்றிடும் போல இருக்கே.."

"மாற்றம் ஒன்று தானேக்கா மாற்றமில்லாதது..."

"எப்பேர்பட்ட வார்த்தைகள்.. எதற்காக பயன்டு- துன்னு பார்த்தியா.."

மீனாவின் கிண்டலில் பிரபா அவளை முறைத்தாள்.. நிவேதிதாவின் கேள்வியில் சுரேந்திரன் அவளை முறைத்தான்.. எதையோ பேசப் போனவனை பார்வையாலேயே தடுத்த சௌதாமினி இளைய மருமகளாக வரப்போகிறவளிடம் மென்மையாக முறுவலித்தாள்...

"இந்த வீட்டில் எல்லாமே நரேந்திரன்தான்ம்மா.. நான் பெற்றவளாக இருக்கலாம்.. வளர்த்ததெல்லாம் அவன்தான்

அவன் அண்ணன் மட்டுமில்லை.. தாயுமானவன்.. அதனால அவன் சொல்படிதான் இங்கே எல்லாமே நடக்கும்..."

"எல்லாமேன்னா..?" நிவேதிதா புருவங்களை உயர்த்த சௌதாமினிக்குப் பதிலாக சுரேந்திரன் பேசினான்..

"எல்லாமேன்னா.. எல்லாமும்தான் நிவி..."

"நம் கல்யாணமும் இதில் அடங்குமா சுரேன்...?"

"ஷ்யூர்..."

அழுத்தமான சுரேந்திரனின் பதிலில் நிவேதிதாவின் முகம் மாறியது..

"சப்போஸ்.. உங்க அண்ணன் நம்ம கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா...?"

நிவேதிதாவின் கேள்வியை கங்காதர்ராவே விரும்பவில்லை.. அவர் முகம் சுளித்து மகளை அதட்டினார்..

"என்ன நேரத்தில் எதைப் போசற நிவேதா..?"

"டாட்.. இவர் என்னைக் காதலிக்கிறவர்.."

"ம்ப்ச்.. பெரியவங்க பேசும்போது நீ அமைதியாய் இருக்க கற்றுக் கொள்.. ஸ்வேதிகாவைப் பார்த்தாவது நீ தெரிந்து கொள்ள வேண்டாமா...?"

வித்யாவிற்கு அங்கே நிலவிய பேச்சு சங்கடத்தைத் தந்தது.. நரேந்திரன் அங்கே இல்லை.. அவசர வேலையென்று திருநெல்வேலி வரை போயிருந்தான்..

'நல்ல வேளை.. அவர் முன்னால் இந்தப் பேச்சு நடக்கலை..' வித்யா ஆறுதல் பட்டுக் கொண்டாள்...

"என்னையே சொல்லாதீங்க டாட்.. இன்றைக்கு நாம் வருகிறோம்ன்னு இவரோட அண்ணனுக்குத் தெரிந்திருக்குமில்லையா...? அப்படியிருந்தும் அவர் இங்கே இல்லை.. அவர் வந்து முடிவு சொல்கிற வரைக்கும் நாம காத்திருக்கனுமா..?"

கங்காதர் ராவும் அதை மனதிற்குள் குறித்து வைத்திருந்தார்.. அவரின் கண்பார்வை படுவதற்காக எத்தனையோ கோடிஸ்வரர்கள் காத்திருக்க அவர் நரேந்திரனைச் சந்திப்பதற்காக மதன்பூரிலிருந்து கிளம்பி மணி முத்தாறுக்கு வந்திருக்கிறார்.. அப்படி வந்தவரை வரவேற்க நரேந்திரன் அங்கே இல்லையென்றால் அதற்கு என்ன அர்த்தம்...?

அதை அவர் வெளியே சொல்லி விட முடியாது.. அவரது உயரத்திற்கு அது அழகல்ல..

"நிவேதிதா.. அவருக்கு அவசர வேலை இருந்திருக்கலாம்.."

அவரின் தன்மையான பேச்சில் சுரேந்திரனின் கோபம் கொஞ்சம் குறைந்தது..

"அப்சல்யுட்லி யு ஆர் ரைட் அங்கிள்.. அண்ணன் மிக முக்கியமான அவசர வேலைக்காக திருநெல்வேலி வரைக்கும் போயிருக்கிறார்.. இப்போது வந்துவிடுவார்.."

"எப்ப சுரேன்.. அப்பாவும்.. நாங்களும்.. கிளம்பிப்போய் மதன்பூரில் ரீச் ஆனபின்னாலா..?"

"நிவி.. நான் உன் அப்பாவுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்.."

"ஊடே நான் பேசக் கூடாதுன்னு சொல்கிறிங்களா..?"

"தெரிந்தால் சரி..."

"வெரிகுட்... வி ஆர் லவ்வர்ஸ்.. குட் ஜோக்.."

சௌதாமினிக்கும் அதே கவலைதான்...

சுரேந்திரனும் நிவேதிதாவும் காதலர்கள்... ஆனால் அவர்களின் மோதல் அந்தக் காதலைச் சொல்லவில்லையே..

அந்த நேரத்தில் நரேந்திரன் அங்கேயிருந்தால் தேவலையென்று அவள் மனம் சோர்ந்தது.. அவள் மனது சென்று தூது சொல்லியதைப் போல நரேந்திரன் வந்து சேர்ந்து விட்டான்...

"அதோ நரேந்திரனே வந்து விட்டானே.." சௌதாமினி உற்சாகமானாள்..

"பெரிய பில்ட் அப்தான்.."

நிவேதிதா வாய்க்குள் முணுமுணுத்ததை மீனலோசனி கண்டுபிடித்து பிரபாவதியின் காதோடு சொன்னாள்.. நிவேதிதாவின் நரேந்திரனின் மீதான எதிர்ப்புணர்வு குறித்து அவர்களுக்குள் சந்தோசம் ஊற்றெடுத்தது..

நரேந்திரன் அவசரமாக உள்ளே வந்து கங்காதர்ராவிடம் கை குவித்து வணக்கம் சொன்னான்...

"ஐ ஆம் ஸாரி.. உங்களை வரவேற்க இங்கே இருக்க முடியாமல் போய் விட்டது.. தவிர்க்க முடியாத அவசர வேலை.."

அவன் வருத்தம் தெரிவித்த விதத்தில் கங்காதர்-ராவுக்கும் அவரின் குடும்பத்திற்கும் அதுவரை மனதிலிருந்த எரிச்சல் உணர்வு மறைந்து ஓடிவிட்டது.. நிவேதிதாவின் மனதிலிருந்து மட்டும் அது ஓடவில்லை..

18

நதியோரம் நடந்த போது...

நட்புசொல்லி வந்த தோழி..!

காதலியாய் மடி தாங்கும்போது

கரைந்து போனேன் அந்தநாழி .....

-நதியோரம் நான் நடந்த போது-

மேகங்கள் சூழ்ந்த ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள் வித்யா.. சற்றுமுன் நிர்மலமாக இருந்த வானத்தில் எப்போது கார்மேகங்கள் வந்து சூழ்ந்தன என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை..

"எதைப் பார்க்கிற வித்யா..?" பூர்ணிமா கேட்டாள்..

"இல்லை.. நாம வந்தப்ப வானம் தெளிவாத்தானே இருந்துச்சு..? எப்ப மழைமேகம் வந்துச்சுன்னு தெரியலையே.." வித்யா வானத்தைப் பார்த்தபடி சொன்னாள்..

"நீயென்ன வானிலை ஆராய்ச்சியா பண்ற..?" சிரித்தாள் பூர்ணிமா.. அந்தச் சிரிப்பு வித்யாவைத் தொற்றித் கொள்ளவில்லை.. ஏதோ ஓர்விதமான சிந்தனையுடனே இருந்தாள்.. அதை பூர்ணிமாவும் கவனித்தாள்.. அவளது நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன..

"அப்புறம்...?"

பூர்ணிமாவின் கேள்வியில் அவளை நிமிர்ந்து பார்த்தாள் வித்யா.. அவள் எதைக் கேட்கிறாள் என்று வித்யாவிற்கு புரியவில்லை..

"என்னடி..?"

"சொல்லுன்னு சொன்னேன்..."

"எதை...?"

"உன் மண்டைக்குள் குடைந்து கொண்டிருக்கும் கவலைகளை.."

வித்யாவின் தலையைத் தொட்டுக் காட்டி தலை சாய்த்துச் சிரித்தாள் பூர்ணிமா..

"ஏய்ய்..." வித்யாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.. ஆனால் அந்தச் சிரிப்பில் உயிர்ப்பில்லை..

"வித்யா.."

"ஊம்...?"

"பேக்டரியில் தொழிலாளர் பிரச்னையை அந்த ரங்கதுரை கிளப்பி விடுகிறானாமே.."

"யெஸ்.. பட்.. ஐ கேன் மேனேஜ்.. டோன்ட் ஒர்ரி..."

"அதுக்குப் பின்னாலே மகியண்ணனின் வேலையிருக்காமே.."

"இதை உனக்கு யார் சொன்னது...?"

"நீ ஏண்டி சொல்லலை...?"

"இதுதான் என் கேள்விக்கான பதிலா...?"

"நீ சொல்லியிருக்க வேணாமா வித்யா...?"

"ஏய்.. இது பெரிய விசயமில்லை பூர்ணி.."

"பெரிசோ.. சிறிசோ.. பிராப்ளம் வந்திருக்கு.. அதை என்னிடம் பகிர்ந்துக்கனும்னு நீயேண்டி நினைக்கலை...?"

பூர்ணிமாவின் மனத்தாங்கலில் வித்யாவின் மனம் நெகிழ்ந்தது.. இதுதான்.. இந்த அன்புதான்.. வித்யாவைக் கட்டிப் போட்டது.. யாரிடமும் ஒட்டிப் பழகாத வித்யாவை பூர்ணிமாவின் வீட்டில் தங்கிப் படிக்க ஒப்புக் கொள்ள வைத்தது.. பார்த்துக் கொண்டிருந்த வேலையையும்.. பார்க்கப் போன வேலையையும் துறந்துவிட்டு பூர்ணிமாவுக்காக ஊர் விட்டு ஊர் வரச் செய்தது..

"பூர்ணி.." வித்யா தோழியைக் கட்டிக் கொண்டாள்..

"நீயா தனியா மனதுக்குள்ளே வைத்துக்கிட்டு மறுகணுமா...? நான் உனக்கு இல்லையா...? உன் வருத்தத்தை என்னிடம் சொல்லனும்னு ஏண்டி உனக்குத் தோணலை...? பிரகாஷ் சொல்லி நான் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு..."

"அண்ணன் சொன்னாரா...? அவருக்கு எப்படித் தெரியுமா..?"

"அவருக்கு எல்லாம் தெரியும்.. யார் அவர்..?" பெருமையுடன் சிரித்தாள் பூர்ணிமா..

"அதைச் சொல்லு.. ஆணைப்பட்ட பூர்ணிமா தேவியின் காதலைப் பெற்ற வீராதி வீரனாச்சே.." வித்யாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்...

இப்போது அவளின் சிரிப்பில் உயிர்ப்பு வந்திருந்தது..

"என்னவோ சரித்திர கலைத்து கதாநாயகனைச் சொல்கிறதைப் போல இருக்கே.." பூர்ணிமா கண் சிமிட்டினாள்..

"இல்லையா பின்னே...?" வித்யா பதிலுக்கு கண்சிமிட்டினாள்..

"சொல்லு.. சொல்லு... சொல்லு..."

"எதைடி சொல்லச் சொல்கிற...?"

"அவர் எந்தக் காலத்து கதாநாயகன்..?"

"சோழர் காலத்து கதாநாயகன்.."

"ராஜராஜ சோழனா...? ராஜேந்திர சோழனா...?"

"இரண்டும் இல்லை.. ராஜராஜ சோழனின் நண்பன்.."

"யு மீன் வந்திய தேவன்...?"

"யா..."

"இதைப் பாருடா.. அப்ப நான்தான் குந்தவையா..?"

"இல்லையா.. பின்னே...?"

"ஓ.. அந்தக் குந்தவை தம்பிக்குத்தானே சப்போர்ட் பண்ணினா...? எனக்கு எல்லோருமே அண்ணன்களாச்சே.."

"இந்தக் குந்தவை பெரியண்ணனுக்கு சப்போர்ட் பண்ணுகிறவளாச்சே..."

இருவரும் மீண்டும் சேர்ந்து சிரித்தார்கள்.. வானத்தில் மேகங்கள் சூழ்ந்து.. இப்போது மழை வரவா.. இல்லை இரு

வினாடிகள்.. கழித்து வரவா என்று கேட்டுக் கொண்டிருந்தன..

"மழை வரப் போகுது பூர்ணி..."

"வரட்டுமே... உனக்கு ஞாபகம் இருக்கா வித்யா.. சென்னையில் நாம படித்துக்கிட்டு இருந்த காலத்தில் மழை வந்தால் நாம ரெண்டு பேரும் மொட்டை மாடிக்கு ஒடிப் போய் நின்னு மழையில் நனைவோமே.."

"மறக்க முடியுமா...?"

அந்த நாள்களின் நினைவில் மனம் நனைந்தாள் வித்யா... எத்தனை இனிமையான நாள்கள் அவை.. பாதங்கள் கொப்பளிக்க சுடு மணலில் நடந்து வந்தவளுக்கு பாலைவனச் சோலையைத் தந்த நாள்கள்..

"நீயும்.. நானும் சொட்டச் சொட்ட நனைந்துக்கிட்டு கண்ணம்மா சித்தி போட்டுத் தந்த சூடான டீயைக் குடிப்போமே.. அந்த 'டீ'யின் ருசி வேற எந்த 'டீ'க்கும் இருந்ததில்லை தெரியுமா.."

"ஆமாமாம்..."

"அந்த மொட்டைமாடியின் நினைவுகள் என்னைக்கும் மனதை விட்டுப் போகாது வித்யா.."

"ஆமாமாம்.." வித்யா முணுமுணுத்தாள்...

அவள் மனதில் அந்த நிலாக்கால நினைவு எழுந்தது.. பௌர்ணமியின் முழு நிலவின் ஒளியில்.. அந்த சென்னை வீட்டின் மொட்டை மாடியில்.. கோட்டுச் சித்திரம் போல் நின்று கொண்டிருந்த நரேந்திரன் தோன்றினான்.. அவனும் அவளும் உணர்ந்த மனதின் அலைகள் நினைவில் வந்தன..

"மறக்க முடியாதுதான் பூர்ணி.." வித்யாவின் விழிகள் கனவில் மிதந்தன..

"பேசாமல் அந்த நாள்களிலேயே நாம் இருந்திருக்கலாம் வித்யா.." குழந்தை போல பூர்ணிமா பேசினாள்..

"நடக்கிறதைப் பேசுடி.." வித்யா அவள் தோளில் செல்லமாகத் தட்டினாள்..

"அப்படிங்கற...?"

"அப்படித்தான்..."

"அப்போச் சொல்லு.. வீட்டுக்குள்ளே மீனா அண்ணியும்.. பிரபா அண்ணியும்.. உள் வீட்டுக் கலவரத்தை வெடிக்க வைத்துக்கிட்டு இருக்காங்களாமே...?"

"இது என்ன புதிதா...?"

"இருக்கட்டும்டி.. இதுக்க ஒரு முடிவு வேணாமா..?"

"சிந்துப் பாத்தின் கன்னித்தீவுக்கு கூட ஒரு முடிவு வந்திரும்.. இதுக்கு வராது.. விடு பூர்ணி.."

"அம்மாவைச் சொல்லனும்.. பேசாமல் மகியண்ணனையும் யுகே அண்ணனையும் தனிக்குடித்தனம் போக விடலாமில்லையா...?"

"அதுதான் தாய் மனசு..."

"என்னவோ போடி.. எனக்கு உன்னை நினைத்தால் தான் கவலையாய் இருக்கு.."

'இது இவளின் என் மீதான தாய் மனசு...'

வித்யா தோழியின் தோளில் சாய்ந்தாள்.. தாயில்லாத அந்தப் பேதையை.. தாய் போல அரவணைத்துக் கொண்டாள் பூர்ணிமா...

"நீ கவலைப்படாதே பூர்ணி.. உன் அண்ணன் இருக்கார்.. அவர் கண்ணுக்குள் வைத்து என்னைப் பார்த்துக்குவார்..."

"அந்த தைரியத்திலதான் இவங்க மத்தியிலே உன்னை விட்டுட்டு.. தென்காசிக்குப் போக என்னால முடியுது..."

"பேக்டரியைப் பத்திப் பிரச்னையில்லை.. ரங்கதுரை அடிப்படையிலே நல்லவன்தான்.. அவனை உங்க மகியண்ணன் தூண்டி விட்டுக்கிட்டு இருக்கிறார்.. அதை

அவன் என்னைக்குத் தெரிஞ்சிக்கிறானோ.. அன்னைக்கு நிலைமை சரியாகிவிடும்.."

"அந்த நாள் எப்போவரும்..?"

"வரும் போது வரும்.."

"அதுவரை..?"

"நான் பார்த்துக்குவேன் பூர்ணி.."

லேசான தூறல் பூச்சாரலாய் அவர்கள் மீது விழுந்தது.. அவர்கள் இன்பமாக உணர்ந்தார்கள்.. சற்றுத் தொலைவில் தெரிந்த நதிநீர் வெள்ளி ரிப்பனைப் போல ஓடிக் கொண்டிருந்தது.. அந்தச் சூழ்நிலை அவர்களின் மனதில் ரம்யத்தை அளித்தது.. அவர்கள் ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.. நட்புடன் அளவளாவுவதில் உள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் வித்யா.. அவர்களின் பேச்சு சுரேந்திரனின் திருமணத்தின் பக்கம் திரும்பியது..

"எனக்கு ஒன்னுதான் புரியலை வித்யா..."

"அந்த ஒன்னு என்னன்னு நீயே சொல்லிரு.."

கலகலத்துச் சிரித்தாள் வித்யா.. ஏனோ பூர்ணிமா அந்தச் சிரிப்பில் இணைந்து கொள்ளவில்லை...

"என்னடி..?" வித்யா புருவங்களை உயர்த்தினாள்..

"நம்ம சுரேன் அண்ணா.. எப்படிப் போய் இவளைத் தேடிப் பிடிச்சுக் காதலித்தான்..?"

இதற்கு வித்யாவினால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..? அவள் மௌனம் சாதித்தாள்.. அவளின் பதிலை எதிர்பார்க்காமல் தனக்குள்ளே யோசித்தபடி பேசிக் கொண்டிருந்தாள் பூர்ணிமா..

"ஏனோ தெரியலை வித்யா.. அவளை எனக்குப் பிடிக்கலை.."

"உன் அண்ணனுக்குப் பிடித்திருக்கே..."

"அதானே எனக்கும் ஆச்சரியமாயிருக்கு.."

"அழகா இருக்கிறா.. படித்திருக்கா.. இத்தனைக்கும் மேலாய் உங்களுக்குப் பொருத்தமான ராஜவம்சம்.."

இதைச் சொல்லும் போது வித்யாவின் குரல் கம்மியது.. பூர்ணிமா துணுக்குற்று தோழியின் முகம் பார்த்தாள்...

"முட்டாள்..! என்னடி பேச்சு இது..? இதை பெரியண்ணனிடம் பேசிப் பார்.. உன் அத்தனை பல்லையும் உதிர்த்து விடுவார்.. உங்களுக்குன்னு பிரிச்சு வேற பேசற..."

தோழியின் உரிமையான பாசம் மிகுந்த அதட்டுதலில் வித்யாவின் மனம் ஆறுதலை அடைந்தது..

"அத்தை சொன்னதைத்தான் சொன்னேன் பூர்ணி.."

"அம்மாவுக்கு அறிவில்லை..."

"அவங்க யதார்த்தமாகத்தான் சொன்னாங்க.. சொல்லனும்னு சொல்லலை.. மனதிலிருந்ததை யோசிக்காம போசிட்டாங்க..."

"யோசிக்க வேணாமா..? இவங்க வீட்டுக்குப் பெரியவங்க இல்லியா..?"

"விடு பூர்ணி..."

"என்னவோ போ.. இந்த மதன்பூர் மகாராணி தானாகத்தான் வந்து நம்ம சுரேன் அண்ணாவிடம் காதல் சொல்லியிருக்கா.. ம்ஹீம்.. இருந்திருந்து இவள் கண்ணில் தான் சுரேன் படனுமா..?"

வனாத்தில் மின்னல் வெட்டி பெரும் சப்தத்துடன் இடி இடித்தது...

19

நதியோரம் நடந்த போது..

தூரத்திலே இடி முழக்கம்...

இடி முழக்கம் சொல்லியது..

எதையென்று மனதினிலே கலக்கம் ..

-நதியோரம் நான் நடந்த போது-

'இது எதற்கான அறிகுறி..?'

வித்யாவிற்கு அன்று இரவு தூக்கம் பிடிக்க வெகு நேரமானது...

லேசான தூறல் நொடிப் பொழுதில் கனத்த மழைத் துளிகளுடன் சடசடவென கொட்டியது எப்படி..?

அவளது மனக்கிலேசத்தை அறியாதவனாக தூக்கத்தில் புரண்டு படுத்த நரேந்திரன் அவள்மீது கை போட்டு இறுக்கினான்.. அவன் தொட்டவுடன் குழைந்து நடுங்கும் அவளின் உடல் அதிர்வை எதிர்பார்த்தவனுக்கு அவளிடம் எந்தவிதமான பிரதிபலிப்பும் இல்லாததைக் கண்டு ஆச்சரியம் வந்தது...

"வித்யா..."

அவள் முகத்தைத் திருப்பிக் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.. அதில் தெரிந்த சஞ்சலத்தில் அவனது புருவங்கள் சுருங்கின...

"என்னடி..?"

"ஒன்.. ஒன்னுமில்லையே..."

"அதுக்கு ஏன் உன் வாய் தந்தியடிக்குது..?"

வித்யா சிணுங்கலுடன் அவன் மார்பில் குத்தினாள்.. அவள் கைகளைப் பிடித்து முத்தமிட்டவன்.. அவள் தலையில் செல்லமாக முட்டினான்...

"உன் தலைக்குள்ளே எது குடையுது..?"

"ம்ஹீம்.. பூர்ணியைப் போல நீங்களும் ஆரம்பிச்சுட்டிங்களா..? அவளும் இதையேதான் கேட்டா.."

"அவகிட்ட ஒப்பிச்சிருப்பியே.. அது என்னடி உன் பிரச்னைகளை உன் புருசன்கிட்டச் சொல்ல மாட்ட.. அதுவே உன் பிரண்ட் கேட்டா எல்லாத்தையும் கொட்டிக் கவிழ்த்திடறே..?"

"அதெல்லாம் ஒன்னும் கொட்டிக் கவிழ்க்கலை..."

"இதை நான் நம்பனுமாக்கும்..?"

"நம்பாட்டிப் போங்க.."

"எங்கே போகச் சொல்ற..? உன்னை விட்டு எங்கேயும் போறதா இல்லைடி.. போனா உன்னையும் சேர்த்து கூப்பிட்டுக்கிட்டுத்தான் போவேன்.."

நரேந்திரனின் வார்த்தைகளில் வித்யாவின் மனக்கிலேசம் மறந்து போக.. அவள் சஞ்சலத்தை மறந்தவளாக அவன் மார்பில் ஒன்றினாள்.. அவளின் காதலில் அவனுக்குள் காதல் கலந்த காமம் பொங்கியது.. அது தந்த வேகத்தில் அவன் முரட்டுத்தனமாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. மெல்ல.. மெல்ல.. அவனது ஆக்ரமிப்பில் வித்யா மூழ்கீப் போனாள்..

மதன்பூரில் நரேந்திரனின் குடும்பத்திற்கு பிரமாதமான வரவேற்பு கிடைத்தது.. மணிமுத்தாறுக்கு கார்களின் அணி வகுப்பு வந்ததைப் போலவே.. மதன் பூருக்கும் நரேந்திரனின் குடும்பத்தினரின் கார்கள் அணி வகுத்துச் சென்றன...

மாப்பிள்ளை வீடு பார்க்க கிளம்பிய அண்ணன் தம்பிகள் அவரவர் கார்களில் அவர்களுடைய குடும்பத்துடன் ஏறிக் கொள்ள.. சுரேந்திரனின் காரில் சௌதாமினி ஏறிக்

கொண்டாள்.. மாலினியும்.. பூர்ணிமாவும் அவர்களின் குடும்பத்துடன் அவரவர் கார்களில் ஏறிக் கொள்ள.. நரேந்திரனின் அத்தை குடும்பமும்.. மாமா குடும்பமும் அவர்களுடைய கார்களுடன் சேர்ந்து கொண்டார்கள்..

மதன்பூரின் பிரமாண்டமான அரண்மனையில் அவர்களுக்கு வட இந்திய உணவு வகைகளுடன் தென்னிந்திய உணவு வகைகளைச் சேர்த்து பிரமாதமான விருந்து தயாரிக்கப் பட்டிருந்தது.. சாப்பாட்டு மேஜையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளைப் பார்த்த பூர்ணிமா...

"இதுதான் ஒன்றுபட்ட இந்தியா வித்யா.." என்று தோழியுடன் முணுமுணுத்தாள்...

விருந்தில் அமர்ந்து கொண்ட போது கவனமாக வித்யாவின் அருகே அமர்வதை மீனலோசனி தவிர்த்த போது...

"இந்தியா ஒன்று பட்டதுதான்.. அதிலிருக்கிற மனிதர்களின் மனங்கள்தான் ஒன்றுபடவில்லை.." என்று சத்தமாகவே சொல்லி வைத்தாள்...

அதைக் கேட்ட நிவேதிதான் அக்கா ஸ்வாதிகா மெலிதாகச் சிரித்தாள்.. மீனலோசனியின் முகம் விழுந்து விட்டது..

"இவ சொல்கிறதைக் கேட்டியா பிரபா.. இங்கே வந்தும் இவ நம்மை வாருகிறதை விடலையே..."

பிரபாவதியிடம் அவள் முணுமுணுத்தபோது பிரபாவதிக்கு எரிச்சல் வந்தது..

பூர்ணிமா அவளின் அண்ணனின் மனைவி.. ஒரே சகோதரனுடன் பிறந்த அவளுக்கு பிறந்த வீட்டில் பந்தமும் பாசமும் நிலைத்திருக்க வேண்டுமானால் அவளின் அண்ணனின் மனைவியை பகைத்துக் கொள்ள முடியுமா..?

அதனாலேயே பூர்ணிமா மணிமுத்தாறுக்கு வருகை தருகிற போதெல்லாம் மீனலோசனியுடன் பேசுவதையே தவிர்த்து விடுவாள் பிரபாவதி...

இப்படித்தான் பிரபாவதி பேசாமல் இருந்தாலும் அவளின் காதோரமாக வந்து எதையாவது மீனலோசனி முனுமுனுத்து வைத்து விடுவாள்.. பார்க்கிற பூர்ணிமாவிற்கு அது மீனலோசனி பேசிய பேச்சு என்று தெரியுமா..? பிரபாவதியும்.. மீனலோசனியும் கூட்டுச் சேர்த்து கொண்டு வித்யாவைப் பற்றிப் புறம் பேசுகிறார்கள் என்று தோன்றிவிடாதா..?

மணிமுத்தாறிலேயே அப்படியெனும் போது.. மதன்பூரில் பூர்ணிமா அருகிலேயே இருக்கும் போது அவளைப் பற்றி மீனா பேசி வைத்தால் பிரபாவதிக்கு எரிச்சல் வராதா..?

அவள் அவசரமாக கணவன் பக்கம் சாய்ந்து அவனிடம் பேசுவதைப் போல முகத்தைத் திருப்பித் தப்பித்தாள்..

மீனலோசனிக்கா அந்த யுக்தி புரியாது..?

அவள் முகம் விழுந்து விட்டது.. மானசீகமாக பற்களை நறநறத்துக் கொண்டாலும் சிரித்த முகம் மாறாமல் அவள் மகேந்திரனின் பக்கமாக சாய்ந்து அவன் காதில் ரகசியம் பேச ஆரம்பித்தாள்..

'இவதான் புருசன் காதில ரகசியம் பேசுவாளா..? எனக்கு என் புருசன் காதில ரகசியம் பேசத் தெரியாதா.. யாரு கிட்ட..?'

அவளின் மிதப்பான பார்வையில் பூர்ணிமாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது.. வித்யாவிற்கு அந்தச் சிரிப்பு எதற்கான சிரிப்பென்று பிடிபடவில்லை...

"என்னடி..?" என்று வினவினாள்..

"அப்படியே நாடகம் பார்க்கிறதைப் போலவே இருக்குடி வித்யா..."

"எதைச் சொல்கிற..?"

"என்னத்தைச் சொல்ல..? கண்ணதாசன் அழகாக எழுதிவைச்சார்.. காதோடுதான் நான் பாடுவேன்னு..."

"அது அருமையான பாட்டாச்சே..."

"அந்த அருமையெல்லாம் யாருக்குப் புரிகிறது..?"

யாருக்கும் புரிந்ததோ இல்லையோ.. மீனலோசனிக்கு தெளிவாகவே புரிந்தது.. எதைச் செய்தாலும் அதைக் கண்டு பிடித்து விடும் பூர்ணிமாவை என்ன செய்வதென்று அவளுக்கு தெரியவில்லை...

தெரியாத எதையும் தெரியாதென்று அவள்தான் ஒப்புக்கொள்ள மாட்டாளே.. அதனால் அவளின் மிதப்பான பார்வையை நாத்தானாரின் மீது வீசி விட்டு அவள் மௌனமாகி விட்டாள்...

விருந்து முடிந்து கிளம்பும் போது திருமணத்தைப் பற்றி கங்காதர்ராவ் பேசினார்.. திருமண நாள் நிச்சயிக்கப் பட்டது.. அதை ஒரு விழாவாக கொண்டாட வேண்டும் என்று கங்காதர்ராவ் சொன்னார்.. நரேந்திரன் யோசிக்க ஆரம்பித்த போதே அவனை முந்திக் கொண்டு...

"நோ... நோ.." என்று சொல்லி விட்டான் சுரேந்திரன்...

"எங்க அரண்மனையில் இது வழக்கம் மாப்பிள்ளை.."

"பட்.. ஐ டோன்ட் லைக் இட்.. நாங்க பார்த்தோம்.. பழகினோம்.. காதலிச்சோம்.. இப்பக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்.. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதானே.. அதை விழாவாகக் கொண்டாட வேண்டிய அவசியமென்ன..?"

"எங்கேஜ்மென்ட் ரிங்கை நீங்க மாற்றிக்க வேண்டாமா..?"

"மணமேடையில் மாற்றிக்கிறோம்.. அண்ணா.. டைரக்டா கல்யாணம்தான்.. சொல்லிட்டேன்.."

அந்தக் கண்டிப்பில் நிவேதிதாவின் முகம் சுருங்கியதை கண்டு கொண்டாள் மீனலோசனி.. தனியாக நிவேதிதா நின்று கொண்டிருந்த நேரம் பார்த்து அவளருகே சென்று புன்னகைத்தாள்.. பதிலுக்கு நிவேதிதா லேசாகக் கூடச் சிரிக்க வில்லை...

'ம்ஹீம்.. என் கடைசி மச்சினன் எங்கேயிருந்து இவளைத் தேடிக் கண்டு பிடிச்சானோ.. சிரிக்கத் தெரிந்ததுகதான்

மனிதப் பிறவி.. இது என்ன பிறவியோ..'

இப்படி நினைத்துக் கொண்ட மீனலோசனிக்கு அவளும் அந்த ரகம்தான் என்ற விவரம் வசதியாக மறந்து விட்டது...

போட்டுக் கொடுக்க வந்தவள் புன்னகையை எதிர்பார்த்தால் வேலைக்கு ஆகுமா..? அதனால் அதெல்லாம் நமக்கு எதற்கு என்று அதை ஓரம் கட்டி அனுப்பிவிட்டு தன் வேலையை செவ்வனே செய்ய ஆரம்பித்தாள்..

"நான்தான் சுரேனின் பெரியண்ணி..."

"சுரேன் அப்படிச் சொல்லலையே.."

இதைச் சொன்ன நிவேதிதாவின் விழிகளில் தெரிந்த உதாசீனத்தில் அவளுக்கு மணிமுத்தாறு அரண்மனையின் ரகசியங்கள் அத்துபடி என்ற விவரம் தெள்ளத் தெளிவாக மீனலோசனிக்கு விளங்கியது..

'இந்த சுரேன் அத்தனையையும் இவளிடம் ஒப்பிச்சிட்டான் போல..' பல்லைக் கடித்தாலும் சமாளித்துக் கொண்டு புன்னகை செய்தாள் மீனலோசனி..

"நான்தான் மணிமுத்தாறு அரண்மனையில் மூத்தமருமகளாக காலடி வைத்தவள்..."

"பட்.. சுரேனோட இரண்டாவது அண்ணனை மேரேஜ் பண்ணிக்கிட்டு மருமகளாய் காலடி வைச்சீங்க.. ஆம் ஐ ரைட்..?"

'இவ வாயைத் திறக்கவே இல்லைன்னு ஏக்கப்பட்டது தப்பாப் போச்சே.. இவளுக்கு இத்தனை பேச்சுக்கூடப் பேசத்தெரியுமா..? இதுக்கு இவ பேசாமடந்தையாவே இருந்திருக்கலாம்..' மீனலோசனி ஏக்கப் பட்டுப் போனாள்..

"நீ தப்பாவா சொல்லிடப் போற..? ரைட்டுத்தான் நிவேதா.. அதைப் பத்திப் பேச்சு இப்ப எதுக்கு..?"

"நான் பேசலை.. நீங்கதான் பேசினீங்க.."

பட்டுக் கத்தறித்தாள் நிவேதிதா.. மீனலோசனிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. இப்படிப் பேசுகிறவளிடம் எப்படித்தான் போட்டுக் கொடுப்பது..?

'கொஞ்சமாவது மூத்தவரின் பெண்டாட்டியை மதிக்கனும்னு நினைக்கிறாளா..?'

அவளுக்குள் சினம் மூண்டது.. அவளும் நரேந்திரனின் மனைவியை மதிப்பதில்லை என்பது வழக்கம் போல வசதியாக அவளுக்கு மறந்து போனது...

20

நதியோரம் நடந்தபோது...

பூவாசம்தான் நுகர்ந்தேன்...

பூவைத் தேடிச் சென்றபோது...

முள்வேலிதான் கண்டேன்...

-நதியோரம் நான் நடந்த போது-

"இருக்கட்டும் நிவேதா... நான்தான் பேசினேன்.. இப்ப என்ன அதுக்கு...? நாம இரண்டு பேரும் ஒரே அரண்மனையில் வாழப் போகிறவங்க.. இதில யார் முதலில் பேசினா என்ன..?" திரும்பவும் சமாளித்தாள் மீனலோசனி..

"இல்லையே.. பாகப்பிரிவினை நடந்துட்டதா சுரேன் சொன்னாரே.. நீங்கதான் உங்க பங்களாவுக்கு போகாம அரண்மனையிலேயே ஸ்டே பண்ணியிருக்கீங்களாமே.." விடாமல் மீனலோசனியின் மூக்கை உடைத்தாள் நிவேதிதா...

"பாரு நிவேதிதா..."

"நீங்க என்ன சுரேனா...? நான் உங்களைப் பார்த்து என்னங்க ஆகப் போகுது...?"

"என்னைப் பார்த்து எதுவும் ஆகாமல் போகலாம்.. ஆனா நான் பேசுகிறதைக் கேட்டா உனக்கு நிறைய விசயங்கள் புரியும்..."

"ஓ.. எனக்கு அப்படியெதுவும் புரியத் தேவையில்லை.."

அலட்சியத்துடன் நகர முற்பட்ட நிவேதிதாவின் கையைப் பிடித்து நிறுத்தினாள் மீனலோசனி..

"அப்படிச் சொல்லிட்டா எப்படி நிவேதிதா.. உன் சுரேன் எதுக்காக எங்கேஜ்மென்டை வேண்டாம்ன்னு சொன்னாருன்னு உனக்கு தெரிய வேண்டாமா...?"

"அவருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம்.. இல்லைன்னா உங்க அரண்மனையில அது வழக்கத்தில் இல்லததா இருக்கலாம்..."

"யார் சொன்னது...?"

"வாட்...?"

"யெஸ்.. சுரேனுக்கு எங்கேஜ்மென்ட் பங்சன்னா பிடிக்கும்.. எங்க அரண்மனையிலயும் எங்கேஜ்மென்ட் நடத்துகிற வழக்கமுண்டு..."

மீனலோசனியின் விழிகளில் ஏதோரகசியம் தெரிய நிவேதிதாவின் பார்வை கூர்மையாகியது..

"இப்ப என்னதான் சொல்ல வருகிறிங்க...?"

"ஆ.. அப்படிக் கேளு.. சுரேன்.. எங்கேஜ்மென்டை அவாய்ட் பண்ணுகிறதுக்குக் காரணம் வித்யா..!" மர்மக் குரலில் சொன்னாள் மீனலோசனி...

"ஏன்..?" நிவேதிதாவின் முகம் மாறியது...

"ஏன்னா அந்த வித்யா சுரேனின் முன்னாள் காதலி.." நிதானமாச் சொன்னாள் மீனா..

"ஸ்டுப்பிட்.." நிவேதிதா சீறினாள்...

"இதை யாரிடம் வேண்டும்னாலும் கேளு.. அவங்க உண்மையைச் சொல்லுவாங்க... வெளிநாட்டுப் படிப்பை

பாதியிலேயே விட்டுட்டு வித்யாவை கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக இந்தியாவுக்கு வந்தார் சுரேன்..."

"ஐ கான்ட் பிலிவ் திஸ்..."

"நம்பலைன்னா யாரிடம் வேணும்னாலும் இதைக் கேட்டு கன்பர்ம் பண்ணிக்க... வித்யா சுரேனை வேண்டாம்ன்னு சொல்லிட்டா..."

இதைச் சொல்லும்போது மீனலோசனியின் குரலிலும் மனதிலும் குரூரம் நிறைந்திருந்தது..

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்பது இதுதானா...?' அவள் மகிழ்ந்து போனாள்...

'இந்த நிவேதிதாவிற்கு என்ன திமிர்...! இவ திமிரையும் அடக்கலாம்.. அந்த வித்யாவிற்கு எதிரா இவளைத் திருப்பலாம்.. ஆஹா என்ன ஒரு சான்ஸ்..'

கிடைத்த வாய்ப்பை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டாள் மீனலோசனி... அதுவரை அலட்சியமாக இருந்த நிவேதிதாவின் குரலில் தீவிரம் வந்திருந்தது..

"நீங்க சொல்கிறது உண்மையா...?"

"நூற்றுக்கு நூறு உண்மை.. சுரேன்.. வித்யாவைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு ஆசைப்பட்டார்.. இதை எங்க அத்தையிடமும் சொன்னார்..."

"வாட்...? சுரேனின் அம்மா என்ன சொன்னாங்க...?"

"வித்யாவை சுரேனுக்காக பெண் கேட்டாங்க..."

நிவேதிதாவின் விழிகள் சிவந்து விட்டன.. அவர் கண்களின் ஜீவலிப்பில் மீனலோசனியே அயர்ந்து விட்டாள்...

'என்னடா இது.. வடக்கே பிறந்ததினால இவ ஜான்ஸி ராணியைப் போலவே முழிச்சு வைக்கிறாளே....'

"அப்புறம் எதற்காக மேரேஜ் நடக்கலை...?"

"அதைத்தான் சொன்னேனே.. வித்யா சுரேனை வேண்டாம்ன்னு சொல்லிட்டா..." நிவேதிதாவின் முகத்தை ஆராய்ந்தபடி சொன்னாள் மீனலோசனி..

'ஆப்டர் ஆல்.. அந்த வித்யா வேண்டாம்ன்னு சொன்ன சுரேந்திரனை நான் துரத்தித் துரத்தி காதலித்தேனா...' நிவேதிதாவின் முகம் பயங்கரமாக மாறியது..

'கொதிக்குதா.. இருடி.. இன்னும் கொஞ்சம் சூட்டைக் கிளப்பறேன்...'

"வித்யா நரேந்திரனைத்தான் காதலித்தாளாம்... அதைக் கேட்ட சுரேன் திரும்பவும் வெளிநாட்டுக்கே போயிட்டார்.. இந்தியா பக்கமே தலை வைத்துப் படுக்கலை.." மீனலோசனி கதையளக்க..

"ஏங்க.. அவர் பாரினில் எந்தப் பக்கம் தலை வைத்துப் படுத்தார்ன்னு நீங்க போய் பார்த்துவிட்டு வந்தீங்களா...?" கடுப்புடன் கேட்டாள் நிவேதிதா...

"ஹி.. ஹி.. சும்மா ஒரு பேச்சுக்கு சொல்கிறதுதான்.. அசடு வழிந்தாள் மீனா..."

"அவர் படிக்க பாரின் போனால் நீங்களா கதை சொல்வீங்களா...?" நிவேதிதாவிடம் பழைய நிமிர்வு வந்திருந்தது..

"முதலிலேயும் படிக்கத்தானே போனார்...? ஏன் பாதியிலேயே விட்டுவிட்டு வந்தார்...?" எதிர் கேள்வி கேட்டாள் மீனலோசனி..

"இதுக்கு என்ன காரணம் சொல்லப் போகிறிங்க..?"

"இருக்கே.. காரணம் இருக்கே.. மணிமுத்தாறிலே பெரியத்தான் கூட வித்யாவிற்கு கல்யாணம் நடந்து விட்டது..."

"ஸோ...?"

"அவர் மனசிலிருந்த வித்யாவை அண்ணியாகப் பார்க்க சுரேனுக்கு சகிக்குமா...?"

"சசிக்கலை"

"உங்களுக்கு மட்டும்தானா.. எங்களுக்கும்தான் சகிக்கலை..."

"நான் நீங்க சொல்கிற கதையைச் சொன்னேன்.."

விர்ரென்று அங்கிருந்து விலகி நடந்து விட்டாள் நிவேதிதா.. போகிற போக்கில் அவள்

உடைத்து விட்டுப் போன மூக்கை தடவிப் பார்த்துக் கொண்டாள் மீனலோசனி...

'நான் நினைத்ததை விட இவ கெட்டிக்காரியாய் இருக்கிறாளே.. எதுக்கும் இவகிட்ட ஜாக்கிரதையாய் இருந்து வைத்துக்கனும்...'

நிவேதிதாவை கலங்கடிக்க வைக்க முடியாத சோகத்துடன் மீனலோசனி மகேந்திரனைத் தேடிப் போய்விட நிவேதிதா சுரேந்திரனைத் தேடினாள்.. அவன் நரேந்திரனுடன் பேசிக் கொண்டிருந்தான்.. அருகே வித்யா நின்று கொண்டிருந்தாள்.. நிவேதிதா பார்த்த நேரம் பார்த்து நரேந்திரன் கங்காதர்ராவுடன் எதையோ பேசச் சென்றுவிட சுரேந்திரனும்... வித்யாவும் அருகருகே நின்று கொண்டிருந்தார்கள்...

சுரேந்திரன் எதையோ கேட்க.. இயல்பாக அவன் முகம் பார்த்துப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் வித்யா.. அதைக் கண்ட நிவேதிதாவின் மனதில் புயல் அடித்தது..

'ஓ.. இதனால்தான் நான் காதல் சொன்னபோது இவன் உடனே ஓகே சொல்லவில்லையா...?'

நிவேதிதா வித்யாவை முறைத்தபடி சுரேந்திரனிடம் போனாள்...

"ஒன் மினிட் சுரேன்..."

"வாட் இஸ்தி மேட்டர் நிவி...?"

"அதை இங்கேதான் சொல்லனுமா...?"

நிவேதிதா வித்யாவை தீர்க்கமாகப் பார்க்க.. அவள் குறிப்பறிந்தவளாக நகரப் போனாள்.. அவளை சுரேந்திரனின் குரல் தடுத்து நிறுத்தியது..

"வெயிட் அண்ணி.. நீங்க எங்கே போகிறிங்க...?"

"உங்க வுட்பி உங்களிடம் தனியே பேச வந்திருக்காங்க சுரேன்..." தயக்கத்துடன் சொன்னாள் வித்யா...

"தனியே நிறைய பேசியாகிவிட்டது.. அதோடு இது லவ்வர்ஸ் பார்க் இல்லை.. வீடு.. இங்கே குடும்பத்தோடு நான் வந்திருக்கிறேன்.. இப்ப ரகசியப் பேச்சு தேவையில்லாதது.. நீங்க இருங்க...."

வித்யாவிற்கு தர்மசங்கடமாகி விட்டது.. நரேந்திரன் வந்து விட்டால் தேவலை என்ற தவிப்புடன் அவன் போன திசையைப் பார்த்தாள்.. அவன் வருகின்ற வழியைக் காணோம்.. நிவேதிதாவோ கொதித்துப் போயிருந்தாள்.. வித்யாவின் முன்னிலையிலேயே நிவேதிதாவுடன் தனிமையில் பேச சுரேந்திரன் மறுத்ததில் அவளின் கொதிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.. அவனோ அதைக் கண்டு கொள்ளாமல் சாவதானமாய் அவளின் முகம் பார்த்து..

"சொல்லு நிவி..." என்றான்...

"நத்திங் சுரேன்..." நிவேதிதா விலகி நடந்து விட்டாள்...

"திங் இஸ் நாட் ஃபேர் சுரேன்.. அவங்க கோபமாப் போகிறாங்க.." வித்யா கவலையாகச் சொன்னாள்...

"போகட்டும் அண்ணி.. இது முதல் தடவையில்லை.. அவளின் குணமே இதுதான்.. நினைத்தது நடக்கனும்னு எதிர்பார்ப்பா.."

"அது தப்பில்லையே..."

"அவ நினைப்பின்படி என்னை வளைக்க நினைக்கிறது தப்பு..." சுரேந்திரன் கடினமான குரலில் சொன்னாள்..

'என்ன மாதிரியான காதலர்கள் இவர்கள்...' வித்யாவிற்கு ஒன்றுமே புரியவில்லை...

சுரேந்திரனுக்கு நிவேதிதாவின் மீது அதீதக் காதல் இருப்பதைப் போலத் தெரியவில்லை.. நிவேதிதாவின் விழிகளிலோ ஒரு தீயின் ஜ்வாலை தெரிந்து கொண்டே இருந்தது.. அது வித்யாவைக் கண்டால் அதிகமானது.. அது எதற்காக என்றும் வித்யாவிற்குத் தெரியவில்லை..

நிவேதிதா கோபமாக போன பின்னாலும் சுரேந்திரனின் பக்கத்தில் நின்றால் நன்றாக இருக்காது என்ற நினைவுடன் அவள் சௌதாமினியிடம் போய் நின்று கொண்டாள்.. அவளிடம் பேசியபடி யதேச்சையாக தோட்டத்தின் பக்கம் பார்த்த வித்யாவிற்கு தூக்கி வாரிப் போட்டது...

அங்கே ஒரு செடி மறைவில் நரேந்திரன் யாரோ ஒரு பெண்ணுடன் நின்று பேசிக் கொண்டிருந்தான்.. வித்யா நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவர்களை அவளால் தெளிவாகப் பார்க்க.. முடிந்தது.. மற்றவர்களின் பார்வைக்கு அது மறைவான இடமாக இருந்தது..

நரேந்திரனுடன் பேசிக் கொண்டிருந்த பெண்ணை எங்கேயோ பார்த்திருப்பதைப் போல வித்யாவிற்குத் தோன்றியது..

'யாராய் இருக்கும்...?'

வித்யா நினைவுக் குவியல்களின் இடையே தேடிப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்தப் பெண் நரேந்திரனின் தோளில் சாய்ந்து விட்டாள்.. வித்யாவின் காலடியில் பூமி நழுவிய போது அவளுக்கு அந்தப் பெண் யாரென்று நினைவுக்கு வந்து விட்டது...

21

நதியோரம் நடந்த போது

விரல் கோர்த்த என்னவளே..!

சந்தேகம் வரலாமா...?

என் தேகம் உனதில்லையா...?

-நதியோரம் நான் நடந்தபோது-

அவள்... அந்தப் பெண்.. கார்த்திகாயினி தேவி..!

எந்தப் பெண்ணை முதன் முதலில் நரேந்திரன் காதலித்தானோ அந்தப் பெண்தான் வித்யாவின் கண் முன்னாலேயே அவளுடைய நரேந்திரனின் தோள் மீது தலை சாய்த்தாள்...

எந்தப் பெண்ணின் வாழ்க்கையை தான் வாழ்ந்து கொண்டிருப்பதாக வித்யா மனதிற்குள் குமுறிக் கொண்டிருக்கிறாளோ.. அந்தப் பெண்தான் நரேந்திரனின் தோள் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள்..

வித்யாவின் மனதில் இடி இடித்தது.. சுரேந்திரனின் திருமணத்தைப் பற்றி பூர்ணிமாவும்.. அவளும் மணிமுத்தாறு அரண்மனையின் மொட்டை மாடியில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது இடி இடித்து கடும் மழை பொழிந்ததின் காரணத்தை அவள் மதன்பூர் அரண்மனையில்.. அந்த நொடியில் கண்டு கொண்டாள்..

நரேந்திரன் கார்த்திகாயினியை விலக்கி நிறுத்தினான்.. ஆனால் விலகி வந்து விடவில்லை..

அங்கே நின்றபடி அவளுடன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்...

"யார் தெரிகிறதா...?"

வித்யாவின் பின்னாலிருந்து குரல் கேட்டது.. முகம் வெளுத்துப் போயிருந்த வித்யா திரும்பினாள்.. நிவேதிதா நின்று கொண்டிருந்தாள்...

"அது கார்த்திகாயினி தேவி... என் அக்கா..." நிவேதிதாவின் விழிகளில் சவால் இருந்தது...

"என்ன...?" வித்யா அதிர்ந்து விட்டாள்...

"யெஸ்.. என் அக்காவேதான்.. அக்கான்னா கூடப்பிறந்த அக்கா இல்லை.. என் அம்மா கூடப்

பிறந்த அக்காவின் மகள்.. கிரன்பூர் அரண்மனையின் ஒரே வாரிசு... உன்னைப் போல வேலை செய்ய வந்து.. முதலாளியின் கை பிடித்தவளல்ல.. அழகாலும்.. அறிவாலும்.. அந்தஸ்தாலும்.. உனக்கு முன்னாலேயே மிஸ்டர் நரேந்திரனின் மனதில் இடம் பிடித்தவள்..."

"நிவேதிதா..."

"என் பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூட உனக்கு அருகதை இல்லை.. இருந்தும் நீ கூப்பிடுகிறாய்.. நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்.. எதனால்...? மிஸ்டர் நரேந்திரன் உன் கழுத்தில் கட்டியிருக்கிற தாலியினால்.. அந்தத் தாலி எப்படி உனக்கு கிடைத்தது தெரியுமா...?

என் அக்கா மிஸ்டர் நரேந்திரனை விட்டுக் கொடுத்ததால் கிடைத்தது"

வித்யாவின் விழிகள் அகன்றன.. எந்த வார்த்தைகளை மீனலோசனி சொல்கிறாளோ.. அதே வார்த்தைகளை இன்று நிவேதிதாவும் சொல்கிறாள்...

ஏன்...? அந்த வார்த்தைகள் மனதிற்கு வலியைத் தந்தாலும் அவற்றில் உண்மை இருப்பதினால்தானே சொல்கிறார்கள்...?

"நினைச்சுப் பார்க்கலைல்ல.. இந்த மதன்பூர் அரண்மனைக்கும்.. கிரண்பூர் அரண்மனைக்கும் சம்பந்தம் இருக்கும்ன்னு நீ நினைத்துப் பார்க்கலைல்ல.. என் அக்காவா கார்த்திகாயினி தேவி வந்து நிற்பாங்கன்னு நினைச்சுப் பார்க்கலைல்ல..." நிவேதிதாவின் விழிகளில் வேட்டைக்காரனின் பார்வை இருந்தது...

வித்யா வேட்டையாடப் படும் பறவையின் பார்வையை உயிர்துடிக்கப் பார்த்து வைத்தாள்...

அந்தப் பார்வையைக் கண்டும் நிவேதிதா மனம் இரங்கவில்லை...

"ஊடே வந்த உனக்கே இப்படியிருந்தால்... காதலித்து விட்டுக் கொடுத்த என் அக்காவிற்கு எப்படியிருக்கும்...?"

"நான் உன் அக்காவின் காதலைப் பறிக்கவில்லை.."

வித்யா சுதாரித்துக் கொண்டவளாக பதில் சொன்னாள்.. அவளின் இயல்பான நிமிர்வு அவளிடம் திரும்பி விட்டது.. அவள் என்ன தவறைச் செய்தாளென்று நிவேதிதா குட்டக் குட்ட தலையைக் கொடுக்க வேண்டும்...?

அந்த நிமிர்வை அறிந்திராத நிவேதிதாவின் விழிகளில் கோபம் அதிகரித்தது.. அவள் முன்னால் ஒரு சாதாரணப் பெண் நிமிர்ந்து பேசுவதா...? என்ன தான் மணிமுத்தாறு அரண்மனையின் மூத்த மருமகளாக இருந்தாலும் நிவேதிதாவிற்கு அவள் இணை ஆவாளா...?

தனக்கு போட்டி என்று யாரையும் வித்யா நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாள்.. என் வழி தனிவழி என்று அவள் போக்கில் தெளிந்த நீரோடைபோல போய் கொண்டிருப்பாள்..

அது தெரியாத நிவேதிதா ஆவேசப் பட்டாள்..

"பறிக்கவில்லையா...? என் அக்காவின் காதலைப் பறிக்கவில்லையா...? நீ பறிக்காமலா மிஸ்டர் நரேந்திரன் உன்னை மேரேஜ் பண்ணிக்கிட்டார்...?"

"அதுக்கு முன்னாலேயே உன் அக்கா காதலை மறந்து வேறு ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க..

அது உனக்கு மறந்து விட்டதா...?"

வித்யா புருவங்களை உயர்த்திக் கேட்டதில் நிவேதிதா சரியான இடத்தில் அடியை வாங்கினாள்...

"ஏன் அதைச் செய்தாங்க...?" அவள் கொதித்தாள்..

"அதைத்தான் நானும் கேட்கிறேன்.. ஏன் அதைச் செய்தாங்க...?" வித்யா நிதானமாகக் கேட்டாள்...

"ஏய்ய்.. எங்க ராஜ வம்சத்து பெருமையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்...?"

"தெரியவே வேணாம்.. உங்க குலப் பெருமையைச் சொல்லச் சொல்லி நான் கேட்டேனா...?"

"உன்னைப் போல ஒருத்திக்கு அரண்மனையின் மருமகளாகும் வாய்ப்புக் கிடைத்து விட்ட ஆணவத்தில் பேசுகிறயா...?"

"ஊஹீம்... என் நரேந்திரனின் மனைவியாகும் வாய்ப்புக் கிடைத்து விட்ட சந்தோசத்தில் பேசுகிறேன்.."

"அது எப்படிக் கிடைத்தது...?"

"சும்மா.. சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல இதையே சொல்லிக்கிட்டு இருக்காதே.. உன் அக்காவை யார் காதலை கை கழுவி விட்டுப் போகச் சொன்னது...? நானா சொன்னேன்...?"

"ஏய்ய்..."

"ஷட் அப் நிவேதிதா.. முதலில் மரியாதையாகப் பேசக் கற்றுக் கொள்..."

"இல்லைன்னா...?"

"இந்த மேரேஜ் நல்லபடி நடக்க வேண்டாமா...? எனக்கு நீ மரியாதை கொடுக்கலை என்கிற விவரத்தை சுரேந்திரன் தெரிந்துக்கிட்டால் என்ன ஆகும் தெரியுமா..?"

வித்யா என்னவோ சுரேந்திரன் அவளின் மைத்துனன்.. அண்ணனின் மீதும்.. அண்ணியின்

மீதும் பக்தி கலந்த மரியாதையை வைத்திருப்பவன் என்ற அர்த்தத்தில்தான் சொன்னாள்.. அதைக்

கேட்ட நிவேதிதா வேறு விதமாக அர்த்தப் படுத்திக் கொண்டாள்...

"ஸோ.. நீ சொல்கிறபடிதான் சுரேன் ஆடுவார்ன்னு உறுதியாகச் சொல்கிற..."

"நான் சொல்ல மாட்டேன்.. அவராத் தெரிந்துக் கிட்டால் என்ன ஆகும்ன்னுதான் சொன்னேன்.."

"நீ கெட்டிக்காரி.. அப்படியில்லாமலா என் அக்கா வாழ வேண்டிய வாழ்க்கையை வாழ்கிறாய்...?"

"உன் அக்காவை யார் வாழ வேண்டாமென்று சொன்னது...?"

"கிரண்பூரின் ராணி.. ஒன்றுமேயில்லாமல் கடனில் மூழ்கிக்கிட்டு இருக்கும் மணிமுத்தாறு அரண்மனையில் வாழ வருவாளா...?"

"ஓஹோ.. அப்புறம் எதுக்காக நீ அடிச்சுக்கிற...?"

"மிஸ்டர் நரேந்திரன் கிரண்பூருக்கு வந்திருக்க வேண்டாமா...? அந்த அரண்மனைக்கு ராஜாவாக்கு-கிறேன்னு என் பெரியப்பா அவரைத் தேடிப் போய் கூப்பிட்டாரே.. அப்போது அவர் கூடவே கிளம்பி வந்திருந்தால் என் அக்காவின் வாழ்க்கை நன்றாக இருந்திருக்குமே..."

"ஏன்.. அவங்க வாழ்க்கைக்கு என்ன ஆச்சு...? அவங்கதான் உங்க வம்சப் பெருமையைக் காப்பாத்தி வேற ஒருத்தருக்கு மனைவியாகிட்டாங்களே.. ஒன்றை நினைவில் வைத்துக் கொள் நிவேதிதா.. அன்றைக்கு மட்டும் நரேன்.. கார்த்திகாயினியின் அப்பா பின்னால் போயிருந்தால் அவரின் குடும்பம் அழிந்திருக்கும்.. இன்றைக்கு.. நீ காதலித்து கல்யாணம் பண்ணிக்

கொள்ளப் போகும் சுரேந்திரனின் அரண்மனை அந்தஸ்து நிலைத்திருக்காது..."

இதைக் கேட்ட நிவேதிதா ஏளனமாகச் சிரித்தாள்.. அவள் விழிகளில் வன்மம் தெரிந்தது...

"நான் சுரேனைக் காதலித்தேன்.. ஏன் தெரியுமா...? அப்போதுதானே மணி முத்தாறு அரண்மனையில் மருமகளாக உள்ளே நுழைய முடியும்...?"

"புரியலை..."

"உனக்கு புரிய வேணாம்.. புரியும் போது எல்லாம் தானாய் புரியும்..."

நிவேதிதா அங்கேயிருந்து அகன்று விட்டாள்.. வித்யா நரேந்திரன் நின்று கொண்டிருந்த திசையில் பார்த்தாள்.. அப்போதும் நரேந்திரன் கார்த்திகாயினி தேவியுடன்தான் பேசிக் கொண்டிருந்தான்..

"என்னடி அங்கேயே பார்த்துக்கிட்டு நிற்கிற...?"

பூர்ணிமா தேவி அருகில் வந்தபோது.. வித்யா சட்டென்று நகர்ந்து தோழியிடம் போய் விட்டாள்..

"ஒன்றுமில்லையே..."

"ஏன்.. உம்முன்னு இருக்க...?"

"தலைவலி பூர்ணி..."

"எனக்கும் அப்படித்தான்.. எல்லோருக்கும் சீக்கிரமா கிளம்பினாத்தேவலை.. எங்கே...? எல்லோரும்தான் ஆளுக்கொரு திசையில் நிற்கிறாங்களே..."

பூர்ணிமா ஆதங்கப் பட்டபடி மற்றவர்களை ஒன்று சேர்க்கப் போனாள்.. வித்யா நரேந்திரன் வருகிறானா என்று அவன் நின்ற திசைப் பக்கம் பார்த்தாள்.. நரேந்திரன் வந்து கொண்டிருந்தான்..

'அப்பாடி.. வந்துட்டான்...' வித்யாவின் மனதில் நிம்மதி வந்தது.. கூடவே இனம் விளங்காத சஞ்சலமும் வந்தது..

'கூடவே அவளும் வந்துட்டா...?' திகிலுடன் நரேந்திரனின் பின்னால் பார்வையால் துழாவினாள்..

நல்ல வேளையாக கார்த்திகாயினி பின் தொடர்ந்து வரவில்லை..

இரவில் திரும்பியபோது.. நரேந்திரன் அதிகம் பேசவில்லை.. சிந்தனையுடனே இருந்தான்.. வித்யாவும் அவனுடன் பேச முயலவில்லை...

அன்று மட்டுமில்லை.. அடுத்து வந்த நாள்களிலும் நரேந்திரன் ஏதோவொரு சிந்தனையுடனே இருந்தான்.. வித்யா அதைக் கலைக்காமல் விலகி நின்றாள்.. பேக்டரியின் வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்..

எப்போதுமே தோழியின் முகத்திலிருந்து அவளின் மனச் சுணுக்கத்தை கண்டு விடும் பூர்ணிமா.. நெருங்கி.. வந்த சுரேந்திரனின் திருமண வேலைகளால் அதைக் கவனிக்கத் தவறிவிட்டாள்.. வித்யாவின் மனதில் தனிமை சூழ்ந்தது..

சுரேந்திரனின் திருமணம் அமர்க்களமாக நடந்து முடிந்தது.. மணி முத்தாறு அரண்மனையின் சின்ன மருமகளாக கால் பதித்து நிவேதிதா நுழைந்து விட்டாள்..

'இதற்குப் பிறகு...?' வித்யாவின் மனதில் கலவரம் எழுந்தது..

22

நதியோரம் நடந்த போது..

எனக்காக நீயும் வந்தாய்...

கூட நடந்து வந்தவளே...

ஊடலுடன் ஏன் பிரிந்து போனாய்..?

-நதியோரம் நான் நடந்த போது-

வித்யா காரை விட்டு இறங்கி பேக்டரிக்குள் நடந்தாள்... இப்போதெல்லாம் அவள் தனியாகத்தான் காரில் வருகிறாள்.. நரேந்திரன் கூட வருவதில்லை.. அடிக்கடி சென்னைக்குப் போகிறேன் என்று வெளியூர் பயணங்களை ஏற்படுத்திக் கொள்கிறான்...

'கார்த்திகாயினியைப் பார்க்கப் போகிறானோ...'

வித்யாவின் மனதிற்குள் சந்தேக மேகங்கள் சூழ்ந்தன.. இருந்தும் அவள் எதையும் நரேந்திரனிடம் வாய் விட்டுக் கேட்கவில்லை... வித்யாவின் மனதை முகத்தின் வழியே படித்து விடும் நரேந்திரன்தான் அவளைக்கண்டு கொள்ளாமல் சதா ஏதோ ஒரு சிந்தனையிலேயே உழன்றானே...

'கார்த்திகாயினியைப் பற்றிய கவலையாய் இருக்கும்...'

ஊமையாய் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் வித்யா.. நிவேதிதாதான் மணிமுத்தாறுக்கு மருமகளாய் வந்த முதல் வாரத்திலேயே அவள் எதற்காக சுரேந்திரனைத் தேடிப் பிடித்து காதலித்தாள் என்ற விவரத்தைப் போட்டு உடைத்து விட்டாளே...

"எனக்கு கார்த்திகாயினி அக்காவை ரொம்பப் பிடிக்கும்... சின்ன வயதில் நான் எப்போதும் கார்த்திகாயினி அக்காவின் பின்னாலேயேதான் அலைவேனாம்.. என் அம்மா சொல்வாங்க.. அக்கா என்னை மடியில் தூக்கி வைத்துக்குவாங்களாம்..."

நிவேதிதாவின் இறுக்கமான முகத்தில் ஏற்பட்ட இளக்கத்தை வியப்புடன் பார்த்தாள் வித்யா...

'இவளுக்கும்.. அந்த கார்த்திகாயினிக்கும் இடையே இருந்த பாசப்பிணைப்பு அத்தனை இறுக்கமானது போல..' வித்யா நினைத்துக் கொண்டாள்...

யாரிடமும் ஒட்டுதல் காட்டாத நிவேதிதா கூடப் பிறந்த அண்ணன்.. அக்காவை விட்டு.. ஒன்று விட்ட சகோதரியின் மீது எப்படி அவ்வளவு இறுக்கமான பாசப் பிணைப்பை உண்டாக்கிக் கொண்டாள் என்று ஆச்சரியப் பட்டுப் போனாள் வித்யா...

அதை அறிந்தவளைப் போல நிவேதிதாவும் அந்தப் பாசப் பிணைப்பைப் பற்றித்தான் சொன்னாள்...

"எனக்கு கௌதம் அண்ணா.. ஸ்வாதிகா அக்காவை விட கார்த்திகாயினி அக்காவைத்தான் பிடிக்கும்.. எங்க அரண்மனையில் நாங்க மூன்று பேர் வாரிசா இருந்தோம்.. அக்கா அப்படியில்லை.. அவங்க அரண்மனையில அவங்க மட்டும்தான் ராணி.. எனக்கு அது பிடிச்சிருந்தது..."

'உனக்கு அது மட்டும்தானே பிடிக்கும்..' வித்யா கைக்கடிகாரத்தை பார்த்துக் கொண்டாள்..

அவளுக்கு அலுப்பாக இருந்தது.. அவளுக்கும் நரேந்திரனுக்கும் இடையே பள்ளம் பறிக்கத்தான் சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தேன் என்று சொல்கிறாள் அவன் மனைவி.. அந்தக் காவியக் காதல் கதையை வேலை மெனக்கெட்டு அவள் வந்து சொல்ல.. வேலையைக் கெடுத்துக் கொண்டு வித்யா 'ஊம்' போட்டுக் கேட்க வேண்டுமா.. என்ன..?

"ம்ஹீம்.. நீயெல்லாம் வாட்சைப் பார்க்க உன்னிடம் கதை சொல்லனும்னு எனக்கு விதித்திருக்கு பாரேன்..", நிவேதிதா இகழ்ச்சியாகச் சொன்னாள்...

"உன்னிடம் கதை சொல்லச் சொல்லி நான் கேட்டேனா..?" வழக்கமான நிதானத்துடன் பதிலுக்கு கேட்டாள் வித்யா...

"நீ கேட்க மாட்ட.. எப்படிக் கேட்ப..? இந்தக் கதை உன் வாழ்க்கையை ஆட்டி வைக்கப் போகிற கதையாச்சே..."

"என் வாழ்வை ஆட்டி வைக்க உன்னால் முடியாது.."

"ஆனா கார்த்திகாயினி அக்காவால் முடியுமே..."

வித்யாவின் உயிர் துடித்தது.. அவள் வாழ்வை கார்த்திகாயினி ஆட்டி வைத்து விடுவாளா..? அவளுடைய நரேந்திரனை அவளிமிருந்து பிரித்து விடுவாளா..?

"அவளுக்குத்தான் கல்யாணம் ஆகி விட்டதே..." வித்யா பற்றுக் கோடாக அதைப் பிடித்துக் கொண்டாள்...

அதைக் கேட்ட நிவேதிதாவின் முகம் மாறியது.. அவள் விழிகளில் தீயின் ஜ்வாலை தெரிந்தது..

"அதுக்குப் பெயர் மேரேஜா..? இது எல்லாத்துக்கும் நரேந்திரன்தான் காரணம்.."

"ஷட் அப் நிவேதா.. நரேன் உன் கணவரின் அண்ணன்.. அந்த மரியாதை உன் மனதில் இருக்கட்டும்.."

"ஹ..! என் ஹஸ்பெண்டுக்கு பிரதர்ங்கிறதெல்லாம் இப்போது வந்த உறவு.. அதுக்கு முன்னாலே அவர் என் கார்த்திகா அக்காவின் சந்தோசத்தை குழி தோண்டிப் புதைத்த ராட்சஸன்..."

"நிவேதா.."

"சும்மா கத்தாதே.. என் பெரியப்பா அக்காவுக்கு மாப்பிள்ளை பார்த்தார்.. ஜெய்ப்பூர் ராஜவம்சம்..."

"அப்புறம் என்ன..? உங்க வம்சப் பெருமையில் தானே உங்க அக்கா கல்யாணம் பண்ணிக் கொண்டாங்க..? அதற்காக ஏன் நரேனைத் திட்டுகிற..?"

"பேசாதே.. அந்த ஆள் பெயருக்குத்தான் அக்காவை மனைவியாக வைத்திருக்கிறார்.. மற்றபடி அவருக்கு ஊருக்கு ஒருத்தி.. அவர் குழந்தைகளுக்கு ராஜ வம்சத்துப் பெண்தான் அம்மாவா இருக்க முடியுமாம்.. அதுக்காகத் தான் அக்காவை மேரேஜ் பண்ணிக்கிட்டாராம்.."

"என்னது...?"

வித்யா அதிர்ந்து போனாள்.. கார்த்திகாயினி சந்தோசமாக இல்லையா..? அவள் சந்தோசமாக இல்லையென்பதைத்தான் மதன்பூரில் நரேந்திரனிடம்

சொல்லிக் கொண்டிருந்தாளா..? அதனால்தான் நரேந்திரன் வித்யாவை மறந்து சதா.. ஏதோ ஒரு சிந்தனையிலேயே உழல்கின்றானா...?

"நரேந்திரன் மட்டும் காதலித்த என் அக்காவை கை விடாமலிருந்தால் என் அக்காவுக்கு இந்த நிலைமை வந்திருக்காதே.." நிவேதிதா பொருமினாள்...

நரேந்திரனை அவள் குற்றம் சொல்வதை வித்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"ஏன்..? அதை இப்படியும் சொல்லலாமே.. கார்த்திகா மட்டும் காதலை உதறிவிட்டு வேறு ஒருவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் நரேனுக்காக காத்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காதே..." வித்யா பதில் கொடுத்தாள்...

"எப்படிக் காத்திருக்க முடியும்..? காதலியை மறந்து குடும்பம்தான் முக்கியம்னு நினைக்கிற ஒருத்தனுக்காக என் அக்கா காத்திருக்கனுமா..?"

"வேணாம்னு அவங்க நினைத்தாங்க.. வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.. இதில் நரேனின் தப்பு என்ன இருக்கு..? காதலியை அவர் மறக்கலை... அவருடைய காதலிதான் அவரை மறந்துட்டாங்க..." வித்யாவுக்கு ஆற்றாமையாக இருந்தது..

அவளின் நரேந்திரன் என்ன நிலையில் இருந்தான் என்பதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்...

வித்யா முகம் சிவக்க முகத்தை திருப்பிக் கொண்டாள்.. அவளை தீர்க்கமாகப் பார்த்தாள் நிவேதிதா..

"இப்போது சொல்கிறேன் கேட்டுக் கொள்.. நான் எதற்காக சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தேன் தெரியுமா..? இந்த மணிமுத்தாறு அரண்மனையில் ஏன் மருமகளாக காலடி வைத்தேன் தெரியுமா..?"

"தெரியாது..."

"எந்தக் குடும்பத்தைக் காரணம் காட்டி என் அக்காவை உன் அருமை நரேந்திரன் உதறினானோ.. அந்தக் குடும்பம்

அவனைத் தூக்கி எறிய வேண்டும் என்பதற்காக..."

'அதைத்தான் ஏற்கனெவே நரேனின் குடும்பம் செய்து விட்டதே...' மனதிற்குள் வேதனைப் பட்டாள் வித்யா..

பூர்ணிமா மட்டும் நரேந்திரனுக்காக.. போராடாமல் இருந்திருந்தால் அவனின் வாழ்க்கையில் திருமணம் என்ற ஒன்று நடந்திருக்குமா...?

அதையெல்லாம் இவளிடம் ஏன் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் வேறு ஒரு காரணத்திற்காக சீறினாள் வித்யா..

"ஜாக்கிரதை நிவேதா.. இனியொரு முறை என் கணவரை 'அவன்.. இவன்..'ன்னு நீ பேசினால் உன் பல்லை உடைத்து விடுவேன்..."

"வாட்..."

"போடி.."

ஏற்கனெவே அகன்றிருந்த நிவேதிதாவின் விழிகள் மேலும் அகல்வதைக் கவனிக்காதவளைப் போல வெளியே நடந்து விட்டாள் வித்யா...

'யாருகிட்ட..?' அவளுக்கு கோபம் கொந்தளித்தது...

'இவ மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கா..? எவ்வளவு தைரியமிருந்தா என்கிட்டேயே நரேனை 'அவன்' 'இவன்'ன்னு பேசுவா...'

அன்று முழுவதும் அந்தக் கோபம் வித்யாவின் மனதில் இருந்தது...

'இவ பெரிய மகாராணியாய் இருந்தால் அது இவள் மட்டுக்கு.. எனக்கென்ன வந்தது..? என் புருசனை மரியாதை குறைவாய் பேச இவள் யார்..? இவளுடைய ஒன்று விட்ட அக்காவை என் நரேனா கைவிட்டார்..? அவள்தானே இவரை கை விட்டாள்..?'

நரேந்திரனை யாரெல்லாம் கைவிட்டார்கள் என்ற நினைவில் மனம் நொந்தாள் வித்யா...

'வந்துட்டா.. பெரிசா நியாயம் பேசிக்கிட்டு.. என் நரேனுக்கு அநியாயத்திற்கு மேல் அநியாயம் நடந்ததே.. அது இவளுக்குத் தெரியுமா...'

வித்யா நிவேதிதாவிடம் பேசுவதைத் தவிர்த்தாள்.. தானுண்டு.. பேக்டரியுண்டு என்று இருந்தவளிடம் பேக்டரிக்குள் நுழைந்து வம்பு வளர்த்தாள் நிவேதிதா..

"அண்ணி.. நிவி நம்ம பேக்டரி அட்மினிஸ்ட்ரேசனில் பங்கெடுத்துக்கனும்னு ஆசைப்படறா..."

சுரேந்திரன் வித்யாவிடம் இந்த தகவலைச் சொன்ன போது நரேந்திரன் ஊரில் இல்லை.. சென்னைக்கு சென்றிருந்தான்... நிவேதிதாவின் ஆசை எதுவென்று வித்யாவுக்குப் புரிந்தது.. அவள் பேக்டரியின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட வில்லை.. நரேந்திரன்.. வித்யாவின் நிம்மதியைக் குலைக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறாள்..

"இதில் நான் சொல்ல என்ன இருக்கு சுரேன்.. பேக்டரி உங்களுக்கும்.. உங்கள் அண்ணனுக்கும் சொந்தமானது.. பொதுவானது.. இதை உங்க அண்ணனிடம் சொன்னால் போதுமே..."

"அண்ணனிடம் சொல்லிட்டேன் அண்ணி..."

"ஓ..."

வித்யாவுக்கு பேச்சு வரவில்லை.. அவளுடைய நரேந்திரன் ஏன் இதைப் பற்றி அவளிடம் சொல்லவில்லை..?

நதியோரம் நடந்த போது..

உன்வரவை கண்கள் தேடும்..

தினந்தோறும் வந்துவிட்டு...

நான் தேடும்போது நீ எங்கே போனாய்..?

-நதியோரம் நான் நடந்த போது-

"நிவி ஜி.எம்மா இருக்கட்டும் அண்ணி..."

சுரேந்திரன் சொன்னபோது வித்யா மறுத்துப் பேசவில்லை.. பேக்டரியின் எம்.டியாக நரேந்திரனும் உதவி எம்.டியாக சுரேந்திரனும் இருந்தார்கள்.. வித்யா பெர்ஸனல் மேனேஜராக இருந்தாள்.. மகேந்திரன் பார்த்துக் கொண்டிருந்த ஜி.எம் பதவி காலியாகவே இருந்தது..

அதில் நிவேதிதா அமர்வதை வித்யாவால் எப்படி ஆட்சேபிக்க முடியும்...?

'இனி பேக்டரியின் நிலவரம் என்னவாக இருக்கும்..?'

வித்யாவால் அனுமானிக்க முடிந்தது.. அவள் கணித்ததைப் போலவே நிவேதிதா பேக்டரிக்குள் பிரச்னைகளை உண்டாக்க ஆரம்பித்தாள்...

அன்றும் அதுபோலவே அவள் செய்து வைத்திருக்க.. வித்யா காரை விட்டு இறங்கும் போதே அவளிடம் வழக்கு வந்து விட்டது..

"என்ன மேடம் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..? தொழிலாளின்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா போயிருச்சா..?"

அப்போதுதான் வந்தவளிடம் ரங்கதுரை இப்படிக் கொதித்தால் அவள் என்னவென்று பதில் சொல்லுவாள்..?

ரங்கதுரையோ அதையெல்லாம் நினைத்துப் பார்த்தாகத் தெரியவில்லை.. அவனுடைய மீசை துடித்துக் கொண்டிருந்தது...

"கூல் டவுன் சார்.. என்ன விசயம்ன்னு நிதானமாச் சொல்லுங்க.. நீங்க சொன்னாத்தானே எனக்கு என்னன்னு தெரியும்..?" அவள் அமைதியாகவே பதில் சொன்னாள்..

"நிதானமா பேசுன்னா எப்படிப் பேசறது மேடம்..? எங்க சுயமரியாதையை காலடியில் போட்டு மிதிக்கறிங்க.. தொழிலாளியின் உரிமையைத் தட்டிப் பறிக்கறிங்க.."

"யார்...? நானா...?"

"அதை நீங்க செய்தா என்ன...? ஜி.எம் அம்மா செஞ்சா என்ன...? ரெண்டுமே ஒன்னுதானே..."

'போச்சுடா..' என்றிருந்தது வித்யாவிற்கு...

இரண்டும் ஒன்றில்லை.. வேறுவேறு என்று இவனுக்கு யார் சொல்வது என்ற நினைவுடன் இயலாமை மேலோங்க ரங்கதுரையின் முகம் பார்த்தாள்...

"இன்னைக்கு என்ன பிரச்னை...?"

"தினமும் நடக்கிறதைப் போல்தான்ம்மா.. ஜி.எம் மேடம் ரவுண்ட்ஸ் வந்திருக்காங்க.. நம்ம சுப்பிரமணி அவங்களுக்கு வணக்கம் சொல்லலை.."

"சொல்லியிருக்கலாமே..."

அப்படிச் சொல்லியிருந்தால் பிரச்னையைத் தவிர்த்திருக்கலாமே என்ற நினைவில்தான் யதார்த்தமாக அந்த வார்த்தைகளை வித்யா சொல்லி விட்டாள்... ரங்கதுரையோ பிலுபிலுவென்று அவளை பேச்சில் உலுக்கி விட்டான்..

"ஏன் சொல்ல மாட்டிங்க...? எங்க வியர்வையிலே தேரோட்டுகிற முதலாளி வர்க்கம்தானே நீங்க...?"

"யூனியன் லீடர் சார்.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை.."

"நீங்க எந்த அர்த்தத்தில் சொல்லியிருந்தாலும் அந்த அர்த்தத்தில்தானேம்மா வந்து முடியும்...?"

"அப்படி நீங்களா நினைச்சுக்கிட்டா நான் என்ன செய்கிறது...? எப்படியும் நம்ம சுப்பீரியரைப் பார்த்தா நாம மரியாதைக்கு வணக்கம் சொல்லனுமா.. வேண்டாமா..?"

"சொல்லனும்தான்.. எப்பச் சொல்லனும்..? மேலே ஃபேன் ஓட.. காலை ஆட்டிக்கிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தா சொல்லனும்..மெஷின் ஓட.. அதில தலையைக் கொடுத்து வேலையைப் பார்த்துக்கிட்டு இருக்கிறவன்.. யார் வருகிறாங்கன்னு பார்த்தாத்தானே சொல்ல முடியும்...?"

'நியாயம்தான்...' வித்யா நினைத்துக் கொண்டாள்..

இயந்திரத்துடன் வேலை பார்ப்பவனின் கவனம் நொடிப்பொழுதுக்கு சிதறினாலும் எப்படிப்பட்ட விபத்து நிகழும் என்பதை அவள் அறியாதவளா...?

ஆனால் இந்த நியாயத்தை நிவேதிதாவிடம் யார் சொல்வது...? அவளால் சொல்ல முடியுமா...? அப்படிச் சொல்ல முடியாமல்தானே இது போன்ற பிரச்னைகள் அடிக்கடி வெடிக்கின்றன...

"எனக்கு உங்க பக்க நியாயம் புரிகிறது யூனியன் லீடர் சார்.. நான் இதை எம்.டியிடம் சொல்கிறேன்..."

"ஏன்ம்மா.. ஜிஎம் அம்மாகிட்டச் சொல்ல மாட்டிங்களா...? வணக்கம் சொல்லலைங்கிறதுக்காக வாடா.. போடான்னு அவனைப் பேசியிருக்காங்க.. தொழிலாளின்னா அவ்வளவு ஈஸியாப் போயிருச்சா...? உழைக்கிறோம்... அதுக்கான சம்பளத்தைத்தான் உங்ககிட்ட வாங்கறோம்.. நீங்க ஒன்றும் இலவசமாக் கொடுக்கலை.. நாங்க ஒன்றும் கொத்தடிமை இல்லை..."

"விசயத்தை பெரிசாக்க வேணாம் சார்..."

"இது பெரிசான விசயம்தான் மேடம்.. எங்க சுயமரியாதை பெரிசில்லைன்னா.. வேற எதுதான் பெரிசு...?"

உண்மைதானே.. சுயமரியாதையைவிட பெரிதான ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறதா...?

"என்ன செய்யனும்னு நினைக்கறிங்க...?"

"அவங்க சுப்பிரமணிகிட்ட மன்னிப்புக் கேட்டாகனும்..."

"இல்லைன்னா...?"

"இங்கே யாரும் வேலை செய்ய மாட்டோம்.. லே.. வாங்கலே.. பேக்டரியோட கதவை இழுத்து மூடுங்கலே..."

நொடிப் பொழுதில் அங்கே கலவரம் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியதில் வித்யா முடிவெடுத்து விட்டாள்..

இதைப் போல தினமும் பல பிரச்னைகளை நிவேதிதா உருவாக்குவதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. வித்யாவுடன் மோதினால் கூட வித்யா பொறுமையாக போய் விடுவாள்... தொழிலாளிகளின் சுய மரியாதையுடன் விளையாடிப் பார்க்க நிவேதிதா நினைப்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

செல்போனை எடுத்து காதுக்கு கொடுத்தவள் சுரேந்திரனை அழைத்தாள்... மறுநொடியில் சுரேந்திரனின் குரல் கேட்டது...

"சொல்லுங்க அண்ணி..."

"பேக்டரியின் முன் வாசலுக்கு வாங்க சுரேன்..."

சுரேந்திரன் உடனடியாக வந்து விட்டான்.. அங்கிருந்த கொந்தளிப்பான சூழலைக் கண்டு புருவங்களை உயர்த்தினான்...

"என்ன ஆச்சு...?"

வித்யா விவரத்தைச் சொன்னதும் சுரேந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன... அவனுடைய செல்போனை எடுத்து நிவேதிதாவை அழைத்தான்.. வந்தவளிடம் மன்னிப்புக் கேட்கச் சொன்னான்.. இப்போது நிவேதிதா கொந்தளித்தாள்...

"என் சைடில எனன நியாயம் இருக்குன்னு நீங்க பார்க்க மாட்டிங்களா சுரேன்..."

"சொல்லு.. அதில் நியாயம் இருக்குதான்னு பார்க்கிறேன்.."

"சுப்பிரியருக்கு.. மரியாதை கொடுக்கனும்.. அதைக் கேட்டு வாங்குகிறபடி உங்க பேக்டரி லேபர்ஸை நீங்க பழக்கி வைத்திருக்கீங்க.. மதன்பூரில் இப்படி இல்லை.. எங்க நிழலைக் கண்டால் கூட உடனே சல்யூட் வைத்து விடுவார்கள்.. மரியாதை தெரியாதவங்கதான் உங்க ஊரில் இருக்காங்களா...?"

"நிவி... எங்களுக்கும் மரியாதை தெரியும்.. பேக்டரியின் செக்யூரிட்டி உன்னைக் கண்டதும் விஷ் பண்ணலையா...? நம்ம ஆபிஸில் அட்மினிஸ்ட்ரேசன் செக்சனில் இருக்கிறவங்க உன்னைக் கண்டதும் விஷ் பண்ணலையா...?"

சுரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்த போதே அங்கே வந்த குகன் நிவேதிதாவிடம்...

"குட்மார்னிங் மேடம்..." என்று சொன்னான்...

சுரேந்திரனின் பார்வை 'கேட்டுக்கிட்டியா...' என்று கேட்க நிவேதிதா திணறிப் போனாலும் உடனே சமாளித்துக் கொண்டாள்..

"நான் சொன்னது உங்க லேபர்ஸை..."

"அவங்க வேலை மெஷினோடு.. மெஷின் முன்னால் இருக்கிறவங்க முதலாளியே வந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டாங்க.. நீ ஸாரி சொல்லு..."

"ஓகே... சுரேன்.. நீங்க உங்க லேபர் விஷ் பண்ணாததுக்கு விளக்கம் சொல்லிட்டிங்க.. மேட்டர் இஸ் ஓவர்.. இதில் நான் ஸாரி சொல்ல வேண்டிய அவசியம் என்ன...?"

"என்ன பேசற...? நீ எப்படி 'வாடா' போடான்னு பேசலாம்...?"

"அது கோபத்தில் பேசினது.. இப்ப நீங்க விளக்கம் சொல்லிட்டிங்கள்ல... இனி இதை அவாய்ட் பண்ண டிரை

பண்றேன்..."

நிவேதிதா அசைந்து கொடுக்காமல் வழக்கடித்ததில் ரங்கதுரையின் ரத்தாஅழுத்தம் எகிறியது..

"டிரை பண்றிங்களா...? இவ்வளவு ஈஸியா பேசறிங்களே... எங்க மரியாதை உங்களுக்கு இவ்வளவு ஈஸியா போயிருச்சா...? இனிமே நீங்க டிரை பண்றது இருக்கட்டும்மா.. இப்ப நீங்க பேசினதுக்கு என்ன பதில்...?"

"சுரேன்! இவங்ககிட்டயெல்லாம் நான் ஈக்குவலா பேச முடியாது.. யார்கிட்ட யார் ஸாரி கேட்கிறது...? எங்க மதன்பூரில் என்னிடம் நின்று பேசக்கூட எங்க லேபர்ஸ் யோசிப்பாங்க..."

எரிகிற கொந்தளிப்பில் நிவேதிதா எண்ணையை ஊற்றிக் கொண்டேயிருக்க சுரேந்திரன் கோபமானான்..

"முதலில் உன் வாயை மூடுகிறயா...?" என்று சீறினான்..

"சுரேன்.. இவங்க முன்னாலே என்னை அதட்டுகிறிங்களா..?" நிவேதிதா வெகுண்டாள்...

"ஷட் அப்.. இவங்க என்னோட லேபர்ஸ்.. இவங்க வேற நான் வேற இல்லை.. முதலில் ஸாரி சொல்லு..."

நிவேதிதாவிற்கு வேறு வழி இருக்கவில்லை.. அரை குறையாக அவள் "ஸாரி.." என்று வாய்க்குள் முணுமுணுக்க.. வெற்றிபெற்ற தொழிலாளர்களின் கொந்தளிப்பு குறைந்தது.. சுரேந்திரன் வேகமாக போய்விட.. கோப மூச்சுக்களுடன் வித்யாவை முறைத்தாள் நிவேதிதா...

"இது உன் வேலைதானா...?"

"நீ செய்து வைத்த வேலை..."

"அது எப்படி நரேனைப் போலவே சுரேனும் நீ என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்கிறார்..? நீ போட்டிருக்கும் மயக்க மருந்தின் ரகசியத்தை என்னிடமும் சொல்லேன்.."

"நிவேதிதா..."

"உண்மையைச் சொன்னால் ஏன் கத்துகிறாய்...?"

"ச்சீ.. நீயெல்லாம் ஒரு மனுஷி..."

வித்யா வேகமாக போய்விட நிவேதிதாவின் கோபம் அடங்க மாட்டேன் என்று திமிறியது..

மாலையில் மணிமுத்தாறு அரண்மனைக்குள் அவள் நுழைந்த போது மீனலோசனி அவளைத் தேடி வந்தாள்...

"இன்னைக்கு பேக்டரியில் பிரச்னையாமே.. அந்த வித்யா உன்னை ஸாரி கேட்க வைத்தாளாமே.." என்றும் கேட்டாள்.

அதற்குள் இவளுக்கு எப்படி விவரம் தெரிந்தது என்று நிவேதிதா திகைத்துப் போனாள்.. காற்றில் கூட விவரத்தைக் கறந்து விடும் மீனலோசனியின் ஆற்றலைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்...?

"வித்யா கேட்க வைக்கலை.. சுரேன் கேட்க வைத்தார்..."

"நினைத்துக்கிட்டு இரு.. அந்த வித்யாதானே சுரேனுக்கு போனை போட்டு விவரத்தைச் சொன்னா...?"

"என்னிடம் சொல்லலை.."

"உனக்கு இதில் ஒரு திருப்தியா...? ஆனாலும் நிவேதிதா... உனக்கு விவரம் போதாது.. அவ்வளவுதான் நான் சொல்வேன்..."

"வாட்...!"

"கோபப்பட்டால் பட்டுக்க.. பின்னே என்ன...? அந்த பேக்டரிக்குள்ளே தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒன்றுன்னா வித்யா அவங்க பக்கம்தான் நிற்பா.. இதுவரைக்கும் அது போல நடக்காமல் இருந்தது.. நீ வந்து அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிட்ட.."

மீனலோசனி என்னவோ நிவேதிதாவிற்கு ஆலோசனை கூறும் எண்ணத்துடன்தான் அதைச் சொன்னாள்.. அது நாள் வரை மகேந்திரன் யூனியன் தலைவரை தூண்டி விட்டு வித்யாவிற்கு எதிராக வேலை செய்ததை எடுத்துச் சொன்னாள்.. அதனால் தொழிலாளர்களை பகைத்துக்

கொள்ளாமல் அவர்களுக்கு நன்மை செய்வதைப் போல வித்யாவிடம் மோத விடச் சொன்னாள்.. ஆனானப்பட்ட மீனலோசனியாலேயே நிவேதிதாவின் எண்ணவோட்டத்தை புரிந்து கொள்ள முடியாமல் போனது உலக மகா அதிசயம்தான்...

"ஐ.. ஸீ.. " என்ற நிவேதிதாவின் கண்கள் மின்னின..

'ஆஹா... இனி இவ தொழிலாளர்களை பகைத்துக்க மாட்டா...' மகிழ்ந்து போன மீனாவிற்கு...

'அது என்ன தேவைக்கு...?' என்று நிவேதிதாவின் நினைவைப் பற்றித் தெரியாது...

நிவேதிதாவே வித்யாவுடன் மோதும் எண்ணத்துடன் இருந்தாள்... அதிகார வர்க்க மனப்பான்மை கொண்டவளிடம் தொழிலாளர்களிடம் கை கோர்த்துக் கொள் என்று சொன்னால் கேட்டுக் கொள்வாளா...?

வித்யாவுடன் நேருக்கு நேர் மோதினால் சுரேந்திரனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் நிவேதிதா வாய்ப்புக்களை எப்படி உருவாக்கிக் கொள்வது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.. அப்போது பார்த்து மீனலோசனி அதற்கு வழி சொல்லிக் கொடுத்து விட.. நிவேதிதா உற்சாகமாகி விட்டாள்...

'அப்படியா.. அங்கே அடித்தால் இங்கே வலிக்குமா..? இவளும் தொழிலாளியாய் இருந்தவள்தானே.. அதனால் தான் ரோசம் பொத்துக்கொண்டு வருதோ.. வரட்டும்.. அப்படி வந்தால்தான் அவளை உண்டு இல்லைன்னு ஆக்க முடியும்.. எத்தனை நாளைக்குத்தான் சுரேன் அவளுக்கு சப்போர்ட் பண்ணுவார்...? என்றைக்காவது ஒருநாள் எனக்கு சப்போர்ட் பண்ணித்தானே ஆகணும்....? அப்போது குடும்பம் உடைந்துதானே போகும்...'

நிவேதிதா தினமும் பிரச்னைகளை உருவாக்கினாள்.. வித்யா சளைக்காமல் அவளுடன் போராடினாள்.. தொழிலாளர்களின் பக்கம் நின்ற வித்யாவின்மீது தொழிலாளர்களின் பழைய நம்பிக்கை மீண்டது..

ரங்கதுரையின் மனதிலிருந்த கசடும்.. பொறாமையும் பறந்தோடியது.. தூண்டி விட வந்த மகேந்திரனிடமே அவன் பொரிந்து தள்ளி விட்டான்..

"சும்மா போங்க சார்.... உங்களுக்கு எதுக்காக அந்தம்மா மேலே இத்தனை காண்டு..? உங்களைப் போல முதலாளி வர்க்கத்தில் உங்க அண்ணன் பெண்ணைக் கட்டாம எங்களைப் போல தொழிலாளிகள் வர்க்கத்தில் கட்டிட்டார்.. அதுதானே..."

'போச்சுடா...' மகேந்திரன் தலையில் கை வைத்துக் கொண்டு போய் விட்டான்...

நிவேதிதா பேக்டரிக்குள் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்க.. கார்த்திகாயினி தேவி.. வித்யாவின் மனதிற்குள் குழப்பத்தை விதைத்துக் கொண்டிருந்தாள்..

நரேந்திரன் மணிமுத்தாறில் இருக்கும் சமயங்களில் அவனுக்கு வரும் செல் போன் அழைப்புகளில் கார்த்திகாயினியின் பெயர் அதிகமாக இருந்தது..

'இவன் அவகூட போனில் பேசுகிறானா...'

வித்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. கார்த்திகாயினியின் போன் வரும்போது நரேந்திரன் தனிமையில் பேசப்போய் விடுவதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்... ஓர் முறை அப்படி அழைப்பு வந்தபோது நரேந்திரன் குளியலறையில் இருந்தான்.. வித்யா பெயரைக் கவனிக்காமல் அவனின் செல்போனை எடுத்து உயிர்ப்பித்து விட்டாள்.. அவள் பேசுவதற்கு முன்னால் செல்போனில் பெண் குரல் குழைவுடன் பேசியது..

"இன்னைக்கு நீங்க என்னுடன் இருந்திருக்கனும் நரேந்தர்.. ஏன் வரவில்லை...?"

வித்யா உறைந்து போனவளாக செல்போனின் திரையைப் பார்த்தாள்.. அது 'கார்த்திகாயினி' என்று ஒளிர்ந்தது....

24

நதியோரம் நடந்த போது..

நீ சொன்னதெல்லாம்.. கானல் நீரா..?

தண்ணீரில் எழுதியதைப் போல..

கண்ணீரில் நான் எழுதிய கதையா..?

-நதியோரம் நான் நடந்த போது-

வித்யாவினால் தன் காதுகளையும்.. கண்களையும் நம்ப முடியவில்லை.. அவள் ஸ்தம்பித்து விட்டாள்...

எவ்வளவு உரிமையுடன் சொல்கிறாள்..? அன்று அவளுடன் வித்யாவின் நரேந்திரன் இருந்திருக்க வேண்டுமாமே.. அப்படியா..? அவளுடைய நரேந்திரன் அப்படியொரு வாக்குறுதியை அவனுடைய முன்னாள் காதலிக்குக் கொடுத்திருந்தானா...?

அவள் முன்னாள் காதலியாக இருந்தாலும்.. அவள்தான் நரேந்திரனின் முதல்காதலி என்ற நினைவில் வித்யா தவித்துப் போனாள்... அந்த முன்னாள் காதலியும்.. முதல் காதலியுமான கார்த்திகாயினி தேவியுடன் வித்யாவின் நரேந்திரன் ரகசிய உறவில் இருப்பதில் துடித்துப் போனாள்...

குளியலறையில் தண்ணீர் கொட்டும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.. வித்யாவிற்கு கண்ணீர் வந்தது.. அடக்கிக் கொண்டாள்..

'அழாதே வித்யா...' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

'உன் நரேன் ஏற்கனெவே ஒரு பெண்ணைக் காதலித்தவன் என்று உனக்குத் தெரியும்தானே.. தெரிந்துதான் நீ அவனைக் காதலித்தாய்.. இன்னொருத்தியைக் காதலித்தவனின் மனதில் அவளைப் பற்றிய நினைவுகள் வராமலிருக்கும் என்று எந்த நம்பிக்கையில் நீ முடிவு செய்தாய்...?'

அவள் மனதுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.. வித்யா ஜன்னல் திரையை விலக்கி.. தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த நதியைப் பார்த்தாள்.. அவளுடைய சிநேகிதியான நதி.. அவளுடைய துடிப்பை உணர்ந்து கொண்டதைப் போல.. மௌனமாக ஓடிக் கொண்டிருந்தது.. ஜன்னல் கம்பியில் முகம் பதித்திருந்த வித்யாவின் முகம் கண்ணீரின் ஈரத்தில் நனைந்திருந்தது..

எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும்.. கண்ணீருக்கு அனை போட முடியவில்லை என்பதை உணர்ந்த வித்யாவின் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்தது.. கனக்கும் மனதின் சுமையை இறக்க வழி தெரியாமல் தவித்துப் போனாள் அந்தப் பேதை...

லேசாக கண்ணைச் செறுகியதைப் போலத் தோன்றியதில் அவள் அவசரமாக ஜன்னலை விட்டு விலகி படுக்கைக்குச் சென்று சரிந்து படுத்து.. கண் மூடிக் கொண்டாள்...

கண் திறக்க முடியாமல் அவளை அழுத்தும் சோர்வு எதனால் ஏற்பட்டிருக்கிறது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும்.. அந்தச் சோர்வு.. அந்த ஒரு மாத காலமாகவே அவளைப் படுத்தி எடுத்துக் கொண்டிருக்கிறது.. சோர்வு மட்டுமல்ல.. எதைச் சாப்பிட்டாலும் அவள் வயிற்றில் விழுவதற்கு முன்னாலேயே குமட்டல் எடுத்து வாந்தியாய் வெளிவந்து விடுகிறது.. இதைச் சொல்ல நரேந்திரன் அவளருகில் இல்லை.. முதல் நாள்வரை அவன் வெளியூரில்தான் இருந்தான்.. அன்றுதான் மணி முத்தாறுக்கு வந்தான்.. பின்னாலேயே போனில் கார்த்திகாயினியின் அழைப்பும் வந்து விட்டது...

வித்யாவின் மனதுக்கு.. அந்த வாந்தியும்.. மயக்கமும் எதனால் ஏற்படுகின்றன என்று மிக நன்றாகவே தெரியும்.. அதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள அவள் லேடி டாக்டரை அணுகியாக வேண்டும்.. அந்த நொடியில் அவளுடைய நரேந்திரன் அவளருகில் இருக்க வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள்..

'இன்னைக்கு நீங்க என்னுடன் இருந்திருக்கனும் நரேந்தர்...'

கார்த்திகாயினியின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது... வித்யாவினால் ஏன் அந்த நிச்சயத்தில் இருக்க முடியவில்லை..?

அவள் வாழ்வின் மிக முக்கியமான தருணத்தில் அவள் எதிர்பார்க்கும் இனிப்பான செய்தியை லேடி டாக்டர் சொல்லும்போது அவளுடைய நரேந்திரன் அவளுடன் இருக்க வேண்டாமா..?

சொல்லி விடலாம்.. ஒற்றை வரியில் அவள் உடல் நிலையைப் பற்றித் தெரிவித்து விடலாம்.. ஆனால் அவளால் அதைச் சொல்லவும்.. செய்யவும் முடியவில்லை..

அவள் முகம் பார்த்து.. அவளின் உடல் நிலையையும்.. மனநிலையையும் தெரிந்து கொண்ட அவளுடைய நரேந்திரன் எங்கே போய் விட்டான்..? கார்த்திகாயினியின் பின்னால் போய் விட்டானா..? அப்படிப் போய் விட்டவனை அவளுடைய உடல் நலத்தைக் காரணம் காட்டி அவள் இழுத்துப் பிடித்துக் கொள்வதா..?

'ஒருநாளும் நான் அதைச் செய்ய மாட்டேன்...'

வித்யா மனதிற்குள் உறுதியுடன் சொல்லிக் கொண்டாள்.. அவளைவிடக் கார்த்திகாயினி தேவிதான் முக்கியம் என்று நரேந்திரன் நினைத்தால் வித்யா அவன் போக்கில் அவனை விட்டு விட்டு விலகிக் கொள்வாள்.. அவன் மனதைத் திருப்ப முனைய மாட்டாள்...

குளியலறை திறக்கும் சப்தம் கேட்டது.. வித்யா அவசரமாக கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.. குளியலறையை விட்டு வெளியே வந்த நரேந்திரனின் விழிகளைச் சந்திக்காமல் முகம் திருப்பிக் கொண்டாள்.. மனைவியைப் பார்த்தபடி வந்த நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின.. அவன் முகம் பார்க்காமல் முதுகைக் காட்டிப் படுத்திருந்த மனைவியின் அருகில் அமர்ந்து அவளின் இடுப்பைத் தொடப் போனான்...

அவனின் அருகாமையை உணர்ந்த வித்யாவின் மனம் பரவசத்துடன் 'டிக்..டிக்' கென்று அடித்துக் கொண்டது..

இதோ அவன் அவள் இடுப்பைத் தொடப் போகிறான்.. அவளை அவன் பக்கமாகத் திருப்பப் போகிறான்.. ஏண்டி முகம் திருப்பிக் கொள்கிறாய் என்று கேட்கப் போகிறான்.. கலைந்திருக்கும் அவள் முடியை சீர் படுத்தப் போகிறான்.. கலங்கிச் சிவந்திருக்கும் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்க்கப் போகிறான்.. உன் உடம்பு சரியில்லையா வித்யா என்று பதறப் போகிறான்.. வா டாக்டரிடம் போகலாம் என்று சொல்லப் போகிறான்..

இத்தனையையும் எதிர்பார்த்து வித்யாவின் மனம் தவித்துக் கொண்டிருந்த போது நரேந்திரனின் போன் ஒலித்தது.. நரேந்திரனின் கை வித்யாவின் இடுப்பைத் தொடாமல் விலகி செல்போனை எடுத்தது.. செல் போனின் திரையில் ஒளிர்ந்த பெயரைக் கண்டதும் அவனும் விலகி எழுந்து பால்கனிக்குப் போய் விட்டான்...

வித்யாவின் பரவச உணர்வுகளும்.. எதிர்பார்ப்புகளும் ஒரு நொடியில் கலைந்து.. மறைந்து விட்டன.. காற்றில் கலந்து விட்ட கற்பூரமாய் தொலைந்து போன உணர்வுகளைத் தேடுபவளைப் போல சூன்யவெளியில் பார்வையைப் பதித்திருந்தாள் வித்யா...

நரேந்திரன் பால்கனியின் கதவை இறுக்கிச் சாத்தியிருந்தான்.. சாத்தப்பட்டிருப்பது பால்கனியின் கதவுகளா.. இல்லை.. அவன் மனக் கதவுகளா என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டாள் வித்யா...

அவளுடைய நரேந்திரன் மூடப் பட்டிருக்கும் கதவுகளுக்கு அந்தப் பக்கமாக.. அவள் கை தொடும் தூரத்தில்தான் இருக்கிறான்.. ஆனால்.. வித்யாவிற்கு மட்டும் அவன் அவளின் கைக்கு எட்டாமல் வெகு தொலைவில் இருப்பதைப் போன்ற பிரமை உண்டானது..

பால்கனியின் கதவைத் திறந்து வந்தவனின் முகத்தில் கடுமை விரவியிருந்தது... அப்படிப்பட்ட கடுமையை அதற்கு முன்னால் அவன் முகத்தில் வித்யா பார்த்ததே இல்லை..

'இது என் நரேந்திரன்தானா..' துக்கத்துடன் அவள் துடித்தாள்..

"எனக்கு வந்த போனை நீ அட்டெண்ட் பண்ணினயா..?"

அவனின் கேள்வியில் வித்யாவின் விழிகள் விரிந்தன.. எத்தனை அதிகாரமாகக் கேட்கிறான்.. எவ்வளவு கோபத்துடன் கேட்கிறான்.. அவனுக்குத் தெரியும்.. போனில் பேசியவள் கார்த்திகாயினி தேவிதான் என்பது.. அவள் என்ன பேசியிருக்கிறாள் என்பதும் தெரிந்திருக்கும்... உண்மையில் அவன் குற்ற உணர்வில் தடுமாறியிருக்க வேண்டும்.. விளக்கம் சொல்ல முடியாமல் கைகளைப் பிசைந்திருக்க வேண்டும்.. அவன் அதைச் செய்யாமல் அவளை அதட்டுகிறான் என்றால் இதை வித்யா எங்கே போய் சொல்வாள்...?

'பெருமாளே...'

கைப்பொருளை களவு கொடுத்த சிறுமியாய் அவள் மனதுக்குள் அரற்றினாள்...

அவளுடைய பெருமாளின் செவிகளில் அவளின் வேதனைக் குரல் ஏன் ஒலிக்கவில்லை..? எதுவுமே இல்லாத அந்தப் பேதைக்கு இருந்தது நரேந்திரனின் காதல் மட்டும்தான்.. அதையும் பங்குபோட கார்த்திகாயினி வருவாளென்றால் பெருமாள் அதை எப்படி அனுமதித்தார்..?

"கேட்கிறேனில்ல.. பதில் சொல்லு..."

"ம்ம்ம்..."

"ம்ப்ச்.. இதென்ன பழக்கம்..? என் போனை நீ எதுக்காக அட்டெண்ட் பண்ணின...?"

வித்யா அதிர்ந்து போனாள்.. அவனுடைய போன் காலை அவள் எடுத்துப் பேசியிருக்கக் கூடாதா..? அவள் வேறு.. அவன் வேறா..?

செல்போனில் கார்த்திகாயினியின் பெயரை வெளிப்படையாக அவன் பதிவு பண்ணி வைத்திருக்கிறான் என்பது அவள் அறிவில் உறைத்தது...

அதற்கு என்ன அர்த்தம்...?

25

நதியோரம் நடந்த போது..

நான் நடக்க கரம் கொடுத்தாய்..

உன் கைபிடித்து நடந்து வந்தால்..

கரம் விலக்க ஏன் முனைந்தாய்..?

-நதியோரம் நான் நடந்த போது-

வெள்ளைக்காரர்களின் சிந்தாந்தமான வெளிப் படையான நடவடிக்கைகளைப் பற்றி வித்யா படித்திருக்கிறாள்.. அவர்கள் ரகசியம் பேண மாட்டார்கள்.. அதற்குக் காரணம்.. அவர்கள் வெளிப்படையான.. ஒளிவு மறைவில்லாத.. கள்ளம்.. கபடமில்லாத நடவடிக்கைகளை உடையவர்கள் என்பதல்ல.. அவர்களைப் பற்றி அறியும் எதிரிகளால் அவர்களை என்ன செய்து விட முடியும் என்ற ஆணவம்தான் அதற்குக் காரணம்...

அதைப் போலவே நரேந்திரனின் செயல்பாடும் இருந்தது... கார்த்திகாயினி தேவியின் பெயரை அவன் வெளிப்படையாக அவன் போனில் பதிவு செய்திருந்தான்.. அவளிடமிருந்து போன் வந்தால் அந்தப் பெயரை வித்யா பார்த்து விடக் கூடுமே என்ற பயமின்றி செயல்பட்டான்.. வித்யாவின் கண் முன்னாலேயே.. போனில் பேசியபடி பால்கனிக்குப் போய் கதவை அடைத்துக் கொண்டான்.. இப்போது அத்தனைக்கும் சிகரமாக.. அவனிடம் பேசுவதற்காக கார்த்திகாயினி போன் பண்ணிய போது.. வித்யா எதற்காக அதை எடுத்துப் பேசினாள் என்று கேள்வி வேறு கேட்கிறான்...

'நாராயணா.. இதுதான் உன் விளையாட்டா..?' துக்கத்துடன் மனதுக்குள் கேட்டுக் கொண்டாள் வித்யா..

"நீங்க குளித்துக்கிட்டு இருந்தீங்க.. அதோட.. உங்க போன்காலை நான் அட்டெண்ட் பண்றது சகஜம்தானே.. இது முதல் தடவையில்லையே..."

அவளின் பதிலில் நரேந்திரன் முகம் சுளித்தான்.. அவனின் அந்த முகச் சுளிப்பில் வித்யாவின் மனம் சுக்கு நூறாக உடைந்தது.. அவன் முகம் பார்க்காமல் ஒட்டுதல் இல்லாத குரலுடன்...

"இதுவரைக்கும் நீங்க அதை ஆட்சேபித்ததில்ல.. இதைப்போல கேள்வியும் கேட்டதில்ல.." என்றாள்...

"ம்ப்ச்.. கூடக்கூடப் பேசாதே.. மத்த போன்களும் இந்த போனும் ஒன்றா...? பெயரைப் பார்த்ததும் இந்த போனை அட்டெண்ட் பண்ணக்கூடாதுன்னு உனக்குத் தெரிந்திருக்க வேணாமா..? பேஸிக் மேனர்ஸ் கூட இல்லையா...?"

வித்யா விக்கித்துப் போனாள்.. தீயினால் சுட்ட புண்ணைவிட நாவினால் சுடப்பட்ட புண்ணுக்கு ரணமும்.. வலியும் அதிகமென்பதை பொய்யா மொழிப் புலவர் சொல்லி அவள் கேள்விப் பட்டிருக்கிறாள்.. அன்றுதான் அவள் அறிந்தாள்...

அதுவரை அவளை நாவினால் சுட்டவர்களால் அவளைக் காயப்படுத்த முடியவில்லை.. அவள் வித்யா..! தலை நிமிர்ந்து நிற்பவள்..! எவளுக்கும் தலை வணங்காத நிமிர்வைக் கொண்டவள்..!

யாருடைய வார்த்தைகளையும் அவள் பொருட் படுத்தியதில்லை... யாரையும் அவள் எதிரியாக ஏற்றுக் கொண்டதுமில்லை.. அவள்வழி தனி வழி..!

அப்படிப்பட்டவளின் மனம் என்று நரேந்திரனின் பின்னால் சென்றதோ.. அன்றே பலவீனமாகிப் போனதாக உணர்ந்தாள் வித்யா..

இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அவள் சும்மா நிற்க மாட்டாள்.. இது போன்ற கேள்விகளை அனுமதிக்கவும் மாட்டாள்..

அவளுக்கா அடிப்படை நாகரிகம் இல்லை...?

அவளுடைய காதல் கணவனுக்கு.. அவனுடைய முன்னாள் காதலியிடமிருந்து போன் வந்திருக்கிறது.. அதற்காக

அவள் கணவனைப் பார்த்து ஏன் என்று கேட்கவில்லை...

அந்த முன்னாள் காதலியின் போன் வந்துவிட்டால்.. அவளுடைய கணவன் அவள் கண் முன்னாலேயே தனிமையை நாடிப் போய் விடுகிறான்.. மணிக் கணக்காக அவனுடைய முன்னால் காதலியுடன் பேசிவிட்டு திரும்பி வருகிறான்.. அதையும் அவள் ஏன் என்று கேட்கவில்லை..

அவளைப் பார்த்து அவள் கணவன் கேட்கிறான்.. உனக்கு அடிப்படை நாகரிகம் தெரியாதா என்று..

"இனிச் செய்யலை..." அவள் உறுதியுடன்.. மனம் வலிக்கச் சொன்னாள்..

அவள் குரலின் மாறுபாட்டை உணர்ந்தவனாக அவள் முகம் பார்த்த நரேந்திரன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.. பின்னர் ஒரு பெருமூச்சுடன் பெட்டியை எடுத்தான்.. துணிகளை அடுக்க ஆரம்பித்தான்..

"நான் வெளியூர் போகனும்..."

எந்த ஊருக்கு என்று வித்யா கேட்கவில்லை... அதற்கு முன்னாலும் அவள் அது போன்ற கேள்விகளை அவனைப் பார்த்துக் கேட்டதில்லை.. அப்படிப்பட்டவளைப் பார்த்துத்தான் உனக்கு அடிப்படை நாகரிகம் தெரியாதா என்று நரேந்திரன் கேட்டு விட்டான்...

"வித்யா..."

அவள் பதில் பேசவில்லை.. என்ன நினைத்தானோ.. நரேந்திரன் அவள் அருகில் வந்தான்.. சட்டென்று விலகி அமர்ந்தாள் வித்யா... அவன் முகம் சுருங்கி விட்டது...

"நான் திரும்பி வர கொஞ்ச நாளாகும்..." என்றான்...

வித்யா பதில் சொல்லாமல் அசைவின்றி அமர்ந்திருந்தாள்.. சற்று நேரம் நின்று பார்த்த நரேந்திரன் ஒரு பெருமூச்சுடன் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான்...

'கிளம்பி விட்டான்..' வித்யா மனம் வலிக்க அவனைப் பார்த்தாள்...

அதே நொடியில் அவனும் அவளைத் திரும்பிப் பார்த்தான்... இருவரின் பார்வைகளும் ஒரு நொடி பின்னிப் பிணைந்தன.. வித்யாதான் முதலில் பார்வையை விலக்கிக் கொண்டு வேறு திக்கில் பார்த்தாள்.. அவளின் வெறுமையான பார்வையைப் பார்த்தவனின் புருவங்கள் முடிச்சிட்டன...

"கார்த்திகாயினி எப்படியோ போகட்டும் என்று என்னால் விட்டு விட முடியாது வித்யா..." நிதானமாகச் சொன்னான்...

வித்யா அதிர்ந்து போனாள்.. முதன் முதலாக அவன் வாயிலிருந்து வரும் தன்னிலை விளக்கத்தைக் கேட்டவளின் உயிர் துடித்தது...

"அவ சந்தோசமா வாழ்ந்திருந்தா.. அவளைப் பற்றி நினைக்காம என்னால வாழ்ந்திருக்க முடியும்.. ஆனா.. அவ சந்தோசமா வாழலை.. அது தெரிஞ்ச பின்னாலே என்னாலே அவ எக்கேடோ கெடட்டும்ன்னு விட்டுவிட முடியலை..."

அவன் போய் விட்டான்.. அவன் சிந்தி விட்டுப் போயிருந்த வார்த்தைகள் வித்யாவைச் சுற்றிக் குளவிக் கூடுகளின் கூட்டைப் போல கூடு கட்டி.. அவள் மனதைக் கொட்டிக் கொட்டி துடிக்க வைத்துக் கொண்டிருந்தன...

கார்த்திகாயினி தேவியை நரேந்திரனால் விட்டு விட முடியாது.. இதை அவன் தெளிவாகச் சொல்லி விட்டான்...

இனி முடிவெடுக்க வேண்டியது வித்யாதான்... அவள் என்ன செய்ய வேண்டும்..? நரேந்திரனின் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டுமா..?

'சீச்சீ...' அருவெறுத்தாள் வித்யா...

அவனின் இந்த முடிவை வித்யா ஏற்றுக் கொள்வதா..? ஒருநாளும் அது நடக்காது...

'வேறு என்ன செய்யப் போகிறாய்..?' அவள் மனம் கேட்டது...

'நரேந்திரனை விட்டுப் பிரிந்து போகப் போகிறாயா..?'

முடியுமா..? அவளால் அது முடியுமா..? முன்பு ஒருமுறை அவனைப் பிரிந்து போக முடிவு செய்தவள் தான் அவள்.. அன்றும் அவளுடைய நரேந்திரன் அவளை இன்னொருவனுக்கு தாரை வார்த்துக் கொடுக்க முடிவு செய்திருந்தான்.. இன்று.. அவனை இன்னொருத்திக்கு தாரை வார்த்துக் கொடுத்து விடும்படி வித்யாவை மறைமுகமாக வற்புறுத்துகிறான்...

அன்று வித்யா நரேந்திரனின் காதலி மட்டும் தான்.. இன்றோ அவன் மனைவி...!

காதலியாக இருந்தபோதே இன்னொருவனுடன் அவளை இணைக்கும் நினைவை நரேந்திரன் நினைத்து விட்டான் என்று அவனை விட்டு விலகிப் போக நினைத்தவள்தான் வித்யா.. மனைவியாக இந்த நிலையில் அவன் செய்கையை அவள் பொறுத்துக் கொள்வாளா..?

எழுந்து நிற்க முயன்றவளுக்கு மயக்கம் வந்தது.. சுதாரித்துக் கொண்டவளாய் குளியலறைக்குள் புகுந்து.. தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்து மயக்கத்தை விரட்ட முயன்றாள்...

'டாக்டரிடம் போயாகனும்...'

தனித்து டாக்டர் திலகவதியைத் தேடிக் கிளம்பிய போது.. அவள் மனதில் நிராதரவான உணர்வு எழுந்தது.. எப்போதும் அவளுக்கு சாய்ந்து கொள்ளத் தோள் கொடுத்த நரேந்திரன் அப்போது அருகில் இல்லையே என்ற ஏக்கம் வந்தது.. அதை விரட்டியடிக்க முயலாத இயலாமையுடன் மருத்துவமனைக்குள் சென்றாள்.. அவளைப் பரிசோதித்த டாக்டர் திலகவதியின் அகலமான புன்னகை வித்யாவின் கணக்கீட்டை ஊர்ஜிதம் செய்தது...

"கங்கிராஜீலேசன்ஸ் வித்யா.. நீங்க அம்மாவாகப் போகிறிங்க..."

அப்பாவாகப் போகிறவன் எங்கே போயிருக்கிறான் என்ற நினைவில் சந்தோஷிக்க முடியாமல் கண்களில்

கண்ணீரால் குளம் கட்டினாள் வித்யா...

26

நதியோரம் நடந்த போது..

வெந்நிலவின் வரவு கண்டேன்..

தந்நிலவில் குளிராமல்..

தவிப்பினிலே தனிமை கொண்டேன்..

-நதியோரம் நான் நடந்த போது-

இதமான குளிர் காற்று வித்யாவின் உடல் தழுவியது.. நதிக்கரையில் நடந்தவளுக்கு நரேந்திரனின் நினைவு மட்டுமே நெஞ்சில் இருந்தது.. லேசாக உடல் தள்ளாடிய போது தாங்கிக் கொள்ள அவன் வருவானா என்று மனம் கலங்கியபடி தன்னை சமாளித்துக் கொண்டு படித்துறையில் அமர்ந்தாள் வித்யா.. சலசலத்து ஓடிய நதிநீர் தோழியின் தனிமையான வரவில் திகைத்ததைப் போல மௌனமாக இருந்தது...

'காற்று வெளியினில் கண்ணம்மா...

நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்..'

இந்தப் படித்துறையில் வைத்துத்தான் பாடினான் நரேந்திரன்.. அவன் காதலைச் சொன்னான்.. இன்று அவன் மனைவியாக அவனின் குழந்தையை வயிற்றில் சுமந்தபடி அந்தச் செய்தியை அவனிடம் பகிர்ந்து கொள்ள முடியாமல் தனிமையில் அமர்ந்திருக்கிறாள் வித்யா.. அவனோ.. அவனது முன்னாள் காதலியைத் தேடிப் போயிருக்கிறான்...

வித்யாவிற்கு கண்கள் மங்குவதைப் போல இருந்தது.. அவளின் உடல் உபாதைகளை அவளால் யாரிடம் சொல்ல முடியும்...?

அவைகளைச் சொல்லித் தலைசாய தாயின் மடி இருக்கிறதா..? இல்லையே.. அவளின் சித்தி மனம் மாறியிருக்கலாம்.. குணம் மாறவில்லையே... வித்யாவின் தயாள குணத்தால் அவள் வெறுப்புக் காட்டுவதை நிறுத்தியிருக்கிறாள்.. விருப்பம் காட்டவில்லையே...

மணிமுத்தாறு அரண்மனையில் சௌதாமினி விரும்பியதைப் போல அண்ணன் தம்பிகளின் குடும்பங்கள் ஒரே அரண்மனையில் தான் வசிக்கின்றனர்... வீடு முழுவதும் நிறைந்திருப்பவர்களில் ஒருவர் கூட வித்யாவின் உடல்நிலையைக் கவனித்து பரிவோடு கேள்வி கேட்கவில்லையே...

சொந்தங்களின் மத்தியில் தனித்தீவாய் வாழ்வது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை வித்யா அன்று உணர்ந்தாள்.. நரேந்திரன் மட்டும் வழக்கமான நரேந்திரனாக இருந்திருந்தால் அவளை இந்த அளவுக்கு மறுக விட்டிருக்க மாட்டான்.. அனைத்துமானவனாக அவளை ஆதரித்திருப்பான்.. அவன்தான் இப்போது அப்படியில்லையே...

வித்யா துயரத்துடன் ஓடும் நதி நீரை வெறித்தாள்.. அவள் கைகள் தன்னிச்சையாக வயிற்றைத் தடவின...

'ஏ நதியே..! உன் சிநேகிதி வந்திருக்கிறேன்.. உன் கரையினில்தான் என் மனதுக்குப் பிடித்தவனிடம் என் மனதைச் சொன்னேன்.. தயாள குணம் படைத்த என்னவன்.. என்னை ஏற்றுக் கொண்டான்.. இன்று அவன் மகவை என் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறேன்.. இதை அவனிடம் சொல்ல முடியாமல் எங்கோ அவன் விலகி நிற்கிறான்.. அதனால் உன்னிடம் சொல்ல வந்திருக்கிறேன்.. கேட்டுக் கொள்ள.. எனக்கென்று பூர்ணிமாவிற்கு இணையாக இருக்கும் சிநேகிதி நீ மட்டும் தான்.. அவளிடம் இதை நான் பகிர்ந்து கொள்ள முடியாது.. அவளுடைய அண்ணனிடம் பகிர்ந்து கொள்ளாமல் அவளிடம் எப்படி இதை என்னால் பகிர்ந்து கொள்ள முடியும்..? ஆனால் உன்னிடம் பகிர்ந்து கொள்ள முடியும்..

இந்த நொடியில் உன்னை விட்டால் எனக்கென்று யாருமில்லை...'

வித்யா.. நதி நீரில் கால் நனைத்தாள்.. தோழியின் மனதைப் படித்ததைப் போல.. நதிநீர் வேகம் குறைந்து அவள் பாதம் நனைத்து அவளைத் தொட்டு ஆறுதல் படுத்தியது..

சோர்வுடன் எழுந்து கொண்ட வித்யா.. காருக்குச் சென்றாள்.. காத்திருந்த டிரைவர் அவள் முகம் பார்த்தான்..

"பேக்டரிக்கு போங்க..." சோர்வுடன் சொல்லிய வித்யா சீட்டில் தலை சாய்த்துக் கொண்டாள்...

பேக்டரிக்குள் கார் நுழைந்த போது.. அங்கே கூட்டம் குழுமியிருந்தது.. தூரத்திலேயே கலவரமான சூழல் உருவாகியிருப்பதைக் கண்டு கொண்ட டிரைவர்..

"ஏதோ ரகளை நடந்திருக்கு போலம்மா..." என்றான்..

"அப்படித்தான் தெரியுது..."

"என்னன்னு தெரியலையே..."

"கிட்டப் போய் விசாரிச்சாத்தான் தெரியும்.. எதுவா இருந்தாலும் ஃபேஸ் பண்ணித்தானே ஆகனும்..."

அலுப்புடன் சொன்ன வித்யாவை ஒர்முறை திரும்பிப் பார்த்தான் டிரைவர்.. அவன் எதையோ சொல்ல நினைப்பதை புரிந்து கொண்ட வித்யா...

"என்ன விசயம்..?" என்று கேட்டாள்...

"இப்பல்லாம் அடிக்கடி ரகளை வருதும்மா.. பழைய மாதிரி இல்லை..."

டிரைவர் சொல்ல வருவதை புரிந்து கொண்டாள் வித்யா.. அவன் நிவேதிதாவின் வரவுக்கு முன்னாலிருந்த காலத்தை 'பழைய மாதிரி' என்று சொல்கிறான்...

இதற்கு வித்யா என்ன பதிலைச் சொல்வாள்..? ஆமாம்.. அப்படித்தான் என்று சொல்ல முடியுமா..?

மௌனமாக காரை விட்டு இறங்கியவளை தொழிலாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.. விவரத்தை விசாரித்த வித்யா தலையைப் பிடித்துக் கொண்டாள்.. அங்கே பூகம்பம் உருவாகியிருந்தது...

நிவேதிதா.. ரங்கதுரையின் கன்னத்தில் அடித்திருந்தாள்..

தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவனின் கன்னத்தில் முதலாளியின் மனைவி அறைந்து விட்டால் என்ன நிகழுமோ.. அது அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது..

ஒட்டு மொத்த தொழிலாளர்களும் வேலையைப் புறக்கணித்து விட்டு அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.. ஒவ்வொருவரின் முகத்திலும் அக்கினியின் ஜீவாலை தெரிந்தது.. வித்யா சுரேந்திரனிடம் விவரம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.. சுரேந்திரனும் அங்கேதான் நின்று கொண்டிருந்தான்..

தொழிலாளர்களை சமாதானப் படுத்த முனையாமல் அவர்களுக்கு குறையாத கோப முகத்துடன் அவர்களை முறைத்துக் கொண்டிருந்தவனைப் பார்த்த வித்யாவிற்கு எரிச்சல் வந்தது..

'என்ன மனிதன் இவன்..!'

நரேந்திரன் இல்லாத நேரத்தில் அஸிஸ்டெண்ட் எம்.டி தானே ஆக்டிங் எம்.டியாக செயல்பட வேண்டும்..? அதை விட்டுவிட்டு இவனும் தொழிலாளர்களை முறைத்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்ற ஆயாசத்துடன்...

"இதெல்லாம் என்ன சுரேன்...?" என்று கேட்டாள் வித்யா...

சுரேந்திரன் பதில் சொல்வதற்குள் தொழிலாளிகளில் ஒருவன் முந்திக் கொண்டு கூச்சலிட்டான்...

"இவர்கிட்டப் போயி கேட்கறிங்களே மேடம்.. இவரோட நாயம் வேற மாதிரியில்ல இருக்கு..."

சப்தம் போட்டவனைப் பார்த்து பேசாமலிருக்கும்படி சைகை செய்தாள் வித்யா..

"நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டு.. இவர் பக்கம் என்ன நியாயம் இருக்குன்னு நாமளும் கேட்டுத் தெரிந்துக்கலாமே..."

'நாமும்' என்று தொழிலாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த வித்யாவை சொந்தமில்லாத பார்வை பார்த்தான் சுரேந்திரன்.. அவனின் அந்தப் பார்வையினை மனதில் பதிய வைத்துக் கொண்டாள் வித்யா...

"ஸோ.. நீங்க லேபர்ஸ் பக்கம்தான் நிப்பீங்க...?"

"இல்லை சுரேன்.. நியாயத்தின் பக்கம் நிற்பேன்.. ரங்கதுரையின் கன்னத்தில் நிவேதிதா அடிக்கலாமா..?"

"நிவேதிதாவின் ஸ்டேட்மென்ட் வேறாய் இருக்கு அண்ணி..."

"என்னவாம்...?"

"ரங்கதுரை அவளின் கையைப் பிடித்து இழுத்ததினால் சட்டுன்னு கன்னத்தில் அடித்திருக்கிறாள்.. இட்ஸ் கொயட் நேச்சுரல்.. யாராய் இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பாங்க.. ஏன்..? நீங்களா இருந்தாலும் அதைத்தானே செய்திருப்பீங்க...?"

சுரேந்திரன் கேட்ட கேள்வியில் உதடுகளைக் கடித்தாள் வித்யா.. ஒரு கணவனாக மனைவியின் செயலை நியாயப் படுத்த சுரேந்திரன் முனைவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஒரு பெண்ணின் கையைப் பிடித்து இழுத்தால் அவள் யோசிக்காமல் சட்டென்று அடித்து விடுவது இயல்புதான்.. அதில் தவறேதும் இருப்பதாக வித்யாவிற்கும் தோன்றவில்லை...

ஆனால்.. ரங்கதுரை ஏன் அப்படிச் செய்தான்..?

வித்யா ரங்கதுரையைப் பார்த்தாள்.. அவள் பார்வை கேள்வி கேட்டது.. அதைப் புரிந்து கொண்ட ரங்கதுரை பதில் சொன்னான்..

"அவசரப்பட்டு தப்பான முடிவுக்கு வந்துடாதீங்க மேடம்.. நான் அப்படிப்பட்ட ஆளில்லை..."

இதுபோன்ற தன்னிலை விளக்கத்தை ரங்கதுரை சொல்லித் தான் கேட்க வேண்டிய நிலைமையை எண்ணி நொந்து போனாள் வித்யா.. அவன் நல்லவன்.. கோபக் காரனாக இருந்தாலும் கண்ணியம் மிக்கவன்.. பெண்களிடம் மரியாதை தவறாமல் கௌரவம் காப்பவன்...

27

நதியோரம் நடந்த போது..

தூரத்திலே விடிவெள்ளி கண்டேன்..

உன்னிடம் சொல்லத் திரும்பியபோது..

இருளோடு நீ மறையக் கண்டேன்..

-நதியோரம் நான் நடந்த போது-

அப்படிப்பட்ட ரங்கதுரையின் மீது இப்பேற்பட்ட பழி வந்திருக்கிறது.. என்னதான் ரங்கதுரை நல்லவன் என்று மனதிற்கு தெரிந்தாலும்.. நிவேதிதாவின் பக்கமும் ஒரு நியாயம் இருந்து வைக்கிறதே.. அதற்கான பதில் கிடைக்காமல் வித்யா எந்த முடிவுக்கும் வரமுடியாதே...

"இப்பப் பிரச்னை அது இல்லை ரங்கதுரை.. நீங்க எதுக்காக நிவேதிதாவின் கையைப் பிடிச்சு இழுத்தீங்க..?"

"முழுதாக் கேட்காம என்மேல பாயாதீங்கம்மா.. அந்தம்மா பேக்டரிக்குள்ள நடந்து வந்தாங்க.. மெஷின் வேலை செய்கிற பக்கம் வர்றவங்க நாலா பக்கமும் பார்த்தபடி வரனுமா.. வேணாமா..? அந்தம்மா நடந்து வர்றாங்க.. மேலே மெஷின் கீழே இறங்கி வந்துக்கிட்டே இருக்கு.. நான் கையைப் பிடிச்சு இழுத்து இந்தப் பக்கமா தள்ளி விட்டேன்..

ஒரு நொடி தாமதிச்சிருந்தாலும் அந்தம்மா மெஷினுக்கு கீழே அகப்பட்டிருப்பாங்க..."

ரங்கதுரை விவரித்ததில் வித்யா திகிலடைந்து விட்டாள்.. எப்பேற்பட்ட விபத்து தவிர்க்கப் பட்டிருக்கிறது..! அதற்காக ரங்கதுரையை பாராட்டாமல் கன்னத்தில் அடிப்பதா...?

"சுரேன்.. இவர் நிவேதிதாவின் உயிரைக் காப்பாத்தியிருக்கார்.. அதுக்காக தேங்க்ஸ் சொல்லாம கன்னத்தில் அடிப்பதா..?"

வித்யா நியாயம் கேட்டபோது அவள் எதிர்பார்க்காத வார்த்தைகளை சுரேந்திரன் சொன்னான்..

"உங்களுக்கு நிவியைப் பிடிக்காதுதான் அண்ணி.. அதுக்காக ஒரு பெண்ணுன்னும் நினைக்காம.. அவ உணர்வுகளை மதிக்காம நீங்க பேசக்கூடாது.. அவளைப் பழிவாங்க இதுதான் நேரமா..?"

"சுரேன்.." வித்யா விக்கித்து நின்று விட்டாள்..

அவளைப் பார்த்து எப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி விட்டான் சுரேந்திரன்.. நிவேதிதாவின் முகத்தில் அப்பட்டமான மகிழ்வு தெரிந்தது.. அவளின் விழிகள் வெற்றிப் பெருமிதத்தை பறைசாற்றின...

வித்யா தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்...

இது அவளின் மனக் காயங்களை நினைத்து மருகுவதற்கான நேரமல்ல.. அவளை நம்பி.. அவளின் வார்த்தைக்காக.. போராட்டத்தை கைவிட்டு நிற்கும் தொழிலாளர்களுக்கு அவள் நியாயம் செய்ய வேண்டும்.. சுரேந்திரன் சொன்னதற்காக பின் வாங்கி விட்டால் ரங்கதுரைக்கு நியாயம் செய்ய முடியாது..

"இது பேக்டரி சுரேந்திரன்.. இதில் சொந்த விருப்பு.. வெறுப்புகளுக்கு இடமில்லை.. உங்க வொய்பை எனக்குப் பிடிக்காதுன்னு எதை வைத்துச் சொல்கிறிங்க..? எனக்கு யார் மீதும் விரோதமில்லை.. உங்க வொய்ப் தான் என்மேல

தேவையில்லாம விரோதம் வைத்துக்கிட்டு இருக்காங்க.. இதை முதலில் நினைவில் வைத்துக்கங்க.. ஒரு பெண்ணாக ரங்கதுரையை உங்க வொய்ப் யோசிக்காமல் அடித்ததில் தவறில்லை.. ஆனால்.. அதற்க்கப்புறமா மெஷின் கீழே இறங்கி வந்ததைப் பார்த்திருக்கனுமே.. நிவேதிதாவோட உயிர் காப்பாற்றப் பட்டிருப்பதைப் புரிந்திருக்கனுமே.. உடனடியாக நிவேதிதா என்ன செய்திருக்கனும்..?"

வித்யாவின் கேள்வியில் சுரேந்திரனின் முகத்தில் யோசனை வந்தது.. அவன் இந்தக் கோணத்தில் யோசிக்கவே இல்லையே...

"கையைப் பிடித்ததினால சட்டுன்னு ரியாக்ட் பண்ணி அடிக்கத் தெரிஞ்சவங்களுக்கு அது எதற்காகன்னு தெரிந்தவுடனே தேங்க்ஸ் சொல்லி அடிச்சதுக்கு மன்னிப்புக் கேட்கவும் தெரிந்திருக்கனுமில்ல..?"

வித்யா நிற்க வைத்து கேட்ட கேள்வியில் நிவேதிதாவின் முகம் மாறியது.. இந்த அளவுக்கு புத்திசாலித்தனமாக வித்யா கேள்வி கேட்பாள் என்று அவள் எதிர் பார்த்திருக்கவில்லை...

வித்யாவின் கேள்வியில் சிந்திக்க ஆரம்பித்த சுரேந்திரனை கவலையுடன் பார்த்தாள் நிவேதிதா..

'இவன் யோசிக்கக் கூடாதே...'

நிவேதிதாவின் கவலையைப் பற்றிய கவலையன்றி சுரேந்திரன் யோசிக்க ஆரம்பித்து விட்டான்.. அவன் முகம் கல்லைப் போல கடினமானது...

அவன் ஆண்மகன்.. அவனுடைய மனைவியை அன்னியன் ஒருவன் தொட்டவுடன் அவள் சட்டென்று அவனை அடித்து விட்டதை அவன் மனப்பூர்வமாக ஆதரித்தான்.. அதனாலேயே அவன் மனைவியின் பக்கமாக நின்று வித்யாவிடம் மோதிவிட்டான்.. ஆனால் வித்யா அவன் கேள்வியில் மனதில் அடிவாங்கினாலும் பின் வாங்காமல்

நின்று எதிர்த்து கேள்வி கேட்டதில் அவன் அறிவு விழித்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டது..

"இப்ப என்ன செய்யனும்கறிங்க..?"

"உங்க மனச்சாட்சியிடம் இந்தக் கேள்வியைக் கேளுங்க சுரேந்திரன்.. அது சொல்வதைச் செய்யுங்க.. ஐ திங்க்.. இன்னும் உங்க மனச்சாட்சி உயிர்ப்போட இருக்குதுன்னு நான் நம்பறேன்..."

வித்யாவின் மறைமுகைமான குத்தலில் சுரேந்திரனுக்குள் இருந்த நியாயவாதி உயிர் பெற்றான்.. சுரேந்திரன் நிவேதிதாவின் பக்கம் திரும்பினான்.. நிதானமாகச் சொன்னான்..

"நிவி.. ரங்கதுரைக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு ஸாரி சொல்லிடு..."

"வாட்.." நிவேதிதா இமை கொட்டினாள்...

அவளுக்கு அவள் காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை...

அவள் எவ்வளவு மெனக்கெட்டு.. திட்டமிட்டு.. அந்தச் சம்பவத்தை செயல்படுத்தினாள் என்று அவளுக்குத்தான் தெரியும்..

கணவனின் குணம் அறிந்தவள் நிவேதிதா.. அவனாலேயே ஆட்சேபிக்க முடியாத அளவிற்கு தொழிற்சாலைக்குள் ஒரு கலகத்தை உண்டு பண்ண வேண்டும் என்று அவள் திட்டமிட்டாள்.. வேண்டுமென்றே ரங்கதுரை பார்த்துக் கொண்டிருக்கும் போது..

மேலேயிருந்து இறங்கிக் கொண்டிருந்த இயந்திரத்தைக் கவனிக்காததைப் போல அவள் நடந்து போனாள்.. அவளின் யுக்தி பலித்தது.. ரங்கதுரை அவசரமாக அவளின் கையைப் பிடித்து இழுத்து காப்பாற்றி விட்டான்.. ரங்கதுரை அவளைக் காப்பாற்ற முனையா விட்டாலும் நிவேதிதா கவனமாகத்தான் இருந்தால்.. தானாக இயந்திரத்தின் அடியிலிருந்து விலகியிருப்பாள்..

அது தெரியாத ரங்கதுரை பதறி விட்டான்.. அவனின் அந்த மனிதாபிமானத்திற்கு பரிசாக நிவேதிதா ஒரு அறை விட்டுவிட்டு.. அதை நியாயப் படுத்தி சுரேந்திரனிடம் நாடகமும் ஆடிவிட்டாள்..

"நீங்களே சொல்லுங்க சுரேன்.. உங்களைத் தவிர வேறு ஒருத்தனின் விரல் என்மேல பட்டாலும் அவனைக் கொன்று விடனும்கிற கோபம் எனக்கு வருமா.. வராதா..?"

வராது என்று எந்தக் கணவன்தான் சொல்லுவான்..? அப்படிப்பட்ட கோபம் வந்து விட்டதால் ரங்க துரையின் கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டாள் நிவேதிதா என்பதில் சுரேந்திரன் மகிழ்ந்து போனான்..

அவளுக்காக.. தொழிலாளர்களையே எதிர்த்தும் நின்று விட்டான்..

இப்படி அணுவளவு கூடப் பிசகாமல் காய் நகர்த்திய நிவேதிதாவின் திட்டத்தை ஒரு நொடியில் வித்யா தகர்த்து விட்டாளே...

'இவளை என்ன செய்தால் தேவலாம்..' கொலை வெறியுடன் வித்யாவை முறைத்தாள் நிவேதிதா...

"நான் எதுக்காக இந்த ஆளிடம் தேங்க்ஸ் சொல்லனும் சுரேன்..."

"இந்த ஆள்ன்னு சொல்லாதே.. அவர் யூனியன் லீடர்.. அத்தோட உன் உயிரைக் காப்பாற்றியிருப்பவர்.."

"ஸோ வாட்..?"

"அதுக்காக நீ இவருக்கு தேங்க்ஸ் சொல்லனும் நிவி.."

"ஸாரியும் சேர்த்துச் சொல்லனும்கிறது டூ மச் சுரேன்.."

"நோ நிவி.. உன்னைக் காப்பாற்றியவரை நீ புரிந்துக்காம அடிச்சுட்ட.. அது தெரியாம நீ செய்து விட்ட தவறு.. அதுக்காக நீ இவரிடம் ஸாரி சொல்லித்தான் ஆகனும்..."

திரும்பவும் வித்யாவின் முன்னால் தோற்றுப் போய் விட்டதை உணர்ந்தாள் நிவேதிதா.. முகம் கன்ற சுரேந்திரன்

சொன்ன இரண்டு வார்த்தைகளையும் வானத்தைப் பார்த்துச் சொல்லிவிட்டு ஆத்திரத்துடன் அவளுடைய கேபினுக்குப் போய் விட்டாள்..

"அண்ணி..."

எதையோ சொல்ல வந்த சுரேந்திரனின் முகம் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் வித்யா.. சுரேந்திரனின் முகம் மாறி விட்டது.. அவன் குற்ற உணர்வுடன் விலகி நடந்தான்..

28

நதியோரம் நடந்த போது..

நெஞ்சுக்குள்ளே ஏதோ பாரம்..

பகிர்ந்து கொள்ள நீயுமின்றி..

மனதுக்குள்ளே ஏதோ ஏக்கம்..

-நதியோரம் நான் நடந்த போது-

விலகி நடந்த சுரேந்திரனைப் பார்த்த போது வித்யாவின் மனம் வலித்தது.. அவன் அவளுடைய கணவனின் சகோதரன்.. அவளிடமும் சகோதரனைப் போல பாசம் காட்டியவன்...

அவனின் அந்த பாசத்தை நிவேதிதா உடைத்து விட்டாள்... அவளால் சுரேந்திரனை இந்த அளவுக்கு பேச வைக்க முடியுமென்று வித்யா நினைத்தும் பார்த்த தில்லை..

'நித்தம்.. நித்தம்..

மாறுவது எத்தனையோ...'

என்றோ கேட்ட பாடல் அவள் மனதில் ஒலித்தது.. இப்போதெல்லாம் இது போன்ற பாடல் வரிகள் தான் அவள்

மனதில் ஒலித்து வைக்கின்றன...

தாய்மை அடைந்திருக்கும் அந்தத் தருணத்தில் இது போன்ற பாடல்கள் மனதில் தோன்றுவது சரியல்ல என்று நினைத்துக் கொண்டாலும்.. அந்தப் பாடல்களை நினைவு படுத்திக் கொள்ளாமல் இருக்க வித்யாவினால் முடியவில்லை...

"ரொம்ப நன்றிங்கம்மா.." மனதார நன்றி சொன்னான் ரங்கதுரை..

அவனைச் சுற்றி நின்று கொண்டிருந்த தொழிலாளர்களின் முகத்திலும் அந்த நன்றி உணர்வு தெரிந்தது...

"இருக்கட்டும்.. இது என் கடமை.." வித்யா முறுவலித்தாள்..

"நீங்க மாறிட்டிங்களோன்னு நினைச்சேன்ம்மா.. அப்படியில்லை.. நீங்க எப்பவும் எங்க பக்கம்தான்னு நிருபிச்சிட்டிங்க.. நாங்க சௌகரியமா இருந்தப்ப.. நீங்க அமைதியா இருந்தீங்க.. அதுவே எங்களுக்கு ஒரு பிரச்னைன்னு வருகிறப்ப.. எங்க பக்கம் நின்று உங்க குடும்பத்தையே எதிர்த்து நியாயம் கேட்கறிங்க.. நீங்க மாறவே இல்லைம்மா.." ரங்கதுரை நெகிழ்ந்தான்..

"நீங்களும் எங்க குடும்பம்தான் ரங்கதுரை..."

"உங்களைப் போல எல்லா முதலாளிகளும் இருந்துட்டா... தொழிலாளிகளும்.. முதலாளிகளோட குடும்பம்தான்ம்மா.."

"நன்றி ரங்கதுரை.. இனியாவது வேலையை ஆரம்பிக்கலாமில்லையா..?"

"இதோ போறோம்மா..."

தொழிலாளர்கள் அவரவர் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டார்கள்.. புயலுக்குப் பின்னால் நிலவும் அமைதி அங்கே நிலவியது.. வித்யா சோர்வுடன் நடந்து அவள் கேபினுக்குள் நுழைந்தாள்.. சுழல் நாற்காலியில் அமர்ந்தாள்.. சுழன்றாள்.. சற்று முன்னால் அவள்மீது பழி போட்டு சுரேந்திரன் பேசிய பேச்சுக்களும் மனதில் சுழன்றது..

'எப்படிப் பேசிவிட்டான்..' அவள் மனம் பொருமியது...

அவன் மனைவி சொன்னாள் என்பதற்காக வித்யாவை அவன் அப்படிக் கேட்டு விடுவதா..?

'எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும்-அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு..'

என்று சொன்னாரே வள்ளுவப் பெருந்தகை..! அதை சுரேந்திரன் மறந்தானா..? அவனுக்கு நிவேதிதாவின் குணம் தெரிந்திருக்கும்தானே.. தெரிந்தும் அப்படிப் பேசலாமா...?

'நன்றிம்மா..' ரங்கதுரை சொன்னதை நினைத்துக் கொண்டாள்... அவள் விழிகளில் கண்ணீர் பெருகியது...

'எல்லோரும் நலம் வாழ

நான் பாடுவேன்..

நான் வாழ யார் பாடுவார்..?

என் பாடல் நான் பாட

பலர் ஆடுவார் - இனி

என்னோடு யார் ஆடுவார்..?'

அவள் மனதில் பாடல் ஒலித்தது.. எவ்வளவு பிரயத்தனப் பட்டாலும் தடுக்க முடியாமல் மனதில் தோன்றி விட்ட பாடலில் அவள் விழிகளில் கண்ணீர் சுரந்தது...

'கண்ணீரை நானெங்கு

கடன் வாங்குவேன்..?

அது கடலாக வந்தாலும்

தடை போடுவேன்..

நியாயங்கள் தெளிவாக நாளாகலாம்

நான் யாரென்று அப்போது நீகாணலாம்..'

இமைசிமிட்டி கண்ணீரை தடுத்தபடி மௌனமாக வேலையில் மூழ்கி விட்டவளை அனுதாபத்துடன் பார்த்தான் குகன்.. அந்த நல்ல மனம் படைத்த பெண்ணின் மனதில் அமைதியில்லாமல் இருப்பது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல தெள்ளத் தெளிவாக தெரிந்தது.. அவனது செல் போன் ஒலித்தது.. எடுத்து அதன் சின்னத்திரையைப் பார்த்தான்.. ஒளிர்ந்த எண்களில் அவன் கண்களும் ஒளிர.. அதை காதுக்கு கொடுத்து...

"குட் மார்னிங் சார்..." என்றான்..

"வாட் ஹேப்பன் குகன்..?" மறுமுனையில் நரேந்திரன் கேட்டான்..

"சார்..." என்று ஆரம்பித்த குகன் அனைத்தையும் ஒப்பித்து முடித்து விட்டு செல்போனை அணைத்தான்.. அவன் மனதில் திருப்தி நிலவியது...

'இனி சார் பார்த்துக்குவார்...'

சற்று முன் இருந்த மனநிலை மாறியவனாக அவன் விசிலடித்தபடி நடந்தான்..

மதிய உணவு நேரத்தின் போது சுரேந்திரன் வித்யாவின் கேபினுக்கு வந்தான்.. வேலையாக இருந்த வித்யா தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு வேலையைத் தொடர்ந்தாள்..

"ஐ ஆம் ஸாரி அண்ணி.." என்றான் சுரேந்திரன்..

வித்யா பதில் சொல்லவில்லை...

"உங்க கோபம் எனக்கும் புரியுது.. பட்.. உங்களுக்கும் நிவிக்கும் டெர்ம்ஸ் சரியில்லைங்கிறது உண்மைதானே.."

இதற்கு மேலும் பதில் பேசாமலிருக்க வித்யாவினால் முடியவில்லை.. அவள் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள்..

"அதுக்குக் காரணம் நானில்லை சுரேன்.." என்றாள்.

"யார் காரணம்ங்கிறது முக்கியமில்லை அண்ணி.."

"நோ சுரேன்.. அதுதான் முக்கியம்.."

"நிவிக்கு உங்க மேல பெரிதா பகையேதும் இல்லை அண்ணி.."

"ஓ.."

சுரேந்திரன் எதையோ சொல்லத் தயங்கியவனாக பேசாமல் இருந்தான்.. வித்யா.. மேஜையின் மீதிருந்த ஃபைல்களை ஆராய்ந்தபடி அவன் பேசட்டும் என்று கார்த்திருந்தாள்...

"மீனா அண்ணி எதையோ சொல்லி நிவியின் மனதைக் கலைத்திருக்காங்க.." மறைமுகமாக கூறினான் சுரேந்திரன்...

'போடா.. நீயும் உன் ஆராய்ச்சியும்..' என்று தோன்றியது வித்யாவிற்கு..

நிவேதிதா ஊருக்கெல்லாம் பாடம் எடுப்பாள்.. அவளுக்கு மீனலோசனி பாடம் எடுத்தாளா..? என்ற நினைவில் வித்யாவின் இதழோரமாக குறுஞ்சிரிப்பு தோன்றியது...

மீனலோசனியின் குணம் சரியில்லைதான்.. ஆனால் நிவேதிதாவின் குணம் அவளைவிட சரியில்லாதது.. அவள் நரேந்திரனை பழிவாங்குவதற்காகவே சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தவள்...

புத்திசாலியான சுரேந்திரன் இத்தனை நாள்களாக அதை உணராமல் இருக்கிறானென்றால் நிவேதிதா எப்பேற்பட்ட கெட்டிக்காரியாக இருக்க வேண்டும்..?

அப்படிப்பட்டவளின் மனதை மீனலோசனி கலைத்தாளாம்..

"இதையெல்லாம் என்னிடம் எதுக்காக சொல்கிறிங்க சுரேன்..."

"உங்களுக்கும்.. நிவிக்கும் மத்தியிலே இருக்கிற மிஸ் அன்டர்ஸ்டாண்ட் சரியாகனும்..."

"மிஸ் அண்டர்ஸ்டாண்ட்டா..?"

வித்யாவிக்கு சிரிப்பு வந்தது.. நிவேதிதாவின் அண்டர்ஸ்டாண்டிங் எப்பேறப்பட்டது என்று தெரிய வரும்போது இவன் என்ன சொல்வான் என்ற நினைவில் அவள் மெலிதான சிரிப்புடன் அவனை ஏறிட்டாள்...

அவனோ அவளின் சிரிப்பைக் கண்டு முகம் சுருங்கினான்...

"இதில சிரிக்க என்ன இருக்கு அண்ணி...?"

"நிறைய இருக்கு சுரேன்.. உங்களுக்கு அது இப்போது புரியாது.. ஒருநாள் உங்களுக்கு எல்லாம் புரிய வரும் போது இந்த சிரிப்புக்கான அர்த்தமும் புரியவரும்.. நிவேதிதாவைப் பொறுத்தவரையில் என்பக்கமிருந்து எதுவும் ஆரம்பிக்காது.."

"எனக்கும் அது தெரியும்.."

"தெரிந்தும் ஏன் அதைப் பத்திப் பேசனும்.. அவங்க எதையாவது ஏடா கூடாமா செய்து வைத்தா நான் பொறுத்துப் போகனும்னு சொல்ல வந்தீங்களா..?"

அதற்காகத்தான் சுரேந்திரன் வந்திருந்தான்.. அதை கண்டு கொண்ட வித்யாவின் மீது அவனுக்குள் மதிப்பு பெருகியது...

29

நதியோரம் நடந்த போது..

நீ பேச நான் கேட்டேன்..

நான் பேச வந்த போது..

கேட்காமல் எங்கே போனாய்..?

-நதியோரம் நான் நடந்த போது-

"என்னால அது முடியாது சுரேந்திரன்.. உங்க வொய்ப் எனக்கெதிரா எதையாவது செய்தால் நான் பொறுத்துப்

போகலாம்.. ஆனா தொழிலாளர்களுக்கு எதிரா எதைச் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்.."

வித்யா உறுதியாகச் சொல்லி விட்டாள்.. அவள் அதைத்தான் சொல்லுவாள் என்பதை அறிந்து வைத்திருந்த சுரேந்திரன் மௌனமாக வெளியேறி விட்டான்...

வித்யாவின் மனதில் எரிச்சல் சூழ்ந்தது.. என்ன மனிதர்கள் இவர்கள் என்ற எண்ணத்தோடு.. அரையும்.. குறையுமாய் சாப்பிட்டு முடித்தாள்.. மாலையில் வீடு திரும்பிய போது அவளை 'வா'வென்று அழைக்க யாருமில்லாததைப் போல உணர்ந்தாள்.. சௌதாமினியும்.. பூர்ணிமாவும் தென்படவில்லை.. ஹாலில் குழுமியிருந்த மற்றவர்கள் அவளை வழியில் போகிற ஒரு பெண்ணைப் பார்ப்பதைப் போல பார்த்துவிட்டு தங்களுக்குள் கூடிப் பேசிச் சிரித்துக் கொண்டார்கள்...

வித்யா இதற்கெல்லாம் பழகியிருந்தாள்.. நரேந்திரன் கூட இருந்திருந்தால் இவர்கள் இப்படிப்பட்ட பார்வையைப் பார்ப்பார்களா என்ற நினைவுடன் வேலையாளை அழைத்து மாடியிலிருந்த அவளுடைய அறைக்கே காபியையும்.. இரவு உணவையும் கொண்டு வரச் சொல்லி விட்டு மாடியேறினாள்.. ஹாலில் குழுமியிருந்தவர்களின் விழிகள் அவள் முதுகைத் துளைப்பதை உணர்ந்தும் அவள் அதைப் பொருட் படுத்தவில்லை...

"இவளுக்கு இருக்கிற தைரியத்தைப் போல யாருக்கும் இருக்காது..." மீனலோசனி பல்லைக் கடித்தாள்..

"உங்களுக்கு இருக்காதா அக்கா..?" வழக்கம் போல சமயம் கிடைத்தும் போட்டுத் தாக்கினாள் பிரபாவதி..

மீனலோசனிக்கு பற்றிக் கொண்டு வந்தது.. இருந்தாலும் அவளால்தான் பிரபாவதியை பகைத்து கொள்ள முடியாதே.. அதனால் பேச்சை வேறு திசையில் திருப்பி விட்டாள்...

"என் தைரியமெல்லாம் இவளிடம் செல்லாது பிரபா.. நம்ம நிவேதாவோட தைரியம்தான் செல்லும்..."

இதைக் கேட்ட நிவேதிதாவின் முகத்தில் வந்த கர்வத்தை பார்த்த மீனலோசனி பிரபாவதியிடம்

கண்களால் சமிக்ஞை செய்து அதைச் சுட்டிக்காட்டினாள்.. இருவரும் அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டார்கள்..

"தைரியமிருந்து என்ன செய்ய அக்கா.. அந்த வித்யாவை அடக்கி ஒடுக்கி மூலையில் உட்கார வைக்க நம்ம நிவேதாவால முடியலையே.." பிரபாவதி எடுத்துக் கொடுத்தாள்...

"அதைச் சொல்லு.. ஏன் நிவேதா.. இன்னைக்கும் பேக்டரியில உன்னை லேபர்ஸ் கிட்ட மன்னிப்புக் கேட்க வைச்சிட்டாளாமே.. உண்மையா..?" மீனலோசனி போலி அனுதாபத்துடன் கேட்டாள்...

அவளுடைய அனுதாபத்தைப் பற்றி நிவேதிதாவிற்கா தெரியாது..? அவள் கோபத்துடன் மீனலோசனியை முறைத்தாள்.. அவளோ

"கூல்டவுன் நிவேதா.. என்னை முறைத்து என்ன செய்ய..? அவளை உன்னாலே அசைக்க முடியலையே.." என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்னாள்..

"அது பேக்டரி.. எதைச் செய்தாலும் லேபர்ஸ் போராட்டம் வந்து விடுகிறது.." எரிச்சல் பட்டாள் நிவேதிதா..

"அப்ப வீட்டிலே அதை ஆரம்பி..." இலகுவாக சொன்னாள் மீனலோசனி...

"எப்படி..?" புருவங்களை உயர்த்தினாள் நிவேதிதா..

"அதுவா..? அது செம ஈஸி.. காதைக் கொடு சொல்கிறேன்.." நிவேதிதாவின் காதைக் கடித்தாள் மீனலோசனி...

அவள் ரகசியக் குரலில் சொல்லச் சொல்ல.. நிவேதிதாவின் முகத்தில் வெளிச்சம் பரவியது...

"டன்.." என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டி விட்டு எழுந்து சென்றாள்...

அவர்களின் பேச்சில் தலையிடாமல் தள்ளி அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பிரபாவதி..

"இது நடக்கும்ன்னா நினைக்கறிங்கக்கா..?" என்று கேட்டாள்..

"நடக்குதோ.. நடக்கலையோ.. இன்னும் கொஞ்சம் நேரத்திலே உள் வீட்டு கலவரம் வெடிக்கப் போகுது.. அது நடந்தா சரி.. என்னவோ இந்த அரண்மனை பெரியவருக்கு மட்டும்தான் சொந்தம்ன்னு சொல்லிக்கிறார் இல்லியா.. அதை ஆட்டி வைக்க நம்மாலே முடிந்தா எனக்கு அது போதும்.. இப்ப பெரியவர் ஊரில இல்ல.. அந்த வித்யாவுக்கு சப்போர்ட் பண்ண யாருமில்ல... முதலில் எல்லாம் சுரேந்திரன் சப்போர்ட் பண்ண வருவான்... இப்ப அவன் வொய்பே பஞ்சாயத்தைக் கூட்டும் போது அவன் யார் பக்கம் நிற்பான்..?"

"அதைச் சொல்லுங்க.. பேக்டரியிலேயே நிவேதிதாவின் பக்கம் நின்று விட்ட ஆளாச்சே..."

"அதுவேதான்.. இது வீடு.. இங்கே தொழிலாளர் சப்போர்ட்டும் வித்யாவுக்கு கிடைக்காது.. என்ன ஆகுதுன்னு பார்க்கலாம்.."

இந்த உள்வீட்டு சதியாலோசனை பற்றி அறியாத வித்யா விலகிப் போகும் கணவனைப் பற்றிய யோசனையுடன் கண்மூடிப் படுத்திருந்தாள்... மசக்கையினால் ஏற்பட்ட அயர்வோடு.. ஓய்வெடுத்துக் கொள்ளக் கெஞ்சிய உடலோடு.. மெதுவாக கண் செறுக உறங்க ஆரம்பித்தவளை எழுப்பியது அழைப்பு மணி..

அழைப்பு மணியின் ஓசையில் கதவைத் திறந்து பார்த்தாள் வித்யா.. பதட்ட முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் கனகா...

"என்னாச்சு கனகா..?"

"பெரியம்மா உங்களை கீழே வரச் சொன்னாங்கம்மா.."

"அப்படியா.. இதோ வர்றேன்.."

இதைச் சொல்ல எதற்காக கனகா பதட்டப்பட வேண்டும் என்ற யோசனையுடன் கீழே போனவளுக்கு யுத்தம் காத்திருந்தது...

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலையாள்கள் சமையலறையை ஒட்டிய நீண்ட வராந்தாவில் தரையில் அமர்ந்துதான் சாப்பிடுவார்கள்.. வித்யா அந்த வீட்டின் மருமகளானவுடன் அந்த வழக்கத்தை மாற்றினாள்.. அவ்வளவு பெரிய அரண்மனையில் வேலையாள்கள் தரையில் அமர்ந்துதான் சாப்பிட வேண்டுமா என்பது அவளின் எண்ணமாக இருந்தது...

"ஏன் நரேன்.. நீண்ட சாப்பாட்டு மேஜையையும்... உட்கார்ந்து சாப்பிட பெஞ்சையும் போட்டு விட்டா இவங்க சாப்பிட தோதாயிருக்குமில்ல..?"

"சூப்பர் வித்யா..."

மனைவி சொன்னதை உடனே செய்து விட்டான் நரேந்திரன்.. அதைப் பற்றித்தான் நிவேதிதாவிடம் சொல்லிக் கிளப்பி விட்டிருந்தாள் மீனலோசனி...

"நாங்க அப்பவே சொன்னோம் நிவேதா.. பெரியவர் எங்க பேச்சை காதில போட்டுக்கலை.. பெண்டாட்டி சொல்கிறதுதான் சரின்னு சொல்லிட்டாரு.. நம்ம வீட்டுக்காரங்க நாம சொல்கிறதை என்னைக்கு சரின்னு சொல்லியிருக்காங்க..? சொல்லு.."

"என் வீட்டுக்காரர் சொல்வார்.."

"அதைத்தான் பேக்டரியில தினம் தினம் பார்க்கிறோமே..."

"அது பேக்டரி.. இது வீடு..."

நிவேதிதா பிரச்னையை கிளப்பி விட்டாள்.. வேலையாள்கள் தரையில்தான் உட்கார்ந்து

சாப்பிட வேண்டும் என்று சொன்னாள்... சாப்பாட்டு மேஜைகளையும்.. பெஞ்சுகளையும் தூக்கச் சொல்லி உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள்.. சௌதாமினி அதைத் தடுக்க முடியாமல் கைகளைப் பிசைந்தபடி வித்யாவிற்கு தகவல் சொல்லி விட்டிருந்தாள்..

கனகாவின் முகம் எதனால் அத்தனை பதட்டத்துடன் இருந்தது என்று அப்போதுதான் புரிந்து கொண்டாள் வித்யா...

"யாரும் பெஞ்சைத் தூக்கக் கூடாது..."

உறுதியுடன் வித்யா சொல்லி விட்டதில் 'அப்பாடி..' என்ற நிம்மதியுணர்வு சௌதாமினியின் முகத்தில் வந்தது.. 'கடனே' என்று நிவேதிதா சொன்னதை வேண்டா வெறுப்புடன் செய்து கொண்டிருந்த வேலையாள்கள் தொட்டுக் கொண்டிருந்த பெஞ்சுகளை விட்டு விலகி நின்றார்கள்.. அதற்காகவே காத்திருந்த நிவேதிதா கத்த ஆரம்பித்து விட்டாள்...

"என்ன சுரேன் இது..? என் ஆர்டருக்கு மதிப்பில்லையா..? இங்கேயும் உங்க பெரியண்ணி வைத்ததுதான் சட்டமா..? உங்க மனைவிக்குன்னு ஒரு உரிமையைக்கூட உங்களால் தர முடியாதா..?"

இது எந்தக் கணவனையும் சீண்டி விடுகின்ற கேள்வி.. சமீப காலமாக நிவேதிதா இது போன்ற யுக்திகளைக் கடைபிடித்தே சுரேந்திரனை அவளுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கொண்டிருந்தாள்...

"உங்க அம்மா எதுக்கெடுத்தாலும் பெரிய மருமகளுக்கு இது பிடிக்காது.. பெரிய மருமகளுக்கு அது பிடிக்காதுன்னே சொல்கிறாங்களே... மத்த மருமகள்களுக்கு வாயைத்திறந்து பேச உரிமையிருக்கா.. இல்லையா...?" யுத்தகளத்தில் உடல் சோர்வை காரணம் காட்டி வித்யாவினால் பின்வாங்க முடியவில்லை...

நதியோரம் நடந்த போது..

களிப்பை மட்டும் நான் உணர்ந்தேன்..

நீவராத பொழுதினிலே..

களைப்பை மட்டும் நான் உணர்ந்தேன்..

-நதியோரம் நான் நடந்த போது-

வித்யா சுரேந்திரனிடம் சொல்லியிருந்ததைப் போல அவளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் நிச்சயமாய் அவள் பொறுத்துப் போயிருப்பாள்.. ஆனால் பாதிப்பு வருவது வேலையாள்களுக்கு.. அவளால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

சௌதாமினி சின்ன மருமகளிடம் தன்மையாக பேசிப் பார்த்தாள்...

"நிவி.. இந்த அரண்மனையில வேலை செய்கிறவங்க.. காலம்.. காலமாய் இங்கேயே வேலை செய்கிறவங்க.. அவங்களை வெளி ஆளா நாங்க பார்க்கலை.. வீட்டு ஆளுகளாத்தான் நாங்க பார்க்கிறோம்.."

"நாங்கன்னா யாரு.. அத்தை..? நீங்களும் உங்க பெரிய மருமகளுமா..?"

பதில் சொல்ல முடியாமல் சௌதாமினி திணறிய போது நிவேதிதா பொரிந்து தள்ள ஆரம்பித்து விட்டாள்..

"ஸ்டுப்பிட்.. இது அரண்மனையா..? இல்லை வெறும் ஓலைக்குடிசையா..? ஒரு ராஜபரம்பரைக்கான எந்த சம்பிரதாயங்களும் இங்கே இல்லை... கேட்டா.. எல்லாம் பெரிய மருமக கொண்டுவந்த சட்டம்ன்னு சொல்கிறிங்க.. அவங்களுக்கு அரண்மனையின் பழக்க வழக்கங்களைப் பற்றி என்ன தெரியும்..? ஓலைக் குடிசையைப் பற்றிக் கூடத் தெரியாதவங்க அவங்க.. அவங்க யாரு அரண்மனையின் சட்ட திட்டத்தை மாற்ற...?"

"நிவேதிதா.."

"ஏன் அத்தை கோபப் படறிங்க..? நான் உண்மையைத் தானே சொன்னேன்..? ஹாஸ்டலில் இருக்கக் கூட வழியில்லாம உங்க மகளின் வீட்டில் ஒட்டிக்கிட்டு படிச்சவங்கதானே அவங்க..?"

"நிவேதிதா..."

"ஒன்று எல்லா மருமகள்களையும் ராஜ பரம்பரையில் இருந்து எடுத்திருக்க வேண்டும்.. இல்லையா.. எல்லோரையுமே இதைப் போல வழியில் போகிறவங்களா பார்த்து எடுத்திருக்கனும்.. இரண்டும் இல்லாம கலந்து எடுத்தா இந்தக் கதைதான்..."

நிவேதிதா பேசிய பேச்சுக்களை சௌதாமினி-யாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை.. இந்த அளவிற்கு வித்யாவைப் பேச வேண்டுமா என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது.. ஆனாலும் நிவேதிதாவை கண்டித்து வைக்க அவளால் முடியவில்லை.. அதை சுரேந்திரன்தான் செய்ய வேண்டும்.. அந்த நேரம் பார்த்து சுரேந்திரன் வெளியே போயிருந்தான்...

சின்ன மகன் வெளியே போயிருக்கிறான்.. பெரிய மகனோ ஊரிலேயே இல்லை.. அந்த நேரம்

பார்த்து நிவேதிதா கெட்டிக்காரத்தனமாக வேலையை ஆரம்பித்திருப்பதை சௌதாமினியால் புரிந்து கொள்ள முடிந்தது...

என்ன செய்வது என்ற கவலையுடன் அவள் வித்யாவைப் பார்த்தாள்.. வித்யாவிற்கு எந்த விதமான கவலையும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை.. அவள் நிவேதிதாவின் அலட்டலையும்.. அதிகாரத்தையும் அலட்சியம் செய்தாள்...

"லுக் நிவேதிதா.. நான் வழியில் போனாலும் உன் வழியில் போகவில்லை.. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசு.. நான் பூர்ணிமாவின் வீட்டில் ஃபேயிங் கெஸ்டாத்தான் தங்கியிருந்தேன்.. அதை இங்கே வேலை செய்கிற

கண்ணம்மா ஆண்ட்டியிடம் நீ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..."

"கண்ணம்மா ஆண்ட்டியா..? உனக்கு வேணும்னா அது ஆண்ட்டியா இருக்கலாம்.. எனக்கு செர்வண்ட்தான்.. வேலையாள்களிடம் ஈக்குவலாப் பேசி எனக்குப் பழக்கமில்லை... உன்னிடம் சரிசமமாய் நின்று பேசுவதே அதிகம்.."

"என்னிடம் பேசச் சொல்லி உன்னை நான் கேட்டேனா..? கண்ணம்மா ஆண்ட்டியை பூர்ணிமா சித்தின்னுதான் கூப்பிடுவா.. அவளிடம் போய் இப்படிச் சொல்லிப் பாரு தெரியும்..."

"ஹ.. எல்லாக் கதையும் எனக்கும் தெரியும்.. பூர்ணிமாவினாலதானே நீ இந்த வீட்டுக்குள்ள மருமகளாய் நுழைந்திருக்க..?"

"நோ நிவேதிதா.. தப்புக் கணக்குப் போடற.. நீ எப்படி சுரேந்திரனைக் காதலிச்சதாலே இந்த வீட்டுக்குள்ள மருமகளாய் நுழைந்தியோ.. அதைப் போல நான் நரேந்திரனைக் காதலித்ததினாலே இந்த வீட்டுக்குள் மருமகளாய் நுழைந்தேன்..."

"நீயும்.. நானும் ஒன்றா..?"

"நிச்சயமாய்.. நீயும்.. நானும் இந்த வீட்டுக்கு மருமகள்கள்..."

"நான் மதன்பூர் ராஜாவின் மகள்.."

"இருந்துட்டுப் போ.. எனக்கென்ன வந்தது.. நீ யாராய் இருந்தால் எனக்கென்ன..? என்னைப் பொறுத்தவரை

நீ சுரேந்திரனின் ஃவொய்ப்... அவ்வளவுதான்.."

"அவ்வளவுதானா..? சுரேந்திரனின் வொய்புக்குன்னு பவர் ஏதும் இல்லையா..? இங்கே நீ வைத்ததுதான் சட்டமா..?"

"மற்றதில் எப்படியோ எனக்குத் தெரியாது.. இந்த விசயத்தில் நான் வைத்ததுதான் சட்டம்.. இந்த அரண்மனையின் வேலைக்காரங்க சாப்பிடறதுக்காக

டேபிளும்.. பெஞ்சும் வாங்கிப் போடக்கூட நமக்கு வசதியில்லாமல் போய் விட்டதா...?"

"வசதியைப் பத்தின பிரச்னையில்லை இது..."

"அதைத்தான் நானும் சொல்றேன்.. இது மனித உணர்வுகளைப் பற்றிய பிரச்னை.. இது நாள் வரைக்கும் டேபிள்.. பெஞ்சில் உட்கார்ந்து சாப்பிட்டவங்களை.. உனக்கு அதுக்கான உரிமையும்.. தகுதியும் இல்லைன்னு சொல்லி.. தரையில் உட்கார்ந்து சாப்பிடச் சொன்னா.. அவங்க மனசு என்ன பாடுபடும்..?"

"அதைப்பத்தி எனக்கு கவலையில்லை..."

"எனக்கு கவலையிருக்கு..."

"இது ஊடே வந்த பழக்கம்தான்..."

"ஊடே வந்தாலும்.. வந்து விட்டதுதானே.. அதை மாத்தினா அவங்க மனசு கஷ்டப்படாதா..?"

"இது அரண்மனை..."

"எனக்கு இது என் வீடு..."

"ம்ஹீம்.. இவ்வளவு பெரிய அரண்மனையை வீடுன்னு சொல்லக் கூடிய அதிர்ஷ்டம் உனக்குக் கிடைத்திருக்கு..."

"இருக்கட்டுமே.. அது அதிர்ஷ்டமாவே இருக்கட்டுமே.. இது என் வீடாக மாறிப் போன பின்னால் எப்படிச் சொன்னால்தான் என்ன..? எனக்கு அதைப் பற்றி ஒன்றுமேயில்லை..."

"உனக்கு ஏன் இருக்கப் போகிறது...? அரண்மனையைப் பற்றியும்.. அதன் பழக்க வழக்கங்களைப் பற்றியும் உனக்கு என்ன தெரியும்..? அரண்மனைக்குன்னு சில வழக்க வழக்கங்கள் இருக்கு.. அது மாறக்கூடாது..."

"மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது..."

"சோசலிசம் பேசறவங்க அரண்மனைக்கு வெளியே போய் பேசனும் உள்ளேயிருந்தா அரண்மனையின் பழக்க

வழக்கங்களை அனுசரிக்கிறவங்களா இருக்கனும்..."

"இல்லைன்னா..?"

இந்தக் கேள்வி வித்யாவிடமிருந்து வரவில்லை.. மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த பூர்ணிமா-விடமிருந்து வந்தது...

'அப்பாடி...'

தனித்துப் போராடிக் கொண்டிருந்த வித்யாவிற்கு உதவிக்கரம் வந்துவிட்டதில் சௌதாமினி நிம்மதிப் பெருமூச்சை விட்டாள்..

"சொல்லு நிவேதிதா.. அப்படியில்லைன்னா என்ன ஆகும்..?"

பூர்ணிமா கம்பீரமாக நடந்து வந்து வித்யாவின் அருகில் நின்று அவள் தோளைச் சுற்றி கைபோட்டுக் கொண்டாள்...

வித்யாவிடம் மோதியதைப் போல பூர்ணிமா தேவியிடம் மோத நிவேதிதாவினால் முடியவில்லை...

"நான் மணிமுத்தாறு அரண்மனையில் பிறந்து வளர்ந்தவள்.. ராஜா ராஜேந்திர பூபதியின் செல்ல மகள்.. உன்னைப்போலவே ராஜ பரம்பரை.. என் கேள்விக்கு நீ பதில் சொல்லலாமில்லையா..? வித்யா கேள்வி கேட்டால் தானே உன் பரம்பரைப் பெருமையைச் சொல்லிப் பீற்றிக்குவ..? என்னிடம் சொல்லு.. அப்படியில்லைன்னா என்ன ஆகும்...?"

பூர்ணிமாவின் கிடுக்குப்பிடி கேள்விகளில் நிவேதிதா பதில்பேச முடியாமல் திணறினாள்.. அப்போதுதான் வீட்டிற்குள் வந்த சுரேந்திரன் சூழல் மாற்றத்தை உணர்ந்தவனாய் புருவங்களை உயர்த்தினான்..

"வா அண்ணா.. உனக்கு இப்பத்தான் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதா..?"

"ஏன் பூரணி..? எதனால இப்படிக் கேட்கிற..? நான் அம்பாசமுத்திரம் வரைக்கும்தானே போயிருந்தேன்..?"

"அதற்குள் உன் வொய்ப் இங்கே ஒரு யுத்த காண்டத்தையே ஆரம்பிச்சு வைச்சுட்டாங்க.. ஏன் அண்ணா.. இதையெல்லாம் என்னன்னு கேட்டு நீ உன் வொய்பை கண்டித்து வைக்கவே மாட்டியா..?"

அன்று இரவில் நிவேதிதாவை சுரேந்திரன் அதிக அளவில் கடிந்து கொண்டான்...

31

நதியோரம் நடந்த போது..

யுத்தமில்லா அமைதி கண்டேன்..

நதியைவிட்டு விலகி நடந்தால்...

யுத்தம் மட்டும் எங்கும் கண்டேன்...

-நதியோரம் நான் நடந்த போது-

நிவேதிதாவிற்கு பூர்ணிமாவின் பலத்தைப் பற்றி அதுவரை சரிவர தெரியாமல் இருந்தது.. பூர்ணிமா மகா சத்தி.. நியாய தேவதை.. அவள் கண்முன் நடக்கும் எந்தவொரு அநியாயத்தையும் பொறுத்துக் கொள்ள மாட்டாள்...

இதையெல்லாம் அறியாமல் அவள் வீட்டிலிருந்த போதே அவளுடைய உயிர் தோழியான வித்யாவுடன் மோதிவிட்டாள் நிவேதிதா...

"உன் வொய்ப் மனசில என்ன நினைத்துக்கிட்டு இருக்காங்க அண்ணா..? அவங்க உன்னைக் காதலித்து கல்யாணம் பண்ணிக்கிட்டது எதுக்காக அண்ணா..? உன்கூட வாழ்கிறதுக்காகவா.. இல்லை வித்யாவுடன் சண்டை போடுகிறதுக்காகவா..?"

பூர்ணிமா தெளிவாகக் கவனித்து கேட்டு விட்டதில் நிவேதிதாவின் முகம் விழுந்து விட்டது...

'இவளுக்கு எப்படித் தெரியும்..?'

இதுதான் நிவேதிதாவின் எண்ணமாக இருந்தது.. வித்யா அதைச் சொல்லியிருக்க மாட்டாள் என்று நிச்சயமாக அவள் நினைத்தாள்.. வித்யா அப்படிப் புறம் பேசி காட்டிக் கொடுக்கும் பெண்ணல்ல என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.. அப்படிப்பட்டவளுடன் தான் அவள் தினம்தினம் போராட்டம் நடத்தினாள்...

"வித்யா எதைச் செய்தாலும் உன் வொய்ப் அதில் தலையிட்டு பிரச்னையைக் கிளப்புவாங்கன்னா.. அவங்க நோக்கம் என்ன...?"

"பூரணி.. நீ பெரியண்ணி பக்கமே பேசாதே.. நிவியும் உனக்கு அண்ணிதான்.. பெரியண்ணி உனக்கு பிரண்டுங்கிறதுக்காக நீ நிவி பக்கம் இருக்கிற நியாயத்தை கண்டு கொள்ளாமல் இருக்கிறது தப்பு.." மனைவியை விட்டுக் கொடுக்காமல் தான் பேசினான் சுரேந்திரன்...

"வாஹ்ரே வா.. சுரேன் அண்ணா.. நீ இத்தனை நியாயவாதியாய் இருப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கலை.. எப்படிண்ணா இப்படி மாறிப் போன..? இதைப் போலத்தான் நீ பேக்டரியிலயும் வித்யாகிட்ட பேசி வைச்சிருக்க.. உன் வொய்ப் கூட வித்யாதான் சண்டை போடுகிறாளா..? அவள் சண்டை போடறதா இருந்தா இந்த வீட்டில இருக்கிறவங்க பண்ணுகிற அழிச்சாட்டியத்துக்கு அவ எத்தனை சண்டை போட்டிருக்கனும்..? அவ போடலையே.. இப்ப உன் வொய்ப்கூட அவ சண்டை போடக் கிளம்பியிருக்கிறாளா..? இதிலிருந்து என்ன தெரியுதுன்னா.. மத்தவங்களை-யெல்லாம் உன் வொய்ப் தூக்கி சாப்பிட்டு விட்டாங்கன்னு தெரியுது...."

"ஷட் அப் பூர்ணிமா.. நிவி உன்னோட அண்ணி..."

"வித்யாவும் எனக்கு அண்ணிதான்.. அவகூட பெரியண்ணன் ஊரில் இல்லாத நேரத்தில பேக்டரியிலயும்.. வீட்டிலேயும் உன் வொய்ப் சண்டை வளர்த்துக்கிட்டு இருக்கிறாங்க.. நீ அதை ஏன்னு கேட்காம.. வித்யாவைக் கேள்வி கேட்டிருக்க.. அது போதாதுன்னு என்னிடமும் கேள்வி கேட்கிற.. இப்ப பேசியதையெல்லாம் நீயும் உன் வொய்பும் பெரியண்ணன் முன்னாலே பேசிருவீங்களா..? அவர் முன்னாலே வித்யாவை ஒரு சொல் சொல்லிப் பாருங்க.. அப்புறம் என்ன நடக்குதுன்னு நான் வேடிக்கை பார்க்கிறேன்.."

பூர்ணிமாவின் கோபத்தில் சுரேந்திரன் மனைவியை முறைத்தான்...

"வாட் இஸ் திஸ் நிவி..?"

எல்லோரின் முன்னாலும் அவன் அதட்டியதில் நிவேதிதாவிற்கு என்னவோ போல ஆகிவிட்டது..

"நத்திங் சுரேன்.. மதன்பூர் அரண்மனையில் எல்லாம் சர்வண்ட்ஸ் தரையில் உட்கார்ந்துதான் சாப்பிடுவாங்க.. இங்கே அப்படியில்லை.." நிவேதிதா மென்று விழுங்கினாள்...

"அதனால..?" சுரேந்திரனின் கேள்வி கூர்மையாக வந்தது...

"ப்ளீஸ்.. நம்ம ரூமில் இதைப்பத்திப் பேசலாமே..."

"சண்டையை எல்லோருக்கும் மத்தியில போட்டுட்டு.. விளக்கத்தை தனிமையில சொல்லனும்-கிறயா...? அந்தக் கதையே இங்கே வேணாம்.. இங்கேயே உன் விளக்கத்தைச் சொல்லு..."

"நான் டேபிள்.. பெஞ்சைத் தூக்கச் சொன்னேன்..."

"வாட்..?" சுரேந்திரனின் கோபத்தில் நிவேதிதாவின் முகம் கன்றிச் சிவந்து விட்டது...

"நீ யார் அதைச் சொல்ல..? அதனால எங்க வீட்டில் வேலை செய்கிறவங்களின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்ன்னு நீ நினைத்துப் பார்த்தியா..? திஸ் இஸ் டூ மச் நிவேதிதா..

லேபர்ஸ் வெல்ஃபேர் இல்லைன்னா.. எந்த முதலாளியும் தொழிலில் சக்சஸ் பண்ண முடியாது.. அது பேக்டரியாய் இருந்தாலும் சரி.. வீடாக இருந்தாலும் சரி..."

"பட் சுரேன்..."

"பேசாதே.. இப்படித்தான் தினமும் பேக்டரியில் லேபர்ஸ்கூட மோதி ஏதாவது ஒரு பிராப்ளத்தை கிரியேட் பண்ணிக்கிட்டே இருக்கிற.. உன்னை ஜி.எம்மா கண்டினியூ பண்ண வைக்கலாமா.. வேண்டாமான்னு எனக்கு யோசனையாய் இருக்கு.. அம்மா.. நீங்களும் இங்கே தானே இருக்கீங்க.. இவதான் பைத்தியக்-காரத்தனமா எதையாவது சொன்னா நீங்க அதைக் கண்டிக்காம வேடிக்கை பார்த்தீங்களா...? நம்ம வீட்டில வேலை செய்கிறவங்க என்னைப் பத்தி என்ன நினைத்துக்குவாங்க...?"

சௌதாமினிக்கு அந்த வார்த்தைகளே போது மானதாக இருந்தன... அதுவரை மீனலோசனியையும்.. பிரபாவதியையும் கண்டிப்பதைப் போல நிவேதிதாவைக் கண்டிக்க முடியாமல் இருந்தவளுக்கு சுரேந்திரனின் அனுமதி வயிற்றில் பாலை வார்த்ததைப் போல

இருந்தது...

"ஆகட்டும் சுரேன்.. இனிமே இது போல நடக்காம நான் பார்த்துக்கறேன்..." சின்ன மகனுக்கு அவள் உறுதியளித்தாள்..

இதிலிருந்து நீ அறிவது யாதெனில்... இனியும் நான் நீ செய்வதையெல்லாம் மதன்பூர் மகாராஜாவின் மகளாயிற்றே என்று பொறுமையாக பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்.. ஒரு மாமியாராய் லட்சணமாய் நீ வாய் திறக்க முடியாமல் அடக்கி வைப்பேன் என்ற செய்தியை சுரேந்திரனிடம் சொல்வதைப் போல நிவேதிதாவிடம் அவள் சொல்வதைப் புரிந்து கொண்டாள் நிவேதிதா.. இப்படி ஆகுமென்று அவள் நினைத்துப் பார்த்திருந்தாளா என்ன..? அவளை முடுக்கிவிட்ட மீனலோசனி ஏதும் அறியாதவளைப் போல நின்று விட..

எல்லோரிடமும் நிவேதிதா தான் வாங்கிக் கட்டிக் கொண்டாள்...

போதாக்குறைக்கு அன்று இரவே சுரேந்திரனிடம் அவளுக்குச் சரியான மண்டகப்படி கிடைத்தது...

"பூர்ணிமா கேட்டதை நினைத்துப் பார் நிவி.. நீ எதுக்காக என்னைக் காதலிச்சு கல்யாணம் பண்ணிக் கிட்டே.. பெரியண்ணி கூட சண்டை போடறதுக்காகவா..?"

"சுரேன்.. அவளுக்காக நீங்க அக்கறை படறதை நான் விரும்பலை..."

"யார் அக்கறைப் பட்டது..? என் அக்கறை அவங்களைப் பத்தியில்லை.. என்னைப் பற்றித்தான்.."

"ஏன்..? உங்களுக்கென்ன..?"

"எனக்கென்னவா..? நீ எதைச் செய்தாலும்.. அது என் தலையில்தானே வந்து விடியுது...? உன்னாலே என்னோட சின்னத் தங்கையிடம் என்னவெல்லாம் பேச்சுக் கேட்க வேண்டி வந்திருக்கு.. பார்த்தியா...?"

"எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்.. நம்ம அரண்மனை விவகாரத்தில தலையிடறதுக்கு அவ யாருங்க...?"

இப்படிக் கேட்டவளை சுரேந்திரன் பார்த்த பார்வையில் நடுங்கிப் போனாள் நிவேதிதா...

"அவ யாரா..? என் தங்கைடி அவ.. இந்த அரண்மனையின் செல்லப் பெண்.. மதன்பூர் அரண்மனையில உன்னை யாருன்னு கேட்டா நீ கேட்டுக்குவியா..?"

"அது நான் பிறந்து வளர்ந்த அரண்மனை..."

"இங்கேயும் அப்படித்தான்.. இது பூர்ணிமா பிறந்து... வளர்ந்த அரண்மனை.. இங்கே அவ பேச்சுக்கு மறு பேச்சில்லை.. ஆமாம்.. உன்னை ஒன்று கேட்கனுமே.."

"கேளுங்க..."

"அந்த கார்த்திகாயினி தேவி உன் ஒன்று விட்ட அக்காதானே..."

"அதுக்கென்ன...?"

"உனக்கு அவங்களை ரொம்பப் பிடிக்குமாமே.."

"யார் சொன்னது...?"

"உன் குடும்பமே சொல்லுது.. அவங்க நினைப்பிலதான் நீ பெரியண்ணி கூட சண்டை போடறயா..?"

சுரேந்திரன் தான் புத்திசாலி என்பதை நிருபித்தான்.. நிவேதிதாவின் முகம் மாறியது.. உண்மையை ஒப்புக் கொள்ளாமல் அவள் பேச்சை திசை திருப்பிவிட முயன்றாள்...

"இப்படி நினைத்துப் பாருங்க.. அப்படி நினைக்காதீங்க..."

"எப்படி நினைக்கச் சொல்கிற...?"

"நீங்க அந்த வித்யாவைக் காதலிச்சீங்களாமே.. அவதான் உங்களை வேண்டாம்ன்னு சொல்லிட்டு உங்க அண்ணனை மேரேஜ் பண்ணிக்கிட்டாளாம்.. அதனால தான் நான் அவகூட சண்டைக்குப் போகிறேன்.. போதுமா.."

"ச்ச்சீ..."

சுரேந்திரன் வெறுப்புடன் நிவேதிதாவை விட்டு விலகிப் படுத்துவிட்டான்..

32

நதியோரம் நடந்த போது..

பூங்காற்றாய் வந்த தோழி...

நான்சாய தோள் கொடுத்தாள்..

தாயாகி அவள் மடிசாய்த்தாள்...

-நதியோரம் நான் நடந்த போது-

மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தாள் வித்யா.. அவள் பின்னால் மெதுவாக நடந்து வந்த பூர்ணிமா வித்யாவின் தோளைத் தட்டினாள்.. திரும்பிய வித்யா வெறுமையாகப் புன்னகைத்தாள்...

'பெரியண்ணன் முன்னாலே வித்யாவை நீ ஒரு சொல் சொல்லிவிட முடியுமா...?'

பூர்ணிமா சுரேந்திரனைப் பார்த்துக் கேட்ட கேள்வி அவள் நினைவுக்கு வந்தது.. அவள் மனம் புண்ணாக வலித்தது...

'இவளுக்குத் தெரியுமா..? இவளுடைய பெரியண்ணன் முன்போல இல்லையென்பது...' மன ரணத்துடன் அவள் வானத்தைப் பார்த்தாள்...

'என்னால் காத்திகாயினியை விடமுடியாதுன்னு அவர் சொல்லிட்டாருன்னு இவளுக்குத் தெரியுமா..? அவரை எப்படி விடறதுன்னு நான் மருகிக்கிட்டு இருக்கிறதைப் பத்தி இவளுக்குத் தெரியுமா..?' வித்யாவின் கண்களில் நீர் மல்கியது..

"என்னடி... பலமான யோசனையில் இருக்க..?"

"ம்ப்ச்.. சும்மா.. ஒன்னுமில்லை பூர்ணி..."

வித்யாவின் மனதும் ஒன்றுமேயில்லைதான் என்று எண்ணிக் கொண்டது.. அவளுக்கென்று யார் இருக்கிறார்கள் என்ற நினைவு வந்தபோது வயிற்றில் நரேந்திரனின் குழந்தை அசைந்து...

'உனக்கு நானில்லையா..?' என்று கேட்டது...

"ஒன்றுமேயில்லாததுக்கா இவ்வளவு பெரிய யோசனை..? அதுதான் மணிமுத்தாறு அரண்மனையில் கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டி விட்டாயே.. இனிமேலும் என்னடி யோசனை வேண்டிக்கிடக்கு..?"

"கோட்டையைப் பிடித்திருக்கிறது என்னவோ உண்மைதான் பூர்ணி.. ஆனால் கொடியை நாட்டலை.." விரக்தியுடன் பேசினாள் வித்யா...

"இன்றைக்கு இந்த நிவி பண்ணின கலாட்டாவைச் சொல்றியா..? போடி பைத்தியம்... நீ கொடியை நாட்டலைன்னா என் பெரியண்ணா சும்மா விட்டு விடுவாரா..? எல்லோரையும் ஒருவழி பண்ணி விட மாட்டாரா..? நீதானே அவரின் கைகளைக் கட்டிப் போட்டிருக்கிற..? இல்லைன்னா இந்த அரண்மனையில உன் மன அமைதியைக் கெடுக்கிறவங்களுக்கு இடமிருக்குமா..?"

"நான் யாரையும் வெளியேற்ற நினைக்கலை பூர்ணி..." கண்கலங்கின வித்யா..

'நான்தான் வெளியேறனும்னு நினைக்கிறேன்..' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

அவளின் தலை தன்னிச்சையாக தோழியின் தோள்மீது சாய்ந்தது.. இதைப் போலத்தானே அன்று கார்த்திகாயினி நரேந்திரனின் தோள்மீது சாய்ந்திருந்தாள் என்ற நினைவு வர அவள் மனம் துடிக்க நிமிர்ந்தாள்..

"வித்யா.." பூரணி தோழியின் கவலையில் துணுக்குற்றாள்...

"எனக்கு அரண்மனை தேவையில்லை பூர்ணி.. உன் அண்ணனின் மனதில் எனக்கான இடம் நிலைத்திருந்தால் போதும்..."

"அது உனக்குத்தானே வித்யா.. உன் ஒருத்திக்கு மட்டும்தானே அது சொந்தம்..."

பூர்ணிமா ஆறுதல் படுத்த முனைந்தாள்.. வித்யாவின் மனம் அமைதியடைய மறுத்தது.. அவளது மனம் அலைகடலாய் கொந்தளித்தது அடங்காமல் அலைபாய்ந்தது...

தோழியின் விழிகளில் தெரிந்த கலக்கத்தில் பூர்ணிமாவின் மனம் பதறியது.. அவள் வித்யாவை தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.. அமைதியில்லாமல் அலைபாய்ந்த தோழியின் தலைமுடியைக் கோதி விட்டபடி மெதுவான குரலில் பாடினாள்...

"பேசுகிறேன்.. பேசுகிறேன்..

உன் இதயம் பேசுகிறேன்...

புயலடித்தால் கலங்காதே-நான்..

பூக்கள் நீட்டுகிறேன்..

எதை நீ தொலைத்தாலும்..

மனதை தொலைக்காதே..

அடங்காமலே.. உள்ளம்..

அலை பாய்வதேன்..?"

"பூர்ணி..." வித்யா உடைந்து போய் அழுதாள்...

"அழுதுவிடு வித்யா.. உன் மனதிலிருப்பதை என்னிடம் சொல்ல முடியாவிட்டால் அழுது தீர்த்துவிடு.. மனதில் வைத்துக் கொண்டு குமுறாதே.. ஆனா.. ஒன்னைமட்டும் நினைவில் வைத்துக்க.. உனக்கு நானும்.. பெரியண்ணனும் இருக்கிறோம்..."

"நீ இருக்கிற பூர்ணி.. என்னைக்கும் என் தோழியா என்கூடவே இருப்ப.. எனக்கே எனக்காக இருப்ப... உன் பெரியண்ணன் இருப்பாரா..?"

வித்யாவின் பரிதவிப்பில் திறக்காத அவளின் இதயக் கதவு மெல்லத்திறந்து விட.. பூர்ணிமாவின் புருவங்கள் சுருங்கின...

அன்று இரவு... பிரகாஷ் படுக்கையில் சாய்ந்து புத்தகத்தில் மூழ்கியிருக்க.. பூர்ணி செல்போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குப் போனாள்...

"அண்ணா..." என்ற அவளின் அழைப்பிற்கு..

"சொல்லு பூரணி..." என்றான் மறுமுனையிலிருந்த நரேந்திரன்... வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த பூரணி நிம்மதியுடன் போனை அணைத்துவிட்டுத் தூங்கப் போனாள்...

சுரேந்திரன் நிவேதிதாவைப் புறக்கணிக்க ஆரம்பித்தான்.. தொடர்ந்து ஒரு முழுநாள் முழுவதும் அவன் பேசாமல் இருந்ததில் நிவேதிதா கொதித்து விட்டாள்.. பேக்டரியில் அவள் பேசப் போனபோது சுரேந்திரன் ஏதோ வேலையிருப்பதைப் போல நகர்ந்துவிட.. வீட்டுக்கு திரும்பியதும் தனியறையில் அவனை ஒரு கைபார்த்து விட வேண்டம் என்ற வன்மத்துடன் வீடு திரும்பினாள் நிவேதிதா..

மதன்பூர் மகாராஜாவின் மகளை அவள் கணவன் உதாசீனம் செய்வதா..? அவளென்ன கிள்ளுக்கீரையா..? யாரென்று நினைத்து விட்டான்..? அவள் நிவேதிதா.. சும்மா விடமாட்டாள்...

வீட்டுக்கு வந்ததும்.. சுரேந்திரன் தோட்டத்தில் தனிமையை நாடிப் போய்விட.. பொறுக்க முடியாத நிவேதிதா தோட்டத்திற்கு அவனைத் தொடர்ந்து போனாள்...

"ஐ வான்ட் டு டாக் வித் யு சுரேன்..."

"பட்.. ஐ டோன்ட் வாட் இட்.. எனக்கு தலையை வலிக்குது.. தனியாய் இருக்க விடு.. ப்ளீஸ் கோ இன்சைடு தி ஹவுஸ்..."

"ஓ.. அந்த அளவுக்கு வந்தாகி விட்டதா..? தனியே இருக்கனும்னு நினைக்கிறவர் எதுக்காக மேரேஜ் பண்ணிக்கனுமாம்..?"

"நான் உன்னை மேரேஜ் பண்ணிக்கனும்னு நினைக்கவேயில்லை... நீதான் துரத்தித் துரத்தி என்னைக் காதலிச்சு மேரேஜ் பண்ணிக்கச் சொல்லிக் கெஞ்சின.. நான் உன்னைத் தேடி வரலை.. நீதான் என்னைத் தேடிவந்த.."

சுரேந்திரன் கோபத்துடன் நிவேதிதாவின் மனதைக் காயப்படுத்திக் கொண்டிருந்த அந்த நேரத்தில் தெரியாத்தனமாக தோட்டத்துப் பக்கம் வந்து விட்டாள் வித்யா..

அவளைக் கண்டதும் வெகுண்டு போன நிவேதிதா.. கொதிப்புடன் அவள் பக்கம் கை நீட்டி...

"யெஸ்.. நானும் அதைத்தான் சொல்றேன்.. நான்தான் உங்களைத் தேடி வந்தேன்.. நீங்க என்னைத் தேடி வரலை.. இவளைத் தேடி வந்தீங்க.." என்று வித்யாவின் பக்கமாக கை காட்டினாள்...

வித்யா திகைத்துப் போய் நின்று விட்டாள்.. அவளை வைத்துக் கொண்டு நிவேதிதா இப்படிப் பேசிவிடுவாள் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை...

"ஷட் அப்.." சுரேந்திரன் நிவேதிதாவிடம் சீறிவிட்டு..

"ஸாரி அண்ணி..." என்று வித்யாவிடம் சொன்னான்..

"திட்டறது இங்கே.. ஸாரி அங்கேயா..? என்னடா.. வொய்பை எது சொன்னாலும் இவர் பொறுத்துக்கிட்டுப் போகிறாரே.. அவ்வ்வ்வளவு நல்லவரா இவர்ன்னு யோசிச்சேன்.. கதை இப்படிப் போகுதா..?" நிவேதிதா விடுவதாக இல்லை..

"உன்னை வாயை மூடச் சொன்னேன்..."

"நான் ஏன் வாயை மூடனும்.. காதல் அங்கே.. மேரேஜ் இங்கேயா..? எனக்கு இரண்டில் ஒன்று தெரிஞ்சாகனும்..."

பொறுக்க முடியாமல் சுரேந்திரன் கையை ஓங்கியபோது...

"பொறு சுரேன்.." என்ற குரல் கேட்டது...

அந்தக்குரலை அடையாளம் கண்டு கொண்ட வித்யாவும்.. சுரேந்திரனும் திரும்பிப் பார்த்தார்கள்.. நரேந்திரன் வந்து கொண்டிருந்தான்..

"நீ தெரிந்துக்க வேண்டியது நிறைய இருக்கு சுரேன்.. அதுக்குள்ளே கையை ஓங்கினா எப்படி..?" என்று சுரேந்திரனிடம் சொல்லிவிட்டு நிவேதிதாவின் பக்கம் திரும்பினான் நரேந்திரன்..

"உனக்கு என்ன தெரியனும் நிவேதிதா..?"

நரேந்திரனின் நேரடியான இந்தக் கேள்விக்கு நிவேதிதாவினால் பதில் சொல்ல முடியவில்லை.. அவளையுமறியாமல் அவள் சுரேந்திரனின் முதுகுக்குப் பின்னால் மறைந்து நின்றாள்.. மனைவியின் அந்தச்

செய்கையில் மனதை மயிலிறகு வருடுவதைப் போல உணர்ந்தான் சுரேந்திரன்.. ஒரு கணவனாக.. மனைவியின் சார்பாக அண்ணனிடம் பேசினான்..

"என்ன விசயம் அண்ணா..?"

"அதை உன் வொய்ப்தான் சொல்லனும் சுரேன்.. உனக்கு நிவேதிதாவின் மனதில் என்ன இருக்குன்னு தெரியுமா...?"

"கொஞ்சம் தெரியும் அண்ணா.. இவ கார்த்திகாயினி தேவியின் ஒன்றுவிட்ட தங்கைங்கிறதாலே அண்ணி மேல கோபமாய் இருக்கிறான்னு தெரியும்..."

"அங்கேதான் உன் கணக்கு தப்புது சுரேன்.. உன் வொய்ப் கோபமாய் இருக்கிறது.. என் மேலேயும்தான்.. நிவேதிதா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு காரணம் உன்மேல இருந்த காதலினால் இல்லை.. என்மேலே இருந்த பகையால் உன்னைத் தேடிப் பிடித்துக் காதலித்து கல்யாணம் பண்ணியிருக்கா.."

"அண்ணா..."

"நிவேதிதாவின் நோக்கம் எது தெரியுமா..? எந்தக் குடும்பத்தைக் காரணமாக வைத்து நான் கார்த்திகாயினியை வேண்டாம்ன்னு சொன்னேனோ.. அந்தக் குடும்பத்தை விட்டு என்னைப் பிரிக்கனும்.. அந்தக் குடும்பம் என்னைத் தூக்கி எறியனும்.. அதுதானே நிவேதிதா...?"

சுரேந்திரன் அதிர்ச்சியுடன் நிவேதிதாவின் கையைப் பிடித்து முன்னால் இழுத்தான்....

33

நதியோரம் நடந்த போது..

மெல்லத் தொட்ட தென்றல்காற்று..

என்னை விட்டுப் போகாமல்..

மனதை வருடும் பூங்காற்று...

-நதியோரம் நான் நடந்த போது-

நரேந்திரன் பார்வையைச் சந்திக்க முடியாமல் தலை குனிந்தாள் நிவேதிதா.. புருவங்கள் முடிச்சிட.. துளைக்கும் பார்வையுடன் தம்பி மனைவியை கேள்வி கேட்டான் நரேந்திரன்...

"உன் அக்காவின் வாழ்க்கையிலே கஷ்டம் வந்தா அதை சரி செய்யப் பார்க்கனும்.. அதை விட்டுவிட்டு மத்தவங்க மேலே பழி போட்டு அவங்களைப் பழிவாங்கக் கிளம்பக்கூடாது.. நீ என் குடும்பத்தை பிரிக்கப் போகிறயா..?"

"இத்தனை நாளா இது எனக்குத் தெரியாமல் போச்சேண்ணா..."

"எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும்.. கார்த்திகாயினி மதன்பூரில் என்னைச் சந்தித்தாள்.. அப்போதே நிவேதிதாவின் நோக்கத்தைச் சொல்லிட்டா..."

இதைச் சொல்லிய நரேந்திரனின் கண்களைச் சந்தித்த வித்யாவின் விழிகளில் வேதனை

இருந்தது.. மனைவியின் கண்ணோடு கண் கலந்த நரேந்திரன் வித்யாவைப் பார்த்தபடியே சுரேந்திரனிடம் பேசினான்...

"அவ என் காதலியாய் என்னைச் சந்திக்கலை சுரேன்.. ஒரு தோழியாகத்தான் என்னைச் சந்திச்சா.. அவளோட வாழ்க்கையைச் சொல்லி அழுதா... என்னால் அதைக் கேட்டுட்டு சும்மா இருக்க முடியலை சுரேன்.. அவளோட கணவனைப் போய் பார்த்தேன்.. அவங்க சேர்கிறதுக்கான முயற்சிகளை எடுத்துக்கிட்டேன்.. அவ கஷ்டப் படறதைப் பார்த்த பின்னாலே அவளை அப்படியே விட்டுவிட என்னாலே முடியலை சுரேன்.. என் மனசில இதுக்குக் காரணம் நான் தானோன்னு குற்ற உணர்வு வந்துருச்சு.."

'இதுக்காகத்தான் அடிக்கடி வெளியூர் போனானோ..' வித்யா லேசாக மனம் தெளிந்தாள்...

"இப்ப அவங்க ஒற்றுமையாய் ஆகிட்டாங்க சுரேன்.. கார்த்திகாயினி அவ கணவனோட சேர்ந்துட்டா.. இங்கே வந்து பார்த்தா உன் வொய்ப் நம்ம வீட்டிலே வேற்றுமையை உண்டு பண்ணிக்கிட்டு இருக்கா.. கார்த்திகாயினி தேவிக்காக இவதான் வித்யாவை பழி வாங்கிக்கிட்டு இருக்கா..."

"நான் பார்த்துக்கிறேன் அண்ணா..."

"இதை முதலிலேயே நீ செய்திருக்கனும்.. பேக்டரியில நீ வித்யாவிடம் பட்டுன்னு பேசிட்டயே.. நீ பேசின வார்த்தைகளை உன்னாலே திருப்பி வாங்கிக்க முடியுமா...?"

நரேந்திரனுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது என்ற நினைவில் தலை குனிந்தான் சுரேந்திரன்...

"ஐ ஆம் ஸாரி அண்ணா..."

"ஸாரி சொல்லி சரி பண்ண முடியாத விசயங்களும் நம் வாழ்வில் இருக்கு சுரேன்.. உன் வொய்ப் புத்திசாலி.. நம்ம குடும்பத்திலே மகியும் யுகேயும் என்னோட ஒற்றுமையாய் இல்லைங்கிறதை தெரிஞ்சு வைத்துக் கிட்டா.. மிச்சம் இருக்கிறது நீ மட்டும்தான்..

உன்னையும் என்னையும் பிரிக்க திட்டம் போட்டு செயல் படுத்திக்கிட்டு இருக்கா..."

"இனி இது போல நடக்காதுண்ணா.. இவ நினைச்சா உங்களையும்.. என்னையும் பிரிச்சுர

முடியுமா..? அண்ணா.. நான் நம்ம அம்மாவைக் கூட விட்டுப் பிரிவேன்.. உங்களை விட்டு ஒர் நாளும் பிரிய மாட்டேன்.."

இதை நிவேதிதாவைப் பார்த்தபடி சொன்னான் சுரேந்திரன்.. அவன் குரலில் தொனித்த உறுதியில் நிவேதிதா.. உதட்டைக் கடித்தபடி தலை குனிந்தாள்.. எதையோ செய்யப்போக.. எதுவாகவோ ஆகிவிட்டதில்

அவளுக்குள் கணவனின் காதலையும்.. அன்பையும் இழந்து விடுவோமோ என்ற பயம் வந்துவிட்டது...

நரேந்திரனுடன் பேசியபடி சுரேந்திரன் வீட்டுக்குள் சென்று விட்டான்.. போகும்போதே நரேந்திரன் திரும்பி வித்யாவை கண்ணசைவில் அழைக்க.. அவளும் நரேந்திரனைத் தொடர்ந்து விட்டாள்.. சுரேந்திரன் நிவேதிதாவைத் திரும்பியும் பார்க்கவில்லை...

நிவேதிதா தனிமையாக உணர்ந்தாள்.. தன்னை நொந்தபடி வீட்டுக்குள் போனாள்.. அங்கே எல்லோரும் கூடி நிற்க.. நரேந்திரன் அவர்களையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு.. சுரேந்திரனின் பக்கம் திரும்பினான்...

"இந்த அரண்மனை நம்ம அப்பா.. அம்மா வாழ்ந்த அரண்மனை சுரேன்.. இங்கே அவங்க

பெற்ற பிள்ளைகளான நாம ஒற்றுமையாய் வாழனும்.. அப்படி வாழ முடியலைன்னா அவரவர் வழியில் வாழப் போயிடனும்.. அதுக்காகத்தான் உங்களுக்கெல்லாம் சொத்தைப் பிரித்துக் கொடுத்தேன்.. கடைசி வரை அம்மா என் பாதுகாப்பில் இருக்கனும்கிறதுக்காக இந்த அரண்மனையை நான் எடுத்துக்கிட்டேன்.. தாய்க்குப் பின் தாரம்.. அம்மாவைக் காப்பாற்ற நினைக்கிறவன் மனைவியை விட்டு விடுவேனா..? இது வித்யாவின் வீடு.. அவ யாரையும் உதாசீனம் செய்ய மாட்டா.. அப்படி அவ செய்தா அதை நான் கண்டிப்பேன்.. ஆனா அவ பாட்டுக்கு அவளோட வேலைகளைப் பார்த்துக்கிட்டு இருக்கும் போது அவளிடம் மத்தவங்க வம்பு பண்ணினா பார்த்துக்கிட்டு சும்மா இருக்கமாட்டேன்.."

நரேந்திரன் அங்கிருந்த எல்லோரையும் பார்த்தபடி பேசினான்.. அனைவரும் உதட்டைக் கடித்தபடி நிலம் பார்த்தார்கள்.. நரேந்திரனின் கோபத்தில் அவர்கள் ஆடிப் போயிருந்தார்கள்..

"எல்லோரும் ஒன்றாய் இருக்கனும்னு அம்மா ஆசைப்பட்டாங்க.. மனசில வேற்றுமை வைத்துக்கிட்டு ஒற்றுமையாய் ஒரே வீட்டில் இருக்கிறது கஷ்டம்ன்னு

அவங்களுக்குப் புரியலை.. சுரேந்திரனின் கல்யாணத்தை சாக்காக வைத்துத்தானே எல்லோரும் இந்த

வீட்டில் இருந்தீங்க..? அதுதான் அவனின் கல்யாணம் முடிந்துருச்சே.. இனி எல்லோரும் அவங்கவங்க வீட்டுக்குப் போய் விடலாமே..."

மீனலோசனி மகேந்திரனின் முழங்கையை சுரண்டினாள்...

"என்னடி.." என்றான் அவன்...

"தணிஞ்சு பேசுங்க.. பெரியவர் ரொம்ப கோபமாய் இருக்கிறார்..."

"கோபப்படாம கொஞ்சவா செய்வாங்க..? எல்லா வேலைகளையும் நீங்க பண்ணித் தொலைங்க.. உங்களைக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு.. நாங்க எங்க அண்ணனிடம் பேச்சு வாங்கறோம்..."

அலுத்துக் கொண்ட மகேந்திரன்.. நரேந்திரனைப் பார்த்து...

"எங்களாலே எந்தப் பிரச்னையும் வரலையே அண்ணா..." என்றான்...

"உனக்கு எல்லாம் தெரியனும் மகி.. பிரச்னையை உண்டு பண்றது யாருன்னு உனக்குத் தெரியாமலிருந்தா எப்படி..? இந்த வீட்டுக்குள்ளே நிவேதிதா பிரச்னையை உண்டு பண்ணியிருக்கலாம்.. அதை தூண்டி விட்டது யாரு..?" கண்டிப்புடன் கேட்டான் நரேந்திரன்...

"அண்ணா..." மகேந்திரன் மென்று விழுங்கினான்..

"இது வித்யாவின் வீடு மகி.. இங்கே அவ வைத்தது தான் சட்டம்.. அதை மாத்த யாராலேயும் முடியாது.. அவ விருப்பப்படிதான் இந்த வீடு இருக்கும்.. அதை ஏத்துக்கிட்டு இருக்கிறவங்க எங்க

கூட இருக்கலாம்.. அப்படி இருக்கிறவங்க மட்டும் எங்க கூட இருந்தால் போதும்.. மத்தவங்க அவங்கவங்க வீட்டுக்குப் போகலாம்.."

யாரும் அங்கிருந்து வெளியேறப் போவதாக அறிவிக்கவில்லை.. நரேந்திரன் சொன்னதை ஏற்றுக் கொள்வதைப் போல அமைதியாக இருந்தார்கள்..

நிவேதிதா வித்யாவின் அருகில் நெருங்கி சன்னமான குரலில்...

"ஸாரி.." என்றாள்...

"இட்ஸ் ஆல் ரைட்.." பெருந்தன்மையாகப் பதில் சொன்னாள் வித்யா...

"என்ன பிரபா இது.. ஆனானப்பட்ட மதன்பூர் மகாராஜாவின் மகளாலேயே இந்த வித்யாவை ஒன்னும் பண்ண முடியலைன்னா நாம எம்மாத்திரம்..?" பிரபாவதியின் காதை ரகசியமாக கடித்தாள் மீனலோசனி...

"நாமன்னு என்னையும் கூட்டுச் சேர்க்காதீங்க அக்கா.. ஏற்கனெவே என் அண்ணனும் அண்ணியும் உங்க கூடப் பேசக்கூடாதுன்னு வார்ன் பண்ணியிருக்காங்க.. இப்ப என்னடான்னா பெரியவரு உத்தரவே போட்டுட்டாரு.. எனக்கெதுக்கு இந்த வேலை..? அரண்மனையிலே இருக்கனும்னா அந்த வித்யாவின் வம்புக்கு போகாமலிருந்தாத்தான் முடியும்ன்னா அது வம்புக்கு நான் ஏன் போகனும்..?" பிரபாவதி கழண்டு கொண்டு விட்டாள்..

"உனக்கே இவ்வளவு விவரம் இருக்கும்போது எனக்கு இருக்காதா...? நீ மட்டும் அரண்மனையிலே குடியிருக்க நான் வெளியேறனுமா..? அவ வம்புக்கு நானும் போகப் போறதில்லை.." மீனலோசனி தான் கெட்டிக்காரி என்பதை உறுதிசெய்தாள்...

"வா.. வித்யா..."

நரேந்திரன் மாடியேறினான்.. வித்யா பின் தொடர்ந்தாள்.. அறைக்குள் போனதும் கதவை அடைத்தவன்.. அவளைப் புயல் வேகத்தில் ஆக்ரமித்தான்.. இத்தனை நாளாய் இந்தக் காதலை எங்கே ஒளித்து வைத்திருந்தான் என்று வித்யா திணறிப் போனாள்...

"என்ன தைரியம்டி உனக்கு.. என் காதல் மேலேயா சந்தேகப் படற..? பூர்ணி மட்டும் உன் கூடவே இருப்பா.. நான்கூட இருக்க மாட்டேனா..? கொன்று விடுவேண்டி.."

"ஆனா நரேன்.. மதன்பூரில் கார்த்திகாயினி உங்க தோள் மேலே சாய்ந்திருந்தா... அதைப் பார்த்த எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"ஏண்டி.. என்னிடம் அதைக் கேட்கலை..?"

"எப்படிக் கேட்பேன்..?" வித்யா விம்மினாள்...

அவளின் கண்ணீரில் நரேந்திரனின் சட்டை நனைந்தது...

"போடி பைத்தியம்..." மனைவியின் கண்ணீர் துளிகளைத் துடைத்து விட்டபடி மிருதுவாகப் பேசினான் நரேந்திரன்...

"நான் பைத்தியம்தான் நரேன்.. உங்க மேலே காதல் வைச்ச பைத்தியமா நானிருக்கேன்.. உங்க மனசு மட்டும்தான் எனக்கு வேணும் மத்தபடி இந்த அரண்மனை.. பேக்டரின்னு எதுவும் வேணாம்.."

"முட்டாள் போலப் பேசாதே.. இதையெல்லாம் நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமாடி..? அவதான் என் தோளில் சாய்ந்தா.. நான் உடனே விலக்கி விட்டுட்டேன்.."

"விலகி வரவில்லை..."

"எப்படி வர முடியும்..? அவ என்னிடம் காதல் சொன்னவங்கிறதுக்காக நான் இதைச் சொல்லலை.. பழகின ஒரு தோழி... தன் துயரத்தைச் சொல்லி அழுகிறப்ப அதைக் காது கொடுத்துக் கேட்காம விலகி வரலாமா..?"

"அவ தோழி மட்டும்தானா..?"

"இப்ப யோசித்துப் பார்க்கிறப்ப நிச்சயமாய் அது மட்டும்தான்னு எனக்குத் தோணுது.. எப்போதும் அவ நினைவாய் நான் இருந்ததில்லை.. அவ விட்டுவிட்டுப் போனவுடன் வேற பெண்ணை கல்யாணம் பண்ணிக்க தயாரானவன்தான் நான்.. ஆனா வித்யா உன்னைப் பார்த்த பின்னாலே உன் நினைவாவே நான் எப்போதும்

இருந்திருக்கேன்.. நீ விட்டுவிட்டுப் போயிருந்தா உன்னைத் தேடிப் பிடிச்சுக் கொன்றுவிட்டு நானும் செத்திருப்பேனே தவிர உன்னைத்தவிர வேற ஒருத்தியை நினைத்தும் பார்த்திருக்க மாட்டேன்..."

"நரேன்..."

வித்யா பதறிப் போனவளாக நரேந்திரனின் வாயை மூடினாள் மூடிய அவளது உள்ளங்கையில் முத்தம் பதித்தான் நரேந்திரன்.. அவளின் கையை விலக்கி தன் கன்னத்தில் அழுந்தப் பதித்துக் கொண்டவன்.. வித்யாவை ஊன்றிப் பார்த்தபடி சொன்னான்..

"கார்த்திகாயினி என்னைக் காதலித்தது எனக்காக இல்லை வித்யா.. என் ராஜ பரம்பரைக்காக.. அவளுக்குப் பொருத்தமான மணமகனா.. ராஜ பரம்பரையில் பிறந்தவனா.. வெளிநாட்டில் படித்தவனா நானிருந்தேன்.. நான் மட்டும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவனா இருந்திருந்தா அவ என்னைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டா... நீ அப்படியில்லைடி.. என்னை எனக்காகவே காதலிச்ச.. அவ அப்படி இல்லைடி..."

"வேண்டாம் நரேன்..."

என்னதான் கார்த்திகாயினி தேவி இன்னொருவனின் மனைவியாக இருந்தாலும்.. ஒரு காலத்தில் நரேந்திரனைக் காதலித்தவள் என்ற எண்ணத்தில் அவளைப் பற்றிய பேச்சைத் தவிர்த்தாள் வித்யா...

ஆனால் நரேந்திரன் அந்தப் பேச்சை அப்படியே விடுவதாக இல்லை...

"எதுடி வேண்டாம்..? நான் உனக்கு வேண்டாமா...?" என்று வம்புக்கு இழுத்தான்...

"ஐயோ..." துடித்துப் போனாள் வித்யா...

"துடிக்குதில்ல.. கேட்கிறப்பவே உனக்கு துடிக்குதில்ல.. இந்தத் துடிப்பு அவளிடம் இருக்காது.. ஏன்னா அவ என்

அந்தஸ்தைப் பார்த்து என் கூடப் பழகினவ.. எனக்காக என்னைக் காதலித்தவ இல்லை..."

"என் நரேன்..."

கைப்பொருள் என்றுமே களவு போகாது என்ற நிச்சயத்தைப் பெற்று விட்ட நிம்மதியுடன் நரேந்திரனின் மார்பில் சாய்ந்தாள் வித்யா...

"உன்னுடைய நரேந்திரன் தாண்டி.. என் உடம்பும்.. மனசும் உனக்கு மட்டும்தான் சொந்தம்.. மத்தவங்களை என்னோட சம்பந்தப் படுத்தி நினைச்சேன்னு வை.. நான் மனுசனா இருக்க மாட்டேன்..."

வித்யாவை இறுக்கி அணைத்துக் கொண்டான் நரேந்திரன்.. அந்த இறுக்கமும்.. நெருக்கமும் உணர்த்திய சொந்தத்தில் வித்யாவின் மனதிலிருந்த சஞ்சலங்கள் விலகி ஓடின.. ஆனாலும் அவள் மனதில் சில கேள்விகள் பாக்கியிருந்தன.. அதை எப்படிக் கேட்பது என்று புரியாமல் அவன் தலை முடியில் விரல் விட்டு அளைந்து கொண்டிருந்தவளிடம்..

"கேட்டுவிடு.." என்றான் நரேந்திரன்...

வித்யா திகைத்துப் போனவளாக கணவனைப் பார்த்தாள்..

"எதை..?"

"உன் தலைக்குள் குடாய்ந்து கொண்டிருக்கும் கேள்விகளை.."

'கண்டு பிடித்து விட்டான்..' ரகசியப் புன்னகை வித்யாவிடட்ம மலர்ந்தது..

"நீங்க என்னிடம் கலகலப்பா பேசலை..." மனக்குறையுடன் சொன்னாள்..

"நிவேதிதா இந்த வீட்டின் அமைதியைக் குலைத்திருவாளோன்னு கவலை.. அவளால் நானும் சுரேனும் மோதிக்க வேண்டி வந்திருமோன்னு கவலை.. இத்தனைக்கும் மேலா.." அவன் இடைவெளி விட...

"கார்த்திகாயினியைப் பற்றிய கவலை..." வித்யா எடுத்துக்கொடுத்தாள்..

"நீ அவளை விடவே மாட்டியா..? ஆனா வித்யா.. நீ சொன்னதுதான் உண்மை.. அவளைப் பத்தின கவலையும் என் மனசில் இருந்தது.. ஒரு குற்ற உணர்வு.. உன் கூடச் சிரிச்சுப் பேச முடியாம அவ துயரம் ஊடே வந்தது டி..."

"புரியுது..."

"நீ புரிஞ்சுக்குவேன்னு எனக்குத் தெரியும்டி..."

"ஆனா.. அவ போனை நான் அட்டெண்ட் பண்ணினதுக்காக என்னை நீங்க கண்டிச்சிங்க..." வருத்தத்துடன் சொன்னாள் வித்யா...

"போனை எடுத்துப் பேசினவ சகஜமா பேசியிருக்க வேணாமா..? அது முடியலைன்னா பேசியிருக்கவே கூடாது.. யார் போனை எடுத்ததுன்னு அவகேட்டா.. அவ பேசினதும் கட் பண்ணிட்டாங்கன்னு சொன்னா.. அவ நம்மைப் பத்தி என்ன நினைச்சுக்குவா..? அந்தக் கோபம்தான்..."

"அவ போனில் பேசின பேச்சில் நான் அதிர்ந்துட்டேன் நரேன்..."

"என்ன சொன்னா...?"

"இந்த நேரத்தில் நீங்க என்கூட இருந்திருக்கனும் நரேந்தர்.. ஏன் வரலைன்னு கேட்டா..." வித்யாவின் முகம் கன்றிச் சிவந்தது...

"என்மேல் உனக்கு நம்பிக்கையே வராதாடி..? அவளோட கணவனும் அவளும் ஒன்றாய் சேர்ந்துட்டாங்க.. என்னை விருந்துக்கு கூப்பிட்டிருந்தாங்க.. அதைத்தான் அவ அந்த லட்சணத்தில் சொல்லியிருக்கா.. நீ இந்த லட்சணத்தில் புரிந்துக்கிட்டு இருக்க.."

"அவ கொடுத்த விருந்து எப்படியிருந்தது..?"

"நான்தான் போகலையே..."

"இப்ப நீங்க போயிருந்தது..?"

"சென்னையில் ஒரு கம்யூட்டர் கம்பெனியை ஆரம்பிக்கலாம்கிற எண்ணம்டி.. சுரேந்திரனை அங்கே அனுப்பி வைத்து விடலாம்கிற திட்டமிருக்கு.. பேக்டரி நமக்கு.. கம்யூட்டர் கம்பெனி அவனுக்குன்னு ரெஜிஸ்டர் பண்ணிரப் போறேன்.. அவன் சிட்டி லைப்பை விரும்புகிறவன்.. நிவேதிதாவின் குணத்துக்கு மணிமுத்தாறு அவனுக்கு சரிப்பட்டு வராது.. அவனுக்குத்தான் அங்கே அவன் பங்குக்கு வந்த வீடு இருக்கே..."

"பேக்டரியில் அவருக்கும் பங்கிருக்கே.."

"அதை விலை போட்டு வாங்கிக்கிட்டதாய் கணக்குக் காட்டித்தான் ரெஜிஸ்ட்ரேசன் நடக்கப் போகுது.. இதைப்பற்றி ஏற்கனெவே சுரேன்கிட்டப் பேசிட்டேன்.. அவனும் ஒப்புக்கிட்டான்.."

"கம்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்க கோடிக் கணக்கில் பணம் தேவைப்படுமே.. இப்பத்தானே பாகம் பிரிச்சிருக்கீங்க.."

"அந்தக் கவலை உனக்கெதுக்கு..? நான் கடனுக்குப் பழகினவன்.. அவ்வளவு கடனை அடைத்தவன்.. இந்தக் கம்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்கிறதுக்காக வாங்கும் கடனை அடைக்க மாட்டேனா..?"

"ஆனா.. இது ஏன் நரேன்..?"

வித்யா தவிப்புடன் கேட்டபோது.. அவள் முகத்தை கைகளில் ஏந்தி காதலுடன் சொன்னான் நரேந்திரன்..

"உனக்காகடி.. பேக்டரிக்குள்ளே உன்னைக் கேள்வி கேட்க யாரும் வரக்கூடாது.. அது உன்

புருசனுக்கு மட்டும் சொந்தமானதாக.. உனக்கு மட்டும் உரிமையானதாக இருக்கனும்.. நான் இல்லாதப்ப நீ பட்ட பாட்டை குகன் போனில் சொன்னான்டி.. அப்பவே முடிவு பண்ணிட்டேன்.. இனி அங்கே உனக்கு இணையா யாரும் இருக்கக் கூடாதுன்னு..."

"எனக்காகவா நரேன்..?" வித்யா கண்கலங்கிவிட்டாள்..

அப்போதுதான் பாரம் இறக்கி வைத்திருந்த அவளுடைய கணவன் அவளுக்காக மீண்டும் பாரம் சுமக்க ஆயத்தமாகி விட்டானா..?

"அழாதே கண்ணம்மா.. உன் மனது ஈர மனதுடி.. உன் நிழலில் வாழ்கிறவங்களுக்கு நல்லது செய்யனும்னு நினைக்கிறவ நீ.. அதைக் கேள்வி கேட்க யாரும் வரக் கூடாது..."

"கார்த்திகாயினி வீட்டு விருந்து..?"

"இன்னொரு நாள் வருகிறோம்ன்னு சொல்லியிருக்கேன்..."

"வருகிறோமா..."

"ம்ம்ம்.. வருகிறோம்தான்.. அவ உன்னையும் சேர்த்துத்தான் விருந்துக்கு கூப்பிட்டா.. இப்ப முடியாது அடுத்த வாரம் வர்றோம்ன்னு சொல்லியிருந்தேன்.. இனிமேத்தான் போன பண்ணி என் பெண்டாட்டி வாந்தியும்.. மசக்கையுமா இருக்கிறா.. அவ என் பிள்ளையை பெத்துக் கொடுத்த பின்னாலே நாங்க மூணு பேருமா வர்றோம்ன்னு சொல்லனும்..."

நரேந்திரன் குனிந்து வித்யாவின் வயிற்றில் முத்தமிட வித்யா சிலிர்த்துப் போனாள்...

"எப்படித்தெரியும் நரேன்..? நான் சொல்லலையே.."

"நான் நரேந்திரன்டி.. நீ நரேந்திரனின் பெண்டாட்டி.. உன் சம்பந்தப்பட்ட எல்லாமே எனக்குத் தெரிந்துவிடும்.. டாக்டர் நம்ம பேமிலி டாக்டர்.." நரேந்திரன் கண் சிமிட்டினான்...

"நரேன்.." வித்யா அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள்...

அவளுடைய நரேந்திரன் அவளை விட்டு எங்கும் போய்விடவில்லை.. அவன் அவளுக்கு மட்டுமே சொந்தமானவன் என்ற உறுதியில் அவள் மனம் அமைதியடைந்தது...

"நான் ரொம்ப பயந்து போயிருந்தேன் தெரியுமா..?"

"தெரியுமே.. என் பெண்டாட்டி முகத்தில சின்ன மாறுதல் வந்தாக்கூட எனக்குத் தெரிஞ்சுரும்.. இது தெரியாம போயிருமா..? ஆனாலும் உன்னைச் சமாதானப் படுத்தனும்னு எனக்குத் தோணலை..."

"ஏன்..?" வியப்புடன் கேட்டாள் வித்யா...

"ஏனா..? கன்னம் வீங்கி விடும்..."

"எதற்காம்..?"

"ஓங்கி ஒரு அப்பு அப்பினா கன்னம் வீங்காதா..?"

"ஓ.. அடிப்பீங்களோ.."

"அடிக்க மாட்டேனா..? உன் மனசில பயம் வரலாமாடி..? அந்த மாதிரியா நீயும் நானும் காதலிச்சோம்..? நீ இல்லைன்னா நான் இல்லைடி.. இது தெரியாம பினாத்தியிருக்கியே... உன்னை என்ன செய்தால் தேவலாம்..?"

எதுவும் செய்து கொள் என்று அவன் கையில் முழுமனதாய் தன்னை ஒப்படைத்தாள் வித்யா.. கூடிக் களித்தவனின் ஆவேசம் அடங்கியதும் திருப்தியுடன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்...

"இது போல நீயும்.. நானும் சந்தோசமாய் இருக்கிறப்ப கார்த்திகாயினி மட்டும் அவ கணவனை விட்டு விலகி நிற்கிறாளேங்கிற எண்ணம்தாண்டி எனக்கு.. அந்த நினைப்பு என் மனசில நெருஞ்சி முள்ளாய் குத்திக்கிட்டு இருந்ததுடி.. உன்னோடு சிரிச்சு பேச முடியாம என் மனசு வலிச்சது..."

"அவ பாவம்தான் நரேன்.. அவளோட ஹஸ்பெண்டுக்கு ஏன் அப்படிப் புத்தி போனது..?"

"ஆம்பளைத்திமிர்.. உன் புருசனுக்கும் ஒரு காலத்தில அந்தத் திமிர் இருந்ததுதானே...?"

நரேந்திரனின் பேச்சில் வித்யாவின் முகம் மாறிவிட்டது... மனச் சுணக்கத்துடன் விலக முயன்றாள்.. அவள் கைபிடித்து தடுத்தான் நரேந்திரன்...

"இப்ப எதுக்காக விலகப் பார்க்கிற..?"

"பின்னே..? இப்படிப் பேசினா விலகாம என்ன செய்வாங்களாம்.."

"போடி.. நீயும்.. உன் கோபமும்.. நிலைதடுமாறின என்னை சரியான வழியில இழுக்க உன்னால முடிந்திருக்கிறப்ப.. கார்த்திகாயினியால அது முடிய வேணாமா...?"

"ஆக.. ஐயா அவளுக்குத்தான் அட்வைஸ் பண்ணியிருக்கீங்க... அவ ஹஸ்பெண்டுக்கு பண்ணலை.. நினைச்சேன்.. உங்க ஆம்பளைப் புத்தி இப்படித்தான் யோசிக்குன்னு..."

வித்யா படபடவென்று பொரிந்தாள்.. அவள் கோபத்தை அவன் புன்னகையுடன் ரசித்தான்...

"அடியே.. என் நியாயக்கார பெண்டாட்டியே.. கார்த்திகாயினியின் புருசன் பலதடவை மனம் திருந்தி வந்திருக்கிறான்.. வந்தவனிடம் இவ இணக்கமா பேசி குடும்பம் நடத்தாம பழசையே சொல்லிக் காட்டியிருக்கா.. அவன் பொறுக்க முடியாம பழைய வாழ்க்கைக்கே திரும்பி ஓடிப் போயிட்டான்.."

"அவ ஹஸ்பெண்ட் அநியாயம் செய்தால் அவ அதைச் சொல்லிக் காட்டக் கூடாதா..?"

"குத்திக் காட்டக் கூடாது.. தப்பு பண்ணிட்டேன்.. மன்னிச்சுடுன்னுதானே அவன் வந்திருக்கான்..? இவ அதையே திரும்பத் திரும்ப குத்திக் காட்டிக்கிட்டு இருந்தா.. திருந்தினாத்தானே இந்த வம்புன்னு அவனுக்குத் தோணிப் போயிருமா.. இல்லையா...?"

"ஓ.. இதில இவ்வளவு இருக்கா...?"

"இதுக்கு மேலயும் இருக்கு.. அது எதுக்கு நமக்கு..? இப்ப அவ தன் தப்பை உணர்ந்துக்கிட்டா.. அவளோட புருசனும் இதுக்காகவே காத்திருந்திருக்கான்.. இரண்டு பேரும் பசை போடாமலேயே ஒட்டிக்கிட்டாங்க..."

சந்தோசமாக சிரித்தவனைக் கனிவுடன் பார்த்தாள் வித்யா...

'இவனுக்குத்தான் கார்த்திகாயினியின் வாழ்க்கை சரியாகி விட்டதில் எத்தனை சந்தோசம்...!'

ஒரு காலத்தில் அவனைப் புறக்கணித்தவள் கார்த்திகாயினிதேவி.. அவனுடைய திருமணம் தடைபட்டுக் கொண்டிருந்ததிற்கு அவளே முதல் காரணமாக அமைந்தாள்..

அப்படிப்பட்டவளின் இல்லற வாழ்வு இனிமையானதாக அமையாமல் போனதில் வியப்பேதும் இல்லை.. அது கடவுள் கொடுத்த தீர்ப்பு...

ஆனால்.. அதைக் கேட்டதும் மனம் பதறிப் போனவனாக அவள் வாழ்வை சரி செய்தானே.. நரேந்திரன்.. அவனின் மனம் வானத்தை விடப் பரந்து விரிந்த பெரிய மனமல்லவா..?

வித்யாவின் மனதில் குளிர்காற்று படிந்ததைப் போல இருந்தது.. அவளின் மனக்குளிர்ச்சியில் அவளும் குளிர்ந்தாள்..

நதியோரம் நடக்கும் போது ஈரக் காற்றுதானே உடலைத் தழுவும்...?

- முற்றும் -